TAMIL EDITION

வார்த்தைகளுடன் கூடிய வார்த்தைகளற்ற தர்க்க அறிவு

மீதான ஒரு நவீன அணுகுமுறை

(VERBAL & NON-VERBAL REASONING)

பின்வரும் போட்டித்தேர்வுகளுக்கு பயனுள்ள நூல்

- IBPS-CWE Bank PO/Clerical/Specialist Officers, RRB Officers; SBI-PO/Clerical; NABARD & IDBI Bank Executive Officers
- SSC-CGL (Tier I and II); SSC-CHSL (10+2); SSC-FCI Grade III; SSC-CPO/ SI/ASI, Income Tax etc
- LIC/GIC/UIICO AAOs, etc
- UPSC—CSAT, SCRA etc; and other State Services Exams
- Railways Grade 'D' & other technical & non-technical exams
- MAT; CMAT; CET (MBA); SNAP; BBA; BBM & other B School Admission Tests
- NTSE; CLAT; Hotel Management etc

S. CHAND

Dr. R.S. AGGARWAL

பொருளடக்கம்

பகுதி I: வாய்மொழி பகுத்தறிவு

பிரிவு I: பொது மன திறன்

1. தொடரை முடிவு செய்தல் 1.1–1.20

வகை 1: எண் தொடர் வரிசை 1.1

வகை 2: அகர வரிசை தொடர் 1.8

வகை 3: எழுத்து-எண் தொடர் 1.11

வகை 4: தொடர்ச்சி முறை வரிசைகள் 1.14

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 1.15

2. ஒப்புமை திறனறிதல் 2.1–2.24

வகை 1: ஒப்புமை திறனுடைய இணையை முடித்து வைத்தல் 2.8

வகை 2: நேரடி/எளிய ஒப்புமை 2.15

வகை 3: ஒத்த ஜோடிகளை தேர்ந்தெடுத்தல் 2.21

3. வகைப்பாடு 3.1–3.40

வகை 1: மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடிக்கவும் 3.1

வகை 2: வேறுபட்ட ஜோடி வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்தல் 3.13

வகை 3: மாறுபட்ட எண்ணைக் கண்டறிதல் 3.20

வகை 4: மாறுபட்ட எண் ஜோடி/குழுவைக் கண்டுபிடித்தல் 3.22

வகை 5: மாறுபட்ட குழு எழுத்துக்களை தேர்ந்தெடுத்தல் 3.26

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 3.35

4. குறியிடுதல் - மறுகுறியிடுதல் 4.1–4.56

வகை 1: எழுத்து குறியீட்டுமுறை 4.1

வகை 2: நேரடி எழுத்து முறை குறியீடு 4.9

வகை 3: எண்கள்/சின்னம் வகை குறியீடு 4.13

வகை 4: அணி குறியீடு 4.23

வகை 5: மாற்றுகள் 4.27

வகை 6: செய்தி வார்த்தை குறியீடுகளை புரிந்து கொள்வது 4.29

வகை 7: செய்திக்கான எண் மற்றும் சின்ன குறியீடுகளை புரிந்து கொள்தல் 4.36

வகை 8: குழப்பமான குறியீடுகள் 4.39

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 4.49

5. இரத்த உறவுகள் 5.1–5.20

வகை 1: தடுமாறிய விளக்கங்களை புரிந்து கொள்ளுதல் 5.1

வகை 2: உறவுப் புதிர் 5.6

வகை 3: குறியிடப்பட்ட உறவுகள் 5.14

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 5.18

6. புதிர்கள் (அல்லது) தரவரிசை அறிதல் 6.1–6.82

வகை 1: வகைப்படுத்துதல் வகை கேள்விகள் 6.1

வகை 2: இருக்கை/வைக்கும் ஏற்பாடு 6.15

வகை 3: ஒப்பீடு வகை கேள்விகள் 6.25
வகை 4: பொருட்களின் தொடர் வரிசை 6.36
வகை 5: கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் தேர்வு செய்தல் 6.46
வகை 6: குடும்பம்-சார்ந்த புதிர்கள் 6.55
வகை 7: குழப்பமான கணக்குகள் 6.62
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 6.73

7. தொடர் வெளியீட்டுத் தரமறிதல் 7.1–7.22
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 7.18

8. திசை உணர்வு சோதனை 8.1–8.28
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 8.22

9. தருக்க வென் வரைபடம் 9.1–9.24
வகை 1 ..... 9.1
வகை 2 ..... 9.7
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 9.15

10. அகரவரிசை தேர்வு 10.1–10.26
வகை 1: சொற்களின் அகரவரிசை முறை 10.1
வகை 2: எழுத்து-வார்த்தை கணக்குகள் 10.7
வகை 3: விதி-கண்டறிதல் 10.8
வகை 4: அகரவரிசை சொற்புரட்டு 10.12
வகை 5: எழுத்துகளை பிரித்து வார்த்தைகளை உருவாக்குதல் 10.15
வகை 6: கொடுக்கப்பட்ட வார்த்தையின் எழுத்துகளிலிருந்து வார்த்தையை கண்டுபிடித்தல் 10.19
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 10.23

11. எழுத்து - எண் தொடர் (வரிசை) புதிர் 11.1–11.10
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 11.5

12. எண், தரவரிசை மற்றும் நேரவரிசை தேர்வுகள் 12.1–12.18
வகை 1: எண் தேர்வு 12.1
வகை 2: தரவரிசை சோதனை 12.6
வகை 3: நேர வரிசை சோதனை 12.11
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 12.14

13. கணித செயல்பாடுகள் 13.1–13.16
வகை 1: மாற்று குறியீடுகளை பயன்படுத்தி கணக்குகளை தீர்ப்பது 13.1
வகை 2: குறிகள் மற்றும் எண்களை ஒன்றுக்கொன்று மாற்றுதல் 13.5
வகை 3: சரியான முடிவை பெறுதல் 13.7
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 13.14

14. வார்த்தைகளின் தர்க்க வரிசை 14.1–14.6
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 14.5

15. எண்கணித தர்க்க அறிவு 15.1–15.10
வகை 1: கணக்கிடுதல் - அடிப்படை கணக்குகள் 15.1
வகை 2: தகவல் - அடிப்படை கணக்குகள் 15.2
வகை 3: வயது கணக்குகள் 15.3
வகை 4: வென்-வரைபட அடிப்படை கேள்விகள் 15.4
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 15.9

16. விடுபட்ட உறுப்பை நிரப்புதல் 16.1–16.10
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 16.8
17. தகவல் விளக்கம் 17.1–17.10
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 17.4
18. வலியுறுத்தல் மற்றும் காரணம் 18.1–18.8

பிரிவு II: தருக்கக் கழித்தல்

1. தர்க்கவியல் 1.1–1.24
தர்க்கரீதியான பகுத்தறிவு 1.1
தருக்கக் கழித்தல் 1.2
வகை 1: இரண்டு - மூல உரை வாதங்கள் 1.10
வகை 2: மூன்று - மூல உரை வாதங்கள் 1.14
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 1.18
2. அறிக்கை-வாதங்கள் 2.1–2.10
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 2.8
3. அறிக்கை-அனுமானங்கள் 3.1–3.14
வகை 1 ..... 3.1
வகை 2 ..... 3.7
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 3.12
4. கூற்று - கூற்று மீதான செயல்பாட்டு நடவடிக்கை 4.1–4.10
வகை 1 ..... 4.1
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 4.8
5. கூற்று - முடிவுகள் 5.1–5.12
வகை 1 ..... 5.1
பிற இதர வகைகள் 5.4
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 5.6
6. பத்திகளிலிருந்து முடிவுகளைப் பெறுதல் 6.1–6.6
7. தீம் கண்டறிதல் 7.1–7.4
8. காரணம் மற்றும் விளைவு பகுத்தறிவு 8.1–8.6
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 8.4

பகுதி II: சொற்கள்-இல்லாத பகுத்தறிவு திறன்

1. தொடர்கள் 1.1–1.50
வகை 1: ஐந்து வடிவமுள்ள தொடர்கள் 1.3
வகை 2: மூன்று மற்றும் நான்கு பட வரிசைகள் 1.18
வகை 3: தொடரில் விடுபட்ட உறுப்பைக் கண்டுபிடித்தல் 1.24
வகை 4: தொடரின் தவறான வரிசையைக் கண்டுபிடித்தல் 1.32
வகை 5: தொடரில் உள்ள தவறான உறுப்பைக் கண்டுபிடித்தல் 1.35
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 1.44
2. ஒப்புமை திறனறிதல் 2.1–2.36
வகை 1: ஒத்த தொடர்புடைய ஜோடியின் ஒரு உறுப்பைத் தேர்ந்தெடுப்பது 2.1
வகை 2: ஒத்த தன்மையுடைய வடிவங்களின் குழுவை தேர்ந்தெடுத்தல் 2.7
வகை 3: ஒத்த தொடர்புடைய வடிவங்களிலிருந்து தொடர்பில்லாத வடிவங்களின் தொகுப்பைத் தேர்ந்தெடுத்தல் 2.15

வகை 4: வித்தியாசமான உறவைத் தேர்ந்தெடுத்தல் 2.21
வகை 5: தொடர்புடைய ஒவ்வொரு ஜோடியின் ஒரு உறுப்பைக் கண்டறிதல் 2.27
வகை 6: உறவைக் கண்டுபிடித்து சரியான மாற்றைக் கண்டுபிடித்தல் 2.31
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 2.34

3. வகைப்படுத்துதல் 3.1–3.14
வகை 1: மாறுபட்ட வடிவத்தை கண்டறிதல் 3.1
வகை 2: ஒத்த வடிவத்தை தேர்ந்தெடுப்பது 3.5
வகை 3: ஒத்த தன்மையுடைய வடிவங்களைக் கண்டுபிடித்தல் 3.7
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 3.12

4. கண்ணாடி பிம்பங்கள் 4.1–4.14
பெரிய எழுத்துக்களின் கண்ணாடி பிம்பம் 4.1
சிறிய எழுத்துக்களின் கண்ணாடி பிம்பம் 4.2
எண்களின் கண்ணாடி பிம்பங்கள் 4.2
கடிகாரங்களின் கண்ணாடி-பிம்பங்கள் 4.8
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 4.11

5. தண்ணீர் பிம்பங்கள் 5.1–5.6
பெரிய எழுத்துக்களின் தண்ணீர் பிம்பங்கள் 5.1
சிறிய எழுத்துக்களின் தண்ணீர் பிம்பங்கள் 5.1
எண்களின் தண்ணீர் - பிம்பங்கள் 5.1

6. உட்பதிக்கப்பட்ட உருவங்களைக் கண்டுபிடித்தல் 6.1–6.14
வகை 1 ..... 6.1
வகை 2 ..... 6.2
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 6.13

7. முழுமையற்ற வடிவத்தை நிறைவு செய்தல் 7.1–7.16
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 7.16

8. காகித மடிப்பு 8.1–8.8
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 8.7

9. காகித வெட்டு 9.1–9.18
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 9.16

10. ஒரே மாதிரியான உருவங்களை தொகுத்தல் 10.1–10.6

11. கன சதுரம் மற்றும் பகடை 11.1–11.36
கன சதுர அடுக்கை வண்ணமிடுதல் 11.6
ஒரு கன சதுரத்தின் ஆறு பக்கங்களுக்கு வண்ணமடித்தல் 11.15
பெட்டிகளை வடிவமைத்தல் 11.18
பகடை பற்றிய கணக்குகள் 11.28
சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன் 11.34

பகுதி I: வாய்மொழி பகுத்தறிவு

பிரிவு I: தொடரை முடிவு செய்தல்

1

தொடரை முடிவு செய்தல்

இந்த அத்தியாயத்தில் எண்களின் வரிசை அல்லது அகரவரிசை எழுத்துக்கள் அல்லது இரண்டும் சேர்ந்த கலவை கொடுக்கப்பட்டிருக்கும். பொதுவாக அவை தொடரின் உறுப்புகள் எனக் கூறப்படும். தொடர் முழுவதும் இந்த உறுப்புகள் ஒரு குறிப்பிட்ட மாதிரியை (முறையை) பின்பற்றும். தேர்வு எழுதுபவர் கொடுக்கப்பட்டுள்ள தொடரை கவனமாக படித்து, தொடரில் பின்பற்றிய முறையை புரிந்து கொண்டு, பின்னர் அந்த தொடரை மிகப் பொருத்தமான மாற்றைக் கொண்டு முடித்து வைக்க வேண்டும். அல்லது அந்த தொடரிலுள்ள தவறான உறுப்பைக் கண்டு பிடிக்க வேண்டும்.

வகை 1: எண் தொடர் வரிசை

I: விடுபட்ட உறுப்பு(களை) கண்டுபிடிப்பதன் மூலம் கொடுக்கப்பட்ட தொடர் வரிசையை முடித்து வைக்கவும்.
குறிப்புகள்: *கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர் வரிசைகளில் விடுபட்ட உறுப்பைக் கண்டுபிடிக்கவும்.*

எ.கா.1: 1, 6, 15, ?, 45, 66, 91 **(B.B.S 2004)**

(*a*) 25 (*b*) 26 (*c*) 27 (*d*) 28

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள தொடர் + 5, + 9, + 13, + 17, + 21, + 25, ... என்கிற மாதிரியை பின்பற்றுகிறது.

எனவே, 1 + 5 = 6, 6 + 9 = 15, ...

ஆகவே, விடுபட்ட உறுப்பு = 15 + 13 = 28.

எனவே, விடை (*d*) ஆகும்.

எ.கா.2: 2, 5, 9, 19, 37, ? **(C.P.O. 2003)**

(*a*) 73 (*b*) 75 (*c*) 76 (*d*) 78

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ளது: 2 × 2 + 1 = 5, 5 × 2 − 1 = 9.

9 × 2 + 1 = 19, 19 × 2 − 1 = 37, ...

ஆகவே, விடுபட்ட உறுப்பு = 37 × 2 + 1 = 75.

எனவே, விடை (*b*) ஆகும்.

எ.கா.3: 4, 8, 28, 80, 244, ? **(B.T.M 2006)**

(*a*) 278 (*b*) 428 (*c*) 628 (*d*) 728

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள தொடரின் உறுப்புகள் முறையே: $3^1 + 1$, $3^2 - 1$, $3^3 + 1$, $3^4 - 1$, $3^5 + 1$, ...

ஆகவே, விடுபட்ட உறுப்பு = $3^6 - 1$ = 729 − 1 = 728.

எனவே, விடை (*d*) ஆகும்.

எ.கா.4: 10000, 11000, 9900, 10890, 9801, ? **(PGDTM, 2006)**

(*a*) 10241 (*b*) 10423 (*c*) 10781 (*d*) 10929

தீர்வு. தொடரிலுள்ள அடுத்த உறுப்பை பெறுவதற்கு ஒன்று மாற்றி ஒன்றாக உறுப்புடன் 10%த்தை கூட்டலோ அல்லது கழித்தலோ செய்கிறோம்.

எனவே, 10000 + (10000த்தின் 10%) = 11000;

11000 − (11000த்தின் 10%) = 9900,

9900 + (9900த்தின் 10%) = 10890,

10890 – (10890'இன் 10%) = 9801.

ஆகவே, விடுபட்ட உறுப்பு = 9801 + (9801'இன் 10%) = 9801 + 980 = 10781.

எனவே, விடை (*c*).

எ.கா.5: 0, 6, 24, 60, 120, 210, ?

(*a*) 240 (*b*) 290 (*c*) 336 (*d*) 504

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள வரிசை: $1^3 - 1$, $2^3 - 2$, $3^3 - 3$, $4^3 - 4$, $5^3 - 5$, $6^3 - 6$.

∴ விடுபட்ட உறுப்பு = $7^3 - 7 = 343 - 7 = 336$.

எனவே, விடை (*c*).

(SNAP, 2004)

எ.கா.6: 1, 4, 27, 16, ?, 36, 343

(*a*) 25 (*b*) 87 (*c*) 120 (*d*) 125

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள தொடர் ஒற்றை எண்களின் கனங்களையும், இரட்டை எண்களின் வர்க்கங்களையும் கொண்டுள்ளது. அதாவது, 1^3, 2^2, 3^3, 4^2, ...

ஆகவே, விடுபட்ட உறுப்பு = $5^3 = 125$.

எனவே, விடை (*d*) ஆகும்.

எ.கா.7: 4, 6, 12, 14, 28, 30, ?

(*a*) 32 (*b*) 60 (*c*) 62 (*d*) 64

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள தொடர் இரண்டு வரிசைகளின் கலப்பு ஆகும்:

I. 4, 12, 28, ? மற்றும் II. 6, 14, 30, ...

இரண்டு வரிசைகளிலும் பின்பற்றப்பட்ட முறையானது: + 8, + 16, + 32, ...

ஆகவே, விடுபட்ட எண் = (28 + 32) = 60

எனவே, விடை (*b*).

எ.கா.8: 1, 3, 3, 6, 7, 9, ?, 12, 21

(*a*) 10 (*b*) 11 (*c*) 12 (*d*) 13

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள தொடர் இரண்டு வரிசைகளின் கலப்பு ஆகும்:

I. 1, 3, 7, ?, 21 மற்றும் II. 3, 6, 9, 12

I'ல் பின்பற்றப்பட்ட முறையானது + 2, + 4, ... மற்றும்

II'ல் பின்பற்றப்பட்ட முறையானது + 3.

ஆகவே, விடுபட்ட எண் = 7 + 6 = 13.

எனவே, விடை (*d*) ஆகும்.

எ.கா.9: கீழே உள்ள தொடரில் அடுத்து வரும் பின்னம் எது? $\frac{1}{2}, \frac{3}{4}, \frac{5}{8}, \frac{7}{16}$? **(M.A.T. 2005)**

(*a*) $\frac{9}{32}$ (*b*) $\frac{10}{17}$ (*c*) $\frac{11}{34}$ (*d*) $\frac{12}{35}$

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள தொடரில் பின்னங்களின் தொகுதிகள் 1, 3, 5, 7 என்று உள்ளன. இதில் ஒவ்வொரு உறுப்பும் அதன் முந்தைய உறுப்புடன் 2ஐக் கூட்டினால் கிடைக்கிறது.

பின்னங்களின் பகுதிகள் முறையே 2, 4, 8, 16, அதாவது, 2^1, 2^2, 2^3, 2^4 என்கிற வரிசையில் உள்ளன. ஆதலால் அடுத்த பின்னத்தின் பகுதி (7 + 2) அதாவது 9 மற்றும் தொகுதி 2^5 அதாவது, 32 என இருக்கும். எனவே, அடுத்த உறுப்பு $\frac{9}{32}$ என இருக்கும்.

ஆகவே, விடை (*a*) ஆகும்.

முக்கோண முறை தொடர்கள்:

சில சமயம், ஒரு தொடரின் அடுத்தடுத்த உறுப்புகளுக்கிடையே உள்ள வித்தியாசம் மீண்டும் ஒரு தொடரை உருவாக்கும். அவ்வாறு உருவான புதிய தொடரின் அடுத்தடுத்த உறுப்புகளிடையே உள்ள வித்தியாசம் மீண்டும் ஒரு தொடரை உருவாக்கும். அடுத்தடுத்த உறுப்புகளிடையே உள்ள வித்தியாசம் ஒரே சீராக கிடைக்கும் வரை இம்முறை தொடரும்.

எ.கா.10: இந்த தொடரின் விடுபட்ட உறுப்பைக் கண்டுபிடி: 3, 20, 63, 144, 275, ? (B.T.M. 2005)

(*a*) 354 (*b*) 468 (*c*) 548 (*d*) 554

தீர்வு. மேலே கூறியபடி, கொடுக்கப்பட்டுள்ள தொடரை I என குறிப்பிட்டு பின் தொடர் II முதல் IV வரை கீழே உள்ளபடி உருவாக்கலாம்:

தொடர் I : 3 20 63 144 275 ?

தொடர் II : 17 43 81 131 ?

தொடர் III : 26 38 50 ?

தொடர் IV : 12 12

தொடர் III உள்ள முறை +12 என இருக்கிறது என்பது தெளிவாகிறது.

ஆகையால், தொடர் III'ல் உள்ள விடுபட்ட உறுப்பு = 50 + 12 = 62;

தொடர் II'ல் உள்ள விடுபட்ட உறுப்பு = 131 + 62 = 193;

தொடர் I'ல் உள்ள விடுபட்ட உறுப்பு = 275 + 193 = 468.

எனவே, விடுபட்ட உறுப்பு 468. ஆகவே, விடை (*b*).

நேர்வழி: கொடுக்கப்பட்டுள்ளது:

விடுபட்ட உறுப்பு = 275 + (131 + 50 + 12) = 468.

தொடர்களின் முதன்மை கருத்து:

I. கூட்டுத் தொடர் (A.P) – $a, a + d, a + 2d, a + 3d,$ ..... *என்கிற முறையில் உள்ள தொடர் கூட்டுத் தொடர் எனப்படும். இதில் முதல் உறுப்பு =* a *மற்றும் பொது வித்தியாசம் =* d *ஆகும்.*

எ.கா. 3, 6, 9, 12, ... என்பது ஒரு கூட்டுத் தொடர். இதில் $a = 3$ மற்றும் $d = 6 - 3 = 3$.

ஒரு கூட்டுத் தொடரில் n-வது உறுப்பு = $a + (n - 1)\, d$ இருக்கும்.

II. பெருக்குத் தொடர் (G.P) – $a, ar, ar^2, ar^3,$ ..... *என்கிற முறையில் உள்ள தொடர் பெருக்குத் தொடர் எனப்படும். இதில் முதல் உறுப்பு =* a *மற்றும் பொது விகிதம் =* r.

எ.கா. 1, 5, 25, 125, ... என்பது ஒரு பெருக்குத் தொடர். இதில் $a = 1$ மற்றும் $r = \frac{5}{1} = \frac{25}{5} = \ldots\ldots = 5$.

ஒரு பெருக்குத் தொடரில் n-வது உறுப்பு $n = ar^{n-1}$ இருக்கும்.

எ.கா.11: 357, 363, 369, ..., என்கிற தொடரில் 10-வது உறுப்பு எது?

(*a*) 405 (*b*) 411 (*c*) 413 (*d*) 417

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ளது ஒரு கூட்டுத் தொடராகும். இதில் $a = 357$ மற்றும் $d = 6$.

$\therefore$ 10-வது உறுப்பு = $a + (10 - 1)\, d = a + 9d$.

$= (357 + 9 \times 6) = (357 + 54) = 411$.

எனவே, விடை (*b*) ஆகும்.

எ.கா.12: 201, 208, 215, ..., 369 என்கிற தொடரில் எத்தனை உறுப்புகள் உள்ளன?

(*a*) 23 (*b*) 24 (*c*) 25 (*d*) 26

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ளது ஒரு கூட்டுத் தொடராகும். இதில் $a = 201$ மற்றும் $d = 7$.

உறுப்புகளின் எண்ணிக்கை n என வைத்துக் கொள்வோம்.

எனில், $369 = 201 + (n - 1) \times 7$ அல்லது $n = 25$.

எனவே, விடை (*c*) ஆகும்.

எ.கா.13: 7, 14, 28, ..., என்கிற தொடரில் 10-வது உறுப்பு என்ன?

(*a*) 1792 (*b*) 2456 (*c*) 3584 (*d*) 4096

தீர்வு. $7 \times 2 = 14$, $14 \times 2 = 28$, ... மற்றும் பல

ஆகையால், கொடுக்கப்பட்டுள்ளது ஒரு பெருக்குத் தொடர். இதில் $a = 7$ மற்றும் $r = 2$.

$\therefore$ 10-வது உறுப்பு = $ar^{(10-1)} = ar^9 = 7 \times 2^9 = 7 \times 512 = 3584$.

எனவே, விடை (*c*) ஆகும்.

பயிற்சி 1A

குறிப்புகள்: கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும், ஒரு விடுபட்ட உறுப்பு உள்ள எண் தொடர் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள தொடரின் முறையை பின்பற்றி அந்த காலியான இடத்தை சரியாக நிரப்பும் உறுப்பைக் கண்டுபிடிக்கவும்.

1. 1, 9, 25, 49, ?, 121 **(S.S.C. 2002)**
   (*a*) 64 (*b*) 81 (*c*) 91 (*d*) 100
2. 4, 7, 12, 19, 28, ? **(M.C.A. 2005)**
   (*a*) 30 (*b*) 36 (*c*) 39 (*d*) 49
3. 11, 13, 17, 19, 23, 25, ? **(R.R.B. 2004)**
   (*a*) 26 (*b*) 27 (*c*) 29 (*d*) 37
4. 6, 12, 21, ?, 48 **(R.R.B. 2003)**
   (*a*) 33 (*b*) 38 (*c*) 40 (*d*) 45
5. 2, 5, 9, ?, 20, 27 **(R.R.B. 2002)**
   (*a*) 14 (*b*) 16 (*c*) 18 (*d*) 24
6. 120, 99, 80, 63, 48, ? **(R.R.B. 2005)**
   (*a*) 35 (*b*) 38 (*c*) 39 (*d*) 40
7. 4832, 5840, 6848, ? **(S.S.C. 2000)**
   (*a*) 7815 (*b*) 7846 (*c*) 7856 (*d*) 7887
8. 0, 2, 8, 14, ?, 34 **(B.B.S. 2004)**
   (*a*) 20 (*b*) 23 (*c*) 24 (*d*) 25
9. 1, 5, 13, 25, 41, ?
   (*a*) 51 (*b*) 57 (*c*) 61 (*d*) 63
10. 2, 15, 41, 80, ?
    (*a*) 111 (*b*) 120 (*c*) 121 (*d*) 132
11. 0.5, 0.55, 0.65, 0.8, ?
    (*a*) 0.9 (*b*) 0.82 (*c*) 1 (*d*) 0.95
12. 1, 1, 4, 8, 9, 27, 16, ?
    (*a*) 32 (*b*) 64 (*c*) 81 (*d*) 256

விடைகள் (பயிற்சி 1A)

1. (*b*) **2.** (*c*) **3.** (*c*) **4.** (*a*) **5.** (*a*) **6.** (*a*) **7.** (*c*) **8.** (*c*) **9.** (*c*) **10.** (*d*)
11. (*c*) **12.** (*b*)

தீர்வுகள் (பயிற்சி 1A)

1. கொடுக்கப்பட்டுள்ள தொடரில் அடுத்தடுத்த ஒற்றை எண்களின் வர்க்கங்கள் உள்ளன. அதாவது, 1^2, 3^2, 5^2, 7^2, ...
   ஆகவே, விடுபட்ட உறுப்பு = 9^2 = 81.
2. தொடரின் முறை + 3, + 5, + 7, + 9, ...
   ஆகவே, விடுபட்ட உறுப்பு = 28 + 11 = 39.
3. தொடரின் முறை + 2, + 4, + 2, + 4, ...
   ஆகவே, விடுபட்ட உறுப்பு = 25 + 4 = 29.
4. தொடரின் முறை + 6, + 9, + 12, + 15, ...
   ஆகவே, விடுபட்ட உறுப்பு = 21 + 12 = 33.
5. தொடரின் முறை + 3, + 4, + 5, + 6, ...
   ஆகவே, விடுபட்ட உறுப்பு = 9 + 5 = 14.
6. தொடரின் முறை − 21, − 19, − 17, − 15, ...
   ஆகவே, விடுபட்ட உறுப்பு = 48 − 13 = 35
7. தொடரின் முறை + 1008
   ஆகவே, விடுபட்ட உறுப்பு = 6848 + 1008 = 7856.
8. தொடரின் முறை + 2, + 6, + 6, + 10, + 10, ...
   ஆகவே, விடுபட்ட உறுப்பு = 14 + 10 = 24.
9. தொடரின் முறை + 4, + 8, + 12, + 16, ...
   ஆகவே, விடுபட்ட உறுப்பு = 41 + 20 = 61.
10. தொடரின் முறை + 13, + 26, + 39, ...
    ஆகவே, விடுபட்ட உறுப்பு = 80 + 52 = 132.
11. தொடரின் முறை + 0.05, + 0.10, + 0.15, ...
    ஆகவே, விடுபட்ட உறுப்பு = 0.8 + 0.20 = 1.
12. தொடரின் முறை 1^2, 1^3, 2^2, 2^3, 3^2, 3^3, 4^2, ...
    ஆகவே, விடுபட்ட உறுப்பு = 4^3 = 64.

வகை II: கொடுக்கப்பட்ட தொடரில் உள்ள தவறான உறுப்பைக் கண்டுபிடித்தல்:

எ.கா. 1: தொடரிலுள்ள தவறான உறுப்பைக் காண்க.

7, 28, 63, 124, 215, 342, 511

(*a*) 7 (*b*) 28 (*c*) 124 (*d*) 215 (*e*) 342

தீர்வு. சரியான தொடர் வரிசையானது:

$2^3 - 1$, $3^3 - 1$, $4^3 - 1$, $5^3 - 1$, $6^3 - 1$, $7^3 - 1$, $8^3 - 1$.

ஆகவே, 28 என்பது தவறு மற்றும் அது $(3^3 - 1)$, அதாவது, 26^1 என இருக்க வேண்டும்.

எனவே, விடை (*b*) ஆகும்.

எ.கா. 2: தொடரிலுள்ள தவறான விடையை கண்டுபிடி.

3, 8, 15, 24, 34, 48, 63

(*a*) 15 (*b*) 24 (*c*) 34 (*d*) 48 (*e*) 63

தீர்வு. தொடரிலுள்ள அடுத்தடுத்த உறுப்புகளுக்கிடையே உள்ள வித்தியாசம் முறையே 5, 7, 9, 11, 13 மற்றும் 15. எனவே, 34 என்பது தவறான எண் மற்றும் அது (24 + 11) அதாவது, 35ஆல் நிரப்பப்பட வேண்டும். எனவே, விடை (*c*) ஆகும்.

எ.கா 3. தொடரிலுள்ள தவறான எண்ணைக் கண்டுபிடி.

69, 55, 26, 13, 5 **(M.A.T. 2003)**

(*a*) 5 (*b*) 13 (*c*) 26 (*d*) 55

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள தொடரில், ஒவ்வொரு உறுப்பும் அதற்கு முந்தைய உறுப்பிலுள்ள இலக்கங்களின் பெருக்குத்தொகையை விட 1 கூடுதலாகும். எனவே, $(6 \times 9) + 1 = 55$, $(5 \times 5) + 1 = 26$, $(2 \times 6) + 1 = 13$.

ஆகையால், 5 என்பது தவறு மற்றும் அது $(1 \times 3) + 1$ அதாவது, 4 என இருக்க வேண்டும்.

எனவே, விடை (*a*) ஆகும்.

பயிற்சி 1B

குறிப்புகள் (கேள்விகள் 1 முதல் 14): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும், எண் தொடரிலுள்ள ஒரு உறுப்பு தவறானது. தவறான உறுப்பைக் கண்டுபிடிக்கவும்.

1. 2, 5, 10, 17, 26, 37, 50, 64

(*a*) 17 (*b*) 26 (*c*) 37 (*d*) 64

2. 16, 22, 30, 45, 52, 66

(*a*) 30 (*b*) 45 (*c*) 52 (*d*) 66

3. 125, 126, 124, 127, 123, 129

(*a*) 126 (*b*) 124 (*c*) 123 (*d*) 129

4. 105, 85, 60, 30, 0, –45, –90

(*a*) 105 (*b*) 60 (*c*) 0 (*d*) –45

5. 380, 188, 92, 48, 20, 8, 2 **(R.R.B. 1999)**

(*a*) 8 (*b*) 20 (*c*) 48 (*d*) 188

6. 56, 58, 62, 70, 84, 118, 182

(*a*) 58 (*b*) 62 (*c*) 84 (*d*) 118

7. 3, 7, 15, 39, 63, 127, 255, 511

(*a*) 15 (*b*) 39 (*c*) 63 (*d*) 127

8. 8, 14, 26, 48, 98, 194, 386

(*a*) 14 (*b*) 48 (*c*) 98 (*d*) 194

9. 10, 26, 74, 218, 654, 1946, 5834

(*a*) 26 (*b*) 74 (*c*) 218 (*d*) 654

10. 445, 221, 109, 46, 25, 11, 4

(*a*) 25 (*b*) 46 (*c*) 109 (*d*) 221

11. 1236, 2346, 3456, 4566, 5686

(*a*) 1236 (*b*) 3456 (*c*) 4566 (*d*) 5686

12. 3, 2, 8, 9, 13, 22, 18, 32, 23, 42

(*a*) 8 (*b*) 9 (*c*) 13 (*d*) 22

13. 2, 3, 4, 4, 6, 8, 9 12, 16 **(M.A.T. 2003)**

(*a*) 3 (*b*) 6 (*c*) 9 (*d*) 12

14. 0, 2, 3, 5, 8, 10, 15, 18, 24, 26, 35

(*a*) 18 (*b*) 24 (*c*) 26 (*d*) 10

குறிப்புகள் (15 முதல் 19): கீழே உள்ள ஒவ்வொரு எண் தொடர் வரிசையிலும் இரண்டு உறுப்புகள் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டிருக்கும். உங்கள் விடையை கீழே உள்ளவற்றைப் பொறுத்து குறியிடவும் **(M.A.T. 2005)**

(*a*) அடைப்புக் குறிகளிடப்பட்ட இரண்டு உறுப்புகளும் சரி என்றால்;

(*b*) முதல் அடைப்புக் குறியிடப்பட்ட உறுப்பு சரியாகவும் இரண்டாவது அடைப்புக் குறியிடப்பட்ட உறுப்பு தவறாகவும் இருந்தால்;

(*c*) முதல் அடைப்புக் குறியிடப்பட்ட உறுப்பு தவறாகவும் இரண்டாவது அடைப்புக் குறியிடப்பட்ட உறுப்பு சரியாகவும் இருந்தால்;

(*d*) அடைப்புக் குறிகளிடப்பட்ட இரண்டு உறுப்புகளுமே தவறாக இருந்தால்.

15. 4, 6, 10, (12), 16, (14), 22

16. 3, 10, 29, (66), (127), 218

17. 2, 3, (6), 11, 18, (30), 38

18. (2), 5, (12), 25, 41, 61

19. 4, 7, (9), 10, 13, 15, (16), 19

விடைகள் (பயிற்சி 1B)

1. (*d*)	**2.** (*b*)	**3.** (*d*)	**4.** (*c*)	**5.** (*c*)	**6.** (*c*)	**7.** (*b*)	**8.** (*b*)	**9.** (*d*)	**10.** (*b*)
11. (*d*)	**12.** (*b*)	**13.** (*c*)	**14.** (*a*)	**15.** (*b*)	**16.** (*a*)	**17.** (*b*)	**18.** (*d*)	**19.** (*a*)	

தீர்வுகள் (பயிற்சி 1B)

1. அந்த தொடரிலுள்ள உறுப்புகள் முறையே $(1^2 + 1)$, $(2^2 + 1)$, $(3^2 + 1)$, $(4^2 + 1)$, $(5^2 + 1)$, $(6^2 + 1)$, $(7^2 + 1)$, ...

   எனவே 64 தவறாகும். அது $(8^2 + 1)$ அதாவது, 65 என இருக்க வேண்டும்.

2. சரியான முறை + 6, + 8, + 10, + 12, + 14.

   எனவே, 45 தவறாகும். அது (30 + 10) அதாவது, 40 என இருக்க வேண்டும்.

3. சரியான முறை + 1, − 2, + 3, − 4, + 5.

   எனவே 129 தவறு. அது (123 + 5) அதாவது, 128 ஆகும்.

4. சரியான முறை − 20, − 25, − 30, ...

   எனவே 0 தவறு. அது (30 − 35) அதாவது, −5 ஆகும்.

5. சரியான முறை − 192, − 96, − 48, − 24, − 12, − 6.

   எனவே, 48 தவறு. அது (92 − 48) அதாவது, 44 ஆகும்.

6. சரியான முறை + 2, + 4, + 8, + 16, + 32, + 64, அதாவது, $+ 2, + 2^2, + 2^3, + 2^4, + 2^5, + 2^6$.

   எனவே, 84 தவறு அது (70 + 16) அதாவது, 86 ஆகும்.

7. சரியான முறை × 2 + 1.

   எனவே, 39 தவறு அது (15 × 2 + 1) அதாவது, 31 என இருக்க வேண்டும்.

8. சரியான முறை × 2 − 2.

   எனவே, 48 தவறு. அது (26 × 2 − 2) அதாவது, 50 என இருக்க வேண்டும்.

9. சரியான முறை × 3 − 4.

   எனவே, 654 என்பது தவறு. அது (218 × 3 − 4) அதாவது, 650 என இருக்க வேண்டும்.

10. ஒவ்வொரு எண்ணிலிருந்தும் 3 கழிக்கப்பட்டு கிடைக்கும் விடை 2-ஆல் வகுக்கப்படுகிறது. அவ்வாறு கிடைக்கும் எண்ணே தொடரின் அடுத்த உறுப்பு.

    எனவே, 46 தவறு. அது $\left(\frac{109 - 3}{2}\right)$ அதாவது, 53 ஆகும்.

11. சரியான முறை + 1110.

    எனவே, 5686 என்பது தவறு அது (4566 + 1110) அதாவது, 5676 ஆகும்.

12. கொடுக்கப்பட்டுள்ள தொடர் இரண்டு வரிசைகளின் கலப்பு ஆகும்.

    I. 3, 8, 13, 18, 23 மற்றும் II. 2, 9, 22, 32, 42.

    I'ல் பின்பற்றப்பட்ட முறை + 5 மற்றும் II'ல் பின்பற்றப்பட்ட முறை + 10.

    எனவே, II'ல் 9 தவறு. அது (2 + 10) அதாவது, 12 என இருக்க வேண்டும்.

13. கொடுக்கப்பட்டுள்ள தொடர் மூன்று வரிசைகளின் கலப்பாகும்.

    I. 1-வது, 4-வது, 7-வது உறுப்புகள் அதாவது, 2, 4, 9, ...

    II. 2-வது, 5-வது, 8-வது உறுப்புகள் அதாவது, 3, 6, 12, ...

    III. 3-வது, 6-வது, 9-வது உறுப்புகள் அதாவது, 4, 8, 16, ...

    I, II மற்றும் III ஆகிய மூன்று தொடர்களிலும் ஒவ்வொரு உறுப்பும் அதற்கு முந்தைய உறுப்பின் இரு மடங்காகும்.

    எனவே, 9 தவறு அது (4 × 2) அதாவது, 8 ஆகும்.

14. கொடுக்கப்பட்டுள்ள தொடரில் இரண்டு வரிசைகளின் கலப்பு உள்ளது.

    I. 0, 3, 8, 15, 24, 35 மற்றும் II. 2, 5, 10, 18, 26

    I மற்றும் II இரண்டிலும் உள்ள முறை + 3, + 5, + 7, + 9, ...

    எனவே, வரிசை II' ல் 18 தவறு. அது (10 + 7) = 17 ஆகும்.

15. சரியான முறை + 2, + 4, + 2, + 4, ...

    12 என்கிற உறுப்பு சரியானது.

    ஆனால், 14 தவறு. அதற்கு பதிலாக (16 + 2) = 18 இடம் பெற வேண்டும்.

16. தொடரானது $1^3 + 2$, $2^3 + 2$, $3^3 + 2$, $4^3 + 2$, $5^3 + 2$, $6^3 + 2$.

    68 மற்றும் 127 ஆகிய இரண்டும் சரி.

17. சரியான முறை + 1, + 3, + 5, + 7, + 9, + 11.

    6 என்கிற உறுப்பு சரியானது.

    ஆனால், 30 தவறு பதிலாக (18 + 9) = 27 சரி.

18. சரியான முறை + 4, + 8, + 12, + 16, + 20

    2 தவறானது. அது (5 − 1) அதாவது, 4 என மாற்றப்பட வேண்டும்.

    மேலும் 12 தவறு அது (5 + 8) அதாவது, 13 ஆகும்.

19. சரியான முறை + 3, + 2, + 1, + 3, + 2, + 1, + 3.

    எனவே, 9 மற்றும் 16 இரண்டும் சரி.

வகை 2: அகர வரிசை தொடர்

இவ்வகை கேள்விகளில், ஒரு எழுத்துதொடர், எழுத்துகளின் குழுக்களின் இணைகள் அல்லது எழுத்துகள் மற்றும் எண்களின் கலவை தொடர் கொடுக்கப்பட்டிருக்கும். அந்த தொடரின் உறுப்புகள் ஒரு குறிப்பிட்ட முறையை உருவாக்கும். ஆங்கில எழுத்துக்களின் அகர வரிசைப்படி முறையை உருவாக்கும். தேர்வு எழுதுபவர் தொடரின் முறையை நன்றாக புரிந்து கொண்டு பின் தொடரில் உள்ள விடுபட்ட உறுப்பு அல்லது தவறான உறுப்பைக் கண்டுபிடிக்க வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா. 1: தொடரின் அடுத்த இரண்டு உறுப்பைக் கண்டு பிடிக்கவும்: **(C.B.I. 2003)**

A, C, F, J, ?, ?

(*a*) *L, P* (*b*) *M, O* (*c*) *O, U* (*d*) *R, V*

தீர்வு. முதல், இரண்டாவது, மூன்றாவது, ... எழுத்துக்கள் முறையே இரண்டு, மூன்று, நான்கு, ... இடங்கள் முன்னோக்கி நகர்ந்து தொடரின் அடுத்த உறுப்பைக் கொடுக்கும்.

எனவே, தொடரின் ஐந்தாவது உறுப்பு *J*-யிலிருந்து ஐந்து இடங்கள் முன்னோக்கி நகர வேண்டும். அதாவது, *O*. அதேபோல், ஆறாவது உறுப்பு ஆறு இடங்கள் முன்னோக்கி நகர வேண்டும். அதாவது, *U*.

எனவே, தொடர் கீழே உள்ளபடி அமையும்.

$$A \xrightarrow{+2} C \xrightarrow{+3} F \xrightarrow{+4} J \xrightarrow{+5} O \xrightarrow{+6} U$$

எனவே, விடுபட்ட உறுப்புகள் முறையே *O* மற்றும் *U*. எனவே, விடை (*c*) ஆகும்.

எ.கா. 2: *AC, FH, KM, PR, ?* தொடரில் அடுத்த உறுப்பு என்ன?

(*a*) *UW* (*b*) *VW* (*c*) *UX* (*d*) *TV*

(*e*) இவற்றில் எதுவுமில்லை. **(Bank Recruitment, 2005)**

தீர்வு. ஒவ்வொரு உறுப்பிலுள்ள முதல் மற்றும் இரண்டாவது எழுத்து 5 இடங்கள் முன்னோக்கி நகர்ந்து அடுத்த உறுப்பின் எழுத்துக்களைக் கொடுக்கிறது.

எனவே, விடுபட்ட உறுப்பின் முதல் எழுத்து *P*-யிலிருந்து ஐந்து இடங்கள் முன்னோக்கியும் அதாவது *U*, இரண்டாவது எழுத்து *R*-லிருந்து ஐந்து இடங்கள் முன்னோக்கியும் அதாவது *W*-ஆக இருக்கும்.

ஆகவே, விடுபட்ட உறுப்பு *UW*. எனவே, விடை (*a*).

எ.கா. 3: *BMO, EOQ, HQS, ?* விடுபட்ட உறுப்பைக் காண்க. **(S.S.C. 2005)**

(*a*) *KSU* (*b*) *LMN* (*c*) *SOV* (*d*) *SOW*

தீர்வு. கீழே உள்ள முறை உள்ளதை தெளிவாக அறிகிறோம்:

முதல் எழுத்து + 3 என்கிற முறையை பின்பற்றுகிறது.

$$B \xrightarrow{+3} E \xrightarrow{+3} H \xrightarrow{+3} (K)$$

இரண்டாவது எழுத்து + 2 என்கிற முறையை பின்பற்றுகிறது.

$$M \xrightarrow{+2} O \xrightarrow{+2} Q \xrightarrow{+2} (S)$$

முன்றாவது எழுத்து + 2 என்கிற முறையை பின்பற்றுகிறது.

$$O \xrightarrow{+2} Q \xrightarrow{+2} S \xrightarrow{+2} (U)$$

எனவே, விடுபட்ட உறுப்பு *KSU*. ஆகவே, விடை (*a*).

எ.கா. 4: தொடரில் அடுத்து வரும் உறுப்பு என்ன: *YEB, WFD, UHG, SKI, ?*

(*a*) *QOL* (*b*) *QGL* (*c*) *TOL* (*d*) *QNL*

தீர்வு. முதல், இரண்டாவது, மூன்றாவது எழுத்துக்களில் கீழே உள்ள முறையை அறிகிறோம்:

1-வது எழுத்து:

$$Y \xrightarrow{-2} W \xrightarrow{-2} U \xrightarrow{-2} S \xrightarrow{-2} (Q)$$

2-வது எழுத்து:

$$E \xrightarrow{+1} F \xrightarrow{+2} H \xrightarrow{+3} K \xrightarrow{+4} (O)$$

3-வது எழுத்து:

$$B \xrightarrow{+2} D \xrightarrow{+3} G \xrightarrow{+2} I \xrightarrow{+3} (L)$$

எனவே, விடுபட்ட உறுப்பு *QOL*. எனவே, விடை (*a*).

எ.கா. 5: தொடரில் உள்ள ? யில் எந்த உறுப்பு இடம் பெறும்:

ABD, DGK, HMS, MTB, SBL, ?

(*a*) *ZKU* (*b*) *ZKW* (*c*) *ZAB* (*d*) *XKW*

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள தொடரில் உள்ள உறுப்புகளின் தனித்தனி எழுத்துக்கள் கீழே உள்ள முறையைப் பின்பற்றுகின்றன:

1-வது எழுத்து:

$A \xrightarrow{+3} D \xrightarrow{+4} H \xrightarrow{+5} M \xrightarrow{+6} S \xrightarrow{+7} (Z)$

2-வது எழுத்து:

$B \xrightarrow{+5} G \xrightarrow{+6} M \xrightarrow{+7} T \xrightarrow{+8} B \xrightarrow{+9} (K)$

3-வது எழுத்து:

$D \xrightarrow{+7} K \xrightarrow{+8} S \xrightarrow{+9} B \xrightarrow{+10} L \xrightarrow{+11} (W)$

எனவே, விடுபட்ட உறுப்பு *ZKW*.

விடை *(b)* ஆகும்.

பயிற்சி 1C

குறிப்புகள்: கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் அகர வரிசை தொடரின் பல உறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்புகள் விடுபட்டு இருக்கும் (?) என குறியிடப்பட்டிருக்கும் கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து விடுபட்ட உறுப்புகளைக் கண்டு பிடிக்கவும்.

1. *R, U, X, A, D, ?* **(B.T.M. 2006)**
   (a) F (b) G (c) H (d) I
2. *T, R, P, N, L, ?, ?* **(C.P.O. 2004)**
   (a) J, G (b) J, H (c) K, H (d) K, I
3. *B, D, F, I, L, P, ?* **(S.S.C. 2002)**
   (a) R (b) S (c) T (d) U
4. *Z, ?, T, ? N, ?, H, ?, B* **(S.S.C. 1999)**
   (a) W, Q, K, E (b) W, R, K, E
   (c) X, Q, K, E (d) X, R, K, E
5. *Z, X, S, I, R, R, ?, ?* **(B.T.M. 2006)**
   (a) G, I (b) J, I (c) J, K (d) K, M
6. *A, B, N, C, D, O, E, F, P, ?, ?, ?* **(M.A.T. 2002)**
   (a) G, H, I (b) G, H, J
   (c) G, H, Q (d) J, K, L
7. *Y, B, T, G, O, ?* **(M.C.A. 2005)**
   (a) N (b) M (c) L (d) K
8. *Z, S, W, O, T, K, Q, G, ?, ?*
   (a) N, C (b) N, D (c) O, C (d) O, D
9. *b e d f ? h j ? I*
   (a) i m (b) m i (c) i n (d) j m
10. *AI, BJ, CK, ?* **(R.R.B. 2002)**
    (a) DL (b) DM (c) GH (d) LM
11. *AZ, GT, MN, ?, YB* **(R.R.B. 2006)**
    (a) JH (b) SH (c) SK (d) TS
12. *ajs, gpy, ?, sbk, yhq* **(M.B.A. 2004)**
    (a) dmv (b) mve (c) oua (d) qzi

விடைகள் (பயிற்சி 1C)

1. *(b)* 2. *(b)* 3. *(c)* 4. *(a)* 5. *(a)* 6. *(c)* 7. *(c)* 8. *(a)* 9. *(a)* 10. *(a)*
11. *(b)* 12. *(b)*

தீர்வுகள் (பயிற்சி 1C)

1. $R \xrightarrow{+3} U \xrightarrow{+3} X \xrightarrow{+3} A \xrightarrow{+3} D \xrightarrow{+3} G$

2. $T \xrightarrow{-2} R \xrightarrow{-2} P \xrightarrow{-2} N \xrightarrow{-2} L \xrightarrow{-2} (J) \xrightarrow{-2} (H)$

3. $B \xrightarrow{+2} D \xrightarrow{+2} F \xrightarrow{+3} I \xrightarrow{+3} L \xrightarrow{+4} P \xrightarrow{+4} (T)$

4. $Z \xrightarrow{-6} T \xrightarrow{-6} N \xrightarrow{-6} H \xrightarrow{-6} B$

   $Z \xrightarrow{-3} (W) \xrightarrow{-3} T \xrightarrow{-3} (Q) \xrightarrow{-3} N \xrightarrow{-3} (K) \xrightarrow{-3} H \xrightarrow{-3} (E) \xrightarrow{-3} B$

5. $Z \xrightarrow{-2} X \xrightarrow{-5} S \xrightarrow{-10} I \xrightarrow{-17} R \xrightarrow{-26} R \xrightarrow{-37} (G) \xrightarrow{-50} (I)$

தொடரின் அடுத்தடுத்த உறுப்புகளுக்கு இடையே உள்ள வித்தியாசத்தைக் குறிக்கும் எண்கள் மீண்டும் ஒரு தொடரை உருவாக்குகின்றன. − 2, 5, 10, 17, 26, 37, 50. இதில் பின்பற்றப்பட்ட முறை + 3, + 5, + 7, + 9, + 11, + 13.

6. கொடுக்கப்பட்டுள்ள தொடரை இரண்டு வரிசைகளாகப் பிரிக்கலாம்:

I. *A*, *B*, *C*, *D*, *E*, *F*, ? ? மற்றும் II. *N*, *O*, *P*, ?

இந்த தொடரில் முதல் வரிசையில் இரண்டு உறுப்புகளும் இரண்டாவது வரிசையில் ஒரு உறுப்பும் விடுபட்டுள்ளன.

I'ல் விடுபட்ட உறுப்புகள் முறையே *G* மற்றும் *H*.

II'ல் விடுபட்ட உறுப்பு *Q*.

7. கொடுக்கப்பட்டுள்ள தொடர் இரண்டு வரிசைகளின் கலப்பு:

I. *Y*, *T*, *O* மற்றும் II. *B*, *G*, ?

வரிசை I'ல் ஆங்கில வரிசை கடைசி எழுத்துக்களின் 2-வது, 7-வது மற்றும் 12-வது எழுத்துக்கள் உள்ளன.

வரிசை II'ல் ஆங்கில வரிசை முதல் எழுத்துக்களின் 2-வது, 7-வது மற்றும் 12-வது எழுத்துக்கள் உள்ளன.

எனவே, II'ல் விடுபட்ட எழுத்து ஆங்கில அகர வரிசையின் முதலிலிருந்து 12-வது எழுத்து அதாவது, *L* ஆகும்.

8. கொடுக்கப்பட்டுள்ள தொடரில் இரண்டு வரிசைகள் உள்ளன:

I. *Z*, *W*, *T*, *Q*, ? மற்றும் II. *S*, *O*, *K*, *G*, ?

I'ல் உள்ள முறை: $Z \xrightarrow{-3} W \xrightarrow{-3} T \xrightarrow{-3} Q \xrightarrow{-3} (N)$

II'ல் உள்ள முறை: $S \xrightarrow{-4} O \xrightarrow{-4} K \xrightarrow{-4} G \xrightarrow{-4} (C)$

9. இந்த தொடர் கீழே உள்ளது போல் குழுக்களாக பிரிக்கப்படும்:

b e d / f ? h / j ? I

முதல் குழுவில் இரண்டாவது மற்றும் மூன்றாவது எழுத்துக்கள் முதல் எழுத்திலிருந்து முறையே மூன்று மற்றும் இரண்டு எழுத்துக்கள் முன்னோக்கி உள்ளன. இரண்டாவது மற்றும் மூன்றாவது குழுக்களிலும் இதே முறை பின்பற்றப்படும்.

10. 1-வது எழுத்து: $A \xrightarrow{+1} B \xrightarrow{+1} C \xrightarrow{+1} (D)$

2-வது எழுத்து: $I \xrightarrow{+1} J \xrightarrow{+1} K \xrightarrow{+1} (L)$

11. 1-வது எழுத்து: $A \xrightarrow{+6} G \xrightarrow{+6} M \xrightarrow{+6} (S) \xrightarrow{+6} Y$

2-வது எழுத்து: $Z \xrightarrow{-6} T \xrightarrow{-6} N \xrightarrow{-6} (H) \xrightarrow{-6} B$

12. 1-வது எழுத்து: $a \xrightarrow{+6} g \xrightarrow{+6} (m) \xrightarrow{+6} s \xrightarrow{+6} y$

2-வது எழுத்து: $j \xrightarrow{+6} p \xrightarrow{+6} (v) \xrightarrow{+6} b \xrightarrow{+6} h$

3-வது எழுத்து: $s \xrightarrow{+6} y \xrightarrow{+6} e \xrightarrow{+6} k \xrightarrow{+6} q$

வகை 3: எழுத்து-எண் தொடர்

இந்த வகை கேள்விகளில் வகை 1 மற்றும் வகை 2 ஆகிய இரண்டும் கலந்து இருக்கும். இந்த கேள்விகளில் கொடுக்கப்பட்டுள்ள தொடர்கள், எழுத்துக்கள் மற்றும் எண்களின் கலவையைக் கொண்டிருக்கும். அவை ஒரு குறிப்பிட்ட முறையை பின்பற்றி இருக்கும். கீழே உள்ள உதாரணங்களை கவனமாகப் படிக்கவும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா. 1: இந்த எழுத்து-எண் தொடரில் அடுத்த உறுப்பைக் கண்டுபிடிக்கவும்.

ZIA, X2D, V6G, T21J, R88M, P44P, ? **(M.B.A. 2004)**

(*a*) *N2676S* (*b*) *N2676T* (*c*) *T2670N* (*d*) *2676N*

தீர்வு. எழுத்துக்கள் பின்பற்றிய முறை வருமாறு:

1-வது எழுத்து: $Z \xrightarrow{-2} X \xrightarrow{-2} V \xrightarrow{-2} T \xrightarrow{-2} R \xrightarrow{-2} P \xrightarrow{-2} (N)$

2-வது எழுத்து: $A \xrightarrow{+3} D \xrightarrow{+3} G \xrightarrow{+3} J \xrightarrow{+3} M \xrightarrow{+3} P \xrightarrow{+3} (S)$

தொடர் 1, 2, 6, 21, 88, 445, ... ஆகிய எண்களால் உருவானது. அது $\times 1 + 1$, $\times 2 + 2$, $\times 3 + 3$, $\times 4 + 4$, $\times 5 + 5$, ... என்கிற முறையை பின்பற்றியுள்ளது.

தேவைப்படும் உறுப்பில் இருக்க வேண்டிய எண் = $445 \times 6 + 6 = 2676$

எனவே, தேவைப்படும் உறுப்பு = $N2676S$

விடை (*a*) ஆகும்.

எ.கா. 2: கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடரில் உள்ள மாற்றுக்களில் எது பொருந்தாது?

G4T, J10R, M20P, P43N, S90L **(N.M.A.T. 2003)**

(*a*) *G4T* (*b*) *J10R* (*c*) *M20P* (*d*) *P43N* (*e*) *S90L*

தீர்வு. எழுத்துக்கள் உருவாக்கிய முறை

1-வது எழுத்து: $G \xrightarrow{+3} J \xrightarrow{+3} M \xrightarrow{+3} P \xrightarrow{+3} S$

3-வது எழுத்து: $T \xrightarrow{-2} R \xrightarrow{-2} P \xrightarrow{-2} N \xrightarrow{-2} L$

4, 10, 20, 43, 90 என்கிற எண் வரிசை முறையே $\times 2 + 1$, $\times 2 + 2$, $\times 2 + 3$, $\times 2 + 4$ என்கிற முறையை பின்பற்றுகிறது.

எனவே, 10 தவறு. அது $(4 \times 2 + 1)$ அதாவது, 9 என இருக்க வேண்டும்.

எனவே, *J10R* என்கிற உறுப்பு இந்த தொடருக்கு பொருந்தாது. சரியான உறுப்பு *J9R*.

எனவே, விடை (*b*) ஆகும்.

பயிற்சி 1D

குறிப்புகள்: கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஒரு எழுத்து-எண் தொடர் உள்ளது. அதில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்புகள் (?) குறியிட்டபடி விடப்பட்டிருக்கும். கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து விடுபட்ட உறுப்பைக் கண்டுபிடிக்கவும்:

1. *D*-4, *F*-6, *H*-8, *J*-10, ?, ?
   (*a*) *K*-12, *M*-13 (*b*) *L*-12, *M*-14
   (*c*) *L*-12, *N*-14 (*d*) *K*-12, *M*-14
2. 2*B*, 4*C*, 8*E*, 14*H*, ? **(M.A.T. 2002)**
   (*a*) 16*K* (*b*) 20*I* (*c*) 20*L* (*d*) 22*L*
3. 3*F*, 6*G*, 11*I*, 18*L*, ?
   (*a*) 21*O* (*b*) 25*N* (*c*) 25*P* (*d*) 27*P*
   (*e*) 27*Q*
4. *W*-144, ?, *S*-100, *Q*-81, *O*-64 **(S.S.C. 2002)**
   (*a*) *U*-121 (*b*) *U*-122 (*c*) *V*-121 (*d*) *V*-128
5. 2, *A*, 9, *B*, 6, *C*, 13, *D*, ? **(R.R.B. 2005)**
   (*a*) 9 (*b*) 10 (*c*) 12 (*d*) 19
6. *KM*5, *IP*8, *GS*11, *EV*14, ?
   (*a*) *BX*17 (*b*) *BY*17 (*c*) *CY*17 (*d*) *CY*18
   (*e*) *CZ*17
7. *C*4*X*, *F*9*U*, *I*16*R*, ?
   (*a*) *K*25*P* (*b*) *L*25*P* (*c*) *L*25*O* (*d*) *L*27*P*
8. 2*Z*5, 7*Y*7, 14*X*9, 23*W*11, 34*V*13, ?
   (*a*) 27*U*24 (*b*) 45*U*15 (*c*) 47*U*15 (*d*) 47*V*14
9. *N*5*V*, *K*7*T*, ?, *E*14*P*, *B*19*N* **(S.B.I.P.O. 1999)**
   (*a*) *H*9*R* (*b*) *H*10*Q* (*c*) *H*10*R* (*d*) *I*10*R*
10. *Q*1*F*, *S*2*E*, *U*6*D*, *W*21*C*, ? **(M.A.T. 2004)**
    (*a*) *Y*44*B* (*b*) *Y*66*B* (*c*) *Y*88*B* (*d*) *Z*88*B*
11. 2*A*11, 4*D*13, 12*G*17, ?
    (*a*) 36*I*19 (*b*) 36*J*21 (*c*) 48*J*21 (*d*) 48*J*23
12. *J*2*Z*, *K*4*X*, *I*7*V*, ?, *H*16*R*, *M*22*P*
    (*a*) *I*11*T* (*b*) *L*11*S* (*c*) *L*12*T* (*d*) *L*11*T*
    (*e*) *L*12*S*
13. இந்த தொடருக்கு பொருந்தாத உறுப்பைத் தேர்ந்தெடுக்கவும்:
    1*CV*, 5*FU*, 9*IT*, 15*LS*, 17*OR* **(M.A.T. 2003)**
    (*a*) 5*FU* (*b*) 15*LS* (*c*) 9*IT* (*d*) 17*OR*

விடைகள் (பயிற்சி 1D)

1. (*c*)	2. (*d*)	3. (*d*)	4. (*a*)	5. (*b*)	6. (*c*)	7. (*c*)	8. (*c*)	9. (*c*)	10. (*c*)
11. (*d*)	12. (*d*)	13. (*b*)							

தீர்வுகள் (பயிற்சி 1D)

1. தொடரிலுள்ள எழுத்துக்கள் ஒன்று மாற்றி ஒன்று உள்ளது மற்றும் எண்கள் ஆங்கில அகர வரிசையின் முதல் எழுத்துலிருந்து அவற்றின் இருப்பிடத்தைக் குறிக்கிறது.

2. **எண்கள்** : $2 \xrightarrow{+2} 4 \xrightarrow{+4} 8 \xrightarrow{+6} 14 \xrightarrow{+8} (22)$

   எழுத்துக்கள் : $B \xrightarrow{+1} C \xrightarrow{+2} E \xrightarrow{+3} H \xrightarrow{+4} (L)$

3. **எண்கள்** : $3 \xrightarrow{+3} 6 \xrightarrow{+5} 11 \xrightarrow{+7} 18 \xrightarrow{+9} (27)$

   எழுத்துக்கள் : $F \xrightarrow{+1} G \xrightarrow{+2} I \xrightarrow{+3} L \xrightarrow{+4} (P)$

4. **எழுத்துக்கள்** : $W \xrightarrow{-2} (U) \xrightarrow{-2} S \xrightarrow{-2} Q \xrightarrow{-2} O$

   எண்கள் : $144\ (12^2) \longrightarrow (121)\ (11^2) \longrightarrow 100\ (10^2) \longrightarrow 81\ (9^2) \longrightarrow 64\ (8^2)$

5. கொடுக்கப்பட்டுள்ள தொடரில் இரண்டு வரிசைகள் உள்ளன.

   I. 2, 9, 6, 13, ? மற்றும் II. *A*, *B*, *C*, *D*

   I'ல் உள்ள முறை: $2 \xrightarrow{+7} 9 \xrightarrow{-3} 6 \xrightarrow{+7} 13 \xrightarrow{-3} (10)$

   எனவே, விடுபட்ட உறுப்பு 10.

6. **1-வது எழுத்து** : $K \xrightarrow{-2} I \xrightarrow{-2} G \xrightarrow{-2} E \xrightarrow{-2} (C)$

   2-வது எழுத்து : $M \xrightarrow{+3} P \xrightarrow{+3} S \xrightarrow{+3} V \xrightarrow{+3} (Y)$

   எண் : $5 \xrightarrow{+3} 8 \xrightarrow{+3} 11 \xrightarrow{+3} 14 \xrightarrow{+3} (17)$

7. **1-வது எழுத்து** : $C \xrightarrow{+3} F \xrightarrow{+3} I \xrightarrow{+3} (L)$

   எண் : $4\ (2^2) \longrightarrow 9\ (3^2) \longrightarrow 16\ (4^2) \longrightarrow (25)\ (5^2)$

   3-வது எழுத்து : $X \xrightarrow{-3} U \xrightarrow{-3} R \xrightarrow{-3} (O)$

8. **1-வது எண்** : $2 \xrightarrow{+5} 7 \xrightarrow{+7} 14 \xrightarrow{+9} 23 \xrightarrow{+11} 34 \xrightarrow{+13} (47)$

   நடு எழுத்து : $Z \xrightarrow{-1} Y \xrightarrow{-1} X \xrightarrow{-1} W \xrightarrow{-1} V \xrightarrow{-1} (U)$

   3-வது எண் : $5 \xrightarrow{+2} 7 \xrightarrow{+2} 9 \xrightarrow{+2} 11 \xrightarrow{+2} 13 \xrightarrow{+2} (15)$

9. **1-வது எழுத்து** : $N \xrightarrow{-3} K \xrightarrow{-3} (H) \xrightarrow{-3} E \xrightarrow{-3} B$

   நடு எழுத்து : $5 \xrightarrow{+2} 7 \xrightarrow{+3} (10) \xrightarrow{+4} 14 \xrightarrow{+5} 19$

   2-வது எழுத்து : $V \xrightarrow{-2} T \xrightarrow{-2} (R) \xrightarrow{-2} P \xrightarrow{-2} N$

10. **1-வது எழுத்து** : $Q \xrightarrow{+2} S \xrightarrow{+2} U \xrightarrow{+2} W \xrightarrow{+2} (Y)$

    நடு எண் : $1 \xrightarrow{\times 1+1} 2 \xrightarrow{\times 2+2} 6 \xrightarrow{\times 3+3} 21 \xrightarrow{\times 4+4} (88)$

    3-வது எண் : $F \xrightarrow{-1} E \xrightarrow{-1} D \xrightarrow{-1} C \xrightarrow{-1} (B)$

11. **1-வது எண்** : $2 \xrightarrow{\times 2} 4 \xrightarrow{\times 3} 12 \xrightarrow{\times 4} (48)$

    நடு எழுத்து : $A \xrightarrow{+3} D \xrightarrow{+3} G \xrightarrow{+3} (J)$

    3-வது எண் : $11 \xrightarrow{+2} 13 \xrightarrow{+4} 17 \xrightarrow{+6} (23)$

12. தொடரிலுள்ள முதல் எழுத்துக்கள் ஒற்றை எண்கள் ஆகும். $J \xrightarrow{-1} I \xrightarrow{-1} H$ மற்றும் இரட்டை எண் உறுப்புகள் $K \xrightarrow{+1} (L) \xrightarrow{+1} M$ என்கிற தொடரை உருவாக்குகின்றன.

    நடு எண் : $2 \xrightarrow{+2} 4 \xrightarrow{+3} 7 \xrightarrow{+4} (11) \xrightarrow{+5} 16 \xrightarrow{+6} 22$

    3-வது எண் : $Z \xrightarrow{-2} X \xrightarrow{-2} V \xrightarrow{-2} (T) \xrightarrow{-2} R \xrightarrow{-2} P$

13. 1-வது எண் : $1 \xrightarrow{+4} 5 \xrightarrow{+4} 9 \xrightarrow{+4} (13) \xrightarrow{+4} 17$

2-வது எழுத்து : $C \xrightarrow{+3} F \xrightarrow{+3} I \xrightarrow{+3} (L) \xrightarrow{+3} O$

3-வது எழுத்து : $V \xrightarrow{-1} U \xrightarrow{-1} T \xrightarrow{-1} (S) \xrightarrow{-1} R$

எனவே, $15LS$ என்கிற உறுப்பு தவறானது. அது $13LS$ என இருக்க வேண்டும்..

வகை 4: தொடர்ச்சி முறை வரிசைகள்

இந்த வகை கேள்விகளில் ஒரு குறிப்பிட்ட முறையை பின்பற்றும் சிறிய எழுத்துகளின் வரிசைகள் இருக்கும். எனினும், தொடரில் சில எழுத்துகள் விடுபட்டிருக்கும். இந்த விடுபட்ட எண்கள் கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளில் இருக்கும். தேர்வு எழுதுபவர் மாற்றுகளிலிருந்து தேவையான உறுப்பை தேர்வு செய்ய வேண்டும்.

எடுத்துக்காட்டு: ***aab ___ aaa ___ bba***

(*a*) *baa* (*b*) *abb* (*c*) *bab* (*d*) *aab* (*e*) *bbb*

தீர்வு. கீழே உள்ளபடி படிப்படியாக தொடர்வோம்.

1. இரண்டு *a*'க்களை தொடர்ந்து இரண்டு *b*'க்கள் இருப்பதால் முதல் காலியிடம் *b*'யால் நிரப்பப்பட வேண்டும்.
2. தொடரில் நான்கு '*a*'க்களைத் தொடர்ந்து இரண்டு '*b*'க்கள் இருப்பதால் இரண்டாவது காலியிடம் '*a*'யால் நிரப்பபட வேண்டும். அல்லது தொடரில் மூன்று '*a*'க்களைத் தொடர்ந்து மூன்று '*b*'க்கள் உள்ளதால் காலியிடம் '*b*'யால் நிரப்பப்பட வேண்டும்.
3. கடைசி காலியிடம் '*a*'யால் நிரப்பட வேண்டும்.
4. எனவே இரண்டு சாத்தியமான விடைகள் உள்ளன '*baa*' மற்றும் '*bba*'. ஆனால் '*baa*' மட்டுமே மாற்றுகளில் உள்ளது. எனவே, விடை (*a*).
5. ஒரு வேளை மாற்றுகளில் இரண்டுமே இருந்தால், அவற்றுள் மிகப் பொருத்தமான மாற்றை தேர்ந்தெடுக்கலாம், அதாவது *aabb/aaabbb/aa*. எனவே, நமது விடை '*bba*' என இருந்திருக்கும்.

தொடர்புடைய வரிசைகள்: இந்த வகை வரிசைகளில் வெவ்வேறு உறுப்புகள் கொண்ட மூன்று தொடர்கள் இருக்கும் (உறுப்புகள் பொதுவாக பெரிய எழுத்துக்கள், இலக்கங்கள் மற்றும் சிறிய எழுத்துக்கள் ஆகியவை). மூன்று தொடர்களிலும் உள்ள ஒத்த தன்மையைப் பொறுத்து, ஒரு பெரிய எழுத்து ஒரு தனித்துவமான இலக்கத்துடனும், ஒரு தனித்துவமான சிறிய எழுத்துடனும் தொடர்பு கொண்டிருக்கும். தேர்வு எழுதுபவர் இந்த தொடர்பை சரியாக கண்டுபிடித்து, உறுப்புகளை சரியாக தேர்வு செய்து தேவைப்பட்ட இடங்களில் நிரப்ப வேண்டும்.

கீழே உள்ள எடுத்துக்காட்டை கவனிக்கவும்.

எடுத்துக்காட்டு: கீழே உள்ள தொடர்களில், குறியிடப்பட்ட இடங்களில், சரியான வரிசையில் நிரப்பப்பட வேண்டிய எண்களைக் கொண்ட மாற்றை தேர்ந்தெடுக்கவும்.

B	**_**	**_**	***D***	**_**	**_**	***C***	***A***	***B***	***D***	***A***	***C***	***B***
_	**_**	**4**	**1**	**3**	**2**	**_**	**_**	**_**	**?**	**?**	**?**	**?**
a	**_**	***a***	**_**	***b***	***c***	**_**	***c***	**_**	**_**	**_**	**_**	**_**

(*a*) 1, 2, 3, 4 (*b*) 2, 3, 1, 4 (*c*) 1, 2, 4, 3 (*d*) 2, 1, 4, 3

தீர்வு. முதல் வரிசையில் *D* உள்ள இடத்தில் இரண்டாவது வரிசையில் 1 உள்ளது. எனவே *D*-யுடன் 1 தொடர்புடையது. எனவே, *D*க்கு நேர் கீழேயுள்ள முதல் ? 1ஆல் நிரப்பப்பட வேண்டும்.

மூன்றாவது வரிசையில் எட்டாவது இடத்திலுள்ள *C* முதல் வரிசையில் உள்ள *A*யுடன் தொடர்புடையது. அதே நேரம் ஆறாவது இடத்திலுள்ள *C* இரண்டாவது வரிசையில் உள்ள 2-உடன் தொடர்புடையது. எனவே, 2-ஆனது *A*யுடன் தொடர்புடையது. எனவே *A*க்கு கீழேயுள்ள இரண்டாவது ? 2-ஆல் நிரப்பப்பட வேண்டும்.

மூன்றாவது வரிசையில், முதல் இடத்திலுள்ள *a* முதல் வரிசையில் உள்ள *B*யுடன் தொடர்புடையது மற்றும் மூன்றாவது இடத்திலுள்ள *a* இரண்டாவது வரிசையிலுள்ள 4-உடன் தொடர்புடையது. எனவே *B*யுடன் 4 தொடர்புடையது. ஆகையால் *B*க்கு கீழே உள்ள ? 4ஆல் நிரப்பப்பட வேண்டும்.

இப்பொழுது, 3 மட்டும் மீதமுள்ளது. எனவே 3, *C*யுடன் தொடர்புடையது. ஆகவே, *C*க்கு கீழேயுள்ள ? 3ஆல் நிரப்பப்பட வேண்டும்.

எனவே, *DACB* என்பது 1, 2, 3, 4 க்கு தொடர்புடையது. ஆகவே, விடை (*a*) ஆகும்.

பயிற்சி 1E

குறிப்புகள்: *கீழே உள்ள ஒவ்வொரு எழுத்து தொடரிலும், சில எழுத்துக்கள் விடுபட்டுள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளில் ஒன்றாக அவை இருக்கும் சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.*

1. _ _ *aba* _ _ *ba* _ *ab*
   (*a*) *abbba* (*b*) *abbab* (*c*) *baabb* (*d*) *bbaba*
2. *ab* _ _ *baa* _ _ *ab* _ _ **(S.S.C. 2005)**
   (*a*) *aaaaa* (*b*) *aabaa* (*c*) *aabab* (*d*) *baabb*
3. *a* _ *ba* _ *b* _ *b* _ *a* _ *b*
   (Hotel Management, 2004 R.R.B. 2002)
   (*a*) *abaab* (*b*) *abbab* (*c*) *aabba* (*d*) *bbabb*
4. _ *stt* _ *tt* _ *tts* _ **(S.S.C. 2000)**
   (*a*) *tsts* (*b*) *ttst* (*c*) *sstt* (*d*) *tsst*
5. _ *nmmn* _ *mmnn* _ *mnnm* _ **(C.P.O. 2005)**
   (*a*) *nmmn* (*b*) *mnnm* (*c*) *nnmm* (*d*) *nmnm*
6. *bca* _ *b* _ *aabc* _ *a* _ *caa*
   (A.T.M.A. 2004)
   (*a*) *acab* (*b*) *bcbb* (*c*) *cbab* (*d*) *ccab*
7. _ *aa*_ *ba* _ *bb* _ *ab* _ *aab* **(S.S.C. 2003)**
   (*a*) *aaabb* (*b*) *babab* (*c*) *bbaab* (*d*) *bbbaa*
8. *a* _ *n* _ *b* _ _ *ncb* _ _ *ncb* **(S.S.C. 2003)**
   (*a*) *abbbcc* (*b*) *abcbcb* (*c*) *bacbab* (*d*) *bcabab*
9. *a* _ *bbc* _ *aab* _ *cca* _ *bbcc*
   (*a*) *bacb* (*b*) *acba* (*c*) *abba* (*d*) *caba*
10. *c* _ *bba* _ *cab* _ *ac* _ *ab* _ *ac*
    (*a*) *abcbc* (*b*) *acbcb* (*c*) *babcc* (*d*) *bcacb*
11. *ac* _ *cab* _ *baca* _ *aba* _ *acac*
    (*a*) *aacb* (*b*) *acbc* (*c*) *babb* (*d*) *bcbb*
12. *ab* _ *aa* _ *bbb* _ *aaa* _ *bbba*
    (*a*) *abba* (*b*) *baab* (*c*) *aaab* (*d*) *abab*
13. *abca* _ *bcaab* _ *ca* _ *bbc* _ *a*
    (*a*) *ccaa* (*b*) *bbaa* (*c*) *abac* (*d*) *abba*

விடைகள் (பயிற்சி 1E)

1. (*b*)	2. (*b*)	3. (*d*)	4. (*d*)	5. (*c*)	6. (*a*)	7. (*c*)	8. (*d*)	9. (*b*)	10. (*b*)
11. (*a*)	12. (*b*)	13. (*c*)							

தீர்வுகள் (பயிற்சி 1E)

1. அந்த தொடரானது *a*_*b*/*ab*/*ab*_/*a*_*b*/*ab*. எனவே, '*ab*' என்கிற முறை மீண்டும் மீண்டும் வருகிறது.
2. அந்த தொடரானது *ab*_*a*/*a*_*aba*/*ab*_*a*/*aba*_. எனவே, '*aba*' என்கிற முறை மீண்டும் மீண்டும் வருகிறது.
3. அந்த தொடரானது *a*_*bb*/*a*_*bb*/*a*_*bb*/*a*_*bb*. எனவே, '*abb*' என்கிற முறை மீண்டும் மீண்டும் வருகிறது.
4. அந்த தொடரானது *t*_*st*/*t*_*st*/*t*_*st*/*tst*_. எனவே, '*tst*' என்கிற முறை மீண்டும் மீண்டும் வருகிறது.
5. அந்த தொடரானது *nnmm*/*nn*_*mm*/*nnm*_*m*/*nnmm*_. எனவே, '*nnmm*' என்கிற முறை மீண்டும் மீண்டும் வருகிறது.
6. அந்த தொடரானது *bcaa*/*bc*_*aa*/*bca*_*a*/*b*_*caa*. எனவே, '*bcaa*' என்கிற முறை மீண்டும் மீண்டும் வருகிறது.
7. அந்த தொடரானது *b*_*aab*/*ba*_*ab*/*b*_*aab*/*b*_*aab*, எனவே, '*baab*' என்கிற முறை மீண்டும் மீண்டும் வருகிறது.
8. அந்த தொடரானது *a*_*bncb*/*a*_*bncb*/*a*_*bncb*. எனவே, '*abncb*' என்கிற முறை மீண்டும் மீண்டும் வருகிறது.
9. அந்த தொடரானது *a*_*abbcc*/*aab*_*bcc*/*a*_*abbcc*. எனவே, '*aabbcc*' என்கிற முறை மீண்டும் மீண்டும் வருகிறது.
10. அந்த தொடரானது *c*_*abbac*/*cab*_*bac*/*c*_*ab*_*ac*. எனவே, '*cabbac*' என்கிற முறை மீண்டும் மீண்டும் வருகிறது.
11. அந்த தொடரானது *ac*_*ac*/*ab*_*ab*/*acac*/*abab*/*acac*. எனவே, '*acac/abab*' என்கிற முறை மீண்டும் மீண்டும் வருகிறது.
12. அந்த தொடரானது *abb*/*aa*_*bbb*/*a*_*aaab*_*bbb*/*a*. எனவே, முறையானது இரண்டு முறை, பின் மூன்று முறை, பின் நான்கு முறை மற்றும் அதே போல் தொடர்கிறது.
13. அந்த தொடர் *abc*/*a*_*abc*/*aab*_*bc*/*a*_*abbcc*/*a*.

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன்

பயிற்சி

1. கீழே உள்ள தொடரில் கீழே உள்ளவற்றுள் எந்த எண் கேள்விக் குறியை (?) நிரப்பும்?
   87, 89, 92, 97, 104, 115, ? 145
   (*a*) 125 (*b*) 128 (*c*) 133 (*d*) 132
   [SSC-CGL Exam, 2021]
2. கீழே உள்ள தொடரில் கேள்விக் குறியை (?) எந்த எழுத்து குழு நிரப்பும்?
   DAC, *GWH*, *JSM*, *MOR*, ?
   (*a*) *QKV* (*b*) *PKW* (*c*) *QJW* (*d*) *PJV*
   [SSC-CGL Exam, 2021]

3. கீழே உள்ள தொடரில் காலியிடங்களை எந்த எழுத்துக்களால் நிரப்பினால் தொடர் பூர்த்தியடையும்?
_swws_wwws_swwww_sss
(a) *w, s, w, s* (b) *w, s, s, s*
(c) *w, w, s, s* (d) *w, s, s, w*
[SSC-CGL Exam, 2020]

4. கீழே உள்ள தொடரில் கேள்விக் குறியை எந்த எண் நிரப்பும்? **[SSC-CGL Exam, 2020]**
17, 20, 15, 22, 13, ?
(a) 2 (b) 22 (c) 4 (d) 24

5. கீழே உள்ள தொடரில் கேள்விக் குறியை நிரப்பும் எழுத்து குழுவைக் கண்டுபிடிக்கவும்.
KQG, JTK, HXO, ECS, ?
(a) *BIV* (b) *AIW* (c) *AHW* (d) *BIX*
[SSC-CGL Exam, 2020]

6. கீழே உள்ள தொடர்களில் உள்ள கேள்விக் குறியை எந்த எழுத்து நிரப்பும்? **[SSC-CGL Exam, 2020]**
O, B, L, C, I, D, F, E, ?
(a) *K* (b) *C* (c) *H* (d) *N*

7. கொடுக்கப்பட்டுள்ள தொடரில் எந்த எழுத்து குழுவை நிரப்பினால் அந்த தொடர் முழுமையாகும்?
cb_db_cba_bc_bad_c
(a) *acdcb* (b) *cabdc* (c) *acbcd* (d) *dcbcb*
[SSC-CGL Exam, 2019]

8. கீழே உள்ள தொடரில் அடுத்து வரும் எண் எது?
1, 3, 7, 15, 31, 63, ...
(a) 139 (b) 127 (c) 125 (d) 126
[SSC-CPO Exam, 2019]

9. கொடுக்கப்பட்டுள்ள தொடருக்கு சம்பந்தமில்லாத எண்ணைக் கண்டறிக. **[SSC-CPO Exam, 2019]**
1, 8, 27, 64, 125, 216, 344, 512, 729
(a) 512 (b) 729 (c) 64 (d) 344

10. கீழே உள்ள தொடரில் கேள்விக் குறியை (?) எந்த எண் நிரப்பும்? **[SSC-CPO Exam, 2019]**
2, 5, 10, 17, 26, 37, ?, 65, 82, 101
(a) 48 (b) 42 (c) 50 (d) 49

11. கீழே உள்ள தொடரில் கேள்விக் குறியை எந்த எழுத்து எழுத்து குழு முழுமையாக்கும்?
XCA, WDZ, UFX, RIU, NMQ, ?
(a) *IKJ* (b) *JKO* (c) *JFU* (d) *IRL*
[SSC-CPO Exam, 2019]

12. கீழே உள்ள எண் தொடரில், இரண்டு எண்கள் அடைப்புக் குறிக்குள் உள்ளன. இந்த எண்களுக்கு ஏற்ற மாற்று எது என கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்றுகளிலிருந்து கண்டுபிடிக்க வேண்டும்.
2, 4, 6, 8, 10, (12), 14, 16, (18), 20.
(a) முதல் அடைப்புக் குறி எண் சரியானது, இரண்டாவது அடைப்புக் குறி தவறு.
(b) முதல் அடைப்புக் குறி எண் தவறு, இரண்டாவது சரி.
(c) இரண்டு அடைப்புக் குறிகளிலும் உள்ள எண்கள் தவறு.
(d) இரண்டு அடைப்புக் குறிகளிலும் உள்ள எண்கள் சரி.
[SSC-CPO Exam, 2019]

13. கீழே உள்ள தொடரில் அடுத்து வருவது என்ன?
Z, U, Q, N, L, ...
(a) *M* (b) *G* (c) *H* (d) *K*
[SSC-CPO Exam, 2019]

14. கீழே உள்ளவற்றுள் "?" என்கிற இடத்தில் இடம் பெறுவது எது?
AB3 CE6 FI10 JN15 ?
(a) *OT20* (b) *TO21* (c) *OT21* (d) *TS21*
(e) இவற்றில் எதுவுமில்லை
[SBI Clerk Exam, 2018]

15. கீழே உள்ள கேள்வியில் உள்ள காலியிடங்களில் எந்த எழுத்து குழுவை நிரப்பினால் அந்த வரிசை முழுமையடையும்? **[SSC-CGL Exam, 2017]**
_ yzaa _ y _ xy _ aazy _
(a) *xxzzx* (b) *xxaza* (c) *xzxzx* (d) *aazzx*

16. கீழே உள்ள கேள்வியில், விடுபட்ட எண்ணை மாற்றுகளிலிருந்து தேர்ந்தெடுக்கவும்.
19, 38, ?, 228, 684, 1368
(a) 108 (b) 113 (c) 114 (d) 138
[SSC-CGL Exam, 2017]

17. விடுபட்ட ஒரு உறுப்புடன் தொடர் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட மாற்றுகளிலிருந்து அந்த விடுபட்ட உறுப்பைக் கண்டுபிடிக்கவும்.
A, C, E, G, ?
(a) *H* (b) *I* (c) *J* (d) *F*
[SSC-CGL Exam, 2017]

18. கொடுக்கப்பட்டுள்ள வரிசையின் விடுபட்ட உறுப்பைக் கண்டுபிடிக்கவும்.
2, 4, 13, 41, 106, ?
(a) 172 (b) 191 (c) 219 (d) 232
[SSC-CGL Exam, 2017]

குறிப்புகள் (கேள்விகள் 19–22): ஒரு தொடரில் ஒரு/இரண்டு உறுப்புகள் விடுபட்டிருக்கும். கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து சரியானதை தேர்வு செய்யவும்.
[SSC-CGL Tier I Exam, 2015]

19. 36, 34, 30, 28, 24, ?
(a) 20 (b) 23 (c) 22 (d) 26

20. 3, 5, 35, 10, 12, 35, ___, ___
(a) 19, 35 (b) 17, 19 (c) 19, 24 (d) 22, 35

21. *FAK IEM LIO ?*
(a) *OMQ* (b) *OPQ* (c) *MNO* (d) *NOP*

22. கொடுக்கப்பட்டுள்ள எழுத்து தொடரில் விடுபட்ட இடங்களில் எந்த எழுத்து குழுவை நிரப்பினால் தொடர் முழுமையாகும்?

BR _ _ NB _ O _ NB

(a) *WNWN* (b) *OWRW*

(c) *OWOW* (d) *RORO*

குறிப்புகள் (கேள்விகள் 23–24): கீழே உள்ள கேள்விகளில், விடுபட்ட இடங்களில் எந்த எழுத்து குழுவை நிரப்பினால், தொடர் முழுமையடையும்?

[SSC-CGL Tier I Exam, 2015]

23. *a _ _ dba _ _ bcad _ _ da _ _ cd*

(a) *cbcddcba* (b) *bccdbcab*

(c) *aabbccdd* (d) *abcddcba*

24. *ccbab _ caa _ bccc _ a _*

(a) *babc* (b) *babb* (c) *baab* (d) *bbba*

குறிப்புகள் (கேள்விகள் 25–27): கீழே உள்ள கேள்விகளில், ஒரு உறுப்பு விடுபட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளில் எதை அந்த விடுபட்ட இடத்தில் நிரப்பினால், தொடர் முழுமையாகும்?

25. 4, 6, 10, 16, 24, ?

(a) 40 (b) 34 (c) 30 (d) 28

[SSC-CGL Tier I Exam, 2015]

26. 3, 5, 9, 17, ? **[SSC-CGL Tier I Exam, 2015]**

(a) 33 (b) 42 (c) 26 (d) 65

27. விடுபட்ட இடங்களில் எந்த எழுத்து குழுவை நிரப்பினால் தொடர் முழுமையடையும்?

ipi_upog_pig_pogi__g

(a) *iupgg* (b) *upgii* (c) *puigp* (d) *giupi*

[SSC-CGL Tier I Exam, 2014]

குறிப்புகள் (கேள்விகள் 28–30): கீழே உள்ள கேள்விகளில், ஒரு உறுப்பு விடுபட்டுள்ளது. மாற்றுகளிலிருந்து எந்த எண்ணை விடுபட்ட இடத்தில் நிரப்பினால் தொடர் முழுமையாகும்?

[SSC-CGL Tier I Exam, 2014]

28. 1, 0, 3, 2, 5, 6, ?, 12, 9, 20

(a) 9 (b) 10 (c) 7 (d) 8

29. *SHG, RIF, QJE, PKD, ?*

(a) *NME* (b) *NLB* (c) *OLE* (d) *OLC*

30. 7, 8, 18, 57, ?, 1165

(a) 174 (b) 232 (c) 224 (d) 228

குறிப்புகள் (கேள்விகள் 31–32): கொடுக்கப்பட்டுள்ள எழுத்து வரிசையின் விடுபட்ட இடங்களில் எந்த எழுத்து குழுவை நிரப்பினால், தொடர் முழுமையடையும்?

[SSC-CGL Tier I Exam, 2013]

31. *b_ab_b_aab_b*

(a) *abbb* (b) *abba* (c) *baaa* (d) *aabb*

32. *_bcab_cabc_abca_b*

(a) *abca* (b) *aabc* (c) *bbca* (d) *abac*

குறிப்புகள் (கேள்வி 33–37): விடுபட்ட ஒரு உறுப்புடன் தொடர் கொடுக்கப்பட்டிருக்கும். கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து எது தொடரை பூர்த்தி செய்யும்?

[SSC-CGL Tier I Exam, 2013]

33. *AFI, JOR, MRU, ?*

(a) *GJU* (b) *HMP* (c) *PMO* (d) *RJL*

34. *bc, cde, de, efg, fg, ?*

(a) *ghi* (b) *fgh* (c) *hij* (d) *ijk*

35. *C* – 3, *E* – 5, *G* – 7, *I* – 9, ?,

(a) *X* – 24, *M* – 21 (b) *K* – 11, *M* – 13

(c) *O* – 15, *X* – 24 (d) *M* – 18, *K* – 14

36. 5, 16, 51, 158, ?

(a) 1452 (b) 483 (c) 481 (d) 1454

37. 9 * 2 : 9 * 9 : : 9 * 5 : ?

(a) 9 × 4 (b) 9 × 6 (c) 9 × 7 (d) 9 × 8

விடைகள்

1. (b)	2. (b)	3. (b)	4. (d)	5. (b)	6. (b)	7. (a)	8. (b)	9. (d)	10. (c)
11. (d)	12. (d)	13. (d)	14. (c)	15. (c)	16. (c)	17. (b)	18. (d)	19. (c)	20. (b)
21. (a)	22. (b)	23. (a)	24. (b)	25. (b)	26. (a)	27. (d)	28. (c)	29. (d)	30. (b)
31. (d)	32. (a)	33. (b)	34. (a)	35. (b)	36. (c)	37. (b)			

தீர்வுகள்

1. தொடரின் ஒவ்வொரு எண்ணும் அடுத்தடுத்த பகா எண்களின் கூட்டுத் தொகையாகும்.

87 + 2 = 89

89 + 3 = 92

92 + 5 = 97

97 + 7 = 104

104 + 11 = 115

115 + 13 = 128

128 + 17 = 145

2. பின்பற்றப்பட்ட முறை–

$D \xrightarrow{+3} G \xrightarrow{+3} J \xrightarrow{+3} M \xrightarrow{+3} \boxed{P}$

$A \xrightarrow{-4} W \xrightarrow{-4} S \xrightarrow{-4} O \xrightarrow{-4} \boxed{K}$

37. மற்ற எல்லா குழுக்களிலும் ஒவ்வொரு முதல் மூன்று எழுத்துக்களும் அதற்கு அடுத்த எழுத்தை விட நான்கு இடங்கள் முன்னோக்கி உள்ளன.

38. மற்ற எல்லா குழுக்களிலும், முதல் மற்றும் இரண்டாம் அதே போல் மூன்றாம் மற்றும் நான்காம் எழுத்துக்கள் தொடர்ச்சியானவை. மூன்றாம் எழுத்து இரண்டாம் எழுத்தை விட ஒன்பது இடங்கள் முன்னால் உள்ளது.

39. மற்ற எல்லா குழுக்களிலும், இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது எழுத்துக்கள் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாவது எழுத்துக்களிலிருந்து முறையே மூன்று, ஐந்து மற்றும் ஏழு இடங்கள் முன்னால் உள்ளன.

40. மற்ற எல்லா குழுக்களிலும், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாவது எழுத்துக்கள் முறையே இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் எழுத்துக்களிலிருந்து இரண்டு, நான்கு மற்றும் ஆறு இடங்கள் முன்னால் உள்ளன.

41. மற்ற எல்லா குழுக்களிலும் முதல் மற்றும் இரண்டாம் அதே போல் மூன்று மற்றும் நான்காம் எழுத்துக்கள் ஒன்று விட்டு ஒன்று உள்ளன. மூன்றாவது எழுத்து இரண்டாம் எழுத்தை விட மூன்று எழுத்துக்கள் முன்னால் உள்ளது.

42. மற்ற எல்லா குழுக்களிலும் நான்காவது மற்றும் மூன்றாவது எழுத்துக்கள் முறையே முதல், இரண்டாம் மற்றும் நான்காம் எழுத்துக்களிலிருந்து நான்கு, ஏழு மற்றும் ஒரு இடம் முன்னோக்கி உள்ளது.

43. மற்ற எல்லா குழுக்களிலும், நான்காவது, முதல் மற்றும் மூன்றாவது எழுத்துக்கள் வரிசையாக ஒன்று விட்டு ஒன்று உள்ளன.

44. மற்ற எல்லா குழுக்களிலும், முதல் மற்றும் இரண்டாம் எழுத்துகளுக்கிடையில் ஒரு எழுத்து இடைவெளி உள்ளது. இரண்டாம் மற்றும் மூன்றாம் எழுத்துகளுக்கிடையே இரண்டு எழுத்துக்கள் இடைவெளியும், மூன்றாவது மற்றும் நான்காம் எழுத்துகளுக்கு இடையில் மூன்று எழுத்துக்கள் இடைவெளியும் உள்ளன.

45. மற்ற எல்லா குழுக்களிலும், மூன்றாவது மற்றும் நான்காவது எழுத்துக்கள் முறையே முதல் மற்றும் இரண்டாவது எழுத்துக்களிலிருந்து ஐந்து எழுத்துக்கள் முன்னால் உள்ளன.

46. மற்ற அனைத்து குழுக்களிலும், அடுத்தடுத்த எழுத்துகளுக்கிடையே விடுபட்ட எழுத்துக்கள் சீராக உள்ளன.

47. மற்ற அனைத்து குழுக்களிலும், இரண்டு அடுத்தடுத்த எழுத்துகளுக்கிடையே விடுபட்ட எழுத்துக்கள் இடமிருந்து வலமாக 1 கூடிக் கொண்டே இருக்கிறது.

48. மற்ற அனைத்து குழுக்களிலும், இரண்டாவது மற்றும் நான்காவது எழுத்துக்கள் முறையே முதல் மற்றும் மூன்றாம் எழுத்துக்களிலிருந்து நான்கு இடங்கள் முன்னால் உள்ளன. இரண்டாம் மற்றும் மூன்றாம் எழுத்துக்கள் தொடர்ச்சியானவை.

49. மற்ற அனைத்து குழுக்களிலும், முதல் மற்றும் இரண்டாம் எழுத்துக்கள் ஆங்கில அகர வரிசையின் முதல் மற்றும் கடைசி எழுத்திலிருந்து ஒரே இடத்தைக் கொண்டுள்ளன. அதே போல் மூன்றாவது மற்றும் நான்காவது எழுத்துக்களும் இடத்தைக் கொண்டுள்ளன.

50. மற்ற அனைத்து குழுக்களிலும், இரண்டாவது மற்றும் நான்காவது எழுத்துக்கள் முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாவது எழுத்துக்களிலிருந்து இரண்டு, ஒரு மற்றும் இரண்டு இடங்கள் முன்னால் உள்ளன.

பயிற்சி 3L

குறிப்புகள் (கேள்விகள் 1 முதல் 16): *கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் எழுத்துக்களின் ஐந்து குழுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மற்ற நான்கு குழுக்களிலிருந்து ஒரு குழு வேறுபட்டு உள்ளது. அந்த வேறுபட்ட குழுவைக் கண்டறிக.*

1. (a) *MEWGN* (b) *PBQTX* (c) *DRYSN* (d) *CGHKV* (e) *HLWZP*
2. (a) *EDCBA* (b) *PONML* (c) *UTSRQ* (d) *YXWVZ* (e) *KJIHG*
3. (a) *SUWYA* (b) *LJNPR* (c) *KMOQS* (d) *BDFHJ* (e) *ACEGI* **(M.B.A. 1998)**
4. (a) *VYAKB* (b) *MYGHZ* (c) *LMVOX* (d) *FSYLD* (e) *QBSPN* **(R.R.B. 2002)**
5. (a) *ECBFD* (b) *LQPOM* (c) *WSVTU* (d) *ROQNP* (e) *QSRTP*
6. (a) *EMGIK* (b) *BHJFD* (c) *WUSQY* (d) *NOSUX* (e) *VTRPX*
7. (a) *BCDEI* (b) *PQRSW* (c) *LMNOS* (d) *TUVWA* (e) *HIKLO*
8. (a) *ADGJM* (b) *PSVYB* (c) *HKNQT* (d) *SVXAD* (e) *NQTWZ*
9. (a) TREAT (b) LATER (c) TABLE (d) RATES (e) GREAT
10. (a) *JOEHNP* (b) *LZKMSU* (c) *GWOURV* (d) *SFXPMG* (e) *TQUHOS*
11. (a) CALORIC (b) DRUID (c) LEVEL (d) ELOPE (e) FRETFUL
12. (a) *LAHMQW* (b) *HUTMCX* (c) *CLOVIK* (d) *IXMLBC* (e) *NILHQR*
13. (a) *MOTXYZ* (b) *GKRVWX* (c) *PSBEFG* (d) *ORNODF* (e) *CHJLMN*
14. (a) STUTTER (b) RESURRECT (c) SURRENDER (d) CUNNING (e) SUCCEED
15. (a) *QePFoLA* (b) *OrDFkV* (c) *TuMBiNJ* (d) *XZaWoB* (e) *DNeRiF*
16. (a) jAnUaRy (b) mArCH (c) MAy (d) oCtObEr (e) dEcEmBeR

குறிப்புகள் (கேள்விகள் 17 முதல் 31): *கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் எழுத்துக்களின் நான்கு குழுக்கள் உள்ளன. அவற்றுள் மூன்று குழுக்களிடையே ஒரு ஒற்றுமை உள்ளது. ஒரு குழு வேறுபட்டு உள்ளது. அந்த வேறுபட்ட குழுவைக் கண்டறிக.*

17. (a) *ZGPKU* (b) *FRGSP* (c) *NEXFL* (d) *LANCP* **(S.S.C. 2002)**
18. (a) *USNID* (b) *VTOJE* (c) *UPKEA* (d) *OMIDB* **(R.R.B. 2002)**
19. (a) USAGE (b) USUAL (c) UNITE (d) URINE
20. (a) CROWD (b) FLUSH (c) JUDGE (d) SCANT
21. (a) WRONG (b) PRUNE (c) WHITE (d) RIGHT
22. (a) WHEAT (b) TRAIN (c) PROUD (d) DRIVE
23. (a) *ADBEC* (b) *FIGJH* (c) *KNLOM* (d) *PRTSQ* **(SNAP, 2004)**
24. (a) AMINO (b) ARISE (c) AWAKE (d) VIDEO
25. (a) *EFGIK* (b) *CDFIM* (c) *BCEHL* (d) *ABDGK*
26. (a) *HSIRJ* (b) *FTGSH* (c) *DWEVF* (d) *AZBYC*
27. (a) *BFCGD* (b) *LPMQN* (c) *NROSP* (d) *YCDZA* **(S.S.C. 2004)**
28. (a) *CPRSV* (b) *CXHIA* (c) *MTOWF* (d) *RCFGL*
29. (a) MONDAY (b) TUESDAY (c) THURSDAY (d) SATURDAY
30. (a) PENAL (b) *IDHNI* (c) *HINGLES* (d) *KRTSINSA*
31. (a) *jkNors* (b) *hlMnpq* (c) *cDGhkl* (d) *pQTuxy* **(M.C.A. 2005)**

விடைகள் (பயிற்சி 3L)

1. (a)	2. (d)	3. (b)	4. (d)	5. (b)	6. (d)	7. (e)	8. (d)	9. (c)	10. (d)
11. (e)	12. (c)	13. (d)	14. (e)	15. (b)	16. (e)	17. (b)	18. (c)	19. (b)	20. (c)
21. (d)	22. (d)	23. (d)	24. (c)	25. (a)	26. (b)	27. (d)	28. (c)	29. (a)	30. (a)
31. (b)									

தீர்வுகள் (பயிற்சி 3L)

1. இந்த ஒரு குழுவில் மட்டுமே ஒரு உயிரெழுத்து உள்ளது.
2. மற்ற அனைத்து குழுவிலும், அகர வரிசை தலைகீழாக உள்ளது.
3. மற்ற அனைத்து குழுவிலும், ஒன்று மாற்றி ஒன்று அகர வரிசை எழுத்துக்கள் உள்ளன.
4. மற்ற அனைத்து குழுவிலும், இரண்டு அடுத்தடுத்த எழுத்துக்கள் சீரற்ற முறையில் உள்ளன.
5. மற்ற அனைத்து குழுவிலும், அடுத்தடுத்த எழுத்துக்கள் சீரற்ற முறையில் உள்ளன.
6. மற்ற அனைத்து குழுவிலும், அடுத்தடுத்த எழுத்துக்கள் சீரற்ற முறையில் உள்ளன.
7. மற்ற அனைத்து குழுவிலும், முதல் நான்கு எழுத்துக்களும் தொடர்ச்சியானவை. இரண்டு எழுத்துகளுக்கிடையே மூன்று எழுத்துக்கள் இடைவெளி உள்ளன.
8. மற்ற அனைத்து குழுவிலும், தொடர்ச்சியான அடுத்தடுத்த எழுத்துகளுக்கிடையே இரண்டு எழுத்துக்கள் இடைவெளி உள்ளது.
9. மற்ற அனைத்து குழுக்களிலும் *T*, *E*, *A*, *R* எழுத்துக்கள் உள்ளன.
10. மற்ற அனைத்து குழுக்களிலும் மூன்று தொடர்ச்சியான எழுத்துக்கள் ஒழுங்கற்ற முறையில் உள்ளன.
11. மற்ற அனைத்து குழுக்களில் முதல் மற்றும் கடைசி எழுத்துக்கள் ஒரே எழுத்தாகும்.
12. மற்ற அனைத்து குழுக்களிலும் ஒரே ஒரு உயிரெழுத்து உள்ளது.
13. மற்ற அனைத்து குழுவிலும், கடைசி மூன்று எழுத்துக்கள் தொடர்ச்சியானவை.
14. மற்ற அனைத்து குழுவிலும், ஒரு எழுத்து மூன்று முறை தொடர்ந்து வருகிறது.
15. மற்ற அனைத்து குழுவிலும், சிறிய எழுத்துக்கள் உயிரெழுத்துக்கள்.
16. மற்ற எல்லா குழுக்களும் சிறிய எழுத்துக்களில் முடிகின்றன.
17. இந்த ஒரு குழுவில் மட்டும் உயிரெழுத்து இல்லை.
18. இந்த ஒரு குழுவில் மட்டும் மூன்று உயிரெழுத்துக்கள் உள்ளன.
19. மற்ற அனைத்து குழுவிலும், உயிரெழுத்துக்கள் ஒன்று விட்டு ஒன்று உள்ளது.
20. இந்த ஒரு குழுவில் மட்டும் இரண்டு உயிரெழுத்துக்கள் உள்ளன.
21. மற்ற அனைத்து குழுவிலும், நடு எழுத்து ஒரு உயிரெழுத்து.
22. இந்த ஒரு குழுவில் மட்டுமே இரண்டு உயிரெழுத்துக்கள் உள்ளன.
23. மற்ற அனைத்து குழுவிலும், தொடர்ச்சியான எழுத்துக்கள் ஒன்று மாற்றி ஒன்று அமைந்துள்ளன.
24. எந்த ஒரு குழுவிலும் ஒரு எழுத்து கூட மறுபடியும் வரவில்லை.
25. மற்ற எல்லா குழுவிலும், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது எழுத்துக்கள் முறையே முதல், இரண்டு, மூன்று மற்றும் நான்காவது எழுத்துக்களிலிருந்து ஒரு, இரண்டு, மூன்று மற்றும் நான்கு இடங்கள் முன்னால் உள்ளன.
26. மற்ற அனைத்து குழுவிலும், இரண்டாம் எழுத்து அகர வரிசையின் முடிவிலிருந்து எந்த இடத்தில் உள்ளதோ, முதல் எழுத்து அகர வரிசையின் முதலிலிருந்து அதே இடத்தில் உள்ளது.
27. மற்ற அனைத்து குழுவிலும், முதல், மூன்றாவது மற்றும் ஐந்தாவது எழுத்துக்கள் மற்றும் இரண்டாவது மற்றும் நான்காவது எழுத்துக்கள் தொடர்ச்சியானவை. இரண்டாவது எழுத்து ஐந்தாவது எழுத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னால் உள்ளன.
28. மற்ற அனைத்து குழுவிலும், *RS*, *HI*, *FG* ஆகிய இரண்டு தொடர்ச்சியான எழுத்துக்கள் உள்ளன.
29. மற்ற அனைத்து குழுவிலும் இரண்டு தொடர்ச்சியான எழுத்துக்கள் உள்ளன. எ.கா. TUESDAY-யில் TU. SATURDAY-யில் உள்ள TU மற்றும் THURSDAY-யில் உள்ள RS.
30. மற்ற அனைத்து குழுவிலும் மறு சீரமைப்பு செய்வதில் மொழிகளின் பெயர்கள் உருவாகும். (எ.கா) (b)-யானது HINDI எனவும், (c)-யானது ENGLISH எனவும், D-யானது SANSKRIT எனவும் மாறுகிறது.
31. மற்ற அனைத்து குழுவிலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது எழுத்துகளுக்கிடையே, அதேபோல் நான்காவது மற்றும் ஐந்தாவது எழுத்துகளுக்கிடையே இரண்டு எழுத்துக்களின் இடைவெளி உள்ளது.

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன்

பயிற்சி

1. கொடுக்கப்பட்டுள்ள நான்கு வார்த்தைகளில் மூன்று வார்த்தைகள் ஏதோ ஒரு ஒற்றுமையைக் கொண்டுள்ளன. மாறுபட்ட வார்த்தையைத் தேர்ந்தெடுக்கவும். **[SSC-CGL Exam, 2020]**
   (a) அமைதி (b) வன்முறையற்ற
   (c) உண்மை (d) வெறுப்பு

2. எண்-ஜோடிகளின் நான்கு ஜோடிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று ஜோடிகள் ஏதோ ஒரு ஒற்றுமையைக் கொண்டுள்ளன. மாறுபட்ட எண் ஜோடியைக் கண்டறிக. **[SSC-CGL Exam, 2020]**
   (a) 35 : 1221 (b) 21 : 437
   (c) 11 : 118 (d) 33 : 1085

3. நான்கு வார்த்தை-கொத்துகள் கொடுக்கப்படுள்ளன. அவற்றுள் மூன்று ஏதோ ஒரு ஒற்றுமையைக் கொண்டுள்ளன. மாறுபட்ட வார்த்தை கொத்தைக் கண்டறிக. **[SSC-CGL Exam, 2020]**
   (a) *BGLQ* (b) *OTYD*
   (c) *KPUZ* (d) *HMRV*

4. நான்கு வார்த்தை-கொத்துகள் கொடுக்கப்படுள்ளன. அவற்றுள் மூன்று ஏதோ ஒரு ஒற்றுமையைக் கொண்டுள்ளன. மாறுபட்ட வார்த்தை கொத்தைக் கண்டறிக. **[SSC-CGL Exam, 2020]**
   (a) *YXW* (b) *FGH*
   (c) *NML* (d) *TSR*

5. நான்கு வார்த்தை-கொத்துகள் கொடுக்கப்படுள்ளன. அவற்றில் மூன்று ஒரு ஒற்றுமையைக் கொண்டுள்ளன. மாறுபட்ட வார்த்தை கொத்தைக் கண்டறிக. **[SSC-CGL Exam, 2019]**
   (a) *MZLY* (b) *KXJW*
   (c) *GESO* (d) *IVHU*

6. நான்கு ஜோடி வார்த்தைகளில் மூன்று ஒரு ஒற்றுமையைக் கொண்டுள்ளன. மாறுபட்ட ஒரு ஜோடியைக் கண்டறிக. **[SSC-CGL Exam, 2019]**
   (a) வங்காள தேசம் : டாகா
   (b) தென்கொரியா : ரூபியா
   (c) ரஷ்யா : ரூபிள்
   (d) மலேசியா : ரிங்கிட்

7. கொடுக்கப்பட்ட நான்கு எண் குழுவில் மூன்று குழுக்கள் ஒரு ஒற்றுமையைக் கொண்டுள்ளன. ஒரு குழு மட்டும் மாறுபட்டு உள்ளது. மாறுபட்ட குழுவைக் கண்டு பிடிக்கவும். **[SSC-CPO Exam, 2019]**
   (a) 6 – 36 – 216 (b) 10 – 100 – 1000
   (c) 3 – 6 – 27 (d) 5 – 25 – 125

8. கொடுக்கப்பட்ட நான்கு எண்களில் மூன்று எண்கள் ஒரு குறிப்பிட்ட வகையில் ஒற்றுமையைக் கொண்டுள்ளன. ஒரு எண் மாறுபட்டு இருக்கும். மாறுபட்ட எண்ணைக் கண்டுபிடிக்கவும். **[SSC-CPO Exam, 2019]**
   (a) 215 (b) 169 (c) 144 (d) 196

9. கொடுக்கப்பட்ட நான்கு வார்த்தைகளில் மூன்று ஒரு ஒற்றுமையைக் கொண்டிருக்கும். ஒரு வார்த்தை மாறுபட்டு இருக்கும். மாறுபட்ட வார்த்தையைக் கண்டுபிடிக்கவும். **[SSC-CPO Exam, 2019]**
   (a) கெய்ரோ (b) பாரிஸ்
   (c) ஒட்டாவா (d) க்யாத்

10. கீழே உள்ள நான்கு வார்த்தை-கொத்துகளில் மூன்று ஒரு ஒற்றுமையைக் கொண்டிருக்கும். ஒன்று மட்டும் வேறுபட்டு இருக்கும். அந்த மாறுபட்ட வார்தை-கொத்தைக் கண்டுபிடிக்கவும். **[SSC-CPO Exam, 2019]**
   (a) *FEDC* (b) *YXVW*
   (c) *LKIJ* (d) *NMKL*

11. கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடிக்கவும். **[SSC-CGL Exam, 2018]**
   (a) *KQ* (b) *DJ* (c) *SZ* (d) *RX*

12. கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து மாறுபட்ட எண்ணைக் கண்டுபிடிக்கவும். **[SSC-CGL Exam, 2018]**
   (a) 361 (b) 441 (c) 784 (d) 876

13. கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து வேறுபட்ட வார்த்தையைக் கண்டுபிடிக்கவும். **[SSC-CGL Exam, 2017]**
   (a) கீழே (b) உச்சி
   (c) மிகப்பெரிய (d) மேலே

14. கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து வேறுபட்ட எண்ணைக் கண்டுபிடிக்கவும். **[SSC-CGL Exam, 2017]**
   (a) 253 (b) 473 (c) 143 (d) 633

15. கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து வேறுபட்ட வார்த்தை ஜோடியைக் கண்டுபிடிக்கவும். **[SSC-CGL Exam, 2017]**
   (a) வீனஸ் : கிரகம்
   (b) சந்திரன் : செயற்கைக்கோள்
   (c) ஜீபிடர் : கருப்புதுளை
   (d) சூரியன் : நட்சத்திரம்

குறிப்புகள் (கேள்விகள் 16 முதல் 20): கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து வேறுபட்ட எண்/எழுத்து-எண் ஜோடியைக் கண்டுபிடிக்கவும். **[SSC-CGL Tier I Exam, 2015]**

16. (a) 25 – 21 (b) 61 – 12
   (c) 44 – 31 (d) 34 – 30
17. (a) 339 (b) 326 (c) 428 (d) 338
18. (a) *STR* (b) *ONP* (c) *IHJ* (d) *LKM*

19. (a) பெர்னே (b) பிரிஸ்டல்
(c) ஸீரிச் (d) ஜெனிவா

20. (a) படுகொலை (b) கொலை
(c) ஆட்கொலை (d) கடத்தல்

குறிப்புகள் (கேள்விகள் 21 முதல் 26): கீழே உள்ள கேள்விகளில் வேறுபட்ட வார்த்தை/எண்/எழுத்து/எண் ஜோடியைக் கண்டுபிடிக்கவும்.
[SSC-CGL Tier I Exam, 2015]

21. (a) சுதந்திரம் (b) சமூகம்
(c) சமத்துவம் (d) சகோதரத்துவம்

22. (a) இரவு (b) காலை
(c) நண்பகல் (d) மாலை

23. (a) *HSKP* (b) *DWFU*
(c) *KQNN* (d) *EVHS*

24. (a) *IHKL* (b) *GFHJ*
(c) *EDGH* (d) *CBEF*

25. (a) 80 : 60 (b) 96 : 80
(c) 64 : 48 (d) 104 : 78

26. (a) 7202 (b) 4025
(c) 6023 (d) 5061

குறிப்புகள் (கேள்விகள் 27 முதல் 31): மற்ற மூன்று மாற்றுகளிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடிக்கவும்.
[SSC-CGL Tier I Exam, 2014]

27. (a) போட்டி (b) எதிரணி
(c) எதிரி (d) கூட்டாளி

28. (a) 27 (b) 35
(c) 18 (d) 9

29. (a) 9 – 72 (b) 8 – 56
(c) 11 – 115 (d) 10 – 90

30. (a) *TUVX* (b) *OPRS*
(c) *BCDF* (d) *HIJL*

31. (a) விரிகுடா (b) நிலமுனை
(c) தீபகற்பம் (d) தீவு

குறிப்புகள் (கேள்விகள் 32 முதல் 36): கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து வேறுபட்ட வார்த்தை/எண்/எண் ஜோடியைக் கண்டுபிடிக்கவும்.
[SSC-CGL Tier I Exam, 2013]

32. (a) தலை (b) கவனித்தல்
(c) தலைமை (d) குவியல்

33. (a) ஸ்கர்வி
(b) ரிக்கெட்ஸ்
(c) மாலைக்கண் நோய்
(d) குளிர்க்காய்ச்சல்

34. (a) மழை (b) தூறல்
(c) பனிமழை (d) திராட்சை

35. (a) 547–563 (b) 71–55
(c) 517–523 (d) 248–231

36. 10, 13, 234, 681, 997
(a) 10 (b) 234
(c) 13 (d) 681

குறிப்புகள் (கேள்விகள் 37 முதல் 41): கீழே உள்ள கேள்விகளில் கொடுக்கப்பட்டுள்ள நான்கு வார்த்தைகளில் ஒன்று மாறுபட்டு இருக்கும். மாறுபட்ட வார்த்தையைக் கண்டுபிடிக்கவும்: **[AFCAT, 2016]**

37. (a) பொகோட்டா (b) சிட்னி
(c) தோஹா (d) புருசெல்ஸ்

38. (a) விழித்திரை (b) கண்மணி
(c) பார்வை (d) கருவிழி

39. (a) உதயகிரி மற்றும் கந்தகிரி
(b) பதாமி
(c) எலிபன்ட்டா
(d) தொட்டபெட்டா

40. (a) கால் முன்னெலும்பு
(b) மூளையை மூடியிருக்கும்
(c) மண்டை ஓடு
(d) சிறு மூளை

41. (a) சால்ட்ரோகாங்ரி (b) கொங்கா
(c) சோஜிலா (d) கும்பர்லி மலை

குறிப்புகள் (கேள்விகள் 42 முதல் 46): கீழே உள்ள கேள்விகளில் கொடுக்கப்பட்டுள்ள நான்கு வார்த்தைகளில் மூன்று ஒரு ஒற்றுமையைக் கொண்டுள்ளன. ஒரு வார்த்தை மாறுபட்டு இருக்கும். அந்த மாறுபட்ட வார்த்தையைக் கண்டு பிடிக்கவும். **[AFCAT, 2016]**

42. (a) அறை (b) அரங்கு
(c) தாழ்வாரம் (d) சிற்றறை

43. (a) மவுத் ஆர்கன் (b) எலக்ட்ரிக் கிடார்
(c) விசைப்பலகை (d) சொனாட்டா

44. (a) வெப்பம் (b) ஒளி
(c) பல்பு (d) மின்சாரம்

45. (a) காகிதம்
(b) பென்சில்
(c) பேனா
(d) காகிதம் முதலிய எழுது பொருள்கள்

46. (a) அங்குலம் (b) மீட்டர்
(c) யார்டு (d) இரண்டு பைண்டு அளவு

குறிப்புகள் (கேள்விகள் 47 முதல் 51): கீழே உள்ள கேள்விகளில், கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வார்த்தைகளில் நான்கு வார்த்தைகள் ஒரு ஒற்றுமையைக் கொண்டிருக்கும். ஒரு வார்த்தை மட்டும் வேறுபட்டு இருக்கும். மற்ற வார்த்தைகளிலிருந்து வேறுபட்ட வார்த்தையைக் கண்டுபிடிக்கவும். **[AFCAT, 2014]**

47. (a) பொட்டாசியம் (b) சிலிகான்
(c) சிர்கோனியம் (d) காலியம்

48. (a) தேயிலை (b) சின்கோனா
(c) இரப்பர் (d) சுண்ணாம்பு

49. (a) விமானகொட்டகை (b) நடைமேடை
(c) கப்பல்துறை (d) பூங்கா

50. (a) தளம் (b) கரை (c) தண்டு (d) வில்

51. (a) உயரமான (b) மிகப்பெரிய
(c) மெல்லிய (d) கூர்மையான

விடைகள்

1. (*d*)	2. (*b*)	3. (*d*)	4. (*b*)	5. (*c*)	6. (*b*)	7. (*c*)	8. (*a*)	9. (*d*)	10. (*a*)
11. (*c*)	12. (*d*)	13. (*c*)	14. (*d*)	15. (*c*)	16. (*c*)	17. (*d*)	18. (*a*)	19. (*a*)	20. (*d*)
21. (*b*)	22. (*a*)	23. (*b*)	24. (*b*)	25. (*d*)	26. (*d*)	27. (*d*)	28. (*b*)	29. (*c*)	30. (*b*)
31. (*b*)	32. (*b*)	33. (*d*)	34. (*d*)	35. (*d*)	36. (*d*)	37. (*b*)	38. (*c*)	39. (*b*)	40. (*a*)
41. (*a*)	42. (*c*)	43. (*c*)	44. (*a*)	45. (*d*)	46. (*d*)	47. (*a*)	48. (*d*)	49. (*d*)	50. (*d*)
51. (*d*)									

தீர்வுகள்

1. வெறுப்பு தவிர, மற்ற அனைத்தும் நேர்மறையான வார்த்தைகள்.

2. (*a*) 35 (3 + 5 = 8) : 1221 (1 + 2 + 2 + 1 = 6)

   (*b*) 21 (2 + 1 = 3) : 437 (4 + 3 + 7 = 14)

   (*c*) 11 (1 + 1 = 2) : 118 (1 + 1 + 8 = 10)

   (*d*) 33 (3 + 3 = 6) : 1085 (1 + 0 + 8 + 5 = 14)

   (*b*) தவிர, மற்றவையின் கூட்டுத்தொகை இரட்டை எண் ஆகும்.

3. (*a*) $B \xrightarrow{+5} G \xrightarrow{+5} L \xrightarrow{+5} Q$

   (*b*) $O \xrightarrow{+5} T \xrightarrow{+5} Y \xrightarrow{+5} D$

   (*c*) $K \xrightarrow{+5} P \xrightarrow{+5} U \xrightarrow{+5} Z$

   (*d*) $H \xrightarrow{+5} M \xrightarrow{+5} R \xrightarrow{+4} V$

   எனவே, (*d*) மேற்கண்ட முறையை பின்பற்றவில்லை.

4. $Y \xrightarrow{-1} X \xrightarrow{-1} W$

   $F \xrightarrow{+1} G \xrightarrow{+1} H$

   $N \xrightarrow{-1} M \xrightarrow{-1} L$

   $T \xrightarrow{-1} S \xrightarrow{-1} R$

   எனவே, (*b*) தவிர, மற்ற வார்த்தை கொத்துகள் இறங்கு வரிசையில் உள்ளன.

5. $\overset{-12}{\curvearrowleft}$ G E S O $\overset{-10}{\curvearrowleft}$ $\overset{+1}{\curvearrowleft}$ M Z L Y $\overset{+1}{\curvearrowleft}$ $\overset{+1}{\curvearrowleft}$ K X J W $\overset{+1}{\curvearrowleft}$ $\overset{+1}{\curvearrowleft}$ I V H U $\overset{+1}{\curvearrowleft}$

   எனவே, (*c*) மேற்கண்ட முறையை பின்பற்றவில்லை.

6. (*b*) தவிர, மற்றவற்றில் நாடுகளின் பெயர்களும் அந்தந்த நாடுகளின் நாணயங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. தென் கொரியாவின் நாணயம் 'வொன்'.

7. பின்பற்றப்பட்ட முறையானது;

   (*a*) $6 : 36 : 216 = 6 : 6^2 : 6^3$

   (*b*) $10 : 100 : 1000 = 10 : 10^2 : 10^3$

   (*c*) $3 : 6 : 27 = 3 : 3 \times 2 : 3^3$

   (*d*) $5 : 25 : 125 = 5 : 5^2 : 5^3$

   எனவே, (*c*) இந்த முறையை பின்பற்றவில்லை.

8. மாற்று (*a*) தவிர, மற்ற அனைத்தும் முழுமையான வர்க்கங்கள்.

9. கியாத் என்பது மியன்மாரின் நாணயம். கேரியோ, பாரிஸ் மற்றும் ஒட்டாவா முறையே எகிப்து, பிரான்சு மற்றும் கனடாவின் தலைநகரங்கள்.

10. (*a*) $F \xleftarrow{+1} E \xleftarrow{+1} D \xleftarrow{+1} C$

    (*b*) $Y \xleftarrow{+1} X \xleftarrow{+2} V \xleftarrow{-1} W$

    (*c*) $L \xleftarrow{+1} K \xleftarrow{+2} I \xleftarrow{-1} J$

    (*d*) $N \xleftarrow{+1} M \xleftarrow{+2} K \xleftarrow{-1} L$

    எனவே, (*a*) அந்த முறையை பின்பற்றவில்லை.

11. $K \xrightarrow{+6} Q$

    $D \xrightarrow{+6} J$

    $S \xrightarrow{+7} \boxed{Z}$

    $R \xrightarrow{+6} X$

    எனவே, (*c*) அந்த முறையை பின்பற்றவில்லை.

12. $361 = 19^2$

    $441 = 21^2$

    $784 = 28^2$

    876 ஒரு முழுமையான வர்க்கம் அல்ல.

13. 'மிகப்பெரிய' என்பது அடைமொழி. கீழே, உச்சி மற்றும் மேலே ஆகியவை முன்னிடைச் சொற்கள்.

14. 633 தவிர, மற்ற அனைத்து எண்களும் 11-ஆல் வகுபடும்.

15. வீனஸ் ஒரு கிரகம். சந்திரன் ஒரு செயற்கைக் கோள். சூரியன் ஒரு நட்சத்திரம். ஜூபிடரும் ஒரு கிரகம். கருப்புத் துளை அல்ல.

16. $25 - 21 = 4 = 2^2$

$61 - 12 = 49 = 7^2$

$34 - 30 = 4 = 2^2$

$44 - 31 = 13$ (இது எந்த ஒரு எண்ணின் வர்க்கமும் அல்ல)

எனவே, (*c*) விடை ஆகும்.

17. $339 = 3 \times 3 = 9$

$326 = 3 \times 2 = 6$

$428 = 4 \times 2 = 8$

$338 = 3 \times 3 \neq 8$

எனவே, (*d*) வேறுபட்ட எண் ஆகும்.

18. *ONP = NOP*

IHJ = HIJ

LKM = KLM

STR = RST (இது வேறுபட்டது)

19. பெர்னே தவிர, மற்ற அனைத்தும் நகரங்கள். எனவே, (*a*) வேறுபட்டது.

20. கடத்தல் தவிர, மற்ற அனைத்து வார்த்தைகளும் இறப்புடன் தொடர்புடையது. எனவே, (*d*) விடையாகும்.

21. 'சமூகம்' தவிர, மற்ற வார்த்தைகள் மனித சமூகத்துடன் தொடர்புடையது.

22. 'இரவு' தவிர, மற்ற அனைத்தும் ஒரு நாளின் நேர அமர்வைக் குறிக்கிறது.

23. H S K P D W F U

+3 −3 +2 −2

K Q N N E V M

+3 −3 +3 −3

எனவே, DWFU என்பது வேறுபட்டது.

24. I H K L G F H J

−1 +3 +1 −1 +2 +1

E D G H C B E F

−1 +3 +1 −1 +3 +1

எனவே, (*b*) சரியான விடையாகும்.

25. 104 மற்றும் 78 ஜோடியைத் தவிர, மற்ற அனைத்து ஜோடிகளும் 4-ஆல் வகுபடும்.

26. $7202 = 7 + 2 + 0 + 2 = 11$

$4025 = 4 + 0 + 2 + 5 = 11$

$6023 = 6 + 0 + 2 + 3 = 11$

$5061 = 5 + 0 + 6 + 1 \neq 11$

எனவே, 5061 மற்ற எண்களிலிருந்து வேறுபட்டது.

27. கூட்டாளி தவிர, மற்ற அனைத்தும் எதிர்மறையான வார்த்தைகள்.

28. 35 தவிர, மற்ற அனைத்தும் 9-இன் மடங்குகள்.

29. இடதுபக்கம் உள்ள எண் வலப்பக்கம் உள்ள எண்ணின் மடங்கு. எனவே, (*c*) வேறுபட்ட ஜோடி.

30. T U V X O P R S

+1 +1 +2 +1 +2 +1

B C D F H I J L

+1 +1 +2 +1 +1 +2

எனவே, (*b*) வேறுபட்டது.

31. நிலமுனை தவிர, மற்ற அனைத்தும் புவியியல் ரீதியான வார்த்தைகள்.

32. கவனித்தல் என்பது மற்ற வார்த்தைகளிலிருந்து வேறுபட்டது.

33. குளிர்க்காய்ச்சல் தவிர, மற்ற அனைத்தும் விட்டமின் குறைபாட்டால் ஏற்படும் நோய்கள்.

34. திராட்சை தவிர, மற்ற அனைத்தும் மழை அல்லது தண்ணீருடன் தொடர்புடையது.

35. மற்ற அனைத்து எண்களின் வித்தியாசமும் 2-ஆல் வகுபடும்.

36. 681 ஒரு ஒற்றை எண் ஆகும். 10, 13, 234, 681, 997

$10 = 1 + 0 = 1 = (1)^2$

$13 = 1 + 3 = 4 = (2)^2$

$234 = 2 + 3 + 4 = 9 = (3)^2$

$997 = 9 + 9 + 7 = 25 = (5)^2$

$681 = 6 + 8 + 1 = 15 \neq (4)^2$

37. சிட்னி தவிர, மற்ற அனைத்தும் அந்தந்த நாடுகளின் தலைநகரங்கள்.

38. பார்வை தவிர, மற்ற அனைத்தும் கண்ணின் உள் பாகங்கள்.

39. பதாமி தவிர, மற்ற அனைத்தும் மலை அல்லது அதைச் சார்ந்த இடத்தின் பெயர்கள்.

40. கால் தவிர, மற்றவை அனைத்தும் மூளையின் பகுதிகள்.

41. சால்ட்ரோ காங்ரி தவிர, மற்றவை அனைத்தும் மலைப் பாதைகள்.

42. தாழ்வாரம் தவிர, மற்ற அனைத்திற்கும் கதவு உண்டு.

43. விசைப்பலகை தவிர, மற்ற அனைத்தும் இசைக் கருவிகள்.

44. வெப்பம் மற்ற மூன்றிலிருந்தும் வேறுபட்டது.

45. காகிதம், பேனா மற்றும் பென்சில் அனைத்தும் எழுது பொருள்களில் அடங்கும்.

46. 'இரண்டு பைண்டு அளவு' தவிர, மற்ற அனைத்தும் தூரத்தை அளக்கும் அளவுகள்.

47. பொட்டாசியம் தவிர, மற்ற அனைத்தும் குறைக்கடத்தியாகப் பயன்படுகின்றன.

48. சுண்ணாம்பு தவிர, மற்ற அனைத்தும் செடிகளிலிருந்து கிடைக்கும்.

49. பூங்கா தவிர, மற்ற அனைத்தும் பொருட்கள் நிறுத்துமிடம்.

50. வில் தவிர, மற்ற அனைத்தும் கப்பலுடன் தொடர்புடையது.

51. கூர்மையான என்பது மற்றவற்றிலிருந்து வேறுபட்டதாகும்.

4

குறியிடுதல் - மறுகுறியிடுதல்

குறியீடு என்பது சமிக்ஞைகளின் அமைப்பு. மூன்றாவது நபருக்கு தெரியாமல் ஒரு தகவலை அனுப்புபவரிடமிருந்து பெறுபவருக்கு அனுப்பும்முறை **குறியிடுதல்** எனப்படும்.

தேர்வு எழுதும் ஒருவர் ஒரு குறிப்பிட்ட வார்த்தை/தகவலை குறியிடுவது மற்றும் அந்த தகவலை புரிந்து கொள்வதற்கு, அதாவது குறியிடுதலை அவர் பயன்படுத்தும் திறமையை புரிந்து கொள்வதற்கு குறியிடுதல் - மறுகுறியிடுதல் அமைக்கப்பட்டுள்ளது.

வகை 1: எழுத்து குறியீட்டுமுறை

இந்த வகை கேள்விகளில் ஒரு வார்த்தையிலுள்ள எழுத்துக்கள் ஒரு குறிப்பிட்ட விதியின்படி மாற்றப்பட்டு அதன்மூலம் ஒரு குறியீடு உருவாக்கப்படும். குறியீட்டுமுறை/விதியை கண்டுபிடித்து அதற்கேற்றவாறு தேர்வு எழுதுபவர் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்.

பிரிவு 1: மற்றொரு வார்த்தைக்கு ஒரு குறியீட்டை உருவாக்குதல் (குறியிடுதல்)

எ.கா. 1: ஒரு சங்கேத மொழியில் *TEACHER* என்பது *VGCEJGT* என எழுதப்பட்டுள்ளது. அந்த மொழியில் *CHILDREN* எவ்வாறு எழுதப்படும்? (B.T.M. 2006)

(*a*) *EJKNEGTP* (*b*) *EGKNFITP* (*c*) *EJKNFGTO* (*d*) *EJKNFTGP*

தீர்வு. *TEACHER* என்கிற வார்த்தையில் ஒவ்வொரு எழுத்தும் இரண்டு படிகள் முன்னேறி புது வார்த்தையை உருவாக்குகிறது.

T	*E*	*A*	*C*	*H*	*E*	*R*
+2 ↓	+2 ↓	+2 ↓	+2 ↓	+2 ↓	+2 ↓	+2 ↓
V	*G*	*C*	*E*	*J*	*G*	*T*

அதேபோல்,

C	*H*	*I*	*L*	*D*	*R*	*E*	*N*
+2 ↓	+2 ↓	+2 ↓	+2 ↓	+2 ↓	+2 ↓	+2 ↓	+2 ↓
E	*J*	*K*	*N*	*F*	*T*	*G*	*P*

எனவே, அந்த குறியீடு *EJKNFTGP* ஆகும். எனவே, விடை (*d*) ஆகும்.

எ.கா. 2: ஒரு சங்கேத மொழியில், *RUSTICATE* என்பது *QTTUIDBSD* என உள்ளது. எனில், *STATISTIC* எவ்வாறு எழுதப்படும்? (Management Trainees' 2005)

(*a*) *RSBUJTUHB* (*b*) *RSBUITUHB* (*c*) *RSBUIRSJD* (*d*) *TUBUITUMB*

தீர்வு. இந்த குறியீட்டில் நடு எழுத்து மாறாமல் உள்ளது. வார்த்தையில் முதல் இரண்டு மற்றும் கடைசி இரண்டு எழுத்துக்களும் ஒரு இடம் பின்னால் நகர்ந்துள்ளன. மற்ற எழுத்துக்கள் ஒரு இடம் முன்னால் நகர்ந்து குறியீட்டின் எழுத்துக்கள் உருவாகின்றன.

R	*U*	*S*	*T*	*I*	*C*	*A*	*T*	*E*
−1 ↓	−1 ↓	+1 ↓	+1 ↓	↓	+1 ↓	+1 ↓	−1 ↓	−1 ↓
Q	*T*	*T*	*U*	*I*	*D*	*B*	*S*	*D*

அதேபோல்,

S	T	A	T	I	S	T	T	I	C
−1 ↓		−1 ↓	+1 ↓	+1 ↓	+1 ↓	+1 ↓	+1 ↓	−1 ↓	−1 ↓
R	S	B	U	I	T	U	U	H	B

எனவே, குறியீட்டு வடிவம் *RSBUITUHB*. எனவே, விடை (*b*) ஆகும்.

எ.கா.3: ஒரு சங்கேத மொழியில், *ROAST* என்பது *PQYUR* என குறிப்பிட்டால், *SLOPPY* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(P.G.D.T.M. 2006)**

(*a*) *MRNAQN* (*b*) *NRMNQA* (*c*) *QNMRNA* (*d*) *RANNMQ*

தீர்வு. *ROAST* என்கிற வார்த்தையில் ஒன்று மாற்றி ஒன்று எழுத்துக்கள் இரண்டு படிகள் பின்னோக்கியும், இரண்டு படிகள் முன்னோக்கியும் நகர்ந்து புதிய வார்த்தையின் குறியீட்டை உருவாக்குகிறது எனவே,

R	O	A	S	T
−2 ↓	+2 ↓	−2 ↓	+2 ↓	−2 ↓
P	Q	Y	U	R

S	L	O	P	P	Y
−2 ↓	+2 ↓	−2 ↓	+2 ↓	−2 ↓	+2 ↓
Q	N	M	R	N	A

எனவே, அந்த குறியீட்டு வடிவம் *QNMRNA*. எனவே, விடை (*c*) ஆகும்.

எ.கா.4: ஒரு சங்கேத மொழியில், *STATEMENT* என்கிற வார்த்தை *TNEMETATS* என குறிப்பிடப்பட்டுள்ளது. அதே வடிவில் *POLITICAL* என்கிற வார்த்தை எவ்வாறு எழுதப்படும்? **(Hotel Management, 2003)**

(*a*) *LACITILOP* (*b*) *LCATILIOP* (*c*) *OPILITACL* (*d*) இவற்றுள் எதுவுமில்லை

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள வார்த்தையில் உள்ள எழுத்துக்கள் தலைகீழாக எழுதப்பட்டு குறியீடு உருவாகியுள்ளது. *POLITICAL* என்கிற வார்தையில் எழுத்துக்களை தலைகீழாக எழுதினால், *LACITILOP* என்பது கிடைக்கும். எனவே, விடை (*a*) ஆகும்.

எ.கா.5: *HEALTH* என்பது *GSKZDG* என எழுதப்பட்டால், அந்தக் குறியீட்டில் *NORTH* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(M.C.A. 2005)**

(*a*) *OPSUI* (*b*) *GSQNM* (*c*) *FRPML* (*d*) *IUSPO*

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள வார்த்தையில் எழுத்துக்கள் பின்னோக்கி எழுதப்பட்டு பின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு இடம் பின்னோக்கி நகர்ந்து குறியீட்டை உருவாக்குகிறது.

NORTH என்கிற வார்த்தையில் எழுத்துக்களை பின்னோக்கி எழுதினால் கிடைப்பது, *HTRON*. அதன் பின்,

H	T	R	O	N
−1 ↓	−1 ↓	−1 ↓	−1 ↓	−1 ↓
G	S	Q	N	M

எனவே, அந்த குறியீடு *GSQNM*. எனவே, விடை (*b*) ஆகும்.

எ.கா.6: ஒரு சங்கேத மொழியில், *BREAKTHROUGH* என்பது *EAOUHRBRGHKT* என எழுதப்பட்டுள்ளது. எனில், *DISTRIBUTION* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(Bank P.O. 2003)**

(*a*) *TISTBUONDIRI* (*b*) *STTIBUONRIDI*

(*c*) *STTIBUDIONRI* (*d*) *RISTTIBUDION*

(*e*) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள வார்த்தையில் உள்ள எழுத்துக்களை இரண்டிரண்டாக பிரித்து அவற்றை 1 முதல் 6 வரை எண்களிடுவோம்.

BR	EA	KT	HR	OU	GH
1	2	3	4	5	6

குறியீட்டு வார்த்தையானது இந்த ஜோடி எழுத்துக்களை 2, 5, 4, 1, 6, 3 என்கிற வரிசையில் கொண்டுள்ளது. *DISTRIBUTION* என்கிற வார்த்தையை ஜோடி எழுத்துக்களாகப் பிரித்தால், கிடைப்பது;

DI	*ST*	*RI*	*BU*	*TI*	*ON*
1	2	3	4	5	6

இந்த ஜோடிகளை 2, 5, 4, 1, 6, 3 என வரிசைப்படுத்தினால், *STTIBUDIONRI* என்பது கிடைக்கும். எனவே, விடை (*e*) ஆகும்.

எ.கா. 7: ஒரு சங்கேத மொழியில், *BEAT* என்பது *YVZG* என எழுதப்பட்டால் *MILD* என்பதன் குறியீடு என்ன? **(R.R.B. 2005)**

(*a*) *ONRW* (*b*) *NOWR* (*c*) *ONWR* (*d*) *NROW*

தீர்வு. *B*, *E*, *A*, *T* ஆகியவை முறையே ஆங்கில அகரவரிசையில் முதலிலிருந்து 2-வது, 5-வது, 1-வது மற்றும் 20-வது இடங்கள் ஆகும். *Y*, *V*, *Z*, *G* ஆகியவை முறையே ஆங்கில வரிசையின் கடைசியிலிருந்து முறையே 2-வது, 5-வது, 1-வது மற்றும் 20-வது இடங்கள் ஆகும். அதேபோல், *M*, *I*, *L*, *D* முறையே ஆங்கில அகரவரிசையின் முதலிலிருந்து 13-வது, 9-வது, 12-வது மற்றும் 4-வது எழுத்துக்கள் மற்றும் ஆங்கில அகரவரிசையின் கடைசியிலிருந்து முறையே 13-வது, 9-வது, 12-வது மற்றும் 4-வது எழுத்துக்கள் முறையே *NROW*. ஆகவே, கிடைக்கும் குறியீடு *NROW*. விடை (*d*) ஆகும்.

பயிற்சி 4A

1. ஒரு சங்கேத மொழியில், *LUTE* என்பது *MUTE* எனவும், *FATE* என்பது *GATE* எனவும் எழுதப்பட்டால், *BLUE* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(Bank P.O. 2004)**
   (*a*) *CLUE* (*b*) *GLUE*
   (*c*) *FLUE* (*d*) *SLUE*

2. ஒரு சங்கேத மொழியில், *MADRHS* என்பது *NBESBT* என எழுதப்பட்டால், *BOMBAY* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(M.A.T. 2004)**
   (*a*) *CPNCBX* (*b*) *CPNCBZ*
   (*c*) *CPOCBZ* (*d*) *CQOCBZ*
   (*e*) இவற்றில் எதுவுமில்லை

3. *FISH* என்பது சங்கேத மொழியில் *EHRG* என எழுதப்பட்டால், *JUNGLE* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(S.S.C. 2000)**
   (*a*) *ITMFKD* (*b*) *ITNFKD*
   (*c*) *KVOHMF* (*d*) *TIMFKD*

4. ஒரு சங்கேத மொழியில், *TWINKLE* என்பது *SVHOJKD* என எழுதப்பட்டால், *FILTERS* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(Agriculture Officers' 2005)**
   (*a*) *EHKSDQR* (*b*) *EHKUDQR*
   (*c*) *EGKUDQR* (*d*) *GJMSFST*
   (*e*) இவற்றில் எதுவுமில்லை

5. ஒரு சங்கேத மொழியில், *ROAD* என்பது *URDG* என எழுதப்பட்டால், *SWAN* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(B.T.M. 2006)**
   (*a*) *VXDQ* (*b*) *VZDQ*
   (*c*) *VZCP* (*d*) *UXDQ*

6. ஒரு சங்கேத மொழியில், *OPERATION* என்பது *NODQBUJPO* என எழுதப்பட்டால், *INVISIBLE* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(R.B.I. 2003)**
   (*a*) *JOWJTJCMF* (*b*) *JOWJTHAKD*
   (*c*) *HMUHTJCMF* (*d*) *HMUHTHAKD*
   (*e*) இவற்றுள் எதுவுமில்லை

7. ஒரு சங்கேத மொழியில், *FAVOUR* என்பது *EBUPTS* என எழுதப்பட்டால், *DANGER* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(SNAP, 2004)**
   (*a*) *CBFFDS* (*b*) *CBMHDS*
   (*c*) *EBFHDS* (*d*) *EBHHFS*

8. ஒரு சங்கேத மொழியில், *SUMMER* என்பது *RUNNER* என எழுதப்பட்டால், *WINTER* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(U.P.S.C. 2004)**
   (*a*) *SUITER* (*b*) *VIOUER*
   (*c*) *WALKER* (*d*) *SUFFER*

9. ஒரு சங்கேத மொழியில், *PRODUCTIONS* என்பது *QQPCVEUHPMT* என எழுதப்பட்டால், *ORIENTATION* எப்படி எவ்வாறு எழுதப்படும்? **(M.B.A. 2002)**
   (*a*) *PQJDOVBSJNO* (*b*) *PQJDOUBUJPO*
   (*c*) *PSJFOVBSJNO* (*d*) *NSHFMVBSJNO*
   (*e*) இவற்றுள் எதுவுமில்லை

10. ஒரு சங்கேத மொழியில், *MIND* என்பது *KGLB* எனவும், *ARGUE* என்பது *YPESC* எனவும் எழுதப்பட்டால், *DIAGRAM* என்பது எப்படி எழுதப்படும்? **(S.S.C. 2003)**
    (*a*) *BGYEPYK* (*b*) *BGYPYEK*
    (*c*) *GLPEYKB* (*d*) *LKBGYPK*

11. ஒரு சங்கேத மொழியில், *BASIC* என்பது *DDULE* என எழுதப்பட்டால், *LEADER* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(M.B.A. 2005)**
    (*a*) *NGCFGT* (*b*) *NHCGGU*
    (*c*) *OGDFHT* (*d*) *OHDGHU*

12. ஒரு சங்கேத மொழியில், *SIGHT* என்பது *FVTUG* என எழுதப்பட்டால், *REVEAL* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(Hotel Management, 1998)**
    (*a*) *YNRIRE* (*b*) *DQHQMX*
    (*c*) *FSJSOZ* (*d*) *ERIRNY*

13. ஒரு சங்கேத மொழியில், *MIRACLE* என்பது *NKUEHRL* என எழுதப்பட்டால், *GAMBLE* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(PGDTM, 2006)**

(a) *JDOCMF* (b) *CLEMNK*
(c) *HCPFQK* (d) *AELGMN*

14. ஒரு சங்கேத மொழியில், *GLAMOUR* என்பது *IJCNMWP* மற்றும் *MISRULE* என்பது *OGUSSNC* எனவும் எழுதப்பட்டால், *TOPICAL* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(R.B.I. 2005)**
(a) *VMRJECN* (b) *VMRHACJ*
(c) *VMRJACJ* (d) *VNRJABJ*
(e) இவற்றுள் எதுவுமில்லை

15. ஒரு சங்கேத மொழியில், *BELIEF* என்பது *AFKKDI* என எழுதப்பட்டால், *SELDOM* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(Hotel Management, 2004)**
(a) *RDKCNL* (b) *RFKENM*
(c) *RFKFNP* (d) *TFKENP*
(e) இவற்றுள் எதுவுமில்லை

16. ஒரு சங்கேத மொழியில், *PLEADING* என்பது *FMHCQMFB* என எழுதப்படுகிறது. எனில், *SHOULDER* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(Agriculture Officers' 2005)**
(a) *KCDQTIPV* (b) *QDCKVPIT*
(c) *QDCKTIPV* (d) *TIPVQDCK*
(e) இவற்றுள் எதுவுமில்லை

17. ஒரு சங்கேத மொழியில், *RAIL* என்பது *KCTN* எனவும் *SPEAK* என்பது *CGRUM* எனவும் எழுதப்பட்டால், *AVOID* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(S.B.I.P.O. 2005)**
(a) *FKQXC* (b) *KQXCF*
(c) *KRXCF* (d) *KQVCB*
(e) இவற்றுள் எதுவுமில்லை

18. ஒரு சங்கேத மொழியில், *MOTHER* என்பது *ONHURF* என எழுதப்படுகிறது. எனில், *ANSWER* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(Bank P.O. 2004)**
(a) *NBXSSE* (b) *NBWRRF*
(c) *MAVSPE* (d) *NBWTRF*
(e) இவற்றுள் எதுவுமில்லை

19. ஒரு சங்கேத மொழியில் *OMNI PRESENT* என்பது *QJONPTSMDRD* என எழுதப்பட்டால், *CREDIBILITY* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(Specialist Officers' 2002)**
(a) *DSFEJDDXSHKH*
(b) *JEFSDCXSHKH*
(c) *JEFSDDXSHKH*
(d) *JEFSDDZUJMJ*
(e) இவற்றுள் எதுவுமில்லை

20. ஒரு சங்கேத மொழியில் *DISTANCE* என்பது *IDTUBECN* எனவும் *DOCUMENT* என்பது *ODDVNTNE* எனவும் எழுதப்பட்டால், *THURSDAY* என்பது எவ்வாறு எழுதப்படும்?
(a) *DTVSTEYA* (b) *HTTQRYAD*
(c) *HTVSTYDA* (d) *HTVSYADS*
(e) *HTVSTYAD*

21. ஒரு சங்கேத மொழியில், *HAND* என்பது *SZMW* என எழுதப்பட்டால், *MILK* எவ்வாறு எழுதப்படும்? **(R.R.B. 2005)**
(a) *ORNP* (b) *PNRO*
(c) *NROP* (d) *RNOP*

22. ஒரு சங்கேத மொழியில், *COME AT ONCE* என்பது *XLNVZGLMXV* என எழுதப்பட்டால், அதே மொழியில், *OK* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(C.B.I. 2003)**
(a) *KL* (b) *LM*
(c) *KM* (d) *LP*

23. ஒரு சங்கேத மொழியில், *FLOWER* என்பது *UOLDVI* என எழுதப்பட்டால், *TERMINAL* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(P.G.D.T.M. 2006)**
(a) *FLKPMROZ* (b) *GVINRMZO*
(c) *RVNIGLKA* (d) *MNIVGYEO*

24. ஒரு சங்கேத மொழியில், *CERTAIN* என்பது *XVIGZRM* என எழுதப்பட்டால், மற்றும் *SEQUENCE* என்பது *HVJFVMXV* என எழுதப்பட்டால் *MUNDANE* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(M.B.A. 2004; Hotel Mgmt. 2004)**
(a) *NFMWZMX* (b) *NFMWZMV*
(c) *NFMXZMV* (d) இவற்றில் எதுவுமில்லை

25. ஒரு சங்கேத மொழியில், *ROUTINE* என்பது *VMRGFLI* என எழுதப்பட்டால், *CRUELTY* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(S.B.I.P.O. 2000)**
(a) *VOCVZRL* (b) *VPCVZRL*
(c) *VPVCZRL* (d) *WPCVZRL*
(e) இவற்றுள் எதுவுமில்லை

26. *DIAMOND* என்பது *VQYMKLV* என எழுதப்பட்டால், *FEMALE* என்பது எவ்வாறு எழுதப்படும்?
(a) *TUMYNU* (b) *UVNZOV*
(c) *UVNYNV* (d) *TVNYNV*
(e) *TUMZOU*

27. ஒரு சங்கேத மொழியில், ஆங்கில அகர வரிசையின் உயிரெழுத்துக்கள் கடைசியிலும், மற்ற எழுத்துக்கள் முதலிலிருந்து அமையுமாறும் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அமைந்த எழுத்துக்கள் அசல் ஆங்கில அகர வரிசையில் எழுத்துக்களின் இடங்களை குறிக்கின்றன. *META* என்பதன் குற்யீடு என்ன? **(J.M.E.T. 2005)**
(a) *TEAM* (b) *PWLV*
(c) *LWPV* (d) *QCYB*

குறிப்புகள் (கேள்விகள் 28 முதல் 37): கீழே EXPAND என்கிற வார்த்தை நான்கு வகை குறியீடுகளில் நான்கு வகை விதிகளை பயன்படுத்தி நான்கு மாற்றுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் குறியீடுகளில் ஒன்றாக ஒரு வார்த்தை கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வார்த்தைக்கும் பொருத்தமான மாற்றைத் தேர்ந்து எடுக்கவும்.

EXPAND

(a) *FYQBOE* (b) *EPDTCR*
(c) *GYRBPE* (c) *CWNZLC*

28. *CONSULATE – FVDPZYUWL*
29. *PERCEIVE – NDPBCHTD*
30. *MUSHROOM – KTQGPNML*
31. *MICROWAVE – FXDATXJQV*
32. *HARMONIOUS – FZPLMMGNSR*
33. *TRAVELLER – USBWFMMFS*
34. *TRANSLATE – USBOTMBUF*
35. *HURRICANE – JVTSKDCOG*
36. *EARTHQUAKE – FBSUIRVBLF*
37. *CONSULT – EPPTWMV*

விடைகள் (பயிற்சி 4A)

1. (a)	2. (c)	3. (a)	4. (b)	5. (b)	6. (c)	7. (b)	8. (b)	9. (a)	10. (a)
11. (b)	12. (d)	13. (c)	14. (c)	15. (c)	16. (c)	17. (b)	18. (d)	19. (c)	20. (e)
21. (c)	22. (d)	23. (b)	24. (b)	25. (e)	26. (a)	27. (d)	28. (b)	29. (d)	30. (d)
31. (b)	32. (d)	33. (a)	34. (a)	35. (c)	36. (a)	37. (c)			

தீர்வுகள் (பயிற்சி 4A)

1. வார்த்தையின் முதல் எழுத்து ஒரு படி முன்னால் நகர்ந்து குறியீட்டின் முதல் எழுத்தை உருவாக்குகிறது. மற்ற எழுத்துக்கள் மாறாமல் இருக்கும்.
2. வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு படி முன்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்தை உருவாக்குகிறது.
3. வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு படி பின்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்தை உருவாக்குகிறது.
4. நடு எழுத்தைத் தவிர வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு படி பின்னால் நகர்ந்தும், நடு எழுத்து ஒரு படி முன்னால் நகர்ந்தும் குறியீட்டின் தொடர்புடைய எழுத்தை உருவாக்குகிறது.
5. வார்த்தையில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் மூன்று இடங்கள் முன்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்தை உருவாக்குகிறது.
6. வார்த்தையில் உள்ள முதல் நான்கு எழுத்துக்களும் ஒரு இடம் பின்னால் நகர்ந்தும், கடைசி ஐந்து எழுத்துக்களும் முன்னால் ஒரு படி நகர்ந்தும் குறியீட்டின் தொடர்புடைய எழுத்தை உருவாக்குகிறது.
7. முதல், மூன்றாவது மற்றும் ஐந்தாவது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு படி பின்னாலும், இரண்டாவது, நான்காவது மற்றும் ஆறாவது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு படி முன்னாலும் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களை உருவாக்குகின்றன.
8. வார்த்தையின் முதல் எழுத்து ஒரு படி பின்னால் நகர்ந்தும், இரண்டு நடு எண்கள் ஒவ்வொன்றும் ஒரு படி முன்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களைக் கொடுக்கிறது.
9. அந்த வார்த்தையின் முதல், மூன்றாவது, ஐந்தாவது, ஏழாவது, ஒன்பதாவது மற்றும் பதினொன்றாவது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு படி முன்னால் நகர்கின்றன. இரண்டாவது, நான்காவது, எட்டாவது மற்றும் பத்தாவது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு படி பின்னால் நகர்கின்றன. நடு எழுத்து (அதாவது, ஆறாவது) எழுத்து இரண்டு படிகள் முன்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களை உருவாக்குகின்றன.
10. அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் இரண்டு இடங்கள் பின்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களை கொடுக்கிறது.
11. ஒற்றை இலக்க இடத்திலுள்ள ஒவ்வொரு எழுத்தும் இரண்டு படிகள் முன்னாலும், இரட்டை இலக்க இடத்திலுள்ள ஒவ்வொரு எழுத்தும் மூன்று படிகள் முன்னாலும் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களை உருவாக்குகின்றன.
12. அந்த வார்த்தையிலுள்ள ஒவ்வொரு எழுத்தும் பதிமூன்று படிகள் முன்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்தைக் கொடுக்கிறது.
13. அந்த வார்த்தையின் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது மற்றும் ஏழாவது எழுத்துக்கள் முறையே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு மற்றும் ஏழு படிகள் முன்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களைக் கொடுக்கிறது.
14. அந்த வார்த்தையின் முதல், மூன்றாவது மற்றும் ஆறாவது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் இரண்டு படிகள் முன்னால் நகர்கின்றன. இரண்டாவது, ஐந்தாவது மற்றும் ஏழாவது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் முறையே இரண்டு படிகள் பின்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களைக் கொடுக்கிறது.
15. அந்த வார்த்தையின் முதல், மூன்றாவது மற்றும் ஐந்தாவது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு படி பின்னால் நகர்கிறது, இரண்டாவது, நான்காவது மற்றும் ஆறாவது எழுத்து ஒவ்வொன்றும் முறையே இரண்டு மற்றும் மூன்று படிகள் முன்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களைக் கொடுக்கிறது.

16. அந்த வார்த்தையின் கடைசி நான்கு எழுத்துக்கள் தலைகீழ் வரிசையில் எழுதப்பட்டுள்ளன. முதல் நான்கு எழுத்துக்கள் நேரான வரிசையில் உள்ளன. அவ்வாறு உள்ள குழு எழுத்துக்களில் முதல் நான்கு எழுத்துக்களும் ஒரு இடம் பின்னோக்கி நகர்ந்தும் கடைசி நான்கு எழுத்துக்களும் ஒரு இடம் முன்னோக்கி நகர்ந்தும் குறியீட்டை உருவாக்குகின்றன.

எனவே, கிடைப்பது;

SHOULDER → SHOU/LDER →
REDL/SHOU → QDCK/TIPV

17. அந்த வார்த்தையின் கடைசி எழுத்தைத் தவிர, மற்ற எல்லா எழுத்துக்களும் தலைகீழ் வரிசையில் எழுதப்பட்டு அதன் மூலம் உருவான எழுத்துக்களின் குழுவில் ஒவ்வொரு எழுத்தும் இரண்டு இடம் முன்னால் நகர்ந்து குறியீட்டை உருவாக்குகிறது.

எனவே, கிடைப்பது;

AVOID → IOVAD → KQXCF

18. இரண்டிரண்டு எழுத்துக்கள் கொண்ட மூன்று குழுக்களாக வார்த்தையை பிரித்து பின் ஒவ்வொரு குழுவிலும் எழுத்துக்களை தலைகீழ் வரிசையில் எழுத வேண்டும். அவ்வாறு உருவான எழுத்துக்களின் குழுவில் 2-வது, 4-வது மற்றும் 6-வது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு இடம் முன்னால் நகர்ந்து குறியீட்டை உருவாக்குகிறது.

எனவே, கிடைப்பது;

AN SW ER → NA WS RE → NBW TRF

19. அந்த வார்த்தையின் நடு எழுத்தை அதே இடத்தில் வைத்துக் கொண்டு, முதல் ஐந்து எழுத்துக்கள் மற்றும் கடைசி ஐந்து எழுத்துக்களை தலைகீழ் வரிசையில் எழுத வேண்டும். அவ்வாறு எழுதுவதால் உருவான் எழுத்துக்கள் குழுவில் முதல் ஐந்து எழுத்துக்கள் ஒரு இடம் முன்னோக்கியும், கடைசி ஐந்து எழுத்துக்கள் தலா ஒரு இடம் பின்னோக்கியும், மற்றும் நடு எழுத்து இரண்டு இடம் முன்னோக்கியும் நகர்ந்து குறியீட்டை உருவாக்குகிறது. எனவே, கிடைப்பது;

CREDI/B/ILITY → IDERC/B/YTILI
→ JEFSD/D/XSHKH

20. அந்த வார்த்தையின் முதல் இரண்டு மற்றும் கடைசி மூன்று எழுத்துக்கள் தலைகீழாக எழுதப்பட்டுள்ளன. மற்ற எழுத்துக்கள் ஒரு படி முன்னால் நகர்ந்து குறியீட்டை உருவாக்குகிறது. எனவே, கிடைப்பது;

TH/URS/DAY → HT/VST/YAD

21. அந்த வார்த்தையில், ஆங்கில அகர வரிசையின் முதலிலிருந்து n-வது ஒரு எழுத்து எனில், குறியீட்டில் தொடர்புடைய எழுத்து ஆங்கில அகர வரிசையின் கடைசியிலிருந்து n-வது எழுத்தாகும்.

22. அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஆங்கில வரிசையின் கடைசியிலிருந்து எந்தெந்த இடங்களைக் குறிக்கிறதோ அதனால் மாற்றப்பட்டு ஒரு புதிய குறியீட்டை உருவாக்குகிறது.

23. அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஆங்கில வரிசையின் கடைசியிலிருந்து எந்தெந்த இடங்களைக் குறிக்கிறதோ, அதனால் மாற்றப்பட்டு ஒரு புதிய குறியீட்டை உருவாக்குகிறது. எனவே A என்பது Z ஆலும், B, Y-யாலும், C, X-ஆலும், D, W-ஆலும் அதேபோல் மற்றவையும் மாற்றப்படுகின்றன.

24. அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஆங்கில வரிசையின் கடைசியிலிருந்து எந்தெந்த இடங்களைக் குறிக்கிறதோ, அதனால் மாற்றப்பட்டு ஒரு புதிய குறியீட்டை உருவாக்குகிறது.

25. அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஆங்கில வரிசையின் கடைசியிலிருந்து எந்தெந்த இடங்களைக் குறிக்கிறதோ அதனால் மாற்றப்பட்டு ஒரு புதிய குறியீட்டை உருவாக்குகிறது. அவ்வாறு உருவாக்கப்பட்ட எழுத்துக்கள் தலைகீழாக எழுதப்பட்டு புதிய குறியீட்டை உருவாக்குகிறது. எனவே, கிடைப்பது;

CRUELTY → XIFVOGB → BGOVFIX

26. அந்த வார்த்தையில் ஒரு எழுத்து ஆங்கில அகர வரிசையின் முதலிலிருந்து n-வது எழுத்து எனில், தொடர்புடைய எழுத்து வரிசையின் கடைசியிலிருந்து $(n + 1)$-வது எழுத்து.

27. அசல் மற்றும் மாற்றி எழுதப்பட்ட தொடர்கள் முறையே;

அசல்:	[A]	B	C	D	[E]	F	G	H	I	J	K	L	[M]	N	O	P	Q	R	S	[T]	U	V	W	X	Y	Z
மாற்றி எழுதப்பட்டது:	[B]	C	D	F	[G]	H	J	K	L	M	N	P	[Q]	R	S	T	V	W	X	[Y]	Z	A	E	I	O	U

எனவே, *META* என்பதன் குறியீடு *QGYB*.

(கேள்விகள் 28 – 37):

(a)-யில், வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு இடம் முன்னால் நகர்ந்து குறியீட்டை உருவாக்குகிறது.

(b)-யில், வார்த்தையின் எழுத்துக்கள் தலைகீழாக எழுதப்பட்டு, அதன்பின் முதல், இரண்டு, மூன்றாவது, ... வார்த்தைகள் முறையே ஒரு, இரண்டு, மூன்று, ... படிகள் முன்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களை உருவாக்குகிறது.

(c)-யில், வார்த்தையின் ஒற்றை இடங்களில் உள்ள எழுத்துக்கள் இரண்டு இடங்கள் முன்னாலும், இரட்டை இடங்களில் உள்ள எழுத்துக்கள் ஒரு இடம் முன்னாலும் குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களை உருவாக்குகிறது.

(*d*)-யில், வார்த்தையின் ஒற்றை இடங்களில் உள்ள எழுத்துக்கள் இரண்டு இடங்கள் பின்னாலும், இரட்டை இடங்களில் உள்ள எழுத்துக்கள் ஒரு இடம் பின்னாலும் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களை உருவாக்குகிறது.

வகை 2: கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டை ஆராய்ந்து வார்த்தையை கண்டுபிடித்தல்: (மறு குறியிடுதல்).

எ.கா. 1: ஒரு குறியீட்டில் *ROAD* என்பது *WTFL* என எழுதப்பட்டுள்ளது. குறியீட்டின் அதே விதியை பயன்படுத்தினால், *GJFY* என்பதின் வார்த்தை என்ன? (R.R.B. 2004)

(*a*) *REAP* (*b*) *TAKE*
(*c*) *BEAT* (*d*) *LATE*

தீர்வு. வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஐந்து இடங்கள் பின்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்தைக் கொடுக்கிறது.

எனவே, கிடைப்பது

W	*T*	*F*	*I*
−5 ↓	−5 ↓	−5 ↓	−5 ↓
R	*O*	*A*	*D*

G	*J*	*F*	*Y*
−5 ↓	−5 ↓	−5 ↓	−5 ↓
B	*E*	*A*	*T*

எனவே, *BEAT* என்பது *GJFY* என குறியிடப்படும். அதனால், விடை (*c*) ஆகும்.

எ.கா. 2: *NARGRUED* என்பது *GRANDEUR* என்பதன் குறியீடு எனில், *SERPEVRE* என்பதன் குறியீடு என்ன?

(*a*) *PERSEVER* (*b*) *PRESEVER*
(*c*) *PERSERVE* (*d*) *PREVERSE*
(*e*) *PRESERVE*

தீர்வு. அந்த வார்த்தையின் முதல் நான்கு மற்றும் கடைசி நான்கு எழுத்துக்களை தலைகீழாக எழுதினால் குறியீடு கிடைக்கிறது. எனவே, கிடைப்பது;

SERPEVRE → *SERP/EVRE*
→ *PRES/ERVE* → *PRESERVE*

எனவே, விடை (*e*) ஆகும்.

பயிற்சி 4B

1. ஒரு சங்கேத மொழியில் *POPULAR* என்பது *QPQVMBS* என எழுதப்பட்டால், *GBNPVT* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(M.A.T. 2004, R.R.B. 2006)**
(*a*) *FARMER* (*b*) *FAMOUS*
(*c*) *FRAMES* (*d*) *FARMES*
(*e*) *FAMOTH*

2. ஒரு சங்கேத மொழியில், *UTENSIL* என்பது *WVGPUKN* என எழுதப்பட்டால், *DMSFXG* என்பது எவ்வாறு எழுதப்படும்?
(*a*) *BKQEVE* (*b*) *BKQDWE*
(*c*) *BKQDWF* (*d*) *BKQDVE*
(*e*) *BKQDVF*

3. *ROBUST* என்பது ஒரு சங்கேத மொழியில் *QNATRS* என எழுதப்பட்டால், *ZXCMP* என எவ்வாறு குறியிடப்படும்?
(*a*) *BZEOR* (*b*) *AYDNQ*
(*c*) *AWDLQ* (*d*) *YYBNO*
(*e*) *YWBLO*

4. *EHFNRQ* என்பது *BECKON* என்பதன் குறியீடு எனில், *QDFWXULQ* என்பதன் குறியீடு என்ன?
(*a*) *NCAUTIRN* (*b*) *NACUTIRN*
(*c*) *NATCRIUN* (*d*) *NACTURIN*
(*e*) *NACUTRIN*

5. ஒரு சங்கேத மொழியில், *REFRIGERATOR* என்பது *ROTAREGIRFER* என குறியிடப்பட்டால், *NOITINOMMA* என்பது எவ்வாறு குறியிடப்படும்? **(R.R.B. 2006)**
(*a*) *ANMOMIUTNI* (*b*) *AMNTOMUIIN*
(*c*) *AMMUNITION* (*d*) *NMMUNITIOA*
(*e*) இவற்றில் எதுவுமில்லை

6. ஒரு சங்கேத மொழியில், *GRASP* என்பது *BMVNK* என எழுதப்பட்டால், *CRANE* என்பது எவ்வாறு எழுதப்படும்?
(*a*) *FUDQH* (*b*) *HWFSJ*
(*c*) *GVERI* (*d*) *XMVIZ*
(*e*) *BQZMD*

7. ஒரு சங்கேத மொழியில், *COVET* என்பது *FRYHW* என எழுதப்பட்டால், எந்த வார்த்தை *SHDUO* என எழுதப்படும்?
(*a*) *QUAKE* (*b*) *REPAY*
(*c*) *STINK* (*d*) *PEARL*
(*e*) *TIEVP*

8. ஒரு சங்கேத மொழியில், *TRIANGLE* என்பது *SQHZMFKD* என எழுதப்பட்டால், எந்த வார்த்தை *PWZLOKD* என எழுதப்படும்?

(a) *EXAMPLE* (b) *FIGMENT*
(c) *DISMISS* (d) *DISJOIN*
(e) இவற்றில் எதுவுமில்லை

9. ஒரு சங்கேத மொழியில், *SOLID* என்பது *WPSLPIMFHA* என எழுதப்பட்டால், *ATEXXQIBVO* என்கிற குறியீட்டு வார்த்தை எதைக் குறிக்கும்? **(I.A.S. 1999)**

(a) *WATER* (b) *WAGER*
(c) *EAGER* (d) *WAFER*

10. ஒரு சங்கேத மொழியில், *SWITCH* என்பது *TVJSDG* என எழுதப்பட்டால், எந்த வார்த்தை *CQFZE* என எழுதப்படும்?

(a) *BARED* (b) *BRAED*
(c) *BREAD* (d) *BRADE*
(e) *BRDAE*

11. ஒரு சங்கேத மொழியில், *REMOTE* என்பது *ROTEME* என குறியிடப்பட்டால், எந்த வார்த்தை *PNICC* என குறிப்பிடப்படும்?

(a) *NPIICC* (b) *PICCIN*
(c) *PINCIC* (d) *PICNIC*
(e) *PICINC*

12. *FULFNHW* என்பது *CRICKET* என்பதின் குறியீடு எனில், *EULGH* என்பது எந்த வார்த்தையின் குறியீடு?

(a) *PRIDE* (b) *BRIDE*
(c) *BLADE* (d) *BLIND*
(e) இவற்றில் எதுவுமில்லை

13. ஒரு சங்கேத மொழியில் *SHIFT* என்பது *RFFBO* என எழுதப்பட்டால், *LKUMB* என்பது எவ்வாறு குறியிடப்படும்?

(a) *MMXQG* (b) *MLVNC*
(c) *KJVLA* (d) *MJVLC*
(e) *KJTLA*

14. *LBAEHC* என்பது *BLEACH* என்பதன் குறியீடு எனில், கீழே உள்ளவற்றுள் எது *NBOLZKMH* என குறியிடப்படும்?

(a) *OBNKZLHM* (b) *LOBNHMKZ*
(c) *OCPMALNI* (d) *MANKYJLG*
(e) *BNLOKZHM*

15. ஒரு சங்கேத மொழியில் *DECEMBER* என்பது *ERMBCEDE* என எழுதப்பட்டால், *ERMBVENO* என்பது அந்தக் குறியீட்டில் எவ்வாறு எழுதப்படும்? **(S.S.C. 2000)**

(a) *AUGUST* (b) *SEPTEMBER*
(c) *OCTOBER* (d) *NOVEMBER*

விடைகள் (பயிற்சி 4B)

1. (b) 2. (e) 3. (b) 4. (d) 5. (c) 6. (b) 7. (d) 8. (a) 9. (a) 10. (c)
11. (d) 12. (b) 13. (a) 14. (e) 15. (d)

தீர்வுகள் (பயிற்சி 4B)

1. அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு படி பின்னோக்கி குறியீட்டின் தொடர்புடைய எழுத்தைக் கொடுக்கிறது.

2. அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் இரண்டு படிகள் பின்னோக்கி குறியீட்டின் தொடர்புடைய எழுத்தைக் கொடுக்கிறது.

3. அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு படி முன்னோக்கி நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்தைக் கொடுக்கிறது.

4. அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் மூன்று இடங்கள் பின்னோக்கி நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்தைக் கொடுக்கிறது.

5. குறியீட்டில் அந்த வார்த்தையின் எழுத்துக்களின் வரிசை தலைகீழாக உள்ளது. எனவே, குறியீட்டில் உள்ள எழுத்துக்களை தலைகீழாக மாற்றினால், வார்த்தை கிடைக்கும்.

6. அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஐந்து இடங்கள் முன்னேறி குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களை உருவாக்கும்.

7. அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் மூன்று இடங்கள் பின்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களை உருவாக்கும்.

8. அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு இடம் முன்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களை உருவாக்கும்.

9. குறியீட்டில் உள்ள இரட்டை இடத்து எழுத்துக்களை மூன்று இடங்கள் முன்னோக்கி நகர்த்தியும், ஒற்றை இடத்து எழுத்துக்களை தவிர்த்தும் வார்த்தை உருவாகும்.

10. வார்த்தையில் உள்ள ஒற்றை இடத்து எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் ஒரு இடம் பின்னால் நகர்த்தியும், இரட்டை இடத்து எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் ஒரு இடம் முன்னால் நகர்த்தியும் குறியீட்டின் தொடர்புடைய எழுத்தைக் கொடுக்கும்.

11. இரண்டாவது மற்றும் மூன்றாவது எழுத்துக்களின் குழுக்கள், நான்காவது மற்றும் ஐந்தாவது எழுத்துக்களின் குழுக்கள் இடங்களை குறியீட்டில் பரிமாற்றம் செய்து கொள்ளும்.
12. அந்த வார்த்தையில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் மூன்று இடங்கள் பின்னால் நகர்ந்து குறியீட்டின் தொடர்புடைய எழுத்தைக் கொடுக்கும்.
13. அந்த வார்த்தையின் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது எழுத்துக்கள் முறையே ஒரு, இரண்டு, மூன்று, நான்கு மற்றும் ஐந்து இடங்கள் முன்னேறி குறியீட்டின் தொடர்புடைய எழுத்துக்களைக் கொடுக்கிறது.
14. அந்த வார்த்தை இரண்டிரண்டு எழுத்துக்களின் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பின்னர் அந்த ஜோடிகளில் உள்ள எழுத்துக்கள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன.
15. அந்த வார்த்தை இரண்டிரண்டு எழுத்துக்களின் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பின்னர் அந்த ஜோடிகளில் உள்ள எழுத்துக்கள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

வகை 2: நேரடி எழுத்து முறை குறியீடு

இது வரை நாம் படித்தது "விதி-குறியீடு". இதில் ஒரு வகையை உருவாக்க அல்லது எழுத்துக்களின் நகர்வு அல்லது எழுத்துக்களை மறு வரிசைப்படுத்துதல் என்கிற முறையில் வகைப்படுத்தப்படும்.

மறு குறியிடுதலை உருவாக்குவதற்கு ஒருவர் மறைந்துள்ள விதியை கண்டுபிடிக்க வேண்டும். ஆனால், சில நேரங்களில், எந்த ஒரு முறையும் இல்லாமல் சில எழுத்துகளுக்காக குறிப்பிட்ட எழுத்துக்கள் குறியீடுகளை உருவாக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு சங்கேத மொழியை எடுத்துக் கொள்வோம். இதில் *A*, *W* எனவும், *C*, *P* எனவும், *E*, *T* எனவும், *L*, *Z* எனவும், *S*, *B* எனவும், *T*, *K* எனவும் குறியிடப்பட்டுள்ளது. அந்த மொழியில் CASTLE என்பது PWBKZT என குறியிடப்பட்டுள்ளது.

இந்த வகை குறியீடு நேரடி எழுத்து முறை குறியீடு எனப்படும்.

நேரடி எழுத்து முறை குறியீட்டில், வார்த்தைகளில் உள்ள எழுத்துக்கள் போலவே அதே வரிசையில் குறியீட்டு எழுத்துக்கள் அமைந்திருக்கும்.

நேரடி எழுத்து முறை குறியீட்டு கேள்விகளில், சில குறிப்பிட்ட முறை குறியீட்டு எழுத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கும் அல்லது இரண்டு அல்லது மூன்று வார்த்தைகளின் குறியீடுகள் கொடுக்கப்பட்டிருக்கும். ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள குறியீடுகளில் உள்ள எழுத்துக்களை கொண்டுள்ள வார்த்தைகளின் குறியீடுகளை தேர்வு எழுதுபவர் கண்டுபிடிக்க வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா.1: ஒரு குறிப்பிட்ட மொழியில் *O* என்பது *E* எனவும், *A* என்பது *C*-யாக, *M* என்பது *I*-யாக, *S* என்பது *O*-யாக, *N* என்பது *P*-யாக, *E* என்பது *M*-ஆக, *I* என்பது *A*-யாக, *P* என்பது *N*-ஆக மற்றும் *C* என்பது *S*-ஆக எழுதப்பட்டால் அந்த மொழியில் *COMPANIES* என்பது எவ்வாறு எழுதப்படும்? (Bank P.O. 2004)

(*a*) *SMINCPAMO* (*b*) *SEIACPAMO* (*c*) *SEINCPAMO* (*d*) *SEINCPMIO*

(*e*) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. கொடுக்கப்பட்ட வார்த்தையில் உள்ள எழுத்துக்களை அதனதன் குறியீடுகளை மாற்றினால், கிடைப்பது;

C	*O*	*M*	*P*	*A*	*N*	*I*	*E*	*S*
↓	↓	↓	↓	↓	↓	↓	↓	↓
S	*E*	*I*	*N*	*C*	*P*	*A*	*M*	*O*

எனவே, விடை (*c*) ஆகும்.

எ.கா.2: ஒரு சங்கேத மொழியில், *PARENT* என்பது *BDFGJK* எனவும், *CHILDREN* என்பது *MOXQUFGJ* எனவும் எழுதப்பட்டால், *REPRINT* என்பது எவ்வாறு எழுதப்படும். (S.S.C. 2005)

(*a*) *FGBFXJK* (*b*) *FGBUXJK* (*c*) *FGBFXGD* (*d*) *BGBFXJK*

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகள் மற்றும் குறியீடுகளின் மூலம் கவனிப்பது;

(*i*) குறியீடுகளை ஆளும் விதி எதுவும் இல்லை.

(*ii*) இரண்டு வார்தைகளிலும் பொதுவான எழுத்துகளுக்கு தொடர்புடைய பொதுவான குறியீடுகள் உள்ளன. அதாவது, *PARENT* மற்றும் *CHILDREN* இரண்டிலும் '*REN*' என்கிற பொது வார்த்தை உள்ளது

மற்றும் குறியீடுகளில் *'FGJ'* என்பது பொதுவாக உள்ளது. இதிலிருந்து, குறியீட்டு எழுத்துக்கள் வார்த்தைகளில் உள்ள எழுத்துக்களைப் போல் அதே தொடரில் உள்ளன.

(*iii*) *PARENT* மற்றும் *CHILDREN* ஆகிய வார்த்தைகளிலிருந்து எழுத்துக்களின் கலவையால் *REPRINT* என்கிற வார்த்தை உருவாகிறது. மேற்கண்ட மூன்றும் இந்த கேள்வி நேரடி எழுத்து முறை குறியீட்டில் உள்ளது என்பதை தெரிவிக்கிறது.

எனவே, கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளிலிருந்து கிடைப்பது;

எழுத்து	*P*	*A*	*R*	*E*	*N*	*T*	*C*	*H*	*I*	*L*	*D*
குறியீடு	*B*	*D*	*F*	*G*	*J*	*K*	*M*	*O*	*X*	*Q*	*U*

எனவே, *REPRINT* என்பதன் குறியீடு *FGBFXJK*. ஆகவே, விடை (*a*) ஆகும்.

எ.கா.3: ஒரு சங்கேத மொழியில் *EARTH* என்பது *QPMZS* என எழுதப்படும். அதே மொழியில் *HEART* என்பது எவ்வாறு எழுதப்படும்? **(C.P.O. 2004)**

(*a*) *SQPZM* (*b*) *SQMPZ* (*c*) *SPQZM* (*d*) *SQPMZ*

தீர்வு. மேலே உள்ள கேள்வியில், *HEART* என்கிற வார்த்தையில் *EARTH* என்கிற வார்த்தையில் உள்ள அனைத்து எழுத்துக்களும் உள்ளன மாற்றுகளாக கொடுக்கப்பட்டுள்ள நான்கிலும் *EARTH* வார்த்தையில் உள்ள குறியீட்டைப் போல் அதே குறியீடுகள் உள்ளன. இந்த கேள்வி ஒரு நேரடி எழுத்து முறை குறியீடு என்பதை குறிக்கிறது.

எனவே, கிடைப்பது;

எழுத்து	*E*	*A*	*R*	*T*	*H*
குறியீடு	*Q*	*P*	*M*	*Z*	*S*

ஆகையால், *HEART* என்பதன் குறியீடு *SQPMZ*. எனவே, விடை (*d*) ஆகும்.

எ.கா.4: ஒரு பாதுகாப்பு செய்தியில், *GET AWAY*, *FIRE BACK-WARDS*, *MOVE SLOW* என்பது *BENCDCI*, *QHOE PCTL DCOXU*, *ZMWE VFMD* என குறியிடப்பட்டுள்ளது. **(M.A.T. 2000)**

இந்தக் குறியீட்டு முறையில், கீழே உள்ள வார்த்தைகளின் குறியீடுகளைக் கண்டுபிடிக்கவும்:

1. *OVER*

(*a*) *MWED* (*b*) *MWEO* (*c*) *MWOE* (*d*) *MWZO*

2. *DEADLY*

(*a*) *XECXEI* (*b*) *XEEXCI* (*c*) *XECXFI* (*d*) *XENXFI*

3. *REWARD*

(*a*) *OEDCOU* (*b*) *OEDCOX* (*c*) *OEDNXE* (*d*) *OTDCOX*

4. *GREAT*

(*a*) *BOECN* (*b*) *BOENC* (*c*) *BOEHC* (*d*) *BOEQN*

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள செய்தியிலிருந்து தெரிந்து கொள்வது குறியீட்டு முறையில் எந்த ஒரு விதியும் பின்பற்றப்படவில்லை. மேலும், செய்தியில் *A* ஏற்படும் பொழுது, குறியீட்டில் *C* தொடர்புடைய இடத்தில் உள்ளது. அதேபோல், *E*, *E*-யுடன் தொடர்புடையது. *D*, *W*-வுடன் தொடர்புடையது மற்றும் அதே போல் தொடர்கிறது. எனவே, செய்தியில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் ஒரு குறிப்பிட்ட குறியீட்டை கொண்டுள்ளது. இது நேரடி எழுத்து முறை குறியீடு ஆகும்.

எனவே, கொடுக்கப்பட்டுள்ள செய்தியிலிருந்து, கிடைப்பது;

எழுத்து	*G*	*E*	*T*	*A*	*W*	*Y*	*F*	*I*	*R*	*B*	*C*	*K*	*D*	*S*	*M*	*O*	*V*	*L*
குறியீடு	*B*	*E*	*N*	*C*	*D*	*I*	*Q*	*H*	*O*	*P*	*T*	*L*	*X*	*U*	*Z*	*M*	*W*	*F*

1. *OVER* என்பதன் குறியீடு *MWEO*. எனவே, விடை (*b*)
2. *DEADLY* என்பதன் குறியீடு *XECXFI*. எனவே, விடை (*c*)
3. *REWARD* என்பதன் குறியீடு *OEDCOX*. எனவே, விடை (*b*)
4. *GREAT* என்பதன் குறியீடு *BOECN*. எனவே, விடை (*a*)

பயிற்சி 4C

4. ஒரு மனிதனைக் காண்பித்து ஒரு பெண் சொன்னது, "அவனுடைய தாய் என் தாயின் ஒரே மகள்". அந்த பெண் தாய்க்கு என்ன உறவு? **(M.B.A. 2003)**

(*a*) தாய் (*b*) மகன் (*c*) சகோதரி (*d*) பாட்டி

(*e*) இவற்றில் எதுவுமில்லை

5. *X* என்பவர் '*Y*' என்பவரது மகனுடைய மகனின் சகோதரன் எனில் *Y*-க்கு *X* என்ன உறவு?

(*a*) மகன் (*b*) சகோதரன்

(*c*) மாமா (அ) அத்தை (*d*) பேரன் (*e*) மாமா

6. ரீடாவைக் குறிப்பிட்டு நிகில் சொன்னது, "நான் அவளுடைய தாயின் மகனின் ஒரே மகன்". ரீடா நிகிலுக்கு என்ன உறவு? **(IGNOU, 2003)**

(*a*) அத்தை (*b*) சகோதரனின் மகள்

(*c*) தாய் (*d*) மாமா (அ) அத்தை மகன்

7. ஒரு பெண்ணைக் குறிப்பிட்டு ஒரு மனிதன் சொன்னது, "அவருடைய ஒரே சகோதரனின் மகன் என் மனைவியின் சகோதரன்". அவனுக்கு அந்த பெண் என்ன உறவு? **(I.I.T.T.M. 2005)**

(*a*) தாயின் சகோதரி (*b*) பாட்டி

(*c*) மாமியார் (*d*) மாமனாரின் சகோதரி

(*e*) தாய் வழி பெரியம்மா/சித்தி

8. கேத்தனைக் குறிப்பிட்டு நம்ரதா சொன்னது, "என் தந்தையின் ஒரே மகனின் மகன்". கேத்தனின் தாய் நம்ரதாவுக்கு என்ன உறவு? **(Bank P.O. 2004)**

(*a*) மகள் (*b*) அத்தை

(*c*) சகோதரி (*d*) நாத்தனார்/ஓரகத்தி

(*e*) இவற்றில் எதுவுமில்லை

9. மேடையில் இருந்த ஒரு மனிதனைக் குறிப்பிட்டு ராஷி சொன்னது, "அவன் என் கணவனது மனைவியின் மகளின் சகோதரன்". மேடையில் இருக்கும் மனிதன் ராஷிக்கு என்ன உறவு?

(*a*) மகன் (*b*) கணவன்

(*c*) அத்தை (அ) மாமா மகன்

(*d*) சகோதரனின் மகன் (*e*) மைத்துனன்

10. ஒரு பெண் தன் தாயின் சகோதரனின் மகன் என ஒரு மனிதனை அறிமுகம் செய்கிறாள். அந்த மனிதன் அவளுக்கு என்ன உறவு?

(*a*) சகோதரனின் மகன் (*b*) மகன்

(*c*) மாமா (அ) அத்தை மகன்

(*d*) மாமா (*e*) பேரன்

11. ஒரு மனிதனை அறிமுகப்படுத்தி ஒரு பெண் சொன்னது, "அவன் என் தாயினுடைய தாயின் ஒரே மகன்". அந்த பெண் அவனுக்கு என்ன உறவு?

(*a*) தாய் (*b*) அத்தை

(*c*) சகோதரி (*d*) மாமா (அ) அத்தை மகள்

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

12. ஒரு புகைப்படத்தைக் குறிப்பிட்டு, தன் நண்பனிடம் ஒரு மனிதன் சொன்னது, "அவள் என் தந்தையின் அண்ணனின் பேத்தி". புகைப்படத்தில் உள்ள பெண் அந்த மனிதனுக்கு என்ன உறவு?
(a) சகோதரனின் மகள் (b) சகோதரி
(c) அத்தை (d) மைத்துனி
(e) தாய் வழி மாமி

13. ஒரு பெண்ணிடம் ஒரு மனிதன் சொன்னது, "உன் தாயின் கணவனின் சகோதரி என் அத்தை". எனில் அந்தப் பெண் அந்த மனிதனுக்கு என்ன உறவு? **(R.R.B. 2005)**
(a) மகள் (b) பேத்தி (c) தாய் (d) சகோதரி
(e) அத்தை

14. "அனிதாவின் தந்தையான ராமன் என் மாமனார் மகிபாலின் ஒரே மகன்" என நீனா சொன்னால், அனிதாவின் சகோதரியான பிந்து, மகிபாலுக்கு என்ன உறவு?
(a) சகோதரனின் மகள் (b) மகள்
(c) மனைவி (d) மருமகள்
(e) இவற்றில் எதுவுமில்லை

15. புகைப்படத்திலுள்ள ஒரு பெண்ணைக் குறிப்பிட்டு ராஜீவ் சொன்னது, "என் மனைவியின் குழந்தை அந்த பெண்ணின் தாயினுடைய ஒரே பேத்தி". புகைப்படத்திலுள்ள பெண் ராஜீவுக்கு என்ன உறவு? **(Bank P.O. 2005)**
(a) மாமா (அ) அத்தை பெண்
(b) மனைவி
(c) சகோதரி
(d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றில் எதுவுமில்லை

16. ஒரு பையனை அறிமுகப்படுத்தும் பொழுது ஒரு பெண் சொன்னது, "அவன் என் மாமாவினுடைய தந்தையின் மகளின் மகன்". எனில், அந்த பையன் அந்த பெண்ணுக்கு என்ன உறவு?
(a) சகோதரன் (b) மகன்
(c) மாமா (d) மருமகன்
(e) சகோதரனின் மகன்

17. ஒரு நபரைக் குறிப்பிட்டு தீபக் சொன்னது, "அவரின் ஒரே சகோதரன் என் மகளின் தந்தையினுடைய தந்தை" அந்த நபர் தீபக்கிற்கு என்ன உறவு? **(R.R.B. 2002)**
(a) தாத்தா (b) தந்தை
(c) மைத்துனன் (d) பெரியப்பா/சித்தப்பா
(e) இவற்றில் எதுவுமில்லை

18. ஒரு பெண்மணியைப் பார்த்து ஒரு பெண் சொன்னது, "அவள் என் தந்தையினுடைய ஒரே மகனின் பாட்டியின் மருமகள்". அந்த பெண்மணி அந்தப் பெண்ணிற்கு என்ன உறவு?
(a) நாத்தனார் (b) தாய்
(c) அத்தை (d) மாமியார்
(e) மாமா (அ) அத்தை மகள்

19. ஒரு புகைப்படத்தைப் பார்த்து பிரமோத்திடம் ஒரு பெண் சொன்னாள், "நான் இந்தப் பெண்ணின் ஒரே மகள் மற்றும் இவளுடைய மகன் உன் தாய் வழி மாமா". எனில் பேசுபவர் பிரமோத்தினுடைய தந்தைக்கு என்ன உறவு? **(N.M.A.T. 2005)**
(a) மைத்துனி (b) மனைவி
(c) (a) அல்லது (b) (d) (a)-யும் அல்ல (b)-யும் அல்ல

20. ஒரு நபரைக் குறிப்பிட்டு ஒரு பெண்ணிடம் ஒரு ஆண் சொன்னது, "அவனுடைய தாய் உன் தந்தையின் ஒரே மகள்". அந்த பெண் குறிப்பிடப்பட்ட நபருக்கு என்ன உறவு?
(a) அத்தை (b) தாய்
(c) மனைவி (d) மகள்
(e) இவற்றுள் எதுவுமில்லை

21. ஒரு புகைப்படத்திலுள்ள ஆணைக் குறிப்பிட்டு ஒரு பெண் சொன்னது, "அவனுடைய, சகோதரனின் தந்தை என் தாத்தாவின் ஒரே மகன்". புகைப்படத்திலுள்ள ஆணிற்கு அந்தப் பெண் என்ன உறவு?
(a) தாய் (b) அத்தை
(c) சகோதரி (d) மகள்
(e) பேத்தி

22. அருண் சொன்னான், "இந்த பெண் என் தாயின் பேரனின் மனைவி". எனில், அந்த பெண்ணிற்கு அருண் என்ன உறவு? **(I.I.T.T.M. 2005)**
(a) தந்தை (b) தாத்தா
(c) கணவன் (d) மாமனார்

23. ஒரு வயதானவரைப் குறிப்பிட்டு குணால் சொண்ணான், "அவருடைய மகன் என் மகனுடைய பெரியப்பா/சித்தப்பா". அந்த வயதானவர் குணாலுக்கு என்ன உறவு?
(a) சகோதரன் (b) மாமா
(c) அப்பா (d) தாத்தா
(e) இவற்றில் எதுவுமில்லை

24. ஒரு புகைப்படத்தைக் குறிப்பிட்டு ஒரு பெண் சொன்னாள். "அந்த மனிதனின் மகனின் சகோதரி என் மாமியார்". அந்த புகைப்படத்திலுள்ள மனிதனுக்கு இந்த பெண்ணின் கணவன் என்ன உறவு?
(a) பேரன் (b) மகன் (c) மருமகன்
(d) சகோதரனின் மகன் (e) இவற்றில் எதுவுமில்லை

விடைகள் (பயிற்சி 5A)

1. (b)	2. (b)	3. (e)	4. (a)	5. (d)	6. (a)	7. (d)	8. (d)	9. (a)	10. (c)
11. (d)	12. (a)	13. (d)	14. (e)	15. (b)	16. (a)	17. (d)	18. (b)	19. (b)	20. (b)
21. (c)	22. (d)	23. (c)	24. (a)						

தீர்வுகள் (பயிற்சி 5A)

1. விளக்கம் சொல்பவருக்கு சகோதரர் எவரும் இல்லை. எனவே, அவருடைய தந்தையின் மகன் அவரே. ஆகையால், பேசும் நபரானவர் புகைப்படத்திலுள்ள ஆணின் தந்தையாகும். எனவே, புகைப்படத்திலுள்ள ஆண் இவரின் மகன்.

2. தாத்தாவின் ஒரே மகன் – தந்தை; தந்தையின் மகன் – சகோதரன்.

   ஆகையால், அந்த பையன் வீணாவின் சகோதரன்.

3. மோனிகாவின் தந்தையின் ஒரே மகள் – மோனிகா.

   ஆதலால், ரீனா மோனிகாவின் மகளாவாள். அதாவது, மோனிகா ரீனாவின் தாயாகும்.

4. என் தாயின் ஒரே மகள் – நான்.

   ஆகையால், அந்த பெண் அந்த ஆணின் தாய்.

5. 'Y' யின் மகன் – பேரன்; 'Y' யின் பேரனின் சகோதரன் – 'Y'-யின் பேரன்.

   ஆகையால், X என்பவர் 'Y'-யின் பேரன்.

6. ரீடாவின் தாயின் மகன் – ரீடாவின் சகோதரன்.

   ஆகையால், நிகில் ரீடாவின் சகோதரனின் மகன் அல்லது ரீடா, நிகிலின் அத்தையாகும்.

7. மனைவியின் சகோதரன் – மைத்துனன்.

   அந்த பெண்ணின் சகோதரனின் மகன் அந்த ஆணின் மைத்துனன் ஆகும்.

   ஆகையால், பெண்ணின் சகோதரன் அந்த ஆணின் மாமனார். அதாவது அந்த பெண் அந்த ஆணின் மாமனாரின் சகோதரி.

8. நம்ரதாவின் தந்தையின் ஒரே மகன் – நம்ரதாவின் சகோதரன்.

   ஆகையால், கேத்தன் நம்ரதாவின் சகோதரனின் மகன். எனவே, கேத்தனின் தாய் நம்ரதாவின் சகோதரனின் மனைவி. அதாவது, நம்ரதாவின் அண்ணி (அ) தம்பி மனைவி.

9. ராஷியின் கணவனின் மனைவி – ராஷி; மகளின் சகோதரன் – மகன்.

   ஆகையால், மேடையில் உள்ள ஆண் ராஷியின் மகன்.

10. தாயின் சகோதரன் – மாமா; மாமாவின் மகன் – மாமா மகன்.

11. தாயின் தாய் – தாய் வழி பாட்டி; தாய் வழி பாட்டியின் ஒரே மகன் – தாய் வழி மாமா.

    ஆகையால், அந்த ஆண் அப்பெண்ணின் தாய் வழி மாமா. அதாவது, அந்த பெண் அந்த ஆணின் சகோதரி மகள்.

12. தந்தையின் சகோதரன் – பெரியப்பா/சித்தப்பா; பெரியப்பா/சித்தப்பாவின் பேத்தி – பெரியப்பா/சித்தப்பாவின் மகனின் மகள் – சகோதரனின் மகள் – சகோதரனின் மகள்.

13. பெண்ணின் தாயின் கணவன் – பெண்ணின் தந்தை; பெண்ணின் தந்தையின் சகோதரி – பெண்ணின் அத்தை.

    ஆகையால், பெண்ணின் அத்தை அந்த பையனின் அத்தையும் ஆவார். ஆதலால் அந்த பெண் அந்த பையனின் சகோதரி.

14. நீனா-வின் மாமனார் மஹிபாலின் ஒரே மகன் – நீனாவின் கணவன்.

    ஆகையால், ராமன் நீனாவின் கணவன் மற்றும் அனிதா மற்றும் பிந்து அவனின் மகள்கள்.

    எனவே, பிந்து மஹிபாலின் பேத்தி.

15. ராஜீவ்வின் மனைவியின் குழந்தை – ராஜீவ்வின் குழந்தை.

    அந்த பெண்ணின் தாய் ராஜீவ்வின் குழந்தையின் பாட்டி. ஆகையால், அந்த பெண் ராஜீவ்வின் மனைவி.

16. மாமாவின் தந்தையின் பெண் – மாமாவின் சகோதரி – தாய்; தாயின் மகன் – சகோதரன்.

17. தீபக்கின் மகளின் தந்தையின் தந்தை – தீபக்கின் தந்தை. ஆகையால், அந்த மனிதனின் சகோதரன் தீபக்கின் தந்தையாகும். அல்லது, அந்த மனிதன் தீபக்கின் தந்தையின் சகோதரன். அதாவது, தீபக்கின் பெரியப்பா/சித்தப்பா.

18. அந்த பெண்ணின் தந்தையின் ஒரே மகன் – அந்த பெண்ணின் சகோதரன்; பெண்ணின் சகோதரனின் பாட்டி – பெண்ணின் பாட்டி; பெண்ணின் பாட்டியின் மருமகள் – பெண்ணின் தாய்.

19. பேசுபவரின் சகோதரன் பிரமோத்தின் தாய்வழி மாமா என்பது தெளிவாகிறது.

    ஆகையால், பேசுபவர் பிரமோத்தின் தாய் அல்லது அவனின் தந்தையின் மனைவி.

20. அந்த பெண்ணின் தந்தையின் ஒரே மகள் – அந்த பெண்.

    ஆதலால், அந்த பெண் அந்த நபரின் தாய்.

21. அந்த பெண்ணின் தாத்தாவின் ஒரே மகன் – அந்த பெண்ணின் தந்தை; ஆணின் சகோதரனின் தந்தை – அந்த ஆணின் தந்தை.

    ஆகையால், அந்த பெண் ஆணின் சகோதரி.

22. தாயின் பேரன் – மகன்; மகனின் மனைவி – மருமகள்.

23. குணாலின் மகனின் பெரியப்பா/சித்தப்பா – குணாலின் சகோதரன். ஆகையால், அந்த வயதானவரின் மகன் குணாலின் சகோதரன். அதாவது, அந்த வயதானவர் குணாலின் தந்தை.

24. அந்த மனிதனின் மகனின் சகோதரி – மனிதனின் மகள்.

    ஆகையால், அந்த மனிதனின் மகள் அந்த பெண்ணின் கணவனின் தாயாகும். எனவே, அந்த பெண்ணின் கணவன் புகைப்படத்திலுள்ள மனிதனின் பேரன்.

வகை 2: உறவுப் புதிர்

இந்த வகை கேள்விகளில், இரண்டுக்கு மேற்பட்ட நபர்களின் பரஸ்பர உறவு முறை கொடுக்கப்பட்டிருக்கும். தேர்வு எழுதுபவர் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை நன்கு ஆராய்ந்து, குடும்ப வரைபடத்தை கணக்கிட்டு பின் கொடுத்தப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா. 1: ஒரு குடும்பத்தில் ஒரு மனிதன், அவன் மனைவி, அவர்களது நான்கு மகன்கள் மற்றும் அவர்களது மனைவிமார்கள் உள்ளனர். ஒவ்வொரு மகனின் குடும்பத்திலும் 3 மகன்கள் மற்றும் 1 மகள் உள்ளனர். மொத்த குடும்பத்தில் உள்ள ஆண் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை என்ன? (S.S.C. 2003)

(*a*) 4 (*b*) 8 (*c*) 12 (*d*) 17

தீர்வு. அந்த குடும்பத்தில் உள்ள ஆண்களின் எண்ணிக்கை:

(*i*) அந்த மனிதன்;

(*ii*) அவனுடைய நான்கு மகன்கள்; மற்றும்

(*iii*) அவனுடைய $(3 \times 4) = 12$ பேரன்கள்.

எனவே, மொத்த ஆண்களின் எண்ணிக்கை $= (1 + 4 + 12) = 17$.

எனவே, விடையானது (*d*).

எ.கா. 2: *A* மற்றும் *B* சகோதரர்கள், *C* மற்றும் *D* சகோதரிகள். *A*-யின் மகன் *D*-யின் சகோதரன். *C*-க்கு *B* என்ன உறவு? (M.B.A. 1998)

(*a*) தந்தை (*b*) சகோதரன் (*c*) தாத்தா (*d*) மாமா (*e*) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. *A*-யின் சகோதரன் *B* என்பது தெளிவு. *A*-யின் மகன் *D*-யின் சகோதரன். எனவே, *D*, *A*-யின் மகள் என்று அர்த்தம். *C* மற்றும் *D* சகோதரிகள் ஆதலால், *C*-யும் *A*-யின் மகள்.

ஆகவே, *B*-யானவர் *C*-யின் மாமா.

எனவே, விடை (*d*).

எ.கா. 3: *A*, *B*-யின் சகோதரி. *B*-யின் தாய் *C*. *C*-யின் தந்தை *D*. *D*-யின் தாய் *E*. எனில், *D*-க்கு *A* என்ன உறவு? (C.P.O. 2005; Hotel Managerent, 2003)

(*a*) பாட்டி (*b*) தாத்தா (*c*) மகள் (*d*) பேத்தி

தீர்வு. *B*-யின் சகோதரி *A* மற்றும் *B*, *C*-யின் மகள்/மகன். எனவே, *A*, *C*-யின் மகள். மேலும் *C*-யின் தந்தை *D*. எனவே, *A*, *D*-யின் பேத்தி.

ஆகவே விடையானது (*d*).

எ.கா. 4: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: ரவி அவனுடைய தந்தையின் சகோதரனின் மகன். அமனின் பாட்டியும் கௌரவின் தாயுமான திவ்யாவின் மகன் சாகில். அசோக் தான்யாவின் தந்தை மற்றும் ரவியின் தாத்தா. திவ்யா அசோக்கினுடைய மனைவி. (Bank. P.O. 2003)

1. திவ்யாவுக்கு ரவி என்ன உறவு?

(*a*) சகோதரனின் மகன் (*b*) பேரன் (*c*) மகன்

(*d*) தகவல் போதுமானதாக இல்லை (*e*) இவற்றில் எதுவுமில்லை

2. கௌரவின் மனைவி தான்யாவிற்கு என்ன உறவு?

(*a*) சகோதரியின் மகள் (*b*) சகோதரி (*c*) சகோதரனின் மனைவி

(*d*) தகவல் போதுமானதாக இல்லை (*e*) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு.

1. திவ்யா அசோக்கின் மனைவி, மற்றும் அசோக் ரவியின் தாத்தா. ஆதலால், திவ்யாவின் பேரன் ரவி. எனவே, விடை (*b*).
2. தான்யா அசோக்கின் மகள், கௌரவ் திவ்யாவின் மகன் மற்றும் அசோக் திவ்யாவின் கணவன். ஆகையால், கௌரவ் தான்யாவின் சகோதரன் மற்றும் அவன் மனைவி தான்யாவின் தம்பி மனைவி. எனவே, விடை (*c*).

எ.கா.5: *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடையளிக்கவும்:*

A, *B*, *C*, *D*, *E* மற்றும் *F* என்கிற ஆறு குழந்தைகள் கால்பந்து விளையாடுகின்றனர். *A* மற்றும் *E* சகோதரர்கள், *E*-யின் சகோதரி *F*. *A*-யின் மாமாவின் ஒரே மகன் *C*. *C*-யின் தந்தையின் சகோதரனின் மகள்கள் *B* மற்றும் *D*.

1. *F*-க்கு *C* என்ன உறவு?

(*a*) மாமா மகன் (*b*) சகோதரன் (*c*) மகன் (*d*) மாமா (*e*) இவற்றில் எதுவுமில்லை

2. விளையாடுபவர்களில் எத்தனை பேர் ஆண்கள்?

(*a*) ஒன்று (*b*) மூன்று (*c*) நான்கு (*d*) ஐந்து (*e*) ஆறு

3. விளையாடுபவர்களில் எத்தனை பேர் பெண்கள்?

(*a*) ஒன்று (*b*) இரண்டு (*c*) மூன்று (*d*) நான்கு (*e*) ஐந்து

4. *A*-க்கு *D* என்ன உறவு?

(*a*) மாமா (*b*) சகோதரி (*c*) சகோதரனின் மகள்

(*d*) மாமா மகன் (*e*) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு.

1. *E* மற்றும் *A*-யின் சகோதரி *F*. ஆகையால், *F*-இன் மாமாவின் மகன் *C*. எனவே *C*, *F*-இன் மாமாவின் மகன். எனவே, விடை (*a*).
2. கொடுக்கப்பட்டுள்ளபடி, *A* மற்றும் *E* சகோதரர்கள், எனவே இருவரும் ஆண்கள், *E*-யின் சகோதரி *F*. எனவே, *F* பெண் ஆகும். *C* மகன் என்பதால் ஆண். *B* மற்றும் *D* இருவரும் மகள்கள். எனவே பெண்கள். எனவே மூன்று ஆண்கள் உள்ளனர். ஆகையால், விடை (*b*).
3. தீர்வு 2-ன் படி மூன்று ஆண்கள் உள்ளனர் என்பது தெளிவாகிறது. எனவே மூன்று பெண்கள் உள்ளனர். ஆகையால், விடை (*c*).
4. *C*-யின் தந்தையின் சகோதரன் *D*-யின் தந்தை. *C*-யின் தந்தை *A*-யின் மாமா. ஆகையால் *D*-யின் தந்தையும் *A*-யின் மாமா. எனவே, *A*-யின் மாமா மகன் *D*. எனவே, விடை (*d*).

எ.கா.6: *கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடையளிக்கவும்:*

பிரசாந்த் அரோராவிற்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். – சங்கீதா, விமல் மற்றும் ஆஷிஷ். திரு மற்றும் திருமதி ராயின் மூத்த மகளை ஆஷிஷ் மணந்து கொண்டான். ராய் தம்பதிகள் தங்களது இளைய மகளை திரு மற்றும் திருமதி ஷர்மாவின் மூத்த மகனுக்கு திருமணம் செய்து வைத்தனர். திரு மற்றும் திருமதி ஷர்மாவுக்கு அமித் மற்றும் சசி ஆகிய இரண்டு குழந்தைகள். ராய் தம்பதிகளுக்கு ரோஷன் மற்றும் வந்தனா ஆகிய மேலும் இரண்டு குழந்தைகள் உள்ளனர். இருவரும் வீணாவை விட மூத்தவர்கள். சமீர் மற்றும் அஜய் இருவரும் ஆஷிஷ் மற்றும் மோனிகாவின் குழந்தைகள். ராஷ்மி அமித்தின் மகள்.

(M.A.T. 2002)

1. ராஷ்மியின் குடும்ப பெயர் என்ன?

(*a*) ஷர்மா (*b*) ராய் (*c*) அரோரா (*d*) கண்டுபிடிக்க முடியாது

(*e*) இவற்றில் எதுவுமில்லை

2. மோனிகாவின் தந்தைக்கு சமீர் என்ன உறவு?

(*a*) பேரன் (*b*) மகன் (*c*) அத்தை (அ) மாமா மகன்

(*d*) மருமகன் (*e*) இவற்றில் எதுவுமில்லை

3. சமீரின் குடும்பப் பெயர் என்ன?

(*a*) ராய் (*b*) ஷர்மா (*c*) அரோரா (*d*) கண்டுபிடிக்க முடியாது

(*e*) இவற்றில் எதுவுமில்லை

4. திருமதி ராய் ஆஷிஷாக்கு என்ன உறவு?

(*a*) அத்தை (*b*) மாமியார் (*c*) அரோரா (*d*) கண்டுபிடிக்க முடியாது

(*e*) இவற்றில் ஏதுவுமில்லை

தீர்வு.

1. ராஷ்மி அமித்தின் மகள். அமித் ஷர்மா தம்பதிகளின் மூத்த மகன். அவன் ராய் தம்பதிகளின் இளைய மகளான வீணாவை திருமணம் செய்து கொண்டுள்ளான், ஆகவே ராஷ்மியின் குடும்ப பெயர் ஷர்மா. எனவே, விடை (*a*).
2. பிரசாந்த் அரோராவின் மகனின் ஆஷிஷ்ஷின் மகன் சமீர். எனவே, சமீரின் குடும்பப் பெயர் அரோரா. எனவே, விடை (*a*) ஆகும்.

3. சமீர் ஆஷிஷ்ஷின் மகன். ஆஷிஷ், பிரசாந்த் அரோராவின், மகன். ஆதலால் சமீர் மோனிகாவின் தந்தையின் பேரன். எனவே, விடை (*a*).

4. ஆஷிஷ் மோனிகாவை திருமணம் செய்து கொண்டுள்ளான். திரு மற்றும் திருமதி ராயின் மகள் மோனிகா. ஆகையால், திருமதி ராய் ஆஷிஷின் மாமியார்.
எனவே, விடை (*b*).

பயிற்சி 5B

1. ஒரு கூட்டுக் குடும்பத்தில், தந்தை, தாய், 3 திருமணமான மகன்கள் மற்றும் திருமணமாகாத மகள் ஆகியோர் உள்ளனர். இருவருக்கு தலா 2 மகள்களும் 1 மகனும் உள்ளனர். எனில், அந்த குடும்பத்தில் மொத்தம் எத்தனை பெண்கள் உள்ளனர்? **(S.S.C. 2005)**
(*a*) 2 (*b*) 3 (*c*) 6 (*d*) 9

2. *X* என்பவர் '*Y*' என்பவரின் மகனின் மகனுடைய சகோதரன் எனில், '*Y*'-க்கு *X* என்ன உறவு? **(R.R.B. 2005)**
(*a*) சகோதரன் (*b*) மாமா மகன்
(*c*) பேரன் (*d*) மகன்

3. கொடுக்கப்பட்டுள்ளது:
1. *B*-யின் தாய் *A*;
2. *A*-யின் மகன் *C*;
3. *E*-யின் சகோதரன் *D*;
4. *B*-யின் மகள் *E*.

D-யின் பேத்தி யார்?
(*a*) *A* (*b*) *B* (*c*) *C* (*d*) *E*

4. *A*, *B* மற்றும் *C* சகோதரிகள். *E*-யின் சகோதரன் *D*. *B*-யின் மகள் *E*. *D*-க்கு *A* என்ன உறவு? **(S.S.C. 2003)**
(*a*) சகோதரி (*b*) மாமா மகள்
(*c*) சகோதரனின் மகள் (*d*) அத்தை

5. *A* மற்றும் *B* திருமணமான தம்பதிகள் *X* மற்றும் *Y* சகோதரர்கள். *A*-யின் சகோதரன் *X*. *B*-க்கு *Y* என்ன உறவு? **(R.R.B. 2004)**
(*a*) மைத்துனன் (*b*) சகோதரன்
(*c*) மாமா மகன் (*d*) இவற்றில் எதுவுமில்லை

6. தீபக்கிற்கு அணில் என்கிற சகோதரன் உள்ளார். தீபக் பிரேமின் மகன். பீமால் பிரேமின் தந்தை. உறவுகளின் படி பீமலுக்கு அணில் என்ன உறவு?
(*a*) மகன் (*b*) பேரன் (*c*) சகோதரன் (*d*) தாத்தா

7. *P*-யின் கணவன் *B*. *E*-யின் ஒரே பேரன் *Q*. *E*, *D*-யின் மனைவி மற்றும் *P*-யின் மாமியாரும் ஆவார். எனில், *D*-க்கு *B* என்ன உறவு? **(Bank P.O. 2004)**
(*a*) சகோதரனின் மகன் (*b*) மாமா மகன்
(*c*) மருமகன் (*d*) மகன்

8. I. *A*-யின் சகோதரன் *F*,
II. *A*-யின் மகள் *C*,
III. *F*-ன் சகோதரி *K*,
IV. *C*-யின் சகோதரன் *G*.
G-யின் மாமா யார்? **(S.S.C. 2005)**
(*a*) *A* (*b*) *C* (*c*) *F* (*d*) *K*

9. *B*-யின் மாமா *A*, *B*-யானவர் *C*-யின் மகள் மற்றும் *P*-யின் மருமகள் *C*. எனில், *P*-க்கு *A* என்ன உறவு? **(R.B.I. 2005)**
(*a*) சகோதரன் (*b*) மகன் (*c*) மருமகன்
(*d*) தகவல் போதுமானதாக இல்லை
(*e*) இவற்றில் எதுவுமில்லை

10. *P*-யின் தந்தை *Q*-வின் மகன். *P*-யின் தந்தை வழி மாமா *M* மற்றும் *Q*-வின் சகோதரன் *N*. எனில், *M*-க்கு *N* என்ன உறவு? **(Bank P.O. 2005)**
(*a*) சகோதரன்
(*b*) சகோதரனின் மகன்
(*c*) பெரியப்பா (அ) சித்தப்பா மகன்
(*d*) தகவல் போதுமானதாக இல்லை
(*e*) இவற்றில் எதுவுமில்லை

குறிப்பு (கேள்விகள் 11 முதல் 13): கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாக படித்து பின் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடையளிக்கவும்:

B-யின் மகன் *A*. *C*, *B*-யின் சகோதரி. *C*-க்கு *D* என்கிற மகனும் *E* என்கிற மகளும் உள்ளனர். *D*-யின் தாய்வழி மாமா *F*.

11. *D*-க்கு *A* என்ன உறவு
(*a*) அத்தை மகன் (*b*) சகோதரியின் மகன்
(*c*) மாமா (*d*) சகோதரன்

12. *F*-க்கு *E* என்ன உறவு?
(*a*) சகோதரி (*b*) மகள்
(*c*) சகோதரி மகள் (*d*) மனைவி

13. *F*-க்கு சகோதரியின் மகன்கள் எத்தனை உள்ளனர்?
(*a*) ஒருவரும் (*b*) ஒன்று
(*c*) இரண்டு (*d*) மூன்று

14. (*i*) *N*-ன் சகோதரன் *M*; (*ii*) *N*-ன் சகோதரன் *B*; மற்றும் (*iii*) *D*-யின் சகோதரன் *M*. எனில், கீழே உள்ளவற்றுள் எது மிகச் சரியானது?
(*a*) *B*-யின் சகோதரன் *N* (*b*) *D*-யின் சகோதரன் *N*
(*c*) *B*-யின் சகோதரன் *M* (*d*) *M*-ன் சகோதரன் *D*
(*e*) இவற்றில் எதுவுமில்லை

15. ரவியின் சகோதரன் தீபக். அதுலின் சகோதரி ரீனா. ரீனாவின் மகன் ரவி. எனில், ரீனாவுக்கு தீபக் என்ன உறவு? **(C.B.I. 2003)**
(a) மகன் (b) சகோதரன்
(c) சகோதரனின் மகன் (d) அப்பா

16. R-ன் சகோதரன் Q. Q-வின் சகோதரி P. S-ன் சகோதரன் T. R-ன் மகள் S. Q-வின் சகோதரனின் மகன்கள் யார் யார்?
(a) R மற்றும் P (b) P மற்றும் T
(c) Q மற்றும் T (d) S மற்றும் T
(e) இவற்றில் எதுவுமில்லை

17. A-யின் மகன் E. B-யின் மகன் D. E-க்கு C-யுடன் திருமணம் செய்து வைக்கப்பட்டது. B-யின் மகள் C. எனில், E-க்கு D என்ன உறவு? **(R.R.B. 2004)**
(a) சகோதரன் (b) மாமா
(c) மாமனார் (d) மைத்துனன்
(e) இவற்றில் எதுவுமில்லை

18. C-யின் தந்தை A மற்றும் B-யின் மகள் D. A-யின் உறவு சகோதரன் E. D-யின் சகோதரி C எனில், E-க்கு B என்ன உறவு?
(a) மகள் (b) மைத்துனன்
(c) கணவன் (d) மைத்துனி

19. Q-வின் தாய் P-யின் சகோதரி மற்றும் M-ன் மகள் ஆகும். S, P-யின் மகள் மற்றும் T-யின் சகோதரி. T-க்கு M என்ன உறவு?
(a) பாட்டி (b) தந்தை
(c) தாத்தா (d) தாத்தா (அ) பாட்டி
(e) இவற்றுள் எதுவுமில்லை

20. B-யின் மருமகன் D, மற்றும் A-யின் மைத்துனன். C-யின் சகோதரன் A. எனில், B-க்கு A என்ன உறவு? **(Bank P.O. 2004)**
(a) சகோதரன் (b) மகன் (c) தந்தை
(d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 21 முதல் 22): கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை படித்து பின் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்:

C-யின் தந்தை A. ஆனால், C அவரது மகன் அல்ல.
C-யின் மகள் E. A-யின் மனைவி F.
C-யின் சகோதரன் B. B-யின் மகன் D.
B-யின் மனைவி G. G-யின் தந்தை H.

21. D-யின் பாட்டி யார்?
(a) A (b) C (c) F (d) H

22. F-யின் மகன் யார்?
(a) B (b) C (c) D (d) E

23. A-யின் தந்தையின் சகோதரினின் மகன் C. A-யின் அத்தை (அ) மாமாவின் மகன் (அ) மகள் D ஆகும். ஆனால் D, C-யின் சகோதரன் அல்ல. எனில் C-க்கு D என்ன உறவு? **(M.B.A. 2002)**
(a) தந்தை (b) சகோதரி
(c) தாய் (d) அத்தை

24. Q-வின் மகன் P. Q மற்றும் R ஒருவருக்கொருவர் சகோதிரிகள். R-ன் தாய் T. T-யின் மகன் S எனில், கீழ் உள்ளவற்றுள் எந்த கூற்று உண்மையானது?
(a) Q-வின் சகோதரன் T
(b) P-யின் சகோதரின் மகன் S
(c) Q மற்றும் S சகோதரிகள்
(d) P-யின் தாய் வழி மாமா S
(e) P-யின் தாத்தா R

25. B-யின் சகோதரன் A. C-யின் சகோதரன் B. A-யின் தந்தை D. இந்த மூன்று வாக்கியங்களைக் எடுத்துக் கொண்டால், கீழே உள்ளவற்றில் எது நிச்சயமாக சரி?
(a) A-யின் சகோதரன் B (b) D-யின் மகன் B
(c) C-யின் சகோதரன் A (d) A-யின் சகோதரன் C
(e) A, B மற்றும் C மூவரும் D-யின் குழந்தைகள்

26. X-இன் தந்தை A. Y-யின் தாய் B. X மற்றும் Z-ன் சகோதரி Y. கீழ் உள்ளவற்றுள் எந்த வாக்கியம் மிகவும் சரியானது அல்ல? **(Section Officers, 2004)**
(a) Z-ன் தாய் B (b) Z-ன் சகோதரி X
(c) A-யின் மகன் Y (d) B-க்கு மகள் இல்லை
(e) A-யின் மனைவி B

27. P-யின் தந்தையான Q, B-யின் தந்தைவழி பெரியப்பா (அ) சித்தப்பா. மற்றும் A-யின் கணவன். M, P-யின் தந்தைவழி பெரியப்பா (அ) சித்தப்பா. எனில், B-க்கு A என்ன உறவு? **(Bank P.O. 2004)**
(a) மாமா மகன் (b) அத்தை (c) தாய்
(d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றுள் எதுவுமில்லை

28. ஷோபா ஆஷிஷின் சகோதரி மகன். ஆஷிஷின் தாய் பிரியா. ப்ரியாவின் தாய் கமலா. கமலாவின் கணவன் ஹரி. ஹரியின் மாமியார் கிருஷ்ணா. எனில், ஹரிக்கு ஷோபா என்ன உறவு? **(C.P.O. 2005)**
(a) மகள் (b) கொள்ளுப் பேத்தி
(c) சகோதரனின் பேத்தி (d) கொள்ளுப் பேரனின் மகள்

29. அசோக்கின் மைத்துனியான வீணாவின் மாமியார் கல்யாணி அசோக்கின் ஒரே சகோதரனான சுதீப்பின் தந்தை தீரஜ். எனில், அசோக்கிற்கு கல்யாணி என்ன உறவு? **(Bank P.O. 1999)**
(a) மாமா மகள் (b) மனைவி
(c) மாமியார் (d) அத்தை
(e) இவற்றில் எதுவுமில்லை

30. A, B, C, D, E மற்றும் F ஆகிய ஆறு நபர்களைக் கொண்ட ஒரு குடும்பத்தில் உறுப்பினர்களுக்கிடையே உள்ள உறவு முறையை ஆராயவும். **(Civil Services, 2000)**
1. ஆண் உறுப்பினர்களின் எண்ணிக்கை பெண் உறுப்பினர்களின் எண்ணிகைக்கு சமம்.
2. A மற்றும் E, F-ன் மகன்கள்
3. ஒரு பையன் மற்றும் ஒரு பெண்ணிற்கு தாய் D
4. A-யின் மகன் B.

5. தற்பொழுது அந்தக் குடும்பத்தில் ஒரு திருமணமான தம்பதி உள்ளனர்.

மேலே உள்ள தகவல்களை வைத்து கீழே கொடுக்கப்பட்டுள்ள எந்த அனுமானம் சரியாகும்?

(*a*) *A B* மற்றும் *C* மூவரும் பெண்கள்

(*b*) *D*-யின் கணவன் *A*

(*c*) *F*-ன் பேத்தி *D*

(*d*) *E* மற்றும் *F*, *D*-யின் குழந்தைகள்

31. *Q* மற்றும் *R*-ன் சகோதரன் *P*. *R*-ன் தாய் *S*. *P*-யின் தந்தை *T*. கீழே உள்ளவற்றுள் எது கண்டிப்பாக சரி அல்ல?

(*a*) *Q*-வின் தந்தை *T* (*b*) *P*-யின் தாய் *S*

(*c*) *S*-யின் மகன் *P* (*d*) *S*-யின் கணவன் *T*

(*e*) *T*-யின் மகன் *Q*

32. *N* மற்றும் *X*-ன் சகோதரன் *K*. *N*-ன் தாய் *Y*, மற்றும் *K*-யின் தந்தை *Z*. கீழே உள்ள வாக்கியங்களில் எது கண்டிப்பாக சரி அல்ல?

(*a*) *Z*-ன் மகன் *K* (*b*) *Z*-ன் மனைவி *Y*

(*c*) *Y*-யின் மகன் *K* (*d*) *X*-ன் தந்தை *Z*

(*e*) *X*-ன் சகோதரன் *N*

குறிப்புகள் (கேள்வி 33–37): கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கவும்: **(M.A.T. 2005)**

A, *B*, *C*, *D*, *E* மற்றும் *F* ஆகிய ஆறு நபர்கள் உள்ளனர். *F*-ன் சகோதரி *C*. *E*-ன் கணவனின் சகோதரன் *B*. *D*-யானவர் *A*-யின் தந்தையும், *F*-ன் தாத்தாவும் ஆவார். அந்த குழுவில் மூன்று தந்தைகள், மூன்று சகோதரர்கள் மற்றும் ஒரு தாய் உள்ளனர்.

33. அவர்களுள் யார் தாய்?

(*a*) *A* (*b*) *B* (*c*) *D* (*d*) *E*

34. *E*-யின் கணவன் யார்?

(*a*) *B* (*b*) *C* (*c*) *A* (*d*) *F*

35. அந்த குழுவில் எத்தனை ஆண் நபர்கள் உள்ளனர்?

(*a*) ஒன்று (*b*) இரண்டு (*c*) மூன்று (*d*) நான்கு

36. *E*-க்கு *F* என்ன உறவு?

(*a*) மாமா (*b*) கணவன்

(*c*) மகன் (*d*) மகள்

37. கீழ் உள்ளவற்றுள் எது சகோதரர்களின் குழு?

(*a*) *ABF* (*b*) *ABD* (*c*) *BFC* (*d*) *BDF*

குறிப்புகள் (கேள்வி 38–41): கொடுக்கப்படுள்ள தகவல்கள் கவனமாகப் படித்து கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடையளிக்கவும்: **(M.A.T. 2003)**

வெவ்வேறு பாலினம் கொண்ட *B* மற்றும் *D* ஆகிய இரண்டு குழந்தைகளின் தந்தை *A*.

B-யின் துணை *C*.

D-யைப் போல் அதே பாலினம் உடையவர் *E*.

B மற்றும் *C*-க்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். *B*-யைப் போல் அதே பாலினம் உடையவர் *F*. மற்றும் *C*-யைப் போல் அதே பாலினம் உடையவர் *G*.

E-ன் தாய் *H*. அவர் *L*-ஐ திருமணம் செய்து கொண்டுள்ளார். *M*-ன் தாயான *D*-க்கு சகோதரி *H*.

E மற்றும் *E*-யின் துணை *I* ஆகியோருக்கு *J* மற்றும் *K* ஆகிய இரண்டு குழந்தைகள் உள்ளனர். இருவரும் *I*-யின் அதே பாலினம் கொண்டவர்கள்.

எந்த ஒரு நபரும் ஒரு முறைக்கு மேல் திருமணம் செய்து கொள்ளவில்லை. எந்த ஒரு குழந்தையும் திருமணமாகாத ஒருவருக்கு பிறக்கவில்லை.

திருமணங்களில் உள்ள கட்டுபாடுகளானது, சகோதர சகோதரியுடன் திருமணம், நேரடி சந்ததியினருடன் திருமணம், ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவருடன் திருமணம் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.

38. விதிகளின்படி *D* யாரை திருமணம் செய்து கொள்ளலாம்?

(*a*) *F* மட்டும் (*b*) *G* மட்டும்

(*c*) *J* மட்டும் (*d*) *F*, *J* அல்லது *K*

39. *F* மற்றும் *K*-யின் பெற்றோர் மற்றும் அவர்களின் உடன் பிறப்புகளின் தலைமுறையில் ஆண்களை விட பெண்கள் அதிகம், எனில், கீழ் உள்ளவற்றில் எது சரி?

(*a*) *K* மற்றும் *G* ஒரே பாலினத்தவர்கள்

(*b*) *D*-யைப் போல் அதே பாலினம் கொண்டவர் *A*

(*c*) *J* ஒரு ஆண்

(*d*) *F* மற்றும் *K*-யின் தலைமுறையில் ஆண்களை விட பெண்கள் அதிகம்.

40. *F* ஆனவர்

(*a*) *G*-யின் சகோதரி

(*b*) *D*-யின் சகோதரனின் மகன் (அ) மகள்

(*c*) *G*-யின் சகோதரன்

(*d*) *B*-யின் மகள்

41. *L* மற்றும் *H* விவாகரத்து ஆனவர்கள் எனில், *H* யாரை திருமணம் செய்யலாம்?

I. *D* மட்டும் II. *F* III. *D* அல்லது *G*

(*a*) I மட்டும் (*b*) II மட்டும் (*c*) III மட்டும்

(*d*) II அல்லது III, ஆனால் இரண்டையும் அல்ல

குறிப்புகள் (கேள்வி 42–44): கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை கவனமாகப் படித்து பின் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கவும்: **(M.A.T. 2005)**

மத்தியப் பிரதேசத்தில் உள்ள பாஸ்டர் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில், பழங்குடி இனத்தை சேர்ந்த இரண்டு பிரிவு மக்கள் மட்டுமே வசிக்கின்றனர். முதல் பிரிவு வகை *A* எனவும், மற்றொரு பிரிவு வகை *B* எனவும் அறியப்படுகிறது. இந்த இரண்டு பிரிவு மக்களைத் தவிர அங்கு வேறு எவரும் வசிப்பதில்லை. இந்த இரு பிரிவினரின் நடவடிக்கைகளும் சமூக நடத்தை விதிமுறைகளின் அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது. பழங்குடியினரின் ஒவ்வொரு நபரும் அந்த விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். அவர்கள் இதில் ஸ்திரமாக இருக்கிறார்கள்.

திருமணம் என்று வரும்பொழுது கீழே கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் பின்பற்றப்படவேண்டும்.

(A) A வகையிலுள்ள மனிதர்கள் அதே வகையைச் சேர்ந்த யாரையும் திருமணம் செய்ய முடியாது., அவர்கள் B வகையை சேர்ந்தவரை திருமணம் செய்ய முடியும்.

(B) திருமணமான உடனே ஒவ்வொரு ஆண் உறுப்பினரும் தான் பிறந்து வளர்ந்த பிரிவிலிருந்து உறுப்பினர் பதவியிலிருந்து நிறுத்தப்பட்டு, அவர் மனைவியின் எந்த பிரிவைச் சார்ந்தவரோ அந்த பிரிவிற்கு தானாகவே உறுப்பினராகிவிடுவார்.

(C) பெண்களைப் பொறுத்தமட்டில் திருமணத்திற்குப் பிறகும் தனது பிரிவிலேயே நீடிப்பார்கள்.

(D) குழந்தை பிறந்தவுடன் தனது தாயாரின் பிரிவிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(E) ஒரு ஆண் உறுப்பினர் மனைவியை இழக்கும் பொழுது அல்லது விவாகரத்து பெறும் பொழுது அவர் தான் பிறந்து வளர்ந்த பிரிவிற்கே சேர்ந்தவராவார்.

(F) சமூக சட்டதிட்டங்களின்படி எந்த ஒரு நபரும் ஒருவருக்கு மேற்பட்ட நபர்களை திருமணம் செய்ய முடியாது.

42. B பிரிவை சேர்ந்த எந்த ஒரு பெண்ணிற்கும்,

(P) பிரிவு A-யில் பிறந்த தாத்தா இருக்க முடியும்

(Q) பிரிவு A-யில் பிறந்த பாட்டி இருக்க முடியும்

(a) (P) மட்டும் சரியாக இருக்க முடியும்

(b) (Q) மட்டும் சரியாக இருக்க முடியும்

(c) (P) அல்லது (Q) சரியாக இருக்க முடியும்

(d) (P)-யும் சரியாக இருக்க முடியாது. (Q)-வும் சரியாக இருக்க முடியாது

(e) (P) மற்றும் (Q) இரண்டுமே சரியாக இருக்க முடியும்

43. B பிரிவில் பிறந்த ஒரு பையனுக்கு (பையன் மற்றும் அவன் மனைவி இருவருக்குமே மண்மான அல்லது மணமாகாத சகோதரர்கள் இருக்கலாம்),

(a) அவன் மகள் B பிரிவில் இருக்கலாம்

(b) A பிரிவில் பிறந்த மருமகன் இருக்கலாம்

(c) எந்த பிரிவிலிருத்தும் மாமா இருக்கலாம்

(d) B பிரிவில் விவாகரத்தான மகன் இருக்கலாம்

(e) A பிரிவில் பிறந்த மருமகள் இருக்கலாம்

44. சமூக சட்டங்களின் படி கீழே உள்ளவற்றில் எந்த திருமணம் அங்கீகரிக்கப்பட மாட்டாது?

(a) B பிரிவில் பிறந்த ஒரு பெண் தனது தாயின் சகோதரனை மணப்பது

(b) மனைவியை இழந்த ஒருவர் தனது மனைவியின் சகோதரியை மணப்பது

(c) B பிரிவை சேர்ந்த ஒரு ஆண் தனது தந்தையின் சகோதரியை மணப்பது

(d) A பிரிவில் விவாகரத்தான ஒரு ஆண் கணவனை இழந்த தன் சகோதரனின் மனைவியை மணப்பது

(e) கணவனை இழந்த ஒரு பெண் தனது மகளின் விவாகரத்தான முன்னாள் கணவனை மணப்பது

விடைகள் (பயிற்சி 5B)

1. (d)	2. (c)	3. (a)	4. (d)	5. (a)	6. (b)	7. (d)	8. (c)	9. (b)	10. (e)
11. (a)	12. (c)	13. (c)	14. (c)	15. (a)	16. (d)	17. (d)	18. (d)	19. (d)	20. (b)
21. (c)	22. (a)	23. (b)	24. (d)	25. (d)	26. (c)	27. (c)	28. (b)	29. (e)	30. (b)
31. (e)	32. (e)	33. (d)	34. (c)	35. (d)	36. (c)	37. (a)	38. (c)	39. (c)	40. (b)
41. (d)	42. (b)	43. (c)	44. (a)						

தீர்வுகள் (பயிற்சி 5B)

1. அந்த குடும்பத்தில் உள்ள பெண்கள் முறையே, தாய், மணமான மூன்று மகன்களின் மனைவிகள், திருமணமாகாத சகோதரி மற்றும் இரண்டு மகன்களின் தலா 2 மகள்கள்.

$\therefore$ பெண்களின் எண்ணிக்கை = $(1 + 3 + 1 + 2 \times 2) = 9$.

2. சகோதரனின் மகனும் தன்னுடைய மகனே.

எனவே, 'X'-ன் மகன் 'Y'-யின் மகன். அதாவது, Y-யின் பேரன் X.

3. E-யின் சகோதரன் D மற்றும் B-யின் மகள் E.

இதிலிருந்து B-யின் மகன் D என்பது தெரிகிறது. மேலும், B-யின் தாய் A. ஆகையால், D-யின் பாட்டி A.

4. B-யின் மகள் E மற்றும் E-ன் சகோதரன் D. எனவே, B-யின் மகன் D. மேலும் B-யின் சகோதரி A. எனவே, D-யின் அத்தை A.

5. A மற்றும் B கணவன் மற்றும் மனைவி. X மற்றும் Y சகோதரர்கள். மற்றும் A-யின் சகோதரன் X என்பதால் Y-யும் A-யின் சகோதரனே. எனவே Y, B-யின் மைத்துனன்.

6. தீபக்கின் சகோதரன் அணில் மற்றும் ப்ரேமின் மகன் தீபக். ஆகையால், ப்ரேமின் மகன் அணில், ப்ரேமின் தந்தை பிமல். எனவே, பிமலில் பேரன் அணில்.

7. P-யின் கணவன் P மற்றும் P-யின் மாமியார் E. ஆகையால், E-ன் மகன் B. மேலும் D-யின் மனைவி E. என்வே, D-யின் மகன் B.

8. *C*-யின் சகோதரன் *G* மற்றும் *A*-யின் மகள் *C*. ஆகையால் *A*-யின் மகன் *G*. மேலும், *A*-யின் சகோதரன் *F*. எனவே, *G*-யின் மாமா *F*.

9. *C*-யின் மகள் *B* மற்றும் *P*-யின் மருமகள் *C*. எனவே, *B*-யின் தாத்தா *P*. மேலும், *B*-யின் மாமா *A*. அதாவது, *B*-யின் தந்தையின் சகோதரன் *A*. எனவே, *P*-யின் மகன் *A*.

10. *P*-யின் தந்தை *Q*-வின் மகன். ஆகையால், *P*-யின் தாத்தா *Q*. *P*-யின் தந்தை வழி பெரியப்பா (அ) சித்தப்பா *M*. ஆகையால், *P*-யின் தந்தையின் சகோதரன் *M*. எனவே, *M* என்பவரும் *Q*-வின் மகன் என்பது புரிகிறது. *Q*-வின் சகோதரன் *N*. எனவே, *P*-யின் பெரியப்பா (அ) சித்தப்பா *N*.

11. *B*-யின் மகன் *A* மற்றும் *B*-யின் சகோதரியின் மகன் *D*. எனவே *D*-யின் அத்தை மகன் *A*.

12. *C*-யின் மகள் *E* மற்றும் *C*-யின் மகன் *D*. ஆகவே, *D*-யின் தாய்வழி மாமா *F*, *E*-க்கும் தாய்வழி மாமா ஆகும். எனவே, *F*-ன் சகோதரி மகள் *E*.

13. *D*-யின் தாய் வழி மாமா *F* எனில், *F*, *D*-யின் தாயின் சகோதரன். அதாவது, *F*, *C*-யின் சகோதரன். *C*, *B*-யின் சகோதரி. ஆகையால், *A*-யின் தாயான *B*-க்கு *F* சகோதரன். எனவே, *A*-க்கு *F* தாய்வழி மாமா. ஆகையால் *A* மற்றும் *B* இருவரும் *F*-ன் சகோதரியின் மகன்கள். *F*-க்கு இரண்டு சகோதரி மகன்கள் உள்ளனர்.

14. *N*-ன் சகோதரன் *M* மற்றும் *N*-ன் சகோதரன் *B*. ஆகையால், *B*-யின் சகோதரன் *M*.

15. ரவியின் சகோதரன் தீபக். ரவி, ரீனாவின் மகன். எனவே, தீபக், ரீனாவின் மகன்.

16. *R*-ன் மகளான *S*-ன் சகோதரன் *T*. ஆகையால் *T* மற்றும் *S* இருவரும் *R*-ன் குழந்தைகள். *R*-ன் சகோதரன் *Q*. எனவே, *T* மற்றும் *S* இருவரும் *Q*-வின் சகோதரனின் மகன்கள்.

17. *B*-யின் மகள் *C* மற்றும் *B*-யின் மகன் *D*. ஆகையால் *C*-யின் சகோதரன் *D*. *E* ஒரு ஆண். அவர் *C*-யை மணந்து கொண்டுள்ளார். எனவே, *C*-யின் கணவன் *E*. *K*-யின் சகோதரன் *D*. எனவே, *E*-யின் மைத்துனன் *D*.

18. *C*-யின் தந்தை *A* மற்றும் *D*-யின் சகோதரி *C*. ஆதலால், *D*-யின் தந்தை *A*. ஆனால் *B*-யின் மகன் *D*. எனவே, *B* என்பவர் *D*-யின் தாய் மற்றும் *A*-யின் மனைவி. மேலும், *A*-யின் சகோதரன் *E*. ஆகவே, *B*, *E*-யின் மைத்துனி.

19. *S* என்பவர் *P*-யின் மகள் மற்றும் *T*-யின் சகோதரி. ஆகவே, *P*-யின் மகள் *T*. *P*-யின் மகள் *M*-ன் சகோதரி ஆவார். எனவே, *M* என்பவர் *P*-யின் மகன் (அ) மகள். *M*-ன் பேத்தி *T* என்பது தெளிவாகிறது. ஆகையால் *M* என்பவர் *T*-யின் தாத்தா (அ) பாட்டி.

20. *B*-யின் மருமகன் *D* மற்றும் அவர் *A*-யின் மைத்துனனும் ஆகும். இதன் அர்த்தமாவது *B*-யானவர் *D*-யின் மனைவியின் தந்தை/தாய், மற்றும் *A*-யானவர் *D*-யின் மனைவியின் சகோதரனும் ஆவார். எனவே, *B*-யின் மகன் *A*.

21. *B*-யின் மகன் *D*, *C*-யின் சகோதரன் *B* மற்றும் *C*-ன் தந்தை *A*. *D* மற்றும் *A*-யின் தந்தை *B* எனவும் *B*-யின் தந்தை *A* எனவும் இதன் மூலம் தெரிகிறது. ஆகையால், *D*-யின் தாத்தா *A*. *A*-யின் துணை *F* என்பதால், *D*-யின் பாட்டி *F*.ஆவார்.

22. மேலே விளக்கப்பட்டுள்ளபடி, *A*-யின் மகன் *B* மற்றும் *A*-யின் துணை *F*. எனவே *F*-ன் மகன் *B*.

23. *A*-ன் சகோதரனின் மகன் *C* என்பது. *C*-யானவர் *A*-யின் தந்தையின் சகோதரனின் மகன். அதாவது, *C*-யானவர் *A*-யின் மாமா (அ) அத்தை மகன் (அ) மகள். *D*-யும் *A*-யின் மாமா (அ) அத்தை மகன் (அ) மகள். எனவே, *D* யானவர் *C*-யின் உடன்பிறந்த சகோதரன் (அ) சகோதரி. ஆனால் *D*, *C*-யின் சகோதரன் அல்ல. எனவே *D*, *C*-யின் சகோதரியாகும்.

24. *Q* மற்றும் *R* சகோதரிகள். ஆகவே, *R*-ன் தாய் *T* என்பதால் *Q* மற்றும் *R* இருவரின் தாயும் *T* ஆவார். *T*-யின் மகன் *S* என்பதால் *Q*-வின் சகோதரன் *S*. எனவே *Q*-வின் மகன் *P* என்பதன் அர்த்தம் *S* என்பவர் *Q*-வின் தாய்வழி மாமா.

25. *B*-யின் சகோதரன் *A* மற்றும் *C*-யின் சகோதரன் *C*. ஆகையால், *C* என்பவர் *A*-யின் சகோதரன் (அ) சகோதரி ஆவார்.

26. *X*-ன் தந்தை *A* மற்றும் *X*-ன் சகோதரி *Y*. ஆகையால், *Y* என்பவர் *A*-யின் மகள்.

27. *Q* என்பவர் *B*-யின் தந்தைவழி பெரியப்பா (அ) சித்தப்பா என்பது *Q*, *P*-யின் தந்தையின் சகோதரன் ஆவார். *Q*-வின் மகன் *P*. ஆதலால், *B*-யின் தந்தை மற்றும் *P*-யின் தந்தை இருவரும் சகோதரர்கள்.
மேலும், *M* என்பவர் *P*-யின் தந்தைவழி பெரியப்பா (அ) சித்தப்பா எனில் *M* என்பவர் *P*-யின் தந்தையின் சகோதரன் ஆவார். ஆகவே, *B*-யின் தந்தை *M*. *M*-ன் மனைவி *A* என்பதால் *B*-ன் தாய் *A*.

28. ஷோபா, ஆஷிஷின் சகோதரியின் மகள் எனில், ஆஷிஷ், ஷோபாவின் தாய் மாமா ஆவார். ஆஷிஷின் தாய் பிரியா. ஆகவே, பிரியா, ஷோபாவின் பாட்டி. பிரியாவின் தந்தை ஹரி. எனவே, ஹரியின் கொள்ளுப் பேத்தி ஷோபா.

29. அசோக்கின் மைத்துனி வீணா என்பதன் அர்த்தம் வீணாவின் கணவனின் சகோதரன் அசோக். ஆனால் அசோக்கிற்கு சுதீப் என்கிற ஒரே சகோதரன் மட்டுமே உள்ளார். எனவே, சுதீப், வீணாவின் கணவன் ஆவார். வீணாவின் மாமியார் கல்யாணி எனில், வீணாவின் கணவனின் தாய் கல்யாணி. அதாவது, சுதீப். சுதீப்பின் சகோதரன் அசோக் என்பதால், கல்யாணி அசோக்கின் தாய்.

30. அந்த குடும்பத்தில் மூன்று ஆண்கள் மற்றும் மூன்று பெண்கள் உள்ளனர் என்பது தெளிவு. *A*, *E*, மற்றும் *B* ஆகியோர் மகன்கள் என்பதால் அவர்கள் ஆண்கள். ஆகவே, *C*, *D* மற்றும் *F* ஆகியோர் பெண்கள். *D*-க்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர். எனவே, *A* மற்றும் *D* ஆகியோர் தம்பதியாவர். அவர்களுக்கு *B* மற்றும் *C* என இரண்டு குழந்தைகள் உள்ளனர். எனவே, *D*-ன் கணவன் *A*.

31. P, Q, R ஆகியோர் ஒரே பெற்றோரின் குழந்தைகள். ஆகையால், R-ன் தாயான S மற்றும் P-யின் தந்தையான T ஆகியோர் இந்த மூன்று குழந்தைகளின் தாய் மற்றும் தந்தை. எனினும் Q என்பவர் ஆணா அல்லது பெண்ணா என குறிப்பிடப்படவில்லை. ஆகையாரல் (*e*) கண்டிப்பாக சரியாக இருக்காது.

32. N மற்றும் X-ன் சகோதரன் K. N-ன் தாயான Y மற்றும் K-ன் தந்தையான Z ஆகியோர் N, K மற்றும் X ஆகியோரின் தாய் மற்றும் தந்தை. இவர்களுள் K ஏன்பவர் ஆண். எனவே Y மற்றும் Z-ன் மகன் K. Z-ன் மனைவி Y. ஆனால், N என்பவர் X-ன் சகோதரன் (அ) சகோதரி.

கேள்விகள் 33–37:

D என்பவர் A-யின் தந்தை மற்றும் F-ன் தாத்தா. எனவே, F-ன் தாத்தா A. ஆகையால் D மற்றும் A இருவரும் இரண்டு தந்தைகள். F-ன் சகோதரி C. எனவே A-யின் மகள் C. குடும்பத்தில் ஒரே ஒரு தாய் உள்ளதால் A-யின் மனைவி E என்றும், அவர் C மற்றும் F-க்கு தாய் என்றும் தெளிவாகிறது. ஆகையால், A-யின் சகோதரன் B குடும்பத்தில் மூன்று சகோதரர்கள் உள்ளனர். C-யின் சகோதரன் F.

33. E என்பவர் தாய் என்பது தெளிவு.

34. E-யின் கணவன் A என்பது தெளிவு.

35. தந்தையான A ஒரு ஆண். சகோதரனான B ஒரு ஆண். சகோதரியான C ஒரு பெண். தாத்தாவான D ஒரு ஆண். தாயான E ஒரு பெண். சகோதரனான F ஒரு ஆண். எனவே குடும்பத்தில் நான்கு ஆண்கள் உள்ளனர்.

36. E-ன் மகன் F என்பது தெளிவு.

37. B மற்றும் A சகோதரர்கள் C-யின் சகோதரன் F. எனவே, A, B, F ஆகிய மூவரும் சகோதரர்கள்.

கேள்விகள் 38–41:

B மற்றும் D-யின் தந்தை A. D-யின் தாய் M. எனவே A மற்றும் M கணவன் மற்றும் மனைவி. அவர்களுக்கு B மற்றும் D என இரண்டு குழந்தைகள் உள்ளனர். B-யின் துணை C மற்றும் அவர்களுக்கு F, G என இரு குழந்தைகள் உள்ளனர்.

M-ன் சகோதரி H மற்றும் H-ன் கணவன் L. H மற்றும் L-ன் குழந்தை E. E-ன் துணை I. E மற்றும் I-க்கு J, K இரு குழந்தைகள் உள்ளனர்.

38. விதிகளின் படி, A, M, B, C, D, F மற்றும் G ஆகிய நபர்களுக்குள் யாரும் ஒருவரை மற்றொருவர் மணந்து கொள்ள முடியாது.

    மேலும், H, L, E மற்றும் I ஆகியோர் திருமணமானவர்கள் மற்றும் ஒரே நேரத்தில் எந்த ஒரு நபரும் ஒன்றுக்கு மேற்பட்டவரை திருமணம் செய்ய முடியாது. எனவே D-யானவர் J அல்லது K-வை மட்டுமே திருமணம் செய்ய முடியும்.

39. F மற்றும் K-ன் பெற்றோர் மற்றும் அவர்களது உடன்பிறந்தவர்களின் தலைமுறை (B மற்றும் C), D மற்றும் (E மற்றும் I) ஆகியோர்களைக் கொண்டது. D மற்றும் E இருவரும் ஒரே பரலினத்தவர்கள். பெண்கள் அதிகமாக இருக்க வேண்டுமானால், இவர்கள் இருவரும் பெண்களாக இருக்க வேண்டும். எனில், B ஆணாக இருந்தால் C பெண்ணாக இருக்க வேண்டும், மற்றும் I ஆணாக இருக்கலாம். F ஆணாக இருக்கலாம் (B-ன் அதே பாலினம்), G பெண்ணாக இருக்கலாம் (C-யின் அதே பாலினம்), J மற்றும் K இருவரும் ஆண்களாக இருக்கலாம். (I-யின் அதே பாலினம்). எனவே, F மற்றும் K-யின் தலைமுறையில் பெண்களை விட ஆண்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கலாம்.

40. B-யின் சகோதரன் D மற்றும் B-யின் மகன் அல்லது மகள் F. எனவே, F, D-யின் சகோதரனின் மகன் (அ) மகள்.

41. H ஆனவர் E, I, J மற்றும் K இவர்களில் யாரையும் திருமணம் செய்து கொள்ள முடியாது (நேரடி சந்ததியினர்). மேலும், A, M, B மற்றும் C திருமணமானவர்கள். ஆகையால், F, G மற்றும் D ஆகியோரை கருத்தில் கொள்ள வேண்டும். F மற்றும் G வெவ்வேறு பாலினத்தவர்கள். மேலும், B மற்றும் C வெவ்வேறு பாலினத்தவர்கள், மற்றும் B மற்றும் D ஆகியோரும் வெவ்வேறு பாலினத்தவர்கள். எனவே, C மற்றும் D ஒரே பாலினத்தவர்கள். C-யின் அதே பாலினம் G. ஆகவே, G மற்றும் D ஒரே பாலினத்தவர்கள். எனவே, (D அல்லது G)-யையோ அல்லது F-யையோ, அவர்களில் யார் ஆணோ அவரை H திருமணம் செய்து கொள்ளலாம்.

42. B பிரிவு பெண்ணின் தாய் B பிரிவை சேர்த்தவர். எனவே, அவரின் தந்தை A பிரிவை சேர்ந்தவர். எனவே, அவளின் தந்தையின் தாய் A பிரிவை சேர்ந்தவர் மற்றும் தந்தையின் தந்தை B பிரிவில் பிறந்தவர். ஆகையால், தாத்தா B பிரிவை சேர்ந்தவர் மற்றும் பாட்டி A பிரிவை சேர்ந்தவர்.

43. B பிரிவில் பிறந்த ஆண் A பிரிவு பெண்ணை திருமணம் செய்து கொள்வான். ஆகையால், மகள் A பிரிவைச் சேர்ந்தவள் ஆவாள். எனவே, (*a*) தவறு.

    ஆணின் மகள் A பிரிவை சேர்ந்தவள் என்பதால், அவள் B பிரிவை சேர்ந்த ஆணை திருமணம் செய்து கொள்வாள். ஆகையால் மருமகன் B பிரிவை சேர்ந்தன். ஆகையில் (*b*) தவறு.

    B பிரிவில் பிறந்த ஆண் B பிரிவில் பிறந்த தாயையும், A பிரிவில் பிறந்த தந்தையையும் கொண்டிருப்பான். ஆகையால், அவன் மாமா (அ) பெரியப்பா (அ) சித்தப்பா (அதாவது, தாயின் சகோதரன் அல்லது தந்தையின் சசோதரன்) A பிரிவை அல்லது B பிரிவை சேர்ந்தவராக இருக்கலாம். எனவே, (*c*) சரியானது.

44. A பிரிவில் பிறந்த ஒரு பெண்ணின் தாயும் B பிரிவைச் சேர்ந்தவர். தாயின் சகோதரனும் B பிரிவைச் சேர்ந்தவர். எந்த ஒரு பிரிவிலும் அதே பிரிவைச் சேர்ந்த நபரை யாரும் திருமணம் செய்து கொள்ள முடியாது. எனவே, வாக்கியம் (*a*) அனுமதிக்கப்பட மாட்டாது.

வகை 3: குறியிடப்பட்ட உறவுகள்

இந்த கேள்விகளில், +, −, ×, ÷, ✶, ★, $, @, □, ○, £ மற்றும் பல குறிப்பிட்ட குறியீடுகளில் உறவுமுறைகள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இந்த குறியீடுகளை தேர்வு எழுதுபவர் நன்றாக கவனித்து ஒரு குழுவில் உள்ள நபர்களுக்கிடையே உள்ளவர்களின் உறவு முறைகளை ஆராய வேண்டும் அல்லது, உறவு முறைகளை குறியீட்டு வடிவில் வெளிப்படுத்த வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா. 1: *கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாக படித்து பின் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடையளிக்கவும்:*

'$A + B$' என்பது A-யின் மகன் B; '$A - B$' என்பது B-யின் மனைவி A; '$A \times B$' என்பது B-யின் சகோதரன் A; '$A \div B$' என்பது B-யின் தாய் A மற்றும் '$A = B$' என்பது B-யின் சகோதரி A.

1. $P + R - Q$ என்பது என்ன?

(*a*) P-யின் தந்தை Q (*b*) P-யின் மகன் Q (*c*) P-யின் மாமா Q (*d*) P-யின் சகோதரன் Q

2. $P \times R + Q$ என்பது என்ன?

(*a*) R-யின் தந்தை P (*b*) Q-யின் தந்தை P (*c*) Q-யின் மாமா P (*d*) Q-யின் சகோதரனின் மகன் P

3. $P = R + Q$ என்பது என்ன?

(*a*) Q-வின் அத்தை P
(*b*) Q-வின் மகள் P
(*c*) Q-வின் சகோதரியின் மகன் P
(*d*) Q-வின் சகோதரி P

4. $P = R + Q$ என்பது என்ன?

(*a*) Q-வின் அத்தை P
(*b*) Q-வின் சகோதரி P
(*c*) P-யின் சகோதரியின் மகள் Q
(*d*) P-வின் மகள் Q

தீர்வு.

1. $P + R - Q$ என்பது R-ன் மகன் P. மற்றும் Q-வின் மனைவி R. அதாவது., P-யின் தந்தை Q.
எனவே, விடை (*a*).

2. $P \times R \div Q$ என்பது P-யானவர் R-ன் சகோதரன் மற்றும் Q-வின் தாயும் ஆவார். அதாவது, Q-வின் மாமா P.
எனவே, விடை (*c*).

3. $P = R + Q$ என்பது R-ன் சகோதரி P மற்றும் Q-வின் மகன் R. அதாவது, Q-வின் மகள் P.
எனவே, விடை (*b*).

4. $P = R \div Q$ என்பது R-ன் சகோதரி P. Q-வின் தாய் R. அதாவது, Q-வின் அத்தை P.
எனவே, விடை (*a*).

எ.கா. 2: *$A \$ B$ என்பது B-யின் தந்தை A, $A \star B$ என்பது B-யின் தாய் A, $A @ B$ என்பது B-யின் மனைவி A எனில், கீழே உள்ளவற்றுள் N-ன் பாட்டி M என்பது உண்மையாகும்?* **(E.P.F.O.S.S.A. 2004)**

(*a*) $M \star T \$ N @ R$
(*b*) $M \star T \$ R @ N$
(*c*) $M \star R \$ T @ N$
(*d*) $M \star R @ T @ N$
(*e*) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. N-ன் பாட்டி M என்பது M என்பவர் (T என்று சொல்லலாம்) N-ன் தந்தையின் தாய். அதாவது, $M \star T \$ N$. ஆகவே, விடை (*a*).

எ.கா. 3: *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடையளிக்கவும்:* **(Bank P.O. 2005)**

(*i*) '$A \times B$' என்பது B-யின் சகோதரன் A;
(*ii*) '$A \div B$' என்பது A-யின் தந்தை B;
(*iii*) '$A + B$' என்பது B-யின் சகோதரி A;
(*iv*) '$A - B$' என்பது B-யின் தாய் A.

1. K-ன் தந்தையின் சகோதரன் Q என்பது கீழே உள்ளவற்றில் எது சரி?

(A) $K \times P \div M \times Q$

(B) $K \times B \div N \times Q \times D$

(C) $Q \times L \div R \times K$

(a) (A) மட்டும் (b) (B) மட்டும் (c) (C) மட்டும் (d) (A) மற்றும் (B)

(e) இவற்றில் எதுவுமில்லை

2. மேலே உள்ள கேள்விக்கு பதிலளிப்பதற்கு கீழே உள்ளவற்றுள் எது/எவை மிதமிஞ்சியது?

(a) (*i*) மட்டும் (b) (*ii*) மட்டும் (c) (*iii*) மட்டும் (d) (*iii*) மற்றும் (*iv*)

(e) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு.

1. (A) '$K \times P \div M \times Q$' என்பது M-ன் தந்தையான P-யின் சகோதரன் K. Q-வின் சகோதரன் M. எனவே, Q-வின் சகோதரனான M-ன் குழந்தை K. எனவே, K-யின் தந்தை வழி அத்தை அல்லது பெரியப்பா அல்லது சித்தப்பா Q ஆகும்.

(B) '$K \times B \div N \times Q \times D$' என்பது N-ன் மகனான B-யின் சகோதரன் K. D-யின் சகோதரனான Q-வின் சகோதரன் N. எனவே, K-யின் தந்தை N மற்றும் N-ன் சகோதரன் Q. ஆகையால், K-யின் தந்தை வழி பெரியப்பா (அ) சித்தப்பா Q ஆகும்.

(C) '$Q \times L \div R \times K$' என்பது K-ன் சகோதரனான R-வின் மகன் L-ன் சகோதரன் Q. எனவே, Q-வின் தந்தை R மற்றும் K-வின் சகோதரன் R. ஆகவே, K என்பவர் Q-வின் தந்தைவழி பெரியப்பா (அ) சித்தப்பா (அ) அத்தை ஆவார்.

எனவே, (B) மட்டுமே சரியான உறவு முறையைக் குறிக்கிறது.

எனவே, விடை (b).

2. மேலே உள்ள கேள்விக்கு பதிலளிக்க நாம் (*i*) மற்றும் (*ii*) மட்டுமே பயன்படுத்தினோம். எனவே, (*iii*) மற்றும் (*iv*) மிதமிஞ்சியவை. எனவே, விடை (d).

எ.கா.4: '$P + Q$' என்பது Q-ன் தந்தை P; '$P \times Q$' என்பது Q-வின் சகோதரன் P; '$P - Q$' என்பது Q-வின் தாய் P; எனில், $C - A + B$ என்பதைப் பற்றி கீழ் உள்ளவற்றுள் எது மிகச் சரியானது? (R.R.B. 2005)

(a) A-யின் மகன் B (b) C-யின் மகன் A (c) A-யின் தந்தை B (d) B-யின் தாய் C

தீர்வு. '$C - A + B$' என்பது B-யின் தந்தையான A-யின் தாய் C. இதிலிருந்து A ஒரு ஆண் மற்றும் அவர் C-யின் மகன் என்பதும் தெளிவாகிறது.

எனவே, விடை (b).

பயிற்சி 5C

குறிப்புகள் (*கேள்விகள் 1–3*): *கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை கவனமாகப் படித்து கீழ் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கவும்*:

'$A + B$' என்பது B-யின் மகள் A;

'$A \times B$' என்பது B-யின் மகன் A;

'$A - B$' என்பது B-யின் மனைவி A;

1. $P \times Q - S$ எனில், கீழ் உள்ளவற்றுள் எது சரி?

(a) Q-வின் மனைவி S (b) P-வின் தந்தை S

(c) Q-வின் மகள் P (d) P-வின் தந்தை Q

(e) இவற்றில் எதுவுமில்லை

2. $T - S \times B - M$ எனில், கீழே உள்ளவற்றுள் எது உண்மை அல்ல?

(a) S-வின் தாய் B (b) B-யின் கணவன் M

(c) S-வின் மனைவி T (d) B-யின் மகள் S

(e) B-யின் மகன் S

3. $Z \times T - S \times U + P$ எனில், Z-க்கு U என்ன உறவு?

(a) தாய் (b) பாட்டி

(c) தந்தை (d) கண்டுபிடிக்க முடியாது

(e) இவற்றில் எதுவுமில்லை

4. '$P \$ Q$' என்பது Q-வின் தந்தை P; '$P \# Q$' என்பது Q-வின் தாய் P; '$P * Q$' என்பது Q-வின் சகோதரி P எனில், $N \# A \$ B * D$ என்பதில் D-க்கு N என்ன உறவு? **(S.B.I.P.O. 2000)**

(a) சகோதரியின் மகன் (b) பேரன் (c) பேத்தி

(d) தகவல் போதுமானதாக இல்லை

(e) இவற்றில் எதுவுமில்லை

5. '$P \times Q$' என்பது Q-வின் மகள் P; '$P + Q$' என்பது Q-வின் தந்தை P; '$P + Q$' என்பது Q-வின் தாய் P மற்றும் '$P - Q$' என்பது Q-வின்

சகோதரன் P. எனில், $A + B + C - E \times F$ என்கிற தொடரில் F-க்கு A என்ன உறவு?
(S.B.I.P.O. 2001)

(*a*) தாய் (*b*) அத்தை (*c*) மருமகள் (*d*) மைத்துனி
(*e*) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 6–13): கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை கவனமாகப் படித்து பின் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடையளிக்கவும்:

'$A + B$' என்பது B-யின் தந்தை A; '$A - B$' என்பது B-யின் மனைவி A; '$A \times B$' என்பது B-யின் சகோதரன் A; '$A \div B$' என்பது B-யின் மகள் A.

6. $P \div R + S + Q$ எனில், கீழ் உள்ளவற்றுள் எது சரி?
(*a*) Q-வின் மகள் P (*b*) P-யின் அத்தை Q
(*c*) Q-வின் அத்தை P (*d*) Q-வின் தாய் P

7. $P - R + Q$ எனில், கீழே உள்ளவற்றில் எது சரி?
(*a*) Q-வின் தாய் P (*b*) P-யின் மகள் Q
(*c*) Q-வின் அத்தை P (*d*) Q-வின் சகோதரி P

8. $P \times R \div Q$ எனில், கீழே உள்ளவற்றில் எது சரி?
(*a*) Q-வின் மாமா P (*b*) Q-வின் தந்தை P
(*c*) Q-வின் சகோதரன் P (*d*) Q-வின் மகன் P

9. $P \times R - Q$ எனில், கீழே உள்ளவற்றில் எது சரி?
(*a*) Q-வின் மைத்துனன் P (*b*) Q-வின் சகோதரன் P
(*c*) Q-வின் மாமா P (*d*) Q-வின் தந்தை P

10. $P + R \div Q$ எனில், கீழே உள்ளவற்றுள் எது சரி?
(*a*) Q-வின் சகோதரன் P (*b*) Q-வின் மகன் P
(*c*) Q-வின் கணவன் P (*d*) Q-வின் தந்தை P

11. $P \div R + Q$ எனில், கீழ் உள்ளவற்றுள் எது சரி?
(*a*) Q-வின் தந்தை P (*b*) Q-வின் சகோதரன் P
(*c*) Q-வின் தாய் P (*d*) Q-வின் சகோதரி P

12. $P \times R \div Q$ எனில், கீழே உள்ளவற்றுள் எது சரி?
(*a*) Q-வின் பெரியப்பா (அ) சித்தப்பா மகன் P
(*b*) Q-வின் தந்தை P (*c*) Q-வின் மைத்துனன் P
(*d*) Q-வின் தாத்தா P

13. $P - R \times Q$ எனில், கீழே உள்ளவற்றுள் எது சரி?
(*a*) Q-வின் சகோதரி P (*b*) P-யின் கணவன் Q
(*c*) Q-வின் சகோதரனின் மனைவி (அ) மைத்துனி
(*d*) P-யின் மகன் Q

குறிப்புகள் (கேள்விகள் 14–16): கெடுக்கப்பட்டுள்ள விவரங்களை கவனமாக படித்து, பின் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடையளிக்கவும்:

'$A + B$' என்பது B-யின் மகள் A;
'$A - B$' என்பது B-யின் கணவன் A;
'$A \times B$' என்பது B-யின் சகோதரன் A.

14. $P + Q - R$ எனில், கீழ் உள்ளவற்றுள் எது சரி?
(*a*) P-யின் தாய் R (*b*) P-யின் மைத்துனி R
(*c*) P-யின் அத்தை R (*d*) P-யின் மாமியார் R

15. $P \times Q + R$ எனில், கீழ் உள்ளவற்றுள் எது சரி?
(*a*) R-ன் சகோதரன் P (*b*) R-ன் மாமா P
(*c*) R-ன் மகன் P (*d*) R-ன் தந்தை P

16. $P + Q \times R$ எனில், கீழ் உள்ளவற்றுள் எது சரி?
(*a*) R-ன் சகோதரன் மகன் P
(*b*) R-ன் மகள் P (*c*) R-ன் அத்தை மகள் P
(*d*) R-ன் மருமகள் P

17. '$P - Q$' என்பது Q-வின் தாய் P; '$P \times Q$' என்பது Q-வின் தந்தை P மற்றும் '$P + Q$' என்பது Q-வின் மகள் P. $M - N \times T + Z$ எனில், கீழே உள்ளவற்றுள் எது உண்மையல்ல?
(*a*) N-ன் மகள் T (*b*) Z-ன் மனைவி N
(*c*) Z-ன் மாமியார் M (*d*) M-ன் பேத்தி T

குறிப்புகள் (கேள்விகள் 18–19): கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாக படித்து, பின் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடையளிக்கவும்: (SNAP, 2005)

'$P \# Q$' என்பது Q-வின் தந்தை P;
'$P + Q$' என்பது Q-வின் தாய் P;
'$P - Q$' என்பது Q-வின் சகோதரன் P;
'$P * Q$' என்பது Q-வின் சகோதரி P.

18. $A + B \# C - D$ எனில், D-க்கு A என்ன உறவு?
(*a*) தந்தை (*b*) பாட்டி (*c*) சகோதரி (*d*) தாத்தா

19. கீழே உள்ளவற்றுள் எது E-யின் அத்தை A என்பதை நிருபிக்கிறது?
(*a*) $A + B - C * D \# E$
(*b*) $A \# B * C + D - E$
(*c*) $A * B \# C * D - E$
(*d*) $A - B + C \# D * E$

குறிப்புகள் (கேள்விகள் 20–22): கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களைப் பொறுத்து வினாக்கள் அமைந்துள்ளன: (Bank P.O. 2006)

(*i*) '$P \times Q$' என்பது Q-வின் தந்தை P;
(*ii*) '$P - Q$' என்பது Q-வின் சகோதரி P;
(*iii*) '$P + Q$' என்பது Q-வின் தாய் P;
(*iv*) '$P + Q$' என்பது Q-வின் சகோதரன் P.

20. $B + D \times M + N$ என்கிற கோவையில் B-க்கு M என்ன உறவு?
(*a*) பேத்தி (*b*) மகன்
(*c*) பேரன் (*d*) பேத்தி அல்லது பேரன்
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

21. கீழே உள்ளவற்றுள் F-ன் மகன் J என்பதை நிருபிக்கும்?
(*a*) $J + R - T \times F$ (*b*) $J + R - T \times F$
(*c*) $J \div M - N \times F$ (*d*) கண்டுபிடிக்க முடியாது
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

22. கீழே உள்ளவற்றுள் எது M-ன் சகோதரனின் (அல்லது) சகோதரியின் மகள் R என்பதை நிரூபிக்கும்?
(a) $M \div K \times T - R$ (b) $M - J + R - N$
(c) $R - M \times T \div W$ (d) கண்டுபிடிக்க முடியாது
(e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்வி 23–27): கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை படித்து பின் வினாக்களுக்கு விடையளிக்கவும்:
(S.B.I.P.O. 2005)

(i) 'A \$ B' என்பது B-யின் தாய் A;
(ii) 'A # B' என்பது B-யின் தந்தை A;
(iii) 'A @ B' என்பது B-யின் கணவன் A;
(iv) 'A % B' என்பது B-யின் மகள் A.

23. P @ Q \$ M # T, இதில் T-க்கு P என்ன உறவு?
(a) தந்தை வழி பாட்டி (b) தாய் வழி பாட்டி
(c) தந்தை வழி தாத்தா (d) தாய் வழி தாத்தா
(e) இவற்றுள் எதுவுமில்லை

24. கீழே உள்ளவற்றுள் எந்த கோவை H-ன் சகோதரி R என்பதைக் குறிக்கிறது?
(a) H \$ D @ F # R (b) R % D @ F \$ H
(c) R \$ D @ F # H (d) H % D @ F \$ R
(e) இவற்றுள் எதுவுமில்லை

25. F @ D % K # H எனில், H-க்கு F என்ன உறவு?
(a) மைத்துனன் (b) சகோதரி
(c) மைத்துனி (d) கண்டுபிடிக்க முடியாது
(e) இவற்றுள் எதுவுமில்லை

26. கீழே உள்ளவற்றுள் எந்த கோவை N-ன் சகோதரன் H என நிரூபிக்கிறது?
(a) H # R \$ D \$ N (b) N % F @ D \$ H # R
(c) N % F @ D \$ H (d) N % F @ D % H
(e) இவற்றுள் எதுவுமில்லை

27. G \$ M @ K எனில், G-க்கு K என்ன உறவு?
(a) மருமகள் (b) மாமியார்
(c) மகள் (d) அத்தை
(e) இவற்றுள் எதுவுமில்லை

விடைகள் (பயிற்சி 5C)

1. (b)	2. (d)	3. (b)	4. (d)	5. (e)	6. (c)	7. (a)	8. (d)	9. (a)	10. (c)
11. (d)	12. (a)	13. (c)	14. (a)	15. (c)	16. (a)	17. (b)	18. (b)	19. (c)	20. (c)
21. (e)	22. (b)	23. (c)	24. (b)	25. (a)	26. (b)	27. (a)			

தீர்வுகள் (பயிற்சி 5C)

1. $P \times Q - S$ என்பது S-ன் மனைவி Q-வின் மகன் P. அதாவது, S-இன் மகன் P அல்லது P-யின் தந்தை S.

2. $S \times B - M$ என்பது M-ன் மனைவி B-யின் மகன் S. அதாவது, S-ன் தாய் B.
$B - M$ என்பது M-ன் மனைவி B. அதாவது, B-யின் கணவன் M.
$T - S$ என்பது S-ன் மனைவி T.
$S \times B$ என்பது B-ன் மகன் S.
ஆகவே (d) தவறானது.

3. $Z \times T - S \times U + P$ என்பது P-யின் மகள் U-யின் மகன் S-ன் மனைவி T-யின் மகன் Z. எனவே, Z-ன் தந்தை S மற்றும் S-ன் தாய் U. ஆகையால், Z-ன் பாட்டி U.

4. N # A \$ B * D என்பது D-யின் சகோதரியான B-யின் தந்தை A-யின் தாய் N. எனவே, D என்பவர் A-யின் மகன் அல்லது மகள் மற்றும் A-யின் தாய் N. ஆகையால், D என்பவர் N-யின் பேரன் அல்லது பேத்தி.

5. $A + B + C - E \times F$ என்பது F-ன் மகளான E-யின் சகோதரன் C-யின் தந்தை B-யின் தாய் A. எனவே, C மற்றும் E ஆகியோர் B மற்றும் F-ன் குழந்தைகள். C மற்றும் E-யின் தந்தை B மற்றும் தாய் F. அதாவது, B-யின் மனைவி F. F-ன் கணவனின் தாய் A. அதாவது, F-ன் மாமியார் A.

6. $P \div R + S + Q$ என்பது Q-வின் தந்தையான S-ன் தந்தை R-ன் மகள் P ஆகும். அதாவது, P-யானவர் Q-வின் தந்தை (S)-யின் சகோதரி. அதாவது, Q-வின் அத்தை P-யாவார்.

7. $P - R + Q$ என்பது Q-வின் தந்தை R-ன் மனைவி P. அதாவது, Q-வின் தாய் P.

8. $P \times R + Q$ என்பது Q-வின் மகள் R-ன் சகோதரன் P. அதாவது, Q-வின் மகன் P.

9. $P \times R - Q$ என்பது Q-வின் மனைவி R-ன் சகோதரன் P. அதாவது, Q-வின் மைத்துனன் P.

10. $P + R + Q$ என்பது Q-வின் மகள் R-ன் தந்தை P. அதாவது, R-ன் தந்தை P மற்றும் R-ன் தாய் Q. அதாவது, Q-வின் கணவன் P.

11. $P \div R + Q$ என்பது Q-வின் தந்தை R-ன் மகள் P. அதாவது, Q-வின் சகோதரி P.

12. $P \times R + Q$ என்பது Q-வின் தந்தை R-ன் சகோதரன் P. அதாவது, Q-வின் பெரியப்பா (அ) சித்தப்பா மகன் P.

13. $P - R \times Q$ என்பது Q-வின் சகோதரன் R-ன் மனைவி P. அதாவது, Q-வின் சகோதரனின் மனைவி (அ) மைத்துனி P.

14. $P + G - R$ என்பது R-ன் கணவன் Q-வின் மகள் P. அதாவது, P-யின் தாய் R.

15. $P \times Q + R$ என்பது R-ன் மகள் Q-வின் சகோதரன் P. அதாவது, R-ன் மகன் P.

16. $P + Q \times R$ என்பது R-ன் சகோதரன் Q-வின் மகள் P. அதாவது, R-ன் சகோதரனின் மகள் P.

17. $M - N \times T + Z$ என்பது Z-ன் மகள் T-யின் தந்தை N-ன் தாய் M.

ஆனால், N மற்றும் Z ஆகியோரின் மகள். N-ன் மனைவி Z. N-ன் தாய் M. ஆகையால், Z-ன் மாமியார் மற்றும் T-யின் பாட்டி M ஆவார்.

18. $A + B \# C - D$ என்பது D-யின் சகோதரன் C-யின் தந்தை B-யின் தாய் A ஆவார். அதாவது, D-யின் தந்தையின் தாய் A ஆவார். எனவே, D-யின் பாட்டி A.

19. E-ன் அத்தை A என்பது E-ன் தந்தையின் சகோதரி A. அதாவது, $A * B \# E$. தெளிவாக (c)-யில் இருக்கும் குறியீடு இதையே குறிப்பிடுகிறது.

20. $B + D \times M \div N$ என்பது N-ன் சகோதரனான M-ன் தந்தை D-யின் தாய் B. எனவே, D-யின் மகன் M. M-ன் தாய் B. அதாவது, B-யின் பேரன் M.

21. $J \div R - T \times F$ என்பது F-ன் தந்தை T-யின் சகோதரி R-ன் சகோதரன் J. அதாவது. F-ன் மாமா J.

$J + R - T \times E$ என்பது F-ன் தந்தை T-யின் சகோதரி R-ன் தாய் J. அதாவது, F-ன் பாட்டி J.

$J \div M - N \times F$ என்பது F-ன் தந்தை N-ன் சகோதரி M-ன் சகோதரன் J. அதாவது, F-ன் மாமா J.

J என்பவர் F-ன் மகன் என்பது J-யின் தாய்/தந்தை F. F ஒரு ஆண் (ஒரு நபரின் சகோதரன்). அதாவது, $F \times J \div A$ அல்லது $F + J \div A$.

22. M-ன் சகோதரன் (அ) சகோதரியின் மகன் R என்பது M-ன் சகோதரன் அல்லது சகோதரியின் மகன் R. அதாவது, $M - J + R - N$ அல்லது $M - J \times R - N$ அல்லது $M + K + R - N$ அல்லது $M \div K \times R - N$.

23. $P @ Q \$ M \# T$ என்பது T-யின் தந்தை M-ன் தாய் Q-வின் கணவன் P. அதாவது, T-யின் தந்தையின் தந்தை P. அதாவது, T-யின் தந்தை வழி தாத்தா P.

24. H-ன் சகோதரி R என்பது H-ன் தந்தையின் மகள் R. அதாவது, H-ன் தாயின் (F என சொல்லலாம்) கணவனின் (D என சொல்லலாம்) மகள் R. அதாவது, $R \% D @ F \$ H$.

25. $F @ D \% K \# H$ என்பது H-ன் தந்தை K-யின் மகள் D-யின் கணவள் F. H-ன் சகோதரியான D-யின் கணவன் F. அதாவது. H-ன் மைத்துனன் F.

26. N-ன் சகோதரன் H என்பது H-ன் தந்தையின் மகள் N. H ஒரு ஆண். அதாவது, H-ன் தந்தையின் (D என்போம்) கணவனின் (F என்போம்) மகள் N. மற்றும் H என்பவர் வேறு ஒரு நபரின் (R என்போம்) தந்தை அல்லது கணவன். அதாவது, $N \% F @ D \$ \# R$ அல்லது $N \% F @ D \$ H @ R$.

27. $G \$ M @ K$ என்பது K-யின் கணவன் M-ன் தாய் G. அதாவது, G-ன் மகனின் மனைவி K. அதாவது, G-ன் மருமகள் K.

சமீபத்திய கேள்விகள்–பதில்களுடன்

பயிற்சி

குறிப்புகள் (*கேள்விகள் 1–3*): *கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்*:

ஒரு குடும்பத்தில் மூன்று தலைமுறையின் எட்டு நபர்கள் உள்ளனர். K என்பவர் G-யின் மருமகள். L-ன் தந்தை M. P-யின் மருமகள் L. H என்பவர் G-யின் மைத்துனன் மற்றும் F-ன் ஒரே மகன். F-ன் பேரன் T. H என்பவருக்கு திருமணம் ஆகவில்லை G ஒரு ஆண். M என்பவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன. **[SBI PO Exam, 2021]**

1. G-க்கு M என்ன உறவு?
   (a) தந்தை (b) சகோதரன்
   (c) மாமனார் (d) மைத்துனன்
   (e) இவற்றில் எதுவுமில்லை

2. L-க்கு K என்ன உறவு?
   (a) மகள் (b) மாமியார்
   (c) மருமகள் (d) சகோதரி
   (e) இவற்றில் எதுவுமில்லை

3. கீழே உள்ளவர்களுள் M-ன் மகன் யார்?
   (a) H (b) G (c) T (d) L
   (e) இவற்றில் எதுவுமில்லை

4. அர்ஷ் என்பவர் ஷிவம் என்பவரின் தந்தை. துருவ் என்பவர் பிம்லாவின் மகன். அர்ஷின் தந்தை ஈஷ்வர். துருவ்வின் சகோதரன் ஷிவம் எனில், ஈஷ்வருக்கு பிம்லா என்ன உறவு? **[SSC-CGL Exam, 2020]**
   (a) மனைவி (b) மருமகள்
   (c) தாய் (d) நாத்தனார்

குறிப்புகள் (*கேள்விகள் 5–7*): *கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின்னர் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்*: **[IBPS PO Exam, 2019]**

ஒரு குடும்பத்தில் ஏழு நபர்கள் வசிக்கிறார்கள். P-யின் மகள் Q. R-ன் சகோதரன் B. A-யின் மாமியார் G. A-யுடன் B திருமணம் செய்துள்ளார். Q-வின் மாமா B. B-யின் தந்தை D.

5. P-க்கு B என்ன உறவு?
   (a) சகோதரன் (b) நாத்தனார்
   (c) மைத்துனன் (d) தாய் (e) அத்தை

6. B-யின் சகோதரன் C. எனில் Q-க்கு C என்ன உறவு?
(a) அத்தை (b) மாமா
(c) தந்தை (d) தாய்
(e) சகோதரி

7. Q-வின் தந்தை P எனில் P-க்கு R என்ன உறவு?
(a) மனைவி (b) கணவன்
(c) தந்தை (d) மாமனார்
(e) தாய்

8. Q-வின் தந்தை P மற்றும் S-ன் மகன் R. P-யின் சகோதரன் T. R-ன் சகோதரி Q. எனில் T-க்கு S என்ன உறவு? **[SSC-CGL Exam, 2019]**
(a) மைத்துனன் (b) மகள்
(c) நாத்தனார்/மைத்துனி (d) சகோதரன்

குறிப்புகள் (கேள்விகள் 9–10): கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

கொடுக்கப்பட்டுள்ள அனைத்து நபர்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். L-ன் சகோதரன் J. R-ன் ஒரே மகன் J. L-ன் மாமனார் W. P-யின் தாய் வழி தாத்தா D. D ஒரு ஆண். W-வின் ஒரே மகன் Q. N-ன் தாத்தா W மற்றும் N-ன் மகள் C. **[SBI Clerk Exam, 2018]**

9. C-க்கு L என்ன உறவு?
(a) தாய் (b) மகன் (c) சகோதரன் (d) தந்தை
(e) இவற்றில் எதுவுமில்லை

10. N-க்கு P என்ன உறவு?
(a) தாய் (b) மகன் (c) சகோதரன் (d) தந்தை
(e) இவற்றில் எதுவுமில்லை

11. V-யும் W-வும் தம்பதிகள் W-வின் ஒரே சகோதரி R. R-ன் தாய் A. A-க்கு மூன்று குழந்தைகள். P மற்றும் R-ன் சகோதரன் (அல்லது) சகோதரியின் மகள் G. V-க்கு உடன் பிறந்தவர் யாருமில்லை. R-க்கு திருமணமாகவில்லை. எனில் V-க்கு P என்ன உறவு? **[SBI PO Exam, 2018]**
(a) மாமியார் (b) சகோதரி
(c) மைத்துனன் (d) சகோதரன்
(e) இவற்றில் எதுமில்லை

கேள்விகள் (12–13): *கீழே உள்ள கேள்விகளில் #, &, @, *, $, % மற்றும் © ஆகிய சின்னங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள அர்த்தங்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளன. தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:* **[IBPS PO Mains Exam, 2017]**

$P\#Q$ – Q-வின் மகன் P.
$P@Q$ – P-யின் குழந்தை Q.
$P©Q$ – Q-வின் பெற்றோர் P.
$P\$Q$ – Q வை விட P வயதில் மூத்தவர்.
$P*Q$ – Q-வின் கணவன் P.
$P\&Q$ – P-யின் மருமகள் Q.
$P\%Q$ – Q-வின் மனைவி P.

12. $A@B*D\&G\%E\$F\#D$ எனில், A-க்கு F என்ன உறவு?
(a) தாத்தா (b) பேரன் (c) மகள் (d) மனைவி
(e) இவற்றில் எதுவுமில்லை

13. $H*M©O\$N\#M$, N-ன் வயது 20 மற்றும் H-ன் வயது 40 எனில், O-வின் வயது என்ன?
(a) 17 வயது (b) 15 வயது
(c) 23 வயது (d) 45 வயது
(e) 12 வயது

14. '$A + B$' என்பது B-யின் தந்தை A; '$A - B$' என்பது B-யின் தாய் A; '$A * B$' என்பது B-யின் சகோதரன் A; '$A \% B$' என்பது B-யின் சகோதரி A எனில், '$P + Q * R - S$' என்பதில் S-க்கு Q என்ன உறவு? **[SSC-CGL Exam, 2017]**
(a) கணவன் (b) மாமா
(c) சகோதரன் (d) தந்தை

15. ஒரு குடும்பத்தை சேர்ந்த A, B, C, D, E, F ஆகியோர் ஒன்றாக பயணம் செய்கிறார்கள். C-யின் மகன் B ஆனால், B-யின் தாய் C இல்லை. A மற்றும் C கணவன் – மனைவி. C-யின் சகோதரன் E. A-யின் மகள் D. B-யின் சகோதரன் F. அந்த குடும்பத்தில் எத்தனை ஆண்கள் உள்ளனர்? **[SSC-CGL Exam, 2015]**
(a) 2 (b) 3 (c) 4 (d) 1

16. B-யின் சகோதரன் A. C-யின் மகள் B மற்றும் A-யின் தந்தை D. எனில், D-க்கு C என்ன உறவு? **[SSC-CGL Exam, 2014]**
(a) கணவன் (b) மனைவி
(c) பேத்தி (d) தாத்தா

17. தன் பக்கத்திலுள்ள ஒரு பையனை காண்பித்து ஒரு மனிதன் சொன்னது, "அவன் என் மனைவியின் மைத்துனியின் மகன். ஆனால் என் பெற்றோருக்கு ஒரே குழந்தை." என் மகன் அந்த பையனுக்கு என்ன உறவு? **[SSC-CGL Exam, 2013]**
(a) பெரியம்மா/சித்தி மகன் (அ) பெரியப்பா/சித்தப்பா மகன்
(b) சகோதரன் (c) மாமா
(d) சகோதரனின் மகன்

18. கேசவின் மகன் சுனில். கேசவின் சகோதரி சிம்ரனுக்கு மாருதி என்கிற மகனும், சீதா என்கிற மகளும் உள்ளனர். மாருதியின் தாய் மாமா பிரேம். எனில், மாருதிக்கு சுனில் என்ன உறவு? **[SSC-CGL Exam, 2015]**
(a) அத்தை மகன் (b) தாய் மாமா (c) சகோதரி
(d) சகோதரன்/சகோதரியின் மகன்

விடைகள்

1. (c)	2. (c)	3. (a)	4. (b)	5. (c)	6. (b)	7. (a)	8. (c)	9. (e)	10. (c)
11. (c)	12. (b)	13. (c)	14. (b)	15. (c)	16. (b)	17. (a)	18. (a)		

தீர்வுகள்

தீர்வுகள் (1–3):



1. G-யின் மாமனார் M.
2. L-ன் மருமகள் K.
3. M-ன் மகன் H.
4. 

எனவே, ஈஷ்வரின் மருமகள் பிம்லா.

தீர்வுகள் (5–7):



5. P-யின் மைத்துனன் B.
6. Q-வின் மாமா C.
7. Q-வின் தந்தை P எனில், P-யின் மனைவி R.
8. 

எனவே, T-யின் நாத்தனார்/மைத்துனி S ஆவார்.

தீர்வுகள் (9–10):



9. C-யின் பாட்டி L.
10. N-ன் சகோதரன் P.
11. 

V-யின் மைத்துனன் P ஆவார்.

12. 

எனவே, A-யின் பேரன் F ஆவார்.

13. 

N-ஐ விட O பெரியவர். எனவே O-வின் வயது 20-லிருந்து 40 வயதிற்குள் இருக்கும்.

14. 

எனவே, S-ன் மாமா Q ஆவார்.

15. 

குடும்பத்தில் (E, C, F மற்றும் B) ஆகிய 4 ஆண்கள் உள்ளனர். எனவே, விடை (c).

16. 

B-யின் சகோதரன் A. C-யின் மகள் B மற்றும் A-யின் தந்தை D. எனவே, D-யின் மனைவி C.

17. மனிதனின் மனைவியின் மைத்துனி – மனிதனின் மைத்துனி.

மனிதனின் மைத்துனியின் மகன் = மனிதனின் மைத்துனியின் மகன்.

ஆகையால், அந்த பையனுக்கு இந்த மனிதனின் மகன் பெரியம்மா/சித்தி மகன்.

எனவே, விடை (a) சரியானது.

18. 

வரைபடத்திலிருந்து சுனிலின் அத்தை மகன் மாருதி என்பது தெளிவாகிறது.

6

புதிர்கள் (அல்லது) தரவரிசை அறிதல்

இந்த பகுதியில் குறிப்பிட்ட எண்ணிக்கை பொருட்கள் (அது மனிதர்கள் அல்லது பொருட்களாக இருக்கலாம்). பற்றிய பகுத்தாய்வு புதிர்கள் வகையில் கேள்விகள் கேட்கப்பட்டிருக்கும். கொடுக்கப்பட்ட தகவல்களை போட்டியாளர் நன்கு ஆராய்ந்து தகுந்த வடிவில் சுருக்கி கேள்விக்கு பதிலளிக்க வேண்டும்.

புதிர்களில் கேள்விகள் கீழே உள்ளவற்றுள் ஏதாவது ஒரு வகையில் இருக்கும்:

I. வகைப்படுத்துதல் வகை கேள்விகள்
II. இருக்கை/ஏற்பாடுகள்
III. ஒப்பிடுதல் வகை கேள்விகள்
IV. பொருட்களின் தொடர் வரிசை
V. கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் தேர்வு செய்தல்
VI. குடும்பம் சம்பந்தமான பிரச்சனைகள்
VII. குழப்பமான பிரச்சனைகள்

வகை 1: வகைப்படுத்துதல் வகை கேள்விகள்

இந்த வகை கேள்விகளில் வெவ்வேறு குழுக்களை சேர்ந்த பொருட்கள் அல்லது வெவ்வேறு குணங்களை கொண்டுள்ள பொருட்கள் கொடுக்கப்பட்டிருக்கும். போட்டியாளர் பொருட்களை குழுவாக சேர்த்து அவற்றை ஆராய்வதற்கு தேவையான துப்பு கொடுக்கப்பட்டிருக்கும். எனவே போட்டியாளர் எல்லாவற்றையும் கவனமாக ஆராய்ந்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா. 1: கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

(*i*) *B* மற்றும் *E* இருவரும் நாடகம் மற்றும் கணிணி அறிவியலில் தேர்ந்தவர்கள்.

(*ii*) *A* மற்றும் *B* இருவரும் கணிணி அறிவியல் மற்றும் இயற்பியலில் தேர்ந்தவர்கள்.

(*iii*) *A*, *D* மற்றும் *C* மூவரும் இயற்பியல் மற்றும் வரலாற்றில் தேர்ந்தவர்கள்.

(*iv*) *C* மற்றும் *A* இருவரும் இயற்பியல் மற்றும் கணிதத்தில் தேர்ந்தவர்கள்.

(*v*) *D* மற்றும் *E* இருவரும் வரலாறு மற்றும் நாடகம் ஆகியவற்றில் தேர்ந்தவர்கள். (IGNOU, 2003)

1. இயற்பியல், வரலாறு மற்றும் நாடகம் மூன்றிலும் தேர்ந்தவர்கள் யார்?

(*a*) *A* (*b*) *B* (*c*) *D* (*d*) *E*

2. யார் இயற்பியல், வரலாறு மற்றும் கணிதத்தில் தேர்ந்தவர் ஆனால், கண்ணி அறிவியலில் தேர்ந்தவர் அல்ல?

(*a*) *A* (*b*) *B* (*c*) *C* (*d*) *D*

3. கணிணி அறிவியல், வரலாறு மற்றும் நாடகத்தில் தேர்ந்தவர் யார்?

(*a*) *A* (*b*) *B* (*c*) *C* (*d*) *E*

4. வரலாறு, இயற்பியல், கணிணி அறிவியல் மற்றும் கணிதத்தில் தேர்ந்தவர் யார்?

(*a*) *A* (*b*) *B* (*c*) *C* (*d*) *D*

5. இயற்பியல், நாடகம் மற்றும் கணிணி அறிவியலில் தேர்ந்தவர் யார்?

(*a*) *A* (*b*) *B* (*c*) *D* (*d*) *E*

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கீழ்வருமாறு ஆராயலாம்.

	நாடகம்	கணினி அறிவியல்	இயற்பியல்	வரலாறு	கணிதம்
A	×	✓	✓	✓	✓
B	✓	✓	✓	×	×
C	×	×	✓	✓	✓
D	✓	×	✓	✓	×
E	✓	✓	×	✓	×

1. இயற்பியல், வரலாறு மற்றும் நாடகம் ஆகியவற்றில் தேர்ந்தவர் D. எனவே, விடை (c).
2. A மற்றும் C இருவரும் இயற்பியல், வரலாறு மற்றும் கணிதத்தில் தேர்ந்தவர்கள். ஆனால் A கணினி அறிவியலில் தேர்ந்தவர். ஆனால் C கணினி அறிவியலில் தேர்ந்தவர் அல்ல. எனவே, விடை (c) ஆகும்.
3. E கணினி அறிவியல் வரலாறு மற்றும் நாடகத்தில் சிறந்தவர். எனவே, விடை (a) ஆகும்.
4. வரலாறு, இயற்பியல், கணினி அறிவியல் மற்றும் கணிதத்தில் சிறந்தவர் A. எனவே, விடை (a) ஆகும்.
5. இயற்பியல், நாடகம் மற்றும் கணினி அறிவியலில் சிறந்தவர் B. எனவே, விடை (b) ஆகும்.

எ.கா.2: கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின்னர் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(M.B.A. 2006; R.R.B. 2005)**

(*i*) P, Q, R, S மற்றும் T ஆகிய நண்பர்கள் சென்னை, கொல்கத்தா, டெல்லி, பெங்களூரு மற்றும் ஹைதராபாத் ஆகிய வெவ்வேறு நகரங்களுக்கு பேருந்து, இரயில், விமானம், கார் மற்றும் படகு மூலம் மும்பையிலிருந்து பயணித்தார்கள்.

(*ii*) டெல்லிக்கு பயணித்தவர் படகில் பயணிக்கவில்லை.

(*iii*) பெங்களூருக்கு R காரில் பயணித்தார். கொல்கத்தாவிற்கு Q விமானத்தில் பயணித்தார்.

(*iv*) S என்பவர் படகிலும் T என்பவர் இரயிலிலும் பயணிக்கிறார்கள்.

(*v*) மும்பை நகரம் டெல்லி மற்றும் சென்னையுடன் பேருந்தால் இணைக்கப்படவில்லை.

1. கீழே உள்ள நபர் மற்றும் பயண வகை இணைகளில் எது தவறானது?

(*a*) P - பேருந்து (*b*) Q - விமானம் (*c*) R - கார்

(*d*) S - படகு (*e*) T - விமானம்

2. கீழே உள்ள இணைகளில் S-க்கு எது சரி?

(*a*) டெல்லி - பேருந்து (*b*) சென்னை - பேருந்து (*c*) சென்னை - படகு

(*d*) தகவல் போதுமானதாக இல்லை (*e*) இவற்றில் எதுவுமில்லை

3. கீழே உள்ள இடம்-பயண வகையில் எது தவறு?

(*a*) டெல்லி - பேருந்து (*b*) கொல்கத்தா - விமானம் (*c*) பெங்களூரு - கார்

(*d*) சென்னை - படகு (*e*) ஹைதராபாத் - பேருந்து

4. டெல்லிக்கு பயணம் செய்பவர் கீழே உள்ளவற்றில் எதை பயன்படுத்தினார்?

(*a*) பேருந்து (*b*) இரயில் (*c*) விமானம்

(*d*) கார் (*e*) படகு

5. கீழே உள்ளவர்களுள் யார் டெல்லிக்கு பயணம் செய்தார்?

(*a*) R (*b*) S (*c*) T (*d*) தகவல் போதுமானதாக இல்லை

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கீழே உள்ளவாறு ஆராயலாம்:

(A) **போக்குவரத்து முறை:** R காரில் பயணிக்கிறார். Q விமானத்திலும், S படகிலும் மற்றும் T இரயிலிலும் பயணிக்கிறார்கள். P மட்டும் மீதமுள்ளார். எனவே, P பேருந்தின் மூலம் பயணிக்கிறார்.

(B) **பயணப்பட்ட இடம்:** R பெங்களூரு போகிறார், Q கொல்கத்தா போகிறார். டெல்லி அல்லது சென்னைக்கு பேருந்து வசதி இல்லை. எனவே, பேருந்தில் செல்லும் P ஹைதராபாத் போகிறார். S படகில் பயணிக்கிறார். எனவே, (ii)-ன் மூலம் தெரிவது S டெல்லிக்கு செல்லவில்லை. ஆகவே, S சென்னைக்கு போகிறார். T மட்டும் மீதமுள்ளார். எனவே, T டெல்லிக்கு போகிறார்.

நபர்	P	Q	R	S	T
இடம்	ஹைதராபாத்	கொல்கத்தா	பெங்களூரு	சென்னை	டெல்லி
போக்குவரத்து முறை	பேருந்து	விமானம்	கார்	படகு	இரயில்

1. T - விமானம் என்பது தவறு. எனவே விடை (e) ஆகும்.
2. S-ன் சரியான இணை சென்னை-படகு. எனவே, விடை (c) ஆகும்.
3. டெல்லி-பேருந்து இணை தவறாகும். விடை (a).
4. டெல்லிக்கு இரயிலில் பயணித்தார். எனவே, விடை (b).
5. டெல்லிக்கு T பயணித்தார். எனவே, விடை (c).

எ.கா. 3: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

(M.B.A. 2006, M.A.T. 2002)

ஒரு பள்ளியில் A, B, C, D, E மற்றும் F என ஆறு நபர்கள் இருந்தனர். ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு கட்டாய பாடத்தையும் மற்றொரு விருப்ப பாடத்தையும் சொல்லிக் கொடுப்பார். D-யின் விருப்ப பாடம் வரலாறு. மற்ற மூன்று ஆசிரியர்களுக்கு அது கட்டாய பாடம். E மற்றும் F இருவருக்கும் இயற்பியல் ஒரு பாடம். F-ன் கட்டாய பாடம் கணிதம். அதே நேரத்தில் C மற்றும் E இருவருக்கும் அது விருப்ப பாடமாகும். A-யின் பாடங்கள் வரலாறு மற்றும் ஆங்கிலம். ஆனால், அவை D-யின் கட்டாய மற்றும் விருப்ப பாடங்களின் தலைகீழ் வரிசையாகும். அவர்களின் ஒருவரின் விருப்ப பாடம் வேதியியல். பள்ளியில் உள்ள ஒரே பெண் ஆசிரியரின் கட்டாய பாடம் ஆங்கிலம் ஆகும்.

1. **C-யின் கட்டாய பாடம் என்ன?**
   (a) வரலாறு (b) இயற்பியல் (c) வேதியியல்
   (d) ஆங்கிலம் (e) கணிதம்
2. **குழுவில் உள்ள பெண் ஆசிரியர் யார்?**
   (a) A (b) B (c) C (d) D (e) E
3. **கீழே உள்ளவர்களில் F-வைப் போல் அதே விருப்ப பாடம் மற்றும் கட்டாய பாடம் கொண்டவர் யார்?**
   (a) D (b) B (c) A (d) C (e) எவருமில்லை
4. **கட்டாய மற்றும் விருப்ப பாடங்களைப் புறக்கணித்தால் கீழே உள்ளவர்களுள் யார் F-ன் அதே இரு பாடங்களைக் கொண்டுள்ளார்?**
   (a) A (b) B (c) E (d) D (e) இவர்களில் எவருமில்லை
5. **கீழே உள்ளவற்றுள் எந்த குழு வரலாற்று பாடத்தை கட்டாய பாடமாகக் கொண்டுள்ளது?**
   (a) A, C, D (b) B, C, D (c) C, D (d) A, B, C (e) A, D

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கீழே வருமாறு ஆராயலாம்.

'O' என்பது விருப்ப பாடம் மற்றும் 'C' என்பது கட்டாய பாடத்தையும் குறிக்கிறது எனில்,

	A	B	C	D	E	F
வரலாறு	C	C	C	O	–	–
இயற்பியல்	–	–	–	–	C	O
கணிதம்	–	–	O	–	O	C
ஆங்கிலம்	O	–	–	C	–	–
வேதியியல்	–	O	–	–	–	–

F-ன் கட்டாய பாடம் கணிதம். F-ன் ஒரு பாடம் இயற்பியல். எனவே, F-ன் விருப்ப பாடம் இயற்பியல்.

E-யின் விருப்ப பாடம் கணிதம் மற்றும் அவரின் ஒரு பாடம் இயற்பியல். ஆகையால், E-யின் கட்டாய பாடம் இயற்பியல்.

A மற்றும் D இருவரும் ஒரே பாடங்களைக் கொண்டுள்ளனர் – வரலாறு மற்றும் ஆங்கிலம் D-யின் விருப்ப பாடம் வரலாறு மற்றும் D-யின் கட்டாய பாடம் ஆங்கிலம். A மற்றும் D ஆகியோரின் பாடங்கள் விருப்ப மற்றும் கட்டாய பாடங்களின் வரிசையில் தலைகீழாக உள்ளன. எனவே, A-யின் கட்டாய பாடம் வரலாறு மற்றும் விருப்ப பாடம் ஆங்கிலம்.

ஒரே ஒரு ஆசிரியரின் விருப்பப் பாடம் வேதியியல். எனவே மீதமுள்ள ஆசிரியர் B-யின் விருப்பப் பாடம் வேதியியல் ஆகும். மூன்று ஆசிரியர்களின் கட்டாய பாடம் வரலாறு.

D-யின் கட்டாய பாடம் ஆங்கிலம். எனவே, *D* மட்டுமே பெண் ஆசிரியர் ஆகும்.

1. *C*-யின் கட்டாய பாடம் வரலாறு. எனவே, விடை (*a*) ஆகும்.
2. *D* மட்டுமே ஒரே பெண் ஆசிரியர். எனவே, விடை (*d*).
3. *E* மற்றும் *F* ஒரே பாடங்களைக் கொண்டுள்ளனர். ஆனால், *E*-யின் கட்டாய மற்றும் விருப்ப பாடங்கள் *F*-ன் தலைகீழ் வரிசையாகும். எனவே, 'இவற்றில் எதுவுமில்லை' என்பதே சரியான விடை அதாவது, (*a*).
4. *F*-ன் அதே பாடங்களை *E*-யும் கொண்டுள்ளார். எனவே, விடை (*c*).
5. *A*, *B* மற்றும் *C* மூவரும் வரலாற்றை கட்டாய பாடமாகக் கொண்டுள்ளனர். எனவே, விடை (*d*).

எ.கா. 4: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

B, M, T, R, K, H மற்றும் D ஆகியோர் ஒரு இரயிலில் 3-வது அடுக்கு படுக்கை வசதியுள்ள பெட்டியில் பயணித்தனர். அவர்களில் ஒவ்வொருவரும் முறையே பொறியாளர், மருத்துவர், கட்டிடக்கலை நிபுணர், மருந்தாளர், வழக்கறிஞர், பத்திரிகையாளர் மற்றும் நோயியல் நிபுணர் ஆகிய வெவ்வேறு துறையினர் ஆவர். அவர்கள் இரண்டு கீழ் படுக்கைகள், மூன்று நடு படுக்கைகள் மற்றும் இரண்டு மேல் படுக்கைகளை எடுத்துக் கொண்டனர். பொறியாளரான *B* மேல் படுக்கையை உபயோகிக்கவில்லை. *B* உபயோகித்த அதே நிலை படுக்கையை கட்டிடக் கலை நிபுணர் மட்டுமே உபயோகித்தார். *M* மற்றும் *H* இருவரும் நடு படுக்கையை உபயோகிக்கவில்லை. அவர்கள் முறையே நோயியல் நிபுணர் மற்றும் வழக்கறிஞர் ஆவர். *T* என்பவர் மருந்தாளர். *D* என்பவர் பத்திரிகையாளரும் அல்ல கட்டிடக்கலை நிபுணரும் அல்ல. மருத்துவர் எந்த படுக்கையை உபயோகிக்கிறாரோ *K* அதே நிலை படுக்கையை உபயோகிக்கிறார். (Bank P.O. 2004)

1. **யார் கட்டிடக் கலை நிபுணர்?**
   (*a*) *D* (*b*) *H* (*c*) *R* (*d*) தகவல் போதுமானதாக இல்லை
   (*e*) இவர்களில் எவருமில்லை
2. ***D*-யின் தொழில் என்ன?**
   (*a*) மருந்தாளர் (*b*) வழக்கறிஞர் (*c*) மருத்துவர்
   (*d*) பொறியாளர் (*e*) தகவல் போதுமானதாக இல்லை
3. **கீழே உள்ள ஜோடிகளில் எந்த ஜோடி கீழ் படுக்கையை உபயோகிக்கின்றனர்?**
   (*a*) *BT* (*b*) *BD* (*c*) *BK* (*d*) தகவல் போதுமானதாக இல்லை
   (*e*) இவர்களில் எந்த ஜோடியும் இல்லை
4. **கீழே உள்ள ஜோடிகளில் எந்த ஜோடி நடு படுக்கையை உபயோகிக்கின்றனர்?**
   (*a*) *DKT* (*b*) *HKT* (*c*) *DKR* (*d*) *DHT*
   (*e*) இவர்களில் எந்த ஜோடியும் இல்லை
5. **கீழே உள்ள நபர்-படுக்கை-தொழில் இணைகளில் எது சரி?**
   (*a*) *K* - மேல் படுக்கை - வழக்கறிஞர் (*b*) *D* - மேல் - மருத்துவர்
   (*c*) *M* - கீழ் படுக்கை - பத்திரிகையாளர் (*d*) *R* - கீழ் படுக்கை - கட்டிட கலை நிபுணர்
   (*e*) அனைத்தும் சரி

தீர்வு. பொறியாளரான *B* உபயோகிக்கும் படுக்கையை கட்டிடகலை நிபுணர் மட்டுமே உபயோகிக்கின்றனர். பொறியாளர் மேல் படுக்கையை உபயோகிக்கவில்லை. எனவே, அவர் மற்றும் கட்டிடக்கலை நிபுணர் இருவரும் கீழ் படுக்கையை உபயோகித்திருக்க வேண்டும். ஏனெனில், மூன்று நபர்கள் நடு படுக்கையை உபயோகிக்கின்றனர்.

M மற்றும் *H* இருவரும் நடு படுக்கையை உபயோகிக்கவில்லை. அவர்கள் முறையே நோயியல் நிபுணர் மற்றும் வழக்கறிஞர் ஆவர்.

கீழ் படுக்கைகளை பொறியாளரும், கட்டிடக் கலை நிபுணரும் உபயோகிக்கின்றனர். எனவே, நோயியல் நிபுணர் மற்றும் வழக்கறிஞர் மேல் படுக்கைகளை உபயோகிக்கின்றனர் மற்றும் மருத்துவர், மருந்தாளர் மற்றும் பத்திரிகையாளர் மூவரும் நடு படுக்கைகளை உபயோகிக்கின்றனர்.

T என்பவர் மருந்தாளர். *D* என்பவர் பத்திரிகையாளரும் அல்ல, கட்டிடக் கலை நிபுணரும் அல்ல. எனவே, *D* ஒரு மருத்துவர். *D* உபயோகிக்கும் படுக்கையை *K*-யும் உபயோகிப்பதால் *K* ஒரு பத்திரிகையாளர். இறுதியாக, *R* என்பவர் கட்டிடக் கலை நிபுணர்.

எனவே, நமக்கு கிடைப்பது;

பயணி	*B*	*M*	*T*
படுக்கை	கீழ்	மேல்	நடு
உபயோகிப்பவர்	பொறியாளர்	நோயியல் நிபுணர்	மருந்தாளர்

பயணி	*R*	*K*	*H*	*D*
படுக்கை	கீழ்	நடு	மேல்	நடு
உபயோகிப்பவர்	கட்டிடகலை நிபுணர்	பத்திரிகையாளர்	வழக்கறிஞர்	மருத்துவர்

1. *R* என்பவர் கட்டிட கலை நிபுணர். எனவே, விடை (*c*).
2. தொழில் முறையில் *D* ஒரு மருத்துவர். எனவே, விடை (*c*).
3. கீழ் படுக்கைகளை *B* மற்றும் *R* உபயோகிக்கின்றனர். எனவே, விடை (*e*).
4. நடு படுக்கைகளை *D*, *K* மற்றும் *T* மூவரும் உபயோகிக்கின்றனர். எனவே, விடை (*a*).
5. எனவே, ஒரே சரியான குழுவானது *R* - கீழ் - கட்டிடக் கலை நிபுணர். எனவே, விடை (*d*) ஆகும்.

எ.கா.5: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும். (Bank P.O. 2004)

(*i*) *A*, *B*, *C*, *D*, *E*, *F*, *G* மற்றும் *H* ஆகியோர் *X*, *Y* மற்றும் *Z* ஆகிய வெவ்வேறு நிறுவனங்களில் வேலை செய்கின்றனர்.

(*ii*) இரண்டு பெண்கள் இரண்டு வெவ்வேறு நிறுவனங்களில் வேலை செய்கின்றனர். மற்றும் அவர்களின் சிறப்புகளும் வெவ்வேறானவை.

(*iii*) அவர்களில் இருவர் நிதித்துறையில் சிறந்தவர்கள். மற்ற இருவர் மனித வளத்தில் சிறந்தவர்கள். இருவர் சந்தைப்படுத்துதலில் சிறந்தவர்கள். ஒருவர் பொறியாளர் மற்றும் ஒருவர் கணினியில் சிறந்தவர்.

(*iv*) மனித வளத்தில் சிறந்த *D*, நிறுவனம் *X*-ல் வேலை செய்கிறார். அவருடைய தோழி *G* நிதுத்துறையில் சிறந்தவர் மற்றும் அவர் நிறுவனம் *Z*-ல் வேலை செய்கிறார்.

(*v*) *H* என்பவர் மனித வளத்தில் சிறந்தவர் அவர் சந்தை படுத்துதலில் சிறந்தவரான *B*-யுடன் வேலை பார்க்கிறார். ஆனால், அவர் நிறுவனம் *Y*-யில் வேலை செய்யவில்லை.

(*vi*) ஒரே சிறப்பு கொண்ட இருவர் ஒன்றாக வேலை செய்யவில்லை.

(*vii*) சந்தைப்படுத்துதலில் சிறந்தவரான *F* நிறுவனம் *Y*-யில் வேலை செய்கிறார் மற்றும் அவரது நண்பர் நிதித் துறையில் சிறந்தவர் நிறுவனம் *X*-ல் வேலை பார்க்கிறார். அவருடன் சிறப்பு தன்மை கொண்டவர் ஒருவர் மட்டுமே உள்ளனர்.

(*viii*) எந்த நிறுவனத்திலும் மூன்று நபர்களுக்கு மேல் வேலை செய்யவில்லை.

(*ix*) *C* ஒரு பொறியாளர் மற்றும் அவர் நிறுவனம் *Z*-ல் வேலை பார்க்கிறார்.

(*x*) எந்த ஒரு பெண்ணும் பொறியாளர் அல்லது கணினியில் சிறந்தவர் இல்லை

1. *C* எந்த நிறுவனத்தில் வேலை பார்க்கிறார்?

(*a*) *X* (*b*) *Y* (*c*) *Z* (*d*) *Y* அல்லது *Z*

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

2. எந்த இரண்டு நிறுவனங்களில் மனித வளத்தில் சிறந்தவர்கள் வேலை செய்கின்றனர்?

(*a*) *X* மற்றும் *Y* (*b*) *Y* மற்றும் *Z* (*c*) *X* மற்றும் *Z*

(*d*) தகவல் போதுமானதாக இல்லை (*e*) இவற்றுள் எதுவுமில்லை

3. அந்த இரண்டு பெண்களும்;

(*a*) *B* மற்றும் *D* (*b*) *D* மற்றும் *G* (*c*) *D* மற்றும் *H*

(*d*) தகவல் போதுமானதாக இல்லை (*e*) இவற்றுள் எதுவுமில்லை

தீர்வு. *D* மற்றும் *H* மனித வளத்தில் சிறந்தவர்கள். *G* மற்றும் *A* நிதியிலும், *B* மற்றும் *F* சந்தைப்படுத்துதலிலும் சிறந்தவர்கள். *C* ஒரு பொறியாளர். எனவே, *E* என்பவர் கணினியில் சிறந்தவர்கள்.

H மற்றும் *B* ஒன்றாக வேலை பார்ப்பவர்கள். ஆனால், நிறுவனம் *Y*-யில் அல்ல. *D* மற்றும் *H* ஒரே சிறப்பு துறையில் உள்ளவர்கள். எனவே, *D* வேலை பார்க்கும் அதே நிறுவனத்தில் *H* வேலை பார்க்கவில்லை. அதாவது., நிறுவனம் *X*. எனவே, *H* மற்றும் *B* நிறுவனம் *Z*-ல் வேலை பார்க்கின்றனர். *D* மற்றும் *A* மட்டுமே நிறுவனம் *X*-ல் வேலை பார்க்கின்றனர்; *G*, *H* மற்றும் *B* மூவரும் நிறுவனம் *Z*-ல் வேலை பார்க்கின்றனர். ஒரே நிறுவனத்தில் மூன்று நபர்களுக்கு மேல் வேலை பார்க்கவில்லை என்பதால் *F*, *C* மற்றும் *E* நிறுவனம் *Y*-யில் வேலை பார்க்கின்றனர்.

இரண்டு பெண்களும் வெவ்வேறு நிறுவனத்தில் வேலை பார்ப்பதால், மற்றும் D என்பவர் பெண் என்பதால், நிறுவனம் X-ல் வேலை பார்க்கும் மற்றொரு நபர் அதாவது A ஒரு ஆண். F என்பவரும் ஆண் C என்பவர் பொறியாளர் மற்றும் E என்பவர் கணினி துறையில் சிறந்தவர். இருவரும் ஆண்கள் D என்பவர் பெண் மற்றும் மற்ற பெண்ணின் சிறப்பு துறை D-யின் துறையாக இருக்க முடியாது. அதாவது., மனித வளத்துறை. எனவே, H என்பவர் ஆண். ஆகையால், B அல்லது G மற்றொரு பெண் ஆவார்.

நபர்	பாலினம்	சிறப்பு துறை	நிறுவனம்
A	ஆண்	நிதித்துறை	X
B	ஆண்/பெண்	வர்த்தகம்	Z
C	ஆண்	பொறியாளர்	Y
D	பெண்	மனிதவளம்	X
E	ஆண்	கணினி அறிவியல்	Y
F	ஆண்	வர்த்தகம்	Y
G	ஆண்/பெண்	நிதித்துறை	Z
H	ஆண்	மனிதவளம்	Z

1. C என்பவர் நிறுவனம் Y-யில் வேலை பார்க்கிறார்.
2. மனித வளத்தை சிறப்பு துறையாகக் கொண்ட P மற்றும் H முறையே X மற்றும் Z நிறுவனங்களில் வேலை பார்க்கிறார்கள்.
3. இரண்டு பெண்கள் முறையே D மற்றும் B அல்லது G.
4. E என்பவர் கணினி துறையில் சிறந்தவர்.

பயிற்சி 6A

குறிப்புகள் (கேள்விகள் 1 முதல் 6 வரை): கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

A, B, C, D, E மற்றும் F ஆகிய ஆறு மாணவர்கள் ஒரு மைதானத்தில் அமர்ந்துள்ளனர். A மற்றும் B நேரு மன்றத்தை சேர்ந்தவர்கள் மற்ற அனைவரும் காந்தி மைதானத்தை சேர்ந்தவர்கள். D மற்றும் F இருவரும் உயரமானவர்கள். மற்ற அனைவரும் குள்ளமானவர்கள். A, C மற்றும் D மூவரும் கண் கண்ணாடி அணிந்துள்ளனர். மற்ற எவரும் கண்ணாடி அணியவில்லை.

1. கண் கண்ணாடி அணியாத எந்த இரு மாணவர்கள் குள்ளமானவர்கள்?
   (a) A மற்றும் F (b) C மற்றும் E
   (c) B மற்றும் E (d) E மற்றும் F
   (e) இவற்றுள் எதுவுமில்லை
2. காந்தி மன்றத்தைச் சேர்ந்த எந்த குள்ள மாணவர் கண்ணாடி அணியவில்லை?
   (a) F (b) E (c) B (d) A
   (e) தகவல் போதுமானதாக இல்லை
3. காந்தி மன்றத்தைச் சேர்ந்த எந்த உயரமான மாணவர் கண்ணாடி அணியவில்லை?
   (a) B (b) C (c) E (d) F
   (e) இவற்றுள் எதுவுமில்லை
4. A, B, C, D, E மற்றும் F ஆகிய ஆறு மாணவர்கள் மைதானத்தில் அமர்ந்துள்ளனர். A மற்றும் B ஆகியோர் டெல்லியைச் சேர்ந்தவர்கள் மற்ற அனைவரும் பெங்களூரைச் சேர்ந்தவர்கள். D மற்றும் F ஆகியோர் உயரமானவர்கள். மற்ற அனைவரும் குள்ளமானவர்கள். A, C மற்றும் D ஆகியோர் பெண்கள் மற்ற அனைவரும் ஆண்கள் பெங்களூருவைச் சேர்ந்த எந்த பெண் உயரமானவர்?
   (a) C (b) D (c) E (d) F
5. ஒரு அலமாரியில் அருகருகே அடுக்கப்பட்ட கோப்புகள் A, B, C, D, E மற்றும் F, B, C, F ஆகிய கோப்புகள் பச்சை உறைகளையும் மற்றவை மஞ்சள் உறைகளையும் கொண்டுள்ளன. A, D, B ஆகியவை புதிய கோப்புகள் மற்றவை பழைய கோப்புகள். A, C, B ஆகியவை சட்ட புத்தகங்கள் மற்றவை மருத்துவ கோப்புகள் எந்த இரு கோப்புகள் பச்சை நிற உறையுள்ள மருத்துவ கோப்புகள்?
   (a) B, C (b) C, D
   (c) C, E (d) E, F
6. ஆறு பெண்கள் கொண்ட குழுவில், நான்கு பெண்கள் நடனக் கலைஞர்கள், நான்கு பெண்கள் பாடுபவர்கள், ஒருவர் நடிகை மற்றும் மூன்று பெண்கள் வயலின் கலைஞர்கள். கிரிஜா மற்றும் வனஜா வயலின் கலைஞர்கள், ஆனால் ஜலஜா மற்றும் ஷைலஜா ஆகியோருக்கு வயலின் இசைக்க தெரியாது. ஷைலஜா மற்றும் தனுஜா நடனக் கலைஞர்கள். ஜலஜா, வனஜா, ஷைலஜா மற்றும் தனுஜா நால்வரும் பாடுபவர்கள். அவர்களில் இருவர் வயலின் கலைஞர்களும் ஆவர். பூஜா நடிகை எனில், கீழே உள்ளவர்களுள் யாருக்கு நடனமாடவும், வயலின் இசைக்கவும் தெரியும்?
   (a) ஜலஜா (b) ஹைலஜா
   (c) தனுஜா (d) பூஜா

குறிப்புகள் (கேள்விகள் 7 முதல் 10 வரை): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*

ராஜ், பிரேம், வேத் மற்றும் அசோக் ஆகிய நான்கு இளைஞர்கள் சுஷ்மா, குசும், விமலா மற்றும் பூனம் ஆகிய நான்கு பெண்களுடன் நட்பில் உள்ளனர். சுஷ்மா மற்றும் விமலா ஆகியோர் தோழிகள். வேதினுடைய பெண் தோழிக்கு சுஷ்மாவையும் விமலாவையும் பிடிக்காது. வேதை குசும் கண்டு கொள்ள மாட்டார். சுஷ்மாவிக்கு ராஜை பிடிக்காது.

7. ராஜின் பெண் தோழி யார்?
   (*a*) சுஷ்மா (*b*) குசும்
   (*c*) விமலா (*d*) பூனம்

8. சுஷ்மா யாருடன் நட்பில் உள்ளார்?
   (*a*) ராஜ் (*b*) பிரேம்
   (*c*) வேத் (*d*) அசோக்

9. பூனமினுடைய ஆண் நண்பர் யார்?
   (*a*) அசோக் (*b*) வேத்
   (*c*) பிரேம் (*d*) ராஜ்

10. யாருக்கு சுஷ்மாவையும், விமலாவையும் பிடிக்காது?
   (*a*) பூனம் (*b*) ராஜ்
   (*c*) அசோக் (*d*) வேத்

குறிப்புகள் (கேள்விகள் 11 முதல் 14 வரை): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.* **(S.B.I.P.O. 2000)**

(*i*) *A*, *B*, *C*, *D* மற்றும் *E* ஆகிய ஐந்து வகை அட்டைகள் உள்ளன. இவைகளை சிவப்பு, மஞ்சள் மற்றும் ப்ரௌன் நிறம் கொண்ட உறைகளில் வைக்க வேண்டும். ஒவ்வொரு நிறத்திலும் ஐந்து உறைகள் உள்ளன.

(*ii*) *B*, *D* மற்றும் *E* வகை அட்டைகள் சிவப்பு உறையில் வைக்கப்பட வேண்டும். *A*, *B* மற்றும் *C* வகை அட்டைகள் மஞ்சள் உறையில் வைக்கப்பட வேண்டும். *C*, *D* மற்றும் *E* வகை அட்டைகள் ப்ரௌன் நிற உறையில் வைக்கப் பட வேண்டும்.

(*iii*) *B* மற்றும் *D* வகையில் ஒவ்வொன்றிலும் இரண்டு அட்டைகள் சிவப்பு உறையில் வைக்கப்பட வேண்டும்.

11. கீழே உள்ளவற்றுள் அட்டைவகை – உறையின் நிறச் சேர்க்கைகள் மிகச் சரியானது?
   (*a*) *A*-2, *B*-2, *C*-1: மஞ்சள்
   (*b*) *C*-2, *D*-1, *E*-2: ப்ரௌன்
   (*c*) *C*-1, *D*-2, *E*-2: ப்ரௌன்
   (*d*) *B*-2, *D*-2, *E*-2: சிவப்பு
   (*e*) இவற்றுள் எதுவுமில்லை

12. கீழே உள்ளவற்றுள் உறைகளின் நிறம் மற்றும் அட்டைகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் சேர்க்கைகளில் எது (*E*-வகை அட்டையைப் பொறுத்த வரையில்) மிகச் சரியானது?
   (*a*) சிவப்பு - 1, மஞ்சள் - 2
   (*b*) மஞ்சள் - 1, ப்ரௌன் - 2
   (*c*) சிவப்பு - 2, ப்ரௌன் - 1
   (*d*) சிவப்பு - 2, மஞ்சள் - 1
   (*e*) இவற்றில் எதுவுமில்லை

13. கீழே உள்ளவற்றுள் எந்த வகை அட்டைகள், மற்றும் அட்டைகளின் எண்ணிக்கையின் சேர்க்கை மஞ்சள் நிற உறைகளைப் பொறுத்த வரையில் எது மிகச் சரியானது?
   (*a*) *A*-2, *E*-1, *D*-2 (*b*) *A*-2, *B*-1, *C*-2
   (*c*) *A*-3, *B*-1, *C*-1 (*d*) *B*-1, *C*-2, *D*-2
   (*e*) இவற்றுள் எதுவுமில்லை

14. *A*, *B* மற்றும் *C* ஆகிய மூன்று நபர்கள் கருப்பு, நீலம் மற்றும் ஆரஞ்சு நிற சட்டைகளை (அதே வரிசையில் இருக்க வேண்டிய அவசியமில்லை)-யும் பச்சை, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிற கால்சட்டைகளையும் (அதே வரிசையில் இருக்க வேண்டிய அவசியமில்லை) அணிந்துள்ளனர். எந்த ஒரு நபரும் ஒரே நிறத்தில் சட்டை மற்றும் கால் சட்டைகளை அணியவில்லை. மேலும், கொடுக்கப்பட்டுள்ளது; **(U.P.S.C. 2005)**
   1. கருப்பு நிற சட்டையை *A* அணியவில்லை.
   2. நீல நிற சட்டையை *B* அணியவில்லை.
   3. ஆரஞ்சு நிற சட்டையை *C* அணியவில்லை.
   4. பச்சை நிற கால் சட்டையை *D* அணியவில்லை.
   5. ஆரஞ்சு நிற கால் சட்டையை *B* அணிந்துள்ளார்.

   எந்த நிற கால் சட்டை மற்றும் சட்டையை *C* அணிந்துள்ளார்?
   (*a*) மஞ்சள் மற்றும் கருப்பு
   (*b*) மஞ்சள் மற்றும் நீலம்
   (*c*) பச்சை மற்றும் நீலம்
   (*d*) ஆரஞ்சு மற்றும் கருப்பு

குறிப்புகள் (கேள்விகள் 15 முதல் 19 வரை): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:* **(Bank Recruitment, 2004)**

A, *D*, *Y*, *U*, *P*, *Q* மற்றும் *J* ஆகிய 7 பையன்கள் ஆஷியானா, டாப்-வியூ மற்றும் ரிட்ஜ் ஆகிய வெவ்வேறு கட்டிடங்களில் வசிக்கிறார்கள். ஒவ்வொரு பையனும் வெவ்வேறு நிறங்களில் பட்டம் விடுகிறார்கள். அதாவது, சிவப்பு, பச்சை, நீலம், வெள்ளை, கருப்பு, மஞ்சள் மற்றும் இளஞ்சிவப்பு ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. மூன்று பையன்களுக்கு அதிகமாகவோ அல்லது இருவருக்கு குறைவாகவே எந்த ஒரு கட்டிடத்திலும் வசிக்கவில்லை. *J* வசிக்கும் அதே கட்டிடத்தில் அதாவது, ஆஷியானாவில் வசிக்கும் *Q* இளஞ்சிவப்பு பட்டத்தை பறக்க விடுகிறார். கருப்பு பட்டத்தை பறக்க விடும் *Y* ரிட்ஜ் கட்டிடத்தில் வசிக்கவில்லை. மஞ்சள் பட்டத்தை பறக்க விடும் *U* என்பவர் *A* அல்லது *P* வசிக்கும் கட்டிடத்தில் இல்லை. ரிட்ஜ் கட்டிடத்தில் கூடுதலாக ஒருவருடன் வசிக்கும் *D* பச்சை பட்டத்தை பறக்க விடுகிறார். டாப்-வியூ கட்டிடத்தில் உள்ள யாரும் வெள்ளை பட்டத்தை பறக்க விடவில்லை.

15. ரிட்ஜ் கட்டிடத்தில் யார் வசிக்கிறார்?
(a) D, U (b) D, A, P
(c) Y, A, P (d) A, P
(e) இவற்றுள் எதுவுமில்லை

16. நீல நிற பட்டத்தை யார் பறக்க விடுகிறார்கள்?
(a) A (b) J (c) P
(d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றுள் எதுவுமில்லை

17. சிவப்பு நிற பட்டத்தை யார் பறக்க விடுகிறார்?
(a) A (b) J (c) P
(d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றுள் எதுவுமில்லை

18. யார் டாப்-வியூ கட்டிடத்தில் வசிக்கிறார்?
(a) Y, J, P (b) A, P
(c) A, P, D (d) Y, U, J
(e) இவற்றுள் எதுவுமில்லை

19. J எந்த நிற பட்டத்தை பறக்க விடுகிறார்?
(a) நீலம் (b) வெள்ளை (c) கருப்பு
(d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 20 முதல் 24 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின்னர் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

(i) A, B, C, D மற்றும் E ஆகிய ஐந்து நபர்கள் கொண்ட ஒரு குழு இருக்கிறது.
(ii) அவர்களில் ஒருவர் தோட்டக்கலை நிபுணர். ஒருவர் இயற்பியலாளர், ஒருவர் பத்திரிகையாளர், ஒருவர் தொழிலதிபர் மற்றும் ஒருவர் வழக்கறிஞர்.
(iii) A, C மற்றும் வழக்கறிஞர் ஆகிய மூவரும் காபி குடிப்பதை விட தேநீர் குடிப்பதை விரும்புவர்கள் — B மற்றும் பத்திருகையாளர் இருவரும் தேநீரை விட காபியை விரும்புகிறவர்கள்.
(iv) தொழிலதிபர் மற்றும் D மற்றும் A ஆகியோர் ஒருவருக் கொருவர் நண்பர்கள். ஆனால் அவர்களில் இருவர் தேநீரை விட காபியை விரும்புகிறவர்கள்.
(v) தோட்டக்கலை நிபுணர் C-யின் சகோதரர்.

20. யார் தோட்டக்கலை நிபுணர்?
(a) A (b) B (c) C (d) D
(e) E

21. யார் தொழிலதிபர்?
(a) E (b) C (c) B (d) A
(e) D

22. கீழே உள்ளவற்றுள் எந்த குழுவில் உள்ள ஒரு நபர் வழக்கறிஞர் அல்ல ஆனால் தேநீரை விரும்புபவர்?
(a) ACE (b) DE (c) BCE (d) BD
(e) இவற்றுள் எதுவுமில்லை

23. யார் இயற்பியலாளர்?
(a) A (b) E (c) D (d) C
(e) B

24. மேலே உள்ள வாக்கியங்களில் எது கூடுதலான தகவல்?
(a) (iii) (b) (iv) (c) (ii) (d) (v)
(e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 25 முதல் 28 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின்னர் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(JMET, 2005)**

L, M, N, O, P மற்றும் Q ஆகிய பேராசிரியர்களைக் கொண்ட ஒரு வணிகப் பள்ளி பாட மேலாண்மை என்கிற ஒரு புது திட்டத்தை அறிமுகப்படுத்த முடிவு செய்தது. ஒவ்வொரு பேராசிரியரும் ஒரு பாடத்தை ஒருங்கிணைக்கவும் மற்றொரு பாடத்தை ஆதரிக்கவும் வேண்டும். இந்த செமஸ்டர் தேர்வில், O-வின் ஆதரவு பாடம் நிதி, அதே நேரத்தில் மற்ற மூவருக்கும் அது ஒருங்கிணைந்த பாடமாகும். P மற்றும் Q இருவரும் சந்தைப் படுத்துதலை ஒரு பாடமாகக் கொண்டுள்ளனர். Q-வின் ஒருங்கிணைப்பு பாடம் இயக்கம். N மற்றும் P இருவருக்கும் அது ஆதரிப்பு பாடம் ஆகும். நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பம் இரண்டும் L-ன் பாடங்கள். L மற்றும் O இருவரும் ஒரே பாடங்களைக் கொண்டுள்ளனர். ஒரே ஒரு பேராசிரியரின் ஆதரவு பாடம் யுக்தி ஆகும்.

25. தகவல் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பவர் யார்?
(a) L (b) N (c) O
(d) இவற்றுள் எதுவுமில்லை

26. M ஆதரிக்கும் பாடம் எது?
(a) இயக்கம் (b) தகவல் தொழில்நுட்பம்
(c) யுக்தி (d) நிதி

27. கீழே உள்ளவர்களுள் எந்த ஜோடி நிதி பாடத்தை ஒருங்கிணைப்பு பாடமாகக் கொண்டுள்ளனர்?
(a) L மற்றும் N (b) N மற்றும் O
(c) L, M மற்றும் N (d) M, N மற்றும் O

28. கீழே உள்ளவற்றுள் எந்த பாடத்துக்கு ஒரே ஒரு ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆதரவு பேராசிரியர் உள்ளார்?
(a) யுக்தி (b) சந்தைப்படுத்துதல்
(c) இயக்கம் (d) நிதி

குறிப்புகள் (கேள்விகள் 29 முதல் 32 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின்னர் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

(i) ஜயந்த, கமல், நமிதா, ஆஷா மற்றும் தன்மய் ஆகியோர் ஒரு குடும்பத்தின் ஐந்து உறுப்பினர்கள்.
(ii) அவர்களின் பிறந்த தேதிகள் ஜனவரி முதல் மே வரை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதத்தில் பிறந்தவர்கள்.
(iii) அவர்களில் ஒவ்வொருவரும் தனது பிறந்த நாளுக்கு முறையே பெங்காலி இனிப்புகள், சாக்லேட்டுகள், கேக்குகள், ஐஸ்-கிரீம் மற்றும் உலர் பழங்கள் ஆகியவற்றை விரும்புகின்றனர்.
(iv) கேக்குகளை விரும்புபவர் கொடுக்கப்பட்ட மாதங்களில் மிகச் சரியான நடு மாதத்தில் பிறந்தவர்.
(v) ஆஷாவிறகு ஐஸ்-கிரீம் பிடிக்காது. ஆனால் பிப்ரவரி மாதத்தில் ஜெயந்திற்காக சாக்லெட்டுகள் வாங்கி வருவார்.

(vi) பெங்காலி இனிப்புகளை விரும்பும் தன்மய் நமிதா பிறந்த மாதத்திற்கு அடுத்த மாதத்தில் பிறந்தவர்.

(vii) நமிதா உலர் பழங்களையோ அல்லது ஐஸ்-கிரீமையோ விரும்பவில்லை.

29. ஆஷாவின் தேர்வு எது?
(a) கேக்குகள்
(b) உலர் பழங்கள்
(c) பெங்காலி இனிப்புகள்
(d) கண்டுபிடிக்க முடியாது
(e) இவற்றில் எதுவுமில்லை

30. ஜெயந்தைப் பொறுத்தவரையில் கீழ் உள்ளவற்றுள் எந்த மாதம் – இனிப்பு ஜோடி சரியானது?
(a) மார்ச் - கேக்குகள்
(b) பிப்ரவரி - கேக்குகள்
(c) பிப்ரவரி - ஐஸ்-கிரீம்
(d) கண்டுபிடிக்க முடியாது
(e) இவற்றில் எதுவுமில்லை

31. கமலின் தேர்வு என்ன?
(a) ஐஸ்-கிரீம் (b) பெங்காலி இனிப்புகள்
(c) உலர் பழங்கள் (d) கண்டுபிடிக்க முடியாது
(e) இவற்றுள் எதுவுமில்லை

32. கமல் எந்த மாதத்தில் பிறந்தார்?
(a) ஜனவரி (b) மே
(c) ஜனவரி அல்லது மே
(d) கண்டுபிடிக்க முடியாது
(e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (*கேள்விகள் 33 முதல் 36 வரை*): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*

(Management Trainees, 2005)

மூன்று பெண்கள் மற்றும் நான்கு ஆண்கள் கொண்ட ஒரு குழு. அதாவது., *P*, *K*, *R*, *Q*, *J*, *V* மற்றும் *X*. ஒவ்வொருவரும் வெவ்வேறு தொழிலில் உள்ளவர்கள். அதாவது, வழக்கறிஞர், பயண முகவர், விமான பணிப்பெண், மருத்துவர், பேராசிரியர், ஆலோசகர் மற்றும் நகைக் கடைக்காரர். ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக கார் உள்ளது. அதாவது, ஆல்டோ, கொரோலா, சான்ட்ரோ, லான்ஸர், ஐகான், ஸ்கார்பியோ மற்றும் எஸ்டீம். ஆனால் இதே வரிசையில் இருக்க வேண்டுமென அவசியம் இல்லை. பெண்களில் எவரும் ஆலோசகரோ அல்லது வழக்கறிஞரோ அல்ல. *R* என்பவர் விமான-பணிப்பெண் மற்றும் அவரிடம் ஐகான் கார் உள்ளது. *P*-யிடம் ஸ்கார்பியோ கார் உள்ளது. *K* ஒரு மருத்துவர் அல்ல. *J* என்பவர் நகைக் கடைக்காரர் மற்றும் அவரிடம் கொரோலா கார் உள்ளது. *V* ஒரு வழக்கறிஞர் மற்றும் அவரிடம் ஆல்டோ கார் உள்ளது. *X* ஒரு ஆலோசகர் மற்றும் அவரிடம் சான்ட்ரோ கார் உள்ளது. மருத்துவரிடம் எஸ்டீம் கார் உள்ளது. பேராசிரியரிடம் ஸ்கார்பியோ கார் உள்ளது. பயண முகவரிடம் ஆல்டோ கார் உள்ளது. எந்த ஒரு பெண்ணிடமும் ஸ்கார்பியோ கார் இல்லை.

33. அந்த குழுவில் உள்ள மூன்று பெண்கள் யார். யார்?
(a) *V*, *R*, *K*
(b) *R*, *P*, *J*
(c) *R*, *K*, *Q*
(d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றுள் எதுவுமில்லை

34. *Q*-விடம் எந்த கார் உள்ளது?
(a) எஸ்டீம் (b) லான்ஸர்
(c) ஆல்டோ (d) சான்ட்ரோ
(e) இவற்றுள் எதுவுமில்லை

35. லான்சர் கார் யாரிடம் உள்ளது?
(a) *V* (b) *X* (c) *K*
(d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றுள் எதுவுமில்லை

36. *K*-யின் தொழில் என்ன?
(a) மருத்துவர்
(b) பேராசிரியர்
(c) பயண முகவர்
(d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (*கேள்விகள் 37 முதல் 41 வரை*): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:* **(B.B.A. 2004)**

A, *B*, *C* மற்றும் *D* ஆகிய நான்கு நபர்கள் தங்கள் ஒவ்வொருவரிடமும் 4 அட்டைகளை கொண்டுள்ளனர். அவர்கள் ஒவ்வொரிடமும் ஏஸ், கிங், குயின், ஜாக் ஆகியவை உள்ளன. எல்லோரிடமும் (ஸ்பேட்ஸ், ஹார்ட்ஸ், க்ளப்ஸ் மற்றும் டயமண்ட்ஸ்) ஆகிய அனைத்து வகைகளும் உள்ளன.

I. *A*-யிடம் ஸ்பேட்ஸின் ஏஸ், மற்றும் டயமண்டின், குயின் ஆகியவை உள்ளன.
II. *B*-யிடம் க்ளப்ஸின் ஏஸ் மற்றும் டயமண்டின் கிங் ஆகியவை உள்ளன.
III. *C*-யிடம் க்ளப்ஸின் குயின் மற்றும் ஸ்பேட்ஸின் கிங் ஆகியவை உள்ளன.
IV. *D*-யிடம் க்ளப்ஸின் ஜாக் உள்ளது.

37. டயமண்டின் ஏஸ் யாரிடம் உள்ளது?
(a) *A* (b) *B* (c) *C* (d) *D*

38. ஹார்ட்ஸின் ஜாக் யாரிடம் உள்ளது?
(a) *A* (b) *B* (c) *C* (d) *D*

39. ஸ்பேஸ்டின் குயின் யாரிடம் உள்ளது?
(a) *A* (b) *B* (c) *C* (d) *D*

40. *C*-யிடம் எந்த அட்டை உள்ளது?
(a) ஹார்ட்ஸின் ஏஸ் (b) ஸ்பேட்ஸின் ஜாக்
(c) ஹார்ஸின் கிங் (d) ஸ்பேட்ஸின் குயின்

41. *D*-யிடம் எந்த அட்டை உள்ளது?
(a) ஹார்ட்ஸின் ஏஸ் (b) ஹார்ட்ஸின் குயின்
(c) ஹார்ட்ஸின் கிங் (d) கிளப்ஸின் குயின்

குறிப்புகள் (கேள்விகள் 42 முதல் 45 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: (S.B.I.P.O. 2001)

(*i*) *A*, *B*, *C*, *D*, *E* மற்றும் *F* ஆகியோர் ஒரு குழுவில் உள்ள ஆறு உறுப்பினர்கள். அவர்களில் மூன்று பெண் உறுப்பினர்கள். பெண்கள் மூவரும் முறையே கணக்கு, நிர்வாகம் மற்றும் பணியாளர்கள் துறை ஆகிய வெவ்வேறு துறைகளில் வேலை பார்க்கின்றனர் — மூவரும் முறையே I-வது, II-வது மற்றும் III-வது தளங்களில் உள்ளனர். ஒரே துறையில் வேலை பார்ப்பவர்கள் ஒரே தளத்தில் இல்லை. ஒவ்வொரு தளத்திலும் இரண்டு நபர்கள் வேலை செய்கிறார்கள்.

(*ii*) எந்த இரு பெண் ஊழியர்களும் ஒரே துறையில் வேலை செய்யவில்லை. ஒரே தளத்திலும் அமரவில்லை. *B* மற்றும் *E* ஒரே துறையில் ஆனால் பணியாளர்கள் துறையில் வேலை செய்யவில்லை. *D* நிர்வாகத் துறையில் வேலை செய்கிறார். *E* மற்றும் *A* முறையே I-வது மற்றும் III-வது தளங்களில் அமர்கிறார்கள். இருவரும் ஒரே துறையில் வேலை செய்கிறார்கள். *D*, ஒரு பெண் II-வது தளத்தில் வேலை செய்யவில்லை. *C*, ஒரு ஆண் I-வது தளத்தில் வேலை செய்கிறார்.

42. இவர்களுள் எந்த குழு பெண் ஊழியர்கள்.
(*a*) *ADF* (*b*) *CDF* (*c*) *DEF*
(*d*) தகவல் போதுமானதாக இல்லை
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

43. கீழே உள்ளவற்றுள் எந்த குழு II-வது தளத்தில் வேலை செய்கின்றனர்?
(*a*) *AE* (*b*) *BD* (*c*) *BF* (*d*) *CF*
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

44. நிர்வாகத் துறையில் கீழே உள்ளவர்களுள் எந்த குழு வேலை செய்கின்றனர்?
(*a*) *BD* (*b*) *CD* (*c*) *CE*
(*d*) தகவல் போதுமானதாக இல்லை
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

45. *F* எந்த துறையில் வேலை பார்க்கிறார்?
(*a*) நிர்வாகம்
(*b*) கணக்கு
(*c*) பணியாளர்கள்
(*d*) கணக்கு அல்லது பணியாளர்கள்
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 46 முதல் 50 வரை): கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: (U.P.S.C. 2002)

சுமித், பிலிப்ஸ், வாசிம், பிஷன் மற்றும் சேத்தன் ஆகிய ஐவரும் கல்லூரி கிரிக்கெட் டீமில் உள்ளனர். அவர்களின் சொந்த ஊர்கள் முறையே சூரத், புனே, வாரங்கல், பெங்களூரு மற்றும் சண்டிகர். ஆனால் இதே வரிசையில் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. அவர்கள் ஐவரும் ஸ்பின்னர், பேஸ்-பௌலர், விக்கெட்-கீப்பர், பேட்ஸ்மென் மற்றும் கேப்டன் ஆகிய பதவிகளில் உள்ளனர். மீண்டும் அதே வரிசையில் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை.

I. அவர்களின் பெயர்கள், சொந்த ஊர் மற்றும் எந்த துறையில் சிறந்தவர் ஆகியவை ஒரே எழுத்தில் தொடங்க வேண்டும் என்கிற அவசியமில்லை.
II. பிலிப்ஸ் என்பவரோ வாசிம் என்பவரோ கேப்டன் அல்ல. அவர்கள் சூரத் அல்லது பெங்களூரைச் சேர்ந்தவர்கள் அல்ல.
III. சுமித் விக்கெட்-கீப்பரும் அல்ல பேட்ஸ்மென்னும் அல்ல.
IV. பிஷனின் சொந்த ஊர் புனே அல்ல.
V. பெங்களூரிலிருந்து வந்த வீரர் விக்கெட்-கீப்பர் ஆவார்.
VI. கேப்டனுடைய சொந்த ஊர் புனே. பேட்ஸ்மெனுடைய சொந்த ஊர் வாரங்கல் அல்ல.

46. ஸ்பின்னரின் சொந்த ஊர்?
(*a*) சண்டிகர் (*b*) பெங்களூர்
(*c*) வாரங்கல் (*d*) புனே

47. சண்டிகர் யாருடைய சொந்த ஊர்?
(*a*) சுமித் (*b*) பிஷன் (*c*) வாசிம் (*d*) பிலிப்ஸ்

48. யார் பேஸ்-பௌலர்?
(*a*) சேத்தன் (*b*) வாசிம்
(*c*) சுமித் (*d*) பிஷன்

49. யார் ஸ்பின்னர்?
(*a*) பிலிப்ஸ் (*b*) சேட்டன்
(*c*) பிஷன் (*d*) வாசிம்

50. சேட்டனின் சொந்த ஊர் எது?
(*a*) புனே (*b*) சூரத்
(*c*) வாரங்கல் (*d*) பெங்களூர்

விடைகள் (பயிற்சி 6A)

1. (*c*)	2. (*b*)	3. (*d*)	4. (*b*)	5. (*d*)	6. (*c*)	7. (*b*)	8. (*d*)	9. (*b*)	10. (*a*)
11. (*b*)	12. (*e*)	13. (*c*)	14. (*c*)	15. (*a*)	16. (*a*)	17. (*c*)	18. (*e*)	19. (*b*)	20. (*a*)
21. (*c*)	22. (*e*)	23. (*d*)	24. (*e*)	25. (*c*)	26. (*c*)	27. (*c*)	28. (*b*)	29. (*b*)	30. (*e*)
31. (*a*)	32. (*c*)	33. (*c*)	34. (*a*)	35. (*a*)	36. (*c*)	37. (*d*)	38. (*a*)	39. (*d*)	40. (*a*)
41. (*b*)	42. (*c*)	43. (*c*)	44. (*d*)	45. (*c*)	46. (*c*)	47. (*c*)	48. (*d*)	49. (*a*)	50. (*d*)

தீர்வுகள் (பயிற்சி 6A)

கேள்விகள் 1 முதல் 6:
கீழே உள்ளது போல் நாம் அட்டவணையை தயாரிப்போம்:

	நேரு மன்றம்	காந்தி மன்றம்	உயரம்	குள்ளம்	கண்ணாடி	கண்ணாடி இல்லை
A	✓			✓	✓	
B	✓			✓		✓
C		✓		✓	✓	
D		✓	✓		✓	
E		✓		✓		✓
F		✓	✓			✓

1. *B* மற்றும் *E* இருவரும் குள்ளமானவர்கள். ஆனால் கண்ணாடி அணியவில்லை.
2. *E* காந்தி மன்றத்தைச் சேர்ந்தவர். அவர் குள்ளமானவர். கண்ணாடி அணியவில்லை.
3. *F* காந்தி மன்றத்தைச் சேர்ந்தவர். அவர் உயரமானவர். கண்ணாடி அணியவில்லை.
4.

	டெல்லி	பெங்களூர்	உயரம்	குள்ளம்	பெண்கள்	ஆண்கள்
A	✓			✓	✓	
B	✓			✓		✓
C		✓		✓	✓	
D		✓	✓		✓	
E		✓		✓		✓
F		✓	✓			✓

பெங்களூரைச் சேர்ந்த *D* உயரமான பெண் ஆவார்.

5.

	பச்சை உறை	மஞ்சள் உறை	புது கோப்புகள்	பழைய கோப்புகள்	சட்ட அறிக்கை	மருத்துவ குறிப்புகள்
A		✓	✓		✓	
B	✓		✓		✓	
C	✓			✓	✓	
D		✓	✓			✓
E	✓			✓		✓
F	✓			✓		✓

E மற்றும் *F* ஆகியவை பழைய கோப்புகள் அவை பச்சை உறையை கொண்டுள்ளன மற்றும் அவை மருத்துவ குறிப்புகள்.

6. குழுவில் பாடுபவர்கள் நால்வர் மற்றும் ஒரு நடிகையும் கொடுக்கப்பட்டுள்ளனர். இரண்டு நடனக் கலைஞர்கள் முறையே ஷைலஜா மற்றும் தனுஜா. வயலின் கலைஞர்கள் முறையே கிரிஜா மற்றும் வனஜா. ஜலஜா மற்றும் ஷைலஜா வயலின் கலைஞர்களாக இருக்க முடியாது. எனவே, மீதமுள்ள இரண்டு வயலின் கலைஞர்கள் முறையே தனுஜா மற்றும் பூஜா. எனவே, தனுஜா வயலின் கலைஞர் மற்றும் நடனக் கலைஞரும் ஆவார்.

கேள்விகள் 7 முதல் 10:
சுஷ்மா மற்றும் விமலா ஆகியோர் தோழிகள். பிரேமின் பெண் தோழி சுஷ்மாவுடன் நட்பில் உள்ளார். எனவே, **பிரேமின் பெண் தோழி விமலா** என்பது தெளிவு.

வேதினுடைய பெண் தோழிக்கு சுஷ்மா மற்றும் விமலாவைப் பிடிக்காது. எனவே அவள் குசும் அல்லது பூனம். ஆனால் குசும் வேதைக் கண்டு கொள்வதில்லை. எனவே, **வேதின் பெண் தோழி பூனம்** ஆவார்.

சுஷ்மாவிற்கு ராஜைப் பிடிக்காது. எனவே, **ராஜின் பெண் தோழி குசும்** ஆவார்.

அசோக்கின் பெண் தோழி சுஷ்மா ஆவார்.

7. ராஜினுடைய பெண் தோழி குசும் ஆவார்.
8. சுஷ்மா அசோக்கிடம் நட்பில் உள்ளார்.
9. பூனமின் ஆண் தோழர் வேத் ஆவார்.
10. வேதின் பெண் தோழி. அதாவது, பூனமிற்கு சுஷ்மா மற்றும் விமலாவைப் பிடிக்காது.

கேள்விகள் 11 முதல் 14:

இரண்டு *B*-வகை மற்றும் இரண்டு *D*-வகை அட்டைகள் சிவப்பு உறைகளில் உள்ளன. ஐந்து சிவப்பு உறைகள் உள்ளதால், ஒரே ஒரு *E*-வகை அட்டை மட்டும் சிவப்பு உறையில் இருக்கும். மீதமுள்ள இரண்டு *E*-வகை மற்றும் ஒரு வகை *D*-வகை அட்டைகளும் ப்ரௌன் நிற உறைகளில் போடப்பட்டிருக்கும். ப்ரௌன் நிற உறையில் போடப்பட்டுள்ள இரண்டு அட்டைகளும் *C*-வகை ஆகும். மஞ்சள் நிற உறையில் ஒரு *B*-வகை, ஒரு *C*-வகை மற்றும் மூன்று *A*-வகை அட்டைகள் உள்ளன.

உறை	அட்டைகள்				
சிவப்பு	*B*	*B*	*D*	*D*	*E*
மஞ்சள்	*A*	*A*	*A*	*B*	*C*
ப்ரௌன்	*C*	*C*	*D*	*E*	*E*

11. ப்ரௌன் உறையில் இரண்டு *C*-வகை, ஒரு *D*-வகை, மற்றும் இரண்டு *E*-வகை அட்டைகள் உள்ளன.
12. இரண்டு *E*-வகை அட்டைகள் ப்ரௌன் நிற உறைகளில் வைக்கப்பட்டுள்ளன. மற்றும் ஒரு *E*-வகை அட்டை சிவப்பு நிற அட்டையில் வைக்கப்பட்டுள்ளது.
13. மஞ்சள் நிற உறைகளில் மூன்று *A*-வகை அட்டைகள், ஒரு *B*-வகை மற்றும் ஒரு *C*-வகை அட்டைகள் வைக்கப்பட்டுள்ளன.
14. *B* என்பவர் ஆரஞ்சு கால் சட்டை அணிந்துள்ளார். *A* ஆரஞ்சு கால் சட்டையோ அல்லது பச்சை கால் சட்டையையோ அணியவில்லை. ஆகவே, *A* மஞ்சள் நிற கால்சட்டையை அணிந்துள்ளார். எனவே, *C* பச்சை நிற கால் சட்டையை அணிந்துள்ளார். *B* ஆரஞ்சு நிற கால்சட்டயை அணிந்துள்ளார். எனவே, அவர் ஆரஞ்சு நிற மேல்சட்டையை அணியவில்லை. மேலும் *B* நீல நிற மேல்சட்டையை அணியவில்லை. ஆகையால், *B* கருப்பு நிற ஸ்கர்ட் அணிந்துள்ளார். எனவே, *C* கருப்பு நிற அல்லது ஆரஞ்சு நிற ஸ்கர்ட்டை அணியவில்லை. எனவே, *C* நீல நிற ஸ்கர்ட் அணிந்துள்ளார்.

கேள்விகள் 15 முதல் 19:

Q மற்றும் *J* மட்டுமே ஆஷியானாவில் வசிக்கிறார்கள். *Y* ரிட்ஜ் கட்டிடத்தில் வசிக்கவில்லை. எனவே, *Y* டாப்-வியூ கட்டிடத்தில் வசிக்கிறார். ரிட்ஜ் கட்டிடத்தில் மேலும் ஒருவருடன் *D* வசிக்கிறார். *A* மற்றும் *D* வசிக்காத வேறொரு கட்டிடத்தில் *U* வசிக்கிறார். எனவே *U* ரிட்ஜ் கட்டிடத்தில் வசிக்கிறார். *A* மற்றும் *P* ஆகியோர் டாப்-வியூ கட்டிடத்தில் வசிக்கின்றனர். *Q* இளஞ்சிவப்பு பட்டத்தையும். *Y* கருப்பு பட்டத்தையும், *U* மஞ்சள் பட்டத்தையும், *D* பச்சை பட்டத்தையும் பறக்க விடுகின்றனர். *A* மற்றும் *P* இருவரும் டாப்-வியூ கட்டிடத்தில் வசிக்கின்றனர். எனவே, அவர்களில் எவரும் வெள்ளை பட்டத்தை பறக்க விடவில்லை. ஆகையால், *J* வெள்ளை பட்டத்தை பறக்க விடுகிறார். *P* நீல பட்டத்தை பறக்க விடவில்லை என்பதால் *A* நீல பட்டத்தை பறக்க விடுகிறார். எனவே, *P* சிவப்பு பட்டத்தை பறக்க விடுகிறார்.

பையன்	*A*	*D*	*Y*	*U*	*P*	*Q*	*J*
கட்டிடம்	டாப் வியூ	ரிட்ஜ்	டாப் வியூ	ரிட்ஜ்	டாப் வியூ	ஆஷியானா	ஆஷியானா
பட்டம்	நீலம்	பச்சை	கருப்பு	மஞ்சள்	சிவப்பு	இளஞ்சிவப்பு	வெள்ளை

15. *D* மற்றும் *U* ரிட்ஜ் கட்டிடத்தில் வசிக்கின்றனர்.
16. *A* நீல நிற பட்டத்தை பறக்க விடுகிறார்.
17. *P* சிவப்பு நிற பட்டத்தை பறக்க விடுகிறார்.
18. *A*, *Y* மற்றும் *P* டாப்-வியூ கட்டிடத்தில் வசிக்கின்றனர்.
19. *J* வெள்ளை நிற பட்டத்தை பறக்க விடுகிறார்.

கேள்விகள் 20 முதல் 24:

A-க்கு தேநீர் பிடிக்கும். எனவே, (*iv*)-லிருந்து தெரிவது, தொழிலதிபர் மற்றும் *D* ஆகியோர் காபியை விரும்புகிறார்கள். (*iii*)-லிருந்து தெரிவது, *B* மற்றும் பத்திரிகையார் காபியை விரும்புகின்றனர். எனவே, *B* ஒரு தொழிலதிபர் மற்றும் *D* ஒரு பத்திரிகையாளர். *A*, *C* மற்றும் வழக்கறிஞர் மீதமுள்ளனர். *E* ஒரு வழக்கறிஞர் என்பது தெளிவு. தோட்டக் கலை நிபுணர் *C*-யின் சகோதரர். அது *A*-யாக மட்டுமே இருக்க முடியும். *C* ஒரு இயற்பியலாளர்.

	A	*B*	*C*	*D*	*E*
தொழில்	தோட்டக் கலை நிபுணர்	தொழிலதிபர்	இயற்பியலாளர்	பத்திரிகையாளர்	வழக்கறிஞர்
விருப்பம்	தேநீர்	காபி	தேநீர்	காபி	தேநீர்

20. *A* தோட்டக்கலை நிபுணர்.
21. *B* ஒரு தொழிலதிபர்.
22. *A* மற்றும் *C*, தேநீர்-யை விரும்புவர்கள் ஆனால் வழக்கறிஞர்கள் அல்ல.
23. *C* இயற்பியலாளர்.
24. கொடுக்கப்பட்ட தகவலை ஆராய்வதற்கு அனைத்து வாக்கியங்களும் தேவை. எனவே, எந்த ஒன்றும் மிகையானது அல்ல.

கேள்விகள் 25 முதல் 28:

O-வின் ஆதரவு பாடம் நிதி. L மற்றும் O இருவரும் ஒரே பாடத்தைக் கொண்டுள்ளனர். எனவே, O-வின் ஒருங்கிணைப்பு பாடம் தகவல் தொழில்நுட்பம் N மற்றும் P இருவரின் ஆதரவு பாடம் இயக்கம். P மற்றும் Q ஆகியோரின் ஒரு பாடம் சந்தைப்படுத்துதல் என்பதால், P-யின் ஒருங்கிணைப்பு பாடம் சந்தைபடுத்துதல். அது Q வின் ஆதரவு பாடமாகும். O-வைத் தவிர மற்ற மூன்று பேராசிரியர்கள் நிதியை ஒருங்கிணைப்பு பாடமாகக் கொண்டுள்ளதால், மீதமுள்ள மூன்று பேராசிரியர்கள். அதாவது, L, M மற்றும் N நிதியை ஒருங்கிணைப்பு பாடமாகக் கொண்டுள்ளனர். எனவே, L-ன் ஆதரவு பாடம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் M-ன் ஆதரவு பாடம் யுக்தி.

தொழில்	L	M	N	O	P	Q
ஒருங்கிணைப்பு பாடம்	நிதி	நிதி	நிதி	தகவல் தொழில் நுட்பம்	சந்தை படுத்துதல்	இயக்கம்
ஆதரவு பாடம்	தகவல் தொழில் நுட்பம்	யுக்தி	இயக்கம்	நிதி	இயக்கம்	சந்தை படுத்துதல்

25. Q-வின் ஒருங்கிணைப்பு பாடம் தகவல் தொழில் நுட்பம்.
26. M-ன் ஆதரவு பாடம் யுக்தி
27. L, M மற்றும் N ஆகியோரின் ஒருங்கிணைப்பு பாடம் நிதி.
28. சந்தைப்படுத்துதல் பாடத்திற்கு ஒரே ஒரு ஒருங்கிளைப்பாளர் P-யும் ஒரே ஒரு ஆதரவாளர் பேராசிரியர் Q-வும் உள்ளனர்.

கேள்விகள் 29 முதல் 32:

(I) **தேர்வு:** ஜெயந்த்துக்கு சாக்லெட்டுகள் பிடிக்கும். தன்மய்க்கு பெங்காலி இனிப்புகள் பிடிக்கும். நமீதாவிற்கு உலர்பழங்கள் மற்றும் ஐஸ்-கிரீம் பிடிக்காது. ஆகையால், நமீதாவிற்கு கேக்குகள் பிடிக்கும். ஆஷாவிற்கு ஐஸ்-கிரீம் பிடிக்காது. அதனால் அவளுக்கு உலர் பழங்கள் பிடிக்கும். இறுதியாக கமலுக்கு ஐஸ்-கிரீம் பிடிக்கும்.

(II) **பிறந்த தேதி:** கேக்குகளை விரும்புவர் அதாவது நமீதா கொடுக்கப்பட்டுள்ள மாதங்களில் நடு மாதத்தில் பிறந்துள்ளார். அதாவது, மார்ச் மாதத்தில் நமீதா பிறந்த மாதத்திற்கு அடுத்த மாதத்தில் தன்மய் பிறந்தாள். அதாவது, ஏப்ரல். ஜெயந்த்தின் பிறந்த நாள் பிப்ரவரியில்.

நபர்	ஜெயந்த்	கமல்	நமிதா	ஆஷா	தன்மய்
தேர்வு	தோட்டக்கலை நிபுணர்	ஐஸ்கிரீம்	கேக்குகள்	உலர் பழங்கள்	பெங்காலி இனிப்புகள்
பிறந்த தேதி	பிப்ரவரி	ஜனவரி/மே	மார்ச்	ஜனவரி/மே	ஏப்ரல்

29. ஆஷாவின் தேர்வு உலர் பழங்கள்.
30. ஜெயந்த்திற்கான சரியான ஜோடி பிப்ரவரி-சாக்லெட்டுகள்.
31. கமலின் தேர்வு ஐஸ்-கிரீம்.
32. கமல் ஜனவரி அல்லது மே மாதத்தில் பிறந்துள்ளார்.

கேள்விகள் 33 முதல் 36:

R ஒரு விமான பணிப் பெண். J ஒரு நகைக் கடைக்காரர். V ஒரு வழக்கறிஞர், X ஒரு ஆலோசகர். R ஒரு பெண் J ஒரு ஆண். V மற்றும் X முறையே வழக்கறிஞர் மற்றும் ஆலோசகர். இருவரும் ஆண்கள். P-யிடம் ஸ்கார்பியோ உள்ளது. அவர் ஒரு ஆண். எனவே, K மற்றும் Q மீதமுள்ளனர் மற்றும் அந்த குழுவில் மூன்று பெண்கள் உள்ளனர். எனவே, K மற்றும் Q இருவரும் பெண்கள். P-யிடம் ஸ்கார்பியோ உள்ளதால், P ஒரு பேராசிரியர் ஆவார். K மருத்துவர் அல்ல. எனவே, K ஒரு பயண முகவர் மற்றும் அவரிடம் ஆல்டோ கார் உள்ளது. எனவே, Q ஒரு மருத்துவர் மற்றும் அவரிடம் எஸ்டீம் கார் உள்ளது. இறுதியாக, வழக்கறிஞரான V-யிடம் லான்சர் கார் உள்ளது.

நபர்	பாலினம்	தொழில்	கார்
P	ஆண்	பேராசிரியர்	ஸ்கார்பியோ
K	பெண்	பயண முகவர்	ஆல்டோ
R	பெண்	விமான பணிப்பெண்	ஐகான்
Q	பெண்	மருத்துவர்	எஸ்டீம்
J	ஆண்	நகை வியாபாரி	கொரோலா
V	ஆண்	வழக்கறிஞர்	லான்ஸர்
X	ஆண்	ஆலோசகர்	சான்ட்ரோ

33. K, R மற்றும் Q மூவரும் பெண்கள்.

34. Q-விடம் எஸ்டீம் கார் உள்ளது.

35. V-யிடம் லான்ஸர் கார் உள்ளது.

36. தொழில் முறையில் K என்பவர் ஒரு பயண முகவர்.

கேள்விகள் 37 முதல் 41:

B-யிடம் க்ளப்ஸின் ஏஸ், C-யிடம் க்ளப்ஸின் குயின் மற்றும் D-யிடம் க்ளப்ஸ்ஸின் ஜாக்கும் உள்ளது. A-யிடம் ஸ்பேட்ஸ்ஸின் ஏஸ், க்ளப்ஸின் கிங்க் மற்றும் டயமண்ட்ஸ்ஸின் குயின் உள்ளன. ஆகவே, A-யிடம் ஹார்ட்ஸின் ஜாக், C-யிடம் ஸ்பேஸ்ஸின் கிங்க் மற்றும் க்ளப்ஸின் குயின் உள்ளன. எனவே C-யிடம் ஹார்ட்ஸின் ஜாக் அல்லது ஏஸ் உள்ளது. ஆனால், A-யிடம் ஹார்ட்ஸின் ஜாக் உள்ளது. எனவே, C-யிடம் ஹார்ட்ஸின் ஏஸ் உள்ளது. C-யிடம் ஹார்ட்ஸின் ஏஸ், ஸ்பேட்ஸின் கிங் மற்றும் க்ளப்ஸின் குயின் உள்ளது. எனவே, C-யிடம் டயமண்ட்ஸின் ஜாக் உள்ளது. B-யிடம் க்ளப்ஸின் ஏஸ் மற்றும் டயமண்டின் கிங் உள்ளது. எனவே B-யிடம் ஹார்ட்ஸின் ஜாக் அல்லது குயின் உள்ளது. ஆனால் A-யிடம் ஹார்ட்ஸின் ஜாக் உள்ளது. ஆனால், B-யிடம் ஹார்ட்ஸின் குயின் உள்ளது. B-யிடம் க்ளப்ஸின் ஏஸ், டயமண்ட்ஸின் கிங் மற்றும் ஹார்ட்ஸின் குயின் உள்ளது. ஆகையால், ஸ்பேட்ஸின் ஜாக் உள்ளது. மீதமுள்ள நான்கு அட்டைகள் D-யுடன் உள்ளன. எனவே, D-யிடம் டயமண்ட்ஸின் ஏஸ், க்ளப்ஸின் ஜாக், ஹார்ட்ஸின் கிங் மற்றும் ஸ்பேட்ஸின் குயின் உள்ளன.

	ஸ்பேட்ஸ்	டயமண்ட்ஸ்	க்ளப்ஸ்	ஹார்ட்ஸ்
ஏஸ்	A	D	B	C
ஜாக்	B	C	D	A
கிங்	C	B	A	D
குயின்	D	A	C	B

37. டயமண்ட்டின் ஏஸ் D-யிடம் உள்ளது.

38. ஹார்ட்ஸின் ஜாக் A-யிடம் உள்ளது.

39. ஸ்பேட்ஸின் குயின் D-யிடம் உள்ளது.

40. ஹார்ட்ஸின் ஏஸ் C-யிடம் உள்ளது.

41. ஹார்ட்ஸ்ஸின் கிங் D-யிடம் உள்ளது.

கேள்விகள் 42 முதல் 45:

E மற்றும் A முறையே I-வது மற்றும் III-வது தளங்களில் உள்ளனர். E மற்றும் A ஒரே துறையில் வேலை செய்கின்றனர்; B மற்றும் E ஒரே துறையில் வேலை செய்கின்றனர். ஆகவே, B, E மற்றும் A ஒரே துறையில் வேலை செய்கின்றனர். ஆனால் அது பணியாளர்கள் துறை அல்ல. எனவே, அவர்கள் வெவ்வேறு தளங்களில் இருக்க வேண்டும். ஆகவே, B II-வது தளத்தில் வேலை செய்கிறார். ஒவ்வொரு தளத்திலும் 2 நபர்கள் மட்டுமே வேலை செய்கிறார்கள் மற்றும் வெவ்வேறு துறைகளில் வேலை செய்கிறார்கள். எனவே, ஒரே துறையில் 3 நபர்கள் மட்டுமே வேலை செய்ய முடியும்.

ஏற்கனவே D நிர்வாகத் துறையில் வேலை செய்வதால், B, E மற்றும் A ஒவ்வொரும் கணக்குத் துறையில் வேலை செய்கிறார்கள். C மற்றும் E I-வது தளத்தில் வேலை செய்கிறார்கள். D II-வது தளத்தில் வேலை செய்யவில்லை. எனவே, A-யுடன் III-வது தளத்தில் D வேலை செய்கிறார். B மற்றும் F II-வது தளத்தில் வேலை செய்கிறார்கள்.

I-வது தளத்தில் வேலை செய்யும் C ஒரு ஆண். எனவே, E என்பவர் ஒரு பெண். E கணக்கு துறையில் வேலை செய்வதால் C நிர்வாகத்துறையிலோ அல்லது பணியாளர்கள் துறையிலோ வேலை செய்ய வேண்டும். III-வது தளத்தில் D ஒரு பெண். எனவே, A ஒரு ஆண். B மற்றும் F மீதமுள்ளனர். கணக்குத் துறையில் வேலை செய்யும் E ஒரு பெண் மற்றும் நிர்வாகத் துறையில் வேலை செய்யும் D-யும் பெண் என்பதாலும் மூன்றாவது பெண் பணியாளர்கள் துறையில் வேலை செய்தாக வேண்டும். B நிர்வாகத் துறையில் வேலை செய்வதால் F ஒரு பெண் மற்றும் B ஒரு ஆண்.

நபர்	A	B	C	D	E	F
பாலினம்	ஆண்	ஆண்	ஆண்	பெண்	பெண்	பெண்
தளம்	III	II	I	III	I	II
துறை	கணக்கு	கணக்கு	நிர்வாகம்/பணியாளர்	நிர்வாகம்	கணக்கு	பணியாளர்

42. D, E மற்றும் F பெண் நபர்கள்.

43. B மற்றும் F II-வது தளத்தில் வேலை செய்கிறார்கள்.

44. C-யின் துறையை சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் போதுமானது அல்ல.

45. F பணியாளர்கள் துறையில் வேலை செய்கிறார்.

கேள்விகள் 46 முதல் 50:

I-ல் கொடுக்கப்பட்டுள்ள விதியை ஒரே-எழுத்து விதி என்போம். பிலிப்பஸ் அல்லது வாசிம் எவரும் பெங்களூரைச் சேர்ந்தவர் இல்லை. ஒரே-எழுத்து விதியின்படி, பிஷனின் சொந்த ஊர் பெங்களூராக இருக்க முடியாது. எனவே, பெங்களூரைச் சேர்ந்தவர் விக்கட்-கீப்பர் ஆவார். சுமீத், விக்கட்-கீப்பர் இல்லை. எனவே, சேத்தன் பெங்களூரைச் சேர்ந்த விக்கட்-கீப்பர் ஆவார். பிலிப்பஸ் அல்லது வாசிம் எவரும் கேப்டன் இல்லை. மற்றும் பிஷனின் சொந்த ஊர் புனே அல்ல. கேப்டனின் செந்த ஊர் என்பதால் சுமீத் கேப்டன் ஆவார்.

வாசிமினுடைய செந்த ஊர் சூரத், பெங்களூர், புனே இவற்றுள் எதுவுமில்லை. மேலும், ஒரே-எழுத்து விதியின்படி, வாசிம் வாராங்கல்லைச் சேர்ந்தவர் அல்ல. எனவே, வாசிம் சண்டிகரைச் சேர்ந்தவர்.

புதிர்கள் (அல்லது) தரவரிசை அறிதல்

பிலிப்பஸின் சொந்த ஊர் சூரத், பெங்களூர், புனே மற்றும் சண்டிகர் இவற்றுள் எதுவுமில்லை. எனவே, அவர் வாராங்கல்லைச் சேர்ந்தவர். ஆகவே, பிஷன் சூரத்தைச் சேர்ந்தவர். பிலிப்ஸ் கேப்டனோ அல்லது விக்கட்-கீப்பரோ இல்லை. பிலிப்ஸ் வாராங்கல்லைச் சேர்ந்தவர். எனவே, அவர் பேட்ஸ்மென் இல்லை. ஒரே-எழுத்து விதியின்படி, பிலிப்ஸ் பேஸ்-பௌலர் இல்லை. எனவே, *P* ஒரு ஸ்பின்னர். ஆகவே, பிஷன் பேட்ஸ்மென்னும் இல்லை. பேஸ்-பௌலரும் இல்லை. ஆனால், ஒரே-எழுத்து விதியின்படி, பிஷன் பேட்ஸ்மென்னாக இருக்க முடியாது. எனவே, பிஷன் ஒரு பேஸ்-பௌலர். எனவே, வாசிம் ஒரு பேட்ஸ்மென் ஆவார்.

நபர்	சுமீத்	பிலிப்ஸ்	வாசிம்	பிஷன்	சேத்தன்
சிறப்பு	கேப்டன்	ஸ்பின்னர்	பேட்ஸ்மென்	பேஸ்-பௌலர்	விக்கட்-கீப்பர்
சொந்த ஊர்	புனே	வாராங்கல்	சண்டிகர்	சூரத்	பெங்களூர்

46. ஸ்பின்னரின் சொந்த ஊர் வாராங்கல்.

47. வாசிம்மின் சொந்த ஊர் சண்டிகர்.

48. பிஷன் ஒரு பேஸ்-பௌலர்.

49. பிலிப்ஸ் ஒரு ஸ்பின்னர்.

50. சேத்தனின் சொந்த ஊர் பெங்களூர்.

வகை 2: இருக்கை/வைக்கும் ஏற்பாடு

இந்த வகை கேள்விகளில், ஒரு தொடரில் கொடுக்கப்பட்டுள்ள நபர்கள் அல்லது பொருட்களை (நேர் கோட்டில் அல்லது சுழற்சியாக) சீராக வைக்கப்படுவதற்கான துப்பு கொடுக்கப்பட்டிருக்கும். கொடுக்கப்பட்டுள்ள துப்புகளை நன்கு ஆராய்ந்து முறையான தொடரை உருவாக்கி பின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா. 1: கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

கிரிக்கெட் ஆர்வலர்கள் ஒன்பது நபர்கள் ஒரு மைதானத்தில் ஒரு ஆட்டத்தை பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். *J, K, L, M, N, O, P, Q* மற்றும் *R* ஆகியோர் நேர் வரிசையில் அமர்ந்து ஆட்டத்தை பார்க்கிறார்கள். *M*-ன் வலது பக்கத்தில் மற்றும் *N*-லிருந்து வலது புறமாக மூன்றாவது இடத்திலும் *L* அமர்ந்திருக்கிறார். வரிசையின் ஒரு முனையில் *K* அமர்ந்துள்ளார். *O* மற்றும் *P*-க்கு அடுத்தபடியாக *Q* அமர்ந்துள்ளார். *K*-யின் இடப்புறத்திலிருந்து மூன்றாவதாக *O* அமர்ந்துள்ளார். *O*-வின் இடது புறத்தில் *J* உடனடியாக அமர்ந்துள்ளார். **(M.A.T. 2003)**

1. வரிசையின் நடுவில் யார் அமர்ந்துள்ளார்?

(*a*) *I* (*b*) *J* (*c*) *O* (*d*) *Q*

2. வரிசையின் மற்றொரு முனையின் யார் அமர்ந்துள்ளார்?

(*a*) *J* (*b*) *N* (*c*) *P* (*d*) *R*

3. கீழே உள்ளவற்றுள் எது சரியானது?

(*a*) *J*-யிலிருந்து இரண்டு இருக்கை தள்ளி *N* அமர்ந்துள்ளார்.

(*b*) வரிசையின் ஒரு முனையில் *M* உள்ளார்.

(*c*) *R* மற்றும் *P* அருகருகே அமர்ந்துள்ளனர்.

(*d*) *L* மற்றும் *O*-க்கு இடையே ஒரு நபர் உள்ளார்.

தீர்வு. *M*-ன் வடது புறமாகவும், *N*-ன் வலது புறத்தில் மூன்றாவது இடத்திலும் *L* அமர்ந்துள்ளார். எனவே, அந்த தொடர் பின்வருமாறு இருக்கும்: *N□ML* ஆடு. *K*-யின் இடது புறத்தின் 3-வது இடத்திலும் *O*-வின் இடது புறத்தில் உடனடுத்து *J* அமர்ந்துள்ளார். அதாவது, *JO□□K*. *O* மற்றும் *P* இருவரையும் உடனடுத்து *Q* அமர்ந்துள்ளார். அதாவது, *JOQPK*. எனவே, விடுபட்ட ஒரே காலியிடம். *R*-ஆல் நிரப்பப்படுகிறது. அதாவது, *NRML*.

வரிசையின் ஒரு முனையில் *K* உள்ளதால், மொத்த இருக்கை அமைப்பும் பின்வருமாறு இருக்கும்:

NRMLJOQPK.

1. வரிசையின் நடுவில் *J* அமர்ந்துள்ளார். எனவே, விடை (*b*).

2. *N* வரிசையின் மற்றொரு முனையில் அமர்ந்துள்ளார். எனவே, விடை (*b*).

3. L மற்றும் O-க்கு நடுவே J அமர்ந்துள்ளார். எனவே, (d) என்பது சரியானது.

ஆகவே, விடை (d) ஆகும்.

எ.கா.2. ஒன்றன் மேல் ஒன்றாக எட்டு புத்தகங்கள் அடுக்கப்பட்டுள்ளன. மேலிருந்து எண்ணுகையில் 2-வது, 5-வது மற்றும் 6-வது புத்தகங்கள் நாடக புத்தகங்கள். இரண்டு கட்டுரை புத்தகங்களுக்கு இடையே இரண்டு நாடக புத்தகங்கள் உள்ளன. இரண்டு கவிதை புத்தகங்களுக்கு இடையே ஒரு நாடக புத்தகம் உள்ளது. இலக்கிய புத்தகத்திற்கு மேல் உள்ள புத்தகம் ஒரு கவிதை புத்தகம். மேலிருந்து நான்காவது புத்தகம் என்ன புத்தகம்?

(M.B.A. 2006)

(a) நாடகம் (b) கவிதை (c) கட்டுரை (d) இலக்கியம்

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கீழ் வருமாறு ஆராயலாம்:

'கட்டுரை' என்பதை C எனவும், 'நாடகத்தை' P எனவும்,

'கவிதை' என்பதை Po எனவும் இலக்கியத்தை L எனவும் குறிப்பிட்டால்.

1	2	3	4	5	6	7	8
–	P	–	–	P	P	–	–
–	–	–	C	P	P	C	–
Po	P	Po	–	–	–	–	–
–	–	–	–	–	–	C	L

எனவே, மேலிருந்து கீழாக அமைத்தால், கிடைப்பது;

1	2	3	4	5	6	7	8
Po	P	Po	C	P	P	C	L

எனவே, மேலிருந்து உள்ள நான்காவது புத்தகம் கட்டுரை புத்தகமாகும். எனவே, விடை (c) ஆகும்.

எ.கா.3: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

(i) A, B, C, D, E, F மற்றும் G ஆகியோர் ஒரு வட்டத்தைச் சுற்றி மையப் புள்ளியை பார்த்து அமர்ந்திருக்கின்றனர்.

(ii) C-க்கு இடப்புறத்தில் இரண்டாவதாக G அமர்ந்துள்ளார். F-ன் இடப்புறமாக உடனடுத்து C அமர்ந்துள்ளார்.

(iii) E-யின் இடப்புறமாக மூன்றாவதாக A அமர்ந்துள்ளார்.

(iv) D மற்றும் E-க்கு நடுவில் B அமர்ந்துள்ளார்.

(R.B.I. 2005)

1. கீழே உள்ளவற்றுள் எது தவறு?

(a) E-யின் வலது பக்கமாக நான்காவதாக A உள்ளார்.

(b) D-யின் வலப்புறமாக உடனடுத்து G உள்ளார்.

(c) D-யின் வலப்புறமாக மூன்றாவதாக F உள்ளார்.

(d) D-யின் இடப்புறமாக உடனடுத்து B உள்ளார்.

(e) இவற்றில் எதுவுமில்லை.

2. கீழே உள்ளவற்றுள் எது சரி?

(a) B-யின் இடப்புறத்திலிருந்து நான்காவதாக C உள்ளார்.

(b) G-க்கு வலப்புறமாக உடனடுத்து உள்ளார் A.

(c) E-க்கு இடப்புறத்திலிருந்து இரண்டாவதாக உள்ளார் D.

(d) G-க்கு வலப்புறமாக இரண்டாவதாக உள்ளார் B.

(e) இவற்றுள் எதுவுமில்லை.

3. கீழே உள்ள ஜோடிகளில் எதில் இரண்டாவது நபருக்கு இடப்புறமாக உடனடுத்து முதலாமவர் அமர்ந்துள்ளார்?

(a) BE (b) CA (c) GD (d) DG

(e) இவற்றுள் எதுவுமில்லை.

4. கீழே உள்ளவற்றில் எதில் நடுவில் உள்ள நபர் மற்ற இருவருக்கும் இடையில் அமர்ந்துள்ளார்?

(a) FCE (b) EFB (c) DEB (d) GDA

(e) இவற்றுள் எதுவுமில்லை.

5. F-ன் இருப்பிடம் எது?

(a) D-யின் வலப்புறத்திலிருந்து நான்காவது

(b) C-யின் உடனடி இடப்புறம்

(c) *A*-க்கும் *E*-க்கும் இடையில்

(d) *A*-யின் உடனடி வலப்புறம்

(e) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. ஒரு வட்டத்தைச் சுற்றி 7 காலி இடங்களை குறிப்பிடுவோம்.



C-யிலிருந்து இடப்புறமாக இரண்டாவது இடத்தில் *G* உள்ளது. *F*-க்கு உடனடியாக இடப்புறத்தில் *C* உள்ளது. அதன் இடங்களை மேலே உள்ளவாறு குறியிடுகிறோம்.

மேலும், *D* மற்றும் *E*-க்கு நடுவில் *B* உள்ளது. எனவே, *D*, *B*, *E* மூவரும் ஒன்றாக அமர்ந்து அடுத்தடுத்த காலியிடங்களை நிரப்புகின்றன. *G* மற்றும் *C*-க்கு இடையே ஒரு காலியிடம் உள்ளது. அது *A*-யாக இருக்க வேண்டும்.



D, *B*, *E* மூவரும் (*D*, *B*, *E*) அல்லது (*E*, *B*, *D*) என்கிற நிலையில் அமரலாம். ஆனால் (*D*, *B*, *E*) என்கிற முறையில் அமர்ந்தால் மட்டுமே *E*-யின் இடது புறத்திலிருந்து *A* மூன்றாவதாக அமையும். எனவே, அவர்களின் நிலைகளை மேலே காண்பித்துள்ளபடி குறியிடுகிறோம்.

1. *D*-க்கு வலதுபுறம் நான்காவதாக *F* உள்ளது. எனவே, (*c*) தவறு.
   எனவே, விடை (*c*).
2. *B*-க்கு இடதுபுறம் மூன்றாவதாக உள்ளது. *C* எனவே, (*a*) தவறு.
   G-க்கு அடுத்து உடனடியாக வலது புறம் உள்ளது *A*. என்வே, (*b*) சரி.
   E-க்கு வலது பக்கம் இரண்டாவதாக உள்ளது *D*. எனவே, (*c*) தவறு.
   G-க்கு இடதுபுறம் இரண்டாவதாக உள்ளது *B*. எனவே, விடை (*b*) ஆகும்.
3. *DG* என்கிற ஜோடியில் மட்டுமே முதல் நபர் *D* இரண்டாவது நபரான *G*-க்கு இடதுபுறம் உடனடுத்து அமர்ந்துள்ளார். எனவே, விடை (*d*).
4. *A* மற்றும் *F*-க்கு நடுவில் *C* அமர்கிறார்; *E* மற்றும் *C*-க்கு நடுவில் *F* அமர்கிறார்; *B* மற்றும் *F*-க்கு நடுவில் *E* அமர்கிறார்; *G* மற்றும் *B*-க்கு நடுவில் *D* அமர்கிறார். எனவே, கொடுக்கப்பட்டுள்ள விதிகளை எந்த ஒரு ஜோடியும் பூர்த்தி செய்யவில்லை.
   எனவே, விடை (*e*).
5. *F*-ன் நிலையானது;
   (*i*) *D*-யின் வலது புறத்திலிருந்து நான்காவது
   (*ii*) *C*-க்கு உடனடி வலதுபுறம்
   (*iii*) *C* மற்றும் *E*-க்கு இடையில்
   (*iv*) *A*-யிலிருந்து வலப்புறமாக இரண்டாவது
   எனவே, விடை (*a*).

எ.கா.4: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

ஒரு உணவகத்தில் ஒரு வட்ட மேடையை சுற்றி *A*, *B*, *C*, *D*, *E* மற்றும் *F* ஆகிய ஆறு நபர்கள் மையத்தை பார்த்து உட்கார்ந்து இருந்தார்கள். அவர்கள் (பிட்சா, ஸ்ட்ராபெர்ரி, வெண்ணிலா, பர்கர், பேஸ்ட்ரிஸ் மற்றும் பேட்டிஸ்) ஆகியவற்றை மதிய உணவிற்காக ஆர்டர் செய்தார்கள். அவர்கள் வெள்ளை, கருப்பு, பச்சை, சிவப்பு, மஞ்சள் மற்றும் நீலம் ஆகிய வெவ்வேறு நிறம் கொண்ட T-ஷர்ட்டுகளை அணிந்துள்ளார்கள். அவர்கள் ஆர்டர் செய்த உணவுகள் மற்றும் அவர்கள் அணிந்துள்ள T-ஷர்ட்டுகளின் நிறங்கள் அவர்களின் பெயரின் வரிசையிலேயே அமைய வேண்டும் என்பதில்லை. **(N.I.F.T. 2003)**

I. பிட்சா, வென்னிலா மற்றும் பேஸ்ரிஸ் ஆர்டர் செய்த நபர்கள் வெள்ளை அல்லது கருப்பு *T*.ஷர்ட் அணியவில்லை.

II. பச்சை மற்றும் மஞ்சள் T-ஷர்ட்டுகளை அணிந்துள்ள நபர்கள் பிட்சாவையோ அல்லது வெண்ணிலாவையோ ஆர்டர் செய்யவில்லை.

III. *A* வெள்ளை T-ஷர்ட் அணியவில்லை அல்லது பர்கர் ஆர்டர் செய்த நபருக்கு இடது புறத்தில் உடனடியாக அமரவில்லை.

IV. *E* மற்றும் *F*-க்கு இடையில் அமர்ந்திருக்கும் ஒரு நபர் மட்டுமே ஸ்ட்ராபெர்ரியை சாப்பிடுகிறார். அவருக்கு இடது புறத்தில் வெள்ளை T-ஷர்ட் அணிந்திருப்பவர் பேட்டிஸை சாப்பிடுவதில்லை.

V. பச்சை நிற T-ஷர்ட் அணிந்திருக்கும் *D* பர்கரை ஆர்டர் செய்துள்ளார். ஸ்ட்ராபெர்ரியை ஆர்டர் செய்துள்ளவரை பார்த்து அவர் உட்கார்ந்துள்ளார்.

VI. பிட்சா ஆர்டர் செய்துள்ள நபர் நீல நிற T-ஷர்ட் அணிந்துள்ளவருக்கு எதிரில் அமர்ந்துள்ளார். பச்சை நிற T-ஷர்ட் அணிந்துள்ள நபர் பேஸ்ட்ரிஸ் ஆர்டர் செய்த நபருக்கு இடது புறத்தில் அமர்ந்துள்ளார்.

VII. பேஸ்ட்ரிஸ் ஆர்டர் செய்த நபர் வெள்ளை T-ஷர்ட் அணிந்துள்ள நபருக்கு வலது புறத்தில் உடனடுத்து உள்ளார். ஆனால் வென்னிலா ஆர்டர் செய்த நபருக்கு இடது புறத்தில் உடனடுத்து உள்ளார்.

VIII. *C* வென்னிலா ஆர்டர் பண்ணவில்லை. *F* பிட்சாவை ஆர்டர் பண்ணவில்லை.

1. கீழே உள்ளவர்களுள் யார் வெள்ளை T-ஷர்ட் அணிந்துள்ளார்?

(*a*) *A* (*b*) *B* (*c*) *C* (*d*) *E*

2. *E* மற்றும் *D*-க்கு நடுவில் உள்ள ஒரே நபர் கீழே உள்ளவற்றில் எந்த நிற T-ஷர்ட் அணிந்துள்ளார்?

(*a*) சிவப்பு (*b*) நீலம் (*c*) கருப்பு (*d*) மஞ்சள்

3. கீழே உள்ளவற்றுள் யார் பேஸ்ட்ரீசை ஆர்டர் செய்துள்ளார்?

(*a*) *A* (*b*) *B* (*c*) *C* (*d*) *E*

4. கீழே உள்ளவற்றுள் எது சரியான ஜோடி?

(*a*) *A* - மஞ்சள் - பர்கர் (*b*) *B* - சிவப்பு - வென்னிலா

(*c*) *E* - சிவப்பு - பிட்சா (*d*) *F* - கருப்பு - பேஸ்ட்ரிஸ்

5. பேஸ்ட்ரிஸ் ஆர்டர் செய்த நபரின் T-ஷர்ட்டின் நிறம்?

(*a*) சிவப்பு (*b*) மஞ்சள் (*c*) நீலம் (*d*) கருப்பு

தீர்வு. *D* பச்சை நிற T-ஷர்ட் அணிந்திருக்கும் நபர் பர்கரை ஆர்டர் செய்தார். *D*-க்கு எதிர்புறம் இருக்கும் நபர் ஸ்ட்ராபெர்ரியை ஆர்டர் செய்தார். வெள்ளை மற்றும் கருப்பு நிற T-ஷர்ட் அணிந்திருக்கும் நபர்கள் பிட்ஷா, வென்னிலா, பேஸ்ட்ரிஸ் அல்லது பர்கரை ஆர்டர் செய்யவில்லை.



ஆகையால் அவர்கள் ஸ்ட்ராபெர்ரி அல்லது பேட்டிஸ் ஆர்டர் செய்தார்கள். ஆனால் பேட்டிஸ் ஆர்டர் செய்யும் நபர் வெள்ளை T-ஷர்ட் அணிந்திருக்கும் நபரின் வலப்புறத்தில் உடனடுத்து அமர்ந்துள்ளார். எனவே, வெள்ளை T-ஷர்ட் அணிந்திருக்கும் நபர் ஸ்ட்ராபெர்ரியை ஆர்டர் செய்கிறார். பேட்டிஸ் ஆர்டர் செய்யும் நபர் கருப்பு T-ஷர்ட் அணிந்துள்ளார். அவர் வெள்ளை T-ஷர்ட் அணிந்திருக்கும் நபரின் வலப்புறத்தில் அமர்ந்துள்ளார்.

பேட்டிஸ் ஆர்டர் செய்த நபர் வென்னிலா ஆர்டர் செய்த நபருக்கு இடது புறத்தில் உடனடியாக அமர்ந்துள்ளார். வெள்ளை T-ஷர்ட் அணிந்துள்ள நபரின் இடது புறத்தில் உடனடுத்து அமர்ந்துள்ள நபர் பிட்சா ஆர்டர் செய்கிறார். ஆனால் அவர் நீல நிற T-ஷர்ட் அணிந்துள்ளவருக்கு எதிரில் அமர்ந்துள்ளார். எனவே, வென்னிலா ஆர்டர் செய்யும் நபர் நீல நிற T-ஷர்ட் அணிந்துள்ளார். எனவே, பிட்சா ஆர்டர் செய்யும் நபர் மஞ்சள் அல்லது சிவப்பு T-ஷர்ட் அணிந்திருக்க வேண்டும்.



ஆனால், மஞ்சள் T-ஷர்ட் அணிந்திருப்பவர் பிட்சாவை ஆர்டர் செய்யவில்லை. ஆனால் அவர் சிவப்பு நிற T-ஷர்ட் அணிந்துள்ளார். எனவே, பேஸ்ட்ரிஸ் ஆர்டர் செய்யும் நபர் மஞ்சள் நிற T-ஷர்ட் அணிந்துள்ளார்.

E மற்றும் *F*-க்கு இடையில் உள்ள ஒரே நபர் ஸ்ட்ராபெர்ரியை விரும்புகிறார். ஆனால், *F*-க்கு பிட்சா பிடிக்கவில்லை. ஆனால், *F*-க்கு பிட்சா பிடிக்காது. ஆனால் சிவப்பு T-ஷர்ட் அணிந்திருக்கும் *E* பிட்சா ஆர்டர் செய்கிறார். கருப்பு நிற T-ஷர்ட் அணிந்திருக்கும் *F* பேட்டிஸ் ஆர்டர் செய்கிறார். *A* வெள்ளை T-ஷர்ட்டும் அணியவில்லை *D*-க்கு இடதுபுறமாக உடனடுத்து அமரவும் இல்லை. ஆகையால், *A* பேஸ்ட்ரிஸ் ஆர்டர் செய்கிறார் மற்றும் மஞ்சள் T-ஷர்ட் அணிந்துள்ளார். *C* வெண்ணிலாவை ஆர்டர் பண்ணவில்லை. எனவே, *C* ஸ்ட்ராபெர்ரியை ஆர்டர் செய்கிறார் மற்றும் வெள்ளை T-ஷர்ட் அணிந்துள்ளார். ஆகவே, *B* வென்னிலா ஆர்டர் செய்தார் மற்றும் நீல நிற T-ஷர்ட் அணிந்துள்ளார்.

1. *C* வெள்ளை *T*-ஷர்ட் அணிந்துள்ளார். எனவே, விடை (*c*).
2. *E* மற்றும் *D*-க்கு இடையே *A* உள்ளார். *A* மஞ்சள் T-ஷர்ட் அணிந்துள்ளார். எனவே, விடை (*d*).
3. *A* பேஸ்ட்ரிஸ் ஆர்டர் செய்கிறார். எனவே, விடை (*a*)..
4. சரியான ஜோடியானது; *E* - சிவப்பு - பிட்சா. எனவே, விடை (*c*) ஆகும்.
5. *F* பேட்டிஸ் ஆர்டர் செய்கிறார். கருப்பு T-ஷர்ட் அணிந்துள்ளார். எனவே, விடை (*d*).

பயிற்சி 6B

1. A, P, R, X, S மற்றும் Z ஆகியோர் ஒரு வரிசையில் அமர்ந்துள்ளார். S மற்றும் Z நடுவில் உள்ளனர் மற்றும் A மற்றும் P முனைகளில் அமர்ந்துள்ளனர். A-யின் இடது புறம் R அமர்ந்துள்ளார் எனில் P-யின் வலப்புறம் அமர்ந்துள்ளவர் யார்? **(S.S.C. 2003)**
   (a) A (b) S (c) X (d) Z

2. ஒரு அணிவகுப்பில் ஏழு நபர்கள் ஒரு வரிசையில் நின்று கொண்டிருக்கிறார்கள். Q என்பவர் R-ன் இடப்புறமாகவும் P-யின் வலப்புறமாகவும் நிற்கிறார். O என்பவர் N-ன் வலப்புறமாகவும், P-யின் இடப்புறமாகவும் நிற்கிறார். அதேபோல், S என்பவர் R-ன் வலப்புறமாகவும் T-யின் இடப்புறமாகவும் உள்ளார். யார் நடுவில் நிற்கிறார் என்பதைக் கண்டறிக.
   (a) P (b) Q (c) R (d) O

3. ஐந்து குழந்தைகள் ஒரு வரிசையில் அமர்ந்துள்ளார்கள். S என்பவர் P-க்கு அடுத்தபடியாக ஆனால் T-க்கு அடுத்தபடியாக அமரவில்லை. R-க்கு அடுத்தபடியாக K அமர்ந்துள்ளார். R இடது கடைக் கோடியில் அமர்ந்துள்ளார். K-க்கு அருகில் T அமரவில்லை. S-க்கு பக்கத்தில் யார் யார் அமர்ந்துள்ளார்?
   (a) K மற்றும் P (b) R மற்றும் P
   (c) P மட்டும் (d) P மற்றும் T
   (e) தகவல் போதுமானதாக இல்லை

4. ஒரு வரிசையில் ஐந்து பெண்கள் அமர்ந்திருக்கிறார்கள். ராஷி என்பவர் சுலேகாவிற்கோ அபாவிற்கோ பக்கத்தில் அமரவில்லை. அனுராதா என்பவர் சுலேகாவிற்கு பக்கத்தில் அமரவில்லை. ராஷி, மோனிகாவிற்கு பக்கத்தில் அமர்ந்துள்ளார். வரிசையின் நடுவில் மோனிகா அமர்ந்துள்ளார். எனில், கீழே உள்ளவர்களில் யாருக்கு பக்கத்தில் அனுராதா அமர்ந்துள்ளார்?
   (a) ராஷி (b) சுலேகா
   (c) அபா (d) மோனிகா
   (e) கண்டுபிடிக்க முடியாது

5. ஒலிம்பிக் விளையாட்டில், ஆறு நாடுகளின் கொடிகள் கீழே வருமாறு பறக்க விடப்பட்டன:
   அமெரிக்க கொடியானது இந்திய மூவர்ணக் கொடியின் இடது புறத்திலும், பிரான்ஸ் நாட்டின் கொடிக்கு வலது புறத்திலும் உள்ளது. ஆஸ்திரேலியாவின் கொடி இந்திய கொடிக்கு வலப்புறத்திலும், ஜப்பான் கொடிக்கு இடது புறத்திலும் உள்ளது. ஜப்பான் கொடி சீனாவின் கொடிக்கு இடது புறத்தில் உள்ளது. நடுவில் உள்ள இரண்டு நாடுகளின் கொடிகளைக் கண்டு பிடிக்கவும்.
   (a) இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா
   (b) அமெரிக்கா மற்றும் இந்தியா
   (c) ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா
   (d) அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா

குறிப்புகள் (கேள்விகள் 6 முதல் 9 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

A, B, C, D, E மற்றும் F ஆகிய ஆறு நண்பர்கள் வடக்கு நோக்கி ஒரு வரிசையில் அமர்ந்துள்ளார்கள். A மற்றும் E-க்கு நடுவில் C உள்ளார். D கடைசியில் அமரவில்லை. E-க்கு வலது புறத்தில் உடனடியாக B அமர்ந்துள்ளார். வலப்பக்க கடைசியில் F அமரவில்லை. **(Bank P.O. 2003)**

6. D-க்கு வலப்புறத்தில் எத்தனை நபர்கள் உள்ளனர்?
   (a) ஒன்று (b) இரண்டு
   (c) மூன்று (d) நான்கு
   (e) இவற்றில் எதுவுமில்லை

7. D-க்கு ஒரு பக்கத்தில் கீழே உள்ளவர்களுள் எந்த ஜோடி அமர்ந்துள்ளது?
   (a) FB (b) FC (c) FE
   (d) கண்டுபிடிக்க முடியாது
   (e) இவற்றில் எதுவுமில்லை

8. C-க்கு இடது புறத்தில் உடனடியாக யார் உள்ளார்?
   (a) A (b) E (c) E அல்லது A
   (d) கண்டுபிடிக்க முடியாது
   (e) இவற்றில் எதுவுமில்லை

9. வடது புற கடைசியில் யார் உள்ளனர்?
   (a) A (b) B (c) E
   (d) கண்டுபிடிக்க முடியாது
   (e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 10 முதல் 14 வரை): கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

(C.P.O. 2005; M.B.A. 2006)

(i) A, B, C, D, E, F மற்றும் G ஆகியோர் ஒரு சுவற்றில் கிழக்கு நோக்கி அமர்ந்துள்ளனர்.
(ii) D-க்கு உடனடியாக வலது புறத்தில் C உள்ளார்.
(iii) கடைசி ஓரத்தில் B உள்ளார். E அவருக்கு பக்கத்தில் உள்ளார்.
(iv) E மற்றும் F-க்கு நடுவில் G உள்ளார்.
(v) தெற்கு முனையிலிருந்து மூன்றாவதாக D உள்ளார்.

10. E-க்கு வலது புறத்தில் யார் அமர்ந்துள்ளார்?
    (a) A (b) C (c) D (d) F
    (e) இவற்றில் எதுவுமில்லை

11. இரண்டு கடைசி முனைகளிலும் கீழே உள்ளவர்களுள் எந்த ஜோடி அமர்ந்துள்ளது?
    (a) AB (b) AE (c) CB (d) FB
    (e) கண்டுபிடிக்க முடியாது

12. C இருக்கும் இடத்தில் யாரை மாற்றினால் வடக்கு முனையிலிருந்து அவருக்கு மூன்றாவது இடம் கிடைக்கும்?

(a) E (b) F (c) G (d) D
(e) இவற்றில் எதுவுமில்லை

13. கீழே உள்ள எந்த ஜோடி நபர்களுக்கிடையில் D அமர்ந்திருக்கிறார்?
(a) AC (b) AF (c) CE (d) CF
(e) இவற்றில் எதுவுமில்லை

14. மேலே உள்ள தகவல்கள் (i)-லிருந்து (v) வரையிலுள்ள எந்த தகவல்கள் A எந்த இடத்தில் உட்கார்ந்திருக்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க உதவும்?
(a) (i) (b) (ii) (c) (iii)
(d) அனைத்தும் தேவை
(e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 15 முதல் 21 வரை): கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

(i) A, B, C, D, E, F, G, H, I, J மற்றும் K ஆகிய பதினொன்று மாணவர்கள் வகுப்பின் முதல் வரிசையில் ஆசிரியரைப் பார்த்து உட்கார்ந்து இருக்கிறார்கள்.
(ii) F-க்கு இடதுபுறத்தில் உடனடியாக அமர்ந்திருப்பவர் C-யின் வலப்புறத்தில் இரண்டாவதாக உள்ளார்.
(iii) E-யின் வலப்புறத்தில் இரண்டாவது இடத்தில் A அமர்ந்துள்ளார். வரிசையின் ஒரு முனையில் E உள்ளார்.
(iv) A மற்றும் B-க்கு உடனடியாகவும் G-யின் இடப்புறத்தில் மூன்றாவது இடத்திலும் J உள்ளார்.
(v) D-யின் இடப்புறத்தில் உடனடியாகவும் I-க்கு வலப் புறத்தில் மூன்றாவதாகவும் H உள்ளார்.

15. வரிசையின் நடுவில் யார் அமர்ந்துள்ளார்?
(a) B (b) C (c) G (d) I
(e) இவற்றில் எதுவுமில்லை

16. G-யின் வலப்புறத்தில் கீழே உள்ள எந்த நண்பர்கள் குழு உள்ளனர்?
(a) CHDE (b) CHDF
(c) IBJA (d) ICHDF
(e) இவற்றில் எதுவுமில்லை

17. மேலே குறிப்பிட்டுள்ள உட்காரும் வரிசைப்படி கீழே உள்ளவற்றுள் எந்த கூற்று சரியானது?
(a) D மற்றும் G-க்கு இடையில் மூன்று மாணவர்கள் உள்ளனர்
(b) A மற்றும் J-க்கு நடுவில் K உள்ளார்
(c) J மற்றும் I-க்கு நடுவில் B உள்ளார்
(d) H-க்கு வலப்புறத்தில் உடனடுத்து C மற்றும் G அருகருகில் அமர்ந்துள்ளனர்
(e) இவற்றில் எதுவுமில்லை

18. மேலே குறிப்பிட்ட உட்காரும் வரிசையின் படி கீழே உள்ளவற்றுள் எந்த கூற்று மிகையானது?
(a) (i) (b) (ii) (c) (iii) (d) (iv)
(e) எந்த கூற்றும் மிகையல்ல

19. E மற்றும் D, C மற்றும் B, A மற்றும் H, K மற்றும் F ஒருவருக்கொருவர் தங்களது இடங்களை மாற்றிக் கொண்டால் கீழே உள்ள ஜோடிகளில் எந்த ஜோடி மாணவர்கள் வரிசையின் முனைகளில் அமர்ந்திருப்பார்கள்?
(a) D மற்றும் E (b) E மற்றும் F
(c) D மற்றும் K (d) K மற்றும் F
(e) இவற்றில் எதுவுமில்லை

20. தன்யா, சுனிதா, நிதி, அபர்ணா மற்றும் ப்ரீதி ஆகிய ஐந்து பெண்களும், அரவிந்த், குணால், பவன், சாகில் மற்றும் தன்மய் ஆகிய ஐந்து ஆண்களும் ஒரு செவ்வக வடிவ மேஜையின் இரண்டு நீளமான பக்கங்களில் அமர்ந்துள்ளனர். ஆண்கள் உட்கார்ந்திருக்கும் நீளமான பக்கத்திற்கு எதிர் பக்கமாக பெண்கள் அமர்ந்துள்ளனர். சாகிலுக்கு அடுத்தும், அரவிந்தின் இடத்திலிருந்து மூன்று இடங்கள் தள்ளியும் சுனிதா அமர்ந்துள்ளார். அபர்னாவின் இடப்புறத்திலிருந்து நான்கு இடங்கள் தள்ளி ப்ரீதி அமர்ந்துள்ளார். சுனிதா-வின் இடத்திலிருந்து இரண்டு இடங்கள் தள்ளி நிதியும், சுனிதாவிற்கு எதிர்ப்புறமாக பவனும் அமர்ந்துள்ளனர். ப்ரீதியின் இடத்திலிருந்து மூன்று இடங்கள் தள்ளி குணால் அமர்ந்துள்ளார். தான்யாவிற்கு எதிரே யார் அமர்ந்துள்ளார்? **(M.B.A. 2004)**
(a) அரவிந்த் (b) குணால்
(c) பவன் (d) சாகில்

21. மேலே உள்ள கேள்வியில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் தன்மயிக்கு எதிராக யார் அமர்ந்துள்ளார்?
(a) நிதி (b) ப்ரீதி
(c) அபர்ணா (d) சுனிதா

குறிப்புகள் (கேள்விகள் 22 முதல் 25 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

A, B, C, D, E மற்றும் F ஆகிய ஆறு நபர்கள் வரிசைக்கு மூன்று நபர்கள் என இரண்டு வரிசைகளில் அமர்ந்துள்ளனர். எந்த ஒரு வரிசையின் முனையிலும் E அமரவில்லை. F-லிருந்து இடது புறமாக D இரண்டாவதாக அமர்ந்துள்ளார். E-க்கு பக்கத்தில் உள்ள C என்கிற நபர் D-க்கு எதிராக குறுக்காக அமர்ந்துள்ளனர். F-க்கு அருகில் B அமர்ந்துள்ளார்.

22. கீழே உள்ளவர்களில் யார் யார் ஒருவருக்கொருவர் எதிரெதிர் குறுக்காக அமர்ந்துள்ளனர்?
(a) F மற்றும் C (b) D மற்றும் A
(c) A மற்றும் C (d) A மற்றும் F
(e) A மற்றும் B

23. கீழே உள்ளவர்களுள் எந்த ஜோடி ஒரே வரிசையில் அமர்ந்துள்ளனர்?
(a) A மற்றும் E (b) E மற்றும் D
(c) C மற்றும் B (d) A மற்றும் B
(e) C மற்றும் E

24. கீழே உள்ளவற்றுள் எந்த குழு இரண்டில் ஒரு வரிசையில் உள்ளது?
(a) FBC (b) CEB (c) DBF (d) AEF
(e) ABF

25. E-யுடன் இருக்கையை மாற்றிக் கொண்டவுடன், புது அமைப்பில் D-க்கு அருகில் யார் அமர்ந்திருப்பார்?
(a) C மற்றும் E (b) F மற்றும் B
(c) B மட்டும் (d) A மட்டும்
(e) C மட்டும்

குறிப்புகள் (கேள்விகள் 26 முதல் 30 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கவும். **(M.A.T. 2005)**

ஒரு கார் பொருட்காட்சியில் கார்டிலாக், அம்பாசிடர், ∴பியட், மாருதி, மெர்சிடிஸ், பெட்∴போர்ட் மற்றும் பார்கோ ஆகிய ஏழு வெவ்வேறு நிறுவனங்களின் கார்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. கிழக்கு நோக்கி ஒரே வரிசையில் கீழே உள்ளவாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

(1) பார்கோவைத் தொடர்ந்து உடனடியாக வலது புறத்தில் கார்டிலாக் உள்ளது.
(2) ∴பியட்டுக்கு வலப்புறத்தில் நான்காவதாக பார்கோ உள்ளது.
(3) அம்பாசிடர் மற்றும் பெட்போர்ட்டு கார்களுக்கு இடையில் மாருதி கார் உள்ளது.
(4) அம்பாசிடர் காரின் இடது புறத்தில் மூன்றாவதாக உள்ள ∴பியட் கார் வரிசையின் ஒரு முனையில் உள்ளது.

26. மெர்சிடீஸ் காரின் சரியான இடம் எது?
(a) கார்டிலாக் காரின் உடனடி வலது புறத்தில் உள்ளது.
(b) பெட்∴போர்ட் காரின் உடனடி இடது புறத்தில் உள்ளது.
(c) பெட்போர்ட் மற்றும் பார்கோ கார்களுக்கு நடுவில் உள்ளது.
(d) மாருதி காரின் வலது புறத்தில் நான்காவதாக உள்ளது.
(e) இவற்றில் எதுவுமில்லை

27. கீழே உள்ளவற்றுள் எது மிக சரியானது?
(a) அம்பாசிடர் மற்றும் ∴பியட் கார்களுக்கு நடுவில் பார்கோ கார் உள்ளது.
(b) மெர்சிடிஸ் காரின் இடது புறத்தில் உடனடியாக கார்டிலாக் கார் உள்ளது.
(c) கார்டிலாக் காரின் வலது புறத்தில் உடனடியாக பார்கோ கார் உள்ளது.
(d) மெர்சிடீஸின் வலது புறத்தில் நான்காவதாக மாருதி உள்ளது.
(e) இவற்றில் எதுவுமில்லை

28. கார்டிலாக் காரின் இரு புறங்களிலும் உடனடியாக எந்தெந்த கார்கள் உள்ளன?
(a) அம்பாசிடர் மற்றும் மாருதி
(b) மாருதி மற்றும் பியட்
(c) பியட் மற்றும் மெர்சிடிஸ்
(d) அம்பாசிடர் மற்றும் பார்கோ
(e) இவற்றில் எதுவுமில்லை

29. கீழே உள்ளவற்றுள் எது மிகச் சரியானது?
(a) அம்பாசிடருக்கு இடது புறத்தில் உடனடியாக மாருதி உள்ளது
(b) பியட்டுக்கு இடது புறத்தில் உடனடியாக பெட்போர்டு உள்ளது
(c) வரிசையின் ஒரு முனையில் பெர் போர்ட் கார் உள்ளது
(d) மாருதியின் வலது புறத்தில் இரண்டாவதாக பியட் உள்ளது
(e) இவற்றில் எதுவுமில்லை

30. கீழே உள்ள கார்களின் குழுவில் எந்த குழு அம்பாசிடர் காரின் வலது புறத்தில் உள்ளன?
(a) கார்டிலாக், பார்கோ மற்றும் மாருதி
(b) மாருதி, பெட்போட்டு மற்றும் பியட்
(c) மெர்சிடிஸ், கார்டிலாக் மற்றும் பார்கோ
(d) பெட்போர்ட்டு, கார்டிலாக் மற்றும் பார்கோ
(e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 31 முதல் 35 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(M.A.T. 2001)**

ஒரு நகரத்தில் உள்ள அனைத்து சாலைகளும் ஒன்றுக்கொன்று செங்குத்தாக அல்லது இணையாக உள்ளன. A, B, C, D மற்றும் E ஆகிய சாலைகள் ஒன்றுக் கொன்று இணையாக உள்ளன. G, H, I, J, K, L மற்றும் M ஆகிய சாலைகள் ஒன்றுக்கொன்று செங்குத்தாக உள்ளன.

(i) சாலை A சாலை B-யின் கிழக்கில் 1 கிமீ தூரத்தில் உள்ளது.
(ii) சாலை C சாலை B-யின் மேற்கில் $\frac{1}{2}$ கிமீ தூரத்தில் உள்ளது.
(iii) சாலை E சாலை D-யின் மேற்கில் 1 கிமீ தூரத்தில் உள்ளது.
(iv) சாலை H சாலை G-யின் கிழக்கில் $\frac{1}{2}$ கிமீ தூரத்தில் உள்ளது.
(v) சாலை J சாலை I-யின் வடக்கில் 1 கிமீ தூரத்தில் உள்ளது.
(vi) சாலை L சாலை K-யின் வடக்கில் $\frac{1}{2}$ கிமீ தூரத்தில் உள்ளது.
(vii) சாலை M சாலை K-யின் கிழக்கில் 1 கிமீ தூரத்தில் உள்ளது.

31. எது சரியானது?
(a) E மற்றும் B ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளும்.
(b) B-யின் மேற்கில் 2 கிமீ தூரத்தில் D உள்ளது.
(c) A-யிலிருந்து மேற்கே குறைந்தது 2 கிமீ தூரத்தில் D உள்ளது.
(d) L-ன் வடக்கில் 1.5 கிமீ தூரத்தில் M உள்ளது.
(e) L-ன் வடக்கில் 1 கிமீ தூரத்தில் I உள்ளது.

32. B மற்றும் C-க்கு இடையில் E உள்ளது எனில், கீழே உள்ளவற்றுள் எது தவறு?

(a) A-யின் மேற்கில் 2 கிமீ தூரத்தில் D உள்ளது.

(b) D-யை விட C 1.5 கிமீ குறைவாக உள்ளது.

(c) E மற்றும் B-க்கு இடையே உள்ள தூரத்தை E மற்றும் C-க்கு இடையே உள்ள தூரம் இணைந்து $\frac{1}{2}$ கிமீ ஆகும்.

(d) A-யை விட E 1 கிமீ குறைவு.

(e) B-யை விட D 1 கிமீ குறைவு.

33. B மற்றும் C-க்கு இடையே உள்ள சாலை E எனில், A மற்றும் D-க்கு இடையேயுள்ள தூரம்;

(a) $\frac{1}{2}$ கிமீ (b) 1 கிமீ

(c) 1.5 கிமீ (d) 1.5 – 2 கிமீ

(e) 2 – 2.5 கிமீ

34. இரண்டு சாலைகளும் ஒன்றிணைவதற்கு கீழே உள்ளவற்றுள் எது சாத்தியம்?

(a) I-யின் வடக்கில் $\frac{1}{2}$ கிமீ தூரத்தில் L உள்ளது.

(b) D-யின் மேற்கில் 1 கிமீ தூரத்தில் உள்ளது.

(c) K-யின் வடக்கில் $\frac{1}{2}$ கிமீ தூரத்தில் I உள்ளது.

(d) A-யின் கிழக்கில் $\frac{1}{2}$ கிமீ தூரத்தில் D உள்ளது.

(e) E மற்றும் B $\frac{1}{2}$ கிமீ தூரத்தில் உள்ளது.

35. சாலை K சாலை I-க்கு இணையாக உள்ளது மற்றும் J-யின் கிழக்கில் $\frac{1}{2}$ கிமீ தூரத்தில் K உள்ளது மற்றும் G-யின் வடக்கில் 1 கிமீ தூரத்தில் K உள்ளது எனில், எந்த இரண்டு சாலைகள் $\frac{1}{2}$ கிமீ தொலைவில் உள்ளன?

(a) I மற்றும் K (b) J மற்றும் G

(c) I மற்றும் G (d) J மற்றும் H

(e) K மற்றும் J

குறிப்புகள் (கேள்விகள் 36 முதல் 39 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

A, B, C, D, E, F மற்றும் G ஆகியோர் ஒரு வகுப்பில் உள்ள மாணவர்கள். ஒரு பலகையில் குறைந்தது இரண்டு மாணவர்கள் மற்றும் ஒரு பெண் அமர்ந்திருக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டு முறையே அனைத்து மாணவர்களும் I, II மற்றும் III ஆகிய பலகைகளில் அமர்ந்துள்ளனர். பெண் மாணவியான C, மாணவர்கள் A, E மற்றும் D ஆகிய எவருடனும் அமரவில்லை. ஆண் மாணவரான F, B-யுடன் மட்டுமே அமர்ந்துள்ளார். தனது உயிர்த் தோழரான I-யுடன் A அமர்ந்துள்ளார். பலகை III-ல் G அமர்ந்துள்ளார். C-யின் சகோதரர் E. **(NABARD, 2002)**

36. எந்த பலகையில் மூன்று மாணவர்கள் அமர்ந்துள்ளனர்?

(a) I (b) II

(c) III (d) I அல்லது II

(e) இவற்றில் எதுவுமில்லை

37. மொத்த மாணவர்களுள் எத்தனை பெண்கள் உள்ளனர்?

(a) 3 (b) 4 (c) 3 அல்லது 4

(d) தகவல் போதுமானதாக இல்லை

(e) இவற்றில் எதுவுமில்லை

38. C-யுடன் யார் அமர்ந்துள்ளனர்?

(a) B (b) D (c) E (d) G

(e) இவற்றில் எதுவுமில்லை

39. கீழே உள்ளவற்றுள் எது பெண்கள் குழு?

(a) BAC (b) BCD

(c) BFC (d) CDF

(e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 40 முதல் 42 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும். **(C.A.T. 1998)**

A, B, C மற்றும் D ஆகியவர்களை ஒரு வரிசையில் உட்கார வைக்க வேண்டும். C மற்றும் D ஒன்றாக உட்கார முடியாது.. மேலும், B மூன்றாவது இடத்தில் உட்கார முடியாது.

40. கீழே உள்ளவற்றுள் எது தவறு?

(a) A முதலாவது இடத்தில் உள்ளார்.

(b) A இரண்டாவது இடத்தில் உள்ளார்.

(c) A மூன்றாவது இடத்தில் உள்ளார்.

(d) A நான்காவது இடத்தில் உள்ளார்.

41. A மூன்றாவது இடத்தில் இல்லை எனில், கீழே உள்ளவற்றுள் C எந்த இடத்தில் உள்ளார்?

(a) முதல் இடத்தில் மட்டுமே

(b) மூன்றாவது இடத்தில் மட்டுமே

(c) முதல் மற்றும் மூன்றாவது இடத்தில் மட்டுமே

(d) ஏதாவது ஒரு இடத்தில்

42. A மற்றும் B ஒன்றாக அமர்ந்துள்ளனர். எனில், கீழே உள்ளவற்றில் எது சரி?

(a) C முதல் இடத்தில் உள்ளார்.

(b) D முதல் இடத்தில் உள்ளார்.

(c) C முதல் இடத்தில் இல்லை.

(d) A மூன்றாவது இடத்தில் உள்ளார்.

விடைகள் (பயிற்சி 6B)

1. (c)	2. (b)	3. (d)	4. (a)	5. (a)	6. (d)	7. (e)	8. (a)	9. (b)	10. (e)
11. (a)	12. (c)	13. (d)	14. (d)	15. (d)	16. (b)	17. (c)	18. (e)	19. (c)	20. (d)

21. (b)	22. (d)	23. (a)	24. (c)	25. (a)	26. (d)	27. (b)	28. (e)	29. (a)	30. (c)
31. (d)	32. (b)	33. (d)	34. (e)	35. (e)	36. (a)	37. (c)	38. (d)	39. (b)	40. (a)
41. (c)	42. (d)								

தீர்வுகள் (பயிற்சி 6B)

1. *A*-யின் இடது புறத்தில் *R* உள்ளார். அதாவது, *R*, *A*.

   A மற்றும் *P* ஒவ்வொரு முனைகளில் உள்ளனர். அதாவது, *P*, –, –, –, *R*, *A*.

   S மற்றும் *Z* வரிசையின் நடுவில் உள்ளனர்.

   அதாவது, *P*, –, *S*, *Z*, *R*, *A*.

   எனவே, வரிசையின் ஏற்பாடு முறையே;

   P, *X*, *S*, *Z*, *R*, *A*.

   P-யின் வலப்புறத்தில் *X* உள்ளார் என்பது தெளிவு.

2. *R*-க்கு இடதுபுறத்திலும் *P*-யின் வலது புறத்திலும் *Q* உள்ளார். அதாவது, *P*, *Q*, *R*.

   N-க்கு வலதுபுறத்திலும் *P*-க்கு இடப்புறத்திலும் *O* உள்ளார். அதாவது, *N*, *O*, *P*.

   R-க்கு வலதுபுறத்திலும் *T*-க்கு இடப்புறத்திலும் *S* உள்ளார். அதாவது, *R*, *S*, *T*.

   ஆகையால், அந்த வரிசயானது: *N*, *O*, *P*, *Q*, *R*, *S*, *T*. *Q* நடுவில் உள்ளது என்பது தெளிவாகிறது.

3. *P*-க்கு அடுத்து *S* உட்கார்ந்திருக்கிறார். ஆகையால் வரிசையானது முறையே *S*, *P* அல்லது *P*, *S* *R*-க்கு அடுத்து *K* உட்கார்ந்துள்ளார். ஆகவே, *R*, *K* என்கிற முறை பின்பற்றப்படுகிறது. ஏனெனில், இடது புறத்தில் கடைசியில் *R* உள்ளது. *P* அல்லது *K*-க்கு அடுத்து *T* இல்லை.

   ஆகவே, அந்த முறையானது *R*, *K*, *P*, *S*, *T*. *S*-க்கு அடுத்தபடியாக *P* மற்றும் *T* உட்கார்ந்துள்ளனர்.

4. வரிசையானது; அனுராதா, ராஷி, மோனிகா, சுலேகா, அபா.

   ராஷிக்கு அடுத்து அனுராதா அமர்ந்துள்ளார்.

5. கொடிகளின் சரியான வரிசையானது; பிரான்சு, அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், சீனா.

   நடுவில் உள்ள இரண்டு கொடிகள் முறையே இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா.

கேள்விகள் 6 முதல் 9:

E-யின் வலது புறத்தில் உடனடியாக *B* உள்ளார். அதாவது, *E*, *B*.

A மற்றும் *E*-க்கு நடுவில் *C* உள்ளது. அதாவது, *A*, *C*, *E*, *B*.

D எந்த ஒரு முனையிலும் இல்லை மற்றும் *F* வலது முனையில் இல்லை. எனவே, வரிசையின் முறையானது; *F*, *D*, *A*, *C*, *E*, *B*.

6. *D*-யின் வலது புறத்தில் *A*, *C*, *E*, *B* ஆகிய நான்கு நபர்கள் உள்ளனர்.

7. *D*-யின் ஒரு பக்கத்தில் *F* மற்றும் *D*-யின் மற்றொரு பக்கத்தில் *B*, *C* மற்றும் *C* உள்ளனர்.

8. *C*-க்கு உடனடியாக இடது புறத்தில் *A* உள்ளார்.

9. வலது புறத்தில் கடைசியில் *B* உள்ளார்.

கேள்விகள் 10 முதல் 14:

D-க்கு வலது புறத்தில் *C* உள்ளார்.

கிழக்கிலிருந்து மூன்றாவதாக *D* உள்ளார். எனவே, வடக்கிலிருந்து கடைசியில் *B* இருக்க வேண்டும். ஏனெனில், *B*-க்கு பக்கத்தில் *E* இருக்க வேண்டும்.

B →
E →
G →
F → கிழக்கு
D →
C →
A →

10. *E*-யின் வடது புறத்தில் *G* உட்கார்ந்திருக்கிறார்.

11. *A* மற்றும் *B* இரண்டு முனைகளில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

12. வடக்கிலிருந்து *C*-யை மூன்றாவது இடத்தில் அமர வைப்பதற்கு *C*-யுடன் *G*-யை இடம் மாற்ற வேண்டும்.

13. *C* மற்றும் *F*-க்கு நடுவில் *D* உள்ளார்.

14. சரியான வரிசையை கண்டுபிடிப்பதற்கு எல்லா வாக்கியங்களும் தேவை.

கேள்விகள் 15 முதல் 21:

F-க்கு இடது புறத்திலும் *C*-யின் வலப்புறத்தில் இரண்டாவதாகவும் *D* உள்ளார். அதாவது, *C*, –, *D*, *F*.

E-யின் வலது புறத்தில் இரண்டாவதாக *A* உள்ளார். அதாவது, *E*, –, *A*.

A-யின் உடனடி நபர் *J* மற்றும் *G*-யின் இடப்புறத்தில் மூன்றாவதாக *B* உள்ளார். அதாவது, *A*, *J*, *B*, –, *G*.

D-யின் இடப்புறத்திலும் மற்றும் *I*-யின் வலது புறத்தில் மூன்றாவதாகவும் *H* உள்ளார். அதாவது, *I*, –, *H*, *D*.

மேலே உள்ள நான்கு வரிசைகளையும் இணைத்து கீழே உள்ளவாறு சரியான வரிசையை அமைக்க முடியும்.

E, *K*, *A*, *J*, *B*, *I*, *G*, *C*, *H*, *D*, *F*.

15. *I* நடுவில் உள்ளார்.

16. *G*-யின் வலப்புறத்தில் *C*, *H*, *D*, *F* ஆகியோர் உள்ளனர்.

17. *D* மற்றும் *G*-க்கு இடையே இரண்டு மாணவர்கள் அமர்ந்துள்ளனர்; *A* மற்றும் *E*-க்கு நடுவில் *K* உள்ளனர். *H*-க்கு இடப்புறத்தில் உடனடியாக *G* மற்றும் *C* உள்ளனர்.

18. சரியான வரிசையை கண்டுபிடிப்பதற்கு எல்லா வாக்கியங்களும் தேவை.

19. இருக்கைகளை இடம் மாற்றி உருவாகும் புதிய வரிசையானது;

D, *F*, *H*, *J*, *C*, *I*, *G*, *B*, *A*, *E*, *K*.

புது வரிசையில் *D* மற்றும் *K* முறையே ஒவ்வொரு முனையில் உள்ளனர்.

20. சாகில் நடுவில் அமர்ந்துள்ளார். சாகிலுக்கு அடுத்தபடியாகவும் அரவிந்திலிருந்து மூன்று இடங்கள் தள்ளியும் சுனிதா உள்ளார். அரவிந்துக்கு எதிராக அபர்ணா உள்ளார். அபர்ணாவிற்கு இடது புறத்தில் நான்கு இடங்கள் தள்ளி ப்ரீத்தி உள்ளார்.

எனவே, கிடைக்கும் வரிசையானது;

_____ சுனிதா சாகில் _____ அரவிந்த்

ப்ரீத்தி _____ _____ _____ அபர்ணா

சுனிதாவிலிருந்து இரண்டு இடங்கள் தள்ளி நிதி அமர்ந்துள்ளார். சுனிதாவிற்கு எதிராக பவன் உள்ளார். ப்ரீத்தியிலிருந்து மூன்று இடங்கள் தள்ளி குணால் அமர்ந்துள்ளார். எனவே, கிடைப்பது;

_____ சுனிதா சாகில் நிதி அரவிந்த்

ப்ரீத்தி பவன் _____ குணால் அபர்ணா

இப்பொழுது தன்மய் மற்றும் தான்யா மட்டுமே மீதமுள்ளனர். தன்மய் ஒரு பெண்ணுக்கு எதிராக அமரலாம் மற்றும் தான்யா ஒரு ஆணுக்கு எதிராக அமரலாம். எனவே, மொத்த ஏற்பாடனது வருமாறு;

தன்மய் சுனிதா சாகில் நிதி அரவிந்த்

ப்ரீத்தி பவன் தான்யா குணால் அபர்ணா

எனவே, தான்யாவிற்கு எதிராக சாகில் அமர்ந்துள்ளார்.

21. தன்மய்க்கு எதிராக ப்ரீத்தி அமர்ந்துள்ளார்.

கேள்விகள் 22 முதல் 25:

E கடைசியில் அமரவில்லை. ஆதலால், ஒரு வரிசையின் நடுவில் *E* அமர வேண்டும்.

F-க்கு இடது புறத்தில் இரண்டாவதாக *D* உள்ளார். ஆகவே, வரிசையின் முறை *D* __ *F* என இருக்க வேண்டும்.

E-க்கு பக்கத்தில் *C* உள்ளார். *D*-க்கு குறுக்கு எதிராக *E* அமர்ந்துள்ளார். எனவே, கிடைப்பது;

D — *F*

— *E* *C*

F-க்கு அடுத்தவர் *B*.

எனவே, வரிசையானது;

D *B* *F*

A *E* *C*

22. *D* மற்றும் *C* (கொடுக்கப்பட்டுள்ளது)-யைத் தவிர *A* மற்றும் *C* ஒருவருக்கொருவர் குறுக்கு எதிராக அமர்ந்துள்ளார்.

23. கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து தெளிவாக தெரிவது, *A* மற்றும் *E* ஒரே வரிசையில் உள்ளனர்.

24. கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து தெளிவாக தெரிவது, *D*, *B* மற்றும் *F* ஆகியோர் ஒரே வரிசையில் அமர்ந்துள்ளனர்.

25. *E*-க்கு அடுத்துள்ளவர்கள் முறையே *A* மற்றும் *C*. ஆகையால், *E*-யுடன் இருக்கையை மாற்றியமைத்தால் *D*-க்கு கிடைக்கும் புதிய அடுத்த நபர்கள் முறையே *A* மற்றும் *C*.

கேள்விகள் 26 முதல் 30:

கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கீழ் வருமாறு ஆராயலாம்;

கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் படி கார்களை இடமிருந்து வலமாக வரிசைப்படுத்தினால், கிடைப்பது;

பார்கோ மற்றும் கார்டிலாக்

பியட், கார், கார், கார், பார்கோ

அம்பாசிடர் மற்றும் பெர்போர்டுக்கு நடுவில் மாருதி பியட், கார், கார், அம்பாசிடர்.

ஒரு முனையில் பியட் கார் உள்ளது. எனவே, இடமிருந்து வலமாக உள்ளவை;

1	2	3	4	5	6	7
பியட்	பெட்போர்ட்	மாருதி	அம்பாசிடர்	பார்கோ	கார்டிலாக்	மெர்சிடில்

26. மாருதி மூன்றாவது இடத்திலும், மெர்சிடிஸ் ஏழாவது இடத்திலும் அதாவது, மாருதியிலிருந்து நான்காவது இடத்தில் மெர்சிடிஸ் உள்ளது.

27. ஏழாவது இடத்தில் உள்ள மெர்சிடிஸீக்கு இடது புறத்தில் ஒரு இடம் முன்னோடி அதாவது ஆறாவது இடத்தில் கார்டிலாக் உள்ளது.

28. கார்டிலாக்கின் இரண்டு பக்கங்களிலும் முறையே பார்கோ மற்றும் மெர்சிடிஸ் கார்கள் உள்ளன.

29. நான்காவது இடத்தில் உள்ள அம்பாசிடரின் உடனடியாக இடது புறத்தில் ஆரம்பத்தில் இருந்து மூன்றாவது இடத்தில் மாருதி உள்ளது.

30. அம்பாசிடரின் வலது புறத்தில் முறையே பார்கோ, கார்டியாக் மற்றும் மெர்சிடிஸ் கார்கள் உள்ளன.

கேள்விகள் 31 முதல் 35:

வாக்கியங்கள் (1) மற்றும் (2)-லிருந்து படம் (1) காட்டுகிறது. வாக்கியம் (3)-லிருந்து படம் 2 காட்டுகிறது. வாக்கியம் (4)-லிருந்து படம் 3 காட்டுகிறது. வாக்கியம் (5)-லிருந்து படம் 4 காட்டுகிறது மற்றும் வாக்கியங்கள் (6) மற்றும் (7)-லிருந்து படம் 5 காட்டுகிறது.



படம் 1



படம் 2



படம் 3



படம் 4



படம் 5

31. படம் 5-லிருந்து தெரிவது; L-லிருந்து M-ன் தூரம் = $LK + KM = \frac{1}{2} + 1 = 1.5$ கிமீ மற்றும் L-ன் வடக்கில் M உள்ளது.

32. B மற்றும் C-க்கு இடையில் E உள்ளது எனில், கீழே உள்ள படங்கள் கிடைக்கும்.



எனவே, B-யிலிருந்து 2 கிமீ மேற்கில் D உள்ளது என்கிற வாக்கியம் தவறு.

33. A மற்றும் D-க்கு இடையே உள்ள தூரம்

$= AB + ED - BE \left(1 + 1 - \frac{1}{4}\right) = 2 - .25$

அதாவது, 1.5 மற்றும் 2 கி.மீ-க்கு இடையில் உள்ளது.

34. E மற்றும் B $\frac{1}{2}$ கிமீ தொலைவில் உள்ளது எனில், C-யுடன் E இணைந்து போக வாய்ப்பு உள்ளது.

35. படம் 3 மற்றும் படம் 4-ல் உள்ள தகவல்களை இணைத்தால் கீழே உள்ளவாறு படம் கிடைக்கும். J மற்றும் K, K மற்றும் H, H மற்றும் G ஆகிய இரண்டு சாலைகள் $\frac{1}{2}$ கி.மீ தூரத்தில் உள்ளன. எனவே விடை K மற்றும் J.

_____ I

_____ J

_____ K

_____ H

_____ G

கேள்விகள் 36 முதல் 38:

E என்கிற ஆண் B-யுடன் மட்டுமே அமர்கிறார். A பலகை I-லும், G பலகை III-லும் அமர்வதால், B மற்றும் F பலகை II-ல் அமர்கிறார்கள். ஒரு பலகையில் குறைந்தது ஒரு பெண்ணாவது அமர்வதால், B ஒரு பெண். C-யானவர் A, E மற்றும் D-யுடன் அமர்வதில்லை. எனவே, C-யானவர் B, F மற்றும் அல்லது G-யுடன் அமரலாம். B மற்றும் F ஒன்றாக அமர்கிறார்கள். எனவே, பலகை III-ல் G-யுடன் C அமர்கிறார். C ஒரு பெண் என்பதால் G ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருக்கலாம். எனவே, மீதமுள்ள 3 மாணவர்கள் — A, D மற்றும் E — I-ஆவது பலகையில் அமர்கின்றனர். A ஒரு ஆண், E (C-யின் சகோதரர்) ஒரு ஆண். ஆகையால், D ஒரு பெண்ணாக இருக்க வேண்டும்.

36. மூன்று மாணவர்கள் A, D மற்றும் E பலகை I-ல் அமர்கின்றனர்.

37. B, C மற்றும் D ஆகியோர் பெண்கள் G பெண்ணாக இருக்கலாம் அல்லது இருக்க முடியாது. எனவே, 3 அல்லது 4 பெண்கள் உள்ளனர்.

38. C-யுடன் G அமர்கிறார்.

39. B, C மற்றும் D ஆகியோர் பெண்கள்.

கேள்விகள் 40 முதல் 42:

40. C மற்றும் D ஒன்றாக இருக்க முடியாது. அவர்கள் (1-வது மற்றும் 3-வது), (1-வது மற்றும் 4-வது) இருக்கைகளில் அமரலாம். கடைசி இரண்டு தகவல்களின் படி 3-வது இடத்தில் B அமர முடியாது. A அங்கு இருக்க முடியாது. எனவே, A ஒரு பொழுதும் முதல் இடத்தில் இருக்க முடியாது.

41. A-யோ அல்லது B-யோ 3-வது இடத்தில் இருக்க முடியாது. அந்த இடத்தை D அல்லது C ஆக்கிரமிக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அந்த இடத்தில் அமர்ந்தால், மற்றொருவர் முதல் இடத்தில் அமர வேண்டும் (ஏனெனில், C மற்றும் D ஒன்றாக இருக்க முடியாது). எனவே, முதல் அல்லது மூன்றாவது இடத்தில் மட்டுமே C அமர முடியும்.

42. A மற்றும் B ஒன்றாகவும் ஆனால் C மற்றும் D இணையாமலும் இருந்தால் A மற்றும் B பிடிக்கும் இடம் 2-வது மற்றும் 3-வது, B 3-வது இடத்தில் இருக்க முடியாது. எனவே, 3-வது இடத்தில் A இருக்க வேண்டாம்.

வகை 3: ஒப்பீடு வகை கேள்விகள்

இந்த வகை கேள்விகளில், ஒன்று அல்லது அதற்கு மேல் ஒத்த குணமுடைய நபர்கள் அல்லது பொருட்களின் ஒப்பிடும் வகையில் துப்புகள் கொடுக்கப்பட்டிருக்கும். அனைத்து தகவல்களையும் நன்கு புரிந்து கொண்டு சரியான ஏறுவரிசை/இறங்கு வரிசையை உருவாக்கி பின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்.

எ.கா. 1: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

மாலாவை விட அல்கா மூத்தவர், மாலாவை விட கோபால், மூத்தவர் ஆனால், அல்காவை விட இளையவர். ராம் மற்றும் மாலாவை விட கபில் இளையவர். ராமை விட மாலா மூத்தவர். (R.R.B. 2005)

1. யாருடைய வயது கோபால் மற்றும் ராம் ஆகியோருக்கு இடையில் உள்ளது?

(a) மாலா (b) கபில் (c) அல்கா (e) இவற்றில் எவருமில்லை

2. மாலா மற்றும் கபிலுக்கு இடையில் யாருடைய வயது இருக்கும்?
(a) கோபால் (b) ராம் (c) அல்கா (e) இவற்றில் எவருமில்லை
3. ஐந்து நபர்களுக்கு மிகச் சரியாக நடுவில் யாருடைய வயது இருக்கும்?
(a) மாலா (b) கோபால் (c) ராம் (d) அல்கா
4. யார் வயதில் மூத்தவர்?
(a) அல்கா (b) மாலா (c) கபில் (d) கோபால்
5. யார் வயதில் இளையவர்?
(a) மாலா (b) ராம் (c) அல்கா (d) கபில்

தீர்வு. நபர்களின் பெயர்களின் முதலெழுத்தை வைத்து குறிப்பிடுவோம். அ, மா, கோ, க, ரா.
எனில், அ > மா, அ > கோ > மா, ரா > க, மா > க மற்றும் மா > ரா.
அனைத்தையும் சேர்க்கும் பொழுது, கிடைப்பது: அ > கோ > மா > ரா > க.

1. மாலாவின் வயது கோபால் மற்றும் ராம் ஆகியோருக்கு இடையில் உள்ளது. எனவே, விடை (a).
2. மாலா மற்றும் கபிலுக்கு இடையில் ராமின் வயது உள்ளது. எனவே, விடை (b).
3. வயதுகளின் அடிப்படையில் நபர்களை ஏறுவரிசை அல்லது இறங்கு வரிசையில் அமைத்தால், நடுவில் மாலா உள்ளார். எனவே, விடை (a).
4. அல்கா வயதில் மூத்தவர். எனவே, விடை (a).
5. கபில் வயதில் இளையவர். எனவே, விடை (d).

எ.கா. 2: கீழே உள்ள தகவல்களை படித்து கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

(i) ஐந்து பெண்கள் கொண்ட ஒரு குழு உள்ளது.
(ii) காமினியின் உயரம் இரண்டாவது. ஆனால் அவர் ரீனாவை விட இளையவர்.
(iii) மோனிகாவை விட பூஜா உயரமானவர் ஆனால் வயதில் இளையவர்.
(iv) ரீனா மற்றும் மோனிகாவின் வயதுகள் சமம். ஆனால், ரீனா உயரமானவர்.
(v) நீலம் பூஜாவை விட உயரமானவர் மற்றும் ரீனாவை விட மூத்தவர்.
(vi) அந்த குழுவில் இருப்பவர்களில் காமினி மிகவும் இளையவர் அல்ல.

1. **உயரங்களின் அடிப்படையில் பெண்களை ஏறுவரிசையில் அமைத்தால், மூன்றாவது இடத்தில் யார் இருப்பார்?**
(a) மோனிகா (b) ரீனா (c) மோனிகா அல்லது ரீனா
(d) தகவல் போதுமானதாக இல்லை (e) எவருமில்லை
2. **வயதுகளின் அடிப்படையில் பெண்களை இறங்கு வரிசையில் அமைத்தால், நான்காவது இடத்தில் யார் இருப்பார்?**
(a) மோனிகா அல்லது ரீனா (b) காமினி (c) மோனிகா
(d) தகவல் போதுமானதாக இல்லை
3. **"அந்த குழுவில் இருப்பதிலேயே வயதில் மூத்தவர் யார்" என்கிற கேள்விக்கு பதிலளிக்க கீழே உள்ளவற்றில் எந்த வாக்கியம் மிகையானது?**
(a) (i) மட்டும் (b) (ii) மட்டும்
(c) (vi) மட்டும் (d) (i) அல்லது (iv)
(e) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. உயரங்களின் வரிசையை பார்ப்போம்.
(iii)-லிருந்து தெரிவது; மோ < பூ
(v)-லிருந்து தெரிவது; பூ < நீ
இருப்பதிலேயே ரீனா உயரமானவர் மற்றும் காமினி உயரத்தில் இரண்டாவது இடம்.
எனவே, உயரங்களின் வரிசை; மோ < பூ < நீ < கா < ரீ வயதுகளின் வரிசையை கண்டுபிடிப்போம்;
(ii)-லிருந்து தெரிவது; கா < ரீ
(iii)-லிருந்து தெரிவது பூ < மோ
(iv)-லிருந்து தெரிவது; ரீ = மோ
(v)-லிருந்து தெரிவது; ரீ < நீ
ஆகவே, வயதுகளின் வரிசை முறையே: நீ > ரீ = மோ > கா > பூ அல்லது நீ > ரீ = மோ > பூ > கா.

ஆனால் காமினி மிகவும் இளையவர் அல்ல.

எனவே, வயதுகளின் வரிசை முறையே: நீ > ரீ = மோ > கா > பூ.

1. வயதுகளின் அடிப்படையில் ஏறு வரிசையில் அமைத்தால், நீலம் மூன்றாவது இடத்தில் இருப்பார். எனவே, விடை (*e*) ஆகும்.
2. வயதுகளின் இறங்கு வரிசையில் பூஜா 4-வது இடத்தில் இருப்பார் (ஏனெனில், மோனிகா மற்றும் ரீமா இருவரும் 3-வது இடத்தில் உள்ளனர்) எனவே, விடை (*e*).
3. குழுவில் உள்ள வயது மூத்தவரை கண்டுபிடிப்பதற்கு வாக்கியம் (*vi*) தேவையற்றது. எனவே, விடை (*c*).

எ.கா.3: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

B, D, P, M, F, H, K மற்றும் W ஆகிய எட்டு நண்பர்கள் MBA-வில் சந்தைப்படுத்துதல், பணியாளர்கள், செயல்படுத்துதல், அமைப்பு மற்றும் நிதி துறைகளில் திறமையானவர்கள். மூவர் இரண்டு சிறப்பு துறைகளில் திறமையானவர்கள் செயல்படுத்துதல் மற்றும் அமைப்பு மற்ற மூன்று துறைகளில் எதனுடனும் சிறப்பு துறையாக எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. சந்தைப்படுத்துதலை நிதியுடன் சேர்த்து P முடித்திருக்கிறார். ஆனால் மிகக் குறைவாக சம்பாதிக்கிறார். செயல் படுத்துதலை படித்திருக்கும் B-யானவர் F, D மற்றும் K மூவரை விட அதிகம் சம்பாதிக்கிறார். பணியாளர்கள் துறையில் தேர்ந்தவரான W இரண்டு சிறப்பு துறைகளில் தேர்ந்தவரான M-ஐ விட மட்டும் குறைவாக சம்பாதிக்கிறார். அவரவர் சம்பாதிப்பதை வைத்து இறங்கு வரிசையில் அமைத்தால், மேலிருந்து B மூன்றாவதாக இருப்பார். K-யை விட அதிகமாகவும் ஆனால் F-வை விட குறைவாகவும் A சம்பாதிக்கிறார். எந்த இரு நபருக்கும் சமமான வருமானம் இல்லை.

H-ஐ விட கூடுதலாக சம்பாதிக்கும் K சந்தைப்படுத்துதலை படித்திருக்கிறார். அதே நேரத்தில் H பணியாளர்கள் மற்றும் நிதித் துறையில் தேர்வாகி உள்ளார். எந்த மூன்று நபரும் ஒரே மாதிரியான இரண்டு சிறப்புத் துறைகளில் தேர்வாகவில்லை. இரண்டு நபர்கள் அமைப்புத் துறையில் சிறந்தவர்கள். (Bank P.O. 2004)

1. கீழே உள்ளவற்றுள் எந்த ஜோடி அமைப்பு துறையில் சிறந்தவர்கள்?

(*a*) BF (*b*) BM (*c*) FH (*d*) தகவல் போதுமானதாக இல்லை

(*e*) இவற்றில் எதுவுமில்லை

2. கீழே உள்ளவர்களுள் யார் F-ஐ விட அதிகம் சம்பாதிக்கிறார்?

(*a*) M மற்றும் B மட்டும் (*b*) M, W மற்றும் D மட்டும்

(*c*) M மற்றும் W மட்டும் (*d*) W, B மற்றும் D மட்டும்

3. D-யை விட யார் அதிகம் சம்பாதிக்கிறார்?

(*a*) H மட்டும் (*b*) M மட்டும் (*c*) W மட்டும் (*d*) தகவல் போதுமானதாக இல்லை

(*e*) இவற்றில் எதுவுமில்லை

4. கீழே உள்ளவற்றுள் எந்த துறையை மிக அதிகமானோர் தனியாக அல்லது இட்டை சிறப்பு துறைகளுள் ஒன்றாக தேர்வு செய்தார்கள்?

(*a*) சந்தைப்படுத்துதல் (*b*) பணியாளர்கள் (*c*) அமைப்பு

(*d*) நிதித்துறை (*e*) இவற்றில் எதுவுமில்லை

5. M எடுத்துக் கொண்ட இரண்டு சிறப்பு துறைகள் எவை?

(*a*) பணியாளர்கள், சந்தைப்படுத்துதல் (*b*) சந்தைப்படுத்துதல், நிதி

(*c*) பணியாளர்கள், நிதி (*d*) தகவல் போதுமானதாக இல்லை

(*e*) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. செயல்படுத்துதல் மற்றும் அமைப்பு துறை இரண்டும் தனி சிறப்பு துறைகளாக கொடுக்கப்படுகின்றன என்பது தெளிவு.

P – சந்தைப்படுத்துதல் மற்றும் நிதியில் சிறந்தவர்கள்.

B – செயல்படுத்துதல் துறையில் சிறந்தவர்.

W – பணியாளர்கள் துறையில் சிறந்தவர்.

K – சந்தைப்படுத்துதல் துறையில் சிறந்தவர்.

H – பணியாளர்கள் துறை மற்றும் நிதித் துறையில் சிறந்தவர்.

D, M மற்றும் F ஆகியோர் மீதமுள்ளனர். M இரண்டு துறைகளில் சிறந்தவர் மற்றும் இரண்டு நபர்கள் அமைப்புத் துறையில் தேர்வானவர்கள் எனவே, D மற்றும் F அமைப்புத் துறையில் சிறந்தவர்கள்.

சந்தைப்படுத்துதல், நிதி மற்றும் பணியாளர்கள் ஆகிய மூன்றில் ஏதாவது இரண்டு துறைகளில் M தேர்வானவர். P, H மற்றும் M ஆகியவர்களில் எந்த இரு நபரும் ஒரே சிறப்பு துறைகளின் இணையை கொண்டிருக்க முடியாது. எனவே, சந்தைப்படுத்துதல் மற்றும் பணியாளர்கள் துறையில் M சிறந்தவர்.

வருமானத்தில் அடிப்படையில் பார்த்தால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் படி, கிடைப்பது;

$B > F$, $B > D$, $B > K$, $M > W$, $F > D > K$, $K > H$.

M-ஐ விட மட்டுமே குறைவாக W சம்பாதிக்கிறார். எனவே, M மிக அதிகமாக சம்பாதிகிறார். வருமானத்தின் அடிப்படையில் இறங்கு வரிசையில் B மூன்றாவது இடத்தில் உள்ளார்.

எனவே, கிடைப்பது; $M > W > B > F > D > K > H$.

P மிகக் குறைந்த சம்பளம் வாங்குவதால் கிடைப்பது;

$M > W > B > F > D > K > H > P$.

1. D மற்றும் F அமைப்பு துறையில் தேர்வானவர்கள் எனவே, விடை (*e*) ஆகும்.
2. M, W மற்றும் B மூவரும் F-வை விட கூடுதலாக சம்பாதிக்கிறார்கள். எனவே, விடை (*e*) ஆகும்.
3. P-யை விட மட்டுமே கூடுதலாக H சம்பாதிக்கிறார். எனவே விடை (*a*).
4. சிறப்பு துறைகளாக அதிகமானவர்கள் எடுத்துக் கொண்டவை முறையே சந்தைப்படுத்துதல் மற்றும் பணியாளர்கள் துறைகள். ஒவ்வொரு துறையையும் 3 நபர்கள் எடுத்துக் கொண்டுள்ளனர். எனவே, விடை (*e*) ஆகும்.
5. பணியாளர்கள் துறை மற்றும் சந்தைப்படுத்துதல் துறைகளில் M தேர்வாகியுள்ளார். எனவே, விடை (*a*) ஆகும்.

பயிற்சி 6C

1. A, B, C, D மற்றும் E ஆகியோர் 5 நபர்கள். B-யை விட குள்ளமாகவும் E-யை விட உயரமாகவும் A உள்ளார். C மிகவும் உயரமானவர். B-யை விட குள்ளமாகவும் A-யை விட உயரமாகவும் D உள்ளார். எந்த நபரை (அவன்/அவளை) விட கூடுதல் உயரம் கொண்ட இருவர் மற்றும் குறைந்த உயரம் கொண்ட இருவர் உள்ளனர்? **(C.P.O. 2003)**

(*a*) A (*b*) B (*c*) C (*d*) D

2. தங்களது அறிவுத்திறனை தெரிந்து கொள்வதற்காக உளவியல் சோதனையை ஐந்து குழந்தைகள் மேற்கொண்டனர். அறிக்கையில் உளவியல் நிபுணர் சொன்னது; குழந்தை A குழந்தை B-யை விட புத்திசாலித்தனத்தில் குறைந்தவர். குழந்தை C குழந்தை D-யை விட புத்திசாலித்தனத்தில் குறைந்தவர். குழந்தை B குழந்தை C-யை விட புத்திசாலித்தனத்தில் குறைந்தவர். குழந்தை A குழந்தை E-யை விட அதிக புத்திசாலித்தனம் கொண்டவர். எந்த குழந்தை மிகவும் புத்திசாலித்தனம் கொண்டது? **(M.A.T. 2005)**

(*a*) A (*b*) B (*c*) D (*d*) E

(*e*) இவற்றில் எதுவுமில்லை

3. ஒரு கடையில் வெவ்வேறு உயரங்கள் A, B, C மற்றும் D கொண்ட 4 பொம்மைகள் உள்ளன. A-யைப் போல் உயரம் கொண்டவரும் அல்ல C-யை போல் குள்ளமானவரும் அல்ல D. மிக உயரமான பொம்மையை மணி வாங்க விரும்பினால், அவர் எந்த பொம்மையை வாங்க வேண்டும்?

(*a*) A மட்டும் (*b*) D மட்டும்

(*c*) A அல்லது D (*d*) B அல்லது D

(*e*) இவற்றில் எதுவுமில்லை

4. (*i*) Q-வை விட P உயரமானவர் (*ii*) P-யை விட R குள்ளமானவர் (iii) T-யை விட S உயரமானவர் ஆனால் Q-வை விட S குள்ளமானவர் எனில், அவர்களுள் யார் மிகவும் உயரமானவர்? **(IGNOU, 2003)**

(*a*) P (*b*) Q

(*c*) S (*d*) T

5. ஒரு தேர்வில், முகேஷை விட ராஜ் அதிக மதிப்பெண்களும் ஆனால் பிரியாவை போல் மதிப்பெண்கள் எடுக்கவில்லை. கௌரவ் மற்றும் கவிதாவை விட பிரியா அதிக மதிப்பெண்கள் எடுத்துள்ளார். முகேஷை விட கௌரவ் குறைவான மதிப் பெண்கள் எடுத்துள்ளார். ஆனால், அவரது மதிப்பெண்கள் குழுவிலேயே மிகக் குறைந்தது அல்ல. மதிப் பெண்களின் இறங்கு வரிசையில் யாருடைய மதிப்பெண் இரண்டாம் இடம்?

(*a*) பிரியா (*b*) கவிதா

(*c*) ராஜ் (*d*) கண்டுபிடிக்க முடியாது

(*e*) இவற்றில் எதுவுமில்லை

6. மாணிக்கை விட தக்ஷ் உயரமானவர் ஆனால் ரோஹனைப் போல் உயரமானவர் அல்ல. சோமேஷ் தக்ஷை விட குள்ளமானவர் ஆனால் பர்ஹானை விட உயரமானவர். அவர்களுள் யார் மிகவும் குள்ளமானவர்? **(R.R.B. 2005)**

(*a*) தக்ஷ் (*b*) மாணிக்

(*c*) பர்ஹான் (*d*) கண்டு பிடிக்க முடியாது

7. [illegible] கரிமா உயரமானவர் ஆனால் ரீமாவை விட [illegible]வர் அல்ல. ரீனா மற்றும் தான்யா இரு[illegible] உயரம் கொண்டவர்கள். அனுவை விட [illegible]வர் கரிமா. எல்லாப் பெண்களிலும் யார்/யார் மிகவும் குள்ளமானவர்கள்? **(M.A.T. 2005)**

(*a*) அனு (*b*) ரீனா மற்றும் தான்யா

(*c*) கரிமா (*d*) சரிதா

8. D என்பவர் C மற்றும் E-யை விட உயரமானவர். E-யைப் போல் A உயரமானவர் அல்ல. A-யை விட C உயரமானவர். B-யைப் போல் D உயரமானவர் அல்ல. மிக உயரமானவருக்கு அடுத்தபடியாக அவர்களுள் யார் உள்ளார்? **(Bank P.O. 2005)**

புதிர்கள் (அல்லது) தரவரிசை அறிதல்

(a) A (b) D (c) B அல்லது D

(d) தகவல் போதுமானதாக இல்லை

(e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 9 முதல் 12 வரை): கீழே உள்ள வாக்கியங்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(I.A.M. 2003)**

I. L-ஐ விட X வயதில் மூத்தவர்

II. M மற்றும் N சம வயது உடையவர்

III. Z வயதில் மிகவும் குறைந்தவர்

IV. N-ஐ விட Y சிறியவர்

V. X-ஐ விட Y வயதில் மூத்தவர்

9. L-ஐ விட Y வயதில் மூத்தவர் என்பதை மேற்கண்டவற்றுள் எந்த இரண்டு வாக்கியங்கள் குறிப்பிடுகிறது?

(a) I மற்றும் IV (b) IV மற்றும் V

(c) I மற்றும் V (e) இவற்றில் எதுவுமில்லை

10. Z-ஐ விட N வயதில் மூத்தவர் என்பதை எந்த வாக்கியம்(ங்கள்) குறிப்பிடுகிறது(கின்றன)?

(a) II மற்றும் III (b) III மட்டும்

(c) III மற்றும் IV (e) இவற்றில் எதுவுமில்லை

11. எந்த வாக்கியம்/யங்கள் M-ஐ விட L இளையவர் என்பதை குறிப்பிடுகிறது/கின்றன?

(a) III மட்டும் (b) III அல்லது IV

(c) IV மற்றும் V (d) III மற்றும் V

12. M-ஐ விட X சிறியவர் என்பதை எந்த வாக்கியங்கள் நிரூபிக்கின்றன?

(a) I, II, IV (b) II, IV, V

(c) I, IV, V (d) இவற்றில் எதுவுமில்லை

13. ராக்கியை விட உயரமாகவும் பிரேரனாவை விட குள்ளமாகவும் ஷாலு உள்ளார். மேக்னாவைப் போல் சம உயரம் ஆனால் கோமலைப் போல் உயரமானவர் அல்ல ராக்கி. எனில், மேக்னா; **(Bank P.O. 2002)**

(a) ராக்கியை விட குள்ளமானவர்

(b) கோமலை விட குள்ளமானவர்

(c) ஷாலுவைப் போலவே உயரமானவர்

(d) பிரேரனாவை விட உயரமானவர்

(e) ஷாலுவை விட குள்ளமானவர்

14. கோகிலாவை விட மிகவும் வயதானவர் சுதான்சு. அவர் பிரவீனை விட இளையவர் கோகிலாவின் சம வயதுடையவர் நிதின். கீழே உள்ளவற்றுள் எது தவறு?

(a) பிரவீனை விட சிறியவர் கோகிலா

(b) பிரவீனை விட சிறியவர் நிதின்

(c) நிதினை விட மூத்தவர் சுதான்சு

(d) இருப்பதிலேயே மூத்தவர் பிரவீன் அல்ல

(e) சுதான்சுவை விட இளையவர் கோகிலா

15. B-யை விட A பெரியவர். C மற்றும் D ஆகியோர் E-யை விட பெரியவர். A மற்றும் C-க்கு இடையில் E உள்ளார். B-யை விட C பெரியவர் எனில், கீழே உள்ளவற்றில் எந்த வாக்கியம் உண்மையானது?

(a) C-யை விட பெரியவர் A

(b) D-யை விட பெரியவர் C

(c) C-யை விட பெரியவர் D

(d) B-யை விட பெரியவர் E

16. ஆறு நபர்கள் – ரோஹித், சுனீத், தீபக், விகாஸ், கனக் மற்றும் மாணிக் அனைவரும் ஒரே வருடத்தில் ஒரே தேதியில் பிறந்தவர்கள். ஆனால் ஒரே ஆறு வருட கால அளவில் ஒவ்வொருவரும் வெவ்வேறு வருடத்தில் பிறந்துள்ளனர். **(M.B.A. 2002)**

I. தீபக்கை விட ரோஹித் பெரியவர்.

II. விகாஸ் மற்றும் கனக் இருவரையும் விட சுனித் பெரியவர்.

III. விகாஸை விட மாணிக் 2 வருடம் பெரியவர்.

IV. அந்த குழுவில் உள்ள மிக வயதான நபர் 1960-ஆம் ஆண்டு பிறந்தவர்.

குழுவிலேயே மாணிக் பெரியவர் எனில், கீழே உள்ளவற்றில் எது உண்மை?

(a) தீபக் 1964-ஆம் ஆண்டு பிறந்தவர்

(b) ரோஹித் 1962-ஆம் ஆண்டு பிறந்தவர்

(c) விகாஸ் 1961-ஆம் ஆண்டு பிறந்தவர்

(d) சுனித் 1961-ஆம் ஆண்டு பிறந்தவர்

17. A-யை விட இரு மடங்கு வயதுடையவர் B, ஆனால் F-ஐ விட இரு மடங்கு வயது குறைந்தவர். A-யின் பாதி வயது C ஆனால் C-க்கு D-யின் இரு மடங்கு வயது. எனில் கீழே உள்ள ஜோடிகளில் எந்த ஜோடி மிகவும் மூத்தவர் மற்றும் இளையவரின் ஜோடி?

(a) F மற்றும் A (b) F மற்றும் D

(c) B மற்றும் F (d) F மற்றும் C

(e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 18 முதல் 22 வரை): கீழே உள்ளவற்றை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

அனிதா, மஹிமா, ராஜன், லதா மற்றும் தீப்தி ஆகியோர் உடன் பிறவா சகோதர சகோதரிகள். மஹிமாவின் இரு மடங்கு வயது அனிதாவுக்கு. ராஜனுக்கு மஹிமாவின் பாதி வயது. தீப்தியின் பாதி வயது அனிதா மற்றும் லதாவின் இரு மடங்கு வயது ராஜனுக்கு. **(Hotel Management, 2004)**

18. மிகவும் இளையவர் யார்?

(a) தீப்தி (b) ராஜன்

(c) லதா (d) அனிதா

19. மிகவும் பெரியவர் யார்?

(a) தீப்தி (b) லதா

(c) அனிதா

(d) இவற்றில் எதுவுமில்லை

20. கீழே உள்ளவற்றுள் எந்த ஜோடியின் வயதுகள் சமம்?

(a) மஹிமா மற்றும் லதா

(b) அனிதா மற்றும் மஹிமா

(c) மஹிமா மற்றும் ராஜன்

(d) இவற்றில் எதுவுமில்லை

21. யாரை விட அனிதா இளையவர்?

(a) ராஜன் (b) மஹிமா

(c) தீப்தி (d) இவற்றில் எதுவுமில்லை

22. மஹிமாவுக்கு 16 வயது எனில், லதாவின் வயது?

(a) 4 வயது (b) 5 வயது

(c) 7 வயது (d) 14 வயது

குறிப்புகள் (கேள்விகள் 23 முதல் 27 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

(i) P, Q, R, S, T, U மற்றும் V ஆகிய ஏழு மாணவர்கள் தேர்வுகளின் தொடரை எழுதினார்கள்.

(ii) எந்த இரண்டு மாணவர்களும் சமமான மதிப்பெண்கள் எடுக்கவில்லை.

(iii) P-யை விட V எப்பொழுதும் அதிக மதிப்பெண்கள் எடுப்பார்.

(iv) Q-யை விட P எப்பொழுதும் அதிக மதிப்பெண்கள் எடுப்பார்.

(v) R அதிகபட்ச மதிப்பெண்களும் மற்றும் T குறைந்தபட்ச மதிப்பெண்களும் ஒவ்வொரு முறையும் எடுக்கிறார்கள் அல்லது மாற்றாக S அதிகபட்ச மதிப்பெண்களும் U அல்லது Q குறைந்தபட்ச மதிப்பெண்களும் எடுக்கிறார்கள்.

23. S ஆறாவது தரவரிசையும் Q ஐந்தாவது தரவரிசையும் எடுத்தார்கள் எனில், கீழே உள்ளவற்றுள் எது உண்மையாக இருக்க முடியும்?

(a) V முதல் அல்லது நான்காவது தர வரிசையில் உள்ளார்.

(b) R இரண்டாவது அல்லது மூன்றாவது தர வரிசையில் உள்ளார்.

(c) P இரண்டாவது அல்லது ஐந்தாவது தர வரிசையில் உள்ளார்.

(d) U மூன்றாவது அல்லது நான்காவது தர வரிசையில் உள்ளார்.

(e) T மூன்றாவது அல்லது ஐந்தாவது தர வரிசையில் உள்ளார்.

24. R மிக அதிக மதிப்பெண்கள் எடுக்கிறார் எனில், கீழே உள்ளவற்றில் எந்த தர வரிசைக்கு குறையாமல் இருக்க வேண்டும்?

(a) இரண்டாவது (b) மூன்றாவது

(c) நான்காவது (d) ஐந்தாவது

(e) ஆறாவது

25. R இரண்டாவது தர வரிசையில் உள்ளார் மற்றும் Q ஐந்தாவது தர வரிசையில் உள்ளார் எனில், கீழே உள்ளவற்றுள் எது உண்மை?

(a) S மூன்றாவது தர வரிசையில் உள்ளார்

(b) T ஆறாவது தர வரிசையில் உள்ளார்

(c) P ஆறாவது தர வரிசையில் உள்ளார்

(d) V நான்காவது தர வரிசையில் உள்ளார்

(e) U ஆறாவது தர வரிசையில் உள்ளார்

26. S இரண்டாவது தர வரிசையில் உள்ளார் எனில், கீழே உள்ளவற்றுள் எது சரியாக இருக்க முடியும்?

(a) V-யை விட U அதிக மதிப்பெண் எடுக்கிறார்

(b) S-ஐ விட V அதிக மதிப்பெண் எடுக்கிறார்

(c) R-ஐ விட P அதிக மதிப்பெண் எடுக்கிறார்

(d) V-ஐ விட P அதிக மதிப்பெண் எடுக்கிறார்

(e) Q-வை விட T அதிக மதிப்பெண் எடுக்கிறார்

27. V ஐந்தாவது தர வரிசையில் உள்ளார் எனில், கீழே உள்ளவற்றுள் எது உண்மை?

(a) S மிக அதிக மதிப்பெண்கள் எடுத்கிறார்

(b) R இரண்டாவது தர வரிசையில் உள்ளார்

(c) T மூன்றாவது தர வரிசையில் உள்ளார்

(d) Q நான்காவது தர வரிசையில் உள்ளார்

(e) U மிகக் குறைந்த மதிப்பெண்கள் எடுக்கிறார்.

28. A, B, C மற்றும் D என நான்கு நபர்கள் உள்ளனர். A மற்றும் இருவரிடமும் சேர்த்து இருக்கும் தொகையானது C மற்றும் D இருவரிடமும் சேர்த்து இருக்கும் தொகைக்கு சமம். ஆனால் B மற்றும் D இருவரிடமும் சேர்த்து இருக்கும் மொத்த தொகை A மற்றும் C இருவரிடமும் சேர்த்து இருக்கும் தொகையை விட அதிகமாகும். A-யிடம் இருக்கும் தொகை B-யிடம் இருக்கும் தொகையை விட அதிகமாகும். யாரிடம் மிகக் குறைந்த தொகை உள்ளது? **(U.P.S.C. 2004)**

(a) B (b) C

(c) D (d) கண்டுபிடிக்க முடியாது

குறிப்புகள் (கேள்விகள் 29 முதல் 33 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

(i) ஒரு வகுப்பில் A, B, C, D, E மற்றும் F ஆகிய ஆறு நண்பர்கள் உள்ளனர்.

(ii) B மற்றும் C இருவரும் F-வை விட குள்ளமானவர்கள். ஆனால் A-யை விட பருமனானவர்.

(iii) B-யை விட D பருமானனானவர் மற்றும் C-யை விட உயரமானவர்.

(iv) D-யை விட F பருமனானவர்.

(vi) E-யை விட குள்ளமாகவும் F-வை விட உயரமாகவும் A உள்ளார்.

29. அவர்களில் [illegible] மிகவும் உயரமானவர்?

(a) (c) D (d) E

(e) [illegible]ல்லை

30. உயர[illegible]படையில் இறங்கு வரிசையில் அமைக்கு[illegible]ழது மேலிருந்து மூன்றாவதாக இருப்பவர் [illegible]

(a) A (b) B (c) C (d) E

(e) இவற்றில் எதுவுமில்லை

31. கீழே உள்ள நண்பர்கள் குழுவில் எந்த குழு A-யை விட குள்ளமானவர்கள்?

(a) B, C மட்டும் (b) D, B, C மட்டும்

(c) E, B, C மட்டும் (d) F, B, C மட்டும்

(e) இவற்றில் எதுவுமில்லை

32. இவர்களுள் யார் மிகவும் மெலிந்தவர்?
(a) A (b) B
(c) C (d) B அல்லது C
(e) தகவல் போதுமானது அல்ல

33. உயரம் மற்றும் எடையின் அடிப்படையில் கீழே உள்ள வாக்கியங்களில் எது சரியானது?
(a) அவர் E-யை விட மெலிந்தவர் மற்றும் உயரமானவர்.
(b) அவர் B-யை விட பருமனானவர் மற்றும் E-யை விட உயரமானவர்.
(c) அவர் B-யை விட பருமனானவர் ஆனால் D-யை விட குள்ளமானவர்.
(d) அவர் E-யை விட மெலிந்தவர் மற்றும் E-யை விட குள்ளமானவர்.
(e) அவர் B-யை விட மெலிந்தவர் ஆனால் D-யை விட உயரமானவர்.

குறிப்புகள் (கேள்விகள் 34 முதல் 38 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

(i) A, B, C, D மற்றும் E ஆகியோர் ஐந்து நண்பர்கள்.
(ii) E-யை விட B பெரியவர். ஆனால், C-யைப் போல் உயரமானவர் அல்ல.
(iii) A-யை விட சிறியவர் C மற்றும் D மற்றும் E-யை விட உயரமானவர்.
(iv) D-யை விட உயரமானவர் A, ஆனால், E-யை விட இளையவர்.
(v) A-யை விட பெரியவர் A ஆனால் அந்தக் குழுவில் மிகவும் குள்ளமானவர்.

34. கீழே உள்ளவர்களுள் யார் மிகவும் மூத்தவர்?
(a) A (b) B (c) C (d) D
(e) இவற்றில் எதுவுமில்லை

35. கீழே உள்ள மாணவர்கள் குழுவில் எந்த குழு D-யை விட மூத்தவர்கள்?
(a) BA (b) BC (c) BE (d) EA
(e) இவற்றில் எதுவுமில்லை

36. B-யைப் பொறுத்த வரையில் கீழே உள்ளவற்றுள் எந்த வாக்கியங்கள் சரியானவை?
(i) B மிகவும் உயரமானவர் அல்ல
(ii) E-யை விட B குள்ளமானவர்
(iii) அவர்களின் உயரத்தைப் பொறுத்து நிற்க ஏறுவரிசையில் நிறுத்த வைத்தால், B நடுவில் இருப்பார்.
(a) (i) மட்டும் சரியானது
(b) (i) மற்றும் (ii) சரியானவை
(c) அனைத்தும் சரியானவை
(d) அனைத்தும் தவறானவை
(e) இவற்றில் எதுவுமில்லை

37. F, மற்றொரு நண்பர் இருவரும் C-யை விட உயரமானவர்கள் எனில், உயரங்களின் அடிப்படையில் F மற்றும் E ஆகியோருக்கு இடையில் எத்தனை நபர்கள் உள்ளனர்?
(a) ஒருவரும் இல்லை (b) ஒருவர்
(c) இருவர் (d) மூவர்
(e) இவற்றில் எதுவுமில்லை

38. அவர்களுள் மூத்தவர் மற்றும் உயரமானவரை தேர்ந்தெடுக்க வேண்டும் எனில், அவர்களில் யாரை தேர்ந்தெடுக்க வேண்டும்?
(a) A (b) B (c) C (d) D
(e) E

குறிப்புகள் (கேள்விகள் 39 முதல் 43 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

B, D, H, K, P, R மற்றும் T ஆகிய ஏழு நண்பர்கள் X, Y மற்றும் Z ஆகிய மூன்று மேலாண்மை நிறுவனங்களில் படித்தவர்கள். சந்தைப்படுத்துதல், நிதி மற்றும் பணியாளர்கள் ஆகிய சிறப்பு துறைகளிலிருந்து அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு சிறப்பு துறையை எடுத்துக் கொண்டனர் — ஒவ்வொரு சிறப்பு துறையிலும் குறைந்தது இரண்டு நபர்கள் உள்ளனர். எந்த இரண்டு நபர்களும் ஒரே நிறுவனம் மற்றும் சிறப்புத் துறையை சேர்ந்தவர் அல்ல.
நிறுவனம் Y-ஐச் சேர்ந்த சந்தைப்படுத்துதல் நிபுணர் மிக அதிகமாக சம்பாதிக்கிறார். Z நிறுவனத்தில் படித்த D பணியாளர்கள் துறையில் B மற்றும் K ஆகியோரை விட மட்டுமே கூடுதலாக சம்பாதிக்கிறார். X-நிறுவனத்தில் சந்தைப்படுத்துதல் துறை படித்த X, P மற்றும் T ஆகியோரை விட மட்டுமே குறைவாக சம்பாதிக்கிறார். Z-நிறுவனத்தில் நிதி படித்த R, D-யை விட அதிகமாகவும் H-ஐ விட குறைவாகவும் சம்பாதிக்கிறார். X-நிறுவனத்தில் நிதித் துறையை T படித்தார். பணியாளர்கள் நிபுணரான K நிறுவனம் Y-யில் படித்தார். ஆனால் இருப்பதிலேயே குறைவாக சம்பாதிப்பவர் அவர் அல்ல. மூன்றில் ஒரு நிறுவனத்திலிருந்து நிதித் துறையில் உள்ள ஒரே நிபுணர் B ஆவார். **(R.B.I. 2004)**

39. B எந்த நிறுவனத்தில் படித்தார்?
(a) X (b) Y
(c) Z (d) Y அல்லது Z
(e) தகவல் போதுமானதாக இல்லை

40. P-யின் சிறப்பு துறை எது?
(a) பணியாளர்கள்
(b) சந்தைப்படுத்துதல்
(c) நிதி
(d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றில் எதுவுமில்லை

41. கீழே உள்ளவற்றுள் எந்த நிறுவனம் — நபர் — சிறப்புதுறை தவறு?
(a) X — K — பணியாளர்கள்
(b) X — H — சந்தைப் படுத்துதல்
(c) Y — B — நிதி
(d) Z — R — நிதி
(e) இவற்றில் எதுவுமில்லை

42. அவர்களுள் இரண்டாவதாக அதிகம் சம்பாதிப்பவர் யார்?
(a) T (b) H
(c) P (d) P அல்லது T
(e) இவர்களில் எவருமில்லை

43. D-யை விட எத்தனை நபர் அதிகமாக சம்பாதிக்கின்றனர்?
(a) ஒன்று (b) இரண்டு
(c) மூன்று (d) ஐந்து
(e) இவர்களில் எவருமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 44 முதல் 48 வரை): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(M.B.A. 2006)**

(i) P, Q, R, S, T மற்றும் U ஆகிய ஆறு நண்பர்கள் ஒரு சங்கத்தின் உறுப்பினர்கள். கால்பந்து, கிரிக்கெட், டென்னிஸ், கூடைப்பந்து, பாட்மின்ட்டன் மற்றும் வாலிபால் ஆகிய விளையாட்டுக்களை விளையாடுகின்றனர்.
(ii) P மற்றும் S-ஐ விட உயரமான T டென்னிஸ் விளையாடுகிறார்.
(iii) அவர்களில் மிகவும் உயரமானவர் கூடைப்பந்து விளையாடுகிறார்.
(iv) அவர்களில் மிகவும் குள்ளமானவர் வாலிபால் விளையாடுகிறார்.
(v) Q மற்றும் S வாலிபாலும் விளையாட மாட்டார்கள். கூடைப்பந்தும் விளையாட மாட்டார்கள்.
(vi) R வாலிபால் விளையாடுகிறார்.
(vii) உயரத்தின் அடிப்படையில் பார்த்தால் கால்பந்து விளையாடும் Q மற்றும் P ஆகியோருக்கு இடையில் T உள்ளார்.

44. R-ஐ விட உயரமாகவும் P-யை விட குள்ளமாகவும் யார் உள்ளார்?
(a) Q (b) T (c) U
(d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவர்களில் எவருமில்லை

45. உயரத்தின் அடிப்படையில் இறங்கு வரிசையில் அமைக்கும் பொழுது மூன்றாவது இடத்தில் யார் உள்ளார்?
(a) Q (b) P (c) S (d) T
(e) இவர்களில் எவருமில்லை

46. கீழே உள்ளவற்றில் எது தவறு?
(a) R-ஐ விட P குள்ளமானவர்
(b) S-ஐ விட Q உயரமானவர்
(c) R-ஐ விட S உயரமானவர்
(d) R-ஐ விட T உயரமானவர்
(e) Q-ஐ விட உயரமானவர் U

47. அவர்களுள் யார் கூடைப்பந்து விளையாடுவார்?
(a) Q (b) R
(c) S (d) U
(e) இவர்களில் எவருமில்லை

48. S என்ன விளையாட்டு விளையாடுகிறார்?
(a) கிரிக்கெட்
(b) பாட்மின்ட்டன்
(c) கால்பந்து
(d) கிரிக்கெட் அல்லது பாட்மின்ட்டன்
(e) இவற்றில் எதுவுமில்லை

விடைகள் (பயிற்சி 6C)

1. (d)	2. (c)	3. (a)	4. (a)	5. (c)	6. (d)	7. (d)	8. (b)	9. (c)	10. (b)
11. (a)	12. (b)	13. (e)	14. (d)	15. (d)	16. (d)	17. (b)	18. (c)	19. (a)	20. (d)
21. (c)	22. (a)	23. (d)	24. (c)	25. (b)	26. (a)	27. (a)	28. (a)	29. (c)	30. (a)
31. (d)	32. (e)	33. (c)	34. (e)	35. (e)	36. (a)		38. (b)	39. (b)	40. (b)
41. (a)	42. (a)	43. (e)	44. (e)	45. (d)	46. (a)		48. (d)		

தீர்வுகள் (பயிற்சி 6C)

1. கொடுக்கப்பட்டுள்ளது; $E < A < B$, $A < D < B$. மிகவும் உயரமானவர் C என்பதால், $E < A < D < B < C$.
D நடுவில் உள்ளார் என்பது தெளிவு.

2. $A < B$, $C < D$, $B < C$ மற்றும் $E < A$ என கொடுக்கப்பட்டுள்ளது.
எனவே, தொடரானது $E < A < B < C < D$ என அமையும் D மிகவும் புத்திசாலி என்பது தெளிவு.

3. A-யைப் போல் D உயரமானவர் அல்ல $\Rightarrow$ A-யை விட D குள்ளமானவர்

$A \Rightarrow D < A$.

C-யைப் போல் D குள்ளமானவர் அல்ல $\Rightarrow$ C-யை விட D உயரமானவர்

$C \Rightarrow D > C$.

D-யை விட குள்ளமானவர் B ஆனால் C-யை விட உயரமானவர்.

$C \Rightarrow C < B < D$.

எனவே, கொடுக்கப்பட்டுள்ளது; $C < B < D < A$.

ஆகையால், A மிகவும் உயரமானவர்.

4. கொடுக்கப்பட்டுள்ளது; $P > Q$, $P > R$, $Q > S > T$.

எனவே, $P > Q > S > T$ மற்றும் $P > R$.

Q, R, S மற்றும் T ஆகிய ஒவ்வொருவரை விடவும் P உயரமானவர். ஆகவே, P மிக உயரமானவர்.

5. மதிப்பெண்களின் அடிப்படையில்,

முகேஷ் < ராஜ், ராஜ் < பிரியா, கௌரவ் < பிரியா, கவிதா < பிரியா, கௌரவ் < முகேஷ்.

கௌரவின் மதிப்பெண்கள் மிகவும் குறைந்தது அல்ல.

எனவே, கவிதாவின் மதிப்பெண்கள் மிகவும் குறைந்தவை.

எனவே, தொடரானது; கவிதா < கௌரவ் < முகேஷ் < ராஜ் < பிரியா.

இறங்கு வரிசையில் ராஜ் இரண்டாவது இடம்.

6. உயரங்களின் அடிப்படையில், கொடுக்கப்பட்டுள்ளது;

ரோஹன் > தக்ஷ் > மாணிக், தக்ஷ் > சோமேஷ் > பர்கான்.

எனவே, முழு தொடர் பின்வருமாறு அமையலாம்:

(*i*) ரோஹன் > தக்ஷ் > மாணிக் > சோமேஷ் > பர்கான்

அல்லது

(*ii*) ரோஹன் > தக்ஷ் > சோமேஷ் > மாணிக் > பர்கான்

அல்லது

(*iii*) ரோஹன் > தக்ஷ் > சோமேஷ் > பர்கான் > மாணிக்

எனவே, மாணிக் அல்லது பர்கான் மிகவும் குள்ளமானவர்.

எனவே, கொடுக்கப்பட்ட தகவல்கள் போதுமானவை அல்ல.

7. ஒவ்வொரு பெண்ணின் பெயரின் முதல் எழுத்து அவளின் உயரத்தைக் குறிக்கிறது எனில்,

சரிதாவை விட கரிமா உயரமானவர் $\Rightarrow$ க > ச.

ரீனாவை விட கரிமா உயரமானவர் அல்ல

$\Rightarrow$ ரீ $\geq$ க.

ரீனா மற்றும் தான்யா ஒரே உயரம் கொண்டவர்கள் $\Rightarrow$ ரீ = தா

அனுவை விட கரிமா குள்ளமானவர் $\Rightarrow$ அ > க

மேலே உள்ள தகவல்களிலிருந்து, தெரிவது; சரிதாவைத் தவிர மற்ற ஒவ்வொரு பெண்ணின் உயரத்திற்கு சமமாகவோ அல்லது உயரம் குறைவாகவோ கரிமா உள்ளார். கரிமாவை விட சரிதா குள்ளமானவர். எனவே, சரிதா மிகவும் குள்ளமானவர்.

8. C மற்றும் E ஒவ்வொருவரை விடவும் A குள்ளமானவர். எனவே, A, C ஆகிய ஒவ்வொருவரை விட D உயரமானவர். ஆனால் D-யை விட B உயரமானவர். எனவே, B மிகவும் உயரமானவர் D இரண்டாவது உயரமானவர்.

கேள்விகள் 9 முதல் 12:

I-லிருந்து கிடைப்பது; $X > L$.

II-லிருந்து கிடைப்பது; $M = N$.

III-லிருந்து கிடைப்பது; Z மிகவும் இளையவர்.

IV-லிருந்து கிடைப்பது; $N > Y$

V-லிருந்து கிடைப்பது; $Y > X$.

9. I மற்றும் V-லிருந்து கிடைப்பது; $Y > X > L$ அல்லது $Y > L$.

10. III-லிருந்து Z மிகவும் இளையவர் என தெரிகிறது. L, M, N மற்றும் Y ஆகிய ஒவ்வொருவரும் Z-ஐ விட மூத்தவர் என தெரிகிறது.

11. I, II, IV மற்றும் V-லிருந்து தெரிவது; $M = N > Y > X > L$. அதாவது, $M > L$. எனவே, M-ஐ விட இளையவர் L. எனவே, III தேவையில்லை.

12. II, IV மற்றும் V-லிருந்து, கிடைப்பது;

$M = N > Y > X$ அதாவது, $X < M$.

13. கொடுக்கப்பட்டதிலிருந்து, தெரிவது;

பிரேரனா > ஷாலு > ராக்கி;

ராக்கி = மேக்னா, ராக்கி > கோமல்.

எனவே, உயரங்களின் அடிப்படையில் தொடரானது;

பிரேரனா > ஷாலு > ராக்கி = மேக்னா > கோமல்

ஷாலுவை விட மேக்னா குள்ளமானவர் என்பது தெளிவு.

14. வயதுகளின் அடிப்படையில் கிடைப்பது;

கோகிலா < சுதான்சு, சுதான்சு < பிரவீன், நிதின் = கோகிலா.

எனவே, அந்த தொடர்; நிதின் = கோகிலா < சுதான்சு < பிரவீன்.

பிரவீன் மிகவும் மூத்தவர் என்பது தெளிவு.

15. வயதுகளின் அடிப்படையில் கிடைப்பது; $B > A$, $E < C$, $E < D$, $B < C$.

A மற்றும் C-க்கு இடையில் E இருப்பதால், தொடர் பின்வருமாறு அமையும்.

$B < A < E < C < D$ அல்லது $B < A < E < D < C$.

எதுவாக இருந்தாலும் B-யை விட E மூத்தவர்.

எனவே, (*d*) சரியானதாகும்.

16. இருப்பதிலேயே மாணிக் மிகவும் மூத்தவர். எனவே, மாணிக் 1960-ஆம் ஆண்டு பிறந்தார். விகாஸை விட மாணிக் 2 வருடங்கள் பெரியவர். எனவே, ரோஹித் 1963-ஆம் ஆண்டு பிறந்தவர். விகாஸை விட சுனீத் பெரியவர். எனவே, சுனீத் 1961-ஆம் ஆண்டு பிறந்தவர்.

தீபக் மற்றும் கனக் முறையே 1964 மற்றும் 1965-ஆம் ஆண்டு பிறந்திருக்க வேண்டும். ஆனால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து இதைக் கண்டு பிடிக்க முடியாது.

17. A-யின் வயது x எனில், B-யின் வயது $2x$. F-ஐ விட இரண்டு மடங்கு வயது குறைந்தவர் B. எனவே, F-ன் வயது $4x$. A-யின் பாதி வயது C. அதாவது, C-யின் வயது $\frac{x}{2}C$. அது D-யின் இரண்டு மடங்கு வயது. அதாவது, C-யின் பாதி வயது D. அதாவது, D-யின் வயது $\frac{x}{4}$.

ஆகவே, வயதுகளின் இறங்கு வரிசை;

F, B, A, C, D. எனவே, F மிகவும் மூத்தவர் மற்றும் D மிகவும் இளையவர்.

கேள்விகள் 18 முதல் 22:

மஹிமாவின் வயது = x. எனில், அனிதாவின் வயது = $2x$;

ராஜனின் வயது = $\frac{x}{2}$; தீப்தியின் வயது = $4x$;

லதாவின் வயது = $\frac{x}{4}$.

எனவே, வயதின் இறங்கு வரிசை; தீப்தி > அனிதா > மஹிமா > ராஜன் > லதா.

18. லதா மிகவும் இளையவர்.

19. தீப்தி மிகவும் மூத்தவர்.

20. அந்த குழுவில் ஏந்த இரு நபர்களுக்கும் சம வயது இல்லை.

21. தீப்தியை விட அனிதா இளையவர்

22. மஹிமாவின் வயது = 16 $\Rightarrow x = 16$.

$\therefore$ லதாவின் வயது = $\frac{x}{4} = 4$ ஆண்டுகள்.

கேள்விகள் 23 முதல் 28:

மதிப்பெண்களின் அடிப்படையில் உள்ளது; $V > P, P > Q$ அதாவது, $V > P > Q$.

R மிக அதிக மதிப்பெண்கள் எடுக்கிறார். எனில், $R > \ldots > T$.

S மிக அதிக மதிப்பெண்கள் எடுக்கிறார். எனில், $S > \ldots > Q$ அல்லது $S > \ldots > U$.

23. S-ன் மதிப்பெண்கள் ஆறாவது இடம் மற்றும் Q-வின் தரவரிசை ஐந்தாவது எனில்,

$\square > \square > \square > \square > Q > S > \square$.

இந்த தொடரில் தர வரிசையில் R முதல் இடத்திலும் T கடைசி இடத்திலும் உள்ளனர்.

எனவே, $R > \square > \square > \square > Q > S > T$.

மேலும், $V > P > Q$ என்பது தொடரப்படுகிறது. அதாவது, V மற்றும் P முறையே இரண்டாவது, மூன்றாவது அல்லது நான்காவது இடங்களை பிடிப்பார்கள். எனவே, (a), (b), (c) மற்றும் (e) ஆகிய வாக்கியங்களை பின்பற்ற முடியாது. ஆகவே, விடை (d) ஆகும்.

24. R தர வரிசையில் முதலாவதாகவும் T ஏழாவது இடங்களிலும் இருக்கிறார்கள். V எப்பொழுதுமே P மற்றும் Q ஆகியோருக்கு மேல் இடத்தில் இருப்பார். எனவே, P மற்றும் Q முறையே ஐந்தாவது மற்றும் ஆறாவது இடங்களைப் பிடிக்கின்றார்கள். எனவே, V 4-வது இடத்திற்கு கீழ் இருக்க முடியாது.

25. R இரண்டாவது இடத்தில் இருந்தால் S முதல் இடத்தில் இருப்பார் மற்றும் Q அல்லது R கடைசி இடத்தில் இருப்பார். ஆனால் Q ஐந்தாவது இடத்தில் உள்ளதால் U கடைசி இடத்தில் இருப்பார். மேலும் $V > P > Q$ என்கிற தொடர் பின்பற்றப்படும்.

எனவே, $S > R > V > P > Q > \square > U$ என அமையும்.

ஆகவே, ஆறாவது இடத்தில் T இருப்பார்.

26. S இரண்டாவது இடத்தில் இருந்தால் R முதல் இடத்திலும் T கடைசி இடத்திலும் இருப்பார்கள். $V > P > Q$ என்கிற தொடர் பின்பற்றப்படும்.

ஆகவே, $R > S > \square > \square > \square > \square > T$ என்கிற தொடர் அமையும்.

(b), (c), (d) மற்றும் (e) ஆகிய வாக்கியங்களை பின்பற்ற முடியாது. விடை (a) ஆகும்.

27. V ஐந்தாவது இடத்தில் இருந்தால், V-க்கு முன்னால் வரும் P மற்றும் Q முறையே ஆறாவது மற்றும் ஏழாவது இடங்களில் இருப்பார்கள். அதாவது, Q கடைசி இடத்தில் இருக்கிறார். ஆகவே, S மிக அதிக மதிப்பெண்கள் எடுக்கிறார்.

28. A, B, C மற்றும் D முறையே தனித்தனி நபரின் தொகையை குறிக்கிறது எனில்,

$A + B = C + D$, $B + D > A + C$, $A > B$.

$B + D > A + C$ மற்றும் $A > B$

$\Rightarrow B + D > A + C > B + C$ (ι $A > B$)

$\Rightarrow B + D > B + C \Rightarrow D > C$.

மேலும், $A + B = C + D$, $A > B$ மற்றும் $D > C$

$\Rightarrow 2B < A + B = C + D < 2C$

$\Rightarrow 2B < 2C \Rightarrow C > B$.

$A > B$, $C > B$ $D > C \Rightarrow A > B$, $D > C > B$.

எனவே ஆகிய ஒவ்வொரிடமும்

B-ல் தாகை இருக்கும். எனவே,

B-ய தொகை உள்ளது.

கேள்விகள் 29

உயரங்களின் டயில்; $B < F$, $C < F$, $C < D$, $E <$ $< E$, $A < E$, $F < A$.

ஆகவே, $C < E < D$, $B < F$, $F < A < E$.

எனவே, வரிசை; $B < C < F < A < E < D$ அல்லது $C < B < F < A < E < D$.

எடையின் அடிப்படையில்; $A < B$, $A < C$, $B < D$, $D < F$.

ஆகவே, $A < B < D < F$, $A < C$.

எனவே, வரிசை;

$A < C < B < D < F$ அல்லது $A < B < C < D < F$ அல்லது $A < B < D < C < F$.

29. D மிகவும் உயரமானவர்.

30. உயரங்களின் அடிப்படையில் இறங்கு வரிசையானது: $D > E > A > F > B > C$ அல்லது $D > E > A > F > C > B$.

மேலிருந்து மூன்றாவதாக A உள்ளார்.

31. A-யை விட F, B மற்றும் C குள்ளமானவர்கள்

32. E-யின் எடை பற்றி எந்த தகவலும் இல்லை.

எனவே தகவல் போதுமானதாக இல்லை.

33. B மற்றும் C-யை விட F எடை அதிகமாகவும் D-யை விட குள்ளமாகவும் உள்ளார்.

கேள்விகள் 34 முதல் 38:

வயதுகளின் படி; $E < B$, $C < A$, $A < E$, $A < D$. எனவே, $C < A < E < B$, $A < D$.

உயரங்களின் படி; $B < C$, $D < C$, $E < C$, $D < A$.

34. B அல்லது D வயதானவர்.

35. கண்டு பிடிக்க முடியாது.

36. C-யை விட B குள்ளமானவர். எனவே, B மிகவும் உயரமானவர் அல்ல. எனவே, (i) சரி.

C-யை விட B மற்றும் E குள்ளமானவர்கள். ஆகவே, E-யை விட B குள்ளமானவர் என சொல்ல முடியாது. எனவே, (ii) தவறு.

கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து உயரங்களின் ஒரு குறிப்பிட்ட முறையை கண்டு பிடிப்பது கடினம். எனவே, (iii) தவறு.

37. உயரங்களின் ஒரு குறிப்பிட்ட முறையை கண்டுபிடிப்பது கடினம் என்பதால், F மற்றும் E ஆகியோருக்கு இடையில் எத்தனை நபர்கள் உள்ளனர் என சொல்வது கடினம்.

38. A மற்றும் C மிகவும் இளையவர்கள் எனவே, அவர்களை தேர்ந்தெடுக்க முடியாது. A மற்றும் C இருவரையும் விட D குள்ளமானவர்.

C-யை விட மட்டுமே B குள்ளமானவர். மேலும் B மூத்தவர். எனவே, B தேர்ந்தெடுக்கப்படுவார்.

B-யை விட E இளையவர்.

கேள்விகள் 39 முதல் 43:

கீழே உள்ள தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

நபர்	நிறுவனம்	சிறப்புதுறை
D	Z	பணியாளர்கள்
H	X	சந்தைப்படுத்துதல்
R	Z	நிதி
T	X	நிதி
K	Y	பணியாளர்கள்
B	–	நிதி

நிறுவனம் Y-யிலுள்ள சந்தைப்படுத்துதலில் சிறந்த நபர் மிக அதிகமாக சம்பாதிக்கிறார். B, D, H, K, R மற்றும் T இவர்களில் யாரும் அல்ல. எனவே, Y நிறுவனத்தில் சந்தைப்படுத்துதலில் சிறந்தவரான P மிக அதிகமாக சம்பாதிக்கிறார். மேலும் நிறுவனம் Z-ல் நிதித்துறை நிபுணர் R. மற்றும் நிறுவனம் X-ல் நிதித்துறை நிபுணர் T ஆவார். ஆகவே, நிறுவனம் Y-யின் நிதித்துறை நிபுணர் B.

எனவே, கொடுக்கப்பட்டுள்ளது;

நபர்	நிறுவனம்	சிறப்புதுறை
P	Y	சந்தைப்படுத்துதல்
B	Y	நிதித்துறை

வருமானத்தின் அடிப்படையில்;

$D > B$, $D > K$, $P > H$, $T > H$, $R > D$, $H > R$.

மிக அதிகமாக P சம்பாதிப்பதால்; $P > T > H > R > D > K > B$ அல்லது $P > T > H > R > D > B > K$.

ஆனால் K மிகக் குறைவாக சம்பாதிப்பவர் அல்ல.

வருமானத்தின் வரிசை வருமாறு: $P > T > H > R > D > K > B$.

39. நிறுவனம் Y-யில் படித்தவர் B.

40. சந்தைபடுத்துதலில் சிறந்தவர் P.

41. நிறுவனம் Y-யில் பணியாளர்கள் துறையில் சிறந்தவர் K.

42. T-யின் வருமானம் இரண்டாவது அதிகம்.

43. P, T, H மற்றும் D ஆகிய நால்வர் D-யை விட அதிகம் சம்பாதிக்கின்றனர்.

கேள்விகள் 44 முதல் 48:

உயரங்களின் அடிப்படையில்; $T > P$, $T > S$, $Q > T > P$. R கைப்பந்து விளையாடுகிறார். எனவே, R மிகவும் குள்ளமானவர்.

Q கைப்பந்தோ அல்லது கூடைப்பந்தோ விளையாடுவதில்லை. ஆகவே, Q மிக உயரமானவர் அல்ல. U மிகவும் உயரமானவர்.

எனவே, தொடர் $U > Q > T > P > S > R$ என அமையும்.

T டென்னிஸ் விளையாடுகிறார். மிக உயரமான U கூடைப்பந்து விளையாடுகிறார். R கைப்பந்து விளையாடுகிறார். Q கால்பந்து விளையாடுகிறார். P மற்றும் S கிரிக்கெட் அல்லது பூப்பந்து விளையாடுவார்கள்.

44. R-ஐ விட உயரமாகவும் P-யை விட குள்ளமாகவும் S உள்ளார்.

45. உயரங்களின் இறங்கு வரிசை U, Q, T, P, S, R. எனவே, T மூன்றாவது இடத்தில் உள்ளார்.

46. R-ஐ விட P உயரமானவர்.

47. U கூடைப்பந்து விளையாடுகிறார்.

48. S கிரிக்கெட் அல்லது பூப்பந்து விளையாடுகிறார்.

வகை 4: பொருட்களின் தொடர் வரிசை

இந்த வகை கேள்விகளில் சில நிகழ்வுகள் அல்லது பொருட்களின் வரிசையைப் பற்றி சில துப்புகள் கொடுக்கப்பட்டிருக்கும். கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை நன்கு ஆராய்ந்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா. 1: தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(L.I.C.A.A.O. 2005)**

P, *Q*, *R*, *S*, *T* மற்றும் *U* ஆகிய ஆறு திரைப்படங்கள் தொடர்ச்சியான வெள்ளிக்கிழமைகளில் வெளியிடப்பட்டுள்ளன. கீழே உள்ள கட்டுப்பாடுகளின் படி படங்கள் வெளியிடப்பட்டுள்ளன:

(*i*) *T*-க்கு ஒரு வாரம் முன்பு *P* வெளியிடப் பட வேண்டும்.

(*ii*) முதல் படத்திற்கு பின் உடனடியாக *R* வெளியிடப்பட மாட்டாது.

(*iii*) *U* வெளியிடப்பட்ட வெள்ளிக்கு அடுத்த வெள்ளிக்கிழமையில் *Q* வெளியிடப்பட வேண்டும்.

(*iv*) ஐந்தாவது வெள்ளிக்கிழமையில் *S* வெளியிடப்பட வேண்டும். *Q* வெளியீட்டைத் தொடர்ந்து *S*-ஐ உடனடியாக வெளியிடக்கூடாது.

(*v*) *T*-யை கடைசியாக வெளியிடக்கூடாது.

1. *T*-யைத் தொடர்ந்து எந்த படத்தை வெளியிட வேண்டும்?
   (*a*) *P* (*b*) *Q* (*c*) *S* (*d*) *U*
2. *Q*-வைத் தொடர்ந்து உடனடியாக எந்த படத்தை வெளியிட வேண்டும்?
   (*a*) *P* (*b*) *R* (*c*) *T* (*d*) *U*
3. இரண்டாவது வெள்ளி மற்றும் கீழே உள்ளவற்றுள் எந்த வெள்ளிக் கிழமையில் படம் *R*-ஐ வெளியிட முடியாது?
   (*a*) முதல் (*b*) மூன்றாவது (*c*) நான்காவது (*d*) ஐந்தாவது
4. எந்த படங்களுக்கு இடையில் படம் *S*-ஐ வெளியிட வேண்டும்?
   (*a*) *Q* மற்றும் *T* (*b*) *R* மற்றும் *T*
   (*c*) *P* மற்றும் *T* (*d*) *T* மற்றும் *U*
5. முதலில் எந்த படத்தை வெளியிட வேண்டும்?
   (*a*) *P* (*b*) *Q* (*c*) *R* (*d*) *U*

தீர்வு. *S*-ஐ ஐந்தாவது வெள்ளிக்கிழமையில் வெளியிட வேண்டும். *T*-க்கு ஒரு வாரம் முன்னால் *P*-யை வெளியிட வேண்டும். அதாவது, *PT* என்கிற முறையை பின்பற்ற வேண்டும். ஆனால் *T*-யை கடைசியாக வெளியிட முடியாது. மேலும் *U*-வைத் தொடர்ந்து உடனடியாக *Q*-வை வெளியிட வேண்டும். அதாவது, *U Q* என்கிற முறையை தொடர வேண்டும். *S*-க்கு முன்னால் *Q*-வை வெளியிட முடியாது. ஆகவே, *U* மற்றும் *Q* முறையே முதல் மற்றும் இரண்டாவது வெள்ளிக்கிழமைகளிலும் *P* மற்றும் *T* முறையே மூன்றாவது மற்றும் நான்காவது வெள்ளிக்கிழமைகளில் வெளியிடப்பட வேண்டும். இரண்டாவது வெள்ளிக்கிழமையில் வெளியிட முடியாத *R*-ஐ கடைசியாக வெளியிடப்பட வேண்டும்.

எனவே, அந்த முறையானது; *U*, *Q*, *P*, *T*, *S*, *R* என இருக்க

1. *T*-க்கு முன்னால் *P* வெளியிடப்படுகிறது. எனவே, விடை (*a*)
2. *Q*-வைத் தொடர்ந்து உடனடியாக *P* வெளியிடப்படுகிறது. எ ஆகும்.
3. *R*-ஐ ஐந்தாவது வெள்ளிக் கிழமையில் வெளியிட முடியாது. ஆ ாளில் *S* வெளியிடப்பட வேண்டும்.

   எனவே, விடை (*d*) ஆகும்.
4. *T* மற்றும் *R*-க்கு இடையே *S*-ஐ வெளியிட வேண்டும். ஆகவே, விடை) ஆகும்.
5. *U* முதலில் வெளியிடப்படுகிறது. எனவே, விடை (*d*).

எ.கா. 2: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

(Hotel Management, 2002)

(*i*) *P*, *Q*, *R*, *S*, *T*, *U*, *V* மற்றும் *W* ஆகிய 8 மருத்துவர்கள் விடுமுறை நாளைத் தவிர மற்ற நாட்களில் தினமும் ஒரு தொண்டு மருந்தகத்தை பார்வையிடுகிறார்கள். திங்கட்கிழமை விடுமுறை.

(*ii*) சனிக்கிழமை தவிர்த்து செவ்வாய் முதல் சனி வரை ஒவ்வொரு மருத்துவரும் மருந்தகத்தை ஒரு மணி நேரம் பார்வையிடுகிறார். நேரம் முறையே காலை 9 முதல் நண்பகல் 1 மணி மற்றும் பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை மதியம் 1 முதல் 2 மணி வரை உணவு இடைவேளை.

(*iii*) சனிக்கிழமையில் மருந்தகம் காலை 9 மணி முதல் பகல் 1 மணி வரை மட்டுமே உண்டு. ஒவ்வொரு மருத்துவரும் அன்று 1/2 மணி நேரம் மட்டுமே பார்வையிடுவார்.

(*iv*) மருத்துவர் Q-க்கு முன்னரோ அல்லது மருத்துவர் U-க்கு பிறகோ எந்த மருத்துவரும் மருந்தகத்தை பார்வையிடமாட்டார்.

(*v*) உணவு இடைவேளைக்குப் பிறகு R-ஐத் தொடர்ந்து மருத்துவர் W வருகிறார்.

(*vi*) மதிய வேளையில் P-யைப் போல் அதே வரிசையில் S வருகிறார்.

1. கீழே உள்ள எந்த இரண்டு மருத்துவர்களுக்கு இடையே மருத்துவர் P பார்வையிடுகிறார்.

(*a*) S மற்றும் V (*b*) U மற்றும் W

(*c*) R மற்றும் W (*d*) R மற்றும் U

(*e*) இவற்றில் எதுவுமில்லை

2. ஞாயிற்றுக்கிழமையில் மருத்துவர் R-ன் பார்வை நேரம் எத்தனை மணிக்கு முடியம்?

(*a*) மதியம் 1 மணி (*b*) மதியம் 3 மணி

(*c*) மாலை 4 மணி (*d*) மாலை 5 மணி

(*e*) இவற்றில் எதுவுமில்லை

3. சனியன்று மருத்துவர் T-யின் பார்வை நேரம் எத்தனை மணிக்கு முடியும்?

(*a*) காலை 10 மணி

(*b*) காலை 11 மணி

(*c*) காலை 10 மணி அல்லது காலை 11 மணி

(*d*) தகவல் போதுமானதாக இல்லை

(*e*) இவற்றில் எதுவுமில்லை

4. உணவு இடைவேளை மற்றும் அதைத் தொடர்ந்த பார்வை நேரத்திலும் 15 நிமிடங்கள் குறைந்தால் மருந்தகத்தை மருத்துவர் U எத்தனை மணிக்கு பார்வையிடுவார்?

(*a*) மதியம் 3.15 (*b*) மாலை 4 மணி

(*c*) மாலை 4.15 (*d*) மாலை 4.45

(*e*) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. (*iv*), (*v*) மற்றும் (*vi*) ஆகியவற்றை உபயோகித்து பார்வை நேரத்தின் தொடரை உருவாக்குவோம்.

(*iv*)-லிருந்து தெரிவது; Q முதலிலும் U கடைசியிலும் பார்வையிடுகிறார்கள்.

(*v*)-லிருந்து தெரிவது; இடைவேளைக்குப் பிறகு முதலில் மருத்துவர் W-வும் அவரைத் தொடர்ந்து R-ம் பார்வையிடுகிறார்கள்.

(*vi*)-லிருந்து தெரிவது; இடைவேளைக்குப் பிறகு P பார்வையிடுகிறார்.

எனவே, இடைவேளைக்கு பிறகு W, R, P, U ஆகியோர் பார்வையிடுகிறார்கள். மேலும் P-யின் மாலை நேர பார்வை நேரத்தைப் போலவே S-இன் பார்வை நேரம் காலையில் உள்ளது.

எனவே, இடைவேளைக்கு முன் பார்வை நேர முறையானது; Q, T/V, S, V/T.

1. R மற்றும் U-க்கு நடுவில் P பார்வையிடுகிறார். எனவே, விடை (*d*) ஆகும்.
2. W-ன் பார்வை நேரம் மதியம் 2 மணி முதல் 3 மணி. மருத்துவர் R-ன் பார்வை நேரம் மதியம் 3 மணி முதல் மதியம் 4 மணி. எனவே, மருத்துவர் R-ன் பார்வை நேரம் மாலை 4 மணிக்கு பிறகு. எனவே, விடை (*c*).
3. T இரண்டாவதாகவோ அல்லது நான்காவதாகவோ பார்வையிடுகிறார். சனிக்கிழமை பார்வை நேரம் காலை 9.30 மணி அல்லது காலை 10.30 மணி. எனவே, T யின் பார்வை நேரம் காலை 10 மணி அல்லது காலை 11 மணி. எனவே, விடை (*c*).
4. உணவு இடைவேளை முடிந்தவுடன் மருத்துவர் W மதியம் 1.45 மணிக்கும், மருத்துவர் R மதியம் 2.30 மணிக்கும், மருத்துவர் P மதியம் 3.15 மணிக்கும் மருத்துவர் U மாலை 4 மணிக்கும் பார்வையிடுகிறார்கள். எனவே, விடை (*b*) ஆகும்.

எ.கா. 3: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின்னர் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(Specialist Officers' 2006)**

P, Q, R, S, T, U மற்றும் V ஆகியோர் ஏழு பேராசிரியர்கள். அவர்கள் ஒவ்வொருவரும், இயற்பியல், வேதியியல், உயிரியல், ஆங்கிலம், கணிதம், பொருளாதாரம் மற்றும் புவியியல் ஆகிய பாடங்களை (அதே வரிசையில் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை) சொல்லிக் கொடுக்கிறார்கள். திங்கள் முதல் ஞாயிறு வரை (அதே வரிசையில் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை) அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாள் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். வெள்ளிக் கிழமை R உயிரியல் சொல்லிக் கொடுக்கிறார். இயற்பியல் சொல்லிக் கொடுக்கும் பேராசிரியர் பாடம் எடுக்கும் நாளின் முதல் நாள் Q கணிதம் எடுக்கிறார். ஞாயிறு V பாடம் எடுக்கிறார். ஆனால் வேதியியல் பாடத்தையோ அல்லது ஆங்கில பாடத்தையோ அவர் எடுக்கவில்லை. U பாடம் எடுக்கும் நாளுக்கு முதல் நாள் S பொருளாதாரம் எடுக்கிறார். செவ்வாய் கிழமை P புவியியல் எடுக்கிறார். T ஆங்கில பாடம் எடுக்கவில்லை.

1. T எடுக்கும் பாடம் எது?
   (a) வேதியியல் (b) இயற்பியல்
   (c) வேதியியல் அல்லது இயற்பியல் (d) தகவல் போதுமானதாக இல்லை
   (e) இவற்றில் எதுவுமில்லை
2. U எடுக்கும் பாடம் எது?
   (a) இயற்பியல் (b) ஆங்கிலம்
   (c) இயற்பியல் அல்லது ஆங்கிலம் (d) தகவல் போதுமானதாக இல்லை
   (e) இவற்றில் எதுவுமில்லை
3. T எந்த நாளில் பாடம் எடுக்கிறார்?
   (a) திங்கள் (b) புதன் (c) வியாழன் (d) தகவல் போதுமானதாக இல்லை
   (e) இவற்றில் எதுவுமில்லை
4. U எந்த நாளில் பாடம் எடுக்கிறார்?
   (a) புதன் (b) வியாழன்
   (c) புதன் அல்லது வியாழன் (d) தகவல் போதுமானதாக இல்லை
   (e) இவற்றில் எதுவுமில்லை
5. V சொல்லிக் கொடுக்கும் பாடம் எது?
   (a) வேதியியல் (b) ஆங்கிலம்
   (c) உயிரியல் (d) தகவல் போதுமானதாக இல்லை
   (e) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ளது; P புவியியல், Q கணிதம், R உயிரியல், S பொருளாதாரம் ஆகிய பாடங்களை எடுக்கிறார்கள். V வேதியலையோ அல்லது ஆங்கிலத்தையோ நடத்துவதில்லை. எனவே, V இயற்பியல் பாடம் நடத்துகிறார். T ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதில்லை. ஆகையால் T வேதியியல் நடத்துகிறார். எனவே, U ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கிறார்.

செவ்வாயன்று P புவியியல் பாடமும், வெள்ளியன்று R உயிரியலும், ஞாயிறு அன்று V இயற்பியலும் சொல்லிக் கொடுக்கிறார்கள். எனவே, சனியன்று Q கணிதம் சொல்லிக் கொடுக்கிறார். U பாடம் நடத்தும் நாளுக்கு முந்தைய நாள் S பாடம் நடத்துவதால் புதனன்று S பொருளாதாரமும், வியாழனன்று U ஆங்கிலமும் நடத்துகிறார்கள். எனவே, திங்களன்று T வேதியியல் சொல்லிக் கொடுக்கிறார்.

ஆகவே, கீழே உள்ளவாறு அமையும்:

பேராசிரியர்	P	Q	R	S	T	U	V
கிழமை	செவ்வாய்	சனி	வெள்ளி	புதன்	திங்கள்	வியான்	ஞாயிறு
பாடம்	புவியியல்	கணிதம்	உயிரியல்	பொருளாதாரம்	வேதியியல்	ஆங்கிலம்	இயற்பியல்

1. T வேதியியல் நடத்துகிறார். எனவே, விடை (a).
2. U ஆங்கிலம் நடத்துகிறார். எனவே, விடை (b).
3. T திங்களன்று பாடம் நடத்துகிறார். எனவே, விடை (a) ஆகும்.
4. வியாழனன்று U பாடம் நடத்துகிறார். எனவே, விடை (b) ஆகும்.
5. V இயற்பியல் சொல்லிக் கொடுக்கிறார். எனவே, விடை (e) ஆகும்.

எ.கா. 4: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(XAT, 2006)**

∴பிரெட் பிஷ் சலூன் என்கிற உணவகம் வெள்ளி இரவு ஏழு வகை உணவு வகைகள் கொண்ட கடல் உணவை பரிமாறுகின்றன – ஹில்சா, போம்பிரெட், இந்தியன் ஷிரிம்ப், ரோஹூ, கிங்பிஷ், லாப்ஸ்டெர் மற்றும் பேட்க்கி ஆகிய வகைகள்.

கீழே உள்ள கட்டளைகளின் படி விருந்து சாப்பிடுபவர்கள் இந்த ஏழு வகை உணவுகளிலிருந்து தேர்வு செய்யலாம்:

(*i*) ரோஹூவுக்கு பின்னர் சிறிது நேரம் கழித்து கிங் பிஷ் பரிமாறப்படும்.

(*ii*) போம் பிரெட் மற்றும் இந்தியன் ஷிரிம்ப் ஆகியவற்றுக்கு இடையில் ஒரே ஒரு உணவு வகை மட்டும் பரிமாறப்பட வேண்டும்.

(*iii*) போம் பிரெட்டுக்கு முன்னதாக லாப்ஸ்டெர் பரிமாறப்படும்.

(*iv*) ஐந்தாவதாக அல்லது ஆறாவதாக கிங்பிஷ் பரிமாறப்படும்.

(*v*) ஹில்சா இரண்டாவதாக பரிமாறப்படும்.

1. கீழே உள்ளவற்றுள் எந்த வரிசை ஏற்கக் கூடியது?
   (*a*) லாப்ஸ்டெர், ஹில்சா, போம்பிரெட், ரோஹூ, கிங்பிஷ், இந்தியன் ஷிரிம்ப், பேட்க்கி.
   (*b*) ரோஹூ, ஹில்சா, லாப்ஸ்டர், பேட்க்கி, போம்பிரெட், கிங்பிஷ், இந்தியன் ஷிரிம்ப்.
   (*c*) ரோஹூ, ஹில்சா, பேட்கி, போம் பிரெட், கிங்பிஷ், இந்தியன் ஷிரிம்ப், லாப்ஸ்டெர்
   (*d*) லாப்ஸ்டெர், ஹில்சா, ரோஹூ, கிங்பிஷ், போம்பிரெட், பேட்க்கி, இந்தியன் ஷிரிம்ப்,
2. கிங்பிஷ் ஐந்தாவதாக பரிமாறப்பட்டால், கீழே உள்ளவற்று எது சரி?
   (*a*) முதலாக பரிமாறப்படுவது லாப்ஸ்டெர்
   (*b*) ஏழாவதாக பரிமாறப்படுவது பேட்க்கி
   (*c*) நான்காவதாக பரிமாறப்படுவது இந்தியன் ஷ்ரிம்ப்
   (*d*) மூன்றாவதாக பரிமாறப்படுவது போம்பிரெட்
3. உணவு வகைகளின் சரியான வரிசையை கண்டு பிடிப்பதற்கு கீழே உள்ளவற்றுள் எது உதவும்?
   (*a*) முதலில் பரிமாறப்படுவது லாப்ஸ்டெர்
   (*b*) ஆறாவதாக பரிமாறப்படுவது கிங்பிஷ்
   (*c*) ஐந்தாவதாக பரிமாறப்படுவது இந்தியன் ஷ்ரிம்ப்
   (*d*) போம்பிரெட் நான்காவதாக பரிமாறப்படுகிறது.
4. ஆறாவதாக கிங்பிஷ் பரிமாறப்படுகிறது எனில், கீழே உள்ளவற்றுள் எது உண்மையல்ல?
   (*a*) லாப்ஸ்டார் மூன்றாவதாக பரிமாறப்படுகிறது
   (*b*) போப் பிரெட் ஐந்தாவதாக பரிமாறப்படுகிறது
   (*c*) இந்தியன் ஷ்ரிம்ப் ஏழாவதாக பரிமாறப்படுகிறது
   (*d*) ரோஹூ ஐந்தாவதாக பரிமாறப்படுகிறது
5. பேட்க்கி மூன்றாவதாக பரிமாறப்படுகிறது எனில், கீழே உள்ளவற்றுள் எது சரி?
   (*a*) இந்தியன் ஷ்ரிம்ப் ஏழாவதாக பரிமாறப்படுகிறது
   (*b*) ரோஹூ முதலில் பரிமாறப்படுகிறது
   (*c*) கிங்பிஷ் ஐந்தாவதாக பரிமாறப்படுகிறது
   (*d*) போம் பிரெட் நான்காவதாக பரிமாறப்படுகிறது

தீர்வு.

1. (*ii*)-வது கட்டளையை (*a*) மீறுகிறார்.
   (*iii*)-வது கட்டளைய (*c*) மீறுகிறார்.
   (*iv*)-வது கட்டளைய (*d*) மீறுகிறார்.
   எனவே, (*b*) மட்டுமே கட்டளைகளை சரியாகப் பின்பற்றுகிறார். விடை (*b*) ஆகும்.
2. ஹில்சா இரண்டாவதாகவும் கிங்பிஷ் ஐந்தாவதாகவும் பரிமாறப்படுகிறது. கிங் பிஷருக்கு முன்னால் ரோஹூ பரிமாறப்பட வேண்டும். போம் பிரெட் மற்றும் இந்தியன் ஷ்ரிம்புக்கு இடையில் ஒரு உணவு வகை இருக்க வேண்டும். போம் பிரெட்டுக்கு முன்னால் லாப் ஸ்டெர் பரிமாறப்பட வேண்டும். கீழே உள்ள வரிசை இந்த கட்டளைகளை நிறைவேற்றும்:
   லாப்ஸ்டெர், ஹில்சா, ரோஹூ, போம்பிரெட், கிங்பிஷ், இந்தியன் ஷிரிம்ப், _____
   ஏழாவதாக பரிமாறப்படுவது பேட்க்கி என்பது தெளிவு. எனவே, விடை (*b*) ஆகும்.

3. ஐந்தாவது அல்லது ஆறாவது இடத்தில் கிங்பிஷ்ஷிக்கு பதிலாக வேறு ஏதாவது உணவு வகை இருக்குமானால், ஹில்சா, கிங்பிஷ் மற்றும் கொடுக்கப்பட்ட வேறு உணவு வகை மூன்றின் இடங்கள் தெளிவாகும். எனவே, இந்தியன் ஷிரிம்ப் ஐந்தாவதாக பரிமாறப்பட்டால், (*iv*)-லிருந்து கிங்பிஷ் ஆறாவதாகவும்; (*v*)-லிருந்து ஹில்சா இரண்டாவதாகவும் (*ii*)-வதிலிருந்து போம்பிரெட் மூன்றாவதாகவும் (*iii*)-லிருந்து லாப்ஸ்டார் முதலாவதாகவும், (*i*)-லிருந்து ரோஹீ நான்காவதாகவும், இறுதியாக பேட்க்கி ஏழாவதாகவும் பரிமாறப்படுகிறது என தெரிகிறது. எனவே துப்பு (*c*) இந்த உணவு வகைகளின் சரியான வரிசையை கொடுக்கிறது.

எனவே, விடை (*c*) ஆகும்.

4. கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து தெரிவது; ஹில்சா இரண்டாவதாகவும், கிங்பிஷ் ஆறாவதாகவும் பரிமாறப்படுகிறது. (*a*)-யிலிருந்து தெரிவது, லாப்ஸ்டார் மூன்றாவதாக பரிமாறப்படுகிறது. எனவே, (*ii*)-லிருந்து தெரிவது, போம்பிரெட் மற்றும் இந்தியன் ஷிரிம்ப் முறையே ஐந்தாவதாக மற்றும் ஏழாவதாக பரிமாறப்படுகிறது. எனவே, ரோஹீ மற்றும் பேட்க்கி முறையே முதல் மற்றும் மூன்றாவதாக பரிமாறப்படுகிறது.

(*b*)-யிலிருந்து தெரிவது, போம்பிரெட் ஐந்தாவது வகை உணவு. (*iii*)-லிருந்து தெரிவது, இந்தியன் ஷிரிம்ப்ப் ஏழாவதாக பரிமாறப்படுகிறது. எனவே, லாப்ஸ்டெர், ராஹீ மற்றும் பேக்டி முறையே முதல், மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களில் உள்ளது.

(*c*)-யிலிருந்து தெரிவது; (*b*)-யிலிருந்தது போல் அதே வரிசை கிடைக்கும்.

(*d*)-யிலிருந்து தெரிவது, ரோஹீ ஐந்தாவது உணவு வகை. எனவே, (*ii*)-லிருந்து தெரிவது, போம் பிரெட் மற்றும் இந்தியன் ஷிரிம்ப் முறையே முதல் மற்றும் மூன்றாவதாக பரிமாறப்பட வேண்டும்.

ஆனால் லாப்ஸ்டார் போம் பிரெட்டுக்கு முன்னதாக பரிமாறப்பட வேண்டும், எனவே இது சாத்தியமல்ல. ஆகவே (*d*) உண்மையாக இருக்க முடியாது. எனவே விடை (*d*).

5. ஹில்சா இரண்டாவதாகவும், பேட்கி மூன்றாவதாகவும் பரிமாறப்பட வேண்டும். கிங்பிஷ் ஐந்தாவதாக அல்லது ஆறாவதாக பரிமாறப்படலாம். அதற்கு முன்னதாக போம் பிரெட் பரிமாறப்பட வேண்டும். கிங் பிஷ்ஷீக்கு அடுத்ததாக இந்தியன் ஷிரிம்ப் பரிமாறப்பட வேண்டும். ஆனால் கிங் பிஷ்ஷீக்கு முன்னதாக ரோஹீவும் போம் பிரெட்டுக்கு முன்னதாக லாப்ஸ்டாரும் பரிமாறப்பட வேண்டும். இது சாத்தியமாவதற்கும் போம் பிரெட், கிங்பிஷ், இந்தியன் ஷிரிம்ப் முறையே 5-வது, 6-வது மற்றும் 7-வதாக பரிமாறப்பட வேண்டும். ரோஹீ மற்றும் லாப்ஸ்டார் முதல் மற்றும் 4-வதாக ஏதாவது வரிசையில் பரிமாறப்படலாம். எனவே, (*a*) மட்டுமே சரி. விடை (*b*) ஆகும்.

பயிற்சி 6D

1. ஒரு பந்தயத்தில் ஐந்து மாணவர்கள் கலந்து கொண்டார்கள். மோஹித்துக்கு முன்னதாகவும் கௌரவ்வுக்கு பின்னதாகவும் பந்தயத்தை ராஜ் முடித்தார். சாஞ்சித்துக்கு முன்னதாக மற்றும் மோஹித்துக்கு பின்னதாக ஆஷிஷ் முடித்தார். பந்தயத்தில் யார் வென்றார்?

(*a*) ராஜ் (*b*) கௌரவ்

(*c*) மோஹித் (*d*) ஆஷிஷ்

குறிப்புகள் (கேள்விகள் 2–3): கீழே உள்ள தகவல்களைப் பொறுத்து கேள்விகள் அமைந்துள்ளன.

A, *B*, *C*, *D* மற்றும் *E* ஆகிய ஐந்து நபர்கள் செய்தித்தாள் படிக்கிறனர் முதலில் படித்து முடித்தவர் செய்தித்தாளை *C*-யிடம் கொடுக்கிறார். கடைசியில் படித்து முடிப்பவர் அதை *A*-யிடமிருந்து வாங்கினார். *B* மற்றும் *A*-க்கு இடையே இரண்டு நபர்கள் உள்ளனர். **(S.S.C. 1999)**

2. யாருக்கு செய்தித்தாளை *B* கொடுத்தார்?

(*a*) *A* (*b*) *C* (*c*) *D* (*d*) *E*

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

3. கடைசியாக செய்தித்தாளை படித்தது யார்?

(*a*) *A* (*b*) *B* (*c*) *C* (*d*) *D*

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 4–5): தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

P, *Q*, *R*, *S*, *T*, *U* மற்றும் *W* ஆகிய ஏழு நிர்வாகிகள் ஒரு குறிப்பிட்ட வரிசையில் அலுவலகத்திற்கு செல்கின்றனர். *P*-யைத் தொடர்ந்து உடனடியாக *U* அலுவலகத்துக்கு செல்கிறார். ஆனால் *S*-ஐத் தொடர்ந்து செல்லவில்லை. கடைசியாக அலுவலகத்திற்கு செல்பவர் *R*. *P*-யைத் தொடர்ந்து *T*-யும், *W*-வைத் தொடர்ந்து *P*-யும் செல்கின்றனர்.

4. நிர்வாகிகளுள் யார் முதலில் அலுவலகத்திற்கு செல்வார்?

(*a*) *Q* (*b*) *S* (*c*) *U*

(*d*) கண்டுபிடிக்க முடியாது

(*e*) இவர்களில் எவருமில்லை

5. அலுவலகத்தை அடையும் அடிப்படையில் யார் 4-வது இடத்தில் இருக்கிறார்?

(*a*) *W* (*b*) *U* (*c*) *T*

(*d*) கண்டுபிடிக்க முடியாது

(*e*) இவர்களில் எவருமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 6–10): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(R.R.B. 2004)**

A, B, C, D, E மற்றும் F ஆகிய ஆறு விரிவுரைகள் ஏழு நாட்களுக்கு - ஞாயிறு முதல் சனி வரை நடத்தப்பட உள்ளன. கீழே உள்ள கட்டளைகளின் அடிப்படையில் ஒரு நாளைக்கு ஒரு விரிவுரை மட்டுமே நடத்தப்படும்.

(*i*) வியாழனன்று A நடக்காது.

(*ii*) F-ஐத் தொடர்ந்து உடனடியாக C நடக்க வேண்டும்.

(*iii*) E மற்றும் D-க்கு இடையே இரண்டு நாட்கள் இடைவெளி இருக்க வேண்டும்.

(*iv*) D நடத்தப்படும் நாளுக்கு முந்தைய ஒரு நாளில் (அது வெள்ளிக் கிழமை அல்ல) எந்த விரிவுரையும் நடக்காது.

(*v*) செவ்வாயன்று B நடக்க வேண்டும். ஆனால் அது D-க்கு அடுத்தது அல்ல.

6. எந்த நாளில் விரிவுரை இருக்காது?

(*a*) திங்கள் (*b*) வெள்ளி

(*c*) ஞாயிறு (*d*) கண்டுபிடிக்க முடியாது

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

7. C மற்றும் D-க்கு இடையே எத்தனை விரிவுரைகள் நடக்கும்?

(*a*) ஒன்றும் நடக்காது (*b*) ஒன்று

(*c*) இரண்டு (*d*) மூன்று

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

8. எந்த நாளில் விரிவுரை F நடக்கும்?

(*a*) வியாழன் (*b*) வெள்ளி

(*c*) சனி (*d*) ஞாயிறு

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

9. அந்த வரிசையில் எந்த விரிவுரை கடைசியானது?

(*a*) A (*b*) B (*c*) C

(*d*) கண்டுபிடிக்க முடியாது

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

10. விரிவுரைகளை ஒரு குறிப்பிட்ட வரிசையில் அமைப்பதற்கு கீழே உள்ளவற்றில் எந்த தகவல் தேவையற்றது?

(*a*) (*i*) மட்டும்

(*b*) (*ii*) மட்டும்

(*c*) (*i*) மற்றும் (*ii*) மட்டும்

(*d*) (*v*) மட்டும்

(*e*) அனைத்தும் தேவை

குறிப்புகள் (*கேள்விகள் 11–15*): *கேள்விகளுக்கு பதிலளிக்க கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படிக்கவும்:*

(M.B.A. 2006; NMAT, 2005)

தலைமை, முடிவு எடுத்தல், தரம் அறிதல், ஊக்குவித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் குழு கலந்தாய்வு ஆகியவற்றில் ஆறு சிறப்பு விரிவுரைகளை ஒரு நிறுவனத்தின் இயக்குனர் அறிவித்தார். திங்கள் முதல் ஞாயிறு வரை ஒரு நாளைக்கு ஒன்று மட்டுமே நடக்கும்.

(*i*) மதிப்பீடு செய்தலுக்கு அடுத்தபடியாக ஊக்குவித்தல் விரிவுரை நடக்கும்.

(*ii*) மதிப்பீடு செய்தல் புதனன்று நடைபெறும். ஆனால் அது குழு கலந்தாய்வை தொடர்ந்து நடக்காது.

(*iii*) முடிவு எடுத்தல் வெள்ளியன்று நடைபெறும். தலைமை மற்றும் குழு கலந்தாய்வு ஆகியவற்றுக்கிடையே இரண்டு நாட்கள் இடைவெளி இருக்க வேண்டும்.

(*iv*) ஒரு நாளில் எந்த விரிவுரையும் நட்க்காது (அது சனிக்கிழமை அல்ல) குழு கலந்தாய்வு நடக்கும் நாளுக்கு முந்தைய நாள் விரிவுரை இருக்காது.

11. முதல் மற்றும் கடைசி நாட்களில் எந்தெந்த விரிவுரைகள் நடக்கும்?

(*a*) தரமறிதல் & ஊக்குவித்தல்

(*b*) குழு கலந்தாய்வு & தர மறிதல்

(*c*) குழு கலந்தாய்வு & முடிவு எடுத்தல்

(*d*) தலைமை & மதிப்பீடு செய்தல்

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

12. ஊக்குவித்தல் மற்றும் தர மறிதல் ஆகியவற்றுக்கிடையே எத்தனை விரிவுரைகள் நடைபெறும்?

(*a*) ஒன்று (*b*) இரண்டு

(*c*) மூன்று (*d*) நான்கு

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

13. தலைமை பற்றிய விரிவுரை எந்த நாளில் நடைபெறும்?

(*a*) செவ்வாய் (*b*) புதன்

(*c*) வெள்ளி (*d*) சனி

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

14. எந்த நாளில் விரிவுரை நடக்காது?

(*a*) ஞாயிறு (*b*) திங்கள்

(*c*) செவ்வாய் (*d*) புதன்

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

15. விரிவுரைகளின் ஒரு குறிப்பிட்ட அமைப்பிற்கு கீழே உள்ளவற்றுள் எந்த தகவல் தேவையற்றது

(*a*) (*i*) மட்டும் (*b*) (*ii*) மட்டும்

(*c*) (*iii*) மட்டும் (*d*) (*iv*) மட்டும்

(*e*) அனைத்தும் தேவை

குறிப்புகள் (*கேள்விகள் 16–20*): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.*

ஒரு பயிற்சி கல்லூரி-இயந்திரவியல், உளவியல், தத்துவம், சமூகவியல், பொருளாதாரம், அறிவியல் மற்றும் பொறியியல் ஆகிய ஏழு வெவ்வேறு பாடங்களில் ஆசிரியர்களுக்கு புத்துணர்ச்சி வகுப்புகளை ஒரு பயிற்சி நிறுவனம் நடத்த வேண்டும். ஜீலை 22 முதல் ஜீலை 29 வரை வகுப்புகளை நடத்த வேண்டும்.

(*i*) வகுப்புகள் உளவியல் பாடத்தில் தொடங்க வேண்டும்.

(*ii*) 23 ஜீலை ஞாயிறு விடுமுறையாகும்.

(*iii*) பொறியல் பாடம் நடக்கும் நாளுக்கு முந்தைய நாள் அறிவியல் பாடம் நடக்க வேண்டும்.

(*iv*) இயந்திரவியலுடன் அந்த பயிற்சி வகுப்பு முடிய வேண்டும்.

(*v*) விடுமுறை நாளுக்கு அடுத்த நாள் தத்துவ பாடம் நடக்க வேண்டும்.

(*vi*) பொருளாதாரம் மற்றும் பொறியியல் வகுப்புகளுக்கு இடையில் ஒரு நாள் இடைவெளி தொடங்க வேண்டும்?

16. எந்த பாட வகுப்பிலிருந்து புத்துணர்ச்சி வகுப்புகள் தொடங்க வேண்டும்?
(a) உளவியல் (b) இயந்திரவியல்
(c) தத்துவம் (d) பொருளாதாரம்
(e) இவற்றுள் எதுவுமில்லை

17. செவ்வாயன்று எந்த பாடம் நடக்கும்?
(a) இயந்திரவியல் (b) பொறியியல்
(c) பொருளாதாரம் (d) உளவியல்
(e) இவற்றுள் எதுவுமில்லை

18. இயந்திரவியலுக்கு முன்னதாக எந்த பாடம் நடக்கும்?
(a) பொருளாதாரம் (b) பொறியியல்
(c) தத்துவம் (d) உளவியல்
(e) இவற்றுள் எதுவுமில்லை

19. அறிவியல் மற்றும் உளவியல் பாடங்களுக்கு இடையில் எத்தனை நாட்கள் இருக்கும்?
(a) ஒன்று (b) இரண்டு
(c) மூன்று (d) இடைவெளி இருக்காது
(e) இவற்றுள் எதுவுமில்லை

20. அறிவியலைத் தொடர்ந்து எந்த பாடம் நடக்கும்?
(a) பொறியியல் (b) உளவியல்
(c) தத்துவம் (d) பொருளாதாரம்
(e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (*கேள்விகள் 21–23*): *தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*
ஒரு வாரத்தின் திங்கள் முதல் வெள்ளி வரை *A*, *B*, *C*, *D* மற்றும் *E* ஆகிய ஐந்து நாடகங்கள் நடைபெற வேண்டும். ஒரு நாளில் ஒரு நாடகம் நடக்கும் *D* அல்லது *E* முதல் மற்றும் கடைசி நாடகமாக இருக்கக் கூடாது. *C*-யைத் தொடர்ந்து உடனடியாக *E* நடக்க வேண்டும். *D*-க்கு பின் உடனடியாக *B* நடக்க வேண்டும். *A* மற்றும் *B* ஆகியவற்றுக்கு இடையே ஒரு நாடகம் நடக்கும்.

21. எந்த நாடகம் முதலில் நடக்க வேண்டும்?
(a) *A* (b) *B* (c) *C*
(d) கண்டுபிடிக்க முடியாது
(e) இவற்றுள் எதுவுமில்லை

22. கீழே உள்ளவற்றுள் எந்த நாடகங்களின் வரிசை சரியானது?
(a) *A D B C E* (b) *A E C D B*
(c) *B D A E C* (d) *D B E C A*
(e) இவற்றுள் எதுவுமில்லை

23. புதனன்று எந்த நாடகம் நடைபெறும்?
(a) *A* (b) *B*
(c) *B* அல்லது *C* (d) கண்டுபிடிக்க முடியாது
(e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (*கேள்விகள் 24–28*): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்க:*
ஒரு நாளில் ஒரு நிறுவனம் என ஒரு விற்பனை பிரதிநிதி *M*, *N*, *P*, *Q*, *R* மற்றும் *S* ஆகிய நிறுவனங்களை பார்வையிட முடிவெடுத்தார். கீழே உள்ள கட்டளைகளின் அடிப்படையில் அவர் தன்னுடைய பயண அட்டவணையை தயாரித்தார்.
(*i*) *N* மற்றும் *R*-க்கு முன்பாக அவள் *M*-ஐ பார்வையிட வேண்டும்.
(*ii*) *Q*-க்கு முன்னால் அவள் *N*-ஐ பார்க்க வேண்டும்.
(*iii*) அவள் பார்க்கும் மூன்றாவது நிறுவனம் *P*-யாக இருக்க வேண்டும்.

24. விற்பனை பிரதி நிதியின் பயண அட்டவணையின் படி கீழே உள்ளவற்றுள் எது சரி?
(a) *Q*-க்கு முன்னால் அவள் *M*-ஐ பார்வையிடுகிறாள்.
(b) *R*-க்கு முன்னால் அவள் *N*-ஐ பார்வையிடுகிறாள்.
(c) *M*-க்கு முன்னால் அவள் *P*-யை பார்வையிடுகிறாள்.
(d) *S*-க்கு முன்னால் அவள் *P*-யை பார்வையிடுகிறாள்.
(e) *R*-க்கு முன்னால் அவள் *Q*-வை பார்வையிடுகிறாள்.

25. அவள் *S*-ஐ முதலில் பார்வையிட்டால், இரண்டாவதாக எந்த நிறுவனத்தை பார்வையிடுவாள்?
(a) *M* (b) *N* (c) *P* (d) *Q*
(e) *R*

26. *P*-க்கு பிறகு உடனடியாக கீழே உள்ளவற்றுள் எந்த நிறுவனத்தைத் தவிர வேறு நிறுவனத்தை அவள் பார்வையிட முடியும்?
(a) *S* (b) *R* (c) *Q* (d) *N*
(e) *M*

27. அந்த விற்பனை பிரதிநிதி *R*-க்கு முன்பாகவும் *S*-க்கு உடனடி அடுத்ததாகவும் *Q*-வை பார்வையிடுகிறாள் எனில், அவர் *Q*-வை பார்வையிடுவது;
(a) முதலாவதாக (b) இரண்டாவதாக
(c) நான்காவதாக (d) ஐந்தாவதாக
(e) ஆறாவதாக

28. ஆறு நிறுவனங்களையும் அந்த விற்பனை பிரதிநிதி பார்வையிடும் வரிசை முறையே;
(a) *M*, *S*, *P*, *N*, *R*, *Q*
(b) *Q*, *N*, *P*, *R*, *S*, *M*
(c) *M*, *R*, *N*, *Q*, *P*, *S*
(d) *P*, *S*, *M*, *R*, *Q*, *N*
(e) *P*, *R*, *M*, *N*, *Q*, *S*

குறிப்புகள் (*கேள்விகள் 29–33*): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*
(Bank P.O. 2003)
P, *Q*, *R*, *S*, *T*, *U* மற்றும் *V* ஆகிய ஏழு சிறப்பு மருத்துவர்கள் — செவ்வாய், புதன், வெள்ளி மற்றும் சனி ஆகிய நான்கு நாட்களில் ஒரு பாலி கிளினிக்கை பார்வையிடுகிறார்கள். ஒரு நாளில் குறைந்தது ஒரு மருத்துவர் ஆனால் இருவருக்கு மிகாமல் பார்வையிட வேண்டும். மருத்துவர்களில் ஒவ்வொருவரும். ஈஎன்.டி, ஆர்தோபீடிக்ஸ், பிடியாட்ரிக், நியூராலஜி, ஆப்தமாலஜி, ரேடியாலஜி மற்றும் ஆன்காலஜி ஆகிய வெவ்வேறு துறைகளில் சிறந்தவர்கள். வெள்ளியன்று ரேடியாலஜிஸ்டுடன் *S* பார்வையிடுகிறார், *T* மற்றும் *V*-யுடன் பிடியாட்ரிஷியன் சனிக்கிழமை பார்வையிடமாட்டார். ஆன்காலஜிஸ்ட் *U* தனியாக

செவ்வாயன்று பார்வையிடுகிறார். புதனன்று Q பார்வையிடுகிறார். ஆனால், அவர் பிடியாட்ரிஷியின் அல்ல. R புதன்கிழமை பார்வையிடுகிறார். V ஒரு ரேடியாலஜிஸ்ட் அல்ல. பிடியாட்ரிஷியன், ஈஎன்.டியுடன் பார்வையிடுகிறார். நியூராலஜிஸ்ட் வெள்ளியன்று பார்வையிடுகிறார். P ஒரு ஆர்தோ பீடிக்கும் அல்ல. ரேடியாலஜிஸ்டும் அல்ல.

29. S-ன் தொழில் என்ன?
   (a) ஆப்தமாலஜிஸ்ட்
   (b) பிடியாட்ரிக்ஸ்
   (c) ஈஎன்.டி
   (d) தகவல் போதுமானதாக இல்லை
   (e) இவற்றுள் எதுவுமில்லை

30. P-யின் சிறப்பு துறை என்ன?
   (a) பிடியாட்ரிக்ஸ்
   (b) ஆப்தமாலஜிஸ்ட்
   (c) ஈஎன்.டி
   (d) தகவல் போதுமானதாக இல்லை
   (e) இவற்றுள் எதுவுமில்லை

31. கீழே உள்ளவற்றுள் எந்த நாளில் ஆர்தோ பீடிக் மற்றும் ஆப்தமாலஜிஸ்ட் பார்வையிடுவார்கள்?
   (a) புதன்
   (b) வெள்ளி
   (c) சனி
   (d) தகவல் போதுமானதாக இல்லை
   (e) இவற்றுள் எதுவுமில்லை

32. வாரத்தின் எந்த நாளில் T பார்வையிடுவார்?
   (a) புதன் (b) வெள்ளி
   (c) சனி (d) புதன் (அ) சனி
   (e) இவற்றுள் எதுவுமில்லை

33. P-யுடன் சேர்ந்து பாலிகிளினிக்கை யார் பார்வையிடுவார்?
   (a) யாருமல்ல (b) S
   (c) T (d) V
   (e) V (அ) S

குறிப்புகள் (கேள்விகள் 34–36): கொடுக்கப்பட்ட தகவல்களைப் பொறுத்து பதில்கள் இருக்க வேண்டும்.
(M.B.A. 2005)

இந்திய கைத்தறி சேலைகளின் வருட விற்பனை கூட்டத்தின் வரிசையில் ஐந்து பெண்கள் நிற்கிறார்கள். ஒவ்வொரு பெண்ணும் வெவ்வேறு துணிகளை வாங்கினார்கள். அந்த பெண் வாடிக்கையாளர்களின் முதற் பெயர்கள் முறையே ஆஷா, கவிதா, உஷா, சாதனா மற்றும் லதா. அவர்களின் கடைசி பெயர்கள் முறையே போன்ஸ்லே, சர்கம், கிருஷ்ணமூர்த்தி, மங்கேஷ்கர் மற்றும் உதூப. ஆனால் சரியான வரிசையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. விற்பனையில் உள்ளவை; காஞ்சிபுரம் பட்டுப்புடவை, பைத்தானி பட்டுப் புடவை, கட்வால் பட்டுப் புடவை, சம்பல்புரி கைத்தறி புடவை மற்றும் டாங்கெய்ல் கைத்தறி புடவை.

(i) தாங்கெய்ல் கைத்தறி புடவையை கேட்டவருக்கு பின்னால் ஆனால் திருமதி உதூப்பிற்கு முன்னால் உஷா கிருஷ்ணமூர்த்திக்கு சேவை அளிக்கப்பட்டது.
(ii) இரண்டாவது வாடிக்கையாளர் சாதனா.
(iii) கவிதாவிற்கு அடுத்த வாடிக்கையாளர் நேரடியாக கட்வால் பட்டுப்புடவையை வாங்கினார்.
(iv) லதா சம்பல்புரி கைத்தறி புடவையை வாங்கினார். ஆஷாவிற்கு பின் அவர் புடவையை வாங்கினார்.
(v) திருமதி மங்கேஷ்வர் காஞ்சிபுரம் பட்டுப்புடவையை கேட்டார்.
(vi) வரிசையில் மூன்றாவதாக திருமதி சர்கம் உள்ளார்.
(vii) வரிசையில் நான்காவதாக உள்ள வாடிக்கையாளர் பைத்தானி பட்டுப் புடவையை வாங்கினார்.

34. வரிசையில் லதா எந்த இடத்தில் உள்ளார்?
   (a) முதல் (b) மூன்று (c) நான்கு (d) ஐந்து

35. வரிசையில் மூன்றாவதாக உள்ளவர் எதை வாங்கினார்?
   (a) பைத்தானி பட்டுப் புடவை
   (b) டாங்கெய்ல் கைத்தறி புடவை
   (c) கட்வால் பட்டுப் புடவை
   (d) காஞ்சிபுரம் பட்டுப் புடவை

36. கட்வால் பட்டுப் புடவை வாங்கிய வாடிக்கையாளரின் கடைசி பெயர் என்ன?
   (a) மங்கேஷ்வர்
   (b) சர்கம்
   (c) உதூப்
   (d) போன்ஸ்லே

விடைகள் (பயிற்சி 6D)

1. (b)	2. (b)	3. (d)	4. (b)	5. (d)	6. (a)	7. (c)	8. (a)	9. (a)	10. (e)
11. (e)	12. (c)	13. (e)	14. (c)	15. (e)	16. (a)	17. (c)	18. (e)	19. (a)	20. (d)
21. (a)	22. (e)	23. (b)	24. (a)	25. (a)	26. (e)	27. (d)	28. (a)	29. (e)	30. (b)
31. (c)	32. (b)	33. (d)	34. (d)	35. (b)	36. (d)				

தீர்வுகள் (பயிற்சி 6D)

1. மோஹித்துக்கு முன்னால் ஆனால் கௌரவுக்கு பின்னால் முடித்தார் ராஜ். எனவே, வரிசையானது; கௌரவ், ராஜ், மோஹித். சாஞ்சித்துக்கு முன்னால் ஆனால் மோஹித்துக்கு பின்னால் ஆஷிஷ் முடித்தார். எனவே, வரிசையானது; மோஹித், ஆஷிஷ், சாஞ்சித். எனவே முழு வரிசையானது; கௌரவ், ராஜ், மோஹித், ஆஷிஷ், சாஞ்சித். பந்தயத்தின் கௌரவ் வென்றார்.

கேள்விகள் 2 முதல் 3:

இரண்டாவதாக வாசித்தவர் C. கடைசியிலிருந்து இரண்டாவதாக வாசித்தவர் A.

E முதலாவதாகவோ அல்லது கடைசியாகவோ செய்தித்தாளை வாசிக்கவில்லை. எனவே, E மூன்றாவது வாசிப்பாளர். B மற்றும் A-க்கு இடையில் இரண்டு வாசிப்பளர் இருக்கிறார்கள்.

ஆகவே, செய்தித்தாள் வாசிப்பாளரின் வரிசை; B, C, E, A, D.

2. C-க்கு செய்தித்தாளை B கொடுத்தார்.

3. கடைசியாக செய்தித்தாள் படித்தவர் D.

கேள்விகள் 4 முதல் 5:

P-யைத் தொடர்ந்து U வருகிறார்; T-யைத் தொடர்ந்து T; W-வைத் தொடர்ந்து T.

S-ஐ உடனடியாக தொடர்ந்து வரவில்லை U மற்றும் கடைசியாக வருபவர் R.

எனவே, அலுவலகத்தை நபர்கள் சென்றடையும் வரிசை; S, Q, U, P, T, W, R.

4. முதலில் அலுவலகத்திற்கு வருபவர் S.

5. வரிசையில் நான்காவதாக இருப்பவர் P.

கேள்விகள் 6 முதல் 10:

செவ்வாயன்று B நடக்க வேண்டும். எந்த விரிவுரையும் இல்லாத நாளைத் தொடர்ந்து D நடக்க வேண்டும். வெள்ளியன்று D நடக்க முடியாது. ஏனெனில், செவ்வாயன்று E நடைபெறும் (D மற்றும் E ஆகியவற்றுக்கு இடையே இரண்டு நாட்கள் இடைவெளி இருக்க வேண்டும்.) அது வியாழனன்று நடக்க முடியாது (ஏனெனில், வெள்ளியன்று எந்த விரிவுரையும் நடக்காது). D-யைத் தொடர்ந்து B நடக்க முடியாது. எனவே, ஞாயிறன்று D-யும், புதனன்று E-யும் நடத்தப்படும். திங்களன்று எந்த விரிவுரையும் நடக்காது. வியாழனன்று A-யை நடத்த முடியாது. ஆகவே, சனிக்கிழமை A நடத்தப்படும். F மற்றும் C முறையே வியாழன் மற்றும் வெள்ளி நடத்தப்படும். எனவே, சரியான வரிசை;

ஞாயிறு	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி
D	X	B	E	F	C	A

6. திங்களன்று எந்த விரிவுரையும் இருக்காது.

7. C மற்றும் D-க்கு இடையே - B, E மற்றும் F ஆகிய மூன்று விரிவுரைகள் நடக்கும்.

8. வியாழனன்று F நடக்கும்.

9. கடைசி விரிவுரை A ஆகும்.

10. கொடுக்கப்பட்டுள்ள எல்லா வாக்கியங்களும் தேவை.

கேள்விகள் 11 முதல் 15:

6–10 வரையிலான கேள்விகளின் படி, தொடர்ந்தால் சரியான வரிசை;

திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு
குழு	×	தரம்	தலைமை	முடிவு	மதிப்பீடு	ஊக்குவித்தல்
	கலந்துரையாடல்		குழு		செய்தல்	மையம்

11. குழு கலந்துரையாடல் முதல் விரிவுரையாக இருக்கும். மற்றும் கடைசி விரிவுரை ஊக்கப்படுத்துதலில் இருக்கும்.

12. ஊக்கப்படுத்துதல் மற்றும் தரமறிதல் விரிவுரைகளுக்கு இடையே மூன்று விரிவுரைகள் நடக்கும். மதிப்பீடு, முடிவு எடுத்தல், மற்றும் தலைமை.

13. தலைமையிலான விரிவுரை வியாழனன்று நடக்கும்.

14. செவ்வாயன்று எந்த விரிவுரையும் நடக்காது.

15. எல்லா தகவல்களும் தேவை.

கேள்விகள் 16 முதல் 20:

பயிற்சி உளவியல் பாடத்தில் தொடங்குகிறது. எனவே, 22-ஆம் தேதி உளவியல் பாடம் நடக்கும் 23-ஆம் தேதி ஞாயிறு விடுமுறை. பொறியியலுக்கு முன் அறிவியலும் பொறியியலுக்கு பின் ஒரு நாள் இடைவெளியில் பொருளாதாரம் நடக்கும். எனில், பொருளாதாரம், அறிவியல் மற்றும் பொறியியல் என்கிற வரிசை அமையும். இயந்திரவியல் கடைசி பாடமாக இருக்கும். அதாவது, 29-ஆம் தேதி. எனவே, 28-ஆம் தேதி சமூகவியல் நடக்கும். எனவே, வரிசையானது;

22-தேதி	23	24	25	26	27	28	29
உளவியல்	ஞாயிறு	உளவியல்	பொருளாதாரம்	அறிவியல்	பொறியியல்	சமூகவியல்	இயந்திரவியல்

16. உளவியல் பாடத்தில் அந்த பயிற்சி தொடங்கும்.
17. 25-ஆம் தேதி, செவ்வாயன்று பொருளாதாரம் பாடம் நடக்கும்.
18. இயந்திரவியலுக்கு முன் சமூகவியல் நடத்தப்படும்.
19. தத்துவம் மற்றும் அறிவியல் ஆகியவற்றுக்கிடையே ஒரு நாள் மட்டுமே இடைவெளி உண்டு.
20. அறிவியலைத் தொடர்ந்து பொருளாதாரம் நடக்கும்.

கேள்விகள் 21 முதல் 23:

C-யை உடனடியாக *E* தொடர வேண்டும். அதாவது., *EC* என்கிற முறை தொடர வேண்டும்.

B-யை உடனடியாக *D* தொடர வேண்டும். அதாவது., *DB* என்கிற முறை தொடர வேண்டும்.

A மற்றும் *B*-க்கு இடையே ஒரு நாடகம் நடத்தப்படும். மற்றும் *D* அல்லது *E* முறையே முதல் மற்றும் கடைசி நாடகம் அல்ல.

எனவே, அந்த வரிசையானது;

திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி
A	*D*	*B*	*E*	*C*

21. நாடகம் *A* முதலில் அரங்கேறும்.
22. சரியான வரிசை முறையே *A D B E C*.
23. புதனன்று *B* அரங்கேறும்.

கேள்விகள் 24 முதல் 28:

24. *N*-க்கு முன்னால் *M*-ஐ அவள் பார்க்கிறாள் மற்றும் *Q*-க்கு முன்னாள் *N*. எனவே அவள் *Q*-க்கு முன்னால் *M*-ஐ பார்க்க வேண்டும்.
25. ஆறு நிறுவனங்களில் *S* முதலாவது எனில், *P* மூன்றாவது மற்றும் *M N Q* என்கிற வரிசை மற்றும் *M R* என்பது தொடரும். எனவே, இரண்டாவதாக *M* பார்வையிட வேண்டும்.
26. *P* மூன்றாவது இடத்தில் உள்ளது. *M N Q* மற்றும் *M R* என்கிற தொடர் பின்பற்றப்படுவதால் *P*-யைத் தொடர்ந்து உடனடியாக *M*-ஐத் தவிர்த்து அவள் வேறு எந்த நிறுவனத்தையும் பார்வையிடலாம். *M* முதல் அல்லது இரண்டாவது இடத்தில் இருக்கும். ஏனெனில் *Q*, *R* மற்றும் *N* அதற்கு முன்னால் இருக்க முடியாது.
27. *R*-க்கு முன்னால் மற்றும் *S*-க்கு அடுத்ததாக *Q* பார்வையிடுகிறார் எனில், அந்த வரிசை *M N S Q R* என இருக்கும். *P* 3-வது இடத்தில் இருக்க வேண்டும். எனவே, *M N P S Q R* அதாவது, *Q* ஐந்தாவதாக பார்வையிட வேண்டும்.
28. தகவல்களின் படி, *P* 3-வது இடத்தில் இருக்க வேண்டும். வரிசை *M*, *N*. *Q* வரிசையை மீறக் கூடாது. *M S P N R Q* என்கிற வரிசையில் மட்டுமே இது சாத்தியம்.

கேள்விகள் 29 முதல் 33:

U என்பவர் ஆன்காலஜிஸ்ட் அவர் செவ்வாயன்று தனியாக பார்வையிடுகிறார்.

Q மற்றும் *R* புதன்கிழமை பார்வையிடுகிறார்கள்.

S மற்றும் ரேடியாலஜிஸ்ட் வெள்ளியன்று பார்வையிடுகிறார்கள்.

நியூராலஜிஸ்ட் வெள்ளியன்று பார்வையிடுவதால், மற்றும் ஒரே நாளில் இரண்டு மருத்துவர்களுக்கு மேல் பார்வையிட முடியாது. எனவே, *S* என்பவர் நியூராலஜிஸ்ட் ஆவார்.

V ரேடியாலஜிஸ்ட் இல்லை என்பதால் சனிக்கிழமை அவர் பார்வையிடுகிறார்.

சனிக்கிழமை பிடியாட்ரிஷியன் பார்வையிடுவதில்லை எனவே, *Q* அல்லது *R* பிடியாட்ரிஷியன் ஆவார்.

ஈஎன்.டி-யுடன் சேர்த்து பிடியாரிஷியன் பார்வையிடுகிறார் மற்றும் *Q* பிடியாட்ரிஷியன் அல்ல. எனவே, *Q* ஈஎன்.டி மருத்துவர் மற்றும் *R* பிடியாட்ரிஷியன் *P* ஆர்தோபீடிக்கும் அல்ல ரேடியாலஜிஸ்டும் அல்ல. எனவே, *P* ஒரு ஆப்தமாலஜிஸ்ட் மற்றும் அவர் *V*-யுடன் சேர்ந்து சனிக்கிழமை பார்வையிடுகிறார். எனவே, *V* ஒரு ஆப்தமாலஜிஸ்ட் மற்றும் *T* ஒரு ரேடியாலஜிஸ்ட். ஆகையால் மருத்துவர்களின் பார்வையிடுதலின் வரிசை கீழ் வருமாறு அமையும்.

செவ்வாய்	புதன்	வெள்ளி	சனி
U - ஆன்காலஜிஸ்ட்	*Q* - ஈஎன்.டி	*S* - நியூராலஜிஸ்ட்	*V* - ஆர்தோபீடிக்
	R - பிடியாட்ரிஷியன்	*T* - ரேடியாலஜிஸ்ட்	*P* - ஆப்தமாலஜிஸ்ட்

29. S என்பவர் நியூராலஜிஸ்ட்.

30. P என்பவர் ஆப்தமாலஜிஸ்ட்.

31. ஆர்தோபீடிக் மற்றும் ஆப்தமாலஜிஸ்ட் சனிக்கிழமை பார்வையிடுகிறார்கள்.

32. T வெள்ளிக்கிழமை பார்வையிடுகிறார்.

33. P-யுடன் சேர்ந்து பாலி கிளினிக்கை V பார்வையிடுகிறார்.

கேள்விகள் 34 முதல் 36:

திருமதி உதூப்பிற்கு முன்னால் தாங் கெய்ல் கைத்தறி சேலையை உஷா கிருஷ்ணமூர்த்தி என்கிற பெண்மணி எடுத்துக் கொண்டார். சாதனா இரண்டாவதாகவும் திருமதி. சர்கம் மூன்றாவதாகவும் சேலை எடுத்தால், உஷா கிருஷ்ணமூர்த்தி நான்காவது இடத்தில் உள்ளார். திருமதி. சர்கம் தாங்கெய்ல் கைத்தறி சேலையை வாங்கினார். மற்றும் திருமதி. உதூப் ஐந்தாவதாக உள்ளார். கவிதாவிற்கு பின் வந்த வாடிக்கையாளர் கட்வால் பட்டுப் புடவையை வாங்கினார்.
இதிலிருந்து தெரிவது, கவிதா வரிசையில் முதலாவதாக உள்ளார் மற்றும் சாதனா கட்வால் பட்டுப் புடவையை தேர்ந்தெடுத்தார். ஆஷாவிற்கு பின்னர் லதாவிற்கு புடவை கிடைத்தது. எனவே, திருமதி உதூப்பின் முதல் பெயர் லதா. அவர் சம்பால் புரி கைத்தறி சேலையை வாங்கினார். திருமதி. சர்கமின் முதல் பெயர் ஆஷா. ஆகையால், கவிதா காஞ்சிபுரம் பட்டு புடவையை வாங்கினார் மற்றும் அவருடைய கடைசி பெயர் மங்கேஷ்கர். சாதனாவின் கடைசி பெயர் போன்ஸ்லே.

எனவே, கீழே உள்ளவாறு வரிசை அமையும்.

இடம்	முதல்	இரண்டாவது	மூன்றாவது	நான்காவது	ஐந்தாவது
முதல் பெயர்	கவிதா	சாதனா	ஆஷா	உஷா	லதா
கடைசி பெயர்	மங்கேஷ்கர்	போன்ஸ்லே	சர்கம்	கிருஷ்ணமூர்த்தி	உதூப்
விருப்பம்	காஞ்சிபுரம் பட்டுப் புடவை	கட்வால் பட்டுப் புடவை	டாங்கெய்ல் கைத்தறி புடவை	பைத்தானி பட்டுப் புடவை	சம்பால் புரி கைத்தறி புடவை

34. வரிசையில் லதா ஐந்தாவதாக உள்ளார்.

35. வரிசையில் மூன்றாவதாக உள்ளவர் டாங்கெய்ல் கைத்தறி புடவையை வாங்குகிறார்.

36. கட்வால் பட்டுப் புடவையை வாங்கிய வாடிக்கையாளரின் கடைசி பெயர் போன்ஸ்லே.

வகை 5: கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் தேர்வு செய்தல்

இந்த வகை கேள்விகளில், ஒரு குழு பொருட்களை தேர்ந்தெடுக்க சில குறிப்பிட்ட நிபந்தனைகள் இருக்கும். தேர்வு எழுதுபவர் இந்த நிபந்தனைகளை மனதில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு கேள்வியில் உள்ள குறிப்புகளின் படி தேர்வுகளை முடிவு செய்ய வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா.1: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.
(M.B.A. 2006)

A, B, C, D, E மற்றும் F ஆகிய ஆறு ஆண்கள் மற்றும் P, Q, R, S மற்றும் T ஆகிய ஐந்து பெண்களிலிருந்து கீழே உள்ள நிபந்தனைகளின் படி ஆறு நபர்கள் கொண்ட ஒரு குழுவைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(i) A மற்றும் D ஒன்றாக இருக்க வேண்டும்.

(ii) S உடன் C இருக்க முடியாது.

(iii) S மற்றும் T ஒன்றாக இருக்க வேண்டும்.

(iv) E-யுடன் B இருக்க முடியாது.

(v) P-யுடன் D இருக்க முடியாது.

(vi) B மற்றும் R ஒன்றாக இருக்க வேண்டும்.

(vii) C மற்றும் Q ஒன்றாக இருக்க வேண்டும்.

1. அந்த குழுவில் ஐந்து ஆண்கள் உள்ளனர் எனில், தனிப்பட்ட பெண் யார்?

(a) P (b) Q (c) R (d) S

2. *P*-யை சேர்த்து அந்த குழுவில் மூன்று பெண்கள் உள்ளனர் எனில், அந்த குழு உறுப்பினர்கள் முறையே;
   (*a*) *B*, *C*, *F*, *Q*, *R* (*b*) *A*, *D*, *E*, *S*, *T*
   (*c*) *A*, *D*, *B*, *S*, *T* (*d*) *B*, *F*, *R*, *S*, *T*
3. *C*-யை சேர்த்து அந்த குழுவில் நான்கு ஆண்கள் உள்ளனர் எனில், *C*-யைத் தவிர அந்தக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் முறையே;
   (*a*) *A*, *D*, *E*, *P*, *Q* (*b*) *A*, *B*, *D*, *Q*, *R*
   (*c*) *D*, *E*, *F*, *A*, *Q* (*d*) *B*, *E*, *F*, *R*, *Q*
4. *E*-யை சேர்த்து குழுவில் நான்கு நபர்கள் ஆண்கள் எனில் *E*-யைத் தவிர மற்ற நபர்கள்;
   (*a*) *A*, *B*, *C*, *Q*, *R* (*b*) *A*, *D*, *F*, *S*, *T*
   (*c*) *B*, *C*, *F*, *Q*, *R* (*d*) *A*, *C*, *D*, *F*, *Q*
5. குழுவில் நான்கு நபர்கள் பெண்கள் எனில், குழு உறுப்பினர்கள் முறையே;
   (*a*) *B*, *C*, *P*, *Q*, *R*, *S* (*b*) *B*, *F*, *P*, *R*, *S*, *T*
   (*c*) *B*, *C*, *Q*, *R*, *S*, *T* (*d*) *B*, *C*, *P*, *Q*, *R*, *T*

தீர்வு. 1. ஆறு நபர்கள் கொண்ட குழுவில், ஐந்து ஆண்களை தேர்வு செய்ய வேண்டுமெனில், *A* மற்றும் *D* இருவரையும் தேர்வு செய்ய வேண்டும். *C* தேர்வு செய்யப்பட்டால், *Q* என்கிற பெண் தேர்வு செய்யப்பட வேண்டும்.

B மற்றும் *E* ஆகியோரில் ஒருவரை தேர்வு செய்ய வேண்டும். *B* ஒரு பெண்ணுடன் இணைந்து இருப்பதால் நாம் *E*-யைத் தேர்வு செய்வோம். ஐந்தாவது ஆண் *F* ஆவார். எனவே, *A*, *C*, *D*, *E*, *F*, *Q* என்கிற குழுவில் உள்ள ஒரே பெண் *Q*.

எனவே, விடை (*b*) ஆகும்.

2. *P*-யை குழுவில் சேர்க்க வேண்டுமெனில், *A* மற்றும் *D*-யை சேர்க்க முடியாது. *Q*-வை தேர்ந்தெடுத்தால், *C*-யை தேர்ந்தெடுக்க வேண்டும். *S*-ஐ தேர்ந்தெடுக்க முடியாது. *S* உடன் இணைந்து *T* இருப்பார். எனவே, *T*-யையும் சேர்க்க முடியாது.

மூன்றாவது பெண் *R*-ஆக இருக்கலாம். *R*-உடன் *B*-யை தேர்வு செய்யலாம். ஆனால், *E*-யை தேர்வு செய்ய முடியாது. எனவே, ஆறாவது நபர் *F* மட்டுமே. அதாவது, அந்த குழு *P*, *Q*, *C*, *R*, *B*, *F* என அமையும். எனவே, விடை (*a*) ஆகும்.

3. குழுவில் *C* இருந்தால் *Q*-வையும் சேர்க்க வேண்டும். சேர்க்கப்பட்ட மற்றொரு பெண் *R* எனில், *B*-யும் குழுவில் இருப்பார். எனவே, *E* குழுவில் இருக்க முடியாது.

A மற்றும் *D* ஒன்றாக இருக்க வேண்டும். ஆகவே, அவர்களையும் குழுவில் சேர்க்க வேண்டும். *F* மட்டுமே குழுவில் இடம் பெற மாட்டார். ஆகவே குழுவானது *C*, *Q*, *R*, *B*, *A*, *D*. விடை (*b*) ஆகும்.

4. *E*-யை குழுவில் சேர்க்க வேண்டுமானால் *B*-யை சேர்க்க முடியாது. *A* மற்றும் *D* இணைந்து இருக்க வேண்டும். எனவே, இருவரையும் குழுவில் சேர்க்க வேண்டும். *B* இல்லாமல் *R* இருக்க முடியாது. *D*-யுடன் *P* இருக்க முடியாது. எனவே, சேர்ந்து இருக்கும் இரண்டு பெண்கள் முறையே *S* மற்றும் *T* ஆவர். குழுவில் *S* இருந்தால், *C* இருக்க முடியாது. எனவே, நான்காவது ஆண் *F* மட்டுமே. அந்த குழு *E*, *A*, *D*, *S*, *T*, *F* என அமையும். விடை (*b*) ஆகும்.

5. நான்கு பெண்களில் *S* மற்றும் *T* ஆகியோரை சேர்த்து குழுவில் இணைக்க வேண்டும். *S*-உடன் *C* இருக்க முடியாது. எனவே, *Q* குழுவில் இருக்க முடியாது. *P*-யை சேர்த்தால், *D* மற்றும் *A*-யை சேர்க்க முடியாது. *R* குழுவில் இருந்தால், *B*-யும் குழுவில் இருப்பார். *E* குழுவில் இருக்க முடியாது. *F* மட்டுமே இருக்க முடியும். எனவே, அந்த குழு *S*, *T*, *P*, *R*, *B*, *F*. எனவே, விடை (*b*) ஆகும்.

எ.கா. 2: கீழே கேட்கப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்வியும் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு கேள்விக்கும் சரியான மாற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

ஒரு மாணவர் தன் இலையுதிர்கால மற்றும் வசந்த கால பருவமுறை தேர்வுகளுக்கு வகுப்பு அட்டவணையை திட்டமிடுகிறார். ஒவ்வொரு பருவ முறை தேர்விலும் அவர் மூன்று படிப்புகளை தேர்வு செய்ய வேண்டும். வசந்த கால பருவமுறை தேர்வு முடிவில் பகுதி *P*-யில் குறைந்தது மூன்று படிப்புகளையும், பகுதி *Q*-யில் குறைந்தது ஒரு படிப்பையாவது முடித்திருக்க வேண்டும். அந்த மாணவருக்காக உள்ள படிப்புகள் முறையே;

பகுதி *P* : *P*102, *P*201, *P*202, *P*203

பகுதி *Q* : *Q*101, *Q*102, *Q*103, *Q*201

பகுதி *R* : *R*101, *R*102, *R*202

கீழே உள்ள நிபந்தனைகளின் படி மாணவர் படிப்புகளை தேர்ந்தெடுக்க வேண்டும். (M.A.T. 2001)

(*i*) ஒரு பருவமுறையில் ஒரே பதவிக்கான அதே எழுத்தைக் கொண்ட இரண்டு படிப்புகளுக்கு மேல் ஒரு மாணவர் எடுத்துக் கொள்ளக் கூடாது.

(*ii*) 200 *S*-ல் எண் பதவிக்கான படிப்புகள் வசந்த கால பருவ முறை தேர்வுகளில் மட்டுமே அனுமதி உண்டு. 100 *S*-ல் உள்ள எண் பதவிக்கான படிப்புகள் இலையுதிர்கால பருவமுறை தேர்வு மற்றும் வசந்த கால பருவமுறை தேர்வு இரண்டிலும் அனுமதிக்கப்படும்.

(*iii*) இலையுதிர் கால பருவ முறை தேர்வுகளில் எடுத்துக் கொள்ளப்படாத எந்த படிப்பையும் வசந்த கால தேர்வு முறைகளில் எடுத்துக் கொள்ள முடியாது.

1. கீழே உள்ளவற்றுள் எந்த பாடத்தை மாணவர் கண்டிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும்?
   (*a*) *P*102 (*b*) *Q*101 (*c*) *Q*102 (*d*) *R*101
2. வசந்த கால பருவ முறை தேர்வுகளுக்கான சாத்தியமான அட்டவணை எது?
   (*a*) *P*102, *Q*101 மற்றும் *Q*102 (*b*) *Q*101, *Q*102 மற்றும் *Q*201
   (*c*) *P*102, *Q*101 மற்றும் *P*202 (*d*) *P*201, *P*202 மற்றும் *R*102
3. இலையுதிர்கால பருவ முறை தேர்வில் *Q*101 மற்றும் *Q*102 ஆகிய பாடங்களை எடுத்துக் கொண்டால் அவரின் வசந்தகால பருவ நிலை தேர்வுகளின் பாடங்கள் முறையே;
   (*a*) *P*203
   (*b*) *P*201 மற்றும் *P*202
   (*c*) பகுதி *Q*-விலிருந்து ஒரு பாடம் மட்டுமே எடுத்துக் கொள்ளலாம்.
   (*d*) பகுதி *R*-லிருந்து ஒரு பாடம் மட்டுமே எடுத்துக் கொள்ளலாம்.

தீர்வு. 1. 200s எண் பதவியிலுள்ள மூன்று வகுப்புகள் *P*-க்கு உள்ளன மற்றும் 100s எண் பதவியிலுள்ள ஒரு வகுப்பும் உள்ளது.

200s எண் பதவியிலுள்ள படிப்புகளை வசந்தகால பருவ முறைக்கு எடுத்துக் கொள்ளலாம். ஆனால், (*c*)-ன் படி 200s எண் பதவி கொண்ட இரண்டு படிப்புகளை மட்டுமே *P*-யில் ஒரு மாணவர் வசந்த கால பருவ முறையில் எடுத்துக் கொள்ளலாம். *P* பகுதியில் மூன்று வகுப்புகளை ஒருவர் முடுக்க வேண்டும், எனவே, இலையுதிர் பருவ முறைக்கு *P*102-வை மாணவர் தேர்வு செய்தாக வேண்டும்.

எனவே, விடை (*a*) ஆகும்.

2. கேள்வி 1-ல் ஆலோசித்தபடி, வசந்தகால பருவ முறையில் 200s எண் பதவி கொண்ட இரு வகுப்புகளை *P*-யில் தேர்ந்தெடுக்க வேண்டும். (*d*)-யில் மட்டுமே அவ்வாறான கலவை உள்ளது. எனவே, விடை (*d*) ஆகும்.
3. கேள்வி 1-ல் ஆலோசித்தபடி, இலையுதிர் பருவ முறையில் ஒரு மாணவர் கண்டிப்பாக *P*102 பாடத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும், *Q*101, *Q*102 பாடங்களை மாணவர் எடுத்துக் கொண்டுள்ளார் என கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, பகுதி *R*-ல் ஒரு பாடத்துடன் *P*201, *P*202, *P*203 ஆகியவற்றிலிருந்து ஏதாவது இரண்டு பாடங்களை அவன் தேர்வு செய்ய வேண்டும். எனவே, விடை (*d*) ஆகும்.

எ.கா.3: கேள்விகளுக்கு பதிலளிக்க கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படிக்கவும்:

ஒரு வாரத்தில், நாளொன்றுக்கு ஒரு நேர்முகத் தேர்வு என திங்கள் முதல் வெள்ளி வரை ஒரு புது வேலைக்காக ஐந்து நேர்முகத் தேர்வுகளை மனித வள இயக்குனர் நடத்தினார். நேர்முகத் தேர்வில் - ராஜன், சச்சின், தருண், ஆஷா, வன்யா மற்றும் குணால் என ஆறு நபர்கள் கலந்து கொண்டனர். இரு நபர்களுக்கு மேல் நேர்முகத் தேர்வில் ஒரு முறைக்கு மேல் கலந்து கொள்ளவில்லை. சச்சினோ அல்லது ஆஷாவோ அல்லது வன்யாவோ ஒரு முறைக்கு மேல் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளவில்லை. அவர்களைத் தவிர எந்த ஒரு நபரும் இரண்டு முறைக்கு மேல் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளவில்லை. கீழே உள்ள நிபந்தனைகளின் படி நேர்முகத் தேர்வு நடைபெறும்.

(*i*) தருண் திங்கள் மற்றும் வெள்ளி இரண்டு நாட்களிலும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்கிறார்.

(*ii*) சச்சினை நேர்காணல் செய்தால், ஆஷாவையும் நேர்காணல் செய்ய வேண்டும். ஆஷாவிற்கு முன்பாக சச்சினின் நேர்முகத் தேர்வு நடக்கும்.

(*iii*) ராஜன் இரண்டு முறை நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டால், அவரின் முதல் தேர்வின் இரண்டு நாட்களுக்கு பிறகு அவரின் இரண்டாவது தேர்வு நடைபெறும்.

(*iv*) வன்யாவின் நேர்முகத் தேர்வு குணாலின் முதல் நேர்முகத் தேர்வுக்கு பின்னாலும் குணாலின் இரண்டாவது நேர்முகத் தேர்வுக்கு முன்னாலும் நடைபெறும்.

(*v*) ராஜனின் நேர் முகத் தேர்வு நடைபெறும் நாளின் முந்தைய நாளிலோ அல்லது ராஜனின் நேர்முகத் தேர்வுக்கு அடுத்த நாளிலோ ஆஷாவின் நேர்முகத் தேர்வு நடைபெறும். (X.A.T. 2006)

1. மனித வள இயக்குனர் நேர்முகத் தேர்வு செய்யும் நாட்கள் மற்றும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் நபர்களின் வரிசை ஆகியவற்றைப் பொறுத்து கீழே உள்ளவற்றுள் எது மிகச் சரி?
   (*a*) திங்கள்: சச்சின், செவ்வாய்: ஆஷா, புதன்: ராஜன், வியாழன், குணால், வெள்ளி: ராஜன்.
   (*b*) திங்கள்: சச்சின், செவ்வாய்: குணால், புதன்: ராஜன், வியாழன்: குணால், வெள்ளி: ஆஷா
   (*c*) திங்கள்: தருண், செவ்வாய்: ராஜன், புதன்: சச்சின், வியாழன்: ராஜன், வெள்ளி: தருண்
   (*c*) திங்கள்: தருண், செவ்வாய்: ராஜன், புதன்: குணால், வியாழன்: வன்யா, வெள்ளி: தருண்
2. செவ்வாயன்று வன்யாவின் நேர்முகத் தேர்வு நடந்தால், கீழே உள்ளவற்றுள் எது சரி?
   (*a*) தருணின் நேர்முகத் தேர்வு வெள்ளியன்று நடக்கும்.
   (*b*) ஆஷாவின் நேர்முகத் தேர்வு வியாழனன்று நடக்கும்.
   (*c*) ராஜனின் நேர்முகத் தேர்வு நடக்கவில்லை.
   (*d*) சச்சினின் நேர்முகத் தேர்வு நடக்கவில்லை.
3. குணாலின் நேர்முகத் தேர்வு நடக்கவில்லை எனில், கீழே உள்ளவற்றுள் எது சரி?
   (*a*) ராஜனின் நேர்முகத் தேர்வு வியாழனன்று நடந்தது.
   (*b*) சச்சினின் நேர்முகத் தேர்வு செவ்வாயன்று நடந்தது.
   (*c*) தருணின் நேர்முகத் தேர்வு திங்களன்று நடந்தது.
   (*d*) ஆஷாவின் நேர்முகத் தேர்வு புதனன்று நடந்தது.
4. சச்சினுக்கு நேர்முகத் தேர்வு நடந்தால், கீழே உள்ளவற்றுள் எது சரி?
   (*a*) குணாலின் நேர்முகத் தேர்வு செவ்வாய் மற்றும் புதன் இரு நாட்களிலும் நடைபெறும்.
   (*b*) ஆஷாவின் நேர்முகத் தேர்வு திங்களன்று நடக்கும்.
   (*c*) வன்யாவின் நேர்முகத் தேர்வு செவ்வாய் நடைபெறும்.
   (*d*) சச்சினின் நேர்முகத் தேர்வு வியாழன் நடைபெறும்.
5. ஆஷாவிற்கோ, தருணுக்கோ நேர்முகத் தேர்வு நடைபெறவில்லை எனில், கீழே உள்ளவற்றில் எந்த வாக்கியம் தவிர மீதியுள்ளவை சரி?
   (*a*) ராஜனின் நேர்முகத் தேர்வு திங்கள் அன்று நடந்தது.
   (*b*) ராஜனின் நேர்முகத் தேர்வு வியாழனன்று நடந்தது.
   (*c*) வன்யாவின் நேர்முகத் தேர்வு செவ்வாயன்று நடந்தது.
   (*d*) குணாலின் நேர்முகத் தேர்வு புதனன்று நடந்தது.
6. ஆஷா மற்றும் வன்யா ஆகியோருக்கு நேர்முகத் தேர்வுகள் நடந்தன எனில், குணாலுக்கு எந்த கிழமையில் நேர்முகத் தேர்வு நடைபெறலாம் என்கிற வரிசையில் எது சரியானது?
   (*a*) திங்கள், வெள்ளி
   (*b*) செவ்வாய், வியாழன்
   (*c*) திங்கள், புதன், வியாழன்
   (*d*) செவ்வாய், புதன், வியாழன்

தீர்வு. 1. (*b*) விதி (*v*)-ஐ மீறுவதால் தவறு.
(*c*) விதி (*ii*)-ஐ மீறுவதால் தவறு.
(*d*) விதி (*iv*)-ஐ மீறுவதால் தவறு.
எனவே, (*a*) சரியானதாகும். விடை (*a*) ஆகும்.

2. வன்யாவின் நேர்முகத் தேர்வு செவ்வாயன்று நடக்கு மெனில் விதி (*iv*)-ன் படி, குணாலின் முதல் நேர்முகத் தேர்வு திங்கட்கிழமையும் அவரது இரண்டாவது நேர்முகத் தேர்வு மீதமுள்ள மூன்று நாட்களில் ஏதாவது ஒரு நாளில் நடைபெறும். எனவே, மேலும் இரண்டு நேர்முகத் தேர்வுகள் மட்டுமே நடைபெறும். எனவே, சச்சினின் நேர்முகத் தேர்வு நடந்தால் ஆஷாவிற்கும், ராஜனுக்கும் நேர்முகத் தேர்வுகள் நடைபெற வேண்டும்.
எனவே, விடை (*d*) ஆகும்.

3. வன்யாவின் நேர்முகத் தேர்வு நடந்தால், கட்டாயம் குணாலின் நேர்முகத் தேர்வு நடைபெற வேண்டும். குணாலின் நேர்முகத் தேர்வு நடந்தால், வன்யாவின் நேர்முகத் தேர்வு கட்டாயம் நடைபெற வேண்டும். எனவே, நடந்த ஐந்து நேர்முகத் தேர்வுகளிலும் இரண்டு சாத்தியங்கள் உள்ளன.
   I. தருண் இரண்டு (திங்கள் மற்றும் வெள்ளி), ராஜன் இரண்டு (செவ்வாய் மற்றும் வியாழன்), ஆஷா ஒன்று (புதன்)
   II. தருண் இரண்டு (திங்கள் மற்றும் வெள்ளி), சச்சின் ஒன்று (செவ்வாய்), ஆஷா ஒன்று (புதன் அல்லது வியாழன்) ராஜன் ஒன்று (புதன் அல்லது வியாழன்)

இரண்டு சாத்தியங்களிலுமே தருணுக்கு நேர்முகத் தேர்வு திங்களன்று நடைபெறுகிறது.

எனவே, விடை (*c*) ஆகும்.

4. ஆஷாவின் நேர்முகத் தேர்வுக்கு முன்பாக சச்சினின் நேர்முகத் தேர்வு நடைபெறுகிறது. எனவே, ஆஷாவிற்கு திங்களன்று நேர்முகத் தேர்வு நடக்காது. எனவே, (*b*) தவறு.

சச்சினுக்கு நேர்முகத் தேர்வு நடந்தால், ஆஷாவிற்கும் நடக்க வேண்டும். ஆஷாவுக்கு நேர்முகத் தேர்வு நடந்தால், ராஜனுக்கும் தேர்வு நடக்க வேண்டும். எனில், ராஜனுக்கும் நேர்முகத் தேர்வு நடக்க வேண்டும். ஆகவே, சச்சின் தவிர்த்து, ஆஷா மற்றும் ராஜன் இருவருக்கு மட்டுமே தேர்வுகள் நடக்கும். வன்யாவுக்கு நேர்முகத் தேர்வு நடந்தால் குணாலுக்கு இரண்டு முறை நேர்முகத் தேர்வு நடக்கும். அது சாத்தியம் இல்லை. எனவே, (*c*) தவறு.

சச்சினின் நேர்முகத் தேர்வு வியாழன் நடக்குமெனில், (*ii*)-லிருந்து ஆஷாவின் நேர்முகத் தேர்வு வெள்ளியன்று நடைபெறும் என தெளிவாகிறது.

இதனால் விதி (*v*) சாத்தியம் இல்லை.

எனவே, (*d*) தவறு.

(*a*) மட்டுமே சரியாகும். எனவே, விடை (*a*) ஆகும்.

5. சச்சினின் நேர்முகத் தேர்வினால், ஆஷாவின் நேர் முகத் தேர்வு கட்டாயமாகிறது. ஆஷாவின் நேர்முகத் தேர்வு நடக்கவில்லையெனில், சச்சினின் நேர்முகத் தேர்வும் நடக்காது.

எனவே, ஐந்து நேர்முகத் தேர்வுகளின் ஒரே சாத்தியம் முறையே; ராஜன் (இரண்டு), குணால் (இரண்டு), வன்யா (ஒன்று)

சாத்தியமான முறை:

திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி
ராஜன்	குணால்	ராஜன்	வன்யா	குணால்
குணால்	ராஜன்	வன்யா	ராஜன்	குணால்
குணால்	வன்யா	ராஜன்	குணால்	ராஜன்

குணாலை புதனன்று நேர்முகத் தேர்வு செய்ய முடியாது.

எனவே, விடை (*d*) ஆகும்.

6. ஆஷா மற்றும் வன்யா இருவருக்கும் நேர்முகத் தேர்வு நடந்தால்; முறையே ஆஷா (ஒன்று) ராஜன் (ஒன்று) வன்யா ஒன்று, குணால் (இரண்டு)

திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி
ஆஷா	ராஜன்	குணால்	வன்யா	குணால்
குணால்	ஆஷா	ராஜன்	வன்யா	குணால்
ராஜன்	ஆஷா	குணால்	வன்யா	குணால்
குணால்	வன்யா	ஆஷா	ராஜன்	குணால்
குணால்	ராஜன்	ஆஷா	வன்யா	குணால்
குணால்	வன்யா	குணால்	ஆஷா	ராஜன்
குணால்	வன்யா	ராஜன்	ஆஷா	குணால்
குணால்	வன்யா	குணால்	ராஜன்	ஆஷா

ஆகவே, குணாலின் நேர்முகத் தேர்வு திங்கள், புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் நடைபெறும்.

எனவே, விடை (*c*) ஆகும்.

பயிற்சி 6E

குறிப்புகள் (கேள்விகள் 1–5): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

A, *B*, *C*, *D* மற்றும் *E* ஆகிய ஆறு ஆண்கள் மற்றும் *P*, *Q*, *R*, *S* ஆகிய நான்கு பெண்களிலிருந்து ஐந்து நபர்கள் கொண்ட ஒரு குழுவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சில நிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

A மற்றும் *S* சேர்ந்து இருக்க வேண்டும்.

R உடன் *P* இருக்க முடியாது.

D மற்றும் *Q* சேர்ந்து இருக்க முடியாது.

C மற்றும் *E* ஒன்றாக இருக்க வேண்டும்.

B-யுடன் *R* இருக்க முடியாது.

எந்த ஒரு குறிப்பும் கொடுக்கப்படவில்லை எனில், அனைத்து கேள்விகளுக்கும் அனைத்து விதிகளும் பொருந்தும்.

1. இரண்டு நபர்கள் ஆண்களாக இருக்க வேண்டுமானால், குழுவில் இருக்கும் நபர்கள்;
   (a) A, B, S, P, Q (b) A, D, S, Q, R
   (c) B, D, S, R, Q (d) C, E, S, P, Q

2. குழுவில் ஒரு நபர் R எனில், மற்ற நபர்கள்;
   (a) P, S, A, D (b) Q, S, A, D
   (c) Q, S, C, E (d) S, A, C, E

3. குழுவில் இருவர் பெண்கள் மற்றும் ஒரு நபர் D எனில், D தவிர குழுவில் உள்ள நபர்கள்;
   (a) P, Q, B, C (b) P, Q, C, E
   (c) P, S, A, B (d) P, S, C, E

4. A மற்றும் C குழு உறுப்பினர்கள் எனில், குழுவின் மற்ற உறுப்பினர்கள்;
   (a) B, E, S (b) D, E, S
   (c) E, S, P (d) P, Q, E

5. P உட்பட குழுவில் மூன்று பெண்கள் எனில், P தவிர்த்து குழுவின் உறுப்பினர்கள்;
   (a) Q, S, A, B (b) Q, S, B, D
   (c) Q, S, C, E (d) R, S, A, D

குறிப்புகள் (கேள்விகள் 6–10): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

ஒரு நிறுவனத்தில் நிர்வாக இயக்குனர் அவ்வப்போது ஒவ்வொன்றிலும் மூன்று நபர்கள் கொண்ட திட்டமிடல் குழுக்களை நியமிக்கிறார். நிதித் துறையிலிருந்து நிர்வாகிகளின் நியமனத்திற்காக தகுதி பெற்றவர்கள் - B, C மற்றும் D செயல்பாடுகள் துறையிலிருந்து நிர்வாகிகளின் நியமனத்திற்கான தகுதி பெற்றவர்கள் - E, F மற்றும் M கீழே கொடுக்கப்பட்டுள்ள விதிகளின் படி குழு நியமிக்கப்படும்:

(i) நிதித் துறையிலிருந்து குறைந்தது ஒரு நபர் இடம் பெற வேண்டும். செயல்பாடுகள் துறையிலிருந்து குறைந்தது ஒரு நபர் இடம் பெற வேண்டும்.
(ii) B நியமிக்கப்பட்டால், C-யை நியமிக்க முடியாது.
(iii) D அல்லது F தனியாக நியமிக்கப் பட முடியாது இருவரையும் சேர்த்து நியமிக்க வேண்டும்.
(iv) E-யை நியமித்தால், M-யையும் நியமிக்க வேண்டும்.

(A.T.M.A. 2006)

6. கீழே உள்ளவற்றுள் எந்த குழு ஏற்கக்கூடியது?
   (a) E, F மற்றும் M
   (b) D, E மற்றும் F
   (c) D, F மற்றும் M
   (d) B, D மற்றும் M

7. ஒரு குழுவில் உள்ள அதிகமான நபர்கள் செயல்பாடுகள் துறையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எனில், அந்த குழுவில் யார் இடம் பெற வேண்டும்
   (a) M (b) F (c) E (d) C

8. நியமனத்திற்கான விதிகள் நாலு-நபர்கள் குழுவை அமைப்பதற்கும் பொருந்தும் எனில், கீழே உள்ளவற்றுள் எது உண்மை?
   (a) B-யை நியமித்தால் M-ஐயும் நியமிக்க வேண்டும்.
   (b) F-யை நியமித்தால் C-யையும் நியமிக்க வேண்டும்.
   (c) C-யை நியமித்தால் E-யையும் நியமிக்க வேண்டும்.
   (d) மேலே உள்ள எதுவும் உண்மையல்ல.

9. M சேர்கின்ற குழுவில் B யையும் நியமிக்க வேண்டுமானால், அந்த குழுவை பொறுத்த வரை எது சரி?
   (a) E குழு உறுப்பினர் இல்லை.
   (b) குழு உறுப்பினர் F.
   (c) நிதித் துறையிலிருந்து நியமிக்கப்பட்டவர்கள் அதிகமான நபர்கள்.
   (d) செயல்பாடுகள் துறையிலிருந்து நியமிக்கப்-பட்டவர்கள் அதிகமான நபர்கள்.

10. ஒரு குழுவில் நியமிக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் நிதித்துறையிலிருந்து வந்தவர்கள் எனில், அந்த குழுவில் கட்டாயம் இடம்பெற வேண்டியவர்;
    (a) B (b) C (c) F (d) M

குறிப்புகள் (கேள்விகள் 11–15): கேள்விகளுக்கு பதிலளிக்க கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படிக்க வேண்டும்:

(N.M.A.T. 2006)

A, B, C, D, E ஆகிய ஆண்கள் மற்றும் P, Q, R, S, T, U ஆகிய ஐந்து ஆறு பெண்களின் குழு உள்ளது. A, B மற்றும் R ஆகியோர் வழக்கறிஞர்கள்; C, D, P, Q மற்றும் S ஆகியோர் மருத்துவர்கள். மீதியுள்ளவர்கள் ஆசிரியர்கள். இந்த 11 நபர்களிலிருந்து கீழே உள்ள நிபந்தனைகளின் படி ஒரு குழுவை உருவாக்க வேண்டும்.

A, P மற்றும் V ஒன்றாக இருக்க வேண்டும்.
D அல்லது R-உடன் B இணைந்து இருக்க முடியாது.
E மற்றும் Q இணைந்து இருக்க வேண்டும்.
C மற்றும் T இணைந்து இருக்க வேண்டும்.
D மற்றும் P ஒன்றாக இருக்க முடியாது.
Q-வுடன் C இருக்க முடியாது.

11. குழுவில் இரண்டு ஆண் வழக்கறிஞர்கள், இரண்டு பெண் மருத்துவர்கள் மற்றும் ஒரு ஆசிரியர் இருக்க வேண்டும் எனில், அந்த குழு உறுப்பினர்கள் முறையே;
    (a) A, B, P, Q, U (b) A, B, P, U, S
    (c) A, P, R, S, U (d) B, E, Q, R, S

12. குழுவில் ஒரு வழக்கறிஞர், இரண்டு மருத்துவர்கள், மூன்று ஆசிரியர்கள் இருக்க வேண்டும் T-யுடன் C இருக்க முடியாது எனில், குழு உறுப்பினர்கள் முறையே;
    (a) A, E, P, Q, S, U
    (b) A, E, P, Q, T, U
    (c) B, E, Q, S, T, U
    (d) E, Q, R, S, T, U

13. குழுவில் ஒரு ஆண் வழக்கறிஞர், ஒரு ஆண் மருத்துவர், ஒரு பெண் மருத்துவர் மற்றும் இரண்டு ஆசிரியர்கள் உள்ளனர் எனில் குழு உறுப்பினர்கள் முறையே;
    (a) A, C, P, T, U
    (b) A, D, E, P, T
    (c) A, D, E, P, U
    (d) B, C, E, Q, U

14. குழுவில் இரண்டு வழக்கறிஞர்கள், மூன்று மருத்துவர்கள், ஒரு ஆண் ஆசிரியர் உள்ளனர் எனில், குழு உறுப்பினர்கள் முறையே;
(a) A, D, P, S, U (b) C, D, R, S, T
(c) D, E, Q, R, S (d) D, E, Q, R, T

15. குழுவில் இரண்டு வழக்கறிஞர்கள், இரண்டு மருத்துவர்கள், இரண்டு ஆசிரியர்கள் உள்ளனர். குழுவில் மூன்று பெண் நபர்களுக்கு மேல் இருக்க முடியாது எனில், குழு உறுப்பினர்கள் முறையே;
(a) A, B, C, P, T, U
(b) A, C, P, R, T, U
(c) A, E, P, Q, R, T
(d) B, C, E, Q, R, T

குறிப்புகள் (கேள்விகள் 16–19): கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(X.A.T. 2005; M.B.A. 2004)**

ஒரு நிறுவனம் அதன் தென் இந்திய மையத்திலிருந்து வட இந்தியாவிற்கு மாற்றுவதற்காக அழைப்பு மைய நிர்வாகிகள் குழு ஒன்றை தேர்வு செய்ய வேண்டும். வட இந்தியாவில் ஒரு மையத்தை துவங்க உள்ளது. அந்த நிறுவனம் தொழில்முறை மேலாளர்களால் நிர்வகிக்கப்படுகிறது. மனிதவளம் மற்றும் தொழிலாளர்கள் உறவு இரண்டிலும் நிர்வாகம் கவனம் செலுத்துகிறது. சமமான திறமை கொண்ட X, Y மற்றும் Z (பணியில் மூத்தவர்) மற்றும் A, B, C மற்றும் D (பணியில் புதியவர்) ஆகிய ஏழு குழு உறுப்பினர்கள் உள்ளனர். புதிய குழுவில் பணியில் மூத்த உறுப்பினர்கள் இருவரும், புதிய உறுப்பினர்கள் இருவரும் இடம் பெற வேண்டும் என்று நிர்வாகம் முடிவெடுத்தது. ஒரு குழுவில் இடம் பெறும் அனைத்து நிர்வாகிகளும் நல்ல நட்புடன் இருக்க வேண்டும். அதன் மூலம் குழுவிற்கு புத்துணர்ச்சி கிடைக்கும் மற்றும் வடக்கில் உருவாகும் புதிய மையத்தில் நிர்வாகிக்களுக்கிடையே எந்த பிரச்சனைகளும் வராது என நிர்வாகம் நினைத்தது.

ஏழு நிர்வாகிக்களுக்கிடையே உள்ள உறவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:
(i) Y மற்றும் A நண்பர்களாக இல்லை.
(ii) Z மற்றும் C நண்பர்களாக இல்லை.
(iii) A மற்றும் B நண்பர்களாக இல்லை.

16. குழுவில் A இருந்தால் கீழே உள்ளவற்றுள் எந்த குழு உறுப்பினர்கள் இருப்பார்கள்?
(a) X, Y மற்றும் D (b) X, Z மற்றும் B
(c) X, Z மற்றும் C (d) X, Z மற்றும் D

17. கீழே உள்ளவற்றுள் எந்த வாக்கியம்(ங்கள்) தவறு?
I. Y மற்றும் C இருவரையும் இணைந்து தேர்வு செய்ய முடியாது.
II. Z மற்றும் B இருவரையும் இணைந்து தேர்வு செய்ய முடியாது.
III. Z மற்றும் D இருவரையும் இணைந்து தேர்வு செய்ய முடியாது.
(a) I மட்டும்
(b) I மற்றும் II மட்டும்
(c) I மற்றும் III மட்டும்
(d) I, II மற்றும் III

18. Y மற்றும் Z இருவரும் தேர்வு செய்யப்பட்டால் அவர்களுடன் வேறு யார் யார் இடம் பெற வேண்டும்.
(a) B மற்றும் A இருவரும்
(b) B மற்றும் D இருவரும்
(c) C மற்றும் D இருவரும்
(d) D மட்டும்

19. X-ஐ பொறுத்தவரை கீழே உள்ளவற்றுள் எந்த வாக்கியம்/யங்கள் உண்மை?
I. குழுவில் X-ஐ பணியில் மூத்த உறுப்பினராக தேர்வு செய்ய வேண்டும்.
II. C-யை தேர்வு செய்ய வேண்டுமானால், X-ஐயும் தேர்வு செய்ய வேண்டும்.
III. A மற்றும் C இருவரையும் விலக்கினால், X-ஐ தேர்வு செய்ய முடியாது.
(a) I மட்டும்
(b) II மட்டும்
(c) II மற்றும் III மட்டும்
(d) I, II மற்றும் III

குறிப்புகள் (கேள்விகள் 20–24): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(M.B.A. 2004)**

A, B, C, D, E ஆகிய ஐந்து மருத்துவர்கள் மற்றும் G, H, K, L ஆகிய நான்கு பொறியாளர்கள் மற்றும் M, N, O, P, Q, R ஆகிய ஆறு ஆசிரியர் ஆகிய நபர்களிலிருந்து சில குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளது. A, B, G, H, P மற்றும் Q ஆகியோர் பெண்கள். மற்ற நபர்கள் ஆண்கள் கீழே உள்ள விதிகளை பின்பற்றி குழுக்கள் அமைக்கப்படும்:
குழுவில் ஒரு ஆண் மருத்துவர் இருந்தால், பெண் ஆசிரியர் இடம் பெற மாட்டார்.
ஒரு ஆண் பொறியாளர் இருந்தால், பெண் மருத்துவர் இடம் பெற மாட்டார்.
எந்த ஒரு குழுவிலும் இரண்டு ஆண் ஆசிரியர்களுக்கு மேல் இடம் பெற மாட்டார்கள்.

20. குழுவில் இரண்டு மருத்துவர்கள், மூன்று பெண் ஆசிரியர்கள், இரண்டு பொறியாளர்கள் உள்ளனர் எனில், குழு உறுப்பினர்கள் முறையே;
(a) A, B, O, P, Q, G, H
(b) C, D, K, L, O, P, Q
(c) C, D, O, P, Q, G, H
(d) D, E, G, H, O, P, Q

21. குழுவில் இரண்டு மருத்துவர்கள், ஒரு பொறியாளர் மற்றும் நான்கு ஆசிரியர்கள் உள்ளனர் எனில், கீழே உள்ளவற்றுள் எதைத் தவிர மற்ற குழுக்கள் சாத்தியம்?
(a) A, B, G, M, N, O, P
(b) A, B, H, M, O, P, Q
(c) A, B, H, M, R, P, Q
(d) A, B, K, N, R, P, Q

22. குழுவில் இரண்டு மருத்துவர்கள், இரண்டு பெண் ஆசிரியர்கள் மற்றும் இரண்டு பொறியாளர்கள் உள்ளனர் எனில், கீழே உள்ளவற்றுள் எதைத் தவிர மற்ற குழுக்கள் சாத்தியம்;
(a) A, B, G, H, O, Q
(b) A, B, G, H, P, Q
(c) A, B, K, L, P, Q
(d) O, P, G, H, A, B

23. குழுவில் மூன்று மருத்துவர்கள், இரண்டு ஆண் பொறியாளர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர்கள் உள்ளனர் எனில், குழு உறுப்பினர்கள் முறையே;
(a) A, B, C, K, L, M, R
(b) B, C, D, K, L, N, R
(c) C, D, E, K, L, M, N
(d) C, D, E, K, L, P, R

24. குழுவில் இரண்டு மருத்துவர்கள் இரண்டு பொறியாளர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர்கள் உள்ளனர் எனில் எதைத் தவிர மற்ற குழுக்கள் சாத்தியம்;
(a) A, B, G, H, O, P
(b) A, B, G, H, M, N
(c) C, E, K, L, N, R
(d) C, D, K, L, O, P

விடைகள் (பயிற்சி 6E)

1. (a)	2. (d)	3. (c)	4. (d)	5. (a)	6. (c)	7. (a)	8. (a)	9. (d)	10. (c)
11. (b)	12. (b)	13. (a)	14. (c)	15. (a)	16. (d)	17. (d)	18. (b)	19. (b)	20. (a)
21. (d)	22. (c)	23. (c)	24. (d)						

தீர்வுகள் (பயிற்சி 6E)

1. A-யை தேர்வு செய்தால், S-ஐயும் தேர்வு செய்ய வேண்டும்.
B-யை தேர்வு செய்தால், R-ஐ தேர்வு செய்ய முடியாது.
D-யை தேர்வு செய்தால், Q-வை தேர்வு செய்ய முடியாது.
ஆகவே, A, D, S, Q, R மற்றும் B, D, S, R, Q ஆகியவை தவறு.
A-யுடன் S இணைந்து வர வேண்டும். எனவே, C, E, S, P, Q சாத்தியமில்லை.

2. R-ஐ தேர்வு செய்தால், P-யை தேர்வு செய்ய முடியாது. எனவே, P, S, A, D தவறு.
D மற்றும் Q இணைந்து வர முடியாது. ஆகவே, Q, S, A, D தவறு.
S மற்றும் A இணைந்து இருக்க வேண்டும். எனவே, Q, S, C, E தவறு.

3. D-யை தேர்வு செய்ய வேண்டுமானால் Q-வை தேர்வு செய்ய முடியாது. எனவே, P, Q, B, C மற்றும் P, Q, C, E தவறு.
S மற்றும் A இணைந்து வர வேண்டும். ஆகவே, P, S, C, E என்பதும் தவறு.

4. A மற்றும் C உறுப்பினர்கள் எனில், S மற்றும் E-யையும் தேர்வு செய்ய வேண்டும்.
ஆகவே, P, Q E என்பது சரி அல்ல.

5. P மற்றும் R இணைய முடியாது. எனவே, R, S, AD தவறு. S மற்றும் A இணைந்து வர வேண்டும். Q, S, B, D மற்றும் Q, S, C, E ஆகியவை தவறு.

6. (a) விதி (iii)-ஐ மீறுவதால் ஏற்க முடியாது.
(b) விதி (iv)-ஐ மீறுவதால் ஏற்க முடியாது.
(c) விதி (iii)-ஐ மீறுவதால் ஏற்க முடியாது.

7. குழுவில் இரண்டு நபர்கள் செயல்பாடுகள் துறையிலிருந்தும் ஒருவர் நிதித் துறையிலிருந்தும் இடம் பெற வேண்டும்.
செயல்பாடுகளிலிருந்து இரண்டு நபர்கள் (E, F), (F, M) அல்லது (E, M) ஆக இருக்கலாம். ஆனால் (E, M) விதி (iv)-ஐ மீறுகிறார். எனவே, (E, M) அல்லது (E, M) நியமிக்கப்பட வேண்டும். எனவே, அந்த குழுவில் M இடம் பெற வேண்டும்.

8. B-யை நியமித்தால், C-யை நியமிக்க முடியாது. D மற்றும் F இணைந்து வர வேண்டும். E-யை நியமித்தால் M-ஐயும் நியமிக்க வேண்டும். D, F மற்றும் M உடன் சேர்ந்து B நான்கு-உறுப்பினர் குழுவை அமைப்பார். எனவே, (a) சரியாகும்.
F-ஐ நியமித்தால், D-யையும் நியமிக்க வேண்டும். C-யை நியமிக்காவிட்டாலும். F மற்றும் D முறையே (E மற்றும் M) அல்லது (B) M உடன் சேர்ந்து குழு அமைக்கலாம். எனவே, b தவறு.
C-யை நியமித்தால் B-யை நியமிக்க முடியாது. மீண்டும், D மற்றும் F இணைந்து வர வேண்டும் மற்றும் E-யை நியமித்தால், M-ஐயும் நியமிக்க வேண்டும். ஆகவே, D, F மற்றும் M-உடன் சேர்ந்து C நான்கு-உறுப்பினர் குழுவை அமைக்க முடியும். ஆகவே, (c) தவறு.

9. B மற்றும் M தவிர குழுவில் மேலும் ஒரு உறுப்பினர் உள்ளார். B-யை நியமித்தால், C-யை நியமிக்க

முடியாது D மற்றும் F இணைந்து இருக்க வேண்டும். ஆகவே, நியமிக்கப்பட்ட மூன்றாவது நபர் M. எனவே, அந்த குழுவில் உள்ள இருவர் செயல்பாடுகள் துறையிலிருந்து வந்தவர்கள்.

10. குழுவில் உள்ள இரு நபர்கள் நிதித் துறையில் உள்ளவர்கள் மற்றும் ஒருவர் செயல்பாடுகள் துறையில் உள்ளவர். B மற்றும் C இணைந்து வர முடியாது. நிதித் துறையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இருவர் முறையே D மற்றும் B அல்லது C. D-யை நியமித்தால், F-ஐயும் நியமிக்க வேண்டும். எனவே, குழுவில் F இடம் பெற வேண்டும்.

11. ஆண் வழக்கறிஞர்கள் முறையே A மற்றும் B; பெண் மருத்துவர்கள் முறையே P, Q மற்றும் S. ஆசிரியர்கள் முறையே E, T மற்றும் U.

A மற்றும் B-யை தேர்வு செய்ய வேண்டும்.

A, P மற்றும் U இணைந்து இருக்க வேண்டும். மேலும் ஒரு பெண் மருத்துவரை தேர்வு செய்ய வேண்டும். அவர் Q அல்லது S-ஆக இருக்கலாம். ஆனால் Q மற்றும் E இணைந்து இருக்க வேண்டும். E-யை தேர்வு செய்ய முடியாது என்பதால் S தேர்வு செய்யப்படுவார்.

எனவே, குழுவானது A, B, P, U, S என அமையும்.

12. A, B மற்றும் R வழக்கறிஞர்கள்; C, D, P, Q, S ஆகியோர் மருத்துவர்கள். E, T மற்றும் U ஆசிரியர்கள்.

குழுவில் E, T, U ஆகிய மூன்று ஆசிரியர்கள் உள்ளனர்.

A, P மற்றும் U இணைந்து இருக்க வேண்டும். E மற்றும் Q இணைந்து இருக்க வேண்டும்.

அந்த குழு; A, E, P, Q, T, U.

13. A மற்றும் B ஆண் வழக்கறிஞர்கள்; C மற்றும் D ஆண் மருத்துவர்கள்; P, Q, S பெண் மருத்துவர்கள். E, T, U ஆசிரியர்கள். A-யை தேர்வு செய்தால் P மற்றும் U தேர்வு செய்யப்பட வேண்டும். D மற்றும் P இணைந்து இருக்க முடியாது. எனவே, ஆண் மருத்துவர் C-யை தேர்வு செய்ய வேண்டும். C மற்றும் T ஒன்றாக இருக்க வேண்டும். எனவே, குழு; A, C, P, T, U என அமையும்.

14. A, B மற்றும் R வழக்கறிஞர்கள். C, D, P, Q, S மருத்துவர்கள். E ஆண் ஆசிரியர் எனவே, E தேர்வு செய்யப்படுவார். E மற்றும் Q இணைந்து இருக்க வேண்டும். C மற்றும் Q ஒன்றாக இருக்க முடியாது. ஆகவே, C தேர்வு செய்ய முடியாது. U தேர்வு செய்யப்பட மாட்டார். எனவே, P-யும் தேர்வு செய்யப்பட மாட்டார். எனவே, D, S ஆகிய மற்ற இரு மருத்துவர்கள் தேர்வாகினறனர். P தேர்வாகாததால், A-யும் தேர்வாகமாட்டார். D தேர்வு செய்யப்படுவார், B தேர்வு செய்யப்பட மாட்டார். எனவே, குழு D, E, Q, R, S என அமையும்.

15. A, C, P, R, T, U மற்றும் A, E, P, Q, R, T ஆகியவை தவறு. ஏனெனில் ஒவ்வொன்றிலும் நான்கு பெண்கள் உள்ளனர். B மற்றும் R ஒன்றாக இருக்க முடியாது. எனவே, B, C, E, Q, R, T தவறு.

16. குழுவில் A இருந்தால், Y மற்றும் B-யை தேர்வு செய்ய முடியாது. எனவே, பணியில் மூத்தவர்களான X மற்றும் Z தேர்வு செய்யப்பட வேண்டும். Z மற்றும் C ஒன்றாக இருக்க முடியாது. எனவே, நான்காவது உறுப்பினர் D ஆவார்.

17. X மற்றும் B அல்லது D-யுடன் Y மற்றும் C-யை தேர்வு செய்யலாம். ஆகவே, I தவறு.

X அல்லது Y மற்றும் D-யுடன் Z மற்றும் B-யை தேர்வு செய்யலாம். எனவே, II தவறு.

X அல்லது Y, மற்றும் A அல்லது B-யுடன் B மற்றும் D-யை தேர்வு செய்யலாம். எனவே, III தவறு.

18. Y மற்றும் Z தேர்வு செய்யப்பட்டால் (i) மற்றும் (ii)-லிருந்து தெரிவது; A மற்றும் C-யை தேர்வு செய்ய முடியாது எனவே, குழுவில் உள்ள புதிய அதிகாரிகள் முறையே B மற்றும் D.

19. B மற்றும் D-யுடன் சேர்ந்து Y மற்றும் Z ஒரு குழுவை உருவாக்க முடியும். எனவே, I தவறு C-யை தேர்வு செய்தால், Z-ஐ தேர்வு செய்ய முடியாது. எனவே, பணியில் மூத்த அதிகாரிகள் முறையே X மற்றும் Y குழுவில் இருப்பார்கள். எனவே, II சரி. A மற்றும் C-யை நிராகரித்தால், குழுவில் இடம் பெற வேண்டிய புதிய அதிகாரிகள் முறையே B மற்றும் D. மற்றும் X, Y மற்றும் Z ஆகியோரிலிருந்து இரண்டு மூத்த அதிகாரிகள் B மற்றும் D-யுடன் இணைந்து இருப்பார்கள். எனவே, III தவறு.

20. A, B, C, D மற்றும் E ஆகியோர் மருத்துவர்கள்; O, P மற்றும் Q ஆசிரியர்கள்; G, H, K, L பொறியாளர்கள். தேர்வு செய்யப்பட வேண்டிய பெண் ஆசிரியர்கள் முறையே O, P மற்றும் Q.

ஒரு ஆண் மருத்துவர் இருந்தால், பெண் ஆசிரியர் இருக்க மாட்டார். ஆனால், மூன்று பெண் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஆகையால், C, D மற்றும் E ஆகியோரை தேர்வு செய்ய முடியாது. எனவே, தேர்வு செய்யப்பட்ட மருத்துவர்கள் முறையே A மற்றும் B. பெண் மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டதால் K மற்றும் L ஆகிய ஆண் பொறியாளர்களை தேர்வு செய்ய முடியாது.

எனவே, உருவான குழு; A, B, O, P, Q, G, H.

21. A, B, C, D மற்றும் E மாணவர்கள்; G, H, K, L பொறியாளர்கள்; M, N, O, P, Q, R ஆசிரியர்கள். நான்கு ஆசிரியர்கள் தேவை. மூன்று ஆண் ஆசிரியர்கள் உள்ளனர். பெண் ஆசிரியர்களையும் தேர்வு செய்ய வேண்டும். அதாவது, C, D மற்றும் E ஆகிய ஆண் மருத்துவர்களை தேர்வு செய்ய முடியாது. எனவே, A மற்றும் B ஆகிய இரண்டு மருத்துவர்கள் தேவானார்கள். தேர்வு செய்யப்பட்ட இரண்டு மருத்துவர்களும் பெண்கள். K அல்லது L ஆகிய பொறியாளர்களை தேர்வு செய்ய முடியாது G அல்லது H தேர்வு செய்யப்பட வேண்டும். A, B, K, N, R, P, Q என்பது சாத்தியமற்றது. ஏனெனில், K தேர்வு செய்யப்படமாட்டார்.

22. A, B, C, D மற்றும் E மருத்துவர்கள்; O, P மற்றும் Q பெண் ஆசிரியர்கள். G, H, K மற்றும் L பொறியாளர்கள். பெண் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டதால், ஆண் மருத்துவர்கள் அதாவது, C, D மற்றும் E-யை தேர்வு செய்ய முடியாது. எனவே, தேர்வு செய்யப்பட்ட மருத்துவர்கள் முறையே A மற்றும் B இரண்டு மருத்துவர்களும் பெண்கள். எனவே, K அல்லது L ஆகிய ஆண் பொறியாளர்களை தேர்வு செய்ய முடியாது. G மற்றும் H தேர்வு செய்யப்பட வேண்டும்.

சாத்தியமில்லாத ஒரே குழு A, B, K, L, P, Q.

23. A, B, C, D மற்றும் E ஆகியோர் மருத்துவர்கள்; K மற்றும் L ஆண் பொறியாளர்கள்; M, N, O, P, Q மற்றும் R ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட வேண்டிய ஆண் பொறியாளர்கள் முறையே K மற்றும் L.

ஆண் பொறியாளர்கள் தேர்வு செய்யப்பட்டதால், பெண் மருத்துவர்கள் அதாவது, A மற்றும் B-யை தேர்வு செய்ய முடியாது. எனவே, தேர்வு செய்யப்பட வேண்டிய மருத்துவர்கள் முறையே C, D மற்றும் E. தேர்வு செய்யப்பட்ட மருத்துவர்கள் அனைவரும் ஆண்கள். எனவே, O, P மற்றும் Q ஆகிய பெண் ஆசிரியர்களை தேர்வு செய்ய முடியாது. எனவே, M, N மற்றும் R-லிருந்து இரண்டு ஆசிரியர்களை தேர்வு செய்ய வேண்டும். எனவே, சாத்தியமான குழு C, D, E, K, L, M, N.

24. எந்த ஒரு குறிப்பிட்ட விதியும் கொடுக்கப்படவில்லை என்பதால், கொடுக்கப்பட்டுள்ள குழுக்களை ஒவ்வொன்றாக அலசலாம். C மற்றும் D ஆகிய ஆண் மருத்துவர்கள் O மற்றும் P ஆகிய பெண் ஆசிரியர்களுடன் இணைந்து இருக்க முடியாது. எனவே, C, D, K, L, O, P என்கிற குழு தவறு.

வகை 6: குடும்பம்-சார்ந்த புதிர்கள்

இந்த வகை கேள்விகளில், ஒரு குடும்பத்தில் உள்ள வெவ்வேறு உறுப்பினர்களின் உறவை சம்பந்தப்படுத்தி சில துப்புகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவர்களின் வேலை, தகுதிகள், துணிமணிகள், விருப்பங்கள் முதலியன கொடுக்கப்பட்டிருக்கும். கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை தேர்வு எழுதுபவர் நன்கு ஆராய்ந்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா. 1: தகவல்களை நன்கு படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(S.B.I.P.O. 2000)**

(i) P, Q, R, S, T மற்றும் U ஆகிய ஆறு நபர்கள் உள்ள குடும்பத்தில் மூன்று ஆண்கள் மற்றும் மூன்று பெண்கள். இரண்டு ஜோடிகள் மணமானவர்கள். இரு நபர்களுக்கு திருமணமாகவில்லை. ஒவ்வொரு நபரும் வெவ்வேறு செய்தித்தாள் படிப்பார்கள். அதாவது, டைம்ஸ் ஆப் இந்தியா, இந்தியன் எக்ஸ்பிரஸ், ஹிந்துஸ்தான் டைம்ஸ், பிஸினஸ் ஹெரால்ட், நவ்பார்த டைம்ஸ் மற்றும் திட்ரிப்யூன்.

(ii) இந்தியன் எக்ஸ்பிரஸ் படிக்கும் T-யானவன் R-ன் மனைவியான P-யின் மாமியார். U-ன் அப்பாவான S டைம்ஸ் ஆப் இந்தியா அல்லது திட்ரிபூன் செய்தித்தாள்களை படிப்பதில்லை. ஹிந்துஸ்தான் டைம்ஸ் படிக்கும் U-ன் சகோதரியான Q நவ்பாரத் டைம்ஸ் படிக்கிறார். திட்ரிபூனை R படிப்பதில்லை.

1. T-க்கு எத்தனை மகன்கள் உள்ளனர்?

(a) ஒன்று (b) இரண்டு (c) மூன்று (d) நான்கு (e) இவற்றுள் எதுவுமில்லை

2. கீழே உள்ளவர்களுள் யார் டைம்ஸ் ஆப் இந்தியா படிக்கிறார்?

(a) P (b) R (c) S

(d) தகவல் போதுமானதாக இல்லை (e) இவற்றுள் எதுவுமில்லை

3. P எந்த செய்தித்தாள் படிக்கிறார்?

(a) பிஸ்னஸ் ஹெரால்டு (b) தி டைம்ஸ் ஆப் இந்தியா

(c) நவ்பாரத் டைம்ஸ் (d) தகவல் போதுமானதாக இல்லை

(e) இவற்றுள் எதுவுமில்லை

4. T-க்கு U என்ன உறவு?

(a) மகன் (b) மகள் (c) சகோதரன்

(d) தகவல் போதுமானதாக இல்லை (e) இவற்றுள் எதுவுமில்லை

5. கீழே உள்ளவர்களுள் எந்த ஜோடி திருமணமானவர்கள்?

(a) QU (b) TU (c) SQ (d) ST (e) இவற்றுள் எதுவுமில்லை

தீர்வு. P-யின் மாமியார் T மற்றும் R-ன் மனைவி P. எனவே, P-யின் கணவன் R மற்றும் R-ன் அம்மா T. ஆகவே, ஒரு ஜோடி RP. U-ன் அப்பா S. T-யின் கணவன் S. எனவே, மற்றொரு ஜோடி ST.

U-ன் சகோதரி Q. ஆகவே, R, U மற்றும் Q ஆகியோர் S மற்றும் T ஜோடியின் குழந்தைகள். மொத்தம் 3 ஆண்கள் உள்ளதால் U என்பவரும் ஒரு ஆண் Q நவ்பாரத் டைம்ஸ் படிக்கிறார். U ஹிந்துஸ்தான் டைம்ஸ் படிக்கிறார்; T இந்தியன் எக்ஸ்பிரஸ் படிக்கிறார்.

டைம்ஸ் ஆப் இந்தியாவையோ (அ) தி ட்ரி பூனையோ S படிப்பதில்லை. எனவே, S பிஸினஸ் ஹெரால்ட் படிக்கிறார்.

தி ட்ரிபூனை R படிப்பதில்லை. எனவே, அவர் டைம்ஸ் ஆப் இந்தியா படிக்கிறார்.

P தி ட்ரிபூனை படிக்கிறார்.

1. T-க்கு இரண்டு மகன்கள் உள்ளனர் — R மற்றும் U. எனவே, விடை (b) ஆகும்.
2. R டைம்ஸ் ஆப் இந்தியாவை படிக்கிறார். எனவே, விடை (b).
3. P தி ட்ரிபூனை படிக்கிறார். எனவே, விடை (e) ஆகும்.
4. T-யின் மகன் U. எனவே, விடை (a) ஆகும்.
5. இரண்டு ஜோடிகள் முறையே — RP மற்றும் ST. ஆகவே, விடை (d) ஆகும்.

எ.கா. 2: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

M, P, D, K, R, T மற்றும் W ஆகியோர் ஒரு குடும்பத்தின் ஏழு உறுப்பினர்கள். அவர்களுள் மூவர் பெண்கள். இரண்டு வழக்கறிஞர்கள், இரண்டு ஆசிரியர்கள், இரண்டு பொறியாளர்கள் மற்றும் ஒரு மருத்துவர் உள்ளனர். எந்த பெண் நபரும் பொறியாளர் இல்லை. P-யின் கணவனான D ஒரு வழக்கறிஞர். W ஒரு ஆசிரியர். M மற்றும் K ஜோடியின் குழந்தைகள் D மற்றும் R. தன் மாமா R-ன் தொழிலை T பார்க்கிறார். T மற்றும் W ஆகியோரின் பாட்டி K. R-ன் அப்பாவும் ஒரு வழக்கறிஞர். K ஒரு மருத்துவர் இல்லை. **(Asstt. Manager Exam, 2005)**

1. T-க்கு M என்ன உறவு?

(a) சகோதரர் (b) அப்பா (c) மாமா
(d) தகவல் போதுமானதாக இல்லை (e) இவற்றுள் எதுவுமில்லை

2. யார் மருத்துவர்?

(a) P (b) R (c) T
(d) தகவல் போதுமானதாக இல்லை (e) இவற்றுள் எதுவுமில்லை

3. R-க்கு W என்ன உறவு?

(a) சகோதர/சகோதரியின் மகன் (b) சகோதர/சகோதரியின் மகள்
(c) சகோதர/சகோதரியின் மகன் (அ) மகள் (d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றுள் எதுவுமில்லை

4. M-க்கு P என்ன உறவு?

(a) மருமகள் (b) பேத்தி (c) மகள் (d) நாத்தனார்
(e) இவற்றுள் எதுவுமில்லை

5. எந்த ஜோடி நபர்கள் பொறியாளர்கள்?

(a) MP (b) RT (c) RW (d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றுள் எதுவுமில்லை

தீர்வு. P-யின் கணவர் D. M மற்றும் K ஆகியோரின் குழந்தைகள் D மற்றும் R. T-யின் மாமா R. எனவே, D மற்றும் R சகோதரர்கள். T மற்றும் W ஆகியோரின் பாட்டி K. D மற்றும் P-யின் குழந்தைகள் T மற்றும் W. எனவே, M-ன் அம்மா K மற்றும் D மற்றும் R ஆகியோரின் தந்தை M. ஆகவே, M, D, T, R ஆகியோர் ஆண்கள்; K மற்றும் P பெண்கள். குடும்பத்தில் 3 பெண்கள் உள்ளதால், W-வும் ஒரு பெண். எனவே, D மற்றும் P ஆகியோரின் பெண் W.

R-ன் தந்தை D ஒரு வழக்கறிஞர். M ஒரு வழக்கறிஞர். எனவே, D மற்றும் M இரண்டு நபர்கள் வழக்கறிஞர்கள். W ஒரு ஆசிரியர். மேலும் K, P, W ஆகியோரில் யாரும் பொறியாளர் இல்லை. T மற்றும் R இருவரும் ஒரே தொழிலைக் கொண்டுள்ளனர். எனவே, இருவரும் பொறியாளர்கள். எனவே, T மற்றும் R பொறியாளர்கள். K ஒரு மருத்துவர் இல்லை. ஆகவே, K ஒரு ஆசிரியர். எனவே, W மற்றும் K இருவரும் ஆசிரியர்கள். P ஒரு மருத்துவர் என்பது தெளிவு.

1. D-யின் அப்பா M மற்றும் D-யின் மகன் T. ஆகவே, T-யின் தாத்தா M. எனவே, விடை (e) ஆகும்.
2. P ஒரு மருத்துவர். எனவே, விடை (a) ஆகும்.
3. D-யின் மகள் W மற்றும் D-யின் சகோதரர் R. ஆகவே, R-ன் சகோதர/சகோதரியின் மகள் W. எனவே, விடை (b) ஆகும்.

4. M-ன் மகன் D-யின் மனைவி P. ஆகவே, M-ன் மருமகள் P. எனவே, விடை (a) ஆகும்.

5. R மற்றும் T பொறியாளர்கள். எனவே, விடை (b) ஆகும்.

எ.கா.3: கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

P, Q, R, S, T, V மற்றும் W ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள். அதில் மூன்று பெண்கள். குடும்பத்தின் ஒவ்வொரு நபரும் வெவ்வேறு தொழிலில் உள்ளனர். வழக்கறிஞர், பட்டய கணக்காளர் (CA), பொறியாளர், ஆசிரியர், மருத்துவர், கட்டிடக்கலை நிபுணர் மற்றும் மருந்தாளர். எந்த பெண்ணும் CA-வும் அல்ல, மருந்தாளரும் அல்ல. குடும்ப நபர்கள் ஒவ்வொருவரின் மாத சம்பளமும் வெவ்வேறானவை. CA மிக அதிகமாக சம்பாதிக்கிறார். பொறியாளரான S மருத்துவரான V-யை விட குறைவாக சம்பாதிக்கிறார். ஆசிரியரான R, P-யை விட அதிகமாகவும், S-ஐ விட குறைவாகவும் சம்பாதிக்கிறார். W-ன் மனைவி மிக குறைந்த சம்பளம் வாங்குகிறார். மணமாகாத பெண் வழக்கறிஞர் T. அவர் P-யை விட குறைவாகவும் Q-வை விட மட்டுமே அதிகமாகவும் சம்பாதிக்கிறார். மருந்தாளரின் சம்பளம் மிகவும் குறைந்தது அல்ல. **(M.B.A. 2002)**

1. யார் மிகக் குறைந்த சம்பளம் வாங்குகிறார்?
   (a) P (b) Q (c) P அல்லது Q (d) R
   (e) இவற்றுள் எதுவுமில்லை

2. கீழே உள்ளவற்றுள் எவை கணவன்-மனைவி பார்க்கும் வேலைகள்?
   (a) மருந்தாளர், கட்டிடக் கலை நிபுணர்
   (b) CA, கட்டிடக் கலை நிபுணர்
   (c) பொறியாளர், மருந்தாளர்
   (d) CA, பொறியாளர்
   (e) இவற்றுள் எதுவுமில்லை

3. கீழே உள்ளவற்றுள் எந்த வாக்கியம் தவறு?
   (a) வழக்கறிஞரை விட அதிகமாக கட்டிடக்கலை நிபுணர் சம்பாதிக்கிறார்.
   (b) பொறியாளரை விட ஆசிரியர் குறைவாக சம்பாதிக்கிறார்.
   (c) பொறியாளரை விட மருத்துவர் அதிகமாக சம்பாதிக்கிறார்.
   (d) வழக்கறிஞரை விட மருந்தாளர் அதிகமாக சம்பாதிக்கிறார்.
   (e) இவற்றுள் எதுவுமில்லை

4. P-யின் தொழில் என்ன?
   (a) மருந்தாளர் (b) வழக்கறிஞர் (c) ஆசிரியர்
   (d) தகவல் போதுமானதாக இல்லை (e) இவற்றுள் எதுவுமில்லை

5. மருத்துவரை விட எத்தனை நபர் குறைவாக சம்பாதிக்கின்றனர்?
   (a) இரண்டு (b) மூன்று (c) நான்கு (d) ஐந்து
   (e) இவற்றுள் எதுவுமில்லை

6. குடும்பத்தில் உள்ள மூன்று பெண்கள் யார் யார்?
   (a) PTQ (b) TRQ (c) VTQ
   (d) VTR (e) தகவல் போதுமானதாக இல்லை

தீர்வு. V-யை விட S குறைவாக சம்பாதிக்கிறார். P-யை விட அதிகமாகவும் S-ஐ விட குறைவாகவும் R சம்பாதிக்கிறார். P-யை விட குறைவாக T சம்பாதிக்கிறார்.

எனவே, $S < V$, $P < R < S$, $T < P$.

மேலே உள்ளவற்றை இணைத்தால் கிடைப்பது; $T < P < R < S < V$.

Q-வை விட மட்டுமே T அதிகமாக சம்பாதிப்பதால், Q மிகக் குறைந்த சம்பளம் வாங்குகிறார். ஆனால், W-வின் மனைவி மிகக் குறைந்த சம்பளம் வாங்குகிறார். எனவே, W-வின் மனைவி Q ஆவார்.

எனவே, $Q < T < P < R < S < V$.

S ஒரு பொறியாளர். V ஒரு மருத்துவர், R ஒரு ஆசிரியர், T ஒரு வழக்கறிஞர். எனவே, Q ஒரு மருந்தாளர் அல்லது CA அல்லது கட்டிடக் கலை நிபுணர். Q ஒரு பெண். எந்த பெண்ணும் மருந்தாளரோ அல்லது CA-வோ அல்ல. எனவே, Q ஒரு கட்டிடக் கலை நிபுணர்.

P மற்றும் W முறையே CA மற்றும் மருந்தாளர் ஆனால் CA மிக அதிகமாக சம்பாதிக்கிறார். ஆனால் P மிக அதிகமாக சம்பாதிக்கவில்லை. எனவே, W ஒரு CA மற்றும் அவர் மிக அதிகமாக சம்பாதிக்கிறார். மேலும், Q-வின் கணவர் W. எனவே, அவர் ஒரு ஆண்.

ஆகையால், P ஒரு மருந்தாளர் மற்றும் அவர் ஆண்.

மேலே உள்ள தகவல்களை கீழே உள்ளவாறு அட்டவணைப்படுத்தலாம்:

நபர்	பாலினம்	தொழில்	திருமண நிலை
P	ஆண்	மருந்தாளர்	
Q	பெண்	கட்டிடக் கலை நிபுணர்	W-வின் மனைவி
R	ஆண்/பெண்	ஆசிரியர்	
S	ஆண்/பெண்	பொறியாளர்	
T	பெண்	வழக்கறிஞர்	திருமணமாகாதவர்
V	ஆண்/பெண்	மருத்துவர்	
W	ஆண்	CA	கணவர்

வருமானத்தின் அடிப்படையில்; $Q < T < P < R < S < V < W$.

1. Q மிக குறைந்த சம்பளம் வாங்குகிறார். எனவே, விடை (b).
2. CA-வான W என்பவர் Q-வின் கணவர். அவர் ஒரு கட்டிடக் கலை நிபுணர். ஆகவே, விடை (b)-யாகும்.
3. Q ஒரு கட்டிடக் கலை நிபுணர். அவர் வழக்கறிஞர் T-யை விட குறைவாக சம்பாதிக்கிறார். எனவே, (a) தவறு.
4. P ஒரு மருந்தாளர். விடை (a) ஆகும்.
5. V ஒரு மருத்துவர். எனவே, Q, T, P, R மற்றும் S ஆகிய ஐந்து நபர்கள் V-யை விட குறைவாக சம்பாதிக்கிறார்கள். எனவே, விடை (d) ஆகும்.
6. Q, T மற்றும் R, S மற்றும் V-யில் ஒருவர் பெண்கள். எனவே, விடை (e) ஆகும்.

பயிற்சி 6F

குறிப்புகள் (கேள்விகள் 1–5): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*

(Bank P.O. 2004)

M, K, J, T, R, D மற்றும் W ஆகியோர் ஒரு குடும்பத்தின் ஏழு உறுப்பினர்கள். அவர்களுள் வெவ்வேறு தலைமுறையைச் சேர்ந்த இரண்டு தம்பதிகள் உள்ளனர். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான உணவு பிடிக்கும். சைனீஸ், கான்ட்டினென்டல், தாய், பஞ்சாபி, சவுத் இண்டியன், குஜராத்தி மற்றும் மால்வானி வகை உணவுகள். குடும்பத்தில் உள்ள தாத்தாவுக்கு குஜராத்தி உணவு பிடிக்கும். எந்த ஒரு பெண்ணுக்கும் கான்டினென்டல் அல்லது தாய் உணவு பிடிக்காது. M-ன் மகனான T-க்கு சைனீஸ் உணவு பிடிக்கும். J-ன் மருமகள் W-க்கு சவுத் இண்டியன் உணவு பிடிக்கும். D-யின் தாத்தா K-க்கு பஞ்சாபி உணவு பிடிக்கும். R-ன் அம்மா J-க்கு கான்டினென்டல் உணவு பிடிக்கும்.

1. D-க்கு R என்ன உறவு?
   (a) அப்பா
   (b) சகோதரன்
   (c) மாமா
   (d) தகவல் போதுமானதாக இல்லை
   (e) இவற்றுள் எதுவுமில்லை
2. குடும்பத்தில் எத்தனை ஆண் உறுப்பினர்கள் உள்ளனர்?
   (a) 3 (b) 4 (c) 5
   (d) தகவல் போதுமானதாக இல்லை
   (e) இவற்றுள் எதுவுமில்லை
3. கீழே உள்ள எந்த குழுவில் மூன்று தலைமுறை நபர்கள் உள்ளனர்?
   (a) JRT (b) JRW (c) MRD (d) MWT
   (e) இவற்றுள் எதுவுமில்லை
4. T-க்கு எந்த உணவு பிடிக்கும்?
   (a) குஜராத்தி
   (b) தாய்
   (c) மால்வானி
   (d) தகவல் போதுமானதாக இல்லை
   (e) இவற்றுள் எதுவுமில்லை
5. திருமணமான இரண்டு பெண்களின் விருப்பமான உணவு ஜோடி எது?
   (a) மால்வானி, சவுத் இண்டியன்
   (b) சவுத் இண்டியன், பஞ்சாபி
   (c) பஞ்சாபி, மால்வானி
   (d) தகவல் போதுமானதாக இல்லை
   (e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 6–10): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்;

P, Q, R, S மற்றும் T ஆகிய ஐந்து நபர்கள் உள்ளனர். ஒருவர் கால்பந்து வீரர், ஒருவர் சதுரங்க வீரர் மற்றும் ஒருவர் ஹாக்கி வீரர். P மற்றும் S திருமணமாகாத பெண்கள். அவர்கள் எந்த விளையாட்டிலும் பங்கெடுக்கவில்லை. எந்த ஒரு பெண்ணும் சதுரங்கம் அல்லது

கால்பந்தோ விளையாடவில்லை. திருமணமான ஒரு ஜோடியில் கணவன் T. R-ன் சகோதரர் Q. அவர் சதுரங்க வீரரும் அல்ல. ஹாக்கி வீரரும் அல்ல.

6. யார் கால்பந்து வீரர்?
   (a) P (b) Q (c) R (d) S
   (e) T
7. யார் ஹாக்கி வீரர்?
   (a) P (b) Q (c) R (d) S
   (e) T
8. சதுரங்க வீரர் யார்?
   (a) P (b) Q (c) R (d) S
   (e) T
9. T-யின் மனைவி யார்?
   (a) P (b) Q (c) R (d) S
   (e) இவற்றுள் எதுவுமில்லை
10. மூன்று பெண்கள் முறையே;
    (a) P, Q, R (b) Q, R, S
    (c) P, Q, S (d) P, R, S
    (e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (*கேள்விகள் 11–15*): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*

P, Q, R, S, T, V மற்றும் W ஆகியோர் ஒரு குடும்பத்தின் மூன்று தலைமுறை உறுப்பினர்கள். அவர்களுள் திருமணமான இரண்டு ஜோடிகள் உள்ளனர். முதல் தலைமுறையில் ஒரு ஜோடியும், இரண்டாவது தலைமுறையில் ஒரு ஜோடியும் உள்ளனர். குடும்ப உறுப்பினர்கள் X, Y மற்றும் Z என வெவ்வேறு கார்களில் பயணிக்கிறார்கள். ஒரே காரில் குறைந்தது ஒரு பெண் உள்ளார் மற்றும் மூன்று நபர்களுக்கு மேல் ஒரு காரில் பயணிக்க மாட்டார்கள். பேத்தியான R தாத்தா மற்றும் பாட்டியுடன் பயணிக்கவில்லை. தன் அப்பா T-யுடன் கார் Y-யில் Q பயணிக்கிறார். தன் பேத்தி S உடன் கார் X-ல் V பயணிக்கிறார். தன் மகளுடன் கார் Z-ல் P பயணிக்கிறார்.

11. எந்த காரில் மூன்று நபர்கள் பயணிக்கிறார்கள்?
    (a) X (b) Y
    (c) Z (d) X அல்லது Y
    (e) இவற்றுள் எதுவுமில்லை
12. P-க்கு W என்ன உறவு?
    (a) மாமியார்
    (b) மகள்
    (c) சகோதரி
    (d) தகவல் போதுமானதாக இல்லை
    (e) இவற்றுள் எதுவுமில்லை
13. குடும்பத்தில் எத்தனை பெண் உறுப்பினர்கள் உள்ளனர்?
    (a) மூன்று
    (b) நான்கு
    (c) ஐந்து
    (d) தகவல் போதுமானதாக இல்லை
    (e) இவற்றுள் எதுவுமில்லை
14. T-க்கு S என்ன உறவு?
    (a) பேத்தி (b) மகள்
    (c) சகோதரன்/சகோதரியின் மகள்
    (d) தகவல் போதுமானதாக இல்லை
    (e) இவற்றுள் எதுவுமில்லை
15. கீழே உள்ளவற்றுள் எந்த ஜோடிக்கு திருமணம் ஆகிவிட்டது?
    (a) QR (b) QS
    (c) ST
    (d) தகவல் போதுமானதாக இல்லை
    (e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (*கேள்விகள் 16–20*): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*

(*i*) ஒரு குடும்பத்தில் A, B, C, D, E மற்றும் F என ஆறு உறுப்பினர்கள் உள்ளனர்.
(*ii*) அந்த குடும்பத்தில் மணமான இரண்டு ஜோடிகள் உள்ளனர். உறுப்பினர்கள் மூன்று தலைமுறையைச் சேர்ந்தவர்கள்.
(*iii*) ஒவ்வொரு உறுப்பினருக்கும் பச்சை, மஞ்சள், கருப்பு, சிவப்பு, வெள்ளை, இளஞ்சிவப்பு ஆகியவற்றில் ஒவ்வொரு நிறம் பிடிக்கும்.
(*iv*) எந்த பெண்ணுக்கும் பச்சை அல்லது வெள்ளை நிறம் பிடிக்காது.
(*v*) கருப்பு நிறத்தை விரும்பும் C, E-யின் மருமகள்.
(*vi*) F-ன் சகோதரன் மற்றும் D-யின் மகனுமான B-க்கு இளஞ்சிவப்பு நிறம் பிடிக்கும்.
(*vii*) F-ன் பாட்டி A மற்றும் F-க்கு சிவப்பு நிறம் பிடிக்காது.
(*viii*) கணவனுக்கு பச்சை நிறமும், மனைவிக்கு மஞ்சள் நிறமும் பிடிக்கும்.

16. A-க்கு என்ன நிறம் பிடிக்கும்
    (a) சிவப்பு (b) மஞ்சள்
    (c) சிவப்பு அல்லது மஞ்சள்
    (d) கண்டுபிடிக்க முடியாது
    (e) இவற்றுள் எதுவுமில்லை
17. குடும்பத்தில் எத்தனை ஆண் உறுப்பினர்கள் உள்ளனர்?
    (a) இரண்டு (b) மூன்று
    (c) நான்கு (d) கண்டுபிடிக்க முடியாது
    (e) இவற்றுள் எதுவுமில்லை
18. F-ஐ பொறுத்தவரையில் எது சரி?
    (a) B-யின் சகோதரர்
    (b) B-யின் சகோதரி
    (c) C-யின் மகள்
    (d) B-யின் சகோதரி அல்லது சகோதரர்
    (e) இவற்றுள் எதுவுமில்லை
19. ஒரு ஜோடியின் விருப்பமான வண்ணங்கள் எது?
    (a) சிவப்பு - மஞ்சள் (b) மஞ்சள் - சிவப்பு
    (c) பச்சை - கருப்பு (d) சிவப்பு - கருப்பு
    (e) இவற்றுள் எதுவுமில்லை

20. கீழே உள்ளவற்றுள் எது திருமணமான ஜோடி?
(a) AC
(b) CD
(c) DA
(d) கண்டுபிடிக்க முடியாது
(e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 21–25): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:
(M.A.T. 2005)

(i) 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பம் உள்ளது. A, B, C, D மற்றும் E.
(ii) உறுப்பினர்கள் முறையே மருத்துவர், ஒரு ஆசிரியர், ஒரு வியாபாரி, ஒரு வழக்கறிஞர் மற்றும் ஒரு விவசாயி.
(iii) திருமணமாகாத ஆசிரியர் B, A-யின் மகள்.
(iv) வழக்கறிஞரான E, C-யின் சகோதரன்
(v) குடும்பத்தில் உள்ள திருமணமான ஒரே ஜோடியில் கணவன் C.
(vi) விவசாயியான A இரண்டு மகன்கள் மற்றும் ஒரு திருமணமாகாத மகள் ஆகியோரின் தந்தை.
(vii) A-யின் மருமகள் ஒரு மருத்துவர்.

21. குடும்பத்தில் உள்ள மருத்துவர் யார்?
(a) A (b) B (c) C (d) D

22. கீழே உள்ளவற்றுள் எது ஆண்கள் குழு?
(a) A, B மற்றும் C (b) B மற்றும் D
(c) A, C மற்றும் E (d) A, C மற்றும் D

23. கீழே உள்ளவற்றுள் எது பெண்கள் குழு?
(a) B மற்றும் C (b) B மற்றும் D
(c) D மற்றும் E (d) A, C மற்றும் E

24. கீழே உள்ளவற்றுள் எந்த ஜோடிக்கு திருமணமாகி விட்டது?
(a) AB (b) AD (c) BD (d) CD

25. குடும்பத்தில் யார் வியாபாரி?
(a) A (b) B (c) C (d) D

குறிப்புகள் (கேள்விகள் 26–30): கீழே உள்ள தகவல்களை பொறுத்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:
(A.T.M.A. 2004)

6 நபர்கள் உள்ள ஒரு குடும்பத்தில் X, Y மற்றும் Z ஆகிய மூன்று ஆண்கள் மற்றும் A, B மற்றும் C ஆகிய 3 பெண்கள் உள்ளனர். அந்த ஆறு நபர்கள் ஒரு கட்டிடக் கலை நிபுணர், ஒரு வழக்கறிஞர், ஒரு CA, ஒரு பேராசிரியர், ஒரு மருத்துவர் மற்றும் ஒரு பொறியாளர் உள்ளனர். ஆனால் அதே வரிசையில் இல்லை.

I. இரண்டு மணமான ஜோடிகளும், திருமணமாகாத இரண்டு நபர்களும் உள்ளனர்.
II. A-யின் கணவன் Z அல்ல.
III. மருத்துவர் வழக்கறிஞரை திருமணம் செய்துள்ளார்.
IV. A-யின் அப்பா ஒரு பேராசியர்.
V. Y என்பவர் X-ன் மகன் இல்லை. அவன் கட்டிடக் கலை நிபுணரும் அல்ல பேராசியரும் அல்ல.
VI. C-யின் மருமகள் வழக்கறிஞராவார்.
VII. CA-வுடன் X-க்கு திருமணமாகியுள்ளது.

26. யார் கட்டிடக் கலை நிபுணர்?
(a) A (b) B (c) X (d) Z

27. கீழே உள்ளவர்களுள் யார் திருமணமான ஜோடி?
(a) X மற்றும் B (b) X மற்றும் C
(c) Y மற்றும் A (d) Z மற்றும் A

28. கீழே உள்ளவற்றுள் எந்த நபர் – தொழில் இணை சரியானது?
(a) B — மருத்துவர்
(b) Y — பேராசிரியர்
(c) Z — வழக்கறிஞர்
(d) C — பட்டய கணக்காளர் (CA)

29. கீழே உள்ளவற்றுள் எந்த வாக்கியம் மிகையானது?
(a) I (b) II (c) VI (d) VIII

30. எந்த இரண்டு நபர்களுக்கு திருமணமாகவில்லை?
(a) Y மற்றும் A (b) Y மற்றும் B
(c) Z மற்றும் A (d) Z மற்றும் B

விடைகள் (பயிற்சி 6F)

1. (c)	2. (d)	3. (a)	4. (b)	5. (a)	6. (b)	7. (c)	8. (e)	9. (c)	10. (d)
11. (b)	12. (b)	13. (c)	14. (a)	15. (e)	16. (b)	17. (c)	18. (a)	19. (d)	20. (b)
21. (d)	22. (c)	23. (b)	24. (d)	25. (c)	26. (a)	27. (b)	28. (d)	29. (b)	30. (a)

தீர்வுகள் (பயிற்சி 6F)

கேள்விகள் 1 முதல் 5:
D-யின் தாத்தா K மற்றும் M-ன் மகன் T. எனவே, K மற்றும் M முறையே முதல் மற்றும் இரண்டாம் தலைமுறையை சேர்ந்தவர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் குடும்பத்தில் உள்ள இரண்டு ஜோடிகளின் உறுப்பினர்கள் J-யின் மருமகள் W. எனவே, M-ன் மனைவி W மற்றும் K-யின் மனைவி J. D-யின் தாத்தா K. M மற்றும் W ஆகியோரின் மகன்/மருமகள் D என அர்த்தம். R-ன் அம்மா J என்பது M-ன் சகோதரன்/சகோதரி R என அர்த்தம்.

தாத்தாவான K-க்கு குஜராத்தி உணவு பிடிக்கும்; M-க்கு சைனீஸ் உணவும்; W-க்கு சவுத் இண்டியன் உணவும்; D-க்கு பஞ்சாபி உணவும்; P-க்கு கான்டினென்டல் உணவும் பிடிக்கும். எனவே, J-க்கு மால்வானி அல்லது தாய் உணவு பிடிக்கும். ஆனால், பெண்ணான அவருக்கு தாய் உணவு பிடிக்காது. எனவே, J-க்கு மால்வானி உணவு பிடிக்கும். ஆகையால், T-க்கு தாய் உணவு பிடிக்கும்.

R-க்கு கான்டினென்டல் உணவு பிடிப்பதால், R ஒரு ஆண் மேலே உள்ள தகவல்களை கீழே உள்ளவாறு அட்டவணைப்படுத்தலாம்:

நபர்	பாலினம்	விருப்ப உணவு	தலைமுறை	உறவு
K	ஆண்	குஜராத்தி	1-வது	M மற்றும் R-ன் அப்பா D மற்றும் T-யின் தாத்தா
J	பெண்	மால்வானி	1-வது	K-யின் மனைவி
M	ஆண்	சைனீஸ்	2-வது	K மற்றும் J-யின் மகன்
W	பெண்	சவுத் இண்டியன்	2-வது	M-ன் மனைவி
R	ஆண்	கான்டினென்டல்	2-வது	M-ன் சகோதரன்
D	ஆண்/பெண்	பஞ்சாபி	3-வது	M & W-வின் மகன்/மகள்
T	ஆண்	தாய்	3-வது	M-ன் மகன்

1. M-ன் சகோதரர் R. D-யின் அப்பா M. எனவே, D-யின் மாமா R.
2. D-யின் பாலினத்தைக் கண்டுபிடிக்க முடியாது.
3. J 1-வது தலைமுறையைச் சேர்ந்தவர்; R 2-வது மற்றும் T 3-வது தலைமுறையைச் சேர்ந்தவர்கள்.
4. T-க்கு தாய் உணவு பிடிக்கும்.
5. திருமணமான பெண்கள் J மற்றும் W. அவர்களுக்கு மால்வானி மற்றும் சவுத் இண்டியன் உணவுகள் பிடிக்கும்.

கேள்விகள் 6 முதல் 10:

Q ஹாக்கி வீரரும் அல்ல. சதுரங்கம் விளையாடுபவரும் அல்ல. எனவே, Q ஒரு கால்பந்து வீரர். அவர் பெண்ணாக இருக்க முடியாது. T ஒரு கணவன் (பெண் அல்ல). எனவே, அவர் சதுரங்கம் விளையாடுபவர். R ஹாக்கி விளையாடுபவராக இருக்க வேண்டும் மற்றும் அவர் பெண். அவர் T-யின் மனைவி. தகவல்களை கீழே உள்ளவாறு அட்டவணைப்படுத்தலாம்.

நபர்	பாலினம்	விருப்பமான விளையாட்டு	உறவு
P	பெண்	இல்லை	மணமாகவில்லை
Q	ஆண்	கால்பந்து	R-ன் சகோதரர்
R	பெண்	ஹாக்கி	T-யின் மனைவி
S	பெண்	இல்லை	மணமாகவில்லை
T	ஆண்	சதுரங்கம்	R-ன் கணவர்

6. Q கால்பந்து வீரர்.
7. R ஹாக்கி வீரர்
8. T சதுரங்கம் விளையாடுபவர்.
9. T-யின் மனைவி R.
10. P, R மற்றும் S ஆகியோர் பெண்கள்.

கேள்விகள் 11 முதல் 15:

R மற்றும் S பேத்திகள். V அவர்களின் பாட்டி எனவே, R, S இருவரும் 3-வது தலைமுறை. P-க்கு ஒரு மகள் இருப்பதால் இரண்டாம் தலைமுறை ஜோடியில் P மனைவியாவார். Q மற்றும் T இரண்டு ஆண்களும் கார் Y-யில் பயணம் செய்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு காரிலும் ஒரு பெண்ணாவது இருக்க வேண்டும். T-யின் மகன் Q. T இரண்டாம் தலைமுறை எனில், P-யின் கணவன் T மற்றும் R, S ஆகியோரின் சகோதரன் Q. எனவே, V-யின் கணவன் W. கார் Y-யில் Q மற்றும் T-யுடன் சேர்த்து மூன்றாவதாக உள்ள பெண் P-யாகவோ (அவர் கார் Z-ல் பயணம் செய்கிறார்), V-யாகவோ (அவர் கார் X-ல் பயணம் செய்கிறார்), S ஆகவோ (அவர் கார் X-ல் பயணம் செய்கிறார்) அல்லது R ஆகவோ (அவர் தனது அம்மா P-யுடன் கார் Z-ல் பயணம் செய்கிறார்) இருக்க முடியாது. எனவே, அவர் W-ஆக இருக்க வேண்டும். ஆனால், W ஒரு ஆண். இது மாறுபாடாக உள்ளது. எனவே, T, 1-வது தலைமுறை மற்றும் Q, 2-வது தலைமுறையைச் சேர்ந்தவர்கள்.

ஆகவே, V-யின் கணவர் T, T மற்றும் V-யின் மகன் Q, மற்றும் P-யின் கணவர் Q. W ஒரு பெண். எனவே, P மற்றும் Q-வின் மகள் அவர் Q மற்றும் T அவர்களுடன் கார் Y-யில் W-வையோ அல்லது R-ஐ கொண்டிருக்கலாம். R தனது தாத்தாவுடன் (கார் T-யில் பயணம் செய்கிறார்) பயணம் செய்யவில்லை. ஆதலால், Q மற்றும் T கார்

Y-யில் W-வுடன் பயணிக்கிறார்கள். எனவே, கார் Y-யில் Q, T, W பயணம் செய்கிறார்கள்; கார் Z-ல் P மற்றும் R பயணம் செய்கிறார்கள். கார் X-ல் V மற்றும் S பயணம் செய்கிறார்கள்.

11. கார் Y-யில் Q, T மற்றும் W பயணம் செய்கிறார்கள்.
12. P-யின் மகள் W.
13. பெண் நபர்கள் முறையே V, P, W, R மற்றும் S.
14. V-யின் பேத்தி S மற்றும் V-யின் கணவன் T. எனவே, T-யின் பேத்தி S.
15. திருமணமான ஜோடிகள் TV மற்றும் QP.

கேள்விகள் 16 முதல் 20:

F-ன் பாட்டி A ஆகவே, B மற்றும் F 3-வது தலைமுறை. E-யின் பேத்தி C. எனவே, A மற்றும் E முதல் தலைமுறை ஜோடி. A பாட்டி என்பதால் பெண் மற்றும் E ஒரு ஆண்.

E-யின் பேத்தி C மற்றும் E-யின் மகன் D. ஆகவே, CD என்கிற ஜோடி இரண்டாம் தலைமுறையாகும். C-க்கு கருப்பு, B-க்கு இளஞ்சிவப்பு பிடிக்கும். ஒரு ஜோடியின் விருப்பம் பச்சை மற்றும் மஞ்சள். எனவே, A-க்கு மஞ்சள் மற்றும் E-க்கு பச்சை பிடிக்கும். F-க்கு சிவப்பு பிடிக்காது. ஆகவே, F-க்கு வெள்ளை மற்றும் D-க்கு சிவப்பு பிடிக்கும்.

F-க்கு வெள்ளை பிடிக்கும். எனவே, அவர் பெண் அல்ல. D-யின் மகன் B. எனவே, ஒரு ஆண்.

16. A-க்கு மஞ்சள் பிடிக்கும்.
17. E, D, B, F ஆகியோர் ஆண்கள்.
18. F மற்றும் B ஆண்கள். இருவரும் D-யின் குழந்தைகள். எனவே, B-யின் சகோதரர் F.
19. D மற்றும் C ஜோடியாகும். D-க்கு சிவப்பும், C-க்கு கருப்பும் பிடிக்கும்.
20. AE மற்றும் CD ஆகியோர் இரண்டு ஜோடிகள்.

கேள்விகள் 21 முதல் 25:

A-யின் திருமணமாகாத பெண் B. C-யின் சகோதரர் E. ஒரு ஆணான C, E-யின் சகோதரர். எனவே, E, C, B ஆகியோரின் அப்பா A. D மட்டுமே எஞ்சியுள்ளார். எனவே, A-யின் மருமகள் A. C கணவர் என்பதால், C-யின் மனைவி D. B ஒரு ஆசிரியர், C ஒரு வழக்கறிஞர், A ஒரு விவசாயி, D ஒரு மருத்துவர். ஆகவே, C ஒரு வியாபாரி.

21. D ஒரு மருத்துவர்.
22. A, C மற்றும் E ஆகியோர் ஆண்கள்.
23. B மற்றும் D ஆகியோர் பெண்கள்.
24. CD ஆகியோர் மட்டுமே ஜோடி.
25. C ஒரு வியாபாரி.

கேள்விகள் 26 முதல் 30:

இரண்டு ஜோடிகள் முறையே மருத்துவர்–வழக்கறிஞர் மற்றும் X – CA. ஒரு பேராசிரியரின் அப்பா A என்பதால், X ஒரு பேராசிரியர். அவரின் மனைவி CA. CA-வின் மருமகள் ஒரு வழக்கறிஞர். ஆகவே, X-ன் மனைவி C மற்றும் அவர் ஒரு CA. ஆகவே, X மற்றும் C-யின் மகன் ஒரு மருத்துவர். X-ன் மகன் Y இல்லை. எனவே, X-ன் மகன் Z. அவர் ஒரு மருத்துவர். Z-ன் அம்மா C. எனவே, Z-ன் மனைவி A அல்லது B ஆவார். ஆனால், X-ன் மகள் மற்றும் Z-ன் சகோதரி A ஆவார். Z-ன் மனைவி B. அவர் ஒரு வழக்கறிஞர். Z ஒரு மருத்துவர். X ஒரு பேராசிரியர். C ஒரு CA, B ஒரு வழக்கறிஞர். ஆகையால், Y ஒரு கட்டிடக்கலை நிபுணர் அல்லது பொறியாளர் ஆவார். எனவே, A ஒரு கட்டிடக் கலை நிபுணர்.

26. A ஒரு கட்டிடக் கலை நிபுணர்.
27. XC மற்றும் ZB ஆகியோர் இரண்டு ஜோடிகள்.
28. C ஒரு CA ஆவார்.
29. தகவல்களை அலசும் பொழுது II-ல் உள்ள நிகழ்வை நாம் பயன்படுத்தவில்லை. எனவே, II மிகையானது.
30. Y மற்றும் A ஆகியோர் திருமணமாகாதவர்கள்.

வகை 7: குழப்பமான கணக்குகள்

இந்த பகுதியில் தீர்ப்பதற்கு முதலில் கடினமாக தோன்றும். ஒரே நேரத்தில் பல விதங்களில் குழப்பமான தகவல்களை கொண்டிருக்கும். கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை தேர்வு எழுதுபவர் நன்கு ஆராய்ந்து தெளிவாக வகைப்படுத்தி பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

பயிற்சி 6G

குறிப்புகள் (கேள்விகள் 1–5): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

A, B, C, D, E மற்றும் F ஆகிய இலக்கியவாதிகளில் இரண்டு நபர்கள் 17-வது நூற்றாண்டையும், மூன்று நபர்கள் 19-வது நூற்றாண்டையும், ஒருவர் 20-ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவர்கள். அவர்களில் நான்கு நபர்கள் சிறந்த கவிஞர்கள், மூன்று நபர்கள் சிறந்த நூலாசிரியர்கள் மற்றும் மூன்று நபர்கள் நாடக கலைஞர்கள் ஒருவர் வங்காள மொழி இலக்கியவாதி, இருவர் ஹிந்தி மொழி இலக்கியவாதிகள், இருவர் மராத்திய மொழி இலக்கியவாதிகள் மற்றும் ஒருவர் தமிழ் மொழி இலக்கியவாதி. 20-ஆம் நூற்றாண்டின் எழுத்தாளர் கவிதைகள் மட்டும் எழுதுவார் மற்றும் அவர் மராத்தி மொழியில் எழுதுவார். மற்றொரு மராத்தி எழுத்தாளர் கவிதை, நூல் மற்றும் நாடகம் எழுதுவார். ஒரு ஹிந்தி எழுத்தாளர் மற்றும் ஒரே தமிழ் எழுத்தாளர் இருவரும் 19-ஆம் நூற்றாண்டை சேர்ந்தவர்கள். முன்னவர் கவிதைகள்

மற்றும் நூல்களும், பின்னவர் நூல் மற்றும் நாடகங்களை எழுதுவார். வங்காள மொழி எழுத்தாளர் 17-ஆம் நூற்றாண்டை சேர்ந்தவர் அவர் கவிதைகள் மட்டும் எழுதுவர். 20-ஆம் நூறாண்டை சேர்ந்தவர் *A*, *B* நாடகங்கள் மட்டுமே எழுதுவார், *C* மராத்தி எழுத்தாளர், *D* ஹிந்தி கவிதை மற்றும் நூல் எழுதுவார் அவர் 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். *E*-யும் 19-ஆம் நூறாண்டைச் சேர்ந்தவர் *F* கவிதைகள் மட்டும் எழுதுவார்.

1. *B* எந்த மொழியில் எழுதுகிறார்?
   (*a*) பெங்காலி (*b*) ஹிந்தி
   (*c*) மராத்தி (*d*) தமிழ்
2. கீழே உள்ளவர்களில் யார் தமிழ் எழுத்தாளர்?
   (*a*) *A* (*b*) *B* (*c*) *E* (*d*) *F*
3. *A* இலக்கியத்தில் எந்த பிரிவில் எழுதுகிறார்?
   (*a*) கவிதை (*b*) நூல்
   (*c*) நாடகம் (*d*) அனைத்தும்
4. கீழே உள்ளவர்களில் யார் பெங்காலி எழுத்தாளர்?
   (*a*) *A* (*b*) *B* (*c*) *E* (*d*) *F*
5. எந்த பிரிவில் *C* எழுதுகிறார்?
   (*a*) கவிதை (*b*) நாடகம்
   (*c*) நூல் (*d*) அனைத்தும்

குறிப்புகள் (*கேள்விகள் 6–10*): *தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:* **(M.B.A. 2006)**

A, *B*, *C*, *D* மற்றும் *E* ஆகிய ஐந்து நகரங்களில், இரண்டு மலைப் பகுதிகள் மற்றவை சமவெளிகள். சமவெளியில் உள்ள இரண்டு நகரங்கள் துறைமுகங்களாகும். ஐந்தில் நான்கு நகரங்கள் தலைநகர்கள் மற்றும் இரண்டு தொழிற்சாலை நகரங்கள். இரண்டு நகரங்களின் மக்கள் தொகை 5 லட்சத்தை விட குறைவு. ஒரு நகரத்தின் மக்கள் தொகை 20 லட்சம் மற்றும் இரண்டு நகரத்தின் மக்கள் தொகையான 50 லட்சத்துக்கும் அதிகம். இரு நகரங்கள் ஒரே அட்ச ரேகையிலும், வேறு இரண்டு நகரங்கள் ஒரே தீர்க்க ரேகையிலும் உள்ளன. இரண்டு துறை முகங்களின் அட்சரேகை மற்றும் தீர்க்க ரேகை வெவ்வேறானவை. ஒரு துறைமுகம் தொழிற்சாலை நகரத்தில் உள்ளது. இரண்டு தொழிற்சாலை நகரங்களின் மக்கள் தொகை 50 லட்சத்திற்கு அதிகம். ஒரு மலைப் பிரதேசத்தின் தீர்க்க ரேகையும், ஒரு தொழிற்சாலை நகரத்தின் தீர்க்க ரேகையும் சமமாகும். மற்றொரு மலைப் பகுதியின் அட்ச ரேகை மற்றும் தீர்க்க ரேகையும் மற்றொரு துறைமுகமும் வெவ்வேறானவை. ஒரு தொழில் நகரம் மலைப்பகுதியும் அல்ல துறைமுகமும் அல்ல. எந்த ஒரு மலைப்பகுதியும் தொழில் நகரம் அல்ல. துறைமுகத்தைப் போல அதே தீர்க்கரேகை கொண்ட மலைப் பகுதி ஒரு தலைநகர் ஆகும். *B* ஒரு மலைப்பகுதி. *A* மற்றும் *E* ஆகியவற்றின் தீர்க்க ரேகைகள் சமம். *E* ஒரு துறைமுகம். *D* மற்றும் *C* ஆகியவற்றின் அட்சரேகைகள் சமம். *D*-யின் மக்கள் தொகை 20 லட்சம் இரண்டு துறைமுகங்களும் தலைநகர்கள் அவற்றுள் ஒன்று தொழில் நகரம்.

6. கீழே உள்ளவற்றுள் எந்த இரு நகரங்களின் மக்கள் தொகை 5 லட்சத்திற்கும் குறைவு?
   (*a*) *D* மற்றும் *A* (*b*) *B* மற்றும் *C*
   (*c*) *A* மற்றும் *B* (*d*) *A* மற்றும் *C*
   (*e*) இவற்றுள் எதுவுமில்லை
7. கீழே உள்ளவற்றுள் எது தலைநகர் அல்ல?
   (*a*) *A* (*b*) *C* (*c*) *D* (*d*) *E*
   (*e*) *B*
8. கீழே உள்ளவற்றுள் எது ஒரு துறைமுகம், தலைநகர் மற்றும் தொழில் நகரம்?
   (*a*) *A* (*b*) *B* (*c*) *C* (*d*) *E*
   (*e*) *D*
9. எந்த இரு நகரங்களின் மக்கள் தொகை 50 லட்சத்திற்கும் கூடுதல்?
   (*a*) *A* மற்றும் *D* (*b*) *B* மற்றும் *E*
   (*c*) *C* மற்றும் *E* (*d*) *C* மற்றும் *D*
   (*e*) *A* மற்றும் *C*
10. கீழே உள்ளவற்றில் எது மலைப்பகுதி மற்றும் ஒரு தலைநகர்?
    (*a*) *B* (*b*) *C*
    (*c*) *E* (*d*) *D*
    (*e*) *A*

குறிப்புகள்: (*கேள்விகள் 11–15*): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*

A, *B*, *C*, *D* மற்றும் *E* ஆகிய ஐந்து பையன்களுள் இரண்டு நபர்கள் நன்றாகவும், ஒருவர் மோசமாகவும், இரண்டு நபர்கள் சராசரியாகவும் படிக்கிறார்கள். இரண்டு நபர்கள் முதுகலை பட்டதாரி வகுப்பிலும், மூன்று நபர்கள் இளங்கலை பட்டதாரி வகுப்பிலும் உள்ளார்கள். ஒருவர் வசதியான குடும்பத்திலிருந்தும், இருவர் நடுத்தர வர்க்கம் மற்றும் மூன்று நபர்கள் ஏழை குடும்பத்திலிருந்தும் வருகின்றனர். ஒருவருக்கு இசையிலும், இரண்டு நபர்களுக்கு நடிப்பிலும் ஒருவருக்கு விளையாட்டிலும் ஆர்வம் உள்ளது. இளங்கலை வகுப்பில் படிப்பவர்களில் இரண்டு நபர்கள் சராசரியாகவும் ஒருவர் மோசமாகவும் படிப்பவர்கள். நடிப்பில் விருப்பம் உள்ள இருவர்களில் ஒருவர் முதுகலை படிப்பில் உள்ளவர். இசையை விரும்புபவர் நடுத்தர-குடும்பத்திலிருந்து வந்தவர். நடிப்பை விரும்பும் இருவரும் உழைப்பாளிகள் அல்ல. நடுத்தர குடும்பத்திலிருந்து வரும் இருவரும் சராசரியாக படிப்பவர்கள். அவர்களில் ஒருவருக்கு நடிப்பில் ஆர்வம் உண்டு. விளையாட்டை விரும்புபவர் ஏழை குடும்பத்திலிருந்து வந்தவர். இசையை விரும்புபவர் உழைப்பாளி. *E* உழைப்பாளி, நன்றாக படிப்பவர், ஏழை குடும்பத்திலிருந்து வந்தவர். அவருக்கு நடிப்பில் ஆர்வம் இல்லை. இசை அல்லது விளையாட்டிலும் ஆர்வம் இல்லை. உழைப்பாளியாக இருந்தும் *C* படிப்பில் மோசமானவர். வசதியான குடும்பத்திலிருந்து வரும் *A* உழைப்பாளி அல்ல. ஆனால் நன்றாக படிப்பவர். *B* உழைப்பாளி மற்றும் நடுத்தர-குடும்பத்திலிருந்து வந்தவர்.

11. விளையாட்டை விரும்புபவர் யார்?
    (*a*) *A* (*b*) *B* (*c*) *C* (*d*) *D*

12. இசையை விரும்புபவர் யார்?
(a) A (b) B (c) C (d) D

13. நடிப்பை விரும்பும் நடுத்தர-குடும்ப மாணவர் யார்?
(a) A (b) B (c) C (d) D

14. முதுகலை வகுப்பில் படிக்கும் பையன்கள் யார் யார்?
(a) A, D (b) A, E (c) B, C (d) D, E

15. உழைப்பாளி ஆனால் சராசரியாக படிக்கும் மாணவர் யார்?
(a) A (b) B (c) C (d) D

குறிப்புகள் (*கேள்விகள் 16–20*): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*

A, B, C, D மற்றும் E ஆகிய ஐந்து நண்பர்கள் உள்ளனர். இருவர் தொழிலதிபர்கள் மற்ற மூவரும் வெவ்வேறு தொழிலில் உள்ளவர்கள். முறையே மருத்துவர், பொறியாளர் மற்றும் வழக்கறிஞர். ஒரு தொழிலதிபர் மற்றும் வழக்கறிஞர் S என்கிற ஒரே இடத்தில் வசிக்கிறார்கள். மற்ற மூவரும் P, Q மற்றும் R என வெவ்வேறு இடங்களில் வசிக்கிறார்கள். ஐவரில் இரண்டு நபர்கள் ஹிந்துக்கள். மீதியுள்ள மூவரும் வெவ்வேறு மதத்தை அதாவது, இஸ்லாமிய, கிறித்துவ மற்றும் சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்கள். வழக்கறிஞர் வயதில் மூத்தவர் மற்றும் தொழிற்சாலை நடத்தும் ஒரு தொழிலதிபர் மிகவும் இளையவர். மற்றொரு தொழிலதிபர் ஒரு துணி வியாபாரி. அவரின் வயது மருத்துவர் மற்றும் வழக்கறிஞர்களின் வயதுகளுக்கு இடைப்பட்ட வயதாகும். D ஒரு துணி வியாபாரி மற்றும் அவர் இடம் S-ல் வகிக்கிறார். E ஒரு இஸ்லாமியர். அவர் R என்கிற இடத்தில் வசிக்கிறார். கிறித்துவரான மருத்துவர் P என்கிற இடத்தில் வசிக்கிறார். B ஒரு சீக்கியர். A ஒரு இந்து. அவர் ஒரு தொழிற்சாலை நடத்துகிறார்.

16. இடம் Q-வில் வசிப்பவர் யார்?
(a) A (b) B
(c) C (d) E

17. E-யின் தொழில் என்ன?
(a) வியாபாரம் (b) பொறியாளர்
(c) வழக்கறிஞர் (d) மருத்துவர்

18. வயதின்படி A மற்றும் C-க்கு இடையில் இருப்பவர் யார்?
(a) வழக்கறிஞர் (b) மருத்துவர்
(c) துணி வியாபாரி (d) பொறியாளர்

19. B-யின் தொழில் என்ன?
(a) வியாபாரம் (b) பொறியாளர்
(c) வழக்கறிஞர் (d) மருத்துவர்

20. C-யின் தொழில் என்ன?
(a) மருத்துவர் (b) வழக்கறிஞர்
(c) பொறியாளர் (d) வியாபாரம்

விடைகள் (பயிற்சி 6G)

1. (b)	2. (c)	3. (a)	4. (d)	5. (d)	6. (c)	7. (e)	8. (d)	9. (c)	10. (e)
11. (c)	12. (b)	13. (d)	14. (b)	15. (d)	16. (a)	17. (b)	18. (d)	19. (c)	20. (a)

தீர்வுகள் (பயிற்சி 6G)

கேள்விகள் 1 முதல் 5:

ஒருவர் 20-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். எனவே, 20-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த A மராத்தி கவிதைகள் எழுதுகிறார். மேலும், D ஹிந்தி கவிஞர் மற்றும் நூலாசிரியர் அவர் 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

இருவர் மட்டுமே மராத்தியர்கள். ஆகவே, மராட்டியரான C கவிதை, நூல் மற்றும் நாடகம் எழுதுகிறார்.

நான்கு நபர்கள் மட்டுமே கவிஞர்கள். ஆகையால், கவிஞரான F, 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெங்காலி. வேறு யாரும் பெங்காலி, மராத்தி மற்றும் வேறு கவிஞர் இல்லை. நாடகம் மட்டுமே எழுதும் B தமிழர் இல்லை. அவர் 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் இல்லை. எனவே, B 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அவர் ஹிந்தி நாடகம் எழுதுபவர். எனவே, E, 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் மற்றும் அவர் தமிழ் நூல் மற்றும் நாடகம் எழுதுபவர். C, 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

1. B ஹிந்தி மொழியில் எழுதுபவர்.
2. E தமிழ் மொழியில் எழுதுபவர்.
3. A கவிதை மட்டுமே எழுதுகிறார்.
4. F பெங்காலி எழுத்தாளர்.
5. கவிதை, நூல், நாடகம் மூன்றையும் C எழுதுகிறார்.

கேள்விகள் 6 முதல் 10:

கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கீழே உள்ளவாறு அலசலாம்:

இரண்டு மலைப்பகுதிகள் உள்ளன.

மூன்று சமவெளிகள். அவற்றுள் இரண்டு துறைமுகங்கள் நான்கு நகரங்கள் தலைநகரங்கள் ஆகும். இரண்டு நகரங்கள் தொழில் நகரங்கள். இரண்டு நகரங்களின் மக்கள் தொகை 5 லட்சத்திற்கும் குறைவு.

ஒரு நகரத்தின் மக்கள் தொகை 20 லட்சம்.

இரண்டு நகரங்களின் மக்கள் தொகை 50 லட்சத்திற்கும் கூடுதல் ஆகும்.

இரண்டு நகரங்கள் ஒரே அட்ச ரேகையில் உள்ளன.

B ஒரு மலைப்பகுதி. *E* ஒரு துறைமுகம். *E*-யைப் போல் சமமான தீர்க்கரேகை கொண்ட *A* துறைமுகமாக இருக்க முடியாது. 20 லட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட *D* ஒரு தொழில் நகரமாக இருக்க முடியாது. எனவே, அது ஒரு துறைமுகம். *E* மற்றும் *D* ஆகியவை துறைமுகங்கள்.

ஒரு துறைமுகம் தொழில் நகரமாகும். ஆனால், அது *D* அல்ல. எனவே, 50 லட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட *E* ஒரு தொழில் நகரமாகும். ஒரு மலைப்பகுதி மற்றும் ஒரு தொழில் நகரத்தின் தீர்க்கரேகை ஒன்றாகும். ஆகவே *E*-யைப் போல அதே தீர்க்க ரேகையை கொண்டுள்ள *E* ஒரு மலைப்பகுதியாகும். *D* மற்றும் *C* ஆகியவற்றின் அட்சரேகை சமம். மற்றும் *D* ஒரு துறைமுகமாகும். எனவே, *C* மலைப்பகுதி இல்லை. ஆகவே மற்றொரு மலைப்பகுதி *B*-யாகும்.

எனவே, *C*, *D*, *E* ஆகியவை சமவெளிகள். ஒரு தொழில் நகரம் மலைப்பகுதியும் அல்ல துறைமுகமும் அல்ல. ஆகவே *C*, 50 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட ஒரு தொழில் நகரமாகும். இரு துறைமுகங்களும் தலை நகரங்கள் ஆகும். ஒரு துறைமுகத்தைப் போல அதே தீர்க்கரேகை கொண்ட மலைப்பகுதி *A*-யும் ஒரு தலை நகராகும். *D*-யின் மக்கள் தொகை 20 லட்சம். *A* மற்றும் *B*-யின் மக்கள் தொகை 5 லட்சத்திற்கும் குறைவாகும். ஒரு மலைப்பகுதி மட்டுமே தலைநகராகும். எனவே மற்றொரு தலைநகர் *C*-யாகும்.

6. *A* மற்றும் *B* ஆகியவற்றின் மக்கள் தொகை 5 இலட்சம்.
7. *B* ஒரு தலைநகராகும்.
8. *E* மற்றும் *D* துறைமுகங்கள். *A*, *C*, *D* ஆகியவை தலைநகரங்கள். *C* மற்றும் *E* தொழில் நகரங்கள். எனவே, *E* ஒரு துறைமுகம், தலைநகர் மற்றும் தொழில் நகரமும் ஆகும்.
9. தொழில் நகரங்களான *C* மற்றும் *E*-யின் மக்கள் தொகை 50 லட்சத்திற்கும் கூடுதலாகும்.
10. *A*, *C*, *D* மற்றும் *E* ஆகியவை தலைநகரங்கள். *A* மற்றும் *B* ஆகியவை மலைப்பகுதிகள். *A* ஒரு மலைப்பகுதி மற்றும் தலைநகரமும் ஆகும்.

கேள்விகள் 11 முதல் 15:

I. *A* மற்றும் *E* படிப்பில் சிறந்தவர்கள்; *C* மோசமாக படிப்பவர். மீதியுள்ள இருவர் *B* மற்றும் *D* சராசரியாக படிப்பவர்கள்.

II. வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர் *A*; ஏழை குடும்பத்தை சேர்ந்தவர் *E*; *B* மற்றும் *D* சராசரியாக படிப்பவர்கள். எனவே, *B* மற்றும் *D* நடுத்தர-குடும்பத்தை சேர்ந்தவர்கள்.
மீதமுள்ளவர் *C* மட்டுமே. எனவே, *C* ஏழை குடும்பத்தை சேர்ந்தவர் (ஏனெனில் இரண்டு நபர்கள் ஏழை குடும்பங்களிலிருந்து வந்தவர்கள்).

III. ஏழை மற்றும் சராசரியாக படிக்கும் இரண்டு மாணவர்கள் இளங்கலை பட்டப்படிப்பில் இருக்கிறார்கள். அதாவது, *B*, *C* மற்றும் *D*. மீதமுள்ள இருவர் அதாவது., *A* மற்றும் *E* முதுகலை பட்டப்படிப்பு படிக்கிறார்கள்.

IV. *B*, *C* மற்றும் *E* ஆகியோர் உழைப்பாளிகள். *A* உழைப்பாளி அல்ல. மொத்த நபர்களுள் இருவர் உழைப்பாளிகள் அல்ல. எனவே, *D*-யும் உழைப்பாளி அல்ல.

V. நடிப்பை விரும்பும் இருவரும் உழைப்பாளிகள் அல்ல. எனவே, *A* மற்றும் *D* நடிப்பில் விருப்பம் உள்ளவர்கள். இசையை விரும்பும் மாணவன் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர். *B* மற்றும் *D* நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் *D* நடிப்பதை விரும்புபவர். *B* இசையை விரும்புவர். *E* எந்த கலையையும் விரும்புபவர் அல்ல. எனவே, *C* விளையாட்டை விரும்புபவர் என்பது தெளிவாகிறது.

11. *C* விளையாட்டை விரும்புவர்.
12. *B* இசையை விரும்புவர்.
13. *D* நடிப்பை விரும்பும் ஒரு நடுத்தர குடும்ப மாணவர்.
14. *A* மற்றும் *E* முதுகலை-பட்டப்படிப்பு படிப்பவர்கள்.
15. *D* உழைப்பாளி அல்ல மற்றும் சராசரியாக படிப்பவர்.

கேள்விகள் 16 முதல் 20:

I. *A* ஒரு இந்து. *E* ஒரு இஸ்லாமியர். மருத்துவர் ஒரு கிறித்துவர். *D* ஒரு துணி வியாபாரி. எனவே, *C* ஒரு கிறித்துவர் மற்றும் *D* ஒரு இந்து.

II. *S* என்கிற இடத்தில் *A* வசிக்கிறார். *R* என்கிற இடத்தில் *E* வசிக்கிறார். ஒரு தொழிலதிபர் அதாவது, *D* மற்றும் ஒரு வழக்கறிஞர் *S* இடத்தில் வசிக்கிறார். *C* ஒரு மருத்துவர் மற்றும் *A* ஒரு தொழிற்சாலைக்கு சொந்தக்காரர். எனவே, *B* வழக்கறிஞர். அவர் *S* என்கிற இடத்தில் வசிக்கிறார். மருத்துவரான *C*, இடம் *P*-யில் வசிக்கிறார். இடம் *Q*-வில் *A* வசிக்கிறார்.

III. *A* ஒரு தொழிற்சாலைக்கு சொந்தக்காரர். *B* ஒரு வழக்கறிஞர். *C* ஒரு மருத்துவர், *D* ஒரு துணி வியாபாரி மற்றும் *E* ஒரு பொறியாளர்.

நபர்	*A*	*B*	*C*	*D*	*E*
தொழில்	தொழிற்சாலைக்கு சொந்தக்காரர்	வழக்கறிஞர்	மருத்துவர்	துணி வியாபாரி	பொறியாளர்
மதம்	இந்து	சீக்கியர்	கிறித்துவர்	இந்து	இஸ்லாமியர்
இடம்	*Q*	*S*	*P*	*S*	*R*

IV. வழக்கறிஞரான B மிக மூத்தவர். தொழிலதிபரான A மிகவும் இளையவர். துணி வியாபாரியான D-யின் வயது மருத்துவர் மற்றும் வழக்கறிஞருக்கு அதாவது, B மற்றும் C-க்கு இடையில் உள்ளது.
எனவே, வயதின் அடிப்படையிலான வரிசை; $B > D > C > E > A$.

16. Q என்கிற இடத்தில் Q வசிக்கிறார்.
17. E ஒரு பொறியாளர்.
18. A மற்றும் C-க்கு இடையே E இருக்கிறார். E ஒரு பொறியாளர்.
19. B ஒரு வழக்கறிஞர்.
20. C ஒரு மருத்துவர்.

கலவை புதிர்கள்

பயிற்சி 6H

குறிப்புகள் (*கேள்விகள் 1–10): தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:* (M.B.A. 2006)
A, B, C மற்றும் D ஆகியோர் பொருட்களை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ளும் நண்பர்கள். ஒன்று ₹ 500 என இரண்டு சதுரங்க பலகைகள் மற்றும் ஒரு ரெக்கார்ட் பிளேயரையும் A வைத்துள்ளார். C-யிடம் ஒரு மிதிவண்டி மற்றும் வாக்மென் உள்ளன. ஒரு கிரிக்கெட் மட்டையின் விலை ₹ 700.
D மற்றும் C இருவரும் B-யிடமிருந்து ஒரு கிரிக்கெட் மட்டையை பெற்றுக் கொண்டனர். ₹ 2,000 மதிப்புள்ள ரெக்கார்ட் பிளேயரை B-க்கு A கொடுத்தார். D-யிடமிருந்து ₹ 1,500 மதிப்புள்ள கேமராவை C பெற்றுக் கொண்டார். C-யிடமிருந்த மிதிவண்டியின் விலை ₹ 1,000 மற்றும் வாக்மென்னின் விலை ₹ 700. ஆரம்பத்தில் B-யிடம் மூன்று கிரிக்கெட் மட்டைகளும், D-யிடம் இரண்டு கேமராக்களும் (அவற்றின் மொத்த விலை ₹ 5,000) இருந்தன. தன்னிடமிருந்த ஒரு சதுரங்க பலகையை C-க்கு கொடுத்து விட்டு அவரின் மிதி வண்டியை A பெற்றுக் கொண்டார். தன்னுடைய வாக்மென்னை D-க்கு C கொடுத்தார்.

1. பொருட்களின் பரிமாற்ற முடிவில் யாரிடம் கிரிக்கெட் மட்டை இல்லை?
   (*a*) A (*b*) B
   (*c*) C (*d*) D
2. தொடக்கத்தில் C-யிடம் இருந்த பொருட்களின் மதிப்பு என்ன?
   (*a*) ₹ 5,000 (*b*) ₹ 3,000
   (*c*) ₹ 2,100 (*d*) ₹ 1,700
3. பொருட்களின் பரிமாற்ற முடிவில், யாரிடமுமே இல்லாத ஒரு பொருள் A-யிடம் இருந்தது அது என்ன?
   (*a*) சதுரங்க பலகை (*b*) மிதிவண்டி
   (*c*) ரெக்கார்ட் பிளேயர் (*d*) வாக்மென்
4. தொடக்கத்தில் யாரிடம் விலை அதிகமான பொருள் இருந்தது?
   (*a*) A (*b*) B (*c*) C (*d*) D
5. பொருட்களின் பரிமாற்றத்தில், யாரிடமிருந்து ஒரு பொருளை B பெற்றார்?
   (*a*) A (*b*) B (*c*) C
   (*d*) இவற்றில் எதுவுமில்லை
6. பொருட்களின் பரிமாற்றத்திற்கு பிறகு B-யிடம் இருந்த பொருள்?
   (*a*) ஒரு ரெக்கார்ட் பிளேயர்
   (*b*) ஒரு கிரிக்கெட் மட்டை
   (*c*) ஒரு ரெக்கார்ட் ப்ளேயர் மற்றும் ஒரு கிரிக்கெட் மட்டை
   (*d*) ஒரு ரெக்கார்ட் ப்ளேயர் மற்றும் ஒரு கேமரா.
7. பொருட்களின் பரிமாற்றத்திற்கு பிறகு, மொத்த மதிப்பு ₹ 1,500 உள்ள பொருட்கள் யாரிடம் உள்ளது?
   (*a*) A (*b*) B (*c*) C (*d*) D
8. பொருட்களின் பரிமாற்றத்திற்கு பிறகு, யாருக்கு மிக நட்டம் ஏற்பட்டது?
   (*a*) D (*b*) A (*c*) C (*d*) B
9. பொருட்களின் பரிமாற்றத்திற்கு பிறகு யாருக்கு இலாபம் கிடைத்தது?
   (*a*) A மற்றும் B (*b*) A மற்றும் D
   (*c*) B மற்றும் C (*d*) C மற்றும் D
10. பரிமாற்றத்திற்கு பிறகு D-யிடம் இருந்த பொருட்கள் என்ன?
    (*a*) ஒரு கிரிக்கெட் மட்டை மற்றும் ஒரு கேமரா
    (*b*) ஒரு கேமரா, ஒரு வாக்மென் மற்றும் ஒரு கிரிக்கெட் மட்டை
    (*c*) ஒரு கிரிக்கெட் மட்டை மற்றும் ஒரு வாக்மென்
    (*d*) ஒரு கேமரா மற்றும் ஒரு வாக்மென்

குறிப்புகள் (*கேள்விகள் 11–13*): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*
A மற்றும் B-யின் வருமானங்களின் கூட்டுத் தொகை C மற்றும் D-யின் இணைந்த வருமானங்களை விட அதிகம். A மற்றும் C-யின் வருமானங்களின் கூட்டுத் தொகை B மற்றும் D-யின் இணைந்த வருமானத்திற்கு சமம். மேலும், A-யின் வருமானம் B மற்றும் B-யின் வருமானங்களின் கூட்டுத் தொகையில் பாதியாகும்.

புதிர்கள் (அல்லது) தரவரிசை அறிதல்

11. யாருடைய வருமானம் மிக அதிகம்?
(a) A (b) B (c) C (d) D

12. கீழே உள்ளவற்றில் எது சரியானது அல்ல?
(a) B-யை விட A-யின் வருமானம் அதிகம்
(b) D-யை விட B-யின் வருமானம் அதிகம்
(c) D-யை விட C-யின் வருமானம் அதிகம்
(d) C-யை விட B-யின் வருமானம் அதிகம்

13. A-யின் வருமானம் ஆண்டுக்கு ₹ 80,000 மற்றும் B மற்றும் D-யின் வருமானங்களின் வித்தியாசம் A-யின் வருமானத்திற்கு சமம் எனில், B-யின் வருமானம்;
(a) ₹ 40,000 (b) ₹ 60,000
(c) ₹ 80,000 (d) ₹ 1,20,000

குறிப்புகள் (கேள்விகள் 14–18): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:
(M.A.T. 1998)

A, B, C, D, E மற்றும் F உறவினர்கள். எந்த இரு உறவினரும் சம வயது உடையவர் அல்ல. ஆனால் அனைவருடைய பிறந்த நாளும் ஒரே தேதியில் வரும். மிக இளையவருக்கு 17 வயது. மிக மூத்தவரான E-க்கு வயது 22. வயதில் B மற்றும் D-க்கு இடையில் F உள்ளார். B-யை விட A வயது அதிகமானவர். D-யை விட C-யின் வயது அதிகம்.

14. கீழே உள்ளவற்றுள் எது சாத்தியம் அல்ல?
(a) D-ன் வயது 20
(b) F-ன் வயது 18
(c) F-ன் வயது 19
(d) F-ன் வயது 20

15. B-யின் வயது 17 எனில், D மற்றும் C-யின் வயதுகள் என்ன?
(a) 18 மற்றும் 19 (b) 19 மற்றும் 21
(c) 18 மற்றும் 20 (d) 18 மற்றும் 21

16. C மற்றும் F ஆகியோரின் வயதுகளுக்கிடையில் இரு உறவினர்களின் வயதுகள் உள்ளன எனில் கீழே உள்ளவற்றில் எது சரி?
(a) F மற்றும் D-யின் வயதுகளுக்கிடையில் A உள்ளார்.
(b) B-யின் வயது 17.
(c) D-யை விட B வயது குறைந்தவர்.
(d) F-ன் வயது 18.

17. C-யை விட A ஒரு வயது மூத்தவர் எனில், வயது அதிகமாகும் அடிப்படையில் ஆறு சகோதரிகளின் சாத்தியமான வரிசை எத்தனை?
(a) 2 (b) 3 (c) 4 (d) 5

18. C-யின் வயது 19 எனில், கீழே உள்ளவற்றுள் எது சரி?
(a) A-யின் வயது 19 மற்றும் D-யின் வயது 21.
(b) B-யின் வயது 19 மற்றும் A-யின் வயது 20.
(c) B-யின் வயது 20 மற்றும் A-யின் வயது 21.
(d) D-யின் வயது 19 மற்றும் B-யின் வயது 21.

குறிப்புகள் (கேள்விகள் 19–22): கீழே உள்ளவற்றை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:
ஐந்து ஒரே மாதிரியான பெட்டிகள் உள்ளன. அவற்றுள் வெவ்வேறு பொருட்கள் உள்ளன. என்னென்ன பொருட்கள் உள்ளன என முத்திரையிடப்பட்டுள்ளது. பொருட்கள் மற்றும் முத்திரையின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பொருட்கள்	முத்திரை
இரண்டு ஊசிகள்	PP
இரண்டு பந்துகள்	BB
இரண்டு கிளிப்புகள்	CC
ஒரு ஊசி மற்றும் ஒரு கிளிப்	PC
ஒரு பந்து மற்றும் ஒரு கிளிப்	BC

எந்த ஒரு பெட்டியும் சரியான முத்திரையை கொண்டிருக்காதவாறு யாரோ ஒருவர் எல்லாவற்றையும் மாற்றி வைத்து விட்டார்.

19. முதலில் திறக்கப்பட்ட பெட்டியில் PP என்கிற முத்திரையும் 2-வதாக திறக்கப்பட்ட பெட்டியில் PC என்கிற முத்திரையும் உள்ளது. கலக்கப்பட்ட நான்கு பொருட்களிலும், ஒன்று ஒரு பந்து எனில், கீழே உள்ளவற்றில் எது சரி?
(a) மற்ற மூன்று பொருட்களில் இரண்டு பந்துகள் இருக்காது.
(b) மற்ற மூன்று பொருட்களில் எந்த ஒரு கிளிப்பும் இருக்காது.
(c) மற்ற மூன்று பொருட்களில் ஒரு கிளிப்பாவது இருக்கும்.
(d) மற்ற மூன்று பொருட்களில் இரண்டு ஊசிகள் இருக்காது.
(e) இவற்றுள் எதுவுமில்லை.

20. முதலில் திறக்கப்பட்ட பெட்டியில் BC என்கிற முத்திரை இருந்தது. பொருட்களில் ஒன்று பந்து எனில், கீழே உள்ளவற்றுள் எது சரி?
(a) மற்றொரு பொருள் ஒரு பந்து அல்லது கிளிப் ஆக இருக்கும்.
(b) BB என்கிற முத்திரை கொண்ட மற்றொரு பெட்டியில் ஒரு பந்து மற்றும் ஒரு கிளிப் இருக்கும்.
(c) மற்றொரு பொருள் பந்தாக இருக்க முடியாது.
(d) மற்றொரு பொருளும் ஒரு பந்தாகும்.
(e) இவற்றுள் எதுவுமில்லை.

21. PC என்கிற முத்திரை கொண்ட பெட்டியில் ஊசியோ, கிளிப்போ இல்லை. PP முத்திரை கொண்ட பெட்டியில் ஊசி எதுவும் இல்லை. CC முத்திரை கொண்ட பெட்டியில் ஒரு கிளிப் மற்றும் ஒரு பந்து உள்ளது. எனில், மீதமிருக்கும் பெட்டிகளில் ஒன்று மட்டுமே திறக்கப்படுமானால், கீழே உள்ளவற்றில் எது சரி?
(a) அந்த பெட்டியில் ஒரு ஊசி மற்றும் ஒரு கிளிப் இருக்கும்.
(b) அதில் ஒரு கிளிப்பாவது இருக்கும்.
(c) அதில் இரண்டு ஊசிகள் இருக்கும்.
(d) அதில் ஒரு ஊசியாவது இருக்கும்.
(e) இவற்றுள் எதுவுமில்லை.

22. *PP* முத்திரை கொண்ட பெட்டியில் இரண்டு கிளிப்புகள், *CC* முத்திரை கொண்ட பெட்டியில் இரண்டு ஊசிகள், *BB* முத்திரை கொண்ட பெட்டியில் ஒரு பந்தாவது இருக்கும் எனில் கீழே உள்ளவற்றுள் எது உண்மையல்ல?

(*a*) *BC* பெட்டியில் ஒரு கிளிப் மற்றும் ஒரு ஊசி இருக்கும்.

(*b*) *BB* பெட்டியில் ஒரு பந்து மற்றும் ஒரு கிளிப் இருக்கும்.

(*c*) *BC* பெட்டியில் இரண்டு பந்துகள் இருக்கும்.

(*d*) *PC* பெட்டியில் இரண்டு பந்துகள் இருக்கும்.

(*e*) *BB* பெட்டியில் ஒரு கிளிப் இருக்கும்.

குறிப்புகள்: கீழே உள்ள தகவல்களைப் பொறுத்து கேள்விகள் 23–29 இருக்கும்:

பிரியா மற்றும் ப்ரமிலா இருவரும் தோழிகள். பிரியாவின் அப்பா பிரேம் ஒரு காவலதிகாரி. பிரமிலாவின் அப்பா சோமேஷ் ஒரு பொறியாளர். பிரேம் மற்றும் சோமேஷ் ஆகியோரின் பொது நண்பர் ரோஹனுக்கு குணால் மற்றும் ரேணு என இரண்டு குழந்தைகள் உள்ளனர். பிரியா மற்றும் குணால் கல்லூரியில் படிப்பவர்கள். பிரமிலா மற்றும் ரேணு வேறொரு கல்லூரியில் ஒரே வகுப்பில் படிப்பவர்கள். பிரமிலா மற்றும் குணால் நன்றாக விவாதிப்பவர்கள். கல்லூரிகளுக்கிடையே நடக்கும் விவாத போட்டிகளில் தங்களது கல்லூரி சார்பாக அவர்கள் பங்கெடுத்துக் கொள்வார்கள். ரேணு கவிதைகள் எழுதுவர். பிரியா ஒரு நல்ல பாடகர். சோமேஷீக்கு தனது மகளின் மேல் மிகுந்த பெருமை உண்டு. அவளது ஓவியத் திறமையை பற்றி தனது நண்பர்களிடம் அடிக்கடி பேசுவார். பிரேம் வசிக்கும் அதே இடத்தில் தொழிலதிபரான ரேணுவின் அப்பா வசிக்கிறார். வேறு இடத்தில் வசிக்கும் சோமேஷ், ரோஹனை விட பிரேமுடன் மிக நெருக்கமாக உள்ளார். மூன்று நபர்களின் குடும்பங்களும் அவர்களுடன் வசிக்கின்றன.

(Hotel Management, 1998)

கீழே உள்ள கேள்விகளில், இரண்டு வாக்கியங்கள் P மற்றும் Q கொடுக்கப்பட்டுள்ளன.
P மற்றும் Q இரண்டும் உண்மை எனில் விடை (a) எனவும், இரண்டில் ஒன்று சரி, ஒன்று தவறு எனில் விடை (b) எனவும், இரண்டும் தவறு எனில் விடை (c) எனவும், வாக்கியங்களிலிருந்து எந்த முடிவுக்கும் வர முடியவில்லை எனில், விடை (d) எனவும் குறிப்பிடு.

23. *P*: பிரியா மற்றும் பிரமிலா வெவ்வேறு கல்லூரிகளில் படிக்கிறார்கள்.
Q: பிரமிலா நன்கு விவாதிப்பவர் மற்றும் சிறப்பான ஓவியர்.

24. *P*: ரோஹன் ஒரு மின்னணு பொறியாளர்
Q: பிரியா மற்றும் ரோஹன் வகுப்பு நண்பர்கள்.

25. *P*: பிரியா மற்றும் ரேணு கல்லூரி தோழிகள்.
Q: பிரமிலாவின் தந்தை பிரியாவின் தந்தையை விட ரேணுவின் தந்தையுடன் நெருங்கிய நட்பில் உள்ளார்.

26. *P*: சோமேஷ் ஒரு கட்டிட பொறியாளர்
Q: பிரியா மற்றும் ரேணு நன்கு விவாதிப்பவர்கள் கல்லூரிகளுக்கிடையேயான விவாதங்களில் தங்களது கல்லூரி சார்பாக கலந்து கொள்வார்கள்.

27. *P*: ரோஹன் ஒரு தொழிலதிபர்.
Q: ரேணு மற்றும் பிரியா ஒரே பகுதியில் வசிக்கிறார்கள்.

28. *P*: பிரமிலாவின் சிறப்பு திறமை அவளது அப்பாவை மிகவும் கவர்ந்துள்ளது.
Q: ரோஜன் மற்றும் சோமேஷ் ஒரே பகுதியில் வசிக்கின்றனர்.

29. *P*: ரோஹன் மற்றும் பிரேம் ஒரே பகுதியில் வசிக்கின்றனர்.
Q: ரேணு மற்றும் குணால் ஒரே பகுதியில் வசிக்கின்றனர்.

மதிப்பெண் பலகை

குறிப்புகள் (கேள்விகள் 30–39): கொடுக்கப்பட்டுள்ள பத்தியை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(M.B.A. 1997)**

ஷார்ஜா சிங்கர் கோப்பை 1996-ன் இறுதி ஆட்டத்தின் முடிவுகள்:

பாகிஸ்தான்: சையத் அன்வர் c ப்ளெமிங் b வாகுவன் 1; அமீர் சோஹில் st ஜெர்மன் b படேல் 16; சாஹித் அப்ரிடி c கிரேட்பேட்ச் b லார்சன் 21; லியாஸ் அஹ்மத் c ப்ளெமிங் b அஸ்டில் 10; சலீம் மாலிக் lbw கைரன் 40; ஆஸம்கான் c கிரேட்பேட்ச் b ஹாரிஸ் 22; மோஹின்கான் lbw கைரன்ஸ் 32 வாசிம் அக்ரம் c வாகுவன் b படேல் 0; சாக்குலைன் முஷ்டாக் lbw ஹாரிஸ் 0; வாகுவர் யூனிஸ் ரன் அவுட் 0; முஷ்டாக் அஹமது நாட்அவுட் 4.

எக்ஸ்ட்ராஸ்: (lb-12, W-2); 14

மொத்தம்: (48.5 ஓவர்களில் ஆல் அவுட்); 160

விக்கெட்டுகள்: 1-4, 2-32, 3-51, 4-63, 5-116, 6-120, 7-120, 8-138, 9-145.

பௌலிங்: வாகுவன் 8-0-33-1; லார்சன் 9-1-22-1; கைரென்ஸ் 9.5-0-24-2; அஸ்டில் 3-0-7-1; ஹாரிஸ் 9-2-32-2; படேல் 10-2-30-2.

நியூசிலாந்து: பிரயான்யங் b அக்ரம் 5; மார்க் கிரேட்பேட்ச் c லியாஸ் b முஷ்டாக் 52; ஆடெம் பரோர் lbw சாக்குலின் 22 நாதென் அஸ்டில் c முஷ்டாக் b சாக்குலின் 8; ஸ்டீபன் ப்ளெமிங் lbw யூனிஸ் 4; கிரிஸ் கைரன்ஸ் lbw அக்ரம் 8; கிரிஸ் ஹாரிஸ் c அப்ரிடி b முஷ்டாக் 2; லீ ஜெர்மன் lbw அக்ரம் 5; தீபக் படேல் lbw அப்ரிடி 1; ஜஸ்டின் வாகுவன் நாட்அவுட் 1; கேவின் லார்ஸன் b அப்ரிடி 0.

எக்ஸ்ட்ராஸ்: (W-5, nb-6); 11

மொத்தம்: (36.5 ஓவர்களில் ஆல் அவுட்); 119

விக்கெட்டுகள்: 1-7, 2-66, 3-81, 4-98, 5-102, 6-11, 7-114, 8-17, 9-119.

பௌலிங்: அக்ரம் 8-1-20-3; யூனிஸ் 8-0-22-1; சாக்குலைன் 8-0-32-2; அப்ரிடி 2.5-0-14-2; முஷ்டாக் 10-0-31-2.

30. நியூசிலாந்தின் பௌலர்களால் எத்தனை பாகிஸ்தானி பேட்ஸ்மென்கள் அவுட் ஆனார்கள்?
(*a*) 0 (*b*) 1
(*c*) 2 (*d*) 3

31. எந்த இருவர் இணைந்து மிக அதிக ரன்கள் எடுத்தனர்?
(*a*) அமிர் சாஹில் மற்றும் சாகித் அப்ரிடி
(*b*) மார்க் கிரேட்பேட்ச் மற்றும் ஆடம் பரோர்
(*c*) மோஹின் கான் மற்றும் ஆசம் கான்
(*d*) சலீம் மாலிக் மற்றும் ஆசம் கான்

32. பௌலிங் திறனை கணக்கிடுவதற்கு ஒரு விக்கெட்டுக்கு எடுத்த ரன்கள் அளவுகோல் எனில், இந்த இறுதி ஆட்டத்தில் எந்த பௌலர் மிகச் சிறப்பாக விளையாடியுள்ளார்?
(*a*) அஸ்டில் (*b*) யூனிஸ்
(*c*) அப்ரிடி (*d*) அகரம்.

33. ஒரு விக்கெட்டுக்கு எத்தனை பால்கள் என்பதை வைத்து பௌலரின் திறனை கணக்கிட்டால், இந்த ஆட்டத்தில் யார் சிறந்த பௌலர்?
(*a*) படேல் (*b*) லார்சன்
(*c*) அப்ரிடி (*d*) அக்ரம்

34. ஒரு விக்கெட்டுக்கு கொடுத்த ரன்களின் அடிப்படையில் எந்த இரு பௌலர்களின் ஆட்டம் சமமாக இருந்தது?
I. ஹாரிஸ் மற்றும் சாக்லைன்
II. அப்ரிடி மற்றும் ஹாரிஸ்
(*a*) I மற்றும் II இரண்டும் சரி
(*b*) I சரி ஆனால் II தவறு
(*c*) I மற்றும் II இரண்டும் தவறு
(*d*) II சரி ஆனால் I தவறு.

35. பாகிஸ்தானின் எந்த பௌலரின் பௌலிங் விக்கெட்டுக்கு போட்ட பந்துகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் மிக மோசமாக இருந்தது?
(*a*) அப்ரிடி
(*b*) யூனிஸ்
(*c*) முஷ்டாக்
(*d*) சாக்குலைன்

36. இந்த ஆட்டத்தில் எத்தனை லெக் பி.ஃபோர் விக்கெட்டுகள் கொடுக்கப்பட்டன?
(*a*) 6 (*b*) 7
(*c*) 8 (*d*) 9

37. ஆட்டத்தில் யார் ரன் அவுட் ஆனார்?
(*a*) வாகுவார் யூனிஸ்
(*b*) ஜஸ்டின் வாகுவன்
(*c*) ஆசம்கான் மற்றும் வாகுவர் யூனிஸ்
(*d*) இவற்றில் எதுவுமில்லை

38. இந்த ஆட்டத்தில் யார் மிக அதிக விக்கெட்டுகள் எடுத்தார்?
I. ஸ்டீபன் ப்ளெமிங்
II. மார்க் க்ரேட்பேட்ச்
III. லிஜஸ் அஹமத்
(*a*) I மற்றும் II சரி ஆனால் III தவறு
(*b*) II மட்டும் சரி
(*c*) II மற்றும் III சரி ஆனால் I தவறு
(*d*) அனைத்தும் சரி

39. கீழே உள்ளவற்றுள் எந்த வாக்கியங்கள் தவறு?
(*a*) பாகிஸ்தானின் கடைசி விக்கெட் ஜோடி 15 ரன்கள் எடுத்தது.
(*b*) இந்த ஆட்டத்தில் இருவர் மட்டுமே ஸ்டம்ப் அவுட் ஆனார்கள்.
(*c*) நியூசிலாந்தின் கடைசி விக்கெட் ஜோடி ரன்கள் எதுவும் எடுக்கவில்லை.
(*d*) நியூசிலாந்தின் 7-வது விக்கெட் ஜோடி எடுத்த ரன்களும் அந்த அணியின் 8-வது விக்கெட் ஜோடி எடுத்த ரன்களும் சமம்.

விடைகள் (பயிற்சி 6H)

1. (*a*)	2. (*d*)	3. (*b*)	4. (*d*)	5. (*a*)	6. (*c*)	7. (*a*)	8. (*b*)	9. (*c*)	10. (*b*)
11. (*b*)	12. (*a*)	13. (*d*)	14. (*a*)	15. (*b*)	16. (*d*)	17. (*a*)	18. (*c*)	19. (*e*)	20. (*d*)
21. (*d*)	22. (*c*)	23. (*a*)	24. (*c*)	25. (*c*)	26. (*d*)	27. (*a*)	28. (*b*)	29. (*a*)	30. (*a*)
31. (*b*)	32. (*d*)	33. (*c*)	34. (*b*)	35. (*b*)	36. (*c*)	37. (*a*)	38. (*a*)	39. (*b*)	

தீர்வுகள் (பயிற்சி 6H)

கேள்விகள் 1 முதல் 10:

பரிமாற்றத்திற்கு முன்

நபர்	பொருள்	மதிப்பு (1-க்கு)	எண்ணிக்கை	மொத்த மதிப்பு (₹)	மொத்த விலை
A	சதுரங்க பலகை	₹ 500	2	₹ 1,000	₹ 3,000
	ரெக்கார்ட் ப்ளேயர்	₹ 2,000	1	₹ 2,000	
B	கிரிக்கெட் மட்டை	₹ 700	3	₹ 2,100	₹ 2,100
C	மிதிவண்டி	₹ 1,000	1	₹ 1,000	₹ 1,700
	வாக்மென்	₹ 700	1	₹ 700	
D	கேமரா 1	₹ 1,500	1	₹ 1,500	₹ 5,000
	கேமரா 2	₹ 3,500	1	₹ 3,500	

பரிமாற்றத்திற்கு பின்

நபர்	பொருள்	மதிப்பு (1-க்கு)	எண்ணிக்கை	மொத்த மதிப்பு	மொத்த விலை
A	மிதிவண்டி	₹ 1,000	1	₹ 1,000	₹ 1,500
	சதுரங்கபலகை	₹ 500	1	₹ 500	
B	ரெக்கார்ட் ப்ளேயர்	₹ 2,000	1	₹ 2,000	₹ 2,700
	கிரிக்கெட் மட்டை	₹ 700	1	₹ 700	
B	கிரிக்கெட் மட்டை	₹ 700	3	₹ 2,100	₹ 2,100
C	கிரிக்கெட் மட்டை	₹ 700	1	₹ 700	₹ 1,700
	கேமரா 1	₹ 1,500	1	₹ 1,500	₹ 2,700
	சதுரங்க பலகை	₹ 500	1	₹ 500	
D	கிரிக்கெட் மட்டை	₹ 700	1	₹ 700	₹ 4,900
	வாக்மென்	₹ 700	1	₹ 700	
	கேமரா 2	₹ 3,500	1	₹ 3,500	

1. பரிமாற்றத்திற்கு பின் *A*-யிடம் கிரிக்கெட் மட்டை இருக்காது.
2. பரிமாற்றத்திற்கு முன் *C*-யிடம் ₹ 1,700 மதிப்புள்ள பொருட்கள் இருந்தன.
3. யாரிடமுமே இல்லாத மிதிவண்டி *A*-யிடம் இருந்தது.
4. தொடக்கத்தில் *D*-யிடம் ₹ 5,000 மதிப்புள்ள விலையுயர்ந்த பொருட்கள் இருந்தன.
5. *A*-யிடமிருந்து *B* ரெக்கார்ட் ப்ளேயரை பெற்றுக்கொண்டார்.
6. பொருட்களின் பரிமாற்றத்திற்கு பின், *B*-யிடம் ஒரு கிரிக்கெட் மட்டை மற்றும் ஒரு ரெக்கார்ட் ப்ளேயர் இருந்தன.
7. பொருட்களின் பரிமாற்றத்திற்கு பின், *A*-யிடம் ₹ 1,500 மதிப்புள்ள பொருட்கள் இருக்கும்.
8. *A* மற்றும் *D*-க்கு மட்டுமே இந்த பரிமாற்றத்தில் நட்டம் ஏற்பட்டது.

   A-க்கு ஏற்பட்ட நட்டம் = ₹(3,000 − 1,500)
   = ₹ 1,500.

   B-க்கு ஏற்பட்ட நட்டம் = ₹(5,000 − 4,900)
   = ₹ 100.

9. பரிமாற்றத்திற்கு பின் *B* மற்றும் *C*-க்கு இலாபம் ஏற்பட்டது.

   B-யின் லாபம் = ₹(2,700 − 2,100) = ₹ 600.

   C-யின் லாபம் = ₹(2,700 − 1,700) = ₹ 1,000.

10. பரிமாற்றத்திற்கு பின் *D*-யிடம் ஒரு கிரிக்கெட் மட்டை, ஒரு வாக்மென் மற்றும் ஒரு கேமரா இருந்தன.

கேள்விகள் 11 முதல் 13:

கொடுக்கப்பட்டுள்ளது; $(A + B) > (C + 1)$ ...(*i*)

$(A + C) = (B + D)$ ...(*ii*)

$A = \frac{1}{2}(B + D)$ ...(*iii*)

$A = \frac{1}{2}(B + D$ என்பதை (*ii*)-ல் புகுத்தினால், கிடைப்பது

$C = \frac{1}{2}(B + D)$.

ஆகவே, $A = C$.

$(A + B) > (C + D)$ மற்றும் $A = C$ என்பதால், $B > D$.

எனவே, (*iii*)-லிருந்து, கிடைப்பது; $B > A$ மற்றும் $B > C$.

11. *B*-க்கு மிக அதிகமான வருமானம் கிடைக்கிறது.
12. *A*-யை விட *B* அதிகம் சம்பாதிக்கிறார். எனவே (*a*) தவறு.

13. $A = 80,000 = \frac{1}{2}(B + D)$ அல்லது $B + D = 2A = 1,60,000$

மேலும், $B - D = A = 80,000$ ...(*iv*)

(*iv*) மற்றும் (*v*)-ஐ கூட்டினால் கிடைப்பது;

$2B = 2,40,000$ அல்லது $B = 1,20,000$.

கேள்விகள் 14 முதல் 18:

கொடுக்கப்பட்டுள்ளது: E மிக மூத்தவர், $A > B$, $C > D$. எனவே, கீழே உள்ள வரிசை சாத்தியம்.

22		21		20		19		18		17	
E	>	A	>	B	>	F	>	C	>	D	...(*i*)
E	>	A	>	C	>	B	>	F	>	D	...(*ii*)
E	>	A	>	B	>	C	>	F	>	D	...(*iii*)
E	>	A	>	C	>	D	>	F	>	B	...(*iv*)
E	>	C	>	D	>	F	>	A	>	B	...(*v*)
E	>	C	>	D	>	A	>	F	>	B	...(*vi*)
E	>	C	>	A	>	B	>	F	>	D	...(*vii*)
E	>	C	>	A	>	D	>	F	>	B	...(*viii*)

14. D-யின் வயது 20. (*v*) மற்றும் (*vi*)-ல். எனவே, (*a*) சாத்தியம்.

F-ன் வயது (*ii*), (*iii*), (*iv*), (*vi*), (*vii*), (*viii*)-ல் 18. எனவே, (*b*) சாத்தியம்.

(*i*) மற்றும் (*v*)-ல் F-ன் வயது 19. எனவே, (*c*) சாத்தியம்.

எந்த ஒன்றிலும் F-ன் வயது 20 அல்ல. எனவே, (*d*) சாத்தியம் அல்ல.

15. (*iv*), (*v*), (*vi*) மற்றும் (*viii*)-ல் B-யின் வயது 17. (*iv*)-ல் D-யின் வயது 19 மற்றும் C-யின் வயது 21. (*viii*)-ல் D-யின் வயது 19 மற்றும் C-யின் வயது 21.

16. (*vi*), (*vii*) மற்றும் (*viii*)-ல் C மற்றும் F ஆகியோருக்கிடையே இரண்டு நபர்களுக்கான இடைவெளி உள்ளது. எனவே, F-ன் வயது 18.

17. (*ii*) மற்றும் (*iv*)-ல் மட்டுமே C-யை விட A ஒரு வயது மூத்தவர்.

18. (*iii*)-ல் தெரிவது; C-க்கு 19 வயது எனில், B-க்கு 20 வயது மற்றும் A-க்கு 21 வயது.

19. ஒரு முக்கியமான முடிவு எடுப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் போதுமானவை. எனவே, முடிவுகள் எதுவும் தொடராது.

20. பெட்டியில் ஒரு பந்து உள்ளதால் பெட்டியில் BB அல்லது BC என முத்திரையிடப் பட வேண்டும். ஆனால், எந்த பெட்டியிலும் சரியான முத்திரை இல்லை என்பதால் அந்த பெட்டியில் BC என முத்திரை இருக்க முடியாது. எனவே, அந்த பெட்டி BB என முத்திரையிடப் பட்டிருக்க வேண்டும். பெட்டியில் உள்ள மற்றொரு பொருளும் பந்தாகும்.

21. PC என முத்திரையிடப்பட்ட பெட்டியில் ஒரு ஊசியோ அல்லது கிளிப்போ இல்லை. எனவே, BB என முத்திரையிடப்பட்ட பெட்டியில் இரண்டு பந்துகள் உள்ளன.

PP என முத்திரையிடப்பட்ட பெட்டியில் ஊசி இல்லை. எனவே, அந்த பெட்டி BC அல்லது CC ஆகும்.

CC என முத்திரையிடப்பட்ட பெட்டியில் ஒரு கிளிப் மற்றும் ஒரு பந்து உள்ளதால் அந்த பெட்டி BC ஆகும். ஆகவே, PP என முத்திரையிடப்பட்ட பெட்டி CC ஆகும். மீதியுள்ள இரண்டு பெட்டிகள் PP மற்றும் PC ஆகும். எனவே, எந்த பெட்டியை திறந்தாலும், அதில் ஒரு ஊசி இருக்கும்.

22. PP என்கிற பெட்டியில் இரண்டு கிளிப்புகள் இருப்பதால், அது CC என இருக்க வேண்டும்.

CC என்கிற பெட்டியில் இரண்டு ஊசிகள் இருப்பதால், அது PP என இருக்க வேண்டும்.

BB என்கிற பெட்டியில் ஒரு பந்து உள்ளது. எந்த பெட்டியிலும் சரியான முத்திரை இல்லாததால், அந்த பெட்டி BC என இருக்க வேண்டும்.

PC மற்றும் BC ஆகிய பெட்டிகள் மீதமுள்ளன. அவை முறையே BB மற்றும் PC என இருக்க வேண்டும்.

எந்த பெட்டியிலும் சரியான முத்திரை இல்லாத்தால், PC என்கிற பெட்டி BB எனவும், BC என்கிற பெட்டி PC எனவும் இருக்க வேண்டும். எனவே, BC பெட்டியில் ஒரு ஊசி மற்றும் ஒரு கிளிப் இருக்க வேண்டும்.

ஆகவே, (*c*) தவறு.

23. பிரியா மற்றும் குணால் ஒரே கல்லூரியிலும், பிரமிலா மற்றும் ரேணு வெவ்வேறு கல்லூரிகளில் ஒரே வகுப்பில் இருந்தார்கள். ஆகையால், P சரியாகும். பிரமிளா ஒரு நல்ல விவாதி மற்றும் சோமேஷின் மகள் (பிரமிலா) சிறப்பாக வரைபவர். எனவே, Q-வும் சரியானது.

24. ரேணுவின் அப்பா ரோஹன் ஒரு தொழிலதிபர். எனவே, P தவறு.

மேலும், பிரியா மற்றும் குணால் கல்லூரி நண்பர்கள். எனவே, Q-வும் தவறானது.

25. பிரியா மற்றும் ரேணு வெவ்வேறு கல்லூரிகளில் படிக்கிறார்கள். ஆகவே, P தவறு. பிரமிலாவின் தந்தை சோமேஷ், ரேணுவின் தந்தை ரோஹனை விட பிரியாவின் தந்தை பிரேமுடன் நெருக்கமாக உள்ளார். எனவே, Q-வும் தவறு.

26. சோமேஷ் ஒரு பொறியாளர் என குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் ஒரு கட்டிட பொறியாளர் என கண்டிப்பாக கூற முடியாது.

மேலும், பிரமிலா மற்றும் குணால் நன்கு விவாதிப்பவர்கள் எனவே, Q தவறு.

27. கொடுக்கப்பட்டுள்ள தகவலின்படி, ரேணுவின் அப்பா ரோஹன் ஒரு தொழிலதிபர். ஆகையால், P சரி மேலும், ரேணுவின் அப்பா மற்றும் பிரேம் ஒரே இடத்தில் வசிக்கிறார்கள் என கொடுக்கப்பட்டுள்ளது. ரேணு மற்றும் பிரேமின் மகள் பிரியா ஒரே இடத்தில் வசிக்கிறார்கள். ஆகவே, Q-வும் சரி.

28. தனது மகள் பிரமிலாவின் வரையும் திறனைப் பற்றி அவள் தந்தை சோமேஷீக்கு மிகவும் பெருமை. எனவே, P சரியாகும்.

மேலும், ரேணுவின் அப்பா ரோஹன் மற்றும் பிரேம் ஒரே பகுதியில் வசிக்கிறார்கள். சோமேஷ் வேறு பகுதியில் வசிக்கிறார். எனவே, Q தவறு.

29. P சரியானது என்பது தெளிவு.

மேலும், ரேணு மற்றும் குணால் இருவரும் ரோஹனின் குழந்தைகள் மற்றும் அவர்கள் ஒரே பகுதியில் வசிக்கிறார்கள். எனவே, Q-வும் சரி.

30. நியூசிலாந்தின் எந்த பௌலரும் பாகிஸ்தானின் எந்த ஒரு பேட்ஸ்மென்னையும் அவுட் செய்யவில்லை.

31. பாகிஸ்தானின் "விக்கெட் இழப்பு" பகுதியிலிருந்து தெரிவது, 2-வது மற்றும் 3-வது வீரர்கள் அதாவது, அமீர் சாஹில் மற்றும் சாஹித் அப்ரிடி இணைந்து (32 − 4) = 28 ரன்கள் எடுத்தார்கள்; 5-வது மற்றும் 6-வது வீரர்கள் அதாவது; சலீம் மாலிக் மற்றும் ஆசம் கான் இணைந்து (116 − 63) = 53 ரன்கள் எடுத்தார்கள். 6-வது மற்றும் 7-வது வீரர்கள் அதாவது, ஆசம்கான் மற்றும் மோஹின் கான் இணைந்து (120 − 116) *அதாவது.*, 4 ரன்கள் எடுத்தார்கள்.

அதேபோல், நியூசிலாந்து அணியில், 2-வது மற்றும் 3-வது வீரர்கள் அதாவது, மார்க் கிரேட்பெட்ச் மற்றும் ஆடம் பரோர் இணைந்து (66 − 7) *அதாவது.*, 59 ரன்கள் எடுத்தார்கள்.

32. ஒரு விக்கெட்டுக்கு குறைந்த ரன்களை கொடுக்கும் பௌலர் மிக சிறந்த ஆட்டக்காரர் ஆவார். 'பௌலிங்' பிரிவிலிருந்து நாம் தெரிந்து கொள்வது;

அஸ்டில் $= \frac{7}{1} = 7$; யூனிஸ் $= \frac{22}{1} = 22$;

அப்ரிடி $= \frac{14}{2} = 7$; அக்ரம் $= \frac{20}{3} = 6.67$.

33. ஒரு விக்கெட்டுக்கு குறைந்த ரன்களை கொடுக்கும் பௌலர் மிக சிறந்த ஆட்டக்காரர் ஆவார்.

'பௌலிங்' பிரிவிலிருந்து நாம் தெரிந்து கொள்வது;

பேடே $1 = \frac{10 \text{ ஓவர்கள்}}{2 \text{ விக்கெட்கள்}} = \frac{60 \text{ பந்துகள்}}{2 \text{ விக்கெட்கள்}}$

$= 30$ பந்துகள்/விக்கெட்.

லார்சன் $= \frac{9 \text{ ஓவர்கள்}}{1 \text{ விக்கெட்}} = 54$ பந்துகள்/விக்கெட்.

அப்ரிடி $= \frac{2.5 \text{ ஓவர்கள்}}{2 \text{ விக்கெட்கள்}} = \frac{15 \text{ பந்துகள்}}{2 \text{ விக்கெட்கள்}}$

$= 7.5$ பந்துகள்/விக்கெட்.

அக்ரம் $= \frac{8 \text{ ஓவர்கள்}}{3 \text{ விக்கெட்கள்}} = \frac{48 \text{ பந்துகள்}}{3 \text{ விக்கெட்கள்}}$

$= 16$ பந்துகள்/விக்கெட்.

34. 'பௌலிங்' பகுதியிலிருந்து நாம் தெரிந்து கொள்வது;

ஹாரிஸ் $= \frac{32}{2} = 16$; சாக்குலைன் $= \frac{32}{2} = 16$;

அப்ரிடி $= \frac{14}{2} = 7$.

ஆகவே, ஹாரிஸ் மற்றும் சாக்குலைனின் செயல்பாடுகள் சமமாக இருக்கிறது.

35. ஒரு விக்கெட்டுக்கு அதிக ரன்களை கொடுக்கும் பௌலர் மிக மோசமான பௌலர் ஆவார்.

ஒரு விக்கெட்டுக்கு பௌலர்கள் கொடுத்த பால்கள் முறையே;

அப்ரிடி $= \frac{2.5 \text{ ஓவர்கள்}}{2 \text{ விக்கெட்கள்}} = \frac{15 \text{ பந்துகள்}}{2 \text{ விக்கெட்கள்}}$

$= 7.5$ பந்துகள்/விக்கெட்;

யூனிஸ் $= \frac{8 \text{ ஓவர்கள்}}{1 \text{ விக்கெட்}} = 48$ பந்துகள்/விக்கெட்;

முஷ்டாக் $= \frac{10 \text{ ஓவர்கள்}}{2 \text{ விக்கெட்கள்}} = \frac{60 \text{ பந்துகள்}}{2 \text{ விக்கெட்கள்}}$

$= 30$ பந்துகள்/விக்கெட்;

சாக்குலைன் $= \frac{8 \text{ ஓவர்கள்}}{2 \text{ விக்கெட்கள்}} = \frac{48 \text{ பந்துகள்}}{2 \text{ விக்கெட்கள்}}$

$= 24$ பந்துகள்/விக்கெட்.

36. 8 நிகழ்வுகளில் 8 லெக் பிபோர் விக்கெட்டுகள் (lbw) கொடுக்கப்பட்டுள்ளன. சலீம் மாலிக், மோஹின் கான், சாக்குலைன் முஷ்டாக், ஆடம் பரோர், ஸ்டீபன் ப்ளெமிங், கிரிஸ் கைரன்ஸ், லீ ஜெர்மன் மற்றும் தீபக் படேல்.

37. அந்த ஆட்டத்தில் ரன் அவுட் ஆன ஒரே வீரர் வாகுவர் யூனிஸ்.

38. பாகிஸ்தானின் ஸ்கோரிலிருந்து தெரிவது, சையத் அன்வர் மற்றும் லிஜத் அஹமது இருவரது காட்சுகளையும் ஸ்டீபன் பிளெமிங் எடுத்தார். *அதாவது*, 2 காட்சுகள்.

சாஹித் அப்ரிடி மற்றும் ஆசம்கான் ஆகியவரின் விக்கெட்டுகளை மார்க் கிரேக் பெட்ச் பிடித்தார். *அதாவது*, 2 கேட்சுகள்.

நியூசிலாந்தின் ஸ்கோரிலிருந்து தெரிவது,

கிரேக்பெட்ச்சின் காட்ச்சை லிஜத் அஹமத் பிடித்தார். *அதாவது*, 1 காட்ச் மட்டும்.

39. ஆட்டத்தில் ஒருவர் மட்டுமே (அமீர் சோஹில்) ஸ்டம்ப் அவுட் ஆனார்.

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன்

பயிற்சி

குறிப்புகள் (கேள்விகள் 1–5): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*

M, N, O, P, Q, R, S மற்றும் *T* ஆகிய எட்டு பெட்டிகள் ஒன்றின் மேல் ஒன்றாக ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டியதில்லை அடுக்கப்பட்டுள்ளன. *M* மற்றும் *T*-க்கு இடையே மூன்று பெட்டிகள் உள்ளன. பல தடவை *M* என்கிற பெட்டி மேலாகவோ, கீழாகவோ அடுக்கப்பட்டுள்ளது. *N*-க்கு உடனடி மேலாக பெட்டி *O* உள்ளது. *T* பெட்டிக்கு உடனடி கீழாக பெட்டி *S* உள்ளது *R* மற்றும் *S*-க்கு இடையே இரண்டு பெட்டிகள் உள்ளன. *M* மற்றும் *R*-க்கு இடையே இரண்டு பெட்டிகளுக்கு மேல் இல்லை. *O* மற்றும் *P*-க்கு இடையே மூன்று பெட்டிகளுக்கு மேல் உள்ளன.

[SBI PO Exam, 2021]

1. கீழிலிருந்து மூன்றாவது இடத்தில் உள்ள பெட்டி எது?
   (a) *S* (b) *Q*
   (c) *O* (d) *R*
   (e) இவற்றில் எதுவுமில்லை
2. *O* மற்றும் *Q*-க்கு இடையே எத்தனை பெட்டிகள் உள்ளன?
   (a) ஒன்றுமில்லை (b) ஒன்று
   (c) நான்கு (d) இரண்டு
   (d) இவற்றில் எதுவுமில்லை
3. *P* மற்றும் *S* பெட்டிகளுக்கு இடையே உள்ள பெட்டிகளின் எண்ணிக்கை ____ மற்றும் *R* பெட்டிகளுக்கு இடையே உள்ள பெட்டிகளின் எண்ணிக்கைக்கு சமம்?
   (a) *M* (b) *Q* (c) *N* (d) *T*
   (e) *O*
4. *O*-க்கு மேலே உள்ள பெட்டிகளின் எண்ணிக்கை எந்த பெட்டிக்கு கீழே உள்ள பெட்டிகளின் எண்ணிக்கைக்கு சமம்?
   (a) *R* (b) *Q*
   (c) *P* (d) *T*
   (e) இவற்றில் எதுவுமில்லை
5. ஐந்தில் நான்கு ஒரு குறிப்பிட்ட விதத்தில் ஒன்றாக உள்ளன. அவை ஒரு குழுவை உருவாக்குகின்றன கீழே உள்ளவற்றில் எது அந்த குழுவில் இல்லை?
   (a) *M* மற்றும் *Q* (b) *P* மற்றும் *T*
   (c) *R* மற்றும் *S* (d) *Q* மற்றும் *O*
   (e) *N* மற்றும் *Q*

குறிப்புகள் (கேள்விகள் 6–10): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*

ஒரு நிறுவனத்தில் எட்டு பணியாளர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு வங்கியில் வெவ்வேறு பதவிகளில் உள்ளனர். முறையே, சேர்மன், *CFO*, *GE*, *DGM*, *AGM*, மேனேஜர், ஜீனியர் மேனேஜர் மற்றும் கிளார்க். எல்லா பதவிகளும் கொடுக்கப்பட்டுள்ளது போலவே எடுத்துக் கொள்ள வேண்டும் (சேர்மென் என்பது மிக உயர்ந்த பதவி மற்றும் கிளார்க் சிறிய பதவி). *B*-யை விட இருவர் மட்டுமே பதவியில் மூத்தவர்கள். *B* மற்றும் *G*-க்கு நடுவில் ஒரு பதவி உள்ளது. *G*-யை விட பதவி குறைவாக உள்ள நபர்களின் எண்ணிக்கை *C*-யை விட பதவி கூடுதலாக உள்ள நபர்களின் எண்ணிக்கைக்கு சமம். *H* என்பவர் *E*-க்கு பதவியில் மூத்தவர் மற்றும் *C*-யை விட பதவியில் குறைந்தவர். *H* மற்றும் *F*-க்கு இடையே நான்கு பதவிகள் உள்ளன. *A*-யை விட பதவியில் குறைந்தவர் *D*.

[SBI Clerk Exam, 2020]

6. *H*-ஐ விட பதவி குறைந்தவர்கள் எத்தனை பேர்?
   (a) யாருமில்லை
   (b) ஒன்று
   (c) நான்கு நபர்களை விட கூடுதல்
   (d) நான்கு
   (e) மூன்று
7. கீழே உள்ள ஐவருள் நால்வர் ஒரு குறிப்பிட்ட வகையில் ஒன்றாக ஒரு குழுவை அமைக்கிறார்கள். அந்த குழுவில் கீழே உள்ளவற்றுள் எது சேராது?
   (a) *A-F* (b) *B-A* (c) *H-D* (d) *G-A*
   (e) *E-H*
8. *A* மற்றும் *D*-க்கு இடையே எத்தனை பதவிகள் இடைவெளிகள் உள்ளன?
   (a) மூன்றை விட அதிகம்
   (b) இரண்டு
   (c) மூன்று
   (d) ஒன்று
   (e) இல்லை
9. கீழே உள்ளவர்களுள் யார் *B*-க்கு அடுத்து பதவி மூத்தவர்?
   (a) *A* (b) *D*
   (c) *C* (d) *E*
   (e) இவற்றில் எதுவுமில்லை
10. கீழே உள்ளவற்றுள் யார் *AGM*?
    (a) *F* (b) *B*
    (c) *G* (d) *D*
    (e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 11–15): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*

A, B, C, D, E, F, G மற்றும் *H* ஆகிய எட்டு நபர்கள் சில பொருட்களை ஒருவர் மாற்றி ஒருவர் வாங்குகின்றனர். அதே வரிசையில் வாங்குகிறார்கள் என அவசியமில்லை. *F*-க்கு முன்னால் குறைந்தது இருவர் பொருட்களை வாங்குகிறார்கள். *D* மற்றும் *F*-க்கு இடையே ஒருவர்

வாங்குகிறார். *H*-க்கு முன்னால் *C* வாங்குகிறார். *C* மற்றும் *D*-க்கு இடையே ஒருவர் வாங்குகிறார். *E*-க்கு முன்னால் *A* பொருள் வாங்குகிறார். *G*-க்கு முன்னால் மற்றும் *E*-க்கு பின்னால் *G* பொருள் வாங்குகிறார்.

[SBI Clerk Exam, 2020]

11. *D*-க்கு பின்னால் எத்தனை நபர்கள் பொருள் வாங்கினார்கள்?
   (*a*) யாருமில்லை
   (*b*) இரண்டு
   (*c*) மூன்று நபர்களை விட அதிகம்
   (*d*) ஒன்று
   (*e*) இவற்றில் எதுவுமில்லை

12. *G*-க்கு பிறகு உடனடியாக யார் பொருள் வாங்குகிறார்?
   (*a*) *E* (*b*) *F*
   (*c*) *B* (*d*) *C*
   (*e*) இவற்றில் எதுவுமில்லை

13. அனைத்து நபர்களையும் அகர வரிசைப்படி *A*-யிலிருந்து இடமிருந்து வலமாக அமைத்தால், எத்தனை நபர்கள் ஒரே பதவியில் இருப்பார்கள் (*A* தவிர்த்து)?
   (*a*) ஒன்று (*b*) யாருமில்லை
   (*c*) இரண்டு (*d*) நான்கு
   (*e*) நான்கு நபர்களை விட அதிகம்

14. *D* மற்றும் *F*-க்கு இடையே கீழே உள்ளவற்றுள் யார் பொருள் வாங்கினார்?
   (*a*) *E* (*b*) *B* (*c*) *A* (*d*) *H*
   (*e*) இவற்றில் எதுவுமில்லை

15. *E* மற்றும் *C*-க்கு இடையே எத்தனை நபர்கள் வாங்குகிறார்கள்?
   (*a*) ஐந்து (*b*) நான்கு
   (*c*) மூன்று (*d*) யாருமில்லை
   (*e*) இரண்டு

குறிப்புகள் (கேள்விகள் 16–20): தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

A, *B*, *C*, *D*, *E*, *F*, *G* மற்றும் *H* ஆகிய எட்டு நபர்கள் முறையே நான்கு நபர்கள் ஒவ்வொருவர் ஒவ்வொரு மூலையிலும் மற்ற நான்கு நபர்கள் ஒவ்வொரு பக்கத்தின் நடுவில் ஒருவர் எனவும் ஒரு செவ்வக வடிவ மேஜையை சுற்றி உட்கார்ந்திருக்கிறார்கள். மூலையில் அமர்ந்திருக்கும் நபர் மேஜையின் நடுப்பக்கத்திற்கு வெளிப்புறம் பார்த்தவாறும், மேஜையின் நடுப்பக்கம் அமர்ந்திருக்கும் நபர் மேஜையின் நடுப்பக்கத்தைப் பார்த்தவாறும் அமர்ந்திருக்கிறார்கள். எதிரெதிர் பக்கம் உட்கார்ந்திருப்பவர்கள் ஒருவருக்கொருவர் எதிரெதிராக பார்த்தவாறு உட்கார்ந்திருக்கிறார்கள்.

மேஜையின் ஒரு பக்கத்தின் நடுவில் *F* உட்கார்ந்திருக்கிறார். *F* மற்றும் *E*-க்கு நடுவில் இரண்டு நபர்கள் அமர்ந்திருப்பார்கள். *F* மற்றும் *C*-க்கு நடுவில் ஒரு நபர் உட்கார்ந்திருக்கிறார். *C*-க்கு அருகில் *E* அமரவில்லை. *H*-க்கு இடது புறம் 2-வதாகவோ அல்லது *H*-ன் வலப்புறம் 2-வதாக *A* உட்கார்ந்திருக்கிறார். *A* மற்றும் *C*-க்கு இடையே ஒரு நபர் அமர்ந்துள்ளார். *B* மற்றும் *G* ஒருவருக்கொருவர் எதிரெதிராக அமர்ந்துள்ளார். *B*-யின் இடப்புறம் 2-வதாக *D* அமர்ந்துள்ளார். *F*-க்கு அடுத்ததாக *G* அமரவில்லை. **[IBPS PO Exam, 2019]**

16. ஐந்து நபர்களில் நால்வர் ஒரு வகையில் ஒரே மாதிரி இருக்கிறார்கள். அவர்கள் ஒரு குழு அமைக்கிறார்கள். கீழே உள்ளவர்களுள் அந்த குழுவில் யார் இடம் பெற மாட்டார்கள்?
   (*a*) *E* (*b*) *G* (*c*) *D* (*d*) *H*
   (*e*) *B*

17. *D*-யின் வலப்புறம் 3-வதாக யார் அமர்ந்துள்ளார்?
   (*a*) *E* (*b*) *H* (*c*) *C* (*d*) *A*
   (*e*) *G*

18. *G*-யை பொறுத்து *F*-ன் இடம் என்ன?
   (*a*) வலப்புறம் 3-வது (*b*) வலப்புறம் 2-வது
   (*c*) இடப்புறம் 2-வது (*d*) இடப்புறம் 3-வது
   (*e*) இவற்றில் எதுவுமில்லை

19. *D*-யின் வலப்புறம் எண்ணுகையில் *D* மற்றும் *F*-க்கு இடையில் எத்தனை நபர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள்?
   (*a*) ஒன்று (*b*) யாருமில்லை
   (*c*) இரண்டு (*d*) மூன்று
   (*e*) நான்கு

20. கீழே உள்ளவற்றுள் *C*-யைப் பார்த்து யார் அமர்ந்துள்ளார்?
   (*a*) *H* (*b*) *B* (*c*) *G* (*d*) *E*
   (*e*) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 21–25): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

K, *L*, *M*, *N*, *O*, *P*, *Q* மற்றும் *R* ஆகிய எட்டு நபர்கள் ஒரு வரிசையில் அமர்ந்துள்ளனர். சில நபர்கள் வடக்கு நோக்கியும் சில நபர்கள் தெற்கு நோக்கியும் அமர்ந்துள்ளனர். *M*-ன் வலப்புறம் ஐந்தாவதாக *N* அமர்ந்துள்ளார். யாரும் கடைசி முனையில் அமரவில்லை. *N*-ன் வலப்புறம் மூன்றாவதாக *Q* அமர்ந்துள்ளார். *Q*-வின் வலப்புறம் இரண்டாவதாக *L* அமர்ந்துள்ளார். *L* மற்றும் *P* இருவருக்கிடையில் ஒரு நபர் அமர்ந்துள்ளார். *P*-யின் இடது பக்கம் மூன்றாவதாக *R* அமர்ந்துள்ளார். *O*-வின் இடதுபுறம் இரண்டாவதாக *K* அமர்ந்துள்ளார். இருவரும் இரண்டு முனைகளில் ஒருவருக்கொருவர் எதிர் நோக்கி அமர்ந்துள்ளனர். *M*-க்கு உடனடுத்து அமர்ந்திருக்கும் இருவர் ஒரே திசை நோக்கி அமர்ந்துள்ளனர். *L*-க்கு இடப்புறம் *R* அமர்ந்துள்ளார். இருவரும் ஒருவருக்கொருவர் எதிரெதிர் திசையில் அமர்ந்துள்ளனர். வடக்கு திசை நோக்கி *R* அமரவில்லை. **[IBPS PO Exam, 2018]**

21. கீழே உள்ளவர்களுள் *R*-க்கு வடப்புறம் மூன்றாவதாக யார் அமர்ந்துள்ளார்?
   (*a*) *Q* (*b*) *K* (*c*) *M* (*d*) *N*
   (*e*) இவற்றில் எதுவுமில்லை

புதிர்கள் (அல்லது) தரவரிசை அறிதல்

22. வரிசையின் கடைசியில் எந்த ஜோடி உள்ளனர்?
(a) Q, L (b) R, K
(c) O, P (d) L, R
(e) இவற்றில் எதுவுமில்லை

23. K-யின் வலப்புறம் எத்தனை நபர்கள் உள்ளனர்?
(a) இரண்டு
(b) மூன்று நபர்களுக்கு மேல்
(c) மூன்று
(d) ஒன்று
(e) இவற்றில் எதுவுமில்லை

24. Q-வின் வலதுபுறம் இரண்டாவதாக யார் அமர்ந்துள்ளார்?
(a) L (b) N (c) M (d) O
(e) இவற்றில் எதுவுமில்லை

25. கீழே உள்ளவர்களில் நால்வர் ஒரே வகையில் ஒரே மாதிரி உள்ளனர். அவர்கள் ஒரு குழு அமைக்கின்றனர். கீழே உள்ளவர்களுள் யார் அந்த குழுவில் இடம் பெறவில்லை?
(a) K (b) N (c) R (d) O
(e) P

குறிப்புகள் (கேள்விகள் 26–30): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:
ஒன்றிலிருந்து எட்டாவது தளம் வரை S, T, U, V, W, X, Y மற்றும் Z ஆகிய எட்டு நபர்கள் வசிக்கிறார்கள். தரைத்தளம் எண் 1 மற்றும் மேல் தளம் எண் 8. ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. X ஒற்றை இலக்க தளத்தில் இருக்கிறார். ஆனால் 3-வது தளத்தில் அல்ல. X-ன் கீழ் உடனடி தளத்தில் Z வசிக்கிறார். Z மற்றும் Y-க்கு இடையே இருவருக்கு மேல் வசிக்கிறார்கள். S மற்றும் Y-க்கு இடையே ஆறு நபர்கள் இருக்கிறார்கள். W-க்கு உடனடி மேல் தளத்திலும் ஆனால் T-க்கு கீழ் தளத்திலும் V வாழ்கிறார். X-க்கு மேல் தளத்தில் U வசிக்கவில்லை. Y-க்கு உடனடி மேல் தளத்தில் W வசிக்கவில்லை. **[IBPS CLERK Exam, 2017]**

26. 5-வது எண் தளத்தில் யார் வசிக்கிறார்?
(a) U (b) S (c) Z (d) T
(e) இவற்றில் எதுவுமில்லை

27. W மற்றும் X-க்கு இடையில் எத்தனை நபர்கள் வசிக்கிறார்கள்?
(a) ஒன்று (b) மூன்று
(c) ஐந்து (d) இரண்டு
(e) இவற்றில் எதுவுமில்லை

28. V-க்கு உடனடி மேல் தளத்தில் யார் வசிக்கிறார்?
(a) Z (b) T (c) Y (d) W
(e) இவற்றில் எதுவுமில்லை

29. ஐவரில் நால்வர் ஒரே மாதிரி இருக்கிறார்கள். கொடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி அவர்கள் ஒரு குழுவை அமைக்கிறார்கள். கீழே உள்ளவர்களுள் யார் அந்த குழுவில் இருக்க மாட்டார்கள்?
(a) Y (b) V (c) T (d) X
(e) W

30. 2-வது தளத்தில் யார் வசிக்கிறார்கள்?
(a) X (b) S (c) U (d) Z
(e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 31–35): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.
வெவ்வேறு மதிப்பு கொண்ட வெவ்வேறு எட்டு ரூபாய் நோட்டுகள் அதாவது, 1, 5, 20, 50, 100, 200, 500, 2,000 உள்ளன. அதே வரிசையில் இல்லாமல் அனைத்தும் வட்ட வடிவில் மையத்தைச் சுற்றி அடுக்கப்பட்டுள்ளன. 200 ரூபாய் நோட்டின் வலப்புறமாக 2-வது இடத்தில் 50 ரூபாய் நோட்டு உள்ளது. 200 மற்றும் 50 ரூபாய் நோட்டுகளுக்கு உடனடுத்து ஒற்றைபடை நோட்டுகள் வராது. 1 ரூபாய் நோட்டு தவிர 100 ரூபாய் நோட்டுக்கு உடனடுத்து இடது புறமாக 100 ரூபாய் நோட்டுக்கு குறைவான மதிப்பு கொண்ட நோட்டு மட்டுமே இருக்கும். 5 ரூபாய் நோட்டின் இடதுபுறம் இரண்டாவதாக 100 ரூபாய் நோட்டு இருக்கும். 100 ரூபாய் நோட்டுக்கு இடதுபுறம் இரண்டாவதாக 2,000 ரூபாய் நோட்டு இருக்கும். **[IBPS CLERK Exam, 2017]**

31. 50 ரூபாய் நோட்டின் இடது புறம் உடனடியாக எந்த ரூபாய் நோட்டு இடம் பெறும்?
(a) 100 (b) 2,000 (c) 500 (d) 5
(e) இவற்றில் எதுவுமில்லை

32. 5 ரூபாய் நோட்டின் வலதுபுறம் மூன்றாவதாக எந்த ரூபாய் நோட்டு இடம்பெறும்?
(a) 2,000 (b) 100 (c) 200 (d) 20
(e) இவற்றில் எதுவுமில்லை

33. 50 ரூபாய் நோட்டின் உடனடி இடதுபுறம் உள்ள நோட்டு மற்றும் 500 ரூபாய் நோட்டின் உடனடி வலதுபுறம் உள்ள நோட்டு ஆகியவற்றின் கூட்டுத்தொகை என்ன?
(a) 2,100 (b) 550 (c) 700 (d) 2,200
(e) இவற்றில் எதுவுமில்லை

34. 1 ரூபாய் நோட்டிலிருந்து வலப்புறமாக சுற்றும்பொழுது, 1 மற்றும் 100 ரூபாய் நோட்டுகளுக்கு இடையே எந்த மதிப்பு நோட்டுகள் உள்ளன?
(a) 5 மற்றும் 20 (b) 50 மற்றும் 100
(c) 200 மற்றும் 2,000 (d) 1 மற்றும் 500
(e) இவற்றில் எதுவுமில்லை

35. 2,000 ரூபாய் நோட்டுக்கு வலது புறம் மூன்றாவது எந்த நோட்டு இருக்கும்?
(a) 2,000 (b) 100 (c) 200 (d) 20
(e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 36–38): கேள்விகளை நன்கு படித்து பின் பதிலளிக்கவும்.
மையத்தை நோக்கி ஒரு கடிகார வரிசையில் 10 நபர்களை விட அதிகமாக அமர்ந்துள்ளனர். C-யின் இடது புறம் 3-வதாக B அமர்ந்துள்ளார். D மற்றும் B-க்கு நடுவில் இரண்டு நபர்கள் உள்ளார்கள். E-யின் வலப்புறம்

உடனடியாக *A* அமர்ந்துள்ளார். *C* மற்றும் *E*-க்கு நடுவில் ஒரு நபர் அமர்ந்துள்ளார். *D* மற்றும் *A*-க்கு இடையே இரு நபர்களுக்கு குறைவாக அமர்ந்திருப்பார்கள். *B*-க்கு வலதுபுறம் இரண்டாவதாக *A* அமரவில்லை.

[IBPS PO Mains Exam, 2017]

36. வட்ட வரிசையில் எத்தனை நபர்கள் அமர்ந்துள்ளார்கள்?

(*a*) 14 (*b*) 11 (*c*) 12 (*d*) 13

(*e*) இவற்றில் எதுவுமில்லை

37. *A*-யை ஒப்பிடும் பொழுது *C*-யின் இடம் என்ன?

(*a*) இடதுபுறம் 3-வது (*b*) வலதுபுறம் 3-வது

(*c*) இடதுபுறம் 4-வது (*d*) வலதுபுறம் 5-வது

(*e*) இவற்றில் எதுவுமில்லை

38. கடிகார எதிர் வரிசையில் *B* மற்றும் *A*-க்கு இடையே எத்தனை நபர்கள் அமர்ந்துள்ளார்கள்?

(*a*) 3 (*b*) 4 (*c*) 5 (*d*) 6

(*e*) 7

குறிப்புகள் (கேள்விகள் 39–43): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

ஏழு நபர்கள் ஒரு நேர்க்கோட்டில் அமர்ந்துள்ளார்கள். நான்கு நபர்கள் தெற்கு நோக்கியும் மீதியுள்ளவர்கள் வடக்கு நோக்கியும் அமர்ந்துள்ளனர். அவர்களுக்கு வெவ்வேறு பழங்கள் பிடிக்கும். அதாவது, ஆப்பிள், வாழை, திராட்சை, கொய்யா, கிவி, மாம்பழம் மற்றும் ஆரஞ்சு என பழங்கள் பிடிக்கும். ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டும் என அவசியமில்லை. அந்த ஏழு நபர்களும் அகர வரிசையில் இடமிருந்து வலமாக அமர்ந்துள்ளனர்.

திராட்சையை விரும்பும் நபர் *P*-யின் இடது புறம் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். திராட்சையை விரும்பும் நபர் மற்றும் வாழைப்பழம் விரும்பும் நபர்களுக்கு இடையில் இரண்டு நபர்கள் உள்ளனர். வாழைப்பழத்தை விரும்பும் நபருக்கு அடுத்தபடியாக அமர்ந்திருக்கும் நபர் எதிர் திசையை நோக்கி அமர்ந்துள்ளார் (அதாவது ஒருவர் வடக்கு நோக்கி இருந்தால் மற்றொருவர் தெற்கு நோக்கி இருப்பார்). *Q*-வுக்கு கிவி பிடிக்கும். மாம்பழத்தை விரும்பும் நபர் *Q*-வுக்கு வலப்புறம் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். *R* மற்றும் கொய்யாவை விரும்பும் நபர் ஆகியவர்களுக்கிடையே ஒரு நபர் உள்ளார். வாழைப் பழத்தை விரும்புவரும், ஆப்பிளை விரும்பும் நபரும் அடுத்தடுத்து அமர்ந்துள்ளார். ஆரஞ்சை விரும்பும் நபர், மாம்பழத்தை விரும்பும் நபரின் வலப்புறம் 3-வதாக அமர்ந்துள்ளார். *Q* மற்றும் *R* எதிரெதிர் திசை நோக்கி அமர்ந்துள்ளார் (அதாவது, ஒருவர் வடக்கு நோக்கி அமர்ந்தால் மற்றொருவர் தெற்கு நோக்கி அமர்வார்). வாழைப்பழத்தை விரும்பும் நபர் தெற்கு நோக்கி அமர்ந்துள்ளார். கொய்யாவை விரும்பும் நபர் வடக்கு நோக்கி அமர்ந்துள்ளார். **[IBPS PO Mains Exam, 2017]**

39. கீழே உள்ளவர்களில் யார் வரிசையில் அமர்ந்துள்ளார்?

(*a*) *X* (*b*) *V* (*c*) *O* (*d*) *U*

(*e*) *M*

40. கீழே உள்ளவர்களுள் யார் வடக்கு நோக்கி அமர்ந்துள்ளார்?

(*a*) *R* (*b*) *S* (*c*) *P* (*d*) *Q*

(*e*) *O*

41. *R*-க்கு என்ன பழம் பிடிக்கும்?

(*a*) திராட்சை (*b*) கொய்யா

(*c*) மாம்பழம் (*d*) ஆப்பிள்

(*e*) இவற்றில் எதுவுமில்லை

42. *P*-யுடன் தொடர்புடையது ஆப்பிள் மற்றும் *Q*-வுடன் தொடர்புடையது வாழை எனில், கிவி யாருடன் தொடர்புடையது?

(*a*) *R* (*b*) *S* (*c*) *T* (*d*) *O*

(*e*) இவற்றில் எதுவுமில்லை

43. கீழே உள்ளவற்றுள் எது சரி?

(*a*) *P*-ஆப்பிள் (*b*) *R*-வாழை

(*c*) *S*-ஆரஞ்சு (*d*) *O*-திராட்சை

(*e*) *T*-கொய்யா

குறிப்புகள் (கேள்விகள் 44–48): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

ஒரு சதுர மேஜையை சுற்றி *A*, *B*, *C*, *D*, *W*, *X*, *Y* மற்றும் *Z* ஆகிய எட்டு நண்பர்கள் அமர்ந்துள்ளனர். நான்கு நபர்கள் மூலைக்கு ஒருவர் என நான்கு மூலையிலும் ஒவ்வொரு பக்கத்தின் நடுவில் ஒருவர் என நான்கு பக்கங்களில் நால்வரும் அமர்ந்துள்ளனர். முனைகளில் அமர்ந்திருப்பவர்கள் வெளிப்புறத்தை பார்த்தும் பக்கங்களின் நடுவில் அமர்ந்திருப்பவர்கள் உட்புறத்தைப் பார்த்தும் அமர்ந்திருக்கிறார்கள். மையத்தை நோக்கி அமர்ந்திருக்கும் *A*-க்கு அடுத்து உடனடியாக அமர்ந்திருப்பவர் *C*. *C*-க்கு இடப்புறம் இரண்டாவதாக *W* அமர்ந்திருக்கிறார். *W*-வின் இடப்புறம் நான்காவதாக *Y* அமர்ந்திருக்கிறார். *Y* மற்றும் *D*-க்கு இடையே இரண்டு நபர்கள் அமர்ந்துள்ளனர் (இடது புறம் அல்லது வலது புறத்தில்). *D*-க்கு உடனடுத்து *D* அமரவில்லை. *D*-க்கு வலதுபுறம் இரண்டாவதாக *B* அமர்ந்துள்ளார். *B*-க்கு வலப்புறம் இரண்டாவதாக *X* அமர்ந்துள்ளார். **[IBPS PO Exam, 2017]**

44. *Z*-ன் இடது புறத்திலிருந்து எண்ணப்பட்டால், *Z* மற்றும் *C*-க்கு இடையே எத்தனை நபர்கள் அமர்ந்துள்ளனர்?

(*a*) யாருமில்லை (*b*) ஒன்று

(*c*) இரண்டு (*d*) மூன்று

(*e*) மூன்றை விட அதிகம்

45. *D*-யை ஒப்பிடுகையில் *Y*-யின் இடம் என்ன?

(*a*) வலப்புறத்தில் மூன்றாவது

(*b*) வலப்புறத்தில் இரண்டாவது

(*c*) இடப்புறத்தில் நான்காவது

(*d*) இடப்புறத்தில் மூன்றாவது

(*e*) இவற்றில் எதுவுமில்லை

46. ஐவரில் நால்வர் ஏதோ ஒரு வகையில் ஒரே மாதிரி இருப்பார்கள். அவர்கள் ஒரு குழுவாக அமைவார்கள். கீழே உள்ளவர்களுள் யார் அந்த குழுவைச் சேர்ந்தவர் அல்ல?

எனவே, $AD = BC = 20$ மீ.

ஆகவே, A-யின் மேற்கில் 20 மீ தூரத்தில் D உள்ளது.



படம் 11

12. நமீதாவின் நகர்வுகள் படம் 12-ல் உள்ளபடி (A-யிலிருந்து B, B-யிலிருந்து C, C-யிலிந்து D மற்றும் D-யிலிருந்து E) என இருக்கும். தொடங்கிய இடத்திலிருந்து நமீதாவின் தூரம்

$= AE = (AB + AE) = (AB + CD)$

$= (14 + 10) = 24$ மீ.



படம் 12

13. A-யிலிருது F வரை அந்த நபரின் நகர்வுகள் படம் 13-ல் உள்ளபடி இருக்கும்.

$DC = AB + EF$.

A-யின் பாதையில் F உள்ளது.

மேலும், $AF = (BC - DE) = 5$ மீ.

எனவே, தொடங்கிய இடத்திலிருந்து 5 மீ தூரத்தில் அந்த நபர் உள்ளார்.



படம் 13

14. ராதாவின் நகர்வுகள் படம் 14-ல் உள்ளபடி இருக்கும். தொடக்க புள்ளி O-யிலிருந்து ராதாவின் தூரம்

$OD = (OC - CD) = (AB - CD)$

$= (14 - 4)$ மீ $= 10$ மீ.



படம் 14

15. கோபாலின் நகர்வுகள் A-யிலிருந்து G வரை படம் 15-ல் உள்ளபடி இருக்கும்.

எனவே, கடைசியாக கோபால் FG திசையில் நடக்கிறார் என்பது தெளிவாகிறது.

அதாவது, வடக்கு.



படம் 15

16. A-யிலிருந்து G வரை எலியின் நகர்வுகள் படம் 16-ல் உள்ளபடி இருக்கும். கடைசியாக எலி FG திசையில் அதாவது, வடக்கு நோக்கி நகர்கிறது.



படம் 16

17. அமித்தினுடைய நகர்வுகள் படம் 17-ல் உள்ளபடி (P-யிலிருந்து Q, Q-விலிருந்து R மற்றும் R-லிருந்து S வரை) இருக்கும். தொடக்க புள்ளி P-யிலிருந்து அமித்தின் கடைசியாக நிற்கும் இடம் S தென்-கிழக்கு ஆகும்.



படம் 17

18. புள்ளி T-யிலிருந்து R வரை மாயாவின் நகர்வுகள் படம் 18-ல் உள்ளபடி இருக்கும்.

$\therefore$ T மற்றும் R-க்கிடையே உள்ள தூரம்

$= TR = TU + UR$

$= TU + PW + QV$

$= (4 + 3 + 1)$ அடி

$= 8$ அடி.



படம் 18

19. அந்த கிராமவாசி தனது கிராமத்தில் O என்கிற புள்ளியில் தொடங்கி தனது மாமாவின் கிராமம் A-க்கு பயணித்து, அதன்பின் கிராமம் B-யில் உள்ள தனது மாமனார் வீட்டிற்கு செல்கிறார். (படம். 19)

தெளிவாக, ΔOBA என்பது B-யில் செங்கோண முக்கோணமாக உள்ளது.

ஆகவே, $OA^2 = OB^2 + AB^2$

$\Rightarrow OB^2 = OA^2 - AB^2$

$\Rightarrow OB = \sqrt{(25 - 16)}$ கிமீ $= \left(\sqrt{9}\right)$ கிமீ $= 3$ கிமீ.

எனவே, தொடக்க புள்ளி O-யிலிருந்து B கிழக்கில் 3 கிமீ தூரத்தில் உள்ளது.



படம் 19

20. அந்த நபரின் நகர்வுகள் படம் 20-ல் உள்ளபடி இருக்கும். எனவே, $AB = 3$ கிமீ

$BC = 3AB = (3 \times 3)$ கிமீ $= 9$ கிமீ,

$CD = 5AB = (5 \times 3)$ கிமீ $= 15$ கிமீ.

$AE \perp CD$-யை வரையவும்.

எனில், $CE = AB = 3$ கிமீ மற்றும்

$AE = BC = 9$ கிமீ.

$DE = (CD - CE) = (15 - 3)$ கிமீ $= 12$ கிமீ

ΔAED-யில், $AD^2 = AE^2 + DE^2$

$\Rightarrow AD = (\sqrt{9^2 + (12)^2})$ கிமீ $= \sqrt{225}$ கிமீ $= 15$ கிமீ.

$\therefore$ தேவைப்படும் தூரம் $= AD = 15$ கிமீ.



படம் 20

21. அந்த பெண்ணின் நகர்வுகள் படம் 21-ல் உள்ளபடி இருக்கும். (A-யிலிருந்து B, B-யிலிருந்து C, C-யிலிருந்து D மற்றும் D-யிலிருந்து A) கடைசியாக அவள் DA திசையில் நடக்கிறாள். அதாவது, வட-கிழக்கு.



படம் 21

22. A-யிலிருந்து F வரை சஞ்சீவினுடைய நகர்வுகள் படம் 22-ல் உள்ளபடி இருக்கும். தொடக்க புள்ளி A-யிலிருந்து சஞ்சீவினுடைய தூரம்

$= AF = (AB + BF)$

$= AB + (BE - EF) = AB + (CD - EF)$

$= [10 + (20 - 10)]$ மீ $= (10 + 10)$ மீ $= 20$ மீ.

மேலும், A-க்கு தெற்கில் F உள்ளது. எனவே, தொடக்க புள்ளியிலிருந்து தெற்கில் 20 மீ தூரத்தில் சஞ்சீவ் இருக்கிறார்.



படம் 22

23. காஷிஷின் நகர்வுகள் படம் 23-ல் உள்ளபடி இருக்கும். (A-யிலிருந்து B, B-யிலிருந்து C, C-யிலிருந்து D மற்றும் D-யிலிருந்து E).

$\therefore$ தொடக்க இடத்திலிருந்து காஷிஷின் தூரம்

$A = AE = (AB - BE) = (AB - CD)$

$= (30 - 20)$ மீ $= 10$ மீ.



படம் 23

24. A-யிலிருந்து F வரை அந்த நபரின் நகர்வுக படம் 24-ல் உள்ளது. கடைசி நிலை F ஆ தொடக்கபுள்ளி A-யின் வட-கிழக்கில் உள்ளது.



படம் 24

25. அந்த நபரின் நகர்வுகள் படம் 25-ல் உள்ளபடி இருக்கும்

$\therefore$ தொடக்க புள்ளி A-யிலிருந்து அந்த நபரின் தூரம்

$= AE = (AB + BE) = (AB + CD)$

$= (30 + 20)$ மீ

$= 50$ மீ.



படம் 25

26. ரோஹித்தின் நகர்வுகள் படம் 26-ல் உள்ளபடி இருக்கும்.

$\therefore$ தொடக்க புள்ளி A-யிலிருந்து ரோஹித்தின் தூரம்

$= AE = (AD + DE) = (BC + DE)$

$= (20 + 15)$ மீ $= 35$ மீ.

மேலும், A-யின் கிழக்கில் E உள்ளது.



படம் 26

27. படம் 27-ல் உள்ளபடி சச்சினுடைய நகர்வுகள் இருக்கும். (P-யிலிருந்து B, B-யிலிருந்து C, C-யிலிருந்து D, மற்றும் D-யிலிருந்து Q).

$= PQ = (DQ + PD) = (DQ - BC)$

$= (40 - 30)$ மீ $= 10$ மீ.

மேலும், P-யின் மேற்கில் Q உள்ளது.



படம் 27

28. ரமாகாந்தின் நகர்வுகள் படம் 28-ல் உள்ளபடி இருக்கும்.

கடைசியாக அவர் DE திசையில் நடக்கிறார் என்பது தெளிவு. அதாவது, மேற்கு.



படம் 28

29. அந்த நபரின் நகர்வுகள் படம் 29-ல் உள்ளபடி இருக்கும். (A-யிலிருந்து B, B-யிலிருந்து C, C-யிலிருந்து D, D-யிலிருந்து E).

$DF = BC = 5$ கிமீ.

$EF = (DE - DF) = (9 - 5)$ கிமீ $= 4$ கிமீ.

$BF = CD = 2$ கிமீ.

$AF = AB + BF = AB + CD = (1 + 2)$ கிமீ $= 3$ கிமீ.

தொடக்க புள்ளி A-யிலிருந்து அந்த மனிதனின் தூரம்

$= AE = \sqrt{AF^2 + EF^2} = \sqrt{3^2 + 4^2} = \sqrt{25} = 5$ கிமீ.



படம் 29

30. ராஜ் என்பவரின் நகர்வுகள் படம் 30-ல் காண்பிக்கப்பட்டுள்ளது. (X-லிருந்து Y, Y-யிலிருந்து A, A-யிலிருந்து B, B-யிலிருந்து C)

தொடக்க புள்ளியிலிருந்து ராஜின் தூரம்

$= XC = (XY - YC) = (XY - BA)$

$= (80 - 70)$ மீ $= 10$ மீ.



படம் 30

31. லக்ஷ்மனுடைய நகர்வுகள் படம் 31-ல் காண்பிக்கப்பட்டுள்ளது.

A-யில் உள்ள அவனது வீட்டிலிருந்து அவனின் தூரம்

$= AE = (BE - BA)$

$= (CD - BA)$

$= (25 - 15)$ மீ $= 10$ மீ.



படம் 31

32. லோகேஷின் நகர்வுகள் படம் 32-ல் காண்பிக்கப்பட்டுள்ளது. (A-யிலிருந்து B, B-யிலிருந்து C, C-யிலிருந்து D, D-யிலிருந்து E).

அவன் கடைசியாக நிற்கும் இடம் E. அது அவனது வீடான A-யின் வடக்கு பகுதியில் உள்ளது.



படம் 32

33. ராதிகாவின் நகர்வுகள் படம் 33-ல் உள்ளது போல் இருக்கும். (A-யிலிருந்து B, B-யிலிருந்து C, C-யிலிருந்து D, D-யிலிருந்து A).

கடைசியாக அவள் DA திசையில் அதாவது, வட-மேற்கு திசையில் நகர்கிறாள்.



படம் 33

34. A-யின் நகர்வுகள் படம் 34-ல் உள்ளபடி இருக்கும். (O-விலிருந்து P, P-யிலிருந்து Q, Q-விலிருந்து R, R-லிருந்து S மற்றும் S-லிருந்து T).

$TS = OP + QR$, எனவே, O-வின் கோட்டில் T இருக்கும்.

∴ தொடக்க புள்ளி O-விலிருந்து A-யின் தூரம்

$= OT = (RS - PQ) = (15 - 10)$ மீ $= 5$ மீ.



படம் 34

35. A-யிலிருந்து F வரை ராசிக்கின் நகர்வுகள் படம் 35-ல் உள்ளபடி இருக்கும்.

$CD = AB + EF$. எனவே, A-யின் கோட்டில் F இருக்கும்.

∴ தொடக்கபுள்ளி A-யிலிருந்து ராசிக்கின் தூரம்

$= AF = (AG + GF)$

$= (BC + DE) = (30 + 15)$ மீ $= 45$ மீ.

மேலும், A-யின் கிழக்கில் F உள்ளது.



படம் 35

36. A-யிலிருந்து E வரை குழந்தையின் நகர்வுகள் படம் 35-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

E என்கிற புள்ளியில் குழந்தை தன் தந்தையை சந்திக்கிறது.

$AF = (AB - FB)$

$= (AB - DC) = (90 - 30)$ மீ $= 60$ மீ.

$EF = (DE - DF) = (DE - BC)$

$= (100 - 20)$ மீ $= 80$ மீ.

∴ தேவைப்படும் தூரம்

$= AE = \sqrt{AF^2 + EF^2} = \sqrt{(60)^2 + (80)^2}$

$= \sqrt{3600 + 6400} = \sqrt{10000} = 100$ மீ.



படம் 36

37. ஆதித்யாவின் வீடு கிழக்கு நோக்கி உள்ளது. அவர் வீட்டின் பின்புறத்திலிருந்து நடக்கிறார். இதன் மூலம் அவர் தெற்கு நோக்கி நடக்கிறார் என்பது தெளிவாகிறது. எனவே, ஆதித்யாவின் நகர்வுகள் படம் 37-ல் காண்பிக்கப்பட்டுள்ளது.

தெளிவாக, தொடக்க புள்ளி A-யிலிருந்து வட-மேற்கில் உள்ள D ஆதித்யாவின் கடைசி இடமாகும்.



படம் 37

பயிற்சி 8B

1. ஒரு முக்கிய சாலையில் 150 கிமீ தொலைவில் உள்ள எதிரெதிர் புள்ளிகளிலிருந்து இரண்டு பேருந்துகள் புறப்படுகின்றன. முதல் பேருந்து 25 கிமீ தூரம் ஓடியபின் வலப்புறம் திரும்பி 15 கிமீ ஓடுகிறது. பின் அது இடதுபுறமாக திரும்பி மேலும் 25 கிமீ ஓடியபின் முக்கிய சாலையின் திசை நோக்கி திரும்பி ஓடுகிறது. இடைப்பட்ட நேரத்தில் பேருந்தில் ஏற்பட்ட சிறு பழுதின் காரணமாக இரண்டாவது பேருந்து முக்கிய சாலையில் 35 கிமீ தூரம் ஓடியது. அந்த புள்ளியில் இரண்டு பேருந்துகளுக்கிடையே உள்ள தூரம் என்ன?

(a) 65 கிமீ (b) 75 கிமீ

(c) 80 கிமீ (d) 85 கிமீ

2. X மற்றும் Y ஆகிய இரண்டு நபர்கள் 200 மீ தொலைவில் உள்ள வெவ்வேறு இடங்களிலிருந்து ஒருவரை நோக்கி ஒருவர் பயணிக்க தொடங்கினார்கள். 60 மீ நடந்தவுடன் Y இடது புறம் திரும்பி 20 மீ நடந்தான். பின் வலதுபுறம் திரும்பி 40 மீ தூரம் நடந்தார். பின் அவர் வலது புறமாக திரும்பி அவர் நடக்க தொடங்கிய சாலைக்கு வந்து சேர்ந்தார். X மற்றும் Y இருவரும் ஒரே வேகத்தில் நடந்தால், இருவருக்குமிடையே தற்பொழுது உள்ள தூரம் என்ன? **(M.A.T. 1999)**

(a) 20 மீ (b) 30 மீ

(c) 40 மீ (d) 50 மீ

3. B-யின் தெற்கில் A-யும், B-யின் கிழக்கில் C-யும் நிற்கிறார்கள் எனில், C-க்கு எந்த திசையில் A நிற்கிறார்?

(a) வட-கிழக்கு (b) வட-மேற்கு

(c) தென்-கிழக்கு (d) தென்-மேற்கு

4. B-யின் தென்-மேற்கில் 40 மீ தூரத்தில் A உள்ளார். B-யின் தென்-கிழக்கில் 40 மீ தூரத்தில் C உள்ளார். எனில், A-யின் எந்த திசையில் C உள்ளார்?

(a) கிழக்கு (b) மேற்கு

(c) வட-கிழக்கு (d) தெற்கு

5. P, Q, R மற்றும் T ஆகிய நான்கு நகரங்கள் உள்ளன. P-யின் தென்-மேற்கில் Q, Q-வின் கிழக்கில் மற்றும் P-யின் தென்-கிழக்கிலும் R உள்ளது. R-ன் வடக்கில் T உள்ளது. QP-வின் கோட்டில் (வரிசையில்) R உள்ளது. P-யின் எந்த திசையில் T உள்ளது?

(a) தென்-கிழக்கு (b) வடக்கு

(c) வட-கிழக்கு (d) கிழக்கு

6. ஒன்றுக்கொன்று அருகருகில் உள்ள P, Q, R, S மற்றும் T ஆகிய ஐந்து கிராமங்களுள், Q-வின் மேற்கில் P-யும், P-யின் தெற்கில் R-உம், Q-வின் வடக்கில் T-யும், T-யின் கிழக்கில் S-உம் உள்ளன. எனில், S-க்கு எந்த திசையில் R உள்ளது? **(R.B.I. 2002)**

(a) வட-மேற்கு

(b) தென்-கிழக்கு

(c) தென்-மேற்கு

(d) தகவல் போதுமானதாக இல்லை

(e) இவற்றில் எதுவுமில்லை

7. குழு கலந்துரையாடலுக்காக ஒரு வட்ட மேஜையை சுற்றி சமமான இடைவெளியில் P, Q, R, S, T, U, V, W ஆகிய நபர்கள் அமர்ந்துள்ளனர். அவர்கள் கடிகார திசையில் அமர்ந்துள்ளனர். V வடக்கு நோக்கி அமர்ந்துள்ளார் எனில், S எந்த திசை நோக்கி அமர்ந்துள்ளனர்?

(a) கிழக்கு (b) தென்-கிழக்கு

(c) தெற்கு (d) தென்-மேற்கு

8. கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில், Q-வின் கிழக்கில் 300 கிமீ தூரத்தில் P-யும், O-வின் வடக்கில் 400 கிமீ தூரத்தில் Q-வும் உள்ளது. Q மற்றும் P-யின் மையத்தில் R உள்ளது. Q மற்றும் R-க்கு இடையே உள்ள தூரம் என்ன?

(a) 250 கிமீ

(b) $150\sqrt{2}$ கிமீ

(c) 300 கிமீ

(d) 350 கிமீ



9. ரவி பல்கலைக்கழகத்திற்கு போக வேண்டும். கிழக்கில் இருக்கும் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு சாலைகளின் சந்திப்பிற்கு வந்தார். இடப்பக்கம் உள்ள சாலை ஒரு திரையரங்கில் முடிகிறது. நேராக முன்னால் ஒரு மருத்துவமனை உள்ளது. எனில், பல்கலைக் கழகம் எந்த திசையில் உள்ளது? **(Railways, 1998)**

(a) வடக்கு (b) தெற்கு (c) கிழக்கு (d) மேற்கு

10. ஒரு குழுவின் ஆறு நபர்கள் வரிசையில் அமர்ந்துள்ளனர். D-யின் இடப்பக்கம் A அமர்ந்துள்ளார். ஆனால் E-க்கு வடதுபுறம் உள்ளார். X-க்கு வடப்புறம் ஆனால் F-க்கு இடதுபுறமாக உள்ள B-க்கு இடப்புறமாக C உள்ளார். எந்த இரு நபர்கள் வரிசையின் நடுவில் வலப்புறமாக அமர்ந்துள்ளனர்?

(a) A மற்றும் C (b) C மற்றும் B

(c) D மற்றும் B (d) D மற்றும் C

11. A, B, C மற்றும் D ஆகிய நபர்கள் சீட்டுக்கட்டு விளையாடுகின்றனர். A மற்றும் B கூட்டாளிகள், D வடக்கு நோக்கி அமர்ந்துள்ளார். A மேற்கு நோக்கி அமர்ந்துள்ளார் எனில், தெற்கு நோக்கி யார் அமர்ந்துள்ளார்?

(a) B (b) C (c) D

(d) தகவல் போதுமானதாக இல்லை

12. P, Q, R மற்றும் S ஆகிய நான்கு நபர்கள் கேரம் விளையாடுகின்றனர். P, R மற்றும் S, Q ஆகியோர் கூட்டாளிகள். மேற்கு நோக்கி அமர்ந்துள்ள R-க்கு வலப்புறத்தில் S உள்ளார். எனில் S எந்த திசை நோக்கி அமர்ந்துள்ளார்?

(a) வடக்கு (b) தெற்கு (c) கிழக்கு (d) மேற்கு

13. பராண்டா என்கிற கிராமம் கிரீன் லேக்கில் உள்ளது. மேற்கு பராண்டாவில் அக்ரம் என்கிற நகரம் உள்ளது. டொக்காடா என்கிற இடம் அக்ரமுக்கு கிழக்கில் ஆனால் பராண்டாவின் மேற்கில் உள்ளது. காக்ரான் என்கிற இடம் போப்ரியின் கிழக்கில் ஆனால் டொக்காடா மற்றும் அக்ரம் ஆகியவற்றுக்கு மேற்கில் உள்ளது. அனைத்து இடங்களும் ஒரே மாவட்டத்தில் உள்ளன எனில் எந்த நகரம் மேற்கு திசையில் வெகு தூரத்தில் உள்ளது?

(a) பராண்டா (b) காக்ரான்

(c) அக்ரம் (d) போப்ரி

14. ஒரு வரிசையில் கிழக்கு நோக்கி ஐந்து பையன்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். சமீர், துஷார் மற்றும் சைலேந்திரா ஆகியோரின் இடப்புறமாக தீபக் உள்ளார். சுஷீலின் இடப்புறமாக சமீர், துஷார் மற்றும் சைலேந்திரா உள்ளனர். சமீர் மற்றும் துஷாருக்கு இடையே சைலேந்திரா உள்ளார். இடதுபுறத்திலிருந்து நான்காவதாக துஷார் நிற்கிறார் எனில், வலது புறத்திலிருந்து சமீர் எத்தனையாவதாக நிற்கிறார்?

(a) முதலாவதாக (b) இரண்டாவதாக

(c) மூன்றாவதாக (d) நான்காவதாக

(e) ஐந்தாவதாக

15. இரண்டு பெண்கள் மற்றும் இரண்டு ஆண்கள் சீட்டுக்கட்டு விளையாடுகின்றனர். அவர்கள் ஒரு மேஜையின் வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு திசையில் அமர்ந்துள்ளனர். எந்த ஒரு பெண்ணும் கிழக்கு பார்த்து அமரவில்லை. ஒருவருக்கொருவர் எதிரெதிராக அமர்ந்துள்ள நபர்கள் ஒரே பாலினத்தவர் இல்லை.

ஒரு ஆண் தெற்கு பார்த்து அமர்ந்துள்ளார். பெண்கள் எந்த திசைகளை நோக்கி அமர்ந்துள்ளனர்?

(a) கிழக்கு மற்றும் மேற்கு
(b) தெற்கு மற்றும் கிழக்கு
(c) வடக்கு மற்றும் கிழக்கு
(d) வடக்கு மற்றும் மேற்கு
(e) இவற்றில் எதுவுமில்லை

16. பள்ளிக்கு கிழக்கில் தபால் நிலையமும், பள்ளிக்கு தெற்கில் எனது வீடும் உள்ளது. தபால் நிலையத்தின் வடக்கில் சந்தை உள்ளது. சந்தை மற்றும் தபால், நிலையத்திற்கு இடையே உள்ள தூரமும் எனது வீடு மற்றும் பள்ளிக்கு இடையேயுள்ள தூரமும் சமம் எனில், சந்தையானது பள்ளிக்கு எந்த திசையில் உள்ளது? **(M.A.T. 2005)**

(a) வடக்கு (b) கிழக்கு
(c) வட-கிழக்கு (d) தென்-மேற்கு

குறிப்புகள் (கேள்விகள் 17–19): கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாக படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(M.A.T. 2003)**

A, B, C, D, E, F, G, H மற்றும் *I* ஆகியவை ஒன்பது வீடுகள். *B*-க்கு கிழக்கில் 2 கிமீ தூரத்தில் *C* உள்ளது. *B*-க்கு வடக்கில் 1 கிமீ தூரத்தில் *A* மற்றும் *A*-க்கு தெற்கில் 2 கிமீ தூரத்தில் *H*-ம் உள்ளன. *H*-க்கு மேற்கில் 1 கிமீ தூரத்தில் *G*-யும், *G*-க்கு கிழக்கில் 3 கிமீ தூரத்தில் *D*-யும், *G*-க்கு வடக்கில் 2 கிமீ தூரத்தில் *F*-ம் உள்ளன. *B* மற்றும் *C*-க்கு நடுவில் *I* உள்ளது. *H* மற்றும் *D*-க்கு இடையில் *E* உள்ளது.

17. *E* மற்றும் *G*-க்கு இடையேயுள்ள தூரம்
(a) 1 கிமீ (b) 1.5 கிமீ (c) 2 கிமீ (d) 5 கிமீ

18. *E* மற்றும் *I*-க்கு இடையேயுள்ள தூரம்
(a) 1 கிமீ (b) 2 கிமீ (c) 3 கிமீ (d) 4 கிமீ

19. *A* மற்றும் *F*-க்கு இடையேயுள்ள தூரம்
(a) 1 கிமீ (b) 1.41 கிமீ (c) 2 கிமீ (d) 3 கிமீ

குறிப்புகள் (கேள்விகள் 20–21): கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(NMAT, 2005)**

ஒரு விளையாட்டு மைதானத்தில் தினேஷ், குணால், நிதின், அதுல் மற்றும் பிரசாந்த் ஆகியோர் வடக்கு பார்த்து கீழே விவரித்துள்ளபடி நிற்கிறார்கள்.

(i) அதுலுக்கு வலப்புறமாக 40 மீட்டர் தூரத்தில் குணால் உள்ளார்.
(ii) குணாலுக்கு தெற்கில் 60 மீ தூரத்தில் தினேஷ் உள்ளார்.
(iii) அதுலுக்கு மேற்கில் 25 மீ தூரத்தில் நிதின் உள்ளார்.
(iv) தினேஷ்க்கு வடக்கில் 90 மீ தூரத்தில் பிரசாந்த் உள்ளார்.

20. குணாலுக்கு இடப்புறம் உள்ள நபருக்கு வட-கிழக்கு திசையில் உள்ள நபர் யார்?
(a) தினேஷ் (b) நிதின்
(c) அதுல் (d) நிதின் அல்லது தினேஷ்
(e) இவர்களுள் எவருமில்லை

21. நிதின் இருக்கும் இடத்திலிருந்து தொடங்கி ஒரு பையன் அதுல், குணால், தினேஷ் மற்றும் பிரசாந்த் ஆகியோரை சந்திக்கிறான். எனில், வழி முழுவதுமாக ஒரே தூரத்தில் அவன் நடந்தால், மொத்தமாக எவ்வளவு தூரம் அவன் நடந்துள்ளான்?
(a) 155 மீட்டர்கள் (b) 185 மீட்டர்கள்
(c) 215 மீட்டர்கள் (d) 245 மீட்டர்கள்
(e) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 22–24): இந்த கேள்விகள் கீழே உள்ள தகவல்களை பொறுத்து இருக்கும்: **(N.I.F.T. 2003)**

A, B, C, D, E, F, மற்றும் *G* ஆகிய ஏழு கிராமங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது போல் அமைந்துள்ளன.

B-யின் மேற்கில் 2 கிமீ தூரத்தில் *E* உள்ளது.
A-யின் வடக்கில் 2 கிமீ தூரத்தில் *F* உள்ளது.
A-யின் மேற்கில் 1 கிமீ தூரத்தில் *C* உள்ளது.
G-யின் தெற்கில் 2 கிமீ தூத்தில் *D* உள்ளது.
C-யின் கிழக்கில் 2 கிமீ தூரத்தில் *G* உள்ளது.
B மற்றும் *E*-க்கு நடுவில் (மிகச் சரியான) *D* உள்ளது.

22. எவற்றுக்கு நடுவில் *A* உள்ளது?
(a) *E* மற்றும் *C* (b) *E* மற்றும் *G*
(c) *F* மற்றும் *G* (d) *G* மற்றும் *C*

23. எந்த இரண்டு கிராமங்கள் ஒன்றுக்கொன்று மிக அதிகமான தூரத்தில் உள்ளது?
(a) *D* மற்றும் *C* (b) *F* மற்றும் *E*
(c) *F* மற்றும் *B* (d) *G* மற்றும் *E*

24. காகம் பறக்கும் பொழுது, *F*-லிருந்து *E* எவ்வளவு தூரத்தில் (கிமீ-ல்) உள்ளது?
(a) 4 (b) $\sqrt{20}$ (c) 5 (d) $\sqrt{26}$

25. லோகேஷின் பள்ளியை சென்றடையும் பொழுது அவனுடைய பள்ளி பேருந்து வடக்கு நோக்கி உள்ளது. லோகேஷின் வீட்டிலிருந்து புறப்பட்ட பிறகு அந்த பேருந்து இரண்டு முறை வலது புறம் திரும்பி பள்ளியை அடைவதற்கு முன் இடதுபுறம் திரும்பியது. லோகேஷின் வீட்டிற்கு முன்னால் உள்ள பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் பொழுது அந்த பேருந்து எந்த திசையை நோக்கி இருந்தது?
(a) வடக்கு (b) தெற்கு (c) கிழக்கு (d) மேற்கு
(e) இவற்றுள் எதுவுமில்லை

26. நான் எனது வீட்டிலிருந்து புறப்பட்டு 2 கிமீ தூரம் நேராக நடந்தேன். பிறகு, எனது வலப்புறமாக திரும்பி 1 கிமீ நடந்தேன். மீண்டும் வலப்புறம் திரும்பி 1 கிமீ நடந்தேன். இப்பொழுது நான் எனது வீட்டின் வட-மேற்கு திசையில் உள்ளேன் எனில், முதலில் நான் எந்த திசையில் நடந்தேன்? **(I.I.T.T.M. 2005)**
(a) வடக்கு (b) தெற்கு (c) கிழக்கு (d) மேற்கு
(e) தென்-கிழக்கு

27. 6 கிமீ தூரம் நடந்த பின் நான் எனது வலதுபுறமாக திரும்பி 2 கிமீ தூரம் நடந்து பின் இடதுபுறம் திரும்பி 10 கிமீ தூரம் நடந்தேன். இறுதியாக நான் வடக்கு

திசையில் நடந்து கொண்டிருக்கிறேன். நான் எனது பயணத்தின் தொடக்கத்தில் எந்த திசையில் நடக்க தொடங்கினேன்?

(*a*) வடக்கு (*b*) தெற்கு (*c*) கிழக்கு (*d*) மேற்கு

28. தபால் காரர் ஒருவர் வடக்குதிசையில் தனது முன்னால் உள்ள தபால் நிலையத்திற்கு திரும்புகிறார். தபால் நிலையம் அவர் நிற்கும் இடத்திலிருந்து 100 மீட்டர்கள் தொலைவில் இருக்கும் பொழுது, அவர் தனது இடப்புறமாக திரும்பி 50 மீட்டர்கள் நடந்து சாந்தி வில்லாவில் தான் கொடுக்க வேண்டிய கடைசி கடிதத்தை கொடுப்பதற்காக சென்றார். பின் அதே திசையில் 40 மீட்டர்கள் நடந்து வலப்புறமாக திரும்பி மீண்டும் 100 மீட்டர்கள் நடந்தார். எனில், தபால் நிலையத்திலிருந்து அவர் எத்தனை மீட்டர்கள் தூரத்தில் உள்ளார்?

(*a*) 0 (*b*) 90 (*c*) 150 (*d*) 100

(*e*) இவற்றில் எதுவுமில்லை

29. ஒரு பையன் தனது மிதிவண்டியை வடக்கு திசை நோக்கி ஓட்ட ஆரம்பித்து பின் இடது புறம் திரும்பி 1 கிமீ ஓட்டி மீண்டும் இடது புறம் திரும்பி 2 கிமீ ஓட்டினான். இப்பொழுது அவன் தொடங்கிய இடத்திலிருந்து மேற்கு திசையில் சரியாக 1 கிமீ தூரத்தில் இருக்கிறான். எனில், தொடக்கத்தில் வடக்கில் அவன் எவ்வளவு தூரம் ஓட்டினான்?

(*a*) 1 கிமீ (*b*) 2 கிமீ (*c*) 3 கிமீ (*d*) 5 கிமீ

30. 'தென்-கிழக்கு' என்பது 'கிழக்கு' எனவும், 'வட-மேற்கு' என்பது 'மேற்கு' எனவும் 'தென்-மேற்கு' என்பது 'தெற்கு' எனவும் குறிப்பிடப்பட்டால் 'வடக்கு' என்பது எவ்வாறு குறிப்பிடப்படும்?

(*a*) கிழக்கு (*b*) வட-கிழக்கு

(*c*) வட-மேற்கு (*d*) தெற்கு

(*e*) இவற்றில் எதுவுமில்லை

31. தென்-கிழக்கு வடக்காகவும், வட-கிழக்கு மேற்காகவும் மாறினால், மேற்கு எவ்வாறு மாறும்? **(SNAP, 2004)**

(*a*) வட-கிழக்கு (*b*) வட-மேற்கு

(*c*) தென்-கிழக்கு (*d*) தென்-மேற்கு

(*e*) தெற்கு

32. சாலைகளின் சந்திப்பில் சமிக்ஞை கம்பு வைக்கப்பட்டுள்ளது. விபத்து ஒன்று நிகழ்ந்ததின் விளைவாக சமிக்ஞை கம்பில் கிழக்கை காண்பிக்க வேண்டிய குறியீடு தெற்கை குறிப்பிடுமாறு அந்த கம்பி திரும்பியது. தெற்கு என நினைத்து ஒரு பயணி தவறான திசையில் சென்றார். அசலில் அவர் எந்த திசையில் சென்றிருக்க வேண்டும்? **(M.B.A. 1998)**

(*a*) வடக்கு (*b*) தெற்கு (*c*) கிழக்கு (*d*) மேற்கு

33. ஒரு கைக்கடிகாரம் 4.30 மணியைக் காட்டுகிறது. நிமிட முள் கிழக்கை குறித்தால், மணி முள் எந்த திசையைக் குறிக்கும்? **(M.A.T. 2005)**

(*a*) வடக்கு (*b*) வட-மேற்கு

(*c*) தென்-கிழக்கு (*d*) வட-கிழக்கு

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

34. ஒரு கைக்கடிகாரத்தில் மணி 3. நிமிட முள் வட-கிழக்கை காண்பிக்கிறது எனில், மணி முள் காண்பிக்கும் திசை; **(R.R.B. 2004)**

(*a*) தெற்கு (*b*) தென்-மேற்கு

(*c*) வட-மேற்கு (*d*) தென்-கிழக்கு

35. மதியம் 12 மணிக்கு நிமிட முள்ளானது வட-கிழக்கு திசையை காண்பிக்குமாறு ஒரு கடிகாரம் அமைக்கப்பட்டது. எனில் மதியம் 1.30 மணிக்கு அதன் மணி முள் காட்டும் திசை என்ன? **(M.B.A. 1998)**

(*a*) வடக்கு (*b*) தெற்கு (*c*) கிழக்கு (*d*) மேற்கு

36. மேலே உள்ள கடிகாரத்தை கடிகார எதிர் திசையில் 135° கோணத்தில் திருப்பினால், இரவு 8.45 மணிக்கு அதன் நிமிட முள் எந்த திசையை காண்பிக்கும்?

(*a*) வடக்கு (*b*) தெற்கு (*c*) கிழக்கு (*d*) மேற்கு

குறிப்புகள் (கேள்விகள் 37–41): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

(i) வடக்கு மற்றும் தெற்கு திசைகள் பார்த்து கட்டப்பட்டுள்ள ஆறு குடியிருப்புகள் *P*, *Q*, *R*, *S*, *T* மற்றும் *U* ஆகிய நபர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) *Q*-விற்கு வடக்கு பார்த்த குடியிருப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அது *S*-க்கு அடுத்ததாக இல்லை.

(iii) *S* மற்றும் *U* ஒன்றுக்கொன்று குறுக்காக உள்ள குடியிருப்புகள்.

(iv) *U*-க்கு அடுத்துள்ள *R*-க்கு தெற்கு நோக்கிய குடியிருப்பு கிடைத்தது. *T*-க்கு வடக்கு நோக்கிய குடியிருப்பு கிடைத்தது.

37. கீழே உள்ளவற்றுள் எந்த குழுவிற்கு தெற்கு நோக்கிய குடியிருப்புகள் கிடைத்தது?

(*a*) *QTS* (*b*) *UPT* (*c*) *URP*

(*d*) தகவல் போதுமானதாக இல்லை

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

38. *Q* மற்றும் *S*-க்கு இடையே யாருடைய குடியிருப்பு உள்ளது?

(*a*) *T* (*b*) *U* (*c*) *R* (*d*) *P*

(*e*) தகவல் போதுமானதாக இல்லை

39. *T* மற்றும் *P* ஆகியோருடைய குடியிருப்புகள் ஒன்றுக்கொன்று மாற்றப்பட்டால் *U*-க்கு அடுத்து யாருடைய குடியிருப்பு இருக்கும்?

(*a*) *P* (*b*) *Q* (*c*) *R* (*d*) *T*

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

40. *SU* குடியிருப்புகள் தவிர எந்த இரு குடியிருப்புகள் ஒன்றுக்கொன்று எதிரெதிர் குறுக்காக அமைந்துள்ளன?

(*a*) *QP* (*b*) *QR* (*c*) *PT* (*d*) *TS*

(*e*) இவற்றுள் எதுவுமில்லை

41. மேலே உள்ள கேள்விகளுக்கு பதிலளிக்க கீழே உள்ள வாக்கியங்களை விட்டுவிடலாம்?

(*a*) எதுவுமில்லை (*b*) (i) மட்டும்

(*c*) (ii) மட்டும் (*d*) (iii) மட்டும்

(*e*) இவற்றில் எதுவுமில்லை

42. தனது கால்கள் மேல் நோக்கியும் தலை கீழ் நோக்கியும் இருக்குமாறு ஒரு நபர் யோகா செய்கிறார். அவர் மேற்கு நோக்கி இருக்கிறார். எனில், அவரது கைகள் எந்த திசை நோக்கி இருக்கும்? **(R.R.B. 2004)**

(a) வடக்கு (b) தெற்கு (c) கிழக்கு (d) மேற்கு

43. ஒரு நாளின் சூரிய உதயத்திற்கு பின் ஒரு கம்பத்தை நோக்கி கோபால் நிற்கிறார். அந்த கம்பத்தின் நிழல் மிகச் சரியாக அவரது வலப்புறம் விழுகிறது. எனில், அவர் எந்த திசை நோக்கி நிற்கிறார்?

(a) தெற்கு (b) கிழக்கு (c) மேற்கு

(d) தகவல் போதுமானதாக இல்லை

(e) இவற்றுள் எதுவுமில்லை

44. ஒருநாளின் சூரிய உதயத்திற்கு பின், ரீட்டா மற்றும் கவிதா திலக் ஸ்கொயர் என்கிற இடத்தில் ஒருவரையொருவர் பார்த்தவாறு பேசிக்கொண்டு இருக்கிறார்கள். கவிதாவின் நிழல் ரீட்டாவின் வலப்புறம் மிகச்சரியாக விழுகிறது எனில், கவிதா எந்த திசை நோக்கி நிற்கிறாள்? **(M.A.T. 2005)**

(a) வடக்கு (b) தெற்கு (c) கிழக்கு

(d) தகவல் போதுமானதாக இல்லை

(e) இவற்றில் எதுவுமில்லை

45. ஒரு நாளின் சூரிய உதயத்திற்கு பின் விக்ரம் மற்றும் சைலேஷ் இருவரும் தங்களது பின்புறம் ஒருவருக்கொருவர் நோக்கியுள்ள படி புல்வெளியில் நின்று கொண்டிருக்கிறார்கள். விக்ரமின் நிழல் மிகச்சரியாக அவரது இடக்கை பக்கம் விழுகிறது. எனில், சைலேஷ் எந்த திசை நோக்கி நிற்கிறார்?

(a) கிழக்கு (b) மேற்கு (c) வடக்கு (d) தெற்கு

46. சூரிய உதயத்திற்கு முன் ஒருநாளில் சுமித் மற்றும் மோகித் ஆகிய இரண்டு நண்பர்கள் ஒருவரை நோக்கி ஒருவர் பார்த்து நிற்கிறார்கள். மோகித்தின் நிழல் மிகச்சரியாக அவரது வலதுபக்கம் விழுகிறது எனில, சுமித் எந்த திசை நோக்கி நிற்கிறார்?

(a) வடக்கு (b) தெற்கு (c) மேற்கு

(d) தகவல் போதுமானதாக இல்லை

(e) இவற்றுள் எதுவுமில்லை

47. தனது பின்பக்கம் சூரியனைப் பார்த்து இருக்கமாறு அனுஜ் நடக்கத் தொடங்கினார். சிறிது நேரத்திற்கு பின், இடதுபக்கம் திரும்பி பின் வலதுபக்கம் திரும்பி பின் மீண்டும் இடது பக்கம் திரும்பினார். இப்பொழுது அவர் எந்த திசை நோக்கி நடக்கிறார்?

(a) வடக்கு அல்லது தெற்கு

(b) கிழக்கு அல்லது மேற்கு

(c) வடக்கு அல்லது மேற்கு

(d) தெற்கு அல்லது மேற்கு

குறிப்புகள் (கேள்விகள் 48–52): கீழே உள்ள வரைபடத்தில் உள்ளவாறு ஒரு சதுர மனையின் நான்கு மூலைகளில் நான்கு நபர்கள் நிற்கிறார்கள். கேள்விகள் இதைப் பற்றியதாகும்.



48. அந்த மனையை *A* குறுக்காக கடக்க தொடங்கினார். பாதி தூரம் நடந்தபின், வலது புறம் திரும்பி சிறிது தூரம் நடந்து பின் இடது புறம் திரும்பினார். இப்பொழுது *A* எந்த திசை நோக்கி நிற்கிறார்?

(a) வட-கிழக்கு (b) வட-மேற்கு

(c) வடக்கு (d) தென்-கிழக்கு

(e) தென்-மேற்கு

49. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் *A* மற்றும் *B* இருவரும் கடிகார திசையில் ஒரு கை நீள தூரம் நடந்து பின் குறுக்கு வெட்டில் எதிராக முனைகளில் கடக்கின்றார்கள்; *C* மற்றும் *D* இருவரும் கடிகார எதிர் திசையில் ஒரு கை நீள தூரம் நடந்து பின் குறுக்கு வெட்டில் எதிராக முனைகளில் கடக்கின்றனர். *ADBC*-யின் அசல் வடிவத்தின் மாறிய வடிவம்

(a) *CBDA* (b) *BDAC* (c) *DACB* (d) *ACBD*

(e) *BCAD*

50. தங்களது ஆரம்ப இடத்திலிருந்து *B* மற்றும் *D* இருவரும் முறையே கடிகார திசை மற்றும் கடிகார எதிர் திசையில் பக்கங்களில் 1 1/2 நீள தூரத்திற்கு நடந்தார்கள். கீழே உள்ளவற்றுள் எந்த வாக்கியங்கள் சரியாகும்?

(a) *A* மற்றும் *C*-க்கு இடையே உள்ள நடுப்புள்ளியில் *B* மற்றும் *D* உள்ளனர்.

(b) *A* மற்றும் *C*-க்கு இடையே உள்ள நடுப்புள்ளியில் *D* உள்ளார். முதலில் *C* நின்று கொண்டிருந்த மூலையில் *B* உள்ளார்.

(c) *A* மற்றும் *C*-க்கு இடையேயுள்ள நடுப்புள்ளியில் *B* உள்ளார். மற்றும் முதலில் *A* நின்றுகொண்டிருந்த மூலையில் *D* உள்ளார்.

(d) *A* மற்றும் *D*-க்கு இடையேயுள்ள நடுப்புள்ளியில் *B* மற்றும் *D* இருவரும் உள்ளனர்.

(e) *A* மற்றும் *C*-க்கு இடையேயுள்ள நடுப்புள்ளியில் *B* உள்ளார். மற்றும் *B* மற்றும் *C* முதலில் நின்று கொண்டிருந்த இடங்களுக்கு இடையேயுள்ள நடுப்புள்ளியில் *D* உள்ளார்.

51. அசலாக கொடுக்கப்பட்டுள்ள படத்தில் உள்ள இடங்களிலிருந்து *C* மற்றும் *A* குறுக்காக எதிரெதிர் மூலைகளுக்கு மாறுகின்றனர். பிறகு ஒருபக்கமாக ஒவ்வொருவரும் கடிகார திசையில் மற்றும் கடிகார எதிர் திசையிலும் நகர்கிறார்கள். *B* மற்றும் *D* முறையே இரண்டு பக்கங்களில் கடிகார திசை மற்றும்

கடிகார எதிர்திசையில் நகர்கின்றனர். A இப்பொழுது எங்கு உள்ளார்?

(a) வட-மேற்கு மூலையில்

(b) வட-கிழக்கு மூலையில்

(c) தென்-கிழக்கு மூலையில்

(d) தென்-மேற்கு மூலையில்

(e) B மற்றும் D ஆகியோரில் ஆரம்ப இடங்களுக்கு இடையேயுள்ள நடுப்பகுதியில்

52. கேள்வி 51-ல் கொடுக்கப்பட்டுள்ளது போல் நகர்தல்கள் நடந்த பிறகு யார் வட-மேற்கு மூலையில் இருப்பார்?

(a) A (b) B (c) C (d) D

(e) இவற்றில் எதுவுமில்லை

53. பக்கத்தின் அளவு 90 மீ கொண்ட ஒரு சதுர வயலின் மூலைவிட்டம் AC வடக்கிலிருந்து தெற்காக உள்ளது. மூலை B-யானது D-யின் மேற்கில் உள்ளது. ரோஹன் மற்றும் ராகுல் B மற்றும் C பக்கங்களிலிருந்து முறையே கடிகார திசை மற்றும் கடிகார எதிர் திசையிலிருந்து 8 கிமீ/மணி மற்றும் 10 கிமீ/மணி வேகத்தில் நடக்கத் தொடங்கினார்கள். இரண்டாவது முறையாக அவர்கள் எங்கு ஒருவரையொருவர் கடப்பார்கள்? **(M.A.T. 2005)**

(a) AD-யில் A-யிலிருந்து 30 மீ தூரத்தில்

(b) BC-யில் B-யிலிருந்து 10 மீ தூரத்தில்

(c) AD-யில் D-யிலிருந்து 30 மீ தூரத்தில்

(d) BC-யில் C-யிலிருந்து 10 மீ தூரத்தில்

விடைகள் (பயிற்சி 8B)

1. (a)	2. (c)	3. (d)	4. (a)	5. (c)	6. (c)	7. (d)	8. (a)	9. (a)	10. (d)
11. (b)	12. (a)	13. (d)	14. (d)	15. (d)	16. (c)	17. (c)	18. (a)	19. (a)	20. (e)
21. (c)	22. (d)	23. (c)	24. (a)	25. (d)	26. (d)	27. (b)	28. (b)	29. (b)	30. (c)
31. (c)	32. (b)	33. (d)	34. (d)	35. (c)	36. (b)	37. (c)	38. (a)	39. (c)	40. (a)
41. (a)	42. (a)	43. (a)	44. (a)	45. (d)	46. (b)	47. (a)	48. (b)	49. (a)	50. (a)
51. (d)	52. (c)	53. (d)							

தீர்வுகள் (பயிற்சி 8B)

1. X மற்றும் Y இரண்டு பேருந்துகள். பேருந்து X PA, AB, BC, CD வழியில் ஒடுகிறது.



$AD = BC = 25$ கிமீ.

எனவே, $PD = PA + AD = 50$ கிமீ.

பேருந்து Y, E வரை 35 கிமீ தூரம் ஒடுகிறது.

$\therefore$ இரண்டு பேருந்துகளுக்கிடையே உள்ள தூரம்

$= PQ - (PD + QE) = [150 - (50 + 35)]$ கிமீ

$= 65$ கிமீ.

2. Q-விலிருந்து A வரை 60 மீ தூரத்தை பேருந்து Y கடக்கிறது. பின் B வரை 20 மீ தூரமும், C வரை 40 மீ தூரமும் ஒடியபின் D வரை ஒடுகிறது.



எனவே, $AD = BC = 40$ மீ.

$QD = (60 + 40)$மீ $= 100$ மீ.

X மற்றும் Y ஒரே வேகத்தில் ஒடுகிறது. எனவே Y ஒடுகின்ற அதே வேகத்தில் அதே நேரத்தில் சம தூரத்தை X ஒடுகிறது. (படுக்கைக்கோட்டின் வழியில்). அதாவது, $(60 + 20 + 40 + 20)$மீ $= 140$ மீ.

எனவே, A வரை 140 மீ தூரத்தை X கடக்கிறது.

$\therefore$ X மற்றும் Y-க்கு இடையேயுள்ள தூரம்

$= AD = (100 - 60)$மீ $= 40$ மீ.

3. முதல் மற்றும் இரண்டாவது படங்களில் C-க்கு சம்பந்தமாக A-யை ஒப்பிடுகையில் C-யின் தென்-மேற்கு திசையில் A இருக்கும்.



4. பக்கத்தில் உள்ள படத்திலிருந்து தெரிவது; A-யின் கிழக்கில் C உள்ளது.



5. படத்தில் காண்பித்துள்ளபடி நகரங்களின் திசைகள் உள்ளன. எனவே, P-யின் வட-கிழக்கு திசையில் T உள்ளது.



6. கொடுக்கப்பட்டுள்ள திசைகளின்படி, கிராமங்களின் இருப்பிடங்கள் படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.



எனவே, S-க்கு தென்-மேற்கில் R உள்ளது.

7. பக்கத்தில் உள்ள படத்தில் குறிப்பிட்டுள்ளபடி இருக்கைகளின் அமைப்பு இருக்கும்.



எனவே, S தென்-மேற்கு பகுதியில் உள்ளது.

8. $PQ = \sqrt{OP^2 + OQ^2} = \sqrt{(300)^2 + (400)^2}$

$= \sqrt{90000 + 160000} = 500$ கிமீ.

PQ வின் மத்திய புள்ளி R ஆகும்.

எனவே, $QR = \frac{1}{2} \times PQ = 250$ கிமீ.

9. கிழக்கில் உள்ள தனது வீட்டிலிருந்து நடக்க தொடங்கி ரவி மேற்காக நடந்தான். எனில், இடது புறமாக உள்ள திரையரங்கு தெற்கு பக்கமாக இருக்கும். நேராக உள்ள மருத்துவமனை மேற்கில் இருக்கும். எனவே, பல்கலைக்கழகம் வடக்கு நோக்கி உள்ளது.



10. D-யின் இடது புறமாக A உள்ளார் என்பது AD-யாகும். E-யின் வலதுபுறமாக A உள்ளார் என்பது EA ஆகும். எனவே வரிசையானது EAD-யாகும். X-ன் வலப்புறமாக C உள்ளார் என்பது XC ஆகும். B-யின் இடதுபுறமாக C உள்ளார் என்பது CB ஆகும். F-ன் இடதுபுறம் B உள்ளார் என்பது BF ஆகும். எனவே, வரிசையானது $XCBF$ ஆகும். ஆகவே $EADXCBF$ மற்றும் $XCBFEAD$ ஆகிய இரண்டு ஏற்பாடுகள் இருக்கும். முதல் ஏற்பாட்டில், நடுவில் உள்ள இரண்டு உறுப்பினர்கள் D மற்றும் C. இரண்டாவது ஏற்பாட்டில் நடுவில் உள்ள உறுப்பினர்கள் B மற்றும் E. எனவே, கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளில் சரியான விடை D மற்றும் C உள்ள மாற்று. அதாவது, d சரியான விடையாகும்.

11. கொடுக்கப்பட்டுள்ள தகவலின்படி, D வடக்கு நோக்கியும், A மேற்கு நோக்கியும் உள்ளார். எனவே அதன் கூட்டாளி B-யானவர் A நோக்கியும் உள்ளார். எனவே, கிழக்கு நோக்கியுள்ளார். ஆகையால் D-யை பார்த்து உள்ள C தெற்கு நோக்கியுள்ளார்.



12. கொடுக்கப்பட்டுள்ள தகவலின்படி, R மேற்கு நோக்கியுள்ளார். R-ன் வலதுபுறம் S உள்ளார். S தெற்கு நோக்கியுள்ளார். எனவே, S-ன் கூட்டாளியான Q தெற்கு நோக்கியுள்ளார்.



13. நகரமான அக்ரம் (A), பராண்டாவின் மேற்கு பகுதியில் உள்ளது. எனவே A, P. தொக்காடா (T) அக்ரமுக்கு கிழக்கிலும் பராண்டாவின் மேற்கிலும் உள்ளது. எனவே, T, J, P. காக்ரான் (K) போப்ரியின் (B) கிழக்கிலும் தொக்காடா மற்றும் அக்ரமுக்கு மேற்கிலும் உள்ளது. எனவே, K, A, A, T அனைத்து ஏற்பாடுகளையும் இணைப்பதின் மூலம் B, K, A, T, P என்கிற வரிசை கிடைக்கும். ஆகவே, போப்ரி தென்-மேற்கு திசையில் உள்ளது.

14. சமீர் (S), துஷார் (T) மற்றும் சைலேந்திரா (Sh) ஆகியோருக்கு இடப்புறமாக தீபக் (D) உள்ளார். எனவே, D, S, T, Sh. சமீர், துஷார் மற்றும் சைலேந்திரா ஆகியோர் சுஷீலுக்கு (Su) இடப்புறம் உள்ளார். எனவே S, T, Sh, Su. சைலேந்திரா முறையே சமீர் மற்றும் துஷார் ஆகியோருக்கு நடுவில் உள்ளார். எனவே, S, Sh, T. இடப்புறத்திலிருந்து துஷார் நான்காவதாக உள்ளார். எனவே, $\square\ \square\ \square\ T$. அனைத்து ஏற்பாடுகளையும் இணைத்தால் கிடைப்பது, D, S, Sh, T, Su. எனவே, வலப்புறத்திலிருந்து நான்காவதாக சமீர் உள்ளார்.

15. எந்த ஒரு பெண்ணும் கிழக்கு பார்த்து அமரவில்லை. எனவே, ஒரு ஆண் கிழக்கு பார்த்து உட்கார்ந்து இருக்கிறார். எதிரெதிராக அமர்ந்திருக்கும் இருவர்

ஒரே, பாலினத்தவர் இல்லை. ஆகையால், ஒரு பெண் மேற்கு பார்த்து உள்ளார். ஒரு ஆண் தெற்கு பார்த்து உள்ளார். அவருக்கு எதிராக உட்கார்ந்திக்கும் பெண் வடக்கு பார்த்து உள்ளார்.



16. பல்வேறு இடங்களின் நிலைகள் படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. சந்தை பள்ளியின் வட-கிழக்கு திசையில் உள்ளது என்பது தெளிவாகிறது.



கேள்விகள் 17–19

வீடுகளின் இருப்பிடம் அருகில் உள்ள படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.



17. H மற்றும் D ஆகியவற்றுக்கு நடுவில் E உள்ளது.
எனவே, $HE = ED$.
ஆனால், HD = 2 கிமீ. எனவே, $HE = ED$ = 1 கிமீ
∴ தேவைப்படும் வித்தியாசம் = $GE = GH + HE$
= (1 + 1) கிமீ = 2 கிமீ.

18. B மற்றும் C-க்கு இடையே I உள்ளது.
எனவே, $BI = IC$. ஆனால் BC = 2 கிமீ.
ஆனால், $BI = IC$ = 1 கிமீ
எனவே, E-க்கு நேர் மேலே I உள்ளது.
∴ தேவைப்படும் தூரம் = $EI = HB$ = 1 கிமீ.

19. $GF = AH$ = 2 கிமீ, எனவே, F மற்றும் A ஒரே கோட்டில் உள்ளது.
∴ தேவைப்படும் தூரம் = $AF = GH$ = 1 கிமீ.

கேள்விகள் 20–21

பையன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது போல் நிற்கின்றார்கள்.



20. குணாலின் இடது புறமாக, அதுலும், அதுலுக்கு வட-கிழக்கு திசையில் பிரசாந்த் உள்ளார்.

21. தேவைப்படும் தூரம் = $NA + AK + KD + DP$
= (25 + 40 + 60 + 10) மீ = 215 மீ.

கேள்விகள் 22–24

பக்கத்தில் உள்ள படத்தில் உள்ளது போல் கிராமங்கள் அமைந்துள்ளன.



22. G மற்றும் C-க்கு நடுவில் A உள்ளது.

23. F மற்றும் B முறையே ஒருவரிடமிருந்து மற்றொருவர் மிக தொலைவில் உள்ளனர் என்பது தெளிவு.

24. தேவைப்படும் தூரம்
$= FE = FA + AE = FA + GD$
= (2 + 2) கிமீ = 4 கிமீ.

25. படம் 1-ல், லோகேஷின் வீட்டிலிருந்து பள்ளிக் கூடத்திற்கான வழி காண்பிக்கப்பட்டுள்ளது. பள்ளியை நெருங்கும்பொழுது பேருந்து வடக்கு திசை நோக்கி உள்ளது. படம் 1-ஐ கடிகார எதிர் திசையில் 90° திருப்பினால் படம் 2 கிடைக்கும், படம் 2 அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்கிறது. லோகேஷின் வீட்டின் முன்னால் பேருந்து மேற்கு நோக்கி நிற்கிறது என படம் 2-லிருந்து தெளிவாகிறது.



26. படம் A-யில் உள்ளபடி வழி உள்ளது. அந்த நபர் இறுதியாக அவரது வீட்டின் வட-மேற்கில் உள்ளார் என கொடுக்கப்பட்டுள்ளது.



படம் A படம் B

படம் A-யை 90° கடிகார எதிர்திசையில் திருப்பினால், நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் படம் B கிடைக்கிறது. அந்த நபர் முதலில் மேற்காக நடக்கத் தொடங்கினார் என்பது படம் B-யில் தெளிவாகிறது.

27. பக்கத்தில் உள்ள வரைபடத்தில் உள்ளது போல் வழி அமைந்திருக்கும். எனவே, அந்த நபர் தனது பயணத்தை தெற்கில் தொடங்கி வடக்காக நடந்தார்.



28. தபால்காரரின் வழி வரை படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே, தபால் நிலையத்திலிருந்து கடைசி புள்ளி வரையிலான தூரம்

$= EA = BD$

$= BC + CD = (50 + 40)$ மீ $= 90$ மீ.



29. அந்த பையன் A-யிலிருந்து B வரை ஓட்டினான். பின் C வரையிலும் கடைசியாக D வரையிலும் ஓட்டினான். A-யின் மேற்கில் D உள்ளதால் தூரமானது

$= AB = CD = 2$ கிமீ.



30. படம் (i)-ல் திசைகள் உள்ளவாறு காண்பிக்கப்பட்டுள்ளன. படம் (ii)-ல் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் படி திசைகள் உள்ளன. எனவே படம் (i) மற்றும் (ii) ஆகியவற்றின் வடக்கு திசைகளை ஒப்பிடும்பொழுது படம் (ii)-ல் உள்ள வடக்கு திசை வட-மேற்கு எனப்படும்.



(i) (ii)

31. கேள்வி 30-ல் உள்ள படம் (i) மற்றும் பக்கத்தில் உள்ள படத்தையும் ஒப்பிடும் பொழுது மேற்கு திசை தென்-கிழக்கு எனப்படும்.



32. அசல் திசைகள் படம் I-லும் குறியீட்டின் மாறிய திசைகள் படம் II-லும் காண்பிக்கப்பட்டுள்ளன. படம் II-ல் குறியீடு குறிக்கும் மேற்குதிசையானது தவறாகும். அசலில் அது தெற்கு திசையாக இருக்க வேண்டும்.



(I) (II)

33. 4.30 மணியை காண்பிப்பதற்கு கடிகாரத்தின் நிமிட மற்றும் மணி முட்கள் படத்தில் உள்ளது போல் இருக்க வேண்டும். எனவே, படத்தில் உள்ளது போல், நிமிட முள் கிழக்கு திசையை காண்பித்தால் மணி முள் வட-கிழக்கு திசையை காண்பிக்க வேண்டும்.



34. மணி முள் தென்-கிழக்கு திசையை குறிக்கிறது என்பது தெளிவாகிறது.



35. நண்பகல் 12 மணி மற்றும் மதியம் 1.30 மணி. ஆகியவற்றை குறிக்கும் நிமிட மற்றும் மணி முட்களின் நிலைகள் படங்களில் காண்பிக்கப்பட்டுள்ளன. மதியம் 1.30 மணிக்கு மணி முள் கிழக்கு திசையைக் காண்பிக்கிறது.



36. மேலே உள்ள கடிகாரத்தை கடிகார எதிர்திசையில் 135° திருப்பினால் பக்கத்தில் உள்ள படத்தில் உள்ள கடிகாரம் கிடைக்கும். இதில் நிமிட முள் தெற்கு நோக்கி இருப்பது தெளிவாகிறது.

கேள்விகள் 37–41

Q-விற்கு வடக்கு நோக்கிய வீடு கிடைக்கிறது மற்றும் S-க்கு அடுத்தபடியாக இலலையெனில்,



S மற்றும் U இருவருக்கும் குறுக்காக எதிரெதிர் வீடுகள் கிடைக்கிறது எனில்,



U-க்கு அடுத்துள்ள R-க்கு தெற்கு நோக்கிய வீடும் T-க்கு வடக்கு நோக்கிய வீடும் கிடைக்கிறது எனில்,



எனவே, அமைப்பானது:



37. தெற்கு நோக்கிய வீடுகள் U, R, P ஆகியவை.

38. T-யின் வீடு Q மற்றும் S-க்கு இடையே உள்ளது.

39. T மற்றும் P ஆகியோரின் வீடுகள் ஒன்றுக்கொன்று மாறினால் U-வின் வீட்டிற்கு அடுத்து உள்ள வீடு R மாறாமல் இருக்கும்.

40. குறுக்காக எதிரெதிரே உள்ள ஜோடி வீடுகள் SU மற்றும் QP.

41. கொடுக்கப்பட்டுள்ள கேள்விக்கு அனைத்து தகவல்களும் தேவையானவை.

42. அந்த நபரின் நிலை படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. இடதுகை வடக்கு நோக்கி உள்ளது தெளிவாகிறது.



43. காலையில் சூரியன் கிழக்கில் உதிக்கிறது. எனவே, காலையில் நிழல் மேற்கில் விழும். கபிலின் நிழல் வலது பக்கம் விழுகிறது. எனவே, அவன் தெற்கு நோக்கி நிற்கிறான்.



44. காலையில் சூரியன் கிழக்கில் உதிக்கிறது. மற்றும் நிழல் மேற்கில் விழும். ரீட்டாவின் வலதுபுறம் கவிதாவின் நிழல் விழுகிறது. எனவே, ரீட்டா தெற்கு நோக்கியும் கவிதா வடக்கு நோக்கியும் உள்ளனர்.



45. விக்ரமின் நிழல் இடதுபக்கம் விழுகிறது. எனவே, விக்ரம் வடக்கு நோக்கி நிற்கிறார். விக்ரமின் பின்பக்கம் நோக்கி பின்புறமாக திரும்பி நிற்கும் சைலேஷ் தெற்கு நோக்கி நிற்கிறார்.

46. மாலையில் சூரியன் மேற்கில் இருக்கும். எனவே, நிழல் கிழக்கில் விழும். மோஹித்தின் நிழல் வலதுபக்கமாக விழுவதால் மோஹித் வடக்கு நோக்கி நிற்கிறார். எனவே, முகத்துக்கு முகம் மோஹித்தை பார்த்து நிற்கும் சுமித் தெற்கு பார்த்து நிற்கிறார்.

47. படத்தில் காண்பித்துள்ளபடி மோஹித்தின் நகர்வுகள் இரண்டு விதங்களில் இருக்கலாம். எனவே, கடைசியாக வடக்கில் அல்லது தெற்கில் அனுஜ் நடக்கிறார்.



48. A-யின் வழி படத்தில் உள்ளது போல் இருக்கும். படத்தை ஒப்பிடும் பொழுது, A-யின் திசை வட மேற்காக இருக்கும்.



49. (i), (ii), (iii) மற்றும் (iv) முறையே A, B, C மற்றும் D ஆகியோரின் நகர்வுகளையும் புதிய அமைப்பு (v)-ல் காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டமைப்பு $CBDA$ ஆக மாறுகிறது.





50. B மற்றும் D-யின் நகர்வுகள் படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, வாக்கியம் (a) சரியாகும்.



51. A, C, B மற்றும் D ஆகியோரின் நகர்வுகள் முறையே (i), (ii), (iii) மற்றும் (iv)-ல் காண்பிக்கப்பட்டுள்ளது. (v)-ல் உள்ள கட்டமைப்பு இறுதியானதாகும். கொடுக்கப்பட்டுள்ள படத்துடன் (v)-ஐ ஒப்பிடும் பொழுது A தென்-மேற்கு மூலையில் உள்ளார்.



(i) (ii) (iii)



(iv) (v)

52. C வட-மேற்கு மூலையில் உள்ளார்.

53. பக்கத்தில் உள்ள படத்தில் உள்ளது போல் நகர்வுகள் இருக்கும்.



ரோஹனின் வேகம் = 8 கிமீ/மணி

$= \left(\frac{8000}{60 \times 60}\right)$ மீ/நொடி $= \left(\frac{20}{9}\right)$ மீ/நொடி.

ராகுலின் வேகம் = 10 கிமீ/மணி

$= \left(\frac{10000}{60 \times 60}\right)$ மீ/நொடி $= \left(\frac{25}{9}\right)$ மீ/நொடி.

ரோஷன் மற்றும் ராகுல் எதிரெதிர் திசைகளில் நடக்கிறார்கள். எனவே, இருவரும் இணைந்து $\left(\frac{20}{9} + \frac{25}{9}\right)$ அதாவது, $\frac{45}{9}$ அல்லது ஒரு நொடியில் 5 மீட்டர்கள் தூரத்தைக் கடப்பார்கள்.

ஒரு புள்ளியில் இருவரும் இணைவதற்கு அவர்கள் கடக்க வேண்டிய தூரம் $(CD + DA + AB)$ அதாவது, 270 மீ.

1 நொடியில் 5 மீட்டர்கள் தூரத்தை கடக்கிறார்கள்.

எனவே, 270 மீ தூரத்தை $\left(\frac{1}{5} \times 270\right) = 54$ நொடிகளில் கடக்கிறார்கள்.

54 நொடிகளில் ரோஹன் கடந்த தூரம்

$= \left(\frac{20}{9} \times 54\right)$ மீ $= 120$ மீ.

54 நொடிகளில் ராகுல் கடந்த தூரம்

$= \left(\frac{25}{9} \times 54\right)$ மீ $= 150$ மீ.

எனவே, ரோஹன் மற்றும் ராகுல் முதல்முறையாக A-யிலிருந்து 30 மீ மற்றும் D-யிலிருந்து 60 மீ தூரத்திலும் உள்ள AD என்கிற புள்ளியில் சந்தித்தார்கள். மீண்டும் அவர்கள் சந்திப்பதற்கு ஒரு முழு சுற்றை அவர்கள் கவர வேண்டும் அதாவது, இருவரும் இணைந்து 360 மீ தூரம் கடக்க வேண்டும்.

1 நொடியில் இருவரும் இணைந்து 5 மீட்டர்கள் தூரத்தைக் கடக்கிறார்கள். எனவே, இருவரும் இணைந்து 360 மீ தூரத்தை கடக்க எடுத்துக் கொள்ளும் நேரம் $= \left(\frac{1}{5} \times 360\right) = 72$ நொடிகள்.

72 நொடிகளில் ரோஹன் கடந்த தூரம்

$= \left(\frac{20}{9} \times 72\right)$ மீ $= 160$ மீ.

72 நொடிகளில் ராகுல் கடந்த தூரம்

$= \left(\frac{25}{9} \times 72\right)$ மீ $= 200$ மீ.

எனவே, ரோஹன் மற்றும் ராகுல் இருவரும் B-யிலிருந்து 80 மீ மற்றும் C-யிலிருந்து 10 மீ தூரத்தில் உள்ள புள்ளி BC-யில் சந்திக்கிறார்கள்.

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன்

பயிற்சி

குறிப்புகள் (கேள்விகள் 1-3): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

P என்கிற புள்ளி G என்கிற புள்ளியிலிருந்து 8 மீ மேற்கில் உள்ளது. புள்ளி T-யிலிருந்து 16 மீ தூரத்தில் புள்ளி G உள்ளது. புள்ளி E-லிருந்து கிழக்கில் புள்ளி H உள்ளது. புள்ளி L-லிருந்து 5 மீ வட-மேற்கு திசையில் புள்ளி E உள்ளது. புள்ளி F-லிருந்து 12 மீ தெற்கில் புள்ளி A உள்ளது மற்றும் A மற்றும் F-க்கு இடைப்புள்ளியாக

புள்ளி P உள்ளது. புள்ளி S-ன் 8 மீ தெற்கில் புள்ளி L உள்ளது. L மற்றும் S-ன் இடைப்புள்ளியாக புள்ளி H உள்ளது. புள்ளி E-ன் 14 மீ தெற்கில் புள்ளி T உள்ளது. **[SBI PO Exam, 2021]**

1. புள்ளி B புள்ளி A-யின் மேற்கு மற்றும் S-ன் தெற்கில் உள்ளது. எனில், புள்ளி A மற்றும் புள்ளி B-க்கு இடையேயுள்ள தூரம் என்ன?
   (a) 13 மீ (b) 7 மீ (c) 6 மீ (d) 5 மீ
   (e) இவற்றில் எதுவுமில்லை

2. புள்ளி F-ஐ ஒப்பிடுகையில் புள்ளி L எந்த திசையில் உள்ளது?
   (a) தெற்கு (b) தென்-கிழக்கு
   (c) வட-கிழக்கு (d) கிழக்கு
   (e) இவற்றில் எதுவுமில்லை

3. புள்ளி E மற்றும் புள்ளி H இரண்டிற்குமிடையே உள்ள தூரம் என்ன?
   (a) 7 மீ (b) 3 மீ (c) 4 மீ (d) 5 மீ
   (e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (*கேள்விகள் 4–6*): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.*

புள்ளி D-யின் வடக்கில் 15 மீ தூரத்தில் புள்ளி E உள்ளது. புள்ளி C-யின் 20 மீ வடக்கில் புள்ளி F உள்ளது. புள்ளி F-ன் கிழக்கில் 35 மீ தூரத்தில் புள்ளி A உள்ளது. புள்ளி A-யின் 25 மீ தெற்கில் புள்ளி P உள்ளது. புள்ளி P-ன் 20 மீ கிழக்கில் புள்ளி E உள்ளது. **[SBI Clerk Exam, 2020]**

4. புள்ளி P-யை ஒப்பிடுகையில் புள்ளி F எந்த திசையில் உள்ளது?
   (a) வட-மேற்கு (b) வட-கிழக்கு
   (c) தென்-மேற்கு (d) தென்-கிழக்கு
   (e) வடக்கு

5. கீழே உள்ள ஐந்தில் ஏதே ஒரு விதத்தில் நான்கு ஒற்றுமையைக் கொண்டுள்ளன. எனவே அவை ஒரு குழுவை உருவாக்குகின்றன. அந்த குழுவில் சேராத ஒன்று எது?
   (a) C-P (b) A-E (c) A-C (d) P-D
   (e) F-E

6. புள்ளி X புள்ளி C-யின் 20 மீ தெற்கில் உள்ளது. எனில், புள்ளி X மற்றும் புள்ளி D ஆகியவற்றுக்கிடையே உள்ள தூரம் என்ன?
   (a) 40 மீ (b) 35 மீ (c) 55 மீ (d) 65 மீ
   (e) 85 மீ

குறிப்புகள் (*கேள்விகள் 7–9*): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.*

புள்ளி S புள்ளி R-லிருந்து 15 மீ மேற்கில் உள்ளது.
புள்ளி R புள்ளி Q-விருந்து 30 மீ தெற்கில் உள்ளது.
புள்ளி P புள்ளி Q-விலிருந்து 20 மீ மேற்கில் உள்ளது.
புள்ளி U புள்ளி P-யிலிருந்து 15 மீ தெற்கில் உள்ளது.
புள்ளி T புள்ளி S-லிருந்து 35 மீ வடக்கில் உள்ளது.
[SBI Clerk Exam, 2019]

7. புள்ளி V புள்ளி Q மற்றும் புள்ளி R-க்கு மிகச் சரியான நடுப்புள்ளியில் உள்ளது. எனில், புள்ளி V-யுடன் ஒப்பிடும் பொழுது புள்ளி U எந்த திசையில் உள்ளது?
   (a) 15 மீ, வட-கிழக்கு (b) 15 மீ, கிழக்கு
   (c) 10 மீ, வட-மேற்கு (d) 20 மீ, மேற்கு
   (e) 20 மீ, வட-கிழக்கு

8. கீழே உள்ளவற்றுள் நான்கு ஏதோ ஒரு விதத்தில் ஒற்றுமையைக் கொண்டுள்ளன. ஒரு குழுவை உருவாக்குகின்றன. அந்த குழுவில் சேராத ஒன்று எது?
   (a) P, T (b) U, Q (c) R, P (d) S, Q
   (e) U, T

9. புள்ளி W புள்ளி U-வின் கிழக்கில் 5 மீ தொலைவில் உள்ளது. எனில், புள்ளி W மற்றும் புள்ளி S-க்கு இடையேயுள்ள தூரம் என்ன?
   (a) 5 மீ (b) 15 மீ (c) 25 மீ (d) 10 மீ
   (e) 20 மீ

குறிப்புகள் (*கேள்விகள் 10–12*):

புள்ளி R புள்ளி Q வின் மேற்கில் 5 மீ தூரத்தில் உள்ளது. புள்ளி P புள்ளி Q-வின் வடக்கில் 16 மீ தூரத்தில் உள்ளது. புள்ளி R புள்ளி T-யின் தெற்கில் 25 மீ. தூரத்தில் உள்ளது. புள்ளி T புள்ளி V-யின் மேற்கில் 10 மீ தூரத்தில் உள்ளது. புள்ளி V புள்ளி J-யின் வடக்கில் 9 மீ துரத்தில் உள்ளது.
[SBI PO Exam, 2019]

10. புள்ளி P-யுடன் ஒப்பிடும் பொழுது எவ்வளவு தூரம் மற்றும் எந்த திசையில் புள்ளி J உள்ளது?
    (a) 10 மீ, தென்-கிழக்கு (b) 5 மீ, தெற்கு
    (c) 5 மீ, கிழக்கு (d) 10, வட-மேற்கு
    (e) 5 மீ, மேற்கு

11. புள்ளி W, புள்ளி J-யின் மேற்கிலும் புள்ளி R-க்கு வடக்கிலும் உள்ளது. எனில், T மற்றும் W-க்கு இடையே உள்ள தூரம் என்ன?
    (a) 15 மீ (b) 9 மீ (c) 12 மீ (d) 10 மீ
    (e) 5 மீ

12. புள்ளி R-உடன் ஒப்பிடுகையில் புள்ளி V எந்த திசையில் உள்ளது?
    (a) வடக்கு (b) தென்-மேற்கு
    (c) வட-கிழக்கு (d) தெற்கு
    (e) வட-மேற்கு

13. ஒரு மருத்துவமனையில் தன் பணி மருத்துவரை பார்க்க செவிலி ஒருவர் கிழக்கில் 90 மீ தூரம் நடந்து பின், வலது புறமாக திரும்பி 20 மீ நடந்தாள். அதன்பின், வலதுபுறம் நடந்து 30 மீ நடந்த பிறகு தீவிர சிகிச்சை பிரிவை அடைந்தாள். ஆனால், மருத்துவர் அங்கு இல்லை. அங்கிருந்து வடக்கில் 100 மீ நடந்து மருத்துவரை சந்தித்தாள். அவள் தொடங்கிய இடத்திலிருந்து மருத்துவரை சந்தித்த வரை அவள் கடந்த தூரம் என்ன? **[SSC CPO Exam, 2019]**
    (a) 100 மீ (b) 120 மீ (c) 80 மீ (d) 140 மீ

குறிப்புகள் (கேள்விகள் 14–16): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*

A-யின் 20 மீ தெற்கில் *D* உள்ளது. *D*-யின் 5 மீ கிழக்கில் *C* உள்ளது. *C*-யின் 10 மீ வடக்கில் *E* உள்ளது. *E*-யின் 10 மீ கிழக்கில் *F* உள்ளது. *F*-ன் 15 மீ தெற்கில் *G* உள்ளது. *G*-யின் 15 மீ மேற்கில் *X* உள்ளது. *A*-யின் 10 மீ கிழக்கில் *B* உள்ளது. *B*-யின் 10 மீ தெற்கில் *Z* உள்ளது. *C*-யின் 10 மீ கிழக்கில் *L* உள்ளது. **[IBPS PO Exam, 2018]**

14. புள்ளி *G*-க்கு எந்த திசையில் புள்ளி *A* உள்ளது?
(*a*) வட-மேற்கு (*b*) தென்-கிழக்கு
(*c*) வடக்கு (*d*) தென்-மேற்கு
(*e*) வட-கிழக்கு

15. கீழே உள்ளவற்றுள் ஏதோ ஒரு ஒற்றுமையுடன் நான்கு உறுப்புகள் சேர்ந்து ஒரு குழுவை உருவாக்குகின்றன. எது அந்த குழுவில் இல்லை?
(*a*) *EF* (*b*) *EC* (*c*) *LG* (*d*) *BZ*
(*e*) *CL*

16. புள்ளி *F* மற்றும் புள்ளி *L*-க்கு இடையே உள்ள தூரம் என்ன?
(*a*) 10 மீ (*b*) 5 மீ (*c*) 15 மீ (*d*) 20 மீ
(*e*) 25 மீ

குறிப்புகள் (கேள்விகள் 17–19): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப்படித்து பின் கோவிகளுக்கு பதிலளிக்கவும்:*

புள்ளி *Q*-வின் 10 மீ வடக்கில் புள்ளி *U* உள்ளது. புள்ளி *U*-வின் 10 மீ கிழக்கில் புள்ளி *T* உள்ளது. புள்ளி *T*-யின் 15 மீ தெற்கில் புள்ளி *S* உள்ளது. புள்ளி *Q*-வின் 20 மீ தெற்கில் புள்ளி *P* உள்ளது. புள்ளி *P*-யின் 25 மீ கிழக்கில் புள்ளி *R* உள்ளது. புள்ளி *S*-ன் 15 மீ கிழக்கில் புள்ளி *L* உள்ளது. புள்ளி *U* மற்றும் *P*-க்கு இடையே உள்ள நடுப்புள்ளி *M* ஆகும். **[SBI Clerk Exam, 2018]**

17. புள்ளி *L* மற்றும் *R*-க்கு இடையேயுள்ள தூரம் என்ன?
(*a*) 10 மீ (*b*) 15 மீ (*c*) 5 மீ (*d*) 20 மீ
(*e*) 25 மீ

18. *P*-யுடன் ஒப்பிடுகையில் புள்ளி *T* எந்த திசையில் உள்ளது?
(*a*) வட-மேற்கு (*b*) தென்-மேற்கு
(*c*) தென்-கிழக்கு (*d*) வட-கிழக்கு
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

19. கீழே உள்ளவற்றுள் எவை உட்புற கோட்டில் உள்ளன?
(*a*) *P*, *R*, *S* (*b*) *Q*, *M*, *L*
(*c*) *U*, *S*, *T* (*d*) *M*, *S*, *L*
(*e*) *Q*, *S*, *L*

குறிப்புகள் (கேள்விகள் 20–21): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:*

புள்ளி *P*-யின் தெற்கில் 15 மீ தூரத்தில் புள்ளி *Q* உள்ளது. புள்ளி *Q*-வின் கிழக்கில் 10 மீ தூரத்தில் புள்ளி *R* உள்ளது. புள்ளி *R*-ன் வடக்கில் 5 மீ தூரத்தில் புள்ளி *S* உள்ளது. புள்ளி *S*-ன் மேற்கில் 5 மீ தூரத்தில் புள்ளி *T* உள்ளது. **[SBI PO Exam, 2018]**

20. புள்ளி *P*-யின் கிழக்கில் 10 மீ தூரத்தில் புள்ளி *U* உள்ளது. எனில், புள்ளி *S* புள்ளி *U*-விலிருந்து எவ்வளவு தூரத்தில் எந்த திசையில் உள்ளது?
(*a*) 10 மீ, வடக்கு (*b*) 5 மீ, தெற்கு
(*c*) 15 மீ, வடக்கு (*d*) 10 மீ, தெற்கு
(*e*) 5 மீ, வடக்கு

21. புள்ளி *T*-யிலிருந்து புள்ளி *P* எந்த திசையில் உள்ளது?
(*a*) வட-மேற்கு (*b*) தென்-கிழக்கு
(*c*) வடக்கு (*d*) தென்-மேற்கு
(*e*) வட-கிழக்கு

22. கைலாஷ் கிழக்கில் 3 கிமீ நடந்து பின் தெற்கில் திரும்பி 4 கிமீ நடந்தான். மீண்டும் மேற்கில் திரும்பி 6 கிமீ நடந்தான். அவன் தொடங்கிய இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் அவன் உள்ளான்? **[SSC-CGL Tier I Exam, 2015]**
(*a*) 7 கிமீ (*b*) 5 கிமீ (*c*) 6 கிமீ (*d*) 3 கிமீ

23. ராஜு வடக்காக 25 கிமீ வண்டி ஒட்டிய பின் இடதுபுறம் திரும்பி 5 கிமீ தூரம் பயணித்து '0' என்கிற புள்ளியை அடைகிறார். பின் அவர் வலது புறம் திரும்பி மேலும் 5 கிமீ தூரம் போகிறார். பிறகு கிழக்கில் திரும்பி 5 கிமீ தூரம் போகிறார். தொடங்கிய இடத்திற்கு மீண்டும் அவர் போவதற்கு எத்தனை கிமீ தூரம் பயணிக்க வேண்டும்? **[SSC-CGL Tier I Exam, 2015]**
(*a*) 30 கிமீ (*b*) 20 கிமீ (*c*) 25 கிமீ (*d*) 35 கிமீ

24. சுனிதா தன் ஸ்கூட்டியை வடக்கு புறமாக ஒட்டி பின் இடது புறம் திரும்பி பின் மீண்டும் இடது புறமாக 4 கிமீ தூரம் ஓட்டினாள். இப்பொழுது அவள் தொடங்கிய புள்ளியிலிருந்து மேற்கில் சரியாக 2 கிமீ தூரத்தில் உள்ளதை உணர்ந்தாள். எனில், தொடக்கத்தில் வடக்கு புறமாக எவ்வளவு தூரம் தனது ஸ்கூட்டியை ஓட்டினாள்? **[SSC-CGL Tier I Exam, 2015]**
(*a*) 2 கிமீ (*b*) 4 கிமீ (*c*) 6 கிமீ (*d*) 5 கிமீ

25. பிங்கி கிழக்கில் 600 மீ தூரம் நடந்து பின் இடதுபுறமாக திரும்பி 500 மீ தூரம் நடந்து பின் இடதுபுறமாக திரும்பி 600 மீ தூரம் நடந்து பின் இடது புறமாக திரும்பி மீண்டும் 500 மீ தூரம் நடந்தபிறகு நின்றாள். தொடக்க புள்ளியில் இருந்து எவ்வளவு தூரத்தில் (மீ-ரில்) அவள் இப்பொழுது நிற்கிறாள்? **[SSC-CGL Tier I Exam, 2015]**
(*a*) 0 (*b*) 600 (*c*) 500 (*d*) 2200

26. தனது பள்ளியிலிருந்து தொடங்கி கிழக்கு நோக்கி 7 கிமீ நடந்தார். பின் இடதுபுறமாக திரும்பி 4 கிமீ நடந்த பின் வதுபுறமாக திரும்பி 2 கிமீ தூரம் நடந்தார். பின் மீண்டும் வலதுபுறமாக திரும்பி 3 கிமீ தூரம் நடந்தார். இப்பொழுது அவர் எந்த திசையில் உள்ளார்? **[SSC-CGL Tier I Exam, 2014]**
(*a*) தெற்கு (*b*) வடக்கு (*c*) கிழக்கு (*d*) மேற்கு

திசை உணர்வு சோதனை

27. விஜய் தெற்காக 12 கிமீ பயணித்த பின் தனது வலதுபுறமாக திரும்பி 10 கிமீ தூரம் பயணித்து பின் வலதுபுறமாக திரும்பி 12 கிமீ தூரம் பயணித்தார். தொடங்கிய புள்ளியிலிருந்து அவர் எவ்வளவு தூரம் பயணம் செய்துள்ளார்?

[SSC-CGL Tier I Exam, 2014]

(a) 22 கிமீ (b) 44 கிமீ

(c) 12 கிமீ (d) 10 கிமீ

28. ஒரு சதுர வயலில் மையத்தில் ராஜ் நிற்கிறார். குறுக்காக வட-கிழக்கு நோக்கி நடக்கத் தொடங்கினர். பின், அவர் வலது புறமாக திரும்பி வயலின் வெகு தூர மூலைக்கு சென்றார். பின் வலது புறமாக திரும்பி நடக்க தொடங்கினார். நடு வழியில் அவர் மீண்டும் வலது புறமாக திரும்பி நடக்க தொடங்கினார். பாதி வழியில் அவர் இடது புறமாக திரும்பி வயலின் புதிய முனையை அடைந்தார். இப்பொழுது அவர் எந்த திசையில் உள்ளார்?

[SSC-CGL Tier I Exam, 2013]

(a) வடக்கு (b) தெற்கு

(c) வட-மேற்கு (d) தென்-மேற்கு

29. ஒரு பையன் தனது வீட்டிலிருந்து அதிகாலை நடக்க தொடங்கி சூரியனை பார்த்தபடி நேராக 8 கிமீ நடந்தான். பின் வலதுபுறம் திரும்பி 3 கிமீ நடந்தான். பின் மீண்டும் வலது புறம் திரும்பி 2 கிமீ நடந்து பின் இடதுபுறமாக 1 கிமீ நடந்தான். பின் அவன் வலது புறம் திரும்பி 1 கிமீ நடந்து பின் வலதுபுறம் திரும்பி நேராக 4 கிமீ நடந்தான். தொடங்கிய புள்ளியிலிருந்து அவன் இப்பொழுது எவ்வளவு தொலைவில் உள்ளான்?

[SSC-CGL Tier I Exam, 2013]

(a) 5 கிமீ (b) 6 கிமீ (c) 2 கிமீ (d) 4 கிமீ

விடைகள்

1. (d)	2. (e)	3. (b)	4. (a)	5. (c)	6. (c)	7. (d)	8. (c)	9. (b)	10. (c)
11. (b)	12. (c)	13. (a)	14. (a)	15. (c)	16. (a)	17. (b)	18. (d)	19. (d)	20. (d)
21. (a)	22. (b)	23. (a)	24. (b)	25. (a)	26. (a)	27. (d)	28. (d)	29. (a)	

தீர்வுகள்

தீர்வுகள் (1–3):



1. $EH = \sqrt{5^2 - 4^2} = 3$ மீ

$\therefore AB = 8 - 3 = 5$ மீ

2. புள்ளி F-ன் வட-மேற்கு திசையில் புள்ளி L உள்ளது.

3. $EH = \sqrt{EL^2 - HL^2}$

$= \sqrt{5^2 - 4^2} = 3$

தீர்வுகள் (4–6):



4. புள்ளி P-யுடன் ஒப்பிடுகையில் அதன் வட-மேற்கு திசையில் புள்ளி F உள்ளது.

5. எனவே, தேர்வு (c) மட்டுமே திசை வகி இருந்து தெமே நோக்கி செல்கிறது.

6.



X மற்றும் D இரண்டிற்கிடையே உள்ள தூரம்

$= 35 + 20 = 55$ மீ.

தீர்வுகள் (7–9):

7.



V-யுடன் ஒப்பிடும் பொழுது மேற்கில் 20 மீ தூரத்தில் U உள்ளது.

8.



தேர்வு (c)-யில் உள்ள புள்ளிகள் தெகி முதல் வமே திசையை கொண்டுள்ளது. மற்றவை தெமே முதல் வகி திசையை கொண்டுள்ளன.

9.



W மற்றும் S ஆகியவற்றுக்கிடையே உள்ள தூரம் = 15 மீ.

தீர்வுகள் (10–12):

10.



புள்ளி J-யின் கிழக்கில் 5 மீ தூரத்தில் புள்ளி P உள்ளது.

11.



T மற்றும் W ஆகியவற்றுக்கிடையே உள்ள தூரம் = TW = VJ = 9 மீ.

12.



புள்ளி V-யின் வட கிழக்கில் புள்ளி R உள்ளது.

13.



தொடக்க புள்ளி மற்றும் செவிலி மருத்துவரை சந்திக்க இடம் ஆகியவற்றுக்கிடையே உள்ள தூரம்

= $\sqrt{60^2 + 80^2} = \sqrt{100^2} = 100$.

தீர்வுகள் (14–16):



14. புள்ளி G-யின் வட-கிழக்கு திசையில் புள்ளி A உள்ளது.
15. LG-க்கு இடையேயுள்ள தூரம் 5 மீ. மற்றவைகளுக்கு இடையேயுள்ள தூரம் 10 மீ.
16. F மற்றும் L ஆகியவற்றுக்கிடையே உள்ள தூரம் = EC = 10 மீ.

தீர்வுகள் (17–19):



17. புள்ளி L மற்றும் R-க்கு இடையேயுள்ள தூரம் = 15 மீ.
18. புள்ளி P-யின் வட-கிழக்கு திசையில் புள்ளி T உள்ளது.
19. புள்ளி MSL ஒரே கோட்டில் உள்ளது.

தீர்வுகள் (20–21):



20. புள்ளி U-வின் தெற்கில் 10 மீ தொலைவில் புள்ளி S உள்ளது.
21. புள்ளி T-யின் வட-மேற்கில் புள்ளி P உள்ளது.
22. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் உள்ளது போல் கைலாஷ் நடந்தார்:



தேவையான தூரம் = $(AD)^2 = (AE)^2 + (DE)^2$

$= (4)^2 + (3)^2 = 16 + 9 = 25$

$\therefore \quad AD = 5$ கிமீ.

எனவே, விடை (b) ஆகும்.

23.



$QA = QD + QA$

$= 5$ கிமீ $+ 25$ கிமீ $= 30$ கிமீ.

எனவே, தேர்வு (a) விடையாகும்.

24.



தேவைப்படும் தூரம் = $AB = CD$ = 4 கிமீ

எனவே, தேர்வு (b) சரியான விடையாகும்.

25.



தொடக்க புள்ளியிலிருந்து 0 மீ தூரத்தில் பிங்கி உள்ளார்.

26.



இப்பொழுது பிரதாப் தெற்கு திசை நோக்கி உள்ளார்.

27.



$AD = BC = 10$ கிமீ

28.



ராஜ் தென்-மேற்கு திசையில் உள்ளார்.

29.



$AG = AB - BG$

$= 8 - 3 = 5$ கிமீ

எனவே, (*a*) என்பது சரியான விடை.

9

தருக்க வென் வரைபடம்

வகை 1

இந்த வகையில் கொடுக்கப்பட்டுள்ள குழு உறுப்புகளை (பொருட்களை) சம்பந்தப்படுத்தி ஆராய்ந்து பின் அதை வரைபடமாக தேர்வு எழுதுபவர் வரையவேண்டும்.
கீழே சில வெவ்வேறு வென் வரைபடங்கள் அவற்றின் தெளிவான தாக்கங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளன.
மூன்று உறுப்புகளின் குழு உங்களுக்கு கொடுக்கப்பட்டால்,

1. அந்த மூன்று உறுப்புகளும் வெவ்வேறு குழுவைச் சேர்ந்தது எனில், அவற்றைக் குறிக்கும் வென் வரைபடம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

எ.கா: மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள்

இந்த மூன்று உறுப்புகளில் ஒன்றுக்கொன்று எந்த சம்பந்தமும் இல்லை. எனவே, படம் 1-ல் உள்ளது போல் தனித்தனியாக காண்பிக்கப்பட்டுள்ளது.



படம் 1

2. முதலாவதின் ஒரு பொருள் இரண்டாவதின் ஒரு வகுப்பை சேர்ந்தது மற்றும் இரண்டாவதின் ஒரு பொருள் மூன்றாவதின் ஒரு வகுப்பை சேர்ந்தது எனில், அவற்றின் அமைப்பு படம் 2-ல் உள்ளது போல் மூன்று மைய வட்டங்களாக காண்பிக்கப்படும்.



படம் 2

எ.கா: நொடிகள், நிமிடங்கள், மணிகள்

நொடிகளானது நிமிடங்களின் பகுதி மற்றும் நிமிடங்கள் மணிகளின் ஒரு பகுதி என்பது தெளிவு. எனவே, வெண் வரைபடமானது பக்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது போல். வட்டம் *A* *நொடிகளையும்*, வட்டம் *B* *நிமிடங்களையும்* வட்டம் *C* *மணிகளையும்* குறிக்கிறது.

3. இரண்டு தனித்தனியான பொருட்கள் மூன்றாவதின் ஒரு வகுப்பை சேர்ந்தவை எனில், அவை இரண்டு தனித்தனியான வட்டங்களாக ஒரு பெரிய வட்டத்திற்குள் படம் 3-ல் உள்ளது போல் குறிப்பிடப்படும்.



படம் 3

எ.கா: மேஜை, நாற்காலி, மரச்சாமான்கள்.

மேஜை மற்றும் நாற்காலி முறையே தனித்தனியான பொருட்கள். ஆனால், இரண்டும் மரச்சாமான்களில் அடங்கும். எனவே, பக்கத்தில் உள்ள படத்தில் வட்டம் *A* *மேஜையையும்*, வட்டம் *B* *நற்காலியையும்* மற்றும் வட்டம் *C* *மரச்சாமான்களையும்* குறிக்கின்றன.

4. இரண்டு பொருட்கள் மூன்றாவதின் ஒரு வகுப்பை சேர்ந்தவை ஒவ்வொன்றிலும் உள்ள சில பொருட்கள் ஒரு பொதுவான குணத்தைக் கொண்டுள்ளன எனில், அவை முறையே ஒரு பெரிய வட்டத்தின் உள்ளே ஒன்றுக்கொன்று வெட்டும் இரண்டு சிறிய வட்டங்களாக குறிக்கப்படுகின்றன.



படம் 4

எ.கா: ஆண்கள், அப்பாக்கள், சகோதரர்கள்.

சில அப்பாக்கள் சகோதரர்களாக இருக்கலாம். அதுபோலவே மாற்றியும் இருக்கலாம். எனவே, அப்பாக்கள் மற்றும் சகோதரர்களை இரண்டு வெட்டும் வட்டங்களாக வெளிப்படுத்தலாம். மேலும் அப்பாக்கள் மற்றும் சகோதரர்கள் ஆண்கள். எனவே அப்பாக்களை குறிக்கும் வட்டம் *A* மற்றும் *சகோதரர்களை* குறிக்கும் வட்டம் *B* மற்றும் ஆண்களை குறிக்கும் வட்டம் *C* என அருகில் உள்ள படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது போல் இருக்கும். (படம் 4)

5. இரண்டு உறுப்புகள் மூன்றாவது உறுப்புடன் பகுதியாக தொடர்பு கொண்டதாகவும் அவை ஒவ்வொன்றும் தனித்தன்மையுடையதாகவும் இருந்தால் அவை மூன்றும்



படம் 5

தனித்தனியாக வெட்டும் வட்டங்களாக ஒரே கோட்டில் இருக்கும்.

எ.கா: நாய்கள், செல்லப் பிராணிகள், பூனைகள்.

சில நாய்கள் மற்றும் சில பூனைகள் செல்லப் பிராணிகள் ஆகும். ஆனால் எல்லா செல்லப் பிராணிகளும் நாங்கள் அல்லது பூனைகள் அல்ல. மேலும் நாய்கள் மற்றும் பூனைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை அல்ல. எனவே, கொடுக்கப்பட்டுள்ள அனைத்தும் படம் 5-ல் காண்பிக்கப்பட்டுள்ளது போல் இருக்கும். வட்டம் A நாய்களையும். வட்டம் B செல்லப் பிராணிகளையும் வட்டம் C பூனைகளையும் குறிக்கும்.

6. மூன்று உறுப்புகளும் ஒன்றுக்கொன்று பகுதியாக சம்பந்தப்பட்டவை எனில், அவை கீழே உள்ள படம் 6-ல் உள்ளது போல் குறிக்கப்படும்.

எ.கா. எழுத்தர்கள், அரசாங்க பணியாளர்கள், படித்தவர்கள்.



படம் 6

சில எழுத்தர்கள் அரசாங்க பணியாளர்களாக மற்றும் சிலர் படித்தவர்களாக இருப்பார்கள். அதுபோலவே, சில அரசாங்க பணியாளர்கள் எழுத்தர்களாக மற்றும் சிலர் படித்தவர்களாக இருப்பார்கள். மேலும் படித்தவர்கள் சிலர் எழுத்தர்களாக மற்றும் சிலர் அரசாங்க பணியாளர்களாக இருப்பார்கள். எனவே, கொடுக்கப்பட்டுள்ள உறுப்புகள் படம் 6-ல் உள்ளபடி மூன்று வகைகளைக் குறிக்கும் மூன்று வெட்டும் வட்டங்களாக இருக்கும்.

7. ஒரு உறுப்பு இரண்டாவதின் வகையை சேர்ந்ததாகவும் மூன்றாவது உறுப்பு மற்ற இரண்டிலும் முழுவதுமாக வேறுபட்டு இருந்தால் பக்கத்தில் உள்ளபடி உறுப்புகள் குறிக்கப்படும்.



படம் 7

எ.கா: பொறியாளர்கள், மனிதர்கள், எலிகள்.

அனைத்து பொறியாளர்களும் மனிதர்கள். இதை இரண்டு மைய வட்டங்களாக வெளிப்படுத்தலாம். ஆனால் எலிகளின் இனம் இந்த இரண்டிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டது. எனவே, இந்த உறுப்புகள் படம் 7-ல் உள்ளபடி குறிப்பிடப்படும். படம் 7-ல் உள்ளபடி வட்டம் A பொறியாளர்களையும், வட்டம் B மனிதர்களையும் வட்டம் C எலிகளையும் குறிக்கிறது.

8. ஒரு உறுப்பு இரண்டாவதின் வகையை சேர்ந்தது மற்றும் மூன்றாவது உறுப்பு இந்த இரண்டுடன் ஒரு பகுதியுடன் தொடர்புடையது எனில், அவை கீழே காண்பிக்கப்பட்டது போல் குறிப்பிடப்படும்.

எ.கா: பெண்கள், அம்மாக்கள், மருத்துவர்கள்.

அனைத்து அம்மாக்களும் பெண்கள். இது இரண்டு மைய வட்டங்களாக குறிப்பிடப்படும். ஆனால், சில பெண்கள் மற்றும் சில அம்மாக்கள் மருத்துவர்களாக இருக்கலாம். எனவே, மருத்துவர்களைக் குறிக்கும் வட்டம் இரண்டு மைய வட்டங்களையும் வெட்டும். எனவே, வரைபடமானது படம் 8-ல் உள்ளது போல் இருக்கும். வட்டம் A அம்மாக்களையும், வட்டம் B பெண்களையும், மற்றும் வட்டம் C மருத்துவர்களையும் குறிக்கும்.



படம் 8

9. ஒரு உறுப்பு இரண்டாவது வகையை சேர்ந்தது மற்றும் மூன்றாவது உறுப்பு இரண்டாவது உறுப்புடன் பகுதியாக தொடர்புடையது எனில், அவை பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள வட்டங்கள் போல அமையும்.



படம் 9

எ.கா: ஆண்கள், அப்பாக்கள், குழந்தைகள்.

அனைத்து அப்பாக்களும் ஆண்கள். இவை மைய வட்டங்களாக குறிப்பிடப்படும். ஆனால், சில ஆண்கள் குழந்தைகள் ஆவர். ஆனால், குழந்தைகள் அப்பாக்களாக இருக்க முடியாது. எனவே, படம் 9-ல் காண்பித்துள்ளபடி, வட்டம் A அப்பாக்களையும், வட்டம் B ஆண்களையும் வட்டம் C குழந்தைகளையும் குறிக்கும்.

10. இரண்டு உறுப்புகள் ஒன்றுடன் ஒன்று பகுதியாக தொடர்புடையது மற்றும் மூன்றாவது உறுப்பு மற்ற இரண்டிலிருந்து முழுவதுமாக வேறுபட்டது எனில், அவை இணைந்து குறிப்பிடப்படும்.

எ.கா: பேராசிரியர், நூலாசிரியர், குழந்தைகள்.



படம் 10

சில பேராசிரியர்கள் நூலாசிரியர்களாக இருக்கலாம். அதேபோல் நேர்மாறாகவும் இருக்கலாம். இரண்டு வெட்டுகின்ற வட்டங்களாக இது குறிப்பிடப்படும். ஆனால் குழந்தைகள் இந்த இரண்டிலுமிருந்து முற்றிலுமாக வேறுபட்டவர்கள். எனவே, வட்டம் A பேராசிரியர்களையும், வட்டம் B நூலாசிரியர்களையும் வட்டம் C குழந்தைகளையும் குறிப்பிடும் வகையில் படம்-10-ல் உள்ளவாறு வென் வரைபடம் அமையும்.

பயிற்சி 9A

குறிப்புகள் (கேள்விகள் 1–10): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் பொருட்களின் மூன்று குழுக்கள் கொடுக்கப்பட்டிருக்கும். கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து படங்களிலிருந்து கேள்வியுடன் சரியான தொடர்புடைய படத்தை கண்டுபிடிக்கவும்.



(a) (b) (c)



(d) (e)

1. டென்னிஸ் விசிறி, கிரிக்கெட் ஆட்டக்காரர்கள், மாணவர்கள்
2. பூக்கள், ஆடைகள், வெள்ளை **(R.R.B. 2004)**
3. புகைபிடிப்பவர்கள், வழக்கறிஞர்கள், புகை பிடிக்காதவர்கள் **(S.S.C. 2002)**
4. மனிதர்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள்
5. ஆண்கள், அப்பாக்கள், மருத்துவர்கள்
6. அப்பாக்கள், மாமாக்கள், ஆண்
7. இசைக்கலைஞர்கள், ஆண், பெண் **(M.A.T. 2001)**
8. திமிங்கலங்கள், மீன்கள், முதலைகள்
9. சமூக விரோதிகள், திருடர்கள், மிரட்டுபவர்கள் **(M.B.A. 2006)**
10. உயரமான மனிதன், கருப்பு நிற தலைமுடி கொண்ட மனிதர்கள், இந்தியர்கள்

குறிப்புகள் கேள்விகள் (11–15): கீழே ஐந்து சாத்தியமான உறுப்பினர் திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும், பட்டியலிடப்பட்ட மூன்று பொருட்களிலிருந்து சரியான விளக்கத்தை தேர்ந்தெடுக்கவும். (PGDM, 2002)



(a) (b) (c)



(d) (e)

11. ஆப்பிள், தங்க ஆப்பிள், பழங்கள்
12. முக்கோணங்கள், ஸ்கேலேன் முக்கோணங்கள், செங்கோண முக்கோணங்கள்
13. உயிரெழுத்து இல்லாத வார்த்தைகள், ஒரு உயிரெழுத்து கொண்ட வார்த்தைகள், குறைந்தது இரண்டு உயிரெழுத்துகள் கொண்ட வார்த்தைகள்
14. உயிரெழுத்து இல்லாத வார்த்தைகள், ஒரு உயிரெழுத்து மட்டுமே கொண்ட வார்த்தைகள், குறைந்தது இரண்டு உயிரெழுத்துக்கள் கொண்ட வார்த்தைகள்
15. உயிரெழுத்தில் தொடங்கும் பெயர்கள், *E*-யில் தொடங்கும் பெயர்கள், *A* அல்லது *P*-யில் தொடங்கும் பெயர்கள்.
16. கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் எந்த குழு சரியாக காண்பிக்கப்பட்டுள்ளது? **(R.R.B. 2004)**



(a) மிருகங்கள், பூச்சிகள், கரப்பான் பூச்சிகள்

(b) மிருகங்கள், ஆண்கள், பெண்கள் மற்றும் ஆண் பெண் இருபாலினம் கொண்ட உயிரினம் (ஹெர்மா.ப்ரோடைட்)

(c) மாநிலங்கள், மாவட்டங்கள், யூனியன் பிரதேசங்கள்

(d) நாடு, மாநிலங்கள், மாவட்டங்கள்

17. ஒரு நிறுவனத்தின் கணக்கு துறையில் சிலர் பட்டய கணக்கர்கள் மற்றும் சிலர் செலவு கணக்காளர்கள். வெகு சிலர் மட்டுமே பட்டய கணக்கு மற்றும் செலவு கணக்கு இரண்டிலும் தேர்ச்சி பெற்றவர்கள் இவர்களைத்தவிர சிலர் மேலாண்மை கணக்கில் தேர்ச்சி பெற்றவர்கள். மேலாண்மை கணக்காளர்களில் சிலர் பட்டய கணக்கு அல்லது செலவு கணக்கு அல்லது இரண்டிலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். கீழே உள்ளவற்றுள் எந்த படம் இவை அனைத்தையும் பூர்த்தி செய்யும்? **(S.S.C. 2003)**



(a) (b) (c) (d)

18. 46 மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பில் 8 மாணவர்கள் கால்பந்து, கால்பந்தும் விளையாடும்

6 மாணவர்களையும் கொண்ட கிரிக்கெட் விளையாடும் 17 மாணவர்கள் உள்ளனர். ஹாக்கி விளையாடும் 16 மாணவர்களில் 4 மாணவர்கள் கிரிக்கெட் விளையாடுவார்கள். ஆனால், கால்பந்து விளையாடமாட்டார்கள். 5 மாணவர்கள் கேரம் விளையாடுவார்கள். ஆனால், வெளிப்புற விளையாட்டுக்கள் விளையாடமாட்டார்கள். கீழே உள்ளவற்றுள் எந்த படம் இவை அனைத்தையும் குறிக்கிறது? **(S.S.C. 2003)**



(a) (b) (c) (d)

19. கிரிக்கெட் விளையாடுபவர்களில் சிலர் டென்னிஸ் விளையாடுபவர்கள். டென்னிஸ் விளையாடுபவர்களில் சிலர் ஹாக்கி விளையாடுபவர்கள். கிரிக்கெட் விளையாடும் எவரும் ஹாக்கி விளையாடமாட்டார். **(S.S.C. 2002)**

கீழே உள்ள வரைபடங்களில் இவை அனைத்தையும் எது பூர்த்தி செய்கிறது?



(a) (b) (c) (d)

20. இரவு விருந்து ஒன்றில் மீன் மற்றும் இறைச்சி பரிமாறப்பட்டது. சிலர் மீன்கள் மட்டுமே உண்டனர் மற்றும் சிலர் இறைச்சி மட்டுமே உண்டனர். மீதியுள்ளவர்கள் மீன் மற்றும் இறைச்சி இரண்டையும் உண்டனர். கீழே உள்ள வரை படங்களில் எது இவற்றை மிகச்சரியாக விவரிக்கிறது? **(R.R.B. 2006)**



(a) (b) (c) (d)

குறிப்புகள் (கேள்விகள் 21–30): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் மூன்று உறுப்புகள் இருக்கும். இந்த உறுப்புகளிடையே உள்ள ஒற்றுமை அல்லது தொடர்பை பயன்படுத்தி ஒவ்வொரு கேள்வியையும் சரியான படத்துடன் இணைக்கவும். அந்த படத்தை குறிக்கும் எழுத்து உங்கள் விடையாக இருக்கும்.



(a) (b) (c) (d) (e)

21. பிளம்கள், தக்காளிகள், பழங்கள் **(M.A.T. 2005)**
22. பொறியாளர், மருத்துவர், மனிதர்கள்
23. கடல், தீவு, மலை
24. தேர்ந்தெடுக்கப்பட்ட அவை, பாராளுமன்ற உறுப்பினர் (எம்.பி), சட்டமன்ற உறுப்பினர் (எம்.எல்.ஏ)
25. இசைக்கலைஞர்கள், இசைக்கருவிகள், வாசிப்பவர்கள், வயலின் வாசிப்பவர்கள் **(M.B.A. 2006; S.S.C. 2003)**
26. கடலை, பீன்ஸ், பருப்பு வகைகள்
27. மலைகள், காடுகள், பூமி **(M.A.T. 2005)**
28. உயிரியல், தாவரவியல், விலங்கியல்
29. தொழிற்சாலை, இயந்திரங்கள், தயாரிப்பு
30. சரக்கு வண்டி, கப்பல், பொருட்கள்

விடைகள் (பயிற்சி 9A)

1. (c)	2. (a)	3. (a)	4. (e)	5. (d)	6. (d)	7. (a)	8. (b)	9. (e)	10. (c)
11. (a)	12. (e)	13. (d)	14. (c)	15. (b)	16. (c)	17. (c)	18. (c)	19. (c)	20. (a)
21. (e)	22. (b)	23. (e)	24. (b)	25. (a)	26. (b)	27. (c)	28. (b)	29. (b)	30. (d)

தீர்வுகள் (பயிற்சி 9A)

1.



சில மாணவர்கள் கிரிக்கெட் விளையாடுபவர்கள்.

கிரிக்கெட் விளையாடுபவர்களில் சிலர் டென்னிஸ் விசிறிகள்.

சில மாணவர்கள் டென்னிஸ் விசிறிகளாக இருக்கலாம்.

எனவே, கொடுக்கப்பட்டுள்ளவை ஒன்றுக்கொன்று பகுதியாக தொடர்பு கொண்டுள்ளன.

2.



சில பூக்கள் வெள்ளை நிறமுடையவை.

சில துணிகள் வெள்ளை நிறமுடையவை.

பூக்கள் மற்றும் துணிகள் வெவ்வேறானவை.

3.



வழக்கறிஞர்களில் சிலர் புகை பிடிப்பவர்கள்.

சில வழக்கறிஞர்கள் புகை பிடிக்காதவர்கள்.

4.



அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகள் மனிதர்கள் ஆவர். ஆனால் சில ஆசிரியர்கள் பட்டதாரிகளாக இருக்கலாம். மற்றும் சில பட்டதாரிகள் ஆசிரியர்களாக இருக்கலாம்.

5.



அனைத்து அப்பாக்களும் ஆண்கள்.

சில ஆண்கள் மற்றும் சில அப்பாக்கள் மருத்துவர்களாக இருக்கலாம்.

6.



அனைத்து அப்பாக்களும் ஆண்கள்.

சில அப்பாக்கள் மற்றும் சில ஆண்கள் மாமாக்களாக இருக்கலாம்.

7.



ஆண்கள் மற்றும் பெண்கள் முற்றிலுமாக வேறுபட்டவர்கள்.

சில இசைக் கலைஞர்கள் ஆண்கள்.

சில இசைக் கலைஞர்கள் பெண்கள்.

8.



திமிங்கலம் ஒரு பாலூட்டி மற்றும் முதலை ஊர்வது. எனவே, திமிங்கலங்கள், மீன்கள் மற்றும் முதலைகள் ஒன்றுக்கொன்று முற்றிலுமாக வேறுபட்டவை.

9.



திருடர்கள் மற்றும் மிரட்டுபவர்கள் சமூக விரோதிகள் ஆவர். ஆனால், திருடுபவர்களில் சிலர் மிரட்டுபவர்களாக இருக்கலாம். தலைகீழாகவும் இருக்கலாம்.

10.



உயர்ந்த மனிதர்களில் சிலருக்கு கருப்பு நிற தலைமுடி இருக்கும். கருமை நிற தலைமுடி கொண்ட சிலர் இந்தியர்களாக இருக்கலாம். உயர்ந்த மனிதர்களில் சிலர் இந்தியர்களாக இருக்கலாம்.

11.



எல்லா கோல்டன் ஆப்பிள்களும் ஆப்பிள்களாகும்.
எல்லா ஆப்பிள்களும் பழங்கள்.

12.



ஸ்கேலன் முக்கோணங்கள் மற்றும் செங்கோண முக்கோணங்கள் அனைத்தும் முக்கோணங்களில் அடங்கும்.

ஆனால், சில ஸ்கேலன் முக்கோணங்கள் செங்கேண முக்கோணங்கள் மற்றும் தலைகீழாகவும் இருக்கலாம்.

13.



கொடுக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டவை.

14.



15.



A அல்லது *P*-யில் தொடங்கும் பெயர்கள்

A-யில் தொடங்கும் பெயர்கள் உயிரெழுத்தில் தொடங்கும் பெயர்களின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால், *P*-யில் தொடங்கும் பெயர்கள் மாறுபட்டவையாக இருக்கும்.

16.





17.



18.



19.



20.



21.



எல்லா *ப்ளம்களும் பழங்களாகும்*. ஆனால், *தக்காளிகள்* முற்றிலும் மாறுபட்டவை.

22.



பொறியாளர் மற்றும் *மருத்துவர்* வெவ்வேறானவர். ஆனால், இருவரும் *மனிதர்களுள்* அடங்குவர்.

23.



தீவு கடலின் ஒரு பகுதியாகும். ஆனால், மலை முற்றிலும் மாறுபட்டது.

24.



எந்த ஒரு எம்.பி-யும் எம்.எல்.ஏ-வாக இருக்க முடியாது. ஆனால், அனைத்து எம்.எல்.ஏ மற்றும் எம்.பி அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவையில் இருப்பார்கள்.

25.

வயலின் வாசிப்பவர் அனைவரும் இசைக்கருவிகள் வாசிப்பவர்கள். இசைக்கருவிகள் வாசிக்கும் அனைவரும் இசைக்கலைஞர்கள்.

26.



கடலை மற்றும் பீன்ஸ் வெவ்வேறானவை. ஆனால், இரண்டும் பருப்பு வகையை சேர்ந்தவை.

27.



மலைகள் மற்றும் காடுகள் பூமியின் பகுதிகள். ஆனால், சில மலைகள் காடுகளாகும். மற்றும் சில காடுகள் மலைகளாகும்.

28.



தாவரவியல் மற்றும் விலங்கியல் முற்றிலும் வெவ்வேறானவை. ஆனால், இரண்டும் உயிரியலின் கிளைகள்.

29.



இயந்திரம் மற்றும் உற்பத்தி முற்றிலும் வெவ்வேறானவை. இரண்டும் தொழிற்சாலையில் இருக்கும்.

30.



சரக்கு வண்டி மற்றும் கப்பல் முற்றிலும் வெவ்வேறானவை. ஆனால், சில பொருட்கள். சரக்கு வண்டியில் ஏற்றப்படும். சில பொருட்கள் கப்பலில் ஏற்றப்படும்.

வகை 2

இந்த வகை கேள்விகளில் ஒரு வென் வரைபடம் கொடுக்கப்பட்டிருக்கும். அதில் உள்ள ஒவ்வொரு வடிவமும் ஒரு குறிப்பிட்ட வகுப்பை குறிப்பிடும். தேர்வு எழுதுபவர் படத்தை நன்கு ஆராய்ந்து கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் படி கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா.1: அனைத்து வடிவியல் வரைபடங்களிலும் இடம்பெறும் எண் எது? **(C.P.O. 2003)**



(a) 3 **(b)** 4 **(c)** 5 **(d)** 8

தீர்வு. முக்கோணம், செவ்வகம், வட்டம் ஆகிய மூன்றிலும் உள்ள ஒரு எண்ணைக் கண்டுபிடிக்க வேண்டும். அது 4. எனவே, விடை (*b*) ஆகும்.

எ.கா. 2: கீழே உள்ள வரைபடத்தில் சதுரம் பெண்களையும், வட்டம் உயரமான மனிதர்களையும், முக்கோணம் டென்னிஸ் வீரர்களையும், செவ்வகம் நீச்சல் வீரர்களையும் குறிக்கிறது.



மேலே உள்ள வரைபடத்தின் அடிப்படையில் கீழே உள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

1. டென்னிஸ் விளையாடாத ஆனால் உயரமான நீச்சல் வீராங்கனைகளை எந்த எழுத்து குறிக்கிறது?

(*a*) *C* (*b*) *D* (*c*) *G* (*d*) *H*

தீர்வு. சதுரம், வட்டம் மற்றும் முக்கோணம் மூன்றின் பொது பகுதியில் உள்ள எழுத்துக்கள் உயரமான நீச்சல் வீராங்கணைகளை குறிக்கிறது. அதாவது., *G* மற்றும் *H*. ஆனால், கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் படி, பெண்கள் டென்னிஸ் வீராங்கனைகளாக இருக்க முடியாது. எனவே, தேவைப்படும் பகுதி முக்கோணத்தின் உள்ளே இருக்க முடியது. அதாவது., *H*-ஆக இருக்க முடியாது. எனவே, கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் படி அனைத்தையும் பூர்த்தி செய்வது *G* ஆகும். எனவே, விடை (*c*) ஆகும்.

2. உயரம் குறைவான டென்னிஸ் விளையாடும் நீச்சல் வீராங்கனைகளை எந்த எழுத்து குறிக்கிறது?

(*a*) *B* (*b*) *E* (*c*) *F* (*d*) இவற்றில் எதுவுமில்ல

தீர்வு. டென்னிஸ் விளையாடும் நீச்சல் வீராங்கனைகளை குறிக்கும் பகுதியானது சதுரம், முக்கோணம் மட்டும் செவ்வகத்தின் பொதுவான பகுதியாகும். அதாவது., *H*. ஆனால், பெண்களின் உயரம் குறைவு என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அந்த பொது பகுதி வட்டத்திற்குள் வராது. *H* வட்டத்தின் பகுதி என்பதால், விடை (*d*) ஆகும்.

3. டென்னிஸ் விளையாடாத நீச்சலும் தெரியாத பெண்களை எந்த எழுத்து குறிக்கிறது?

(*a*) *C* (*b*) *D* (*c*) *E* (*d*) *G*

தீர்வு. சதுரம் மற்றும் வட்டத்தின் பொது பகுதி உயரமான பெண்களைக் குறிப்பிடுகிறது. அதாவது., *D*, *C*, *G* மற்றும் *H*. ஆனால், கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் படி, பெண்கள் டென்னஸ்சும் விளையாடுவதில்லை மற்றும் நீச்சல் வீராங்கனையும் அல்ல. எனவே, தேவைப்படும் பகுதி செவ்வகம் மற்றும் முக்கோணத்தின் பகுதியாக இருக்க முடியாது. முக்கோணத்தின் உட்புறம் *C* உள்ளது. மற்றும் செவ்வகத்தின் உட்புறம் *G*-யும் இரண்டின் பொது பகுதியில் *H*-உம் உள்ளது. எனவே, விடை (*b*) ஆகும்.

4. டென்னிஸ் விளையாடாத நீச்சலடிக்கும் உயரமான ஆண்களை எந்த எழுத்து குறிக்கிறது?

(*a*) *I* (*b*) *J* (*c*) *K* (*d*) *L*

தீர்வு. வட்டத்தின் உட்புறம் உள்ள பகுதி உயரமான நபர்களை குறிக்கிறது. அதாவது., *C*, *D*, *G*, *H*, *I*, *J* மற்றும் *K*. அந்த நபர்கள் பெண்கள் அல்ல. மற்றும் டென்னிஸ் விளையாடுபவர்கள் அல்ல. எனவே, அந்த பகுதி சதுரம் அல்லது முக்கோணத்தின் பகுதியாக இருக்க முடியாது. ஆகவே, *C*, *D*, *G*, *H* ஆகியவற்றை விலக்க வேண்டும். மேலும், கொடுக்கப்பட்டுள்ள தகவலின் படி, அந்த நபர்கள் நீச்சலடிப்பவர்கள். எனவே, அந்த பகுதி செவ்வகத்தின் பகுதியாக இருக்கவேண்டும். அது *K*. எனவே, விடை (*c*) ஆகும்.

எ.கா. 3: கொடுக்கபட்டுள்ள வரைபடத்தின் அடிப்படையில் கேள்விகள் அமைந்துள்ளன.



(1) அரசாங்க ஊழியர்களை செவ்வகம் குறிக்கிறது.

(2) நகர்ப்புற மனிதர்களை முக்கோணம் குறிக்கிறது.

(3) பட்டதாரிகளை வட்டம் குறிக்கிறது.

(4) குமாஸ்தாக்களை சதுரம் குறிக்கிறது.

1. கீழே உள்ளவற்றுள் எந்த வாக்கியம் சரி?

(a) அனைத்து அரசாங்க ஊழியர்களும் குமாஸ்தாக்கள்

(b) சில அரசாங்க ஊழியர்கள் பட்டதாரிகள் மற்றும் குமாஸ்தாக்கள்

(c) எல்லா அரசாங்க ஊழியர்களும் பட்டதாரிகள்

(d) எல்லா குமாஸ்தாக்களும் அரசாங்க ஊழியர்கள் ஆனால் பட்டதாரிகள் அல்ல

தீர்வு. மேலே உள்ளவற்றை பின்வருமாறு குறிப்பிடலாம். வாக்கியம் (a) சரியாக இருக்க செவ்வகம் சதுரத்தின் உள்ளே இருக்க வேண்டும். இது உண்மையல்ல. எனவே, (a) தவறு.

வாக்கியம் (b) சரியாக இருக்க செவ்வகம், வட்டம் மற்றும் சதுரம் மூன்றுக்கும் பொதுவான பகுதி இருக்கவேண்டும். அந்த பகுதி 6. எனவே, (b) சரியாகும்.

வாக்கியம் (c) சரியாக இருக்க, முக்கோணம் வட்டத்தின் உட்புறம் இருக்க வேண்டும். எனவே, (c) தவறு.

வாக்கியம் (d) சரியாக இருக்க, சதுரம் முழுவதுமாக முக்கோணத்தில் இருக்க வேண்டும். மற்றும் சதுரத்தின் எந்த பகுதியும் வட்டத்துடன் பொதுவாக இருக்கக் கூடாது. இது சரியல்ல. எனவே, விடை (d) தவறு.

2. கீழே உள்ளவற்றுள் எந்த வாக்கியம் சரி?

(a) எல்லா நகர்ப்புற மக்களும் பட்டதாரிகள்

(b) சில குமாஸ்தாக்கள் அரசாங்க ஊழியர்கள் ஆனால் நகர்ப்புற வாசிகள் அல்ல

(c) எல்லா அரசாங்க ஊழியர்களும் குமாஸ்தாக்கள்

(d) சில நகர்ப்புறவாசிகள் பட்டதாரிகள் அல்ல

தீர்வு. தீர்வு (a) உண்மையாவதற்கு முக்கோணம் வட்டத்திற்குள் இருக்க வேண்டும். இது உண்மையல்ல. எனவே, (a) தவறு.

தீர்வு (b) உண்மையாவதற்கு சதுரம் மற்றும் செவ்வகத்தின் பொது பகுதி ஆனால் முக்கோணத்தில் இல்லாமல் இருக்க வேண்டும். அது போல் எந்த பகுதியும் இல்லை. எனவே, (b) தவறு.

தீர்வு (c) உண்மையாவதற்கு செவ்வகம் சதுரத்தினுள் இருக்க வேண்டும். இது உண்மையல்ல. எனவே, (c) தவறு.

தீர்வு (d) உண்மையாவதற்கு முக்கோணத்தின் சில பகுதி வட்டத்தின் வெளியே இருக்க வேண்டும். இது உண்மையாகும். எனவே, (d) சரியாகும்.

3. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்கவும்:

(a) சில குமாஸ்த்தாக்கள் அரசாங்க அதிகாரிகள்

(b) எந்த குமாஸ்தாவும் நகர்ப்புறவாசி அல்ல

(c) எல்லா பட்டதாரியும் நகர்ப்புறவாசிகள்

(d) எல்லா பட்டதாரிகளும் அரசாங்க அதிகாரிகள்

தீர்வு. வாக்கியம் (a) உண்மையாவதற்கு சதுரம் மற்றும் செவ்வகத்தின் பொதுப்பகுதி இருக்க வேண்டும். 6 மற்றும் 7 அவ்வாறானவை. எனவே, (a) சரியாகும்.

மேலும், வாக்கியம் (b) உண்மையாவதற்கு சதுரம் மற்றும் முக்கோணத்தின் பொதுப் பகுதி இருக்க வேண்டும். ஆனால் சதுரமானது முக்கோணத்தின் உள்ளே முழுவதுமாக இருக்கிறது. எனவே, (b) தவறு. வாக்கியம் (c) உண்மையாவதற்கு வட்டம் முக்கோணத்தின் உட்புறம் இருக்க வேண்டும். எனவே, (c) தவறு. வாக்கியம் (d) உண்மையாவதற்கு வட்டம் செவ்வகத்தின் உட்புறம் இருக்க வேண்டும். எனவே, (d) தவறு.

பயிற்சி 9B

குறிப்புகள் (கேள்விகள் 1–4): கீழே உள்ள வரைபடத்தில் ஒவ்வொரு குறிப்பிட்ட வகுப்பு மக்களை குறிக்கும் மூன்று வெவ்வேறு வெட்டும் வட்டங்கள் உள்ளன. a–g வரை வெவ்வேறு பகுதிகள் குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கேள்வியிலும் உள்ள வாக்கியங்களை கவனமாகப் படித்து பின் வாக்கியத்தை சரியாகக் குறிக்கும் பகுதியை குறிப்பிடும் எழுத்தை கண்டுபிடிக்கவும். (M.B.A. 2006)



1. சித்திரக்காரர்களாக இருக்கும் சீனர்கள் இசைக்-கலைஞர்கள் அல்ல:
   (a) b (b) c (c) d (d) g
2. சித்திரக்காரர்கள் சீனர்களும் இல்லை. இசைக்-கலைஞர்களும் அல்ல:
   (a) b (b) c (c) f (d) g
3. இசைக்கலைஞர்களாக இருக்கும் சீனர்கள் சித்திரக்-காரர்கள் அல்ல:
   (a) d (b) c (c) b (d) a
4. சித்திரக்காரர்களாக இருக்கும் சீனர்கள் இசைக்-கலைஞர்களாகவும் உள்ளனர்.
   (a) a (b) b (c) c (d) d

குறிப்புகள் (கேள்விகள் 5–9): *கீழே உள்ள படத்தை நன்கு கவனித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.*



(C.B.I. 2003)

5. பாடகர் அல்லாத இந்திய தலைவர்களை எந்த பகுதி குறிக்கிறது?
   (a) 2 (b) 3 (c) 4 (d) 5
6. பாடகர்களாக இருக்கும் இந்திய தலைவர்களை எந்த பகுதி குறிக்கிறது?
   (a) 2 (b) 3 (c) 4 (d) 5
7. பாடகரும் இல்லாத இந்தியரும் இல்லாத தலைவர்களை எந்த பகுதி குறிக்கிறது?
   (a) 2 (b) 3 (c) 6 (d) 7
8. தலைவர்களாக இல்லாத இந்திய பாடகர்களை எந்த பகுதி குறிக்கிறது?
   (a) 1 (b) 2 (c) 3 (d) 4
9. இந்தியரும் அல்லாத தலைவர்களும் அல்லாத பாடகர்களை எந்த பகுதி குறிக்கிறது?
   (a) 2 (b) 4 (c) 6 (d) 7

குறிப்புகள் (கேள்விகள் 10–14): *கீழே உள்ள வரைபடத்தில் வட்டம் கல்லூரி பேராசிரியர்களை குறிக்கிறது. முக்கோணம் அறுவை சிகிச்சை நிபுணர்களையும், மருத்துவ நிபுணர்களை செவ்வகமும் குறிக்கிறது.* **(M.B.A. 2002)**



10. அறுவை சிகிச்சை நிபுணர்களாக உள்ள கல்லூரி பேராசிரியர்களை குறிக்கும் பகுதி எது?
    (a) A (b) B (c) C (d) D
11. மருத்துவ நிபுணர்களாகவும் உள்ள அறுவை சிகிச்சை நிபுணர்களை குறிக்கும் பகுதி எது?
    (a) B (b) C
    (c) X (d) Z
12. C குறிப்பிடுவது;
    (a) மருத்துவ நிபுணர்கள்
    (b) கல்லூரி பேராசிரியர்கள்
    (c) அறுவை சிகிச்சை நிபுணர்கள்
    (d) மருத்துவ மற்றும் அறுவை சிசிச்சை நிபுணர்கள்
13. B குறிப்பிடுவது;
    (a) மருந்து நிபுணர்களும் அல்லாத அறுவை சிகிச்சை நிபுணர்களும் அல்லாத பேராசிரியர்களை குறிக்கிறது.
    (b) அறுவை சிகிச்சை நிபுணர்கள் அல்லாத பேராசிரியர்களை குறிக்கிறது.
    (c) பேராசிரியர்களும் அல்லாத மருத்துவ நிபுணர்களும் அல்லாத அறுவை சிகிச்சை நிபுணர்களும்.
    (d) மருத்துவ நிபுணர்கள் அல்லாத பேராசிரியர்கள்.
14. மருத்துவ நிபுணர்களாகவும் உள்ள கல்லூரி பேராசிரியர்களை குறிப்பிடுவது
    (a) A (b) X (c) Y (d) Z

குறிப்புகள் (கேள்விகள் 15–18): *கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தை நன்கு கவனித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:* **(M.A.T. 2002)**



மேலே உள்ள படத்தில் முக்கோணமானது கிராமத்தில் உள்ள பெண்களையும், சதுரம் வேலைக்கு போகாத பெண்களையும், வட்டம் படித்த பெண்களையும் குறிக்கிறது.

15. கிராமத்தில் உள்ள வேலைக்கு போகும் படித்த பெண்களை குறிப்பிடுவது;
    (a) D (b) E (c) F (d) G
16. எழுத்து D குறிப்பிடுவது;
    (a) கிராமத்தில் உள்ள படிக்காத பெண்கள்
    (b) கிரமாத்தில் உள்ள வேலைக்கு போகும் படிக்காத பெண்கள்
    (c) வேலைக்கு போகாத படித்த பெண்கள்
    (d) வேலைக்கு போகும் படித்த பெண்கள்
17. கிராமத்தில் உள்ள படித்த வேலைக்கு போகாத பெண்களை குறிப்பிடுவது;
    (a) A (b) B (c) D (d) E
18. வேலைக்கு போகாத படித்த பெண்களை குறிப்பிடுவது;
    (a) B மற்றும் C (b) D மற்றும் E
    (c) E மற்றும் F (d) G மற்றும் E

குறிப்புகள் (கேள்விகள் 19–23): கீழே உள்ள படத்தை நன்கு கவனித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:



இதில், பெரிய முக்கோணம் கலைஞர்களையும், சிறிய முக்கோணம் விஞ்ஞானிகளையும், செவ்வகம் நடனக் கலைஞர்களையும், வட்டம் மருத்துவர்களையும் குறிக்கிறது.
(C.P.O. 2005)

19. மருத்துவர்களாகவும் நடனக்கலைஞர்களாக மட்டுமே உள்ள கலைஞர்களை குறிப்பிடும் எழுத்து எது?
(a) A (b) D (c) G (d) H

20. விஞ்ஞானிகளும் அல்லாத மருத்துவர்களும் அல்லாத கலைஞர்களை குறிக்கும் எழுத்து எது?
(a) A மற்றும் B (b) A மற்றும் L
(c) B மற்றும் G (d) L மற்றும் H

21. நடனக்கலைஞர்கள் மற்றும் மருத்துவர்களாகவும் உள்ள கலைஞர்களை குறிப்பிடும் எழுத்துக்கள் எவை?
(a) A மற்றும் D (b) C மற்றும் A
(c) C மற்றும் D (d) G மற்றும் H

22. மருத்துவர்கள், விஞ்ஞானிகள், நடனக் கலைஞர்கள் அல்லாத கலைஞர்களை குறிக்கும் எழுத்து எது?
(a) A (b) D (c) F (d) G

23. கலைஞர்கள் அல்லாத விஞ்ஞானிகளைக் குறிக்கும் எழுத்து எது?
(a) B (b) D (c) F (d) L

குறிப்புகள் (கேள்விகள் 24–27): கீழ் உள்ள வென் வரைபடத்தை கவனிக்கவும்.



24. கொடுக்கப்பட்டுள்ள பாடங்களில் ஏதாவது மூன்று பாடங்களை படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை;
(a) 62 (b) 63 (c) 64 (d) 66

25. வரலாறு அல்லது கணிதம் அல்லது அறிவியல் பாடத்தை படிக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை;
(a) 183 (b) 190 (c) 424 (d) 430

26. வரலாறு மற்றும் புவியியல் பாடங்களை எடுத்துக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை;
(a) 62 (b) 63
(c) 65 (d) 66

27. மாணவர்களால் மிக அதிகமாக எடுக்கப்பட்ட பாடம் எது?
(a) கணிதம் (b) அறிவியல்
(c) புவியியல் (d) வரலாறு

குறிப்புகள் (கேள்விகள் 28–30): கீழே உள்ள படத்தின் அடிப்படையில் கேள்விகள் உள்ளன. **(M.B.A. 1998)**



ஹிந்தி பேசும் மக்களை முக்கோணமும், பிரெஞ்சு பேசும் மக்களை வட்டமும், ஆங்கிலம் பேசும் மக்களை சதுரமும், ஜெர்மன் பேசும் மக்களை செவ்வகமும் குறிப்பிடுகிறது.

28. மேலே உள்ள படத்தில் கீழே உள்ள எந்த வாக்கியம் சரி?
(a) பிரெஞ்சு, பேசும் அனைவரும் ஜெர்மன் பேசுகிறார்கள்.
(b) பிரெஞ்சு பேசும் அனைவரும் ஆங்கிலம் பேசுகிறார்கள்.
(c) ஜெர்மன் பேசும் அனைவரும் ஆங்கிலம் மற்றும் ஹிந்தி பேசுவார்கள்.
(d) பிரெஞ்சு பேசும் அனைவரும் ஹிந்தியும் பேசுவார்கள்.

29. படத்தில், கீழே உள்ள எந்த வாக்கியம் சரி?
(a) சிலரால் நான்கு மொழிகளையும் பேச முடியும்.
(b) ஜெர்மன் பேசும் சிலரால் ஹிந்தி அல்லது ஆங்கிலம் பேச முடியும்.
(c) ஆங்கிலம் பேசும் சிலரால் அனைத்து மொழிகளையும் பேச முடியாது.
(d) ஹிந்தி பேசும் அனைவரும் பிரெஞ்ச் பேசுவார்கள். ஆனால், ஜெர்மன் பேச முடியாது.

30. மேலே உள்ள படத்தில், கீழே உள்ள எந்த வாக்கியம் சரி?
(a) ஜெர்மன் பேசும் மக்களால் பிரெஞ்ச் பேச முடியாது.
(b) ப்ரெஞ்ச் பேசும் எவராலும் ஜெர்மன் பேச முடியாது.
(c) ஹிந்தி பேசும் சிலரால் பிரெஞ்ச், ஆங்கிலம் மற்றும் ஜெர்மனும் பேச முடியும்.
(d) பிரெஞ்ச் பேசும் சிலரால் ஹிந்தி மற்றும் ஆங்கிலம் பேச முடியும். ஆனால், ஜெர்மன் பேச முடியாது.

குறிப்புகள் (கேள்விகள் 31–35): கீழே உள்ள படம் மனிதர்களின் குழுவைக் குறிக்கிறது. முக்கோணம் படித்த நபர்களையும், செவ்வகம் காவலர்களையும், நீள் வட்டம் சாலை வரி கட்டுபவர்களையும், வட்டம் கடைக்காரர்களையும் குறிக்கின்றன. **(NMAT, 2005)**



கீழே உள்ள கேள்விகள் மேலே கொடுக்கப்பட்டுள்ள படத்தை பொறுத்து உள்ளன.

31. படத்தை பார்த்து இவ்வாறு சொல்லலாம்
   (a) கடைக்காரர் அல்லது காவலர் அல்லாத சிலர் படித்தவர்கள்.
   (b) கடைக்காரர் அல்லாத காவலர்களில் சிலர் படிக்காதவர்களாக இருந்தாலும் சாலை வரி கட்டுகிறார்கள்.
   (c) கடைக்காரர் அல்லது காவலர்களில் சிலர் படித்தவர்கள் மற்றும் சாலை வரி கட்டுபவர்கள்.
   (d) மேலே உள்ள அனைத்தும் சரி.

32. படத்தைப் பொறுத்த வரை, நாம் அறிவது;
   (a) காவலர்கள் சாலை வரி கட்டுவதில்லை.
   (b) கடைக்காரர்கள் சாலை வரி கட்டுவதில்லை.
   (c) கடைக்காரர்களில் சிலர் படித்தவர்கள்.
   (d) காவலர்களில் சிலர் கடைக்காரர்கள்.

33. மேலே உள்ள படத்திலிருந்து நாம் இவ்வாறு முடிவுக்கு வரலாம்.
   (a) படித்த அனைத்து காவலர்களும் சாலை வரி கட்டுகிறார்கள்.
   (b) படித்த கடைக்காரர்கள் அனைவரும் சாலை வரி கட்டுகிறார்கள்.
   (c) சாலை வரி கட்டும் காவலர் அனைவரும் படித்தவர்கள்.
   (d) சாலை வரி கட்டும் கடைக்காரர் அனைவரும் படித்தவர்கள்.

34. படத்தை பார்த்து நாம் இவ்வாறு சொல்ல முடியும்.
   (a) படிக்காத சில காவலர்கள் சாலை வரி கட்டுகிறார்கள்.
   (b) படித்த கடைக்காரர்கள் சிலர் சாலை வரி கட்டுகிறார்கள்.
   (c) சாலை வரி கட்டும் காவலர்களில் சிலர் கடைக்காரர்களும் கூட.
   (d) சாலை வரி கட்டும் கடைக்காரர்களில் சிலர் காவலர்கள் கூட.

35. படத்தைப் பார்த்து இவ்வாறு கூறலாம்;
   (a) படிக்காத காவலர் கடைக்காரராக இருந்தாலும், படித்த கடைக்காரர் எவரும் காவலர் அல்ல.
   (b) படித்த கடைக்காரர்களில் சிலர் காவலர்களின் வேலையை செய்தாலும் சாலை வரி கட்டுபவர்கள்.
   (c) சாலை வரி கட்டுகின்ற படித்த காவலர்களில் சிலர் படிக்காத கடைக்காரர்களுடன் இலாபத்தை பகிர்ந்து கொள்கிறார்கள்.
   (d) படிக்காத கடைக்காரர் எவரும் காவலர் அல்ல மற்றும் படித்த காவலர் எவரும் கடைக்காரர் அல்ல.

குறிப்புகள் (கேள்விகள் 36–45): கீழே கொடுக்கப்பட்ட படத்தை பொறுத்து கேள்விகள் அமைந்துள்ளன;
(1) வட்டம் நேர்மையைக் குறிக்கிறது.
(2) முக்கோணம் தந்திரத்தைக் குறிக்கிறது.
(3) செவ்வகம் உழைப்பைக் குறிக்கிறது.
(4) சதுரம் நம்பிக்கையைக் குறிக்கிறது.

(Hotel Management, 1999)



கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் X, Y மற்றும் Z ஆகிய மூன்று நபர்களின் பண்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை கேள்விக்கு கேள்வி மாறுபடும். ஒவ்வொரு கேள்வியிலும் கொடுக்கப்பட்டுள்ள பண்புகளை கருத்தில் கொண்டு எந்த வென் வரைபடத்(ங்கள்)தில் இந்த மூன்று நபர்களையும் பொருத்தலாம் என்பதை தேர்வு எழுதுபவர் கண்டுபிடிக்க வேண்டும். மூன்று நபர்களையும் எந்த வரைபடத்(ங்கள்)தில் பொருத்த பெருத்த முடியுமோ அந்த வரைபடமே உங்கள் விடையாகும். கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்றுகளிலிருந்து ஒன்று சரியான விடையாகும். சரியான மாற்றைக் கண்டுபிடிக்கவும். சரியான மாற்றைக் கண்டுபிடிக்கவும்.

தருக்க வென் வரைபடம்

36. X— தந்திரம், நேர்மை, நம்பிக்கை
Y— தந்திரம், உழைப்பு
Z— நம்பிக்கை, தந்திரம்
(a) A (b) E (c) F (d) H

37. X— தந்திரம், உழைப்பு, நம்பிக்கை
Y— தந்திரம், உழைப்பு
Z— நேர்மை, உழைப்பு
(a) D (b) E (c) F (d) G

38. X— நேர்மை, தந்திரம், உழைப்பு
Y— உழைப்பு, தந்திரம், நம்பிக்கை
Z— நேர்மை, நம்பிக்கை, உழைப்பு
(a) A (b) B
(c) E (d) G

39. X— நேர்மை, தந்திரம்
Y— நேர்மை, உழைப்பு
Z— உழைப்பு, தந்திரம், நம்பிக்கை
(a) E (b) F (c) G (d) H

40. X— நேர்மை, தந்திரம், நம்பிக்கை
Y— தந்திரம், உழைப்பு
Z— நேர்மை, நம்பிக்கை
(a) B, F (b) B, G
(c) F, G (d) D, F

விடைகள் (பயிற்சி 9B)

1. (a)	2. (c)	3. (a)	4. (c)	5. (a)	6. (b)	7. (c)	8. (d)	9. (d)	10. (d)
11. (d)	12. (c)	13. (c)	14. (b)	15. (d)	16. (b)	17. (d)	18. (c)	19. (c)	20. (a)
21. (d)	22. (a)	23. (c)	24. (a)	25. (a)	26. (b)	27. (b)	28. (d)	29. (b)	30. (c)
31. (d)	32. (c)	33. (c)	34. (b)	35. (d)	36. (c)	37. (d)	38. (d)	39. (c)	40. (a)

தீர்வுகள் (பயிற்சி 9B)

1. தேவைப்படும் பகுதியானது வட்டங்கள் A மற்றும் B-யின் பொதுப்பகுதியில் உள்ளது. ஆனால், வட்டம் C-யின் வெளிப்பகுதியில் உள்ளது. *அதாவது.*, b.
2. தேவைப்படும் பகுதியானது வட்டம் B-யின் உட்புறத்தில் உள்ளது. ஆனால், வட்டம் A அல்லது C-யின் பகுதி அல்ல. *அதாவது.*, f.
3. தேவைப்படும் பகுதியானது வட்டங்கள் A மற்றும் C-யின் பொதுப் பகுதியாகும். ஆனால், அது வட்டம் B-யின் பகுதி அல்ல. *அதாவது.*, d.
4. மூன்று வட்டங்களின் பொதுப் பகுதியே தேவைப்படும் பகுதியாகும். *அதாவது.*, c.
5. தேவைப்படும் பகுதியானது வட்டங்கள் X மற்றும் Y-யின் பொதுப்பகுதி. மற்றும் அந்த பகுதி வட்டம் Z-ன் வெளியில் உள்ளது. *அதாவது.*, 2.
6. தேவைப்படும் பகுதியானது மூன்று வட்டங்களின் பொதுப் பகுதியாகும். *அதாவது.*, 3.
7. தேவைப்படும் பகுதியானது வட்டம் Y-யின் உட்புறம் உள்ளது. ஆனால் வட்டம் X அல்லது வட்டம் Z-ன் பகுதி அல்ல. *அதாவது.*, 6.
8. தேவைப்படும் பகுதி வட்டங்கள் X மற்றும் Z இரண்டின் பொதுப் பகுதி. ஆனால், அப்பகுதி வட்டம் Y-யின் வெளியில் உள்ளது. *அதாவது.*, 4.
9. தேவைப்படும் பகுதி வட்டம் Z-ன் உட்புறம் உள்ளது. ஆனால், அது வட்டம் X அல்லது Y-யின் பகுதி அல்ல. *அதாவது.*, 7.
10. தேவைப்படும் பகுதி முறையே வட்டம் மற்றும் முக்கோணத்தின் பொதுப்பகுதி, *அதாவது.*, D.
11. தேவைப்படும் பகுதியானது முக்கோணம் மற்றும் செவ்வகத்தின் பொது பகுதி. ஆனால், வட்டத்தின் வெளியில் உள்ளது. *அதாவது.*, Z.
12. C வட்டத்தின் உட்புறம் உள்ளது. எனவே, C அறுவை சிகிச்சை நிபுணர்களை குறிக்கிறது.
13. B செவ்வகத்தின் உட்புறம் உள்ளது. ஆனால், B-யானது பேராசிரியர்களும் அல்லாத அறுவை சிகிச்சை நிபுணர்களும் அல்லாத மருத்துவ நிபுணர்களைக் குறிக்கிறது.
14. தேவைப்படும் பகுதியானது வட்டம் மற்றும் செவ்வகத்தின் பொதுப் பகுதியாகும். ஆனால், அது முக்கோணத்தின் வெளிப்புறமாக உள்ளது. *அதாவது.*, X.
15. தேவைப்படும் பகுதியானது முக்கோணம் மற்றும் வட்டத்தின் பொதுப் பகுதி. ஆனால் அது சதுரத்தின் வெளிப்புறத்தில் உள்ளது. *அதாவது.*, G.
16. D-யானது முக்கோணம் மற்றும் சதுரத்தின் உட்புறமாக மற்றும் வட்டத்தின் வெளிப்புறமாக உள்ளது. எனவே, D-யானது கிராமத்திலுள்ள படிக்காத வேலைக்கு போகாத பெண்களைக் குறிக்கிறது.
17. தேவைப்படும் பகுதியானது முக்கோணம், வட்டம் மற்றும் சதுரத்தின் பொதுப் பகுதியாகும். *அதாவது.*, E.
18. தேவைப்படும் பகுதியானது வட்டம் மற்றும் சதுரத்தின் பொதுப் பகுதி. *அதாவது.*, E மற்றும் F.
19. தேவைப்படும் பகுதியானது பெரிய வட்டம், வட்டம் மற்றும் செவ்வகத்தின் பொதுப் பகுதி. *அதாவது.*, G.

20. தேவைப்படும் பகுதியானது பெரிய முக்கோணத்தின் உட்புறத்திலும் மற்றும் சிறிய முக்கோணம் மற்றும் வட்டம் ஆகியவற்றின் வெளிப்புறத்திலும் உள்ளது. அதாவது., A மற்றும் B.

21. தேவைப்படும் பகுதியானது பெரிய முக்கோணம், வட்டம் மற்றும் செவ்வகத்தின் பொதுப் பகுதியாகும். அதாவது., G மற்றும் H.

22. தேவைப்படும் பகுதியானது பெரிய வட்டத்திற்குள் உள்ள பகுதி மட்டுமே. அதாவது., A.

23. தேவைப்படும் பகுதியானது சிறிய முக்கோணத்தின் உட்புறத்தில் ஆனால் பெரிய முக்கோணத்தின் வெளிப்புறத்தில் உள்ளது. அதாவது., F.

24. தேவைப்படும் மாணவர்களின் குழுவானது ஏதாவது மூன்று முக்கோணங்களின் பொதுப் பகுதியாகம்.

$\therefore$ தேவைப்படும் எண் = (13 + 13 + 18 + 18) = 62.

25 தேவைப்படும் மாணவர்களின் குழுவானது வரலாறு, கணிதம் மற்றும் அறிவியலைக் குறிக்கும் வட்டங்களின் உட்புறம் உள்ளது.

$\therefore$ தேவைப்படும் எண் = (9 + 14 + 18 + 15 + 16 + 13 + 12 + 20 + 18 + 13 + 16 + 19) = 183.

26. தேவைப்படும் மாணவர்களின் குழுவானது வரலாறு மற்றும் புவியியலைக் குறிக்கும் வட்டங்களின் பொதுப் பதியாகும்.

$\therefore$ தேவைப்படும் எண் = (20 + 13 + 12 + 18) = 63.

27. வரலாறு எடுத்துக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை = (16 + 12 + 13 + 20 + 18 + 14 + 13) = 111.

புவியலை எழுத்துக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை = (9 + 16 + 13 + 20 + 13 + 12 + 18) = 101.

அறிவியலை எழுத்துக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை = (19 + 15 + 18 + 20 + 18 + 16 + 13) = 119.

கணிதத்தை எடுத்துக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை = (9 + 14 + 13 + 20 + 13 + 15 + 18) = 102.

28. வட்டமானது முழுவதுமாக முக்கோணத்தில் இருப்பதால், பிரெஞ்சு பேசும் அனைவரும் ஹிந்தியும் பேசுவார்கள்.

29. கொடுக்கப்பட்டுள்ள நான்கு வடிவங்களின் பொதுப்பகுதி எதுவும் இல்லாததால் எவருமே நான்கு மொழிகளையும் பேசுபவர் இல்லை. எனவே, (a) தவறு.

மேலே உள்ள கூற்றின் படி, ஆங்கிலம் பேசும் மக்கள் அனைத்து மொழிகளையும் பேச முடியாது. எனவே (c) தவறு.

செவ்வகமானது சதுரம் மற்றும் முக்கோணத்துடன் பொதுப் பகுதியை பகிர்ந்து கொள்வதால் ஜெர்மன் பேசும் சிலரால் ஹிந்தி அல்லது ஆங்கிலம் பேச முடியும். எனவே, (b) சரியானது முக்கோணம் வட்டத்திற்குள் இல்லை. எனவே ஹிந்தி பேசும் அனைவரும் பிரெஞ்சு பேசுவதில்லை என்பது தெளிவு. எனவே, (d). தவறு.

30. செவ்வகம் மற்றும் வட்டத்தின் பொதுப் பகுதி எதுவும் இல்லாததால் ஜெர்மன் பேசும் மக்களால் பிரெஞ்சு பேசமுடியாது. அதேபோல் தலைகீழும் கூட. எனவே, (a) மற்றும் (b) சரியானவை.

நான்கு வடிவங்களுக்கான பொதுப்பகுதி எதுவும் இல்லாததால், ஹிந்தி பேசும் எவராலும் மற்ற மூன்று மொழிகளை பேசமுடியாது. எனவே (c) சரியல்ல. வட்டமானது முக்கோணம் மற்றும் சதுரத்துடன் பொதுப்பகுதியைக் கொண்டுள்ளது. ஆனால், செவ்வகத்துடன் பொதுப் பகுதி இல்லை. வாக்கியம் (d)-யில் உள்ளதை இது வெளிப்படுத்துகிறது. எனவே, (d) சரியானது.

31. செவ்வகம் மற்றும் வட்டத்தின் வெளிப்புறமாக முக்கோணத்தின் ஒரு பகுதி உள்ளது. எனவே, (a) சரியானது. நீள் வட்டத்தின் ஒரு பகுதி முக்கோணத்தின் வெளிமப்புறமாகவும், வட்டத்தின் உட்புறமாகவும் இருப்பதால் (b) சரியாகும்.

செவ்வகம், முக்கோணம் மற்றும் நீள் வட்டத்தின் பொதுப் பகுதி உள்ளது. அல்லது முக்கோணம், நீள்வட்டம் மற்றும் வட்டத்தின் பொதுப்பகுதி உள்ளது. எனவே, (c) சரியாகும்.

32. செவ்வகம் மற்றும் நீள்வட்டத்தின் பொதுப் பகுதியானது சாலை வரி கட்டும் காவலர்களைக் குறிக்கிறது. எனவே, (a) சரியல்ல. நீள்வட்டம் மற்றும் வட்டம் ஆகியவற்றின் பொதுப்பகுதி சாலை வரிகட்டும் கடைக்காரர்களைக் குறிக்கிறது. எனவே, (b) சரியல்ல.

முக்கோனம் மற்றும் வட்டத்தின் பொதுப் பகுதியானது படித்த சில கடைக்காரர்களைக் குறிக்கிறது. (c) சரி.

எனவே, செவ்வகம் மற்றும் வட்டத்தின் பொதுப் பகுதி எதுவும் இல்லை. எனவே வாக்கியம் (d) தவறு.

33. செவ்வகம் மற்றும் முக்கோணத்தின் பொதுப்பகுதி நீள் வட்டத்திற்கு வெளியே உள்ளது. எனவே, (a) தவறு. முக்கோணம் மற்றும் வட்டத்தின் பொதுப்பகுதி நீள்-வட்டத்திற்கு வெளியே உள்ளது. எனவே, (b) தவறு. நீள்வட்டம் மற்றும் முக்கோணத்தின் பொதுப் பகுதி முக்கோணத்தின் உட்புறமாக உள்ளது. எனவே, (c) சரியாகும்.

நீள்வட்டம் மற்றும் வட்டத்தின் பொதுப் பகுதி முழுவதுமாக முக்கோணத்தில் இல்லை. எனவே, (d) தவறு.

34. செவ்வகம் முழுவதுமாக முக்கோணத்தில் உள்ளதால் படிக்காத காவலர் எவரும் இல்லை என்பது தெளிவு. எனவே, (a) தவறு முக்கோணம் மற்றும் வட்டத்தின்

தருக்க வென் வரைபடம்

பகுதி . பொதுவாக உள்ள பகுதிற்குள் இருப்பதால், (*b*) சரியாகும்.

செவ்வகம் மற்றும் வட்டத்தின் பொதுப் பகுதி எதுவும் இல்லாததால், (*c*) மற்றும் (*d*) இரண்டும் தவறு.

35. செவ்வகம் மற்றும் வட்டத்தின் பொதுப் பகுதி இல்லாததால் (*d*) மட்டுமே சரியானது. கேள்விகள் 38 முதல் 42 இந்த ஒவ்வொரு கேள்விகளிலும், கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளை படிப்படியாக ஆராய்ந்து விடையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

36.

நபர்	தேவை	ஆராய வேண்டியது	திருப்தியளிப்பது
X	முக்கோணம், வட்டம் மற்றும் சதுரத்தின் பொதுப் பகுதி	*A, E, F, H*	*F*
Y	முக்கோணம் மற்றும் செவ்வகத்தின் பொதுப் பகுதி	*F*	*F*
Z	முக்கோணம் மற்றும் சதுரத்தின் பொதுப் பகுதி	*F*	*F*

37.

நபர்	தேவை	ஆராய வேண்டியது	திருப்தியளிப்பது
X	செவ்வகம் மற்றும் சதுரத்தின் பொதுப் பகுதி	*D, E, F, G*	*D, G*
Y	முக்கோணம் மற்றும் செவ்வகத்தின் பொதுப் பகுதி	*D, G*	*D, G*
Z	வட்டம் மற்றும் செவ்வகத்தின் பொதுப் பகுதி	*D, G*	*G*

38.

நபர்	தேவை	ஆராய வேண்டியது	திருப்தியளிப்பது
X	வட்டம், முக்கோணம் மற்றும் செவ்வகத்தின் பொதுப் பகுதி	*A, B, E, F*	*A, B, E, G*
Y	முக்கோணம், செவ்வகம் மற்றும் சதுரத்தின் பொதுப் பகுதி	*A, B, E, G*	*G*
Z	வட்டம், செவ்வகம் மற்றும் சதுரத்தின் பொதுப் பகுதி	*G*	*G*

39.

நபர்	தேவை	ஆராய வேண்டியது	திருப்தியளிப்பது
X	வட்டம் மற்றும் முக்கோணத்தின் பொதுப் பகுதி	*E, F, G, H*	*E, G, H*
Y	வட்டம் மற்றும் செவ்வகத்தின் பொதுப் பகுதி	*E, G, H*	*E, G*
Z	செவ்வகம், முக்கோணம் மற்றும் சதுரத்தின் பொதுப் பகுதி	*E, G*	*G*

40.

நபர்	தேவை	ஆராய வேண்டியது	திருப்தியளிப்பது
X	வட்டம், முக்கோணம் மற்றும் சதுரத்தின் பொதுப் பகுதி	*B, F, G, D*	*B, F*
Y	முக்கோணம் மற்றும் செவ்வகத்தின் பொதுப் பகுதி	*B, F*	*B, F*
Z	வட்டம் மற்றும் சதுரத்தின் பொதுப் பகுதி	*B, F*	*B, F*

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன்

பயிற்சி

1. கீழே உள்ள பிரிவுக்களுக்கிடையே உள்ள உறவை எந்த வென் வரைபடம் தெளிவாக விளக்குகிறது? காவல் அதிகாரிகள், அம்மாக்கள், பெண்கள்

[SSC-CGL Exam, 2021]

(*a*)

(*b*) 

(*c*) 

(*d*) 

2. கீழே உள்ள வென் வரைபடம் சர்க்கஸில் கலைஞர்களைக் குறிக்கிறது.

முக்கோணம் கோமாளிகளையும், வட்டம் கழைக் கூத்தாடிகளையும், செவ்வகம் ஆண்களையும் மற்றும் சதுரம் ரிங் மாஸ்டர்களையும் குறிக்கின்றன. படத்தில் உள்ள எண்கள், அந்தந்த குறிப்பிட்ட பிரிவுகளில் உள்ள நபர்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றன. ரிங்மாஸ்டர்களாக உள்ள எத்தனை ஆண்கள் கழைக் கூத்தாடிகள் அல்ல? **[SSC-CGL Exam, 2020]**



(a) 15 (b) 5 (c) 17 (d) 11

3. கீழே உள்ள பிரிவினர்களுக்கிடையே உள்ள ஒற்றுமையை எந்த வென் வரைபடம் குறிக்கிறது? **[SSC-CGL Exam, 2019]**

(a) 

(b) 

(c) 

(d) 

4. கீழே உள்ள வரைபடத்தில் செவ்வகம் மருத்துவர்களையும், முக்கோணம் விளையாட்டு வீரர்களையும், வட்டம் தத்துவஞானிகளையும் குறிக்கின்றன. வெவ்வேறு வடிவங்களில் உள்ள எண்கள் அதில் உள்ள நபர்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது. படத்தின்படி, தத்துவஞானிகளாக உள்ள எத்தனை விளையாட்டு வீரர்கள் மருத்துவர்கள் அல்ல? **[SSC-CPO Exam, 2019]**



(a) 17 (b) 7
(c) 5 (d) 12

5. கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையை எந்த வென் வரைபடம் குறிக்கிறது.

எழுது பொருட்கள், பென்சில், ஆப்பிள்

[SSC-CPO Exam, 2019]

(a) 

(b) 

(c) 

(d) 

6. கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று பிரிவுகளுக்கிடையே உள்ள ஒற்றுமையை எந்த வென் வரைபடம் குறிக்கிறது?

மருத்துவமனை, மருத்துவர், நோயாளி

[SSC-CGL Exam, 2018]

(a) 

(b) 

(c) 

(d) 

7. கொடுக்கப்பட்டுள்ள மூன்று பிரிவுகளுக்கிடையே உள்ள ஒற்றுமையை எந்த வென் வரைபடம் சரியாக வெளிப்படுத்துகிறது?

காப்பு எண், முழு, இயல் எண்

[SSC-CGL Exam, 2017]

(a) 

(b) 

(c) 

(d) 

8. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் எத்தனை நபர்கள் கிரிக்கெட், டென்னிஸ் இரண்டு விளையாட்டுக்களையும் விரும்புகிறார்கள்? **[SSC-CGL Exam, 2017]**



(a) 17 (b) 32
(c) 15 (d) 27

குறிப்புகள் (கேள்விகள் 9–13): கொடுக்கப்பட்டுள்ள பிரிவுகளுக்கிடையே உள்ள ஒற்றுமையை எந்த வரைபடம் குறிக்கிறது? **[SSC-CGL Tier I Exam, 2015]**

9. பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள்

(a)  (b)

(c) (d)

10. மொழி, ஆங்கிலம், கன்னடம்

(a) (b)

(c) (ன)

11. புலிகள், சிங்கங்கள், விலங்குகள்

(a) (b)

(c) (d)

12. விலங்குகள், நில விலங்குகள், கடல் வாழ் விலங்குகள்

(a) (b)

(c) (d)

13. 

திருமணமாகாத மருத்துவர்களைக் குறிக்கும் எண் எது?

[SSC-CGL Tier I Exam, 2015]

(a) 6 (b) 1 (c) 4 (d) 2

14. கீழே உள்ள படத்தில் நடனமாடுகின்ற, பாடுகின்ற மற்றும் வயலினும் இசைக்கும் நடிகர்களைக் குறிக்கும் எழுத்து எது?



[SSC-CGL Tier I Exam, 2014]

(a) S (b) Q

(c) P (d) U

குறிப்புகள் (கேள்விகள் 15–16): கீழே உள்ள கேள்விகளில் கொடுக்கப்பட்டுள்ள உறுப்புகளுக்கிடையே உள்ள ஒற்றுமையைக் குறிக்கும் வென் படம் எது?

15. தொழிற்சாலை, இயந்திரம், உற்பத்தி

[SSC-CGL Tier I Exam, 2014]

(a) (b)

(c) (d)

16. பயணம் செய்பவர்கள், இரயில், பேருந்து

[SSC-CGL Tier I Exam, 2014]

(a) (b)

(c)  (d)

17. பூமி, கடல், மற்றும் சூரியன் மூன்றுக்கும் உள்ள ஒற்றுமையைக் குறிக்கும் படம் எது?

[SSC-CGL Tier I Exam, 2013]

(a) (b) 

(c) (d)

18. கீழே உள்ள படத்தை கவனித்து அதில் பணியில் உள்ள படித்த ஆனால் பணி நிரந்தரமாகா நபர்களைக் குறிக்கும் பகுதியைக் கண்டுபிடிக்கவும்.

[SSC-CGL Tier I Exam, 2013]



(a) ac (b) abc (c) bd (d) adc

19. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் வட்டம் தொழில் வல்லுநர்களையும், சதுரம் நடனமாடுபவர்களையும், முக்கோணம் இசைக்கலைஞர்களையும், செவ்வகம் ஐரோப்பியர்களையும் குறிக்கின்றன. படத்தின் வெவ்வேறு பகுதிகள் முறையே 1 முதல் 11 வரை எண்களிடப்பட்டுள்ளன. கீழே உள்ளவர்களுள் யார்

நடனமாடாத இசைக் கலைஞர் அல்லாத ஐரோப்பியரும் அல்லாத தொழில் வல்லுநர்கள் ஆவர்?

[SSC-CGL Tier I Exam, 2013]



(a) 8 (b) 11 (c) 1 (d) 10

குறிப்புகள் (கேள்விகள் 20–23): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் மூன்று உறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று உறுப்புகளுக்கிடையே ஒற்றுமை இருக்கலாம் அல்லது இருக்காது அந்த உறுப்புகள் (a), (b), (c) அல்லது (d) ஆகிய ஏதேனும் ஒரு படத்தில் பொருத்தும். இந்த படங்களுடன் சரியாகப் பொருந்தும் உறுப்புகளை நீங்கள் கண்டறிய வேண்டும். **[AFCAT, 2016]**

20. கீழே உள்ளவற்றில் எந்த படம் மலைகள், பூமி மற்றும் காடுகளுக்கிடையே உள்ள ஒற்றுமையை சிறப்பாகத் தெளிவு படுத்துகிறது?

(a) (b)

(c) (d)

21. சூரியன், கிரகங்கள் மற்றும் பூமி ஆகியவற்றுக்கிடையே உள்ள ஒற்றுமையை எந்த படம் சரியாக வெளிப்படுத்துகிறது?

(a) (b) 

(c) (d) 

22. பட்டதாரி, ஆசிரியர் மற்றும் விளையாட்டு வீரர்கள் மூவருக்குமிடையே உள்ள ஒற்றுமையை எந்த படம் வெளிப்படுத்துகிறது?

(a)  (b)

(c)  (d)

23. இலை, விதை மற்றும் வேர் மூன்றுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையை எந்த படம் வெளிப்படுத்துகிறது?

(a)  (b)

(c) (d)

குறிப்புகள் (கேள்விகள் 24–28): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் மூன்று உறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கும். இந்த உறுப்புகளுக்கிடைய ஒற்றுமை இருக்கும் அல்லது இருக்காது ஒவ்வொரு குழு உறுப்புகளும் (a), (b), (c) மற்றும் (d) ஆகியவற்றில் ஏதோ ஒரு படத்துடன் இணையும், படங்களுடன் மிகச்சரியாக பொருத்தும் உறுப்புகளைக் கண்டறிய வேண்டும். **[AFCAT, 2016]**

24. ஆசிரியர், கவிஞர் மற்றும் பட்டதாரி ஆகியோருக்கிடையே உள்ள ஒற்றுமையை எந்த படம் குறிக்கிறது?

(a) (b)

(c) (d)

25. ஆசிரியர்கள் ஆண்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கிடையே உள்ள ஒற்றுமையை விவரிக்கும் படம் எது?

(a) (b)

(c) (d)

26. டென்னிசை விரும்புபவர்கள், கிரிக்கெட் விளையாடுபவர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே உள்ள ஒற்றுமையைக் குறிக்கும் படம் எது?

(a) (b)

(c) (d) 

27. ரோஜா, பூ மற்றும் தாமரை ஆகியவற்றுக்கு இடையேயுள்ள ஒற்றுமையை விளக்கும் படம் எது?

(a) (b) 

(c)  (d) 

28. புலி, நாலு கால் விலங்கு மற்றும் யானை ஆகியவற்றுக்கிடையே உள்ள ஒற்றுமையை விளக்கும் படம் எது?

(a) (b)

(c) (d)

குறிப்புகள் (கேள்விகள் 29–33): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் மூன்று உறுப்புகள் உள்ளன. இந்த உறுப்புகளுக்கிடையே உட்தொடர்பு இருக்கும் அல்லது இருக்காது. ஒவ்வொரு உறுப்புகளின் குழுவும் (a), (b), (c) மற்றும் (d) ஆகியவற்றில் ஏதோ ஒன்றுடன் பொருந்தும்.

தருக்க வென் வரைபடம்

எந்த படத்தில் அவை சரியாகப் பொருந்துகிறது என்பதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். **[AFCAT, 2015]**

29. பெண்கள், மருத்துவர்கள் மற்றும் நோயாளிகளுக்கிடையே உள்ள ஒற்றுமையை எந்த படம் விளக்குகிறது?

(a)
(b) 
(c)
(d) 

30. துப்பறிவாளர்கள், உளவாளிகள் மற்றும் தாடியுள்ள ஆண்கள் ஆகியோருக்கிடையே உள்ள தொடர்பை விளக்கும் படம் எது?

(a)
(b)
(c) 
(d)

31. ஆண்கள், அப்பாக்கள் மற்றும் மனிதன் ஆகியோருக்கிடையே உள்ள தொடர்பை விளக்கம் படம் எது?

(a) 
(b)
(c)
(d) 

32. இரும்பு, மரம் மற்றும் கட்டுமான பொருட்கள் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பை விளக்கும் படம் எது?

(a)
(b) 
(c)
(d) 

33. மருத்துவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொறியாளார்-களுக்கிடையே உள்ள தொடர்பை விளக்கும் படம் எது?

(a) 
(b)
(c)
(d)

குறிப்புகள் (கேள்விகள் 34–38): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் மூன்று உறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த உறுப்புகளுக்கிடையே உட்தொடர்பு இருக்கும் அல்லது இருக்காது. ஒவ்வொரு உறுப்புகளின் குழுவும் (a), (b), (c) மற்றும் (d) ஆகியவற்றில் ஏதோ ஒன்றுடன் பொருந்தும். எந்த படத்தில் அவை சரியாகப் பொருந்துகிறது என்பதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். **[AFCAT, 2015]**

34. மருத்துவர்கள், மனிதர்கள் மற்றும் திருமணமான நபர்கள் ஆகியோருக்கிடையே உள்ள ஒற்றுமையை விளக்கும் படம் எது?

(a) 
(b) 
(c) 
(d)

35. குழந்தைகள், குறும்புத்தனமானவர்கள் படிப்பாளிகள் ஆகியோருக்கிடையே உள்ள ஒற்றுமையை விளக்கும் படம் எது?

(a)
(b) 
(c)
(d) 

36. திருடன், குற்றவாளி, காவலர் ஆகியோருக்கிடையே உள்ள ஒற்றுமையை விளக்கும் படம் எது?

(a) 
(b)
(c)
(d)

37. ஆண், தொழிலாளி, தோட்டம் ஆகியவற்றுக்கிடையே உள்ள ஒற்றுமையைக் விளக்கும் படம் எது?

(a)
(b)
(c) 
(d) 

38. ஆண்கள், மருமகள், சகோதர/சகோதரியின் குழந்தைகள் ஆகியோருக்கிடையே உள்ள உறவினர் ஒற்றுமையை விளக்கும் படம் எது?

(a) 
(b)
(c)
(d) 

குறிப்புகள் (கேள்விகள் 39–43): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் மூன்று உறுப்புகள் உள்ளன. இந்த உறுப்புகளுக்கிடையே உட்தொடர்பு இருக்கும் அல்லது இருக்காது. ஒவ்வொரு உறுப்புகளின் குழுவும் (a), (b), (c) மற்றும் (d) ஆகியவற்றில் ஏதோ ஒன்றுடன் பொருந்தும். எந்த படத்தில் அவை சரியாகப் பொருந்துகிறது என்பதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். **[AFCAT, 2014]**

39. நீதிபதி, திருடர்கள் மற்றும் குற்றவாளிகள் ஆகியோரிடையே உள்ள ஒற்றுமையை விளக்கும் படம் எது?

(a) (b) 

(c)  (d)

40. இந்தியா, ஹரியானா மற்றும் உலகம் ஆகிவற்றுக்கிடையே உள்ள ஒற்றுமையை விளக்கும் படம் எது?

(a)  (b)

(c) (d)

41. கழுகு, பறவை மற்றும் நாய் மூன்றுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையை விளக்கும் படம் எது?

(a)  (b)

(c) (d) 

42. பூமி, கடல் மற்றும் சூரியனுக்கிரிடையே உள்ள ஒற்றுமையை விளக்கும் படம் எது?

(a)  (b) 

(c)  (d)

43. ஹாக்கி, கால்பந்து மற்றும் கிரிக்கெட்டுக்கிடையே உள்ள ஒற்றுமையை விளக்கும் படம் எது?

(a)  (b)

(c) (d) 

விடைகள்

1. (b)	2. (c)	3. (a)	4. (a)	5. (b)	6. (d)	7. (c)	8. (b)	9. (c)	10. (c)
11. (c)	12. (c)	13. (b)	14. (b)	15. (d)	16. (b)	17. (b)	18. (c)	19. (d)	20. (a)
21. (b)	22. (a)	23. (c)	24. (b)	25. (a)	26. (a)	27. (a)	28. (c)	29. (c)	30. (d)
31. (c)	32. (a)	33. (b)	34. (d)	35. (c)	36. (a)	37. (d)	38. (d)	39. (b)	40. (d)
41. (a)	42. (a)	43. (b)							

தீர்வுகள்

1. 

அனைத்து அம்மாக்களும் பெண்கள் ஆனால் காவல் அதிகாரி ஆண், பெண் இரண்டில் எந்த பாலினமாகவும் இருக்கலாம்.

2. கழைக் கூத்தாடிகள் அல்லாமல் ரிங் மாஸ்டராக உள்ள ஆண் கோமாளிகளின் எண்ணிக்கை = 18.

3. 

ஒவ்வொரு பட்டதாரியும் படித்தவரே. ஆனால், ஒவ்வொரு கடின உழைப்பாளியும் படித்தவராக அல்லது இருக்க வேண்டிய அவசியமில்லை. எனவே, மேலே உள்ள வரைபடம் சரியாகும்.

4. தத்துவஞானிகளும் உள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை = 5 + 7 + 12 = 24

இதில் 7 மருத்துவர்கள் உள்ளனர். எனவே, மருத்துவர் அல்லாமல் தத்துவஞானிகளாக உள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை = 24 − 7 = 17.

5. பென்சில் ஒரு எழுது பொருள். ஆனால், ஆப்பிள் எழுதுபொருள் அல்ல.



6. மருத்துவர் மற்றும் நோயாளி இருவரையும் மருத்துவமனையில் நாம் காணலாம்.

7. எல்லா முழுக்களும் கலப்பு எண்கள் மற்றும் எல்லா இயல் எண்களும் முழுக்கள்.

தருக்க வென் வரைபடம்



8. கிரிக்கெட்டை விரும்பும் நபர்கள் = 9, 12, 15, 17
டென்னிசை விரும்பும் நபர்கள் = 8, 15, 17, 21
(டென்னிஸ் மற்றும் கிரிக்கெட்) இரண்டையும் விரும்பும் நபர்கள் = 15 + 17 = 32.

9.



10.



11.



புலி மற்றும் சிங்கம் இரண்டும் விலங்குகள்.

12.



நில விலங்குகள் மற்றும் கடல் வாழ் விலங்குகள் அனைத்தும் விலங்குகளில் அடங்கும். நில விலங்குகளில் சில கடல் வாழ் விலங்குகளாகவும், கடல்வாழ் விலங்குகளில் சில நில விலங்குகளாகயும் இருக்கும்.

13. தீர்வு (b) சரியான விடையாகும்.

14. நடனமாடும், பாடும் மற்றும் வயலின் இசைப்பவர்களாகவும் உள்ள நடிகர்களை எழுத்து Q குறிக்கிறது.

15.



இயந்திரம் தொழிற்சாலையில் அடங்கும் மற்றும் உற்பத்தி இயந்திரத்தின் கீழ் வரும்.

16.



இரயில் மற்றும் பேருந்து இரண்டும் பயணம் செய்பவர்களால் உபயோகபடுத்தப்படும் வெவ்வேறு போக்குவரத்து முறையாகும்.

17.



தீர்வு (b) சரியாகும்.

18. தீர்வு (c) சரியாகும்.

19. 10 நடனமாடுபவரும் அல்ல இசைக் கலைஞரும் அல்ல. ஆனால், அவர் ஐரோப்பியர் அல்லாத தொழில் வல்லுநர்கள்.

20.



21.



சூரியன் ஒரு கிரகம் அல்ல. மற்றும் பூமி ஒரு கிரகம்.

22.



23. கொடுக்கப்பட்டுள்ள மூன்று உறுப்புகளும் வெவ்வேறானவை.

24. சில கவிஞர்கள் ஆசிரியர்களாக இருப்பார்கள். சில பட்டதாரிகள் ஆசிரியர்கள் அல்லது கவிஞர்களாக இருப்பார்கள்.



25. சில ஆசிரியர்கள் எழுத்தாளர்கள் அல்லது ஆண்களாக இருப்பார்கள். சில எழுத்தாளர்கள் ஆண்களாக இருக்கலாம்.



26. சில மாணவர்கள் டென்னிஸ் விரும்புபவர்கள் அல்லது கிரிக்கெட் விளையாடுபவர்கள். கிரிக்கெட் விளையாடும் சிலர் டென்னிஸை விரும்புபவர்கள்.



27. ரோஜா மற்றும் தாமரை வெவ்வேறு வகை பூக்கள்.



28. புலி மற்றும் யானை நான்கு கால்கள் உள்ள வெவ்வேறு வகை விலங்குகள்.

29. சில மருத்துவர்கள் பெண்களாக இருக்கலாம். சில நோயாளிகள் பெண் அல்லது மருத்துவராக இருக்கலாம்.



30.



31.



32. இரும்பு மற்றும் மரம் ஆகியவை வெவ்வேறு கட்டுமான பொருட்கள்.



33.



34. சில மருத்துவர்கள் திருமணமானவர்களாக இருக்கலாம். மருத்துவர்கள் மற்றும் திருமணமானவர்கள் மனிதனில் அடங்குவர்.



35. சில குழந்தைகள் குறும்புத்தனமாகவும் படிப்பாளிகளாகவும் இருக்கலாம். படிப்பாளியாக இருக்கும் சில குழந்தைகள் குறும்புதனமாகவும் இருப்பார்கள்.



36.



37. மனிதர்களில் சிலர் தொழிலாளியாக இருப்பர். தொழிலாளர்களில் சிலர் ஆண்களாக இருப்பர். ஆனால், தோட்டம் முற்றிலுமாக மாறுபட்டது.



38. மருமகன்கள் அனைவரும் ஆண்கள். சகோதர/சகோதரியின் குழந்தைகள் வேறானவர்.



39. குற்றவாளிகளின் பிரிவில் திருடர்கள் அடங்குவர் நீதிபதி முற்றிலும் மாறுபட்டவர்.



40. உலகத்தின் ஒரு பகுதி இந்தியா, மற்றும் இந்தியாவின் ஒரு பகுதி ஹரியானா.



41. கழுகு ஒரு பறவை மற்றும் நாய் ஒரு விலங்கு.



42.



43.



10

அகரவரிசை தேர்வு

வகை 1: சொற்களின் அகரவரிசை முறை

அகரவரிசை: சொற்களை அகர வரிசையில் அமைப்பது என்பது 'அகராதியில் உள்ளபடி வார்த்தைகளை அமைப்பது', அதாவது., வார்த்தைகளின் முதல் எழுத்துக்களை ஆங்கில அகர வரிசையின் படி அமைப்பது.

அகரவரிசைப்படி எப்படி வார்த்தைகளை அமைப்பது?

ஒவ்வொரு வார்த்தையின் முதல் எழுத்தை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆங்கில அகரவரிசையில் அவை எந்த வரிசையில் உள்ளனவோ, அதன் படி அமைக்க வேண்டும்.

எ.கா: Abstract, Principle, Marry, Spring, Freqnent ஆகிய வார்த்தைகளை எடுத்துக் கொள்வோம். இந்த வார்த்தைகள் முறையே A, P, M, S, F ஆகிய எழுத்துக்களில் தொடங்குகின்றன. ஆங்கில அகராதியில் இந்த எழுத்துக்களின் வரிசையானது A, F, M, P, S என உள்ளது. எனவே, இந்த வார்த்தைகளின் சரியான வரிசையானது Abstract, Frequent, Marry, Principle, Spring.

சில சந்தர்ப்பங்களில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒரே எழுத்தில் தொடங்கும். அவ்வாறான சூழ்நிலையில் இரண்டாவது எழுத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.

எ.கா: Client, Castle, Face, Viper, Dazzle ஆகிய வார்த்தைகளை எடுத்துக் கொள்வோம். இந்த வார்த்தைகளை கீழ் வருமாறு அமைப்போம்.

$$\left.\begin{matrix}\text{Client}\\ \text{Castle}\end{matrix}\right\}, \text{Dazzle, Face, Viper.}$$

'Client' மற்றும் 'Castle' வார்த்தைகளின் இரண்டாவது எழுத்துக்களை எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது, l மற்றும் a. இதன் படி வார்த்தைகளை அமைத்தல் கிடைப்பது; 'Client' க்கு முன்னால் 'Castle' வர வேண்டும். எனவே, அகர வரிசையானது;

Castle, Client, Dazzle, Face, Viper.

முதல் இரண்டு எழுத்துக்களும் ஒரே எழுத்துக்களாக இருந்தால், அவற்றின் மூன்றாவது எழுத்துக்கள் மற்றும் அதே போல தொடர்ந்த எழுத்துக்களை கருத்தில் கொண்டு வார்த்தைகளை அகர வரிசையில் அமைக்க வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா.1: கீழே உள்ள ஐந்து வார்த்தைகளை அகர வரிசைப்படி அமைத்தால், எந்த வார்த்தை நடுவில் அமையும்? (Bank P.O. 2003)

(a) Draw (b) Read (c) Play (d) Back (e) Want

தீர்வு. அகர வரிசையில் வார்த்தைகளை அமைக்கும் பொழுது கிடைப்பது; Black, Draw, Play, Read, Want 'play' என்கிற வார்த்தை நடுவில் வரும். எனவே, விடை (c) ஆகும்.

எ.கா.2: ஆங்கில அகராதியில் நான்காவதாக இடம் பெறும் வார்த்தை எது? (S.S.C. 2004)

(a) False (b) Follow (c) Faithfully (d) Fool (e) Fallible

தீர்வு. அகர வரிசையில் அமையும் வரிசை முறையே Faithfully, Fallible, False, Follow, Fool. "Follow" என்கிற வார்த்தை நான்காவதாக இடம்பெறும் என்பது தெளிவு. எனவே, விடை (b) ஆகும்.

எ.கா. 3: ஆங்கில அகராதியில் இரண்டாவதாக இடம்பெறும் வார்த்தை எது? **(Bank Recruitment, 2005)**

(*a*) Magical (*b*) Magnify (*c*) Maternal (*d*) Marshal (*e*) Magnetic

தீர்வு. அகர வரிசையில் வார்த்தைகள் பின்வருமாறு இடம்பெறும்:

Magical, Magnetic, Magnify, Marshal, Maternal. எனவே, "Magnetic" என்கிற வார்த்தை இரண்டாவதாக இடம்பெறும் என்பது தெளிவு. எனவே, விடை (*e*) ஆகும்.

எ.கா. 4: கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் எழுத்துக்கள் அகர வரிசையில் அமைக்கப்பட்டு பின் அகராதியில் உள்ளவாறு எழுத்துக்களை மாற்றியமைக்கப்பட்டால் எந்த வார்த்தையில் அதன் குழு எழுத்துக்கள் நடுவில் இடம் பெறும்? **(Bank P.O. 2002)**

(*a*) Road (*b*) Deaf (*c*) Code (*d*) Lack (*e*) Meet

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை அகர வரிசையில் மாற்றியமைக்கும் பொழுது கிடைக்கும் வரிசை: ador, adef, cdeo, ackl, eemt இந்த எழுத்து-குழுக்கள் பின்வருமாறு அகர வரிசையில் அமையும்.

ackl, adef, ador, cdeo, eemt

'ador' என்கிற எழுத்து குழு நடுவில் இடம் பெறும் மற்றும் இந்த எழுத்து - குழுவை சார்ந்த வார்த்தை 'road'. எனவே, விடை (*a*).

பயிற்சி 10A

குறிப்புகள்: *கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஐந்து வார்த்தைகள் கொடுக்கப்பட்டிருக்கும். ஒரு அகராதியில் அனைத்து வார்த்தைகளும் அகர வரிசையில் அமைக்கப்பட்டால் நடுவில் இடம்பெறும் வார்த்தை எது?*

1. (*a*) Spine (*b*) Spinal (*c*) Spinner (*d*) Spinet (*e*) Spindle **(Bank Recruitment, 2003)**
2. (*a*) Praise (*b*) Practical (*c*) Prank (*d*) Prayer (*e*) Practise
3. (*a*) Haste (*b*) Haphazard (*c*) Host (*d*) Hang (*e*) Handkerchief
4. (*a*) Butterfly (*b*) Butler (*c*) Butcher (*d*) Button (*e*) Butter **(Bank Recruitment, 2005)**
5. (*a*) Robber (*b*) Rocket (*c*) Random (*d*) Restaurant (*e*) Restrict
6. (*a*) Heaven (*b*) Hillock (*c*) Hawker (*d*) Hilt (*e*) History
7. (*a*) Apology (*b*) Branch (*c*) Antigen (*d*) Antique (*e*) Antipathy
8. (*a*) Cruise (*b*) Crupper (*c*) Crusade (*d*) Crude (*e*) Crumb **(Bank Recruitment, 2004)**
9. (*a*) Hobby (*b*) Holiday (*c*) Hoarse (*d*) Hollow (*e*) Hobble
10. (*a*) Leprosy (*b*) Lessen (*c*) Lesson (*d*) Language (*e*) Languid
11. (*a*) Sport (*b*) Spouse (*c*) Squash (*d*) Sporadic (*e*) Sprout
12. (*a*) Miniscule (*b*) Minimalis (*c*) Minority (*d*) Miniature (*e*) Ministerial **(Bank Recruitment, 2005)**
13. (*a*) Animate (*b*) Animosity (*c*) Anguish (*d*) Ankle (*e*) Announce
14. (*a*) Entry (*b*) Efflorescent (*c*) Entreat (*d*) Ensure (*e*) Every
15. (*a*) Rumbustious (*b*) Rumanian (*c*) Rumour (*d*) Ruminate (*e*) Rumple **(S.S.C. 2002)**
16. (*a*) Intense (*b*) Intellect (*c*) Intend (*d*) Intelligent (*e*) Integument
17. (*a*) Rigour (*b*) Remove (*c*) Retrospect (*d*) Revive (*e*) Rumour
18. (*a*) Pillow (*b*) Pilgrim (*c*) Pigment (*d*) Pile (*e*) Pike
19. (*a*) Cough (*b*) Council (*c*) Couch (*d*) Count (*e*) Counsel **(C.P.O. 2001)**
20. (*a*) Bishop (*b*) Bifocal (*c*) Bicycle (*d*) Bitter (*e*) Brink
21. (*a*) Parasite (*b*) Party (*c*) Petal (*d*) Paste (*e*) Prick

22. (a) Research (b) Rational
(c) Round (d) Rustic
(e) Rural
(Bank Recruitment, 2005)

23. (a) Nature (b) Native
(c) Narrate (d) Nascent
(e) Naughty

எ.கா.4: *A*, *B*, மற்றும் *C* ஆகிய மூன்று நபர்கள் ஒரு வரிசையில் நிற்கின்றனர். *A* மற்றும் *B*-க்கு இடையே 5 நபர்களும் *B* மற்றும் *C*-க்கு இடையே 8 நபர்களும் உள்ளனர். *C*-க்கு பிறகு 3 நபர்களும், *A*-க்கு முன்னால் 21 நபர்களும் நிற்கிறார்கள் எனில், அந்த வரிசையில் உள்ள நபர்களின் மிகக் குறைந்த எண்ணிக்கை என்ன? (Hotel Management, 2005)

(*a*) 27 (*b*) 28 (*c*) 40 (*d*) 41

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள விதிகளின் படி, கீழே உள்ளவாறு இரு சாத்திய கூறுகள் உள்ளன.



I



II

குறைந்த நபர்களின் எண்ணிக்கைக்கு கூறு II-ஐ எடுத்துக் கொள்ளலாம்.
II-ல், வரிசையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை = (3 + 1 + 2 + 1 + 21) = 28.
எனவே, விடை (*b*) ஆகும்.

பயிற்சி 12B

1. சாம் ஒரு வகுப்பின் மேலிருந்து 9-வது இடத்திலும் மற்றும் கீழிருந்து 38-வது இடத்திலும் தரவரிசையில் உள்ளார். வகுப்பில் எத்தனை மாணவர்கள் உள்ளனர்? **(M.B.A. 2002)**

(*a*) 45 (*b*) 46
(*c*) 47 (*d*) 48

2. ஒரு வகுப்பின் மாணவர்கள் ஒற்றை வரிசையில் நிற்கின்றனர். இரு முனையிலிருந்தும் ஒரு மாணவர் 19-வதாக உள்ளார். அந்த வகுப்பில் எத்தனை மாணவர்கள் உள்ளனர்? **(N.M.A.T. 2003)**

(*a*) 27 (*b*) 37
(*c*) 38 (*d*) 39

3. தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களில் மேலிருந்து 16-வதாக மற்றும் கீழிருந்து 29-வதாக தரவரிசையில் அஜய் உள்ளார். அந்த தேர்வில் ஆறு மாணவர்கள் கலந்து கொள்ளவில்லை மற்றும் ஐந்து மாணவர்கள் தோல்வியடைந்தனர். அந்த வகுப்பில் எத்தனை மாணவர்கள் உள்ளனர்?

(*a*) 40 (*b*) 44
(*c*) 50 (*d*) 55
(*e*) 58

4. ஆண்களின் வரிசையில் வலமிருந்து 12-வதாக மற்றும் இடமிருந்து 4-வதாக உள்ளதாக அதுல் உணர்ந்தான் எனில் அந்த வரிசையில் 28 ஆண்கள் இருப்பதற்கு மேலும் எத்தனை ஆண்களை சேர்க்க வேண்டும்?

(a) 12 (b) 13
(c) 14 (d) 20
(e) இவற்றில் எதுவுமில்லை

5. ஆண்களின் வரிசை ஒன்றில், தொடக்கத்திலிருந்து 7-வதாக மற்றும் இறுதியிலிருந்து 11-வதாக ஜீவன் உள்ளார். தொடக்கத்திலிருந்து 10-வதாக மற்றும் இறுதியிலிருந்து 12-வதாக மற்றொரு வரிசையில் விகாஸ் உள்ளார். எனில், இரண்டு வரிசைகளையும் சேர்த்து மொத்தம் எத்தனை ஆண்கள் உள்ளனர்?

(Bank P.O. 2005)

(a) 36 (b) 37
(c) 39 (d) கண்டுபிடிக்க முடியாது
(e) இவற்றுள் எதுவுமில்லை

6. 60 மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பில் ஆண்களின் இரு மடங்கு எண்ணிக்கை பெண்கள் உள்ளனர். மேலிருந்து 17-வது தரவரிசையில் கமல் உள்ளார். கமலைத் தொடர்ந்து 9 பெண்கள் உள்ளனர் எனில், தரவரிசையில் கமலுக்கு பின் எத்தனை ஆண்கள் உள்ளனர்? **(R.R.B. 2002)**

(a) 3 (b) 7
(c) 12 (d) 23

7. 49 மாணவர்களில் நிதின் 18-வதாக உள்ளார். இறுதியிலிருந்து அவரின் தர வரிசை என்ன?

(A.S.M. 2003)

(a) 18 (b) 19
(c) 31 (d) 32

8. 31 மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பில் மனோஜ் மற்றும் சச்சின் மேலிருந்து முறையே 7-வது மற்றும் 11-வது தரவரிசையில் உள்ளனர். வகுப்பின் கீழிலிருந்து அவர்களின் தரவரிசை என்ன?

(a) 20-வது மற்றும் 24-வது
(b) 24-வது மற்றும் 20-வது
(c) 25-வது மற்றும் 21-வது
(d) 26-வது மற்றும் 22-வது
(e) இவற்றுள் எதுவுமில்லை

9. 39 மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பில் தரவரிசையில் சுமித்தை விட ரவி 7 தரவரிசை முன்னதாக உள்ளார். இறுதியிலிருந்து சுமித்தின் தரவரிசை 17-வது எனில், தொடக்கத்திலிருந்து ரவியின் தரவரிசை என்ன?

(a) 14-வது (b) 15-வது
(c) 16-வது (d) 17-வது

10. 42 மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பில் 26-வது தரவரிசையில் உள்ள திவ்யாவின் 8 தரவரிசை முன்னால் பாரதி உள்ளார். கடைசியிலிருந்து பாரதியின் தரவரிசை என்ன?

(a) 9-வது (b) 24-வது
(c) 25-வது (d) 34-வது
(e) இவற்றுள் எதுவுமில்லை

11. மாணவர்களின் வரிசை ஒன்றில், இடமிருந்து 13-வதாக *A*-யும், வலமிருந்து 17-வது *D*-யும் உள்ளனர். இந்த வரிசையில் வலமிருந்து 11-வதாக இருந்தால் இடமிருந்து *D*-யின் தரவரிசை என்ன?

(Bank P.O. 2004)

(a) 6-வது (b) 7-வது
(c) 10-வது (d) 12-வது
(e) இவற்றில் எதுவுமில்லை

12. மாணவர்களின் வரிசை ஒன்றில், இடமிருந்து 6-வதாக ராஜனும், வலமிருந்து 10-வதாக வினயும் உள்ளனர். ராஜன் மற்றும் வினய் இருவருக்குமிடையே எட்டு மாணவர்கள் உள்ளனர். எனில், வரிசையில் எத்தனை மாணவர்கள் உள்ளனர்?

(a) 23 (b) 24
(c) 25 (d) 26
(e) இவற்றில் எதுவுமில்லை

13. மாணவர்களின் வரிசை ஒன்றில், இடமிருந்து 15-வதாக *A*-யும், வலமிருந்து 4-வதாக *B*-யும் உள்ளனர். *A* மற்றும் *B*-க்கு இடையே மூன்று மாணவர்கள் உள்ளனர். *A*-யின் இடதுபுறம் உடனடி அடுத்து *C* உள்ளார். எனில், வலது புறத்திலிருந்து *C*-யின் இடம் என்ன? **(M.B.A. 2003)**

(a) 9-வது (b) 10-வது
(c) 12-வது (d) 13-வது

14. 29 மாணவர்கள் உள்ள ஒரு வரிசையில் இடமிருந்து 17-வதாக ரோஹித்தும், வலமிருந்து 17-வதாக கரணும் உள்ளார். அவர்கள் இருவருக்குமிடையே எத்தனை மாணவர்கள் உள்ளனர்? **(R.B.I. 2003)**

(a) 3
(b) 5
(c) 6
(d) தகவல் போதுமானதாக இல்லை
(e) இவற்றில் எதுவுமில்லை

15. 40 குழந்தைகள் உள்ள ஒரு வரிசையில் இடது முனையிலிருந்து 13-வதாக *P*-யும், வலது முனையிலிருந்து 9-வதாக *Q*-வும் உள்ளார். *Q*-வின் இடப்புறம் 4-வதாக *R* உள்ளார். எனில், *P* மற்றும் *R*-க்கு இடையே எத்தனை குழந்தைகள் உள்ளனர்?

(R.B.I. 2004)

(a) 12 (b) 13
(c) 14 (d) 15
(e) இவற்றில் எதுவுமில்லை

16. 35 குழந்தைகள் உள்ள ஒரு வகுப்பில், கீழிருந்து 7-வதாக குணாலும் மேலிருந்து 9-வதாக சோனாலியும் உள்ளனர். இவர்கள் இருவருக்குமிடையே மிகச் சரியாக நடுவில் புல்கித் உள்ளார். புல்கித்திலிருந்து குணால் எத்தனையாவது இடத்தில் உள்ளார்?

(M.A.T. 1999)

(a) 9 (b) 10
(c) 11 (d) 13

குறிப்புகள் (கேள்விகள் 17 முதல் 20): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:* **(Hotel Management, 2003)**

ஒரே வரிசையில் நிற்கும் ரீனா, பீனா, மீனா மற்றும் நீனா ஆகியோரின் குழுவை எடுத்துக்கொள்வோம். இடமிருந்து ஆறாவது மற்றும் ஏழாவது இடங்களில் முறையே ரீனா மற்றும் பீனா நிற்கிறார்கள். வலமிருந்து 4-வது மற்றும் 5-வது இடங்களில் முறையே மீனா மற்றும் நீனா நிற்கிறார்கள். பீனா மற்றும் மீனா தங்களது இடங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொண்டால் இடமிருந்து 15-வது இடத்தில் பீனா நிற்பார்.

17. தொடக்கத்தில் வரிசையின் இடமிருந்து நீனாவின் இடம் என்ன?
(*a*) 5 (*b*) 13
(*c*) 14 (*d*) 16

18. வலமிருந்து ரீனாவின் இடம் எது?
(*a*) 6 (*b*) 13
(*c*) 14 (*d*) 18

19. நீனா மற்றும் ரீனாவும் தங்களது இடங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொண்டால், பின் இடமிருந்து நீனாவின் இடம் எது?
(*a*) 6 (*b*) 10
(*c*) 11 (*d*) இவற்றில் எதுவுமில்லை

20. பீனா மற்றும் மீனா ஒருவருக்கொருவர் இடங்களை மாற்றிக்கொண்ட பிறகு, வலமிருந்து மீனாவின் இடம் எது?
(*a*) 5 (*b*) 10
(*c*) 12 (*d*) இவற்றில் எதுவுமில்லை

விடைகள் (பயிற்சி 12B)

1. (*b*)	2. (*b*)	3. (*d*)	4. (*b*)	5. (*e*)	6. (*c*)	7. (*d*)	8. (*c*)	9. (*c*)	10. (*c*)
11. (*b*)	12. (*b*)	13. (*a*)	14. (*a*)	15. (*c*)	16. (*b*)	17. (*c*)	18. (*b*)	19. (*a*)	20. (*c*)

தீர்வுகள் (பயிற்சி 12B)

1. வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (8 + 1 + 37) = 46.

2. வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (18 + 1 + 18) = 37.

3. தேர்ச்சி பெற்ற மாணவர்கள் = (15 + 1 + 28) = 44.
∴ வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (44 + 6 + 5) = 55.

4. வரிசையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (11 + 1 + 3) = 15.
∴ சேர்க்கப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை = (28 − 15) = 13.

5. இரண்டு வரிசைகளிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (ஜீவனின் வரிசையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை) + (விகாஷின் வரிசையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை)
= (6 + 1 + 10) + (9 + 1 + 11) = (17 + 21) = 38.

6. ஆண்களின் எண்ணிக்கை x எனில், பெண்களின் எண்ணிக்கை = $2x$.
∴ $x + 2x = 60$ அல்லது $3x = 60$ அல்லது $x = 20$.
எனவே, ஆண்களின் எண்ணிக்கை = 20 மற்றும் பெண்களின் எண்ணிக்கை = 40.
கமலை தொடர்ந்து தரவரிசையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (60 − 17) = 43.
கமலை தொடர்ந்து தரவரிசையில் உள்ள பெண்களின் எண்ணிக்கை = 9.
கமலுக்கு முன்னால் தரவரிசையில் உள்ள பெண்களின் எண்ணிக்கை = (40 − 9) = 31).
∴ கமலுக்கு முன்னால் தரவரிசையில் உள்ள ஆண்களின் எண்ணிக்கை = (43 − 31) = 12.

7. தரவரிசையில் நிதினுக்கு பின்னால் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை (49 − 18) = 31.
எனவே, கடைசியிலிருந்து 32-வது இடத்தில் நிதின் உள்ளார்.

8. தரவரிசையில் மனோஜ்க்கு பின்னால் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை (31 − 7) = 24.
எனவே, கீழிருந்து 25-வது இடத்தில் மனோஜ் உள்ளார்.
தரவரிசையில் சச்சினுக்கு பின்னால் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (31 − 11) = 20.
எனவே, கீழிருந்து 21-வது இடத்தில் சச்சின் உள்ளார்.

9. கடைசியிலிருந்து 17-வதாக சுமித் மற்றும் சுமித்தை தொடர்ந்து 7-தரவரிசை முன்பாக ரவியும் உள்ளனர்.
எனவே, கடைசியிலிருந்து 24-வதாக ரவி உள்ளார்.
தரவரிசையில் ரவியை விட முன்பாக இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை = (39 − 24) = 15.
எனவே, ரவி தொடக்கத்திலிருந்து 16-வதாக உள்ளார்.

10. 26-வது தரவரிசையில் திவ்யாவும், திவ்யாவிற்கு 8 தர வரிசைகள் முன்பாக பாரதியும் உள்ளனர். எனவே, பாரதி 18-வது இடத்தில் உள்ளார்.

தரவரிசையில் பாரதிக்கு பின்னால் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (42 − 18) = 24.

ஆகவே, பாரதி கடைசியில் இருந்து 25-வது இடத்தில் இருக்கிறார்.

11. வரிசையின் வலது முனையிலிருந்து 11-வதாக மற்றும் இடமிருந்து 13-வதாகவும் A உள்ளார்.

வரிசையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (12 + 1 + 10) = 23.

வலமிருந்து 17-வதாக D உள்ளார்.

D-யின் இடப்புறம் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (23 − 17) = 6.

எனவே, வரிசையின் இடது முனையிலிருந்து 7-வதாக D உள்ளார்.

12. வரிசையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (6 + 10 + 8) = 24.

13. வரிசையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (15 + 4 + 3) = 22.

A-யின் உடனடியாக இடப்புறம் C உள்ளார். இடது முனையிலிருந்து 14-வதாக C உள்ளார்.

C-யின் வலப்புறம் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (22 − 14) = 8.

எனவே, வரிசையின் வலது முனையிலிருந்து 9-வதாக C உள்ளார்.

14. வலது முனையிலிருந்து 17-வதாக கரண் உள்ளார்.

கரணின் இடப்புறம் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (29 − 17) = 12.

எனவே, இடது முனையிலிருந்து 13-வதாக கரண் உள்ளார். மேலும் இடது முனையிலிருந்து 17-வதாக ரோஹித் உள்ளார்.

எனவே, ரோஹித் மற்றும் கரணுக்கு இடையில் 3 மாணவர்கள் உள்ளனர்.

15. வலது முனையிலிருந்து 9-வதாக Q-வும், Q-வின் இடப்புறம் 4-வதாக R-ம் உள்ளனர். எனவே, வலது முனையிலிருந்து 13-வதாக R உள்ளார்.

R-ன் இடப்புறமாக உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (40 − 13) = 27.

எனவே, இடது முனையிலிருந்து 28-வதாக R உள்ளார். மேலும், இடது முனையிலிருந்து 13-வதாக P உள்ளார்.

P மற்றும் R-க்கு இடையே 14 நபர்கள் உள்ளனர்.

16. குணால் மற்றும் சோனாலி இருவருக்குமிடையே உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = 35 − (7 + 9) = 19.

இருவருக்குமிடையே 19 மாணவர்கள் உள்ளனர் என்பது தெளிவு.

எனவே, புல்கித்தின் இடத்திலிருந்து குணால் 10-வதாக உள்ளார்.

17. பீனாவின் புது இடமானது இடமிருந்து 15-வது மற்றும் வலமிருந்து 4-வது.

வரிசையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (14 + 1 + 3) = 18.

நீனாவின் ஆரம்பநிலை வலமிருந்து 5-வது.

நீனாவின் இடப்புறமாக உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (18 − 5) = 13.

எனவே, நீனாவின் ஆரம்ப நிலை இடமிருந்து 14-வது ஆகும்.

18. இடமிருந்து 6-வதாக ரீனா உள்ளார்.

ரீனாவின் வலப்புறம் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (18 − 6) = 12.

எனவே, ரீனாவின் இடம் வலமிருந்து 13-வது ஆகும்.

19. நீனாவின் புது இடம் ரீனாவின் பழைய இடமாகும். அதாவது இடமிருந்து 6-வது.

20. மீனாவின் புது இடம் பீனாவின் பழைய இடம், அதாவது, இடமிருந்து 7-வது.

மீனாவின் வலப்புறம் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை = (18 − 7) = 11.

எனவே, மீனா வலமிருந்து 11-வதாக உள்ளார்.

வகை 3: நேர வரிசை சோதனை

எ.கா.1: தனது சகோதரனின் பிறந்தநாள் பிப்ரவரி 15-க்கு பிறகு ஆனால் 18-க்கு முன்னால், என சதீஷ் ஞாபகம் வைத்துள்ளான். ஆனால் அவளது சகோதரி காஜல் தனது சகோதரனின் பிறந்தநாள் 16-க்கு பின் ஆனால் பிப்ரவரி 19-க்கு முன் என் ஞாபகம் வைத்துள்ளாள். எனில், பிப்ரவரியின் எந்த தேதியில் சதீஷினுடைய சகோதரனின் பிறந்தநாள்?

(*a*) 16-வது (*b*) 17-வது (*c*) 18-வது (*d*) 19-வது
(*e*) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. சதீஷைப் பொறுத்தவரை அவனுடைய சகோதரனின் பிறந்தநாள் பிப்ரவரி 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் ஒன்று. காஜலைப் பொறுத்தவரை சகோதரனின் பிறந்தநாள் பிப்ரவரி 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் ஒன்று. எனவே இருவருடைய பொதுவான தேதியில் தான் சகோதரனின் பிறந்தநாள். அதாவது, பிப்ரவரி 17.

எனவே, விடை (*b*) ஆகும்.

எ.கா.2: ஒரு பேருந்து நிலையத்திலிருந்து ஒவ்வொரு 30 நிமிடத்திலும் டெல்லிக்கு ஒரு பேருந்து புறப்படுகிறது. ஒரு பயணி விசாரித்ததில் ஒரு பேருந்து 10 நிமிடங்களுக்கு முன்பாக புறப்பட்டுவிட்டது. அடுத்த பேருந்து காலை 9.35-க்கு

புறப்படும் என தகவல் அறிவிப்பு குமாஸ்தா பயணியிடம் சொன்னார். பயணியிடம் குமாஸ்தா எத்தனை மணிக்கு இந்த தகவலை சொன்னார்?

(*a*) காலை 9.10 மணி (*b*) காலை 8.55 மணி
(*c*) காலை 9.08 மணி (*d*) காலை 9.05 மணி
(*e*) காலை 9.15 மணி

தீர்வு. அடுத்த பேருந்து காலை 9.35 மணிக்கு புறப்படும். இதன் மூலம் தெரிவதாவது முந்தைய பேருந்து தகவல் குமாஸ்தா விளக்கம் கொடுப்பதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னால் இது நடந்துள்ளது.

எனவே, தகவல் குமாஸ்தா காலை 9:15 மணிக்கு இந்த ததவலைக் கொடுத்துள்ளார்.

எனவே, விடை (*e*) ஆகும்.

எ.கா.3: ஒரு மாதத்தின் ஏழாவது நாள் வெள்ளிக்கிழமைக்கு 3 நாட்கள் முந்தையது, அதாவது செவ்வாய்க்கிழமை. எனில், அந்த மாதத்தின் 19-வது நாள் என்ன கிழமை?

(*a*) ஞாயிறு (*b*) திங்கள் (*c*) புதன் (*d*) வெள்ளி

தீர்வு. மேலே குறிப்பிடப்பட்டது போல், மாதத்தில் 7-வது நாள் வெள்ளிக்கிழமைக்கு மூன்று நாட்கள் முந்தையது. அதாவது செவ்வாய்.

எனவே, 14-வது நாளும் செவ்வாய். ஆதலால், 19-வது நாள் ஞாயிறு.

எனவே, விடை (*a*) ஆகும்.

எ.கா.4: 17-வது டிசம்பர் 2002 அன்று சனிக்கிழமை எனில், 22-வது டிசம்பர் 2004 அன்று என்ன கிழமை?

(*a*) திங்கள் (*b*) செவ்வாய் (*c*) புதன் (*d*) ஞாயிறு

தீர்வு. ஏழாவது நாளில் ஒவ்வொரு கிழமையும் திரும்ப வரும். 17-வது டிசம்பர் – 16-வது டிசம்பர் வரை 365 நாட்கள் உள்ளன. 365-ஐ 7-ஆல் வகுத்தால் 52 வாரங்களும் 1 நாளும் இருக்கும். எனவே, 365-வது நாள் முதல் நாளின் கிழமையாக இருக்கும். அதாவது, 16 டிசம்பர் 2003 அன்று சனிக்கிழமையாகும்.

16-டிசம்பர் 2003 – 15-வது டிசம்பர் 2004 வரை 366 நாட்கள் உள்ளன (2004-ஆம் வருடம் லீப் வருடம் என்பதால் பிப்ரவரியில் 29 நாட்கள்). எனவே, 14-வது டிசம்பர் 2004 அன்று 16-வது டிசம்பர் 2003 அன்றைய கிழமையாகவே இருக்கும். அதாவது, சனிக்கிழமை.

எனவே, 21-வது டிசம்பர் 2004 அன்றும் சனிக்கிழமை. மேலும், 22-வது டிசம்பர் 2004 அன்று ஞாயிறு.

எனவே, விடை (*d*) ஆகும்.

குறிப்பு: எ.கா.4-ஐப் போல்' உள்ள கேள்விகளுக்கு;

(*i*) ஒரு வருடத்தில் 365 நாட்கள் இருக்கும்.

(*ii*) 4-ஆல் வகுபடக்கூடிய வருடங்கள் லீப் வருடங்களாகும். எ.கா., 1980, 1984, 1988, 1992, 1996, ..., 2008, ..., இவற்றில் 366 நாட்கள் இருக்கும்.

(*iii*) லீப் வருடத்தில் பிப்ரவரியில் 29 நாட்கள் இருக்கும்.

(*iv*) வருடத்தின் கடைசி நாள் முதல் நாளின் கிழமையாகவே இருக்கும்.

எனவே, வருடத்தின் முதல் நாள் வெள்ளி எனில், வருடத்தின் கடைசி நாளும் வெள்ளி. மற்றும் அடுத்த வருடத்தின் முதல் நாள் சனிக்கிழமை.

எனினும், லீப் வருடத்தின் முதல் நாள் வெள்ளிக்கிழமையெனில், வருடத்தின் கடைசி நாள் சனிக்கிழமையாகும். மற்றும் அடுத்த வருடத்தின் முதல் நாள் ஞாயிறு ஆகும்.

பயிற்சி 12C

1. ஒரு மதகுரு தன் பக்தர்களிடம் சொன்னது, 'கோவிலின் மணி ஒவ்வொரு 45 நிமிட இடைவெளியில்' அடிக்கப்படும். கடைசி மணி ஐந்து நிமிடங்களுக்கு முன்னால் அடிக்கப்பட்டது. அடுத்ததாக காலை 7.45 மணிக்கு கோவில் மணி அடிக்கப்படும். எத்தனை மணிக்கு மதகுரு பக்தர்களிடம் இந்த தகவலை சொன்னார்? **(R.R.B. 2002)**

(*a*) காலை 7.40 மணி (*b*) காலை 7.05 மணி
(*c*) காலை 7 மணி (*d*) காலை 6.55 மணி
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

2. லக்னோவுக்கு செல்லும் இரயில் புதுதில்லி இரயில் நிலையத்திலிருந்து ஒவ்வொரு $2\frac{1}{2}$ மணிநேர இடைவெளியில் புறப்படுகிறது. லக்னோவிற்கு செல்லும் இரயில் 40 நிமிடங்களுக்கு முன்னால் புறப்பட்டதாகவும் அடுத்த இரயில் 18.00 மணிக்கு புறப்படும் எனவும் தகவல் அறிவிக்கப்பட்டது. எனில், எத்தனை மணிக்கு தகவல் அறிவிக்கப்பட்டது?

(*a*) 15.30 மணி (*b*) 17.10 மணி
(*c*) 16.00 மணி (*d*) 15.50 மணி
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

3. வார நாள் ஒன்றின் மதியத்தில் ஒரு விண்ணப்பம் அலுவலக குமாஸ்தாவிடம் கொடுக்கப்பட்டது. அன்று விடுமுறையில் இருந்த உயர்பதவி குமாஸ்தாவிடம் அந்த விண்ணப்பம் அடுத்த நாளில் கொடுக்கப்பட்டது. அந்த உயர் பதவி அதிகாரி விண்ணப்பத்தை அன்று மாலை மேசை அதிகாரியிடம் கொடுத்தார். மேசை அதிகாரி விண்ணப்பத்தை படித்துவிட்டு அதேநாளில் அதாவது., வெள்ளியன்று விவரத்தை வெளியிட்டார். அலுவலக குமாஸ்தாவிடம் எந்த கிழமையில் விண்ணப்பம் கொடுக்கப்பட்டது?

(a) திங்கள்
(b) செவ்வாய்
(c) புதன்
(d) முந்தைய வாரத்தின் சனிக்கிழமை
(e) இவற்றில் எதுவுமில்லை

4. ஒரு அலுவலகத்தில் 20 நபர்கள் வேலை செய்கின்றனர். ஐந்து நபர்கள் கொண்ட முதல் குழு காலை 8.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை வேலை செய்கிறது. பத்து நபர்கள் கொண்ட இரண்டாம் குழு காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை வேலை செய்கிறது. 5 நபர்கள் கொண்ட மூன்றாம் குழு நண்பகல் 12 மணி முதல் மாலை 6.00 மணி வரை வேலை செய்கிறது. அலுவலகத்தில் உள்ள மூன்று கணினிகளையும் அனைத்து பணியாளர்களும் அடிக்கடி பயன்படுத்துவார்கள். கீழே உள்ள எந்த நேர இடைவெளியில் கணினிகள் மிக அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன? **(C.B.I. 1995)**

(a) காலை 10.10 மணி - நண்பகல் 12 மணி
(b) நண்பகல் 12 மணி - மதியம் 2.00 மணி
(c) மதியம் 1.00 மணி - மதியம் 3.00 மணி
(d) மதியம் 2.00 மணி - மதியம் 4.00 மணி

5. ஒரு குரங்கு ஒவ்வொரு 1 மணி நேர தொடக்கத்தில் 30 அடிகள் ஏறி பின் 20 அடி வழுக்கிய பின் சிறிது நேரம் ஓய்வு எடுக்கிறது. பிறகு அடுத்த மணி நேர தொடக்கத்தில் மீண்டும் ஏறுகிறது. அது காலை 8.00 மணிக்கு தனது செயலை தொடங்கினால், தரையிலிருந்து 120 அடி உள்ள கொடியை அது தொடுகின்ற முதல் நேரம் என்ன? **(M.B.A. 1997)**

(a) மாலை 4 மணி (b) மாலை 5 மணி
(c) மாலை 6 மணி (d) இவற்றுள் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 6 முதல் 8): கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்: **(S.B.I.P.O. 1997)**

(I) செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கமல் நண்பகல் 12 முதல் மாலை 4 மணி வரை கமல் தனது வீட்டில் இருப்பார்.

(II) அவருடைய இளைய சகோதரர் நவின் திங்கள், வியாழன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை வீட்டில் இருப்பார்.

(III) மூத்த சகோதரரான ராஜீவ் திங்கள், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 வரையிலும் மற்றும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மதியம் 2 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் வீட்டில் இருப்பார்.

6. மூன்று சகோதரர்களும் எந்த கிழமையில் ஒரே நேரத்தில் வீட்டில் இருப்பார்கள்?

(a) எதுவுமில்லை (b) ஞாயிறு
(c) வியாழன் (d) கண்டுபிடிக்க முடியாது
(e) இவற்றில் எதுவுமில்லை

7. ஒரு வாரத்தில் குறிப்பிட்ட நேரத்தில் எத்தனை நாட்களுக்கு ஒரே ஒரு சகோதரர் மட்டும் வீட்டில் இருப்பார்?

(a) ஒன்று (b) இரண்டு
(c) மூன்று (d) நான்கு
(e) இவற்றில் எதுவுமில்லை

8. வாரத்தின் எந்த நாளில் (நாட்களில்) மூத்த சகோதரர் மற்றும் மிக இளைய சகோதரர் இருவரும் ஒரே நேரத்தில் வீட்டில் இருப்பார்கள்?

(a) திங்கள் மட்டும்
(b) வியாழன் மட்டும்
(c) வெள்ளி மட்டும்
(d) திங்கள் மற்றும் வியாழன்
(e) ஞாயிறு மற்றும் வெள்ளி

9. தொலைக்காட்சியில் ஒரு முக்கிய நிகழ்ச்சியை பார்ப்பதற்காக முஸ்கான் இரவு 10 மணிக்குள் தனது வீட்டுப்பாடங்கள் அனைத்தையும் முடிக்க விரும்புகிறாள். அவனது ஒவ்வொரு பாடதிட்டத்திலும் 40 நிமிட வேலை இருக்கிறது. நிகழ்ச்சியை அவள் பார்ப்பதற்கு தனது கடைசி பகுதி வீட்டுப்பாடத்தை எத்தனை மணிக்கு தொடங்கினால் சரியாக அதை செய்து முடிப்பாள்?

(a) மாலை 6.30 மணி (b) மாலை 6.40 மணி
(c) இரவு 7.10 மணி (d) இரவு 7.20 மணி

10. நாளை மறுநாள் சனிக்கிழமை எனில், நேற்றைய தினத்திற்கு மூன்று நாட்கள் முன்னால் என்ன கிழமை? **(S.S.C. 2002)**

(a) ஞாயிறு (b) திங்கள்
(c) வியாழன் (d) சனி

11. நேற்றைய முன்தினம் வியாழன் எனில், ஞாயிற்றுக் கிழமை எப்பொழுது?

(a) இன்று
(b) இன்றைக்கு இரண்டு நாட்களுக்கு பிறகு
(c) நாளை
(d) நாளைய மறுநாள்

12. நேற்றைய முன்தினம் சனிக்கிழமை எனில், நாளைய மறுநாள் என்ன கிழமை?

(a) வெள்ளி (b) வியாழன்
(c) புதன் (d) செவ்வாய்

13. ஒன்பது நாட்களுக்கு முன்பு மோகினி திரைப்படங்கள் பார்க்க போனாள். அவள் வியாழக்கிழமை மட்டுமே போனாள். இன்று வாரத்தின் என்ன கிழமை?

(a) வியாழன் (b) சனி
(c) ஞாயிறு (d) செவ்வாய்

14. மாதத்தின் 4-வது நாள் செவ்வாய்க்கிழமை எனில், 24-வது தேதியின் மூன்று நாட்கள் கழித்து என்ன கிழமை வரும்? **(M.I.B. 2005)**

(a) திங்கள் (b) ஞாயிறு
(c) வியாழன் (d) வெள்ளி

15. ஐந்து வருடங்களுக்கு முன்பு நேற்றைய தினத்திற்கு முந்தைய நாள் வியாழக்கிழமை எனில், நாளைக்கு பிறகு மூன்று நாட்களுக்கு முன்னால் ஞாயிறு வருவதற்கான குறைவான சாத்தியம் எத்தனை?

(a) இரண்டு (b) மூன்று
(c) நான்கு (d) ஐந்து

விடைகள் (பயிற்சி 12C)

1. (b)	2. (e)	3. (c)	4. (b)	5. (c)	6. (a)	7. (d)	8. (d)	9. (b)	10. (a)
11. (c)	12. (c)	13. (b)	14. (c)	15. (a)					

தீர்வுகள் (பயிற்சி 12C)

1. காலை 7.45 மணிக்கு 45 நிமிடங்கள் முன்பு அதாவது., காலை 7.00 மணிக்கு மணி அடிக்கப்பட்டது. ஆனால் மதகுரு தனது பக்தர்களிடம் தகவல்களை சொன்னதற்கு ஐந்து நிமிடங்கள் இது நடந்தது. எனவே, தகவல் காலை 7.05 மணிக்கு சொல்லப்பட்டது.
2. கடைசி இரயிலானது 18.00 மணிக்கு $2\frac{1}{2}$ மணி நேரம் முன்பாக அதாவது., 15.30 மணிக்கு புறப்பட்டது. ஆனால் தகவல் அறிவிக்கப்படுவதற்கு 40 நிமிடங்கள் முன்பாக இது நிகழ்ந்தது. எனவே, தகவல் 16.10 மணிக்கு அறிவிக்கப்பட்டது.
3. மேசை அதிகாரியிடம் விண்ணப்பம் வெள்ளியன்று வந்தடைந்தது. உயர் பதவி அதிகாரியின் மேசையில் விண்ணப்பம் வியாழன் அன்று வைக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. எனவே, அலுவலக குமாஸ்தா விண்ணப்பத்தை புதனன்று பெற்றுக்கொண்டார்.
4. மூன்று குழுக்களும் ஒரே நேரத்தில் வேலை செய்யும் பொழுது கணினிகள் மிக அதிகமாக பயன்படுத்தப்பட்டது. இது நண்பகல் 12 மணி முதல் மதியம் 2 மணி வரையிலான நேரத்தில் இது நிகழ்கிறது.
5. குரங்கு ஒரு மணி நேரத்தில் 10 அடி ஏறுகிறது. எனவே 9 மணி நேரத்தில், அதாவது., மாலை 5.00 மணிக்கு குரங்கு 90 அடி ஏறியிருக்கும். அடுத்த ஒரு மணி நேரத்தில் குரங்கு 30 அடி வழுக்கு உயரத்தை மாலை 6.00 மணிக்கு தொடுகிறது.

கேள்விகள் 6 முதல் 8:

கீழே வருமாறு நாம் அட்டவணைப்படுத்தலாம்:

	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு
காலை 9 மணி - 10.00 மணி	R		R	R			
காலை 10 மணி - நண்பகல் 12 மணி	N, R		R	N, R	N		N
நண்பகல் 12 மணி - மதியம் 2 மணி	N	K		K, N	N		K, N
மதியம் 2 மணி - மாலை 4 மணி		K		K	R	R	K, R

6. வாரத்தின் எந்த ஒரு நாளிலும் மூன்று சகோதரர்களும் சேர்ந்து இருப்பதில்லை. என்பது தெளிவு
7. வாரத்தின் அனைத்து ஏழு நாட்களிலும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு சகோதரர் வீட்டில் உள்ளார்.
8. திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் நவின் மற்றும் ராஜீவ் வீட்டில் ஒரே நேரத்தில் இருக்கிறார்கள்.
9. 5 பாடத்திட்டங்களையும் செய்துமுடிக்க முஸ்கானுக்கு தேவைப்படும் நேரம் = (40 × 5) நிமிடங்கள்
   = 200 நிமிடங்கள்
   = 3 மணி 20 நிமிடங்கள்.
10. நாளைய மறுநாள் சனிக்கிழமை. எனவே, இன்று வியாழக்கிழமை. எனவே, நேற்று புதன்கிழமை மற்றும் புதன்கிழமைக்கு 3 நாட்கள் முன்பு ஞாயிற்றுக்கிழமையாகும்.

11. நேற்றைக்கு முன்தினம் வியாழன் எனில், இன்று சனிக்கிழமை.

∴ நாளை ஞாயிற்றுக்கிழமையாகும்.

12. நேற்றைக்கு முன்தினம் சனிக்கிழமை எனில், இன்று திங்கட்கிழமை.

எனவே, நாளை செவ்வாய்க்கிழமை மற்றும் நாளைய மறுதினம் புதன்கிழமையாகும்.

13. 9 நாட்களுக்கு முன் வியாழக்கிழமை. எனவே, இன்று சனிக்கிழமையாகும்.

14. 4-வது நாள் செவ்வாய்க்கிழமை. எனவே, 11-வது, 18-வது மற்றும் 25-வது நாட்களும் செவ்வாய்க்கிழமை.

24-வது நாளுக்கு மூன்று நாள் கழித்து 27-வது நாள். அது வியாழக்கிழமையாகும்.

15. நேற்றைக்கு முன்தினத்தை அடுத்த தினம் நேற்று ஆகும். நேற்றைக்கு 15 நாட்களுக்கு முன் வியாழக்கிழமையாகும்.

எனவே, 5 நாட்களுக்கு முன் அது வெள்ளிக்கிழமையாகும்.

∴ இன்று புதன்கிழமை.

நாளைக்கு பிறகு மூன்று நாட்கள் முன்பு உள்ள நாள் நேற்று ஆகும்.

'நேற்று ஞாயிறு' என்பதை இன்று திங்கள் என்று நாம் சொல்வோம்.

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன்

பயிற்சி

1. '645903287' என்கிற எண்ணை இடமிருந்து வலமாக ஏறுவரிசையில் எழுதும் பொழுது எத்தனை எண்கள் அதே இடத்தில் இருக்கும். **[SBI Clerk Exam, 2021]**

(a) மூன்று (b) இரண்டு
(c) ஒன்று (d) நான்கு
(e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 2 முதல் 6): கொடுக்கப்பட்டுள்ள எண்களைப் பொறுத்து கேள்விகள் அமைந்துள்ளன. கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

625 427 189 258 469 **[SBI Clerk Exam, 2020]**

2. இடமிருந்து இரண்டாம் எண்ணின் 3-வது இலக்கம் மற்றும் வலமிருந்து மூன்றாம் எண்ணின் 2-வது இலக்கம் இரண்டின் கூட்டுத் தொகை என்ன?

(a) 10 (b) 15
(c) 14 (d) 12
(e) இவற்றில் எதுவுமில்லை

3. ஒவ்வொரு எண்ணின் முதல் மற்றும் மூன்றாவது இலக்கங்களை ஒன்றுக்கொன்று இடம் மாற்றினால் கீழே உள்ளவற்றில் எது மிகப்பெரிய எண்?

(a) 258 (b) 469
(c) 189 (d) 427
(e) 625

4. எண்ணில் உள்ள அனைத்து இலக்கங்களும் எண்ணுக்குள் இடமிருந்து வலமாக இறங்கு வரிசையில் எழுதப்பட்டால், கிடைக்கும் எண்ணில் கீழே உள்ள எந்த எண் மிகச் சிறிய எண்?

(a) 427 (b) 189
(c) 258 (d) 625
(e) 469

5. 2-வது மிகச்சிறிய எண்ணின் 3-வது இலக்கம் மற்றும் 2-வது மிகப்பெரிய எண்ணின் 1-வது இலக்கம் ஆகியவற்றின் பெருக்குத் தொகை என்ன?

(a) 32 (b) 72
(c) 24 (d) 36
(e) இவற்றில் எதுவுமில்லை

6. ஒவ்வொரு எண்ணிலிருந்தும் 2 கழிக்கப்பட்டால், உருவாகும் எத்தனை எண்கள் ஒற்றை எண்கள்?

(a) ஒன்று (b) இரண்டு
(c) மூன்று (d) மூன்றை விட அதிகம்
(e) எதுவுமில்லை

7. '624739854' என்கிற எண்ணில் உள்ள அனைத்து இரட்டை எண்களுடனும் 1 கூட்டப்பட்டால். கிடைக்கும் எண்ணின் இடமிருந்து 5-வது இலக்கம் மற்றும் வலமிருந்து 4-வது இலக்கம் இரண்டின் கூட்டுத்தொகை என்ன? **[IBPS PO Exam, 2019]**

(a) 12 (b) 9
(c) 11 (d) 10
(e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 8 முதல் 12): கொடுத்தப்பட்டுள்ள ஐந்து 3-இலக்க எண்களைப் பொறுத்து கேள்விகள் அமைந்துள்ளன:

563 218 732 491 929 **[SBI Clerk Exam, 2018]**

8. அனைத்து ஒற்றை எண்களின் 2-வது இலக்கத்திலிருந்து 2-ஐ கழித்து மற்றும் அனைத்து இரட்டை எண்களின் 1-வது இலக்கத்துடன் 2-ஐ கூட்டினால் கிடைக்கும் எண்ணில் இருக்கம் மிகச் சிறிய எண் எது?

(a) 218 (b) 732
(c) 491 (d) 929
(e) இவற்றில் எதுவுமில்லை

9. மிகப் பெரிய எண்ணின் 3-வது இலக்கத்தை மிகச் சிறிய எண்ணின் 1-வது இலக்கத்தால் வகுக்கும் பொழுது கிடைக்கும் மீதி என்ன?

(a) 4 (b) 6
(c) 4.5 (d) 5
(e) இவற்றில் எதுவுமில்லை

10. ஒவ்வொரு எண்ணிலும் உள்ள அனைத்து இலக்கங்களும் ஏறுவரிசையில் எழுதப்பட்டால், இருக்கும் மிகப்பெரிய எண் எது?
(a) 218 (b) 732
(c) 491 (d) 563
(e) இவற்றில் எதுவுமில்லை

11. கொடுக்கப்பட்டுள்ள எண்களில் எத்தனை எண்களில் முதல் மற்றும் மூன்றாவது இலக்கங்களின் கூட்டுத்தொகை 2-வது இலக்கத்தை விட பெரியது?
(a) ஒன்று (b) இரண்டு
(c) மூன்று (d) நான்கு
(e) இவற்றில் எதுவுமில்லை

12. எத்தனை எண்களில் முதல் மற்றும் மூன்றாவது இலக்கங்களுக்கிடையே உள்ள வித்தியாசம் 2-வது இலக்கத்தை விட பெரியது?
(a) ஒன்று (b) இரண்டு
(c) மூன்று (d) நான்கு
(e) இவற்றில் எதுவுமில்லை

குறிப்புகள் (கேள்விகள் 13 முதல் 17): கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து எண்களைப் பொறுத்து கேள்விகள் அமைந்துள்ளன.

834 427 563 649 975 **[IBPS Clerk Exam, 2017]**

13. எண்களின் அனைத்து இலக்கங்களும் எண்களுக்கு உள்ளேயே ஏறு வரிசையில் எழுதப்பட்டால், கீழே உள்ளவற்றுள் எது மிகச் சிறிய எண்?
(a) 975 (b) 649
(c) 834 (d) 563
(e) இவற்றில் எதுவுமில்லை

14. மிகப் பெரிய எண்ணின் 1-வது இலக்கத்தை மிகப்பெரிய எண்ணின் 2-வது இலக்கத்தால் வகுத்தால், கிடைக்கும் மீதி என்ன?
(a) 2 (b) 3
(c) 4 (d) 5
(e) இவற்றில் எதுவுமில்லை

15. ஒவ்வொரு எண்ணின் இரட்டை எண் ஒவ்வொன்றிலிருந்து 2-ஐ கழித்து மற்றும் ஒவ்வொரு ஒற்றை எண்ணிலிருந்து 1-ஐ கழித்தால், கிடைக்கும் எண்களில் மிகச் சிறிய எண் எது?
(a) 834 (b) 427
(c) 563 (d) 649
(e) இவற்றில் எதுவுமில்லை

16. மிகப் பெரிய எண்ணின் 3-வது இலக்கம் மற்றும் மிகச் சிறிய எண்ணின் 2-வது இலக்கம் இரண்டின் கூட்டுத்தொகை என்ன?
(a) 7 (b) 6
(c) 4 (d) 3
(e) இவற்றில் எதுவுமில்லை

17. 2-வது மிகப் பெரிய எண்ணின் 1-வது இலக்கம் மிகச் சிறிய எண்ணின் 1-வது இலக்கத்தால் வகுக்கப்பட்டால் கிடைக்கும் மீதி என்ன?
(a) 5 (b) 3
(c) 2 (d) 4
(e) இவற்றில் எதுவுமில்லை

18. ஒரு வகுப்பில் வெவ்வேறு உயரம் கொண்ட மாணவர்கள் - P, Q, R, S மற்றும் T உள்ளனர். P-யின் உயரம் ஒரே ஒரு மாணவனை விட கூடுதல். Q-வின் உயரம் S மற்றும் P-யை விட அதிகம் ஆனால் R-ஐ விட அதிகம் இல்லை. S-ன் உயரம் P-யை விட அதிகம். R மிகக் குறைந்த உயரம் கொண்டவர் இல்லை. எனில், வகுப்பில் மிக அதிக உயரமான மாணவர் யார்? **[SSC Exam, 2017]**
(a) Q (b) R
(b) S (d) T

19. வரிசையில் நிற்கும். ஆண்களில் வலமிருந்து 30-வதாக மனோஜ் மற்றும் இடமிருந்து 20-வதாக கிரணும் உள்ளனர். அவர்கள் இருவரும் தங்களது இடங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொண்டால் வலமிருந்து 35-வதாக மனோஜ் இருப்பார். எனில், அந்த வரிசையில் நிற்கும் ஆண்களின் எண்ணிக்கை என்ன?
[SSC-CGL Tier I Exam, 2015]
(a) 34 (b) 54
(c) 45 (d) 44

20. சச்சின், கமல், மோகன், அருண் மற்றும் ராம் ஆகிய ஐந்து நண்பர்கள் உள்ளனர். கமலை விட உயரம். குறைவாகவும் ராமை விட உயரமானவர் சச்சின். மோகன் மிக உயரமானவர். கமலை விட அருண் சிறிது உயரம் குறைந்தவர் ஆனால் சச்சினை விட சிறது உயரம் அதிகமானவர். இரண்டாவது அதிக உயரம் கொண்டவர் யார்?
[SSC-CGL Tier I Exam, 2014]
(a) ராம் (b) சச்சின்
(c) கமல் (d) அருண்

21. ராகுலை விட ப்ரீத்தி அதிக மதிப்பெண் எடுத்துள்ளார். திவ்யாவைப் போல் சம மதிப்பெண்கள் யமுனா எடுத்துள்ளார். மஞ்சுவை விட குறைவான மதிப்பெண்களை லோகிதா எடுத்துள்ளார். யமுனாவை விட ராகுல் அதிக மதிப்பெண்கள் எடுத்துள்ளார். திவ்யாவை விட குறைவான மதிப்பெண்கள் மஞ்சு எடுத்துள்ளார். மிகக் குறைந்த மதிப்பெண்களை பெற்றவர் யார்?
[SSC-CGL Tier I Exam, 2013]
(a) மஞ்சு (b) யமுனா
(c) லோகிதா (d) ராகுல்

விடைகள்

1. (c)	2. (b)	3. (c)	4. (d)	5. (a)	6. (d)	7. (d)	8. (a)	9. (c)	10. (d)
11. (d)	12. (b)	13. (e)	14. (b)	15. (b)	16. (a)	17. (c)	18. (b)	19. (b)	20. (c)
21. (c)									

தீர்வுகள்

1. எண்கள் = 6 4 5 9 0 3 2 (8) 7
மறுசீரமைப்புக்கு பின் எண்கள் = 0 2 3 4 5 6 7 (8) 9

2. இடமிருந்து இரண்டாவது எண்ணின் 3-வது இலக்கம் = 42 (7)
வலமிருந்து மூன்றாவது எண்ணின் 2-வது இலக்கம் = 1 (8) 9
∴ தேவைப்படும் எண் = 7 + 8 = 15.

3. 625 427 189 258 469
எண்ணின் 1-வது மற்றும் 3-வது இலக்கங்களை ஒன்றுக்கொன்று இடம் மாற்றுவதில் கிடைக்கும் எண்
526 724 981 852 964
∴ மிகப் பெரிய எண் = 981
∴ அசல் எண் = 189.

4. 625 427 189 258 469
எண்களை மாற்றுவதில் கிடைப்பது;
652 742 981 852 964
மறுசீரமைத்ததில் கிடைக்கும் மிகச் சிறிய எண் = 652
∴ அசல் எண் = 625

5. இரண்டாவது மிகச்சிறிய எண்ணின் 3-வது இலக்கம் = 25 (8)
இரண்டாவது மிகப் பெரிய எண்ணின் 1-வது இலக்கம் = (4) 69
∴ பெருக்குத் தொகை = 8 × 4 = 32

6. ஒவ்வொரு எண்ணிலிருந்தும் 2-ஐக் கழித்தால் கிடைப்பது;
623 425 187 256 467
∴ ஒற்றை எண்கள் = 4.

7. கொடுக்கப்பட்டுள்ள எண் = 6 2 4 7 3 9 8 5 4
மறுசீரமைப்பதில் கிடைப்பது = 7 3 5 6 [2] [8] 9 4 5
இடமிருந்து 5-வது இலக்கம் மற்றும் வலமிருந்து 4-வது இலக்கம் ஆகியவற்றின் கூட்டுத் தொகை = 2 + 8 = 10.

8. கொடுக்கப்பட்டுள்ள எண் = 563 [218] 732 491 929
மறுசீரமைப்புக்கு பின் அமையும் எண் = 543 [418] 932 471 909
∴ தேவைபடும் எண் = 218.

9. மிகப் பெரிய எண்ணின் 3-வது இலக்கம் = 9
மிகச்சிறிய எண்ணின் 1-வது இலக்கம் = 2.
∴ தேவையான எண் = $\frac{9}{2}$ = 4.5.

10. கொடுக்கப்பட்டுள்ள எண் = [563] 218 732 491 929
மறுசீரமைப்பிற்கு பிறகு எண் = [356] 128 237 194 299
∴ மிகப்பெரிய எண் = 563.

11. 563 → 5 + 3 = 8 > 6
218 → 2 + 8 = 10 > 1
732 → 7 + 2 = 9 > 3
491 → 4 + 1 = 5 < 9
929 → 9 + 9 = 18 > 2
∴ தேவையான எண் = 563, 218, 732, 929.

12. 563 → 5 − 3 = 2 < 6
218 → 8 − 2 = 6 > 1
732 → 7 − 2 = 5 > 3
491 → 4 − 1 = 3 < 9
929 → 9 − 9 = 0 < 2
∴ தேவையான எண் = 218, 732.

13. கொடுக்கப்பட்டுள்ள எண் = 834 427 563 649 975
மறுசீரமைப்புக்கு பிறகான எண் = 348 247 356 469 579
∴ மிகச்சிறிய எண் = 247.

14. மிகப்பெரிய எண்ணின் 1-வது இலக்கம் = (9) 75
இரண்டாவது மிகப்பெரிய எண்ணின் 2-வது இலக்கம் = 8 (3) 4
∴ தேவையான எண் = $\frac{9}{3}$ = 3

15. கொடுக்கப்பட்ட எண் = 834 427 563 649 975
மறுசீரமைப்பிற்கு பிறகான எண் = 622 206 442 428 864
∴ தேவைப்படும் எண் = 427.

16. மிகப்பெரிய எண்ணின் 3-வது இலக்கம் = 5
மிகச்சிறிய எண்ணின் 2-வது இலக்கம் = 2
∴ இலக்கங்களின் கூட்டுத்தொகை = 5 + 2 = 7

17. மிகப்பெரிய எண்ணின் 2-வது இலக்கம் = (8) 34
மிகச்சிறிய எண்ணின் 1-வது இலக்கம் = (4) 27
∴ தேவையான எண் = $\frac{8}{4}$ = 2.

18. வகுப்பில் உள்ள மாணவர்களின் உயரங்களில் வரிசை = $R > Q > S > P > T$
எனவே, வகுப்பில் மிக உயரமான மாணவன் R ஆவார்.

19. வரிசையில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 20 + 35 − 1 = 54.

20. கேள்வியின் படி,
மோகன் > கமல் > சச்சின் > ராம் ....(*i*)
கமல் > அருண் > சச்சின் ....(*ii*)
(*i*) மற்றும் (*ii*)-லிருந்து;
மோகன் > கமல் > அருண் > சச்சின் > ராம்.
எனவே, இரண்டாவது மிக உயர்ந்த மாணவர் கமல் ஆவார்.
∴ தேர்வு (*c*) சரியானது.

21. ப்ரீத்தி > ராகுல், யமுனா = திவ்யா, லோகிதா < மஞ்சு, ராகுல் > யமுனா, மஞ்சு > திவ்யா
எனவே, ப்ரீத்தி > ராகுல் > யமுனா = திவ்யா > மஞ்சு > லோகிதா.
எனவே, இரண்டாவது உயரம் குறைந்தவர் லோகிதா ஆவார்.

13

கணித செயல்பாடுகள்

இந்த பகுதியில் இலகுவான கணித செயல்பாடுகளை பற்றிய கேள்விகள் இருக்கும். கூட்டல், கழித்தல், பெருக்கல் மற்றும் வகுத்தல் ஆகிய செயல்பாடுகள், மேலும், 'அதை விட குறைவாக', 'அதை விட கூடுதலாக', 'அதற்கு சமமாக', 'அதற்கு சமம் இல்லாத' ஆகிய வாக்கியங்கள் வழக்கமான குறியீடுகள் அல்லாமல் வெவ்வேறு குறியீடுகளாக குறிக்கப்படும். இந்த வாக்கியங்களைப் பற்றிய கேள்விகள் செயற்கை குறியீடுகளைக் கொண்டிருக்கும். விடையை கண்டுபிடிப்பதற்கு அசல் குறியீடுகளை சரியான இடத்தில் தேர்வு எழுதுபவர் பொருத்த வேண்டும்.

வகை 1: மாற்று குறியீடுகளை பயன்படுத்தி கணக்குகளை தீர்ப்பது

இந்த பிரிவில் கணித குறியீடுகள், எண்களுக்கான மாற்றுகளும் அதைத் தொடர்ந்து ஒரு கேள்வியும் கேட்கப்பட்டிருக்கும். கேள்வியானது ஒரு கோவை வடிவிலோ அல்லது சரியான/தவறான சமன்பாட்டை தேர்ந்தெடுக்கும் வகையிலோ இருக்கும். கொடுக்கப்பட்டுள்ள சமன்பாட்டில் அசல் குறியீடுகள் அல்லது எண்களை பயன்படுத்தி கேள்விக்கு விடையை கண்டுபிடிக்க வேண்டும்.

குறிப்பு: கணித கோவையை தீர்க்கும் பொழுது 'BODMAS' விதியை பயன்படுத்த வேண்டும். அதாவது, அடைப்புக்குறிகள், உள்ள, வகுத்தல், பெருக்கல், கூட்டல், கழித்தல்.

எ.கா., $(36 - 12) \div 4 + 6 \div 2 \times 3 = 24 \div 4 + 6 \div 2 \times 3$ (அடைப்புக்குறியை தீர்க்க)

$= 6 + 3 \times 3$ (வகுத்தலை தீர்க்க)

$= 6 + 9$ (பெருக்கலை தீர்க்க)

$= 15.$ (கூட்டலை தீர்க்க)

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா.1: '+' என்பது 'கழித்தல்', '×' என்பது 'வகுபட', '÷' என்பது 'கூட்டல்' மற்றும் '–' என்பது 'பெருக்கப்பட' ஆகியவற்றைக் குறிக்கும் எனில், 252 × 9 – 5 + 32 ÷ 92 என்கிற கோவையின் மதிப்பு என்ன?
(Bank P.O. 2006)

(a) 95 (b) 168 (c) 192 (d) 200 (e) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ள கோவையில் சரியான குறியீடுகளைப் புகுத்தினால், கிடைப்பது;

$252 \div 9 \times 5 - 32 + 92 = 28 \times 5 - 32 + 92$

$= 140 - 32 + 92$

$= 232 - 32 = 200.$

எனவே, விடை (*d*) ஆகும்.

எ.கா.2: + என்பது ×, × என்பது –, + என்பது ÷ மற்றும் – என்பது + எனில், 175 – 25 ÷ 5 + 20 × 3 + 10 என்கிற கோவையின் விளைவு என்ன?
(S.S.C. 2000)

(a) 77 (b) 160 (c) 240 (d) 2370

தீர்வு. கோவையில் சரியான குறியீடுகளைப் புகுத்தினால், கிடைப்பது;

$175 \div 25 + 5 \times 20 - 3 \times 10 = 7 + 5 \times 20 - 3 \times 10$

$= 7 + 100 - 30$

$= 107 - 30 = 77.$

எனவே, விடை (*a*) ஆகும்.

எ.கா.3: L என்பது +, M என்பது –, N என்பது ×, P என்பது ÷ எனில்,
14 N 10 L 42 P 2 M 8 = ? **(S.S.C. 2001)**

(*a*) 153 (*b*) 216 (*c*) 248 (*d*) 251

தீர்வு. சரியான குறியீடுகளைப் பயன்படுத்தினால் கிடைப்பது,

கொடுக்கப்பட்டுள்ள கோவை = 14 × 10 + 42 ÷ 2 – 8

= 14 × 10 + 21 – 8

= 140 + 21 – 8 = 161 – 8 = 153.

எனவே, விடை (*a*) ஆகும்.

எ.கா.4: 20 – 10 என்பது 200, 8 + 4 என்பது 12, 6 × 2 என்பது 4 எனில்,
100 – 10 × 1000 + 1000 + 100 × 10 = ?

(*a*) 0 (*b*) 20 (*c*) 1090 (*d*) 1900 (*e*) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ளது: 20 – 10 = 200. ஆனால் 20 × 10 = 200 ஆகும். எனவே, – என்பது ×.
மேலும் 8 ÷ 4 = 12 என கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் 8 + 4 = 12. எனவே, ÷ என்பது +.
கொடுக்கப்பட்டுள்ளது: 6 × 2 = 4. ஆனால், 6 – 2 = 4. எனவே, × என்பது –.
எனவே, கொடுக்கப்பட்டுள்ள கணித மொழியில், – என்பது ×, ÷ என்பது +, மற்றும் × என்பது –.

கொடுக்கப்பட்டுள்ள கோவை = 100 × 10 – 1000 + 1000 ÷ 100 – 10

= 1000 – 1000 + 10 – 10 = 0.

எனவே, விடை (*a*) ஆகும்.

பயிற்சி 13A

1. '<' என்பது 'கழித்தல்', '>' என்பது 'கூட்டல்' '=' என்பது 'பெருக்கப்படுகிறது' மற்றும் '$' என்பது 'வகுக்கப்படுகிறது' எனில், 27 > 81 $ 9 < 6 என்பதன் மதிப்பு என்ன? **(R.B.I. 2003)**
(*a*) 6 (*b*) 33 (*c*) 36 (*d*) 54
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

2. '+' என்பது 'வகுக்கப்படுகிறது', '–' என்பது 'கூட்டப்படுகிறது', '×' என்பது 'கழிக்கப்படுகிறது' மற்றும் '÷' என்பது 'பெருக்கப்படுகிறது' எனில், 24 ÷ 12 – 18 + 9 என்கிற கோவையின் மதிப்பு என்ன? **(Specialist Officers' 2002)**
(*a*) –25 (*b*) 0.72 (*c*) 15.30 (*d*) 290
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

3. $ என்பது +, # என்பது –, @ என்பது × மற்றும் * என்பது ÷ எனில், 16 $ 4 @ 5 # 72 * 8 என்பதன் மதிப்பு என்ன? **(R.B.I. 2002)**
(*a*) 25 (*b*) 27 (*c*) 29 (*d*) 36
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

4. ÷ என்பது ×, × என்பது +, + என்பது – மற்றும் – என்பது ÷ எனில், 16 × 3 + 5 – 2 ÷ 4 என்பதன் மதிப்பு என்ன? **(A.T.M.A. 2004)**
(*a*) 9 (*b*) 10 (*c*) 19
(*d*) இவற்றுள் எதுவுமில்லை

5. + என்பது ÷, ÷ என்பது –, – என்பது ×, × என்பது + எனில், 12 + 6 ÷ 3 – 2 × 8 என்பதன் மதிப்பு என்ன? **(S.S.C. 2001)**
(*a*) –2 (*b*) 2 (*c*) 4 (*d*) 8

6. P என்பது 'வகுத்தல்', T என்பது 'கூட்டல்', M என்பது 'கழித்தல்' மற்றும் D என்பது 'பெருக்கல்' எனில், 12 M 12 D 28 P 7 T 15 என்பதன் மதிப்பு என்ன?
(*a*) –30 (*b*) –15 (*c*) 15 (*d*) 45
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

7. P என்பது ×, R என்பது +, T என்பது ÷ மற்றும் S என்பது – எனில், 18 T 3 P 9 S 8 R 6 என்பதன் மதிப்பு என்ன? **(S.B.I.P.O. 2001)**
(*a*) $-1\frac{1}{3}$ (*b*) $\frac{2}{3}$ (*c*) 46 (*d*) 58
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

8. P என்பது 'பெருக்கப்படுகிறது' என்பதையும், T என்பது 'கழிக்கப்படுகிறது' என்பதையும், M என்பது 'கூட்டப்படுகிறது' என்பதையும் B என்பது 'வகுக்கப்படுகிறது' என்பதையும் குறித்தால், 28 B 7 P 8 T 6 M 4 என்பதன் மதிப்பு என்ன?
(Asstt. Manager Exam, 2005)
(*a*) $-\frac{3}{2}$ (*b*) 30 (*c*) 32 (*d*) 34
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

9. 'when' என்பது '×', 'you' என்பது '÷', 'come' என்பது '–' மற்றும் 'will' என்பது '+' எனவும் குறியிடப்பட்டால் '8 when 12 will 16 you 2 come 10' என்பதன் மதிப்பு என்ன? **(Bank P.O. 2003)**
(*a*) 45 (*b*) 94 (*c*) 96 (*d*) 112
(*e*) இவற்றுள் எதுவுமில்லை

10. A என்பது +, B என்பது −, C என்பது × எனில், (10 C 4) A (4 C 4) B 6 என்பதன் மதிப்பு என்ன?
(a) 60 (b) 56 (c) 50 (d) 46

குறிப்பு (கேள்விகள் 11–14): ஒரு கற்பனை மொழியில் 0, 1, 2, 3, 4, 5, 6, 7, 8 மற்றும் 9 முறையே a, b, c, d, e, f, g, h, i மற்றும் j ஆகியவற்றால் மாற்றப்பட்டு மற்றும் 10 என்பது ba எனவும் மாற்றப்படுகிறது.

11. $(cd + ef) \times bc$ என்பது எதற்கு சமம்?
(a) 684 (b) 816 (c) 916 (d) 1564

12. $dc \times f - (bf - d) \times d$ என்பது எதற்கு சமம்?
(a) abb (b) abe (c) bce (d) bcf

13. $baf \div bf \times d$ என்பது எதற்கு சமம்?
(a) df (b) cb (c) be (d) d

14. $bee + fg - (ca \times h/be)$ என்பது எதற்கு சமம்?
(a) bhc (b) bic (c) bib (d) bja

15. '−' என்பது 'வகுத்தல்', '+' என்பது 'பெருக்கல்', '÷' என்பது 'கழித்தல்' மற்றும் '×' என்பது 'கூட்டல்' ஆகியவற்றைக் குறிக்கும் எனில், கீழே உள்ளவற்றில் எது சரி? **(S.S.C. 2000)**
(a) 4 × 5 + 9 − 3 ÷ 4 = 15
(b) 4 × 5 × 9 + 3 ÷ 4 = 11
(c) 4 − 5 ÷ 9 × 3 − 4 = 17
(d) 4 ÷ 5 + 9 − 3 + 4 = 18

16. → என்பது 'கூட்டல்', ← என்பது 'கழித்தல்', ↑ என்பது 'வகுத்தல்', ↓ என்பது 'பெருக்கல்', ↗ என்பது 'சமமான' ஆகியவற்றைக் குறிக்கும் எனில், கீழே உள்ளவற்றுள் எது சரி? **(S.S.C. 2003)**
(a) 7 ← 43 ↑ 6 ↓ 1 ↗ 4
(b) 3 ↓ 6 ↑ 2 → 3 ← 6 ↗ 5
(c) 5 → 7 ← 3 ↑ 2 ↗ 4
(d) 2 ↓ 5 ← 6 → 2 ↗ 6

17. − என்பது ÷, + என்பது ×, ÷ என்பது −, × என்பது + எனில், கீழே உள்ளவற்றுள் எது சரி?
(a) 52 ÷ 4 + 5 × 8 − 2 = 36
(b) 43 × 7 ÷ 5 + 4 − 8 = 25
(c) 36 × 4 − 12 + 5 ÷ 3 = 420
(d) 36 − 12 × 6 ÷ 3 + 4 = 60

18. P என்பது +, Q என்பது −, R என்பது × மற்றும் S என்பது ÷ ஆகியவற்றைக் குறித்தால், கீழே உள்ளவற்றுள் எது சரி?
(a) 36 R 4 S 8 Q 7 P 4 = 10
(b) 16 R 12 P 49 S 7 Q 9 = 200
(c) 32 S 8 R 9 = 160 Q 12 R 12
(d) 8 R 8 P 8 S 8 Q 8 = 57

19. L என்பது ÷, M என்பது ×, P என்பது + மற்றும் Q என்பது − ஆகியவற்றைக் குறித்தால் கீழே உள்ளவற்றுள் எது சரி?
(a) 32 P 8 L 16 Q 4 = $\frac{3}{2}$
(b) 6 M 18 Q 26 L 13 P 7 = $\frac{173}{13}$
(c) 11 M 34 L 17 Q 8 L 3 = $\frac{38}{3}$
(d) 9 P 9 L 9 Q 9 M 9 = −71

குறிப்புகள் (கேள்விகள் 20–21): கீழே உள்ள கேள்விகளில் சில குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களால் குறிப்பிடப்படுகிறது.

+	−	×	÷	=	>	<
B	**G**	**E**	**C**	**D**	**A**	**F**

ஒவ்வொரு கேள்வியிலும் சரியான கோவையைத் தேர்ந்தெடுக்கவும். **(S.S.C. 2002)**

20. (a) 18 C 3 D 6 B 8 C 4 G 12
(b) 18 A 3 E 6 B 8 G 4 B 12
(c) 18 C 3 G 6 B 8 B 4 D 12
(d) 18 F 3 B 6 E 8 G 4 E 12

21. (a) 15 B 5 G 8 B 4 G 6 F 3
(b) 15 C 15 B 8 F 4 B 6 C 3
(c) 15 A 5 E 8 C 4 B 6 E 3
(d) 15 C 5 F 8 C 4 B 6 C 3

குறிப்புகள் (கேள்விகள் 22–26): > என்பது +, < என்பது −, + என்பது ÷, ∧ என்பது ×, − என்பது =, × என்பது >, மற்றும் = என்பது < ஆகியவற்றைக் குறித்தால் கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் சரியான கோவையைத் தேர்ந்தெடுக்கவும். (B.T.M. 2005)

22. (a) 6 + 3 > 8 = 4 + 2 < 1
(b) 4 > 6 + 2 × 32 + 4 < 1
(c) 8 < 4 + 2 = 6 > 3
(d) 14 + 7 > 3 = 6 + 3 > 2

23. (a) 14 > 18 + 9 = 16 + 4 < 1
(b) 4 > 3 ∧ 8 < 1 − 6 + 2 > 24
(c) 3 < 6 ∧ 4 > 25 = 8 + 4 > 1
(d) 12 > 9 + 3 < 6 × 25 + 5 > 6

24. (a) 13 > 7 < 6 + 2 = 3 ∧ 4
(b) 9 > 5 > 4 − 18 + 9 > 16
(c) 9 < 3 < 2 > 1 × 8 ∧ 2
(d) 28 + 4 ∧ 2 = 6 ∧ 4 + 2

25. (a) 29 < 18 + 6 = 36 + 6 ∧ 4
(b) 18 > 12 + 4 × 7 > 8 ∧ 2
(c) 32 > 6 + 2 = 6 < 7 ∧ 2
(d) 31 > 1 < 2 = 4 > 6 ∧ 7

26. (a) 7 > 7 < 7 + 7 = 14
(b) 7 ∧ 7 > 7 + 7 = 7 ∧ 7 > 1
(c) 7 < 7 + 7 = 6
(d) 7 + 7 > 7 = 8

குறிப்புகள் (கேள்விகள் 27–31): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் வெவ்வேறு எழுத்துக்கள் வெவ்வேறு குறியீடுகளைக் குறிக்கின்றன.

கூட்டல்: *O* கழித்தல்: *M* பெருக்கல்: *A*

வகுத்தல்: *Q* சமமானது: *X* இதைவிட பெரியது: *Y*

இதைவிட சிறியது: *Z* **(I. Tax & Central Excise, 1996)**

கேள்விகளில் கொடுக்கப்பட்டுள்ள 4 மாற்றுகளிலிருந்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள எழுத்து குறியீடுகளை வைத்து சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

27. (*a*) 2 Z 2 A 4 O 1 A 4 M 8
(*b*) 8 Y 2 A 3 A 4 Q 2 A 4
(*c*) 10 X 2 O 2 A 4 O 1 M 2
(*d*) 12 X 4 O 2 Q 1 A 4 A 2

28. (*a*) 1 O 1 Q 1 M 1 Y 3 Q 1
(*b*) 2 Q 1 O 10 A 1 Z 6 A 4
(*c*) 3 O 2 O 10 Q 2 X 10 A 2
(*d*) 5 Q 5 A 5 O 5 Y 5 A 2

29. (*a*) 3 O 2 X 2 Q 1 A 3 O 1
(*b*) 6 M 2 Y 10 Q 2 A 3 O 1
(*c*) 10 A 2 Z 2 Q 2 A 10 Q 2
(*d*) 10 A 2 Y 2 Q 1 A 10 Q 2

30. (*a*) 32 X 8 Q 2 A 3 Q 1 A 2
(*b*) 14 X 2 A 4 A 2 M 2 Q 1
(*c*) 2 Y 1 A 1 Q 1 O 1 A 1
(*d*) 16 Y 8 A 3 O 1 A 2 M 2

31. (*a*) 8 Q 4 A 1 M 2 X 16 M 16
(*b*) 8 O 2 A 12 Q 10 X 18 Q 9
(*c*) 6 Q 2 O 1 O 1 X 16 A 1
(*d*) 2 O 3 M 4 Q 2 Z 1 A 2

விடைகள் (பயிற்சி 13A)

1. (*e*)	2. (*d*)	3. (*b*)	4. (*a*)	5. (*c*)	6. (*e*)	7. (*e*)	8. (*b*)	9. (*b*)	10. (*c*)
11. (*b*)	12. (*c*)	13. (*b*)	14. (*d*)	15. (*a*)	16. (*d*)	17. (*a*)	18. (*d*)	19. (*d*)	20. (*c*)
21. (*d*)	22. (*c*)	23. (*b*)	24. (*b*)	25. (*d*)	26. (*a*)	27. (*a*)	28. (*b*)	29. (*d*)	30. (*b*)
31. (*a*)									

தீர்வுகள் (பயிற்சி 13A)

1. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
கொடுக்கப்பட்டுள்ள கோவை = 27 + 81 ÷ 9 − 6
= 27 + 9 − 6 = 36 − 6 = 30.

2. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின், கிடைப்பது;
கொடுக்கப்பட்டுள்ள கோவை = 24 × 12 + 18 ÷ 9
= 288 + 2 = 290.

3. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின், கிடைப்பது;
கொடுக்கப்பட்டுள்ள கோவை = 16 + 4 × 5 − 72 ÷ 8 = 16 + 20 − 9 = 36 − 9 = 27.

4. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின், கிடைப்பது;
கொடுக்கப்பட்டுள்ள கோவை = $16 + 3 - 5 \div 2 \times 4 = 16 + 3\frac{5}{2} \times 4 = 19 - 10 = 9.$

5. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின், கிடைப்பது;
கொடுக்கப்பட்டுள்ள கோவை = 12 ÷ 6 − 3 × 2 + 8 = 2 − 6 + 8 = 10 − 6 = 4.

6. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின், கிடைப்பது;
கொடுக்கப்பட்டுள்ள கோவை
= 12 − 12 × 28 ÷ 7 + 15
= 12 − 12 × 4 + 15
= 12 − 48 + 15 = 27 − 48 = − 21.

7. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின், கிடைப்பது;
கொடுக்கப்பட்டுள்ள கோவை
= 18 ÷ 3 × 9 − 8 + 6
= 6 × 9 − 8 + 6
= 54 − 8 + 6 = 60 − 8 = 52.

8. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின், கிடைப்பது;
கொடுக்கப்பட்டுள்ள கோவை
= 28 ÷ 7 × 8 − 6 + 4
= 4 × 8 − 6 + 4
= 32 − 6 + 4 = 36 − 6 = 30.

9. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின், கிடைப்பது;
கொடுக்கப்பட்டுள்ள கோவை
= 8 × 12 + 16 ÷ 2 − 10
= 96 + 8 − 10
= 104 − 10 = 94.

10. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின், கிடைப்பது;
கொடுக்கப்பட்டுள்ள கோவை
= (10 × 4) + (4 × 4) − 6
= 40 + 16 − 6
= 56 − 6 = 50.

11. கொடுக்கப்பட்டுள்ள கோவை $= (23 + 45) \times 12$
$= 68 \times 12 = 816$

12. கொடுக்கப்பட்டுள்ள கோவை
$= 32 \times 5 - (15 - 3) \times 3$
$= 160 - 12 \times 3 = 160 - 36 = 124 = bce.$

13. கொடுக்கப்பட்டுள்ள கோவை $= 105 \div 15 \times 3$
$= 7 \times 3 = 21 = cb.$

14. கொடுக்கப்பட்டுள்ள கோவை
$= 144 + 56 - \left(20 \times \frac{7}{14}\right)$
$= 144 + 56 - (20 \div 2) = 144 + 56 - 10$
$= 190 = bja.$

15. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$4 + 5 \times 9 \div 3 - 4 = 4 + 5 \times 3 - 4$
$= 4 + 15 - 4 = 15.$

16. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$18 \div 6 \times 7 - 5 + 2 = 3 \times 7 - 5 + 2$
$= 21 - 5 + 2 = 18.$

17. சரியான குறியீடுகளை புயன்படுத்தியபின் கிடைப்பது;
$52 - 4 \times 5 + 8 \div 2 = 52 - 4 \times 5 + 4$
$= 52 - 20 + 4$
$= 56 - 20 = 36.$

18. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$8 \times 8 + 8 \div 8 - 8 = 8 \times 8 + 1 - 8$
$= 64 + 1 - 8$
$= 65 - 8 = 57.$

19. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$9 + 9 \div 9 - 9 \times 9 = 9 + 1 - 9 \times 9$
$= 9 + 1 - 81$
$= 10 - 81 = -71.$

20. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$18 \div 3 - 6 + 8 + 4 = 12$ அல்லது $6 - 6 + 8 + 4$
$= 12$ அல்லது $12 = 12$, என்பது சரியாகும்.

21. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$15 \div 5 < 8 \div 4 + 6 \div 3$ அல்லது $3 < 2 + 2$ அல்லது $3 < 4$, என்பது சரியாகும்.

22. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$8 - 4 \div 2 < 6 + 3$ அல்லது $6 < 9$, என்பது சரியாகும்.

23. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$4 + 3 \times 8 - 1 = 6 \div 2 + 24$ அல்லது $27 = 27$, என்பது சரியாகும்.

24. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$9 + 5 + 4 = 18 \div 9 + 16$ அல்லது $18 = 18$, என்பது சரியாகும்.

25. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$31 + 1 - 2 < 4 + 6 \times 7$ அல்லது $30 < 46$, என்பது சரியாகும்.

26. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$7 + 7 - 7 \div 7 < 14$ அல்லது $13 < 14$, என்பது சரியாகும்.

27. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$2 < 2 \times 4 + 1 \times 4 - 8$ அல்லது $2 < 4$, என்பது சரியாகும்.

28. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$2 \div 1 + 10 \times 1 < 6 \times 4$ அல்லது $12 < 24$, என்பது சரியாகும்.

29. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$10 \times 2 > 2 \div 1 \times 10 \div 2$ அல்லது $20 > 10$, என்பது சரியாகும்.

30. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$14 = 2 \times 4 \times 2 - 2 \div 1$ அல்லது $14 = 14$, என்பது சரியாகும்.

31. சரியான குறியீடுகளை பயன்படுத்தியபின் கிடைப்பது;
$8 \div 4 \times 1 - 2 = 16 - 16$ அல்லது $0 = 0$, என்பது சரியாகும்.

வகை 2: குறிகள் மற்றும் எண்களை ஒன்றுக்கொன்று மாற்றுதல்

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா. 1: கொடுக்கப்பட்டுள்ள பரிமாற்றங்கள் முறையே; குறியீடுகள் + மற்றும் + மற்றும் எண்கள் 2 மற்றும் 4 ஆகியவை குறியீடுகள் மற்றும் எண்களாக எழுதப்பட்டால், கீழே உள்ளவற்றில் எது சரி?

(a) $2 + 4 + 3 = 3$ **(b) $4 + 2 + 6 = 1.5$**

(c) $4 + 2 + 3 = 4$ **(d) $2 + 4 + 6 = 8$**

தீர்வு. (+ மற்றும் ÷) மற்றும் (2 மற்றும் 4) ஆகியவற்றை பரிமாற்றம் செய்வதில் கிடைப்பது;

(a) $4 \div 2 + 3 = 3$ அல்லது $5 = 3$, இது தவறு.

(b) $2 \div 4 + 6 = 1.5$ அல்லது $6.5 = 1.5$, இது தவறு.

(*c*) 2 + 4 ÷ 3 = 4 அல்லது $\frac{10}{3}$ = 4, இது தவறு.

(*d*) 4 ÷ 2 + 6 = 8 அல்லது 8 = 8, இது சரி.

எனவே, விடை (*d*) ஆகும்.

எ.கா. 2: கீழே உள்ள குறியீடு மற்றும் எண்களின் பரிமாற்றங்களை நான்கு மாற்றுகளில் கொடுக்கப்பட்டுள்ள சமன்பாட்டை பூர்த்தி செய்யும் மாற்று எது?

3 + 5 − 2 = 4

(*a*) + மற்றும் −, 2 மற்றும் 3 **(*b*) + மற்றும் −, 2 மற்றும் 5**

(*c*) + மற்றும் −, 3 மற்றும் 5 **(*d*) இவற்றுள் எதுவுமில்லை**

தீர்வு. (*a*)-யில் கொடுக்கப்பட்டுள்ள பரிமாற்றங்களை செயல்படுத்துவதில் கிடைக்கும் சமன்பாடு 2 − 5 + 3 = 4 அல்லது 0 = 4. இது தவறு.

(*b*)-யில் கொடுக்கப்பட்டுள்ள பரிமாற்றங்களை செயல்படுத்துவதில் கிடைக்கும் சமன்பாடு 3 − 2 + 5 = 4 அல்லது 6 = 4. இது தவறு.

(*c*)-யில் உள்ள பரிமாற்றங்களை செயல்படுத்துவதில் கிடைக்கும் சமன்பாடு 5 − 3 + 2 = 4 அல்லது 4 = 4. இது சரியாகும்.

எனவே, விடை (*c*) ஆகும்.

பயிற்சி 13B

குறிப்புகள் (கேள்விகள் 1–4): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் குறியீடுகள் மற்றும் எண்களின் பரிமாற்றங்களை செயல்படுத்தினால் எந்த சமன்பாடு சரியானது?

1. கொடுக்கப்பட்டுள்ள பரிமாற்றங்கள்: குறியீடுகள் − மற்றும் ÷ மற்றும் எண்கள் 4 மற்றும் 8
   (*a*) 6 − 8 ÷ 4 = −1
   (*b*) 8 − 6 ÷ 4 = 1
   (*c*) 4 ÷ 8 − 2 = 6
   (*d*) 4 − 8 ÷ 6 = 2
2. கொடுக்கப்பட்டுள்ள பரிமாற்றங்கள்: குறியீடுகள் + மற்றும் × மற்றும் எண்கள் 4 மற்றும் 5
   (*a*) 5 × 4 + 20 = 40
   (*b*) 5 × 4 + 20 = 85
   (*c*) 5 × 4 + 20 = 104
   (*d*) 5 × 4 + 20 = 95
3. கொடுக்கப்பட்டுள்ள பரிமாற்றங்கள்: குறியீடுகள் + மற்றும் − மற்றும் எண்கள் 4 மற்றும் 8
   (*a*) 4 ÷ 8 − 12 = 16
   (*b*) 4 − 8 + 12 = 0
   (*c*) 8 ÷ 4 − 12 = 24
   (*d*) 8 − 4 ÷ 12 = 8
4. கொடுக்கப்பட்டுள்ள பரிமாற்றங்கள்: குறியீடுகள் − மற்றும் × மற்றும் எண்கள் 3 மற்றும் 6.
   (*a*) 6 − 3 × 2 = 9 (*b*) 3 − 6 × 8 = 10
   (*c*) 6 × 3 − 4 = 15 (*d*) 3 × 6 − 4 = 33

விடைகள் (பயிற்சி 13B)

1. (*c*) **2.** (*c*) **3.** (*b*) **4.** (*b*)

தீர்வுகள் (பயிற்சி 13B)

1. (*c*)-யில் − மற்றும் ÷ மற்றும் 4 மற்றும் 8 ஆகியவற்றை பரிமாற்றுவதில், கிடைப்பது;
   8 − 4 ÷ 2 = 6 அல்லது 8 − 2 = 6 அல்லது 6 = 6.
   இது சரியாகும்.
2. (*c*)-யில் ÷ மற்றும் × மற்றும் 4 மற்றும் 5 ஆகியவற்றை பரிமாற்றுவதில், கிடைப்பது;
   4 + 5 × 20 = 104 அல்லது 104 = 104
   இது சரியாகும்.
3. (*b*)-யில் + மற்றும் − மற்றும் 4 மற்றும் 8 ஆகியவற்றை பரிமாற்றுவதில், கிடைப்பது;
   8 + 4 − 12 = 0 அல்லது 12 − 12 = 0 அல்லது 0 = 0.
   இது சரியாகும்.
4. (*b*)-யில் − மற்றும் × மற்றும் 3 மற்றும் 6 ஆகியவற்றை பரிமாற்றுவதில், கிடைப்பது;
   6 × 3 − 8 = 10 அல்லது 18 − 8 = 10 அல்லது 10 = 10.
   இது சரியாகும்.

வகை 3: சரியான முடிவை பெறுதல்

இந்த வகை கேள்விகளில், வெவ்வேறு குழு உறுப்புகளுக்கிடையே உள்ள ஒரு தொடர்பு (இதை விட சிறிய, இதைவிட கூடுதலான அல்லது சமமான) கொடுக்கப்பட்டிருக்கும். அசல் குறியீடுகள் அல்லது மாற்று குறியீடுகள் கொடுக்கப்பட்டிருக்கும். கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளை ஆராய்ந்து விடையை கண்டுபிடிக்க வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா.1: $A + B > C + D$ மற்றும் $B + C > A + D$ எனில், கீழே உள்ள மாற்றுகளில் எது சரி? **(M.C.A. 2005)**

(a) $D > B$ (b) $C > D$ (c) $A > D$ (d) $B > D$

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ளது: $A + B > C + D$ ...(i)

மற்றும் $B + C > A + D$ ...(ii)

(i) மற்றும் (ii)-ஐக் கூட்டினால், கிடைப்பது;

$(A + B) + (B + C) > (C + D) + (A + D)$

$\Rightarrow A + 2B + C > C + 2D + A$

$\Rightarrow 2B > 2D \Rightarrow B > D$

எனவே, விடை (d) ஆகும்.

எ.கா.2: × என்பது 'இதைவிட பெரிய', ϕ என்பது 'சமமான' < என்பது 'இதைவிட சிறியதாக அல்லாமல்' ⊥ என்பது 'சமமாக அல்லாத', Δ என்பது 'இதைவிட குறைவான' மற்றும் + என்பது 'இதைவிட பெரியது அல்ல' என குறிப்பிடப்பட்டால், கீழே உள்ள மாற்றுகளில் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

$a \times b \Delta c$ எனில், அது தொடர்வது;

(a) $a \phi c \Delta b$ (b) $b < a \times c$ (c) $a < b + c$

(d) $c + b < a$ (e) $b < a \phi c$

தீர்வு. அசல் குறியீடுகளை பயன்படுத்தினால், கிடைப்பது;

(b): சமன்பாடு $a > b < c \Rightarrow b \not< a > c$. இது தவறு. [$\because c < b$]

(c): சமன்பாடு $a > b < c \Rightarrow a \not< b \not> c$. இது சரி.

(d): சமன்பாடு $a > b < c \Rightarrow c \not> b \ll a$. இது தவறு. [$\because b < a$]

(e): சமன்பாடு $a > b < c \Rightarrow b \not< a = c$. இது தவறு. [$\because b < a$]

எனவே, சமன்பாடு (c) சரியானது. விடை (c)-யாகும்.

எ.கா.3. கீழே உள்ள கேள்வியில், @, ©, %, ★ மற்றும் $ ஆகிய குறியீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு விளக்கப்பட்டுள்ளன. **(I.I.F.T. 2005)**

'P @ Q' என்பதன் பொருள் P-யானது Q-வை விட பெரியது அல்லது Q-விற்கு சமமானது.

'P © Q' என்பதன் பொருள் P-யானது Q-வை விட சிறியது அல்லது Q-விற்கு சமமானது.

'P % Q' என்பதன் பொருள் P-யானது Q-வை விட பெரியது.

'P ★ Q' என்பதன் பொருள் P-யானது Q-வை விட சிறியது.

'P $ Q' என்பதன் பொருள் P-யானது Q-வை விட பெரியதும் அல்ல, சிறியதும் அல்ல.

கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள் சரியென எடுத்துக்கொண்டு தீர்வு I மற்றும் II-இல் எது/எவை சரியென கண்டுபிடிக்கவும்.

வாக்கியம் I மட்டும் சரியெனில் விடை (a) என குறிப்பிடவும். வாக்கியம் II மட்டும் சரியெனில் விடை (b) எனவும், வாக்கியம் I அல்லது வாக்கியம் II சரியெனில் விடை (c) எனவும், வாக்கியம் I-ம் தவறு மற்றும் வாக்கியம் II-ம் தவறு எனில், விடை (d) எனவும், வாக்கியங்கள் I மற்றும் II இரண்டும் சரியெனில் விடை (e) எனவும் குறிப்பிட வேண்டும்.

1. வாக்கியங்கள்: $M @ R, R \% T, T \$ K$

முடிவுகள்: I. $K ★ M$ II. $T ★ M$

2. வாக்கியங்கள்: $H \% J, B © J, B @ F$

முடிவுகள்: I. $F \$ J$ II. $J \% F$

3. வாக்கியங்கள்: $D \$ M, M \% W, W @ R$
முடிவுகள்: I. $R \star D$ II. $W © D$
4. வாக்கியங்கள்: $A © N, N \star V, V \$ J$
முடிவுகள்: I. $J @ N$ II. $A © V$
5. வாக்கியங்கள்: $K \star T, T @ B, B © M$
முடிவுகள்: I. $M \% T$ II. $K © B$
6. வாக்கியங்கள்: $B @ H, H \star M, M \$ N$
முடிவுகள்: I. $B @ N$ II. $N \% H$
7. வாக்கியங்கள்: $W © R, J @ R, J \star K$
முடிவுகள்: I. $J @ W$ II. $K \% R$

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ளது;

(*i*) $P @ Q \Rightarrow P \geq Q$ (*ii*) $P © Q \Rightarrow P \leq Q$

(*iii*) $P \% Q \Rightarrow P > Q$ (*iv*) $P \star Q \Rightarrow P < Q$

(*v*) $P \$ Q \Rightarrow P \not> Q$ மற்றும் $P \not< Q \Rightarrow P = Q$.

1. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள்: $M \geq R, R > T, T = K.$

I. K மற்றும் M-க்கு இடையேயுள்ள தொடர்பு:

$K = T, T < R, R \leq M \Rightarrow K < R \leq M \Rightarrow K < M$

அதாவது., $K \star M.$

II. T மற்றும் M-க்கு இடையேயுள்ள தொடர்பு:

$T < R, R \leq M \Rightarrow T < R \leq M \Rightarrow T < M$ அதாவது., $T \star M.$

எனவே, I மற்றும் II இரண்டும் சரி. எனவே, விடை (*e*) ஆகும்.

2. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள்: $H > J, B \leq J, B \geq F.$

F மற்றும் J-க்கு இடையேயுள்ள தொடர்பு:

$B \geq F, B \leq J \Rightarrow F \leq B \leq J \Rightarrow F \leq J \Rightarrow F < J$ அல்லது $F = J$

$\Rightarrow J > F$ அல்லது $F = J$ அதாவது., $J \% F$ அல்லது $F \$ J.$

எனவே, I அல்லது II சரி. எனவே, விடை (*c*) ஆகும்.

3. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள்: $D = M, M > W, W \geq R.$

I. R மற்றும் D-க்கு இடையயுள்ள தொடர்பு:

$R \leq W, W < M, M = D \Rightarrow R \leq W < M = D$

$\Rightarrow R < D$ அதாவது., $R \star D.$

II. W மற்றும் D-க்கு இடையேயுள்ள தொடர்பு:

$W < M, M = D \Rightarrow W < M = D \Rightarrow W < D$

அதாவது., $W \star D.$

எனவே, I மட்டுமே சரி. II தவறு. எனவே, விடை (*a*) ஆகும்.

4. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள்: $A \leq N, N < V, V = J.$

I. J மற்றும் N-க்கு இடையேயுள்ள தொடர்பு:

$J = V, V > N \Rightarrow J > N$ அதாவது., $J \% N.$

II. A மற்றும் V-க்கு இடையேயுள்ள தொடர்பு:

$A \leq N, N < V \Rightarrow A < V$ அதாவது., $A \star V.$

I-ம் தவறு, II-ம் தவறு. எனவே, விடை (*d*) ஆகும்.

10. பணியாளர் ஒருவரின் வருமானம் அவரது சம்பளம் மற்றும் வெகுமதி இரண்டும் அடங்கும். ஒரு வாரத்தில் அவரின் வெகுமதி அவரின் சம்பளத்தின் $\frac{5}{4}$ பகுதி. சம்பளத்தின் எந்த பின்னம் அவரின் வெகுமதியின் மூலம் கிடைத்தது?

(*a*) $\frac{4}{9}$ (*b*) $\frac{5}{4}$
(*c*) $\frac{5}{8}$ (*d*) $\frac{5}{9}$

குறிப்புகள் (கேள்விகள் 11 முதல் 26): *கீழே உள்ள தகவல்களை கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்:* **(M.C.A. 2005)**

ஒரு பையில் 1 ரூபாய், 50-பைசா, 25-பைசா, மற்றும் 10-பைசா ஆகிய வெவ்வேறு நாணயங்கள் உள்ளன. 25-பைசா நாணயங்களின் மதிப்புக்கு இணையான 50-பைசா நாணயங்கள் உள்ளன. 1-ரூபாய் நாணயங்களின் மதிப்பு 50-பைசா நாணயங்களின் மதிப்பின் 5 மடங்காகும். 10-பைசா நாணயங்கள் மற்றும் 1-ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை 4 : 3, மற்றும் பையில் உள்ள நாணயங்களின் மொத்த எண்ணிக்கை 325.

11. பையில் எத்தனை 10-பைசா நாணயங்கள் உள்ளன?

(*a*) 25 (*b*) 50
(*c*) 75 (*d*) 100

12. 50-பைசா நாணயங்களின் மதிப்பு என்ன?

(*a*) ₹ 10 (*b*) ₹ 15
(*c*) ₹ 20 (*d*) ₹ 30

13. 50-பைசா மற்றும் 25-பைசா நாணயங்களின் விகிதம் என்ன?

(*a*) 1 : 4 (*b*) 2 : 5
(*c*) 2 : 3 (*d*) 1 : 3

14. பையில் எத்தனை 1-ரூ நாணயங்கள் உள்ளன?

(*a*) 25 (*b*) 50
(*c*) 75 (*d*) 100

15. பையில் உள்ள நாணயங்களின் மொத்த மதிப்பு என்ன?

(*a*) ₹ 130 (*b*) ₹ 140
(*c*) ₹ 150 (*d*) ₹ 160

16. கணித மேதை திரு *X*, ஒரு எண்ணைப் பற்றி குறிப்பிட்டது அந்த எண் 6-ஆல் வகுபட்டால் அல்லது அதன் இலக்கங்களின் கூட்டுத் தொகை 6, அல்லது அதன் ஏதாவது ஒரு இலக்கம் 6 எனில் '6-உடன் தொடர்புடையது' மற்ற எண்கள் '6-உடன் தொடர்புடையவை அல்ல'. இந்த வரைமுறையின் படி, 1 – 60 (இரண்டு எண்களையும் சேர்த்து) வரை 6-உடன் தொடர்பு இல்லாத முழுக்கள்; **(SNAP, 2005)**

(*a*) 18 (*b*) 22
(*c*) 42 (*d*) 43

குறிப்புகள் (கேள்விகள் 17 முதல் 21): *கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களைப் பொறுத்து கேள்விகள் அமைந்துள்ளன.*

சமூக அறிவியல், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் தேர்வு எழுதிய 450 மாணவர்களின் தகவல்கள்:

அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்கள்	167
அனைத்து பாடங்களிலும் தோல்வி அடைந்தவர்கள்	60
சமூக அறிவியலில் தோல்வி அடைந்தவர்கள்	175
கணிதத்தில் தோல்வி அடைந்தவர்கள்	199
அறிவியலில் தோல்வி அடைந்தவர்கள்	191
சமூக அறிவியலில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்கள்	62
கணிதத்தில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்கள்	48
அறிவியலில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்கள்	52

17. சமூக அறிவியலில் மட்டும் தோல்வியடைந்தவர்கள் எத்தனை மாணவர்கள்?

(*a*) 15 (*b*) 21
(*c*) 30 (*d*) 42

18. ஒரு பாடத்தில் மட்டும் தோல்வியடைந்தவர்கள் எத்தனை மாணவர்கள்?

(*a*) 152 (*b*) 144
(*c*) 61 (*d*) 56

19. கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் மட்டுமாவது தோல்வியடைந்தவர்கள் எத்தனை மாணவர்கள்?

(*a*) 210 (*b*) 203
(*c*) 170 (*d*) 94

20. இரண்டு பாடங்களில் மட்டும் தோல்வியடைந்தவர்கள் எத்தனை மாணவர்கள்?

(*a*) 56 (*b*) 61
(*c*) 152 (*d*) 162

21. ஒரு பாடத்தில் மட்டுமாவது தேர்ச்சி பெற்றவர்கள் எத்தனை மாணவர்கள்?

(*a*) 450 (*b*) 390
(*c*) 304 (*d*) 167

22. ஒரு குடும்பத்தில் தம்தியருக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். அப்பாவின் வயது மகளின் வயதின் மூன்று மடங்கு மற்றும் மகனின் வயது அம்மாவின் வயதின் பாதி. மனைவி கணவனை விட 9 ஆண்டுகள் சிறியவர். மற்றும் சகோதரன் சகோதரியை விட ஏழு ஆண்டுகள் மூத்தவர். அம்மாவின் வயது என்ன?

(*a*) 40 ஆண்டுகள் (*b*) 45 ஆண்டுகள்
(*c*) 50 ஆண்டுகள் (*d*) 60 ஆண்டுகள்

23. ஒரு தந்தையின் வயது மகனின் வயதின் மூன்று மடங்கு. 5 வருடங்களுக்கு முன் அவரின் வயது மகனின் வயதின் நான்கு மடங்கு. மகனின் வயது என்ன?

(*a*) 12 (*b*) 15
(*c*) 18 (*d*) 20

24. ரவியின் சகோதரன் அவனை விட 3 வருடம் மூத்தவர். அவனின் சகோதரி பிறந்த பொழுது அப்பாவின் வயது 28. அவன் பிறந்த பொழுது அம்மாவின் வயது 26. அவளின் சகோதரன் பிறந்த பொழுது சகோதரியின் வயது 4 எனில், அவன் சகோதரன் பிறந்த பொழுது ரவியின் அப்பா மற்றும் அம்மாவின் வயது என்ன?

(*a*) 32 ஆண்டுகள், 23 ஆண்டுகள்
(*b*) 32 ஆண்டுகள், 29 ஆண்டுகள்
(*c*) 35 ஆண்டுகள், 29 ஆண்டுகள்
(*d*) 35 ஆண்டுகள், 33 ஆண்டுகள்

25. ராகுல் பிறந்த பொழுது, அவன் சகோதரனை விட அவனுடைய அப்பா 32 வயது பெரியவர் மற்றும் அவனுடைய அம்மா அவனுடைய சகோதரியை விட 25 வயது பெரியவர். ராகுலின் சகோதரன் அவனை விட 6 ஆண்டுகள் பெரியவர் மற்றும் அவனுடைய அப்பாவைவிட அவனுடைய அம்மா 3 வயது சிறியவர் எனில், ராகுல் பிறந்த பொழுது அவனுடைய சகோதரியின் வயது என்ன?

(*a*) 7 ஆண்டுகள்
(*b*) 10 ஆண்டுகள்
(*c*) 14 ஆண்டுகள்
(*d*) 19 ஆண்டுகள்

26. கீழே உள்ள வென் வரைபடத்தை கவனிக்கவும்:



வென் வரைபடத்தில் உள்ள எண் செய்தித்தாள் படிக்கும் நபர்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது. 50 நபர்களை ஆய்வு செய்ததற்கு பிறகு வென் வரைபடம் வரையப்பட்டது. 10,000 ஜனத் தொகையில் எத்தனை நபர்கள் குறைந்தது இரண்டு செய்தித்தாள்களையாவது படிப்பவர்கள்?

(*a*) 5000 (*b*) 5400
(*c*) 6000 (*d*) 6250

விடைகள் (பயிற்சி 15)

1. (*c*)	2. (*c*)	3. (*c*)	4. (*b*)	5. (*b*)	6. (*b*)	7. (*b*)	8. (*a*)	9. (*c*)	10. (*d*)
11. (*d*)	12. (*b*)	13. (*a*)	14. (*c*)	15. (*a*)	16. (*d*)	17. (*a*)	18. (*c*)	19. (*b*)	20. (*d*)
21. (*b*)	22. (*d*)	23. (*b*)	24. (*a*)	25. (*b*)	26. (*b*)				

தீர்வுகள் (பயிற்சி 15)

1. விளையாட்டில் பங்கேற்கும் மாணவர்கள் மற்றும் மாணவிகளின் எண்ணிக்கை முறையே $3x$ மற்றும் $2x$ எனில்,

$3x = 15$ அல்லது $x = 5$.

எனவே, போட்டியில் பங்கேற்கும் மாணவிகளின் எண்ணிக்கை $= 2x = 10$.

போட்டியில் பங்கேற்கும் நபர்களின் எண்ணிக்கை
$= 60 - (15 + 10) = 35$.

போட்டியில் பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கை $= (35 - y)$.

$\therefore (35 - y) = y + 5 \Leftrightarrow 2y = 30 \Leftrightarrow y = 15$.

எனவே, போட்டியில் பங்கேற்காத மாணவிகளின் எண்ணிக்கை $= (35 - 15) = 20$.

எனவே, வகுப்பில் உள்ள பெண்களின் எண்ணிக்கை $= (10 + 20) = 30$.

2. அன்னாசிப் பழங்கள் மற்றும் தர்பூசணி ஆகியவற்றின் எண்ணிக்கை முறையே x மற்றும் y எனில்,

$7x + 5y = 38$ அல்லது $5y = (38 - 7x)$ அல்லது $y = \dfrac{38 - 7x}{5}$.

$(38 - 7x)$ என்பது 5-ஆல் வகுபடும் பொழுது மட்டுமே y ஒரு முழு எண்ணாக இருக்கும். $X = 4$ ஆக இருக்கும் பொழுது இது சாத்தியமாகும்.

3. 1-லிருந்து 100 வரை ஒற்றை இலக்கத்தில் 3 கொண்டு 10 எண்கள் உள்ளன — 3, 13, 23, 33, 43, 53, 63, 73, 83, 93 மற்றும் பத்தின் இலக்கத்தில் 3 கொண்ட பத்து எண்கள் உள்ளன — 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39.

எனவே, தேவைப்படும் எண் $= 10 + 10 = 20$.

4. இலக்கங்களின் மொத்த எண்ணிக்கை
= (1-இலக்க பக்கங்களின் இலக்கங்களின் எண்ணிக்கை + 2-இலக்க பக்கங்களின் இலக்கங்களின் எண்ணிக்கை + 3-இலக்க பக்கங்களின் இலக்கங்களின் எண்ணிக்கை)
$= (1 \times 9 + 2 \times 90 + 3 \times 267) = (9 + 180 + 801) = 990$.

5. 1-இலக்க பக்கங்களின் இலக்கங்களின் எண்ணிக்கை $= 1 \times 9 = 9$

2-இலக்க பக்கங்களின் இலக்கங்களின் எண்ணிக்கை $= 2 \times 90 = 180$.

3-இலக்க பக்கங்களின் இலக்கங்களின் எண்ணிக்கை $= 3 \times 900 = 2700$.

4-இலக்க பக்கங்களின் இலக்கங்களின் எண்ணிக்கை = 3189 − (9 + 180 + 2700) = 3189 − 2889 = 300.

∴ 4-இலக்க பக்கங்களின் இலக்கங்களின் எண்ணிக்கை $= \left(\frac{300}{4}\right) = 75.$

எனவே, பக்கங்களின் மொத்த எண்ணிக்கை = (999 + 75) = 1074.

6. ஒவ்வொரு நெடு வரிசையிலும் 12 செடிகள் உள்ளன. மூலையில் உள்ள 2 செடிகளை விலக்கினால், ஒவ்வொன்றின் இடைவெளி 1 மீட்டர் உள்ளவாறு (10 × 2) செடிகள் உள்ளன. மற்றும் ஒவ்வொரு பக்கத்திலும் 1 மீட்டர் விடப்பட்டுள்ளது.

∴ நீளம் = (20 + 2) மீ = 22 மீ.

7. மனையின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள முள் கம்பியானது இரண்டு பக்கங்களுக்கு பொதுவானது. எனவே,

தேவைப்படும் முள் கம்பிகளின் மொத்த எண்ணிக்கை = 27 × 4 − 4 = 108 − 4 = 104.

8. முதல் நாளைய வருமானம் = ₹ 1.

2-வது நாளைய வருமானம் = ₹ (1 × 2) = ₹ 2^1.

3-வது நாளைய வருமானம் = ₹ (2^1 × 2) = ₹ 2^2.

இவ்வாறு தொடரும்.

எனவே, n-வது நாளைய வருமானம் = ₹ 2^{n-1}.

∴ 10-வது நாளைய வருமானம் = ₹ 2^9.

9. (x + 1) நபர்கள் குடும்பத்தில் உள்ளனர் என வைத்துக் கொள்வோம்.

அப்பாவின் பங்கு $= \frac{1}{4}$

மற்ற ஒவ்வொரு நபரின் பங்கு $= \frac{3}{4}$

$\therefore 3\left(\frac{3}{4x}\right) = \frac{1}{4} \Leftrightarrow 4x = 36 \Leftrightarrow x = 9.$

எனவே, குடும்பத்தில் உள்ள நபர்களின் எண்ணிக்கை = 10.

10. சம்பளம் = ₹ x. எனில், வெகுமதி = ₹ $\left(\frac{5}{4}x\right)$.

மொத்த வருமானம் = ₹ $\left(x + \frac{5}{4}x\right)$ = ₹ $\left(\frac{9x}{4}\right)$.

∴ தேவைப்படும் பின்னம் $= \left(\frac{5x}{4} \times \frac{4}{9x}\right) = \frac{5}{9}$.

கேள்விகள் 11 முதல் 16:

10-பைசா நாணயங்களின் எண்ணிக்கை x.

எனில், 1-ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை = $3x$.

1-ரூ நாணயங்களின் மதிப்பு = ₹ 3.

50-பைசா நாணயங்களின் எண்ணிக்கை y எனில்,

50-பைசா நாணயங்களின் மதிப்பு = ₹ $0.50y$

= ₹ $\left(\frac{y}{2}\right)$.

இப்பொழுது, $3x = 5 \times \frac{y}{2}$ அல்லது $y = \frac{6x}{5}$.

50-பைசா நாணயங்களின் மதிப்பு $= \frac{6x}{5}$.

25-பைசா நாணயங்களின் மதிப்பு = ₹ $\left(\frac{6x}{5}\right)$

25-பைசா நாணயங்களின் என்னிக்கை z எனில்,

$0.25z = \frac{6x}{5}$ அல்லது $z = \frac{24x}{5}$.

நாணயங்களின் மொத்த எண்ணிக்கை

$= 4x + \frac{24x}{5} + \frac{6x}{5} + 3x = \frac{65x}{5} = 13x.$

எனவே, $13x = 325 \Leftrightarrow x = 25.$

11. 10-பைசா நாணயங்களின் எண்ணிக்கை = $4x$ = (4 × 25) = 100.

12. 50-பைசா நாணயங்களின் எண்ணிக்கை

$= \frac{6x}{5} = \left(\frac{6 \times 25}{5}\right) = 30.$

∴ 50-பைசா நாணயங்களின் மதிப்பு = ₹ (0.50 × 30) = ₹ 15.

13. தேவைப்படும் விகிதம்

$= \frac{6x}{5} : \frac{24x}{5} = 1 : 4.$

14. 1-ரூ நாணயங்களின் எண்ணிக்கை

= $3x$ = (3 × 25) = 75.

15. 10-பைசா நாணயங்களின் எண்ணிக்கை = 100;

50-பைசா நாணயங்களின் எண்ணிக்கை = 30;

1-ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை = 75;

25-பைசா நாணயங்களின் எண்ணிக்கை = 325 − (100 + 30 + 75) = 120.

∴ பையில் உள்ள பணத்தின் மொத்த மதிப்பு

= ₹ (0.10 × 100 + 0.50 × 30 + 1 × 75 + 0.25 120)

= ₹ (10 + 15 + 75 + 30) = ₹ 130.

16. 1 முதல் 60 வரை 6-ஆல் வகுபடும் எண்கள் முறையே 6, 12, 18, 24, 30, 36, 42, 48, 54, 60... அது போல் 10 எண்கள் உள்ளன.

1 முதல் 60 வரை இலக்கங்களின் கூட்டுத்தொகை 6-ஆக உள்ள எண்கள்: 6, 15, 24, 33, 42, 51, 60. அதுபோல் 7 எண்கள் உள்ளன. அவற்றில் 4 எண்கள் மேலே உள்ளவற்றுடன் பொதுவாக உள்ளன. 3 பொதுவற்ற எண்கள் உள்ளன. இலக்கங்களில் ஒன்று 6-ஆக உள்ள எண்கள் (1 முதல் 60 வரை) 6, 16, 26, 36, 46, 56, 60. இவற்றில் 4 பொதுவற்ற எண்கள் உள்ளன.

6-உடன் தொடர்பு இல்லாத எண்கள் = 60 − (10 + 3 + 4) = 43.

17. சமூக-அறிவியலில் மட்டும் தோல்வியடைந்தவர்களின் எண்ணிக்கை
= சமூக அறிவியலில் தோல்வியடைந்தவர்கள்) − (அனைத்து பாடங்களிலும் தோல்வியடைந்தவர்கள் + அறிவியலில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்கள் + கணிதத்தில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்கள்)
= 175 − (60 + 52 + 48) = 175 − 160 = 15.

18. ஒரு பாடத்தில் மட்டும் தோல்வியடைந்தவர்கள்
= (மாணவர்களின் மொத்த எண்ணிக்கை) − (அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்கள் + அனைத்து பாடங்களிலும் தோல்வியடைந்தவர்கள் + ஒரு பாடத்தில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்கள்).
= 450 − (167 + 60 + 62 + 48 + 52)
= 450 − 389 = 61.

19. அறிவியலில் மட்டும் தோல்வியடைந்தவர்கள்
= 191 − (62 + 60 + 48) = 21.
சமூக அறிவியலில் மட்டும் தோல்வியடைந்தவர்கள் = 15.
∴ கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் மட்டுமாவது தேர்ச்சி பெற்றவர்கள் = (21 + 15 + 167) = 203.

20. இரண்டு பாடங்களில் மட்டும் தோல்வியடைந்தவர்கள் = ஒரு பாடத்தில் மட்டும் தோல்வியடைந்தவர்கள்
= 62 + 48 + 52 = 162.

21. ஒரு பாடத்தில் மட்டுமாவது தேர்ச்சி பெற்றவர்கள்
= (1 பாடத்தில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்கள்) + (2 பாடங்களில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்கள்) + (அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்கள்)
= (2 பாடங்களில் மட்டும் தோல்வியடைந்தவர்கள்) + (1 பாடத்தில் மட்டும் தோல்வியடைந்தவர்கள்) + (அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்கள்)
= 162 + 61 + 167 = 390.

22. மகளின் வயது x வருடங்கள். எனில், அப்பாவின் வயது = $(3x)$ வருடங்கள்.
அம்மாவின் வயது = $(3x - 9)$ வருடங்கள்.
மகனின் வயது = $(x + 7)$ வருடங்கள்.
எனவே,

$$x + 7 = \frac{3x - 9}{2} \Leftrightarrow 2x + 14 = 3x - 9$$

$\Leftrightarrow x = 23.$

∴ அம்மாவின் வயது = $(3x - 9) = (69 - 9)$ வருடங்கள் = 60 வருடங்கள்.

23. மகனின் வயது x எனில்,
அப்பாவின் வயது $(3x)$ வருடங்கள்.
ஐந்து வருடங்களுக்கு முன் அப்பாவின் வயது
= $(3x - 5)$ வருடங்கள் மற்றும்
மகனின் வயது = $(x - 5)$ வருடங்கள்
எனவே, $3x - 5 = 4(x - 5) \Leftrightarrow 3x - 5$
$= 4x - 20 \Leftrightarrow x = 15.$

24. ரவியின் சகோதரன் பிறந்த சமயத்தில் ரவியின் அப்பாவின் வயது = x வருடங்கள்
மற்றும் அம்மாவின் வயது = y வருடங்கள்
எனில், சகோதரியின் வயது = $(x - 28)$ வருடங்கள்.
எனவே, $x - 28 = 4$ அல்லது $x = 32$.
ரவியின் வயது = $(y - 26)$ வருடங்கள்
ரவியின் சகோதரனின் வயது = $(y - 26 + 3)$ வருடங்கள் = $(y - 23)$ வருடங்கள்
ரவியின் சகோதரன் பிறந்த பொழுது, அவனின் வயது = 0.
அதாவது., $y - 23 = 0$ அல்லது $y = 23$.

25. ராகுல் பிறந்த பொழுது, அவனின் சகோதரனுடைய வயது = 6 வருடங்கள்.
அவனுடைய அப்பாவின் வயது = (6 + 32)
= 38 வருடங்கள்
அவனுடைய அம்மாவின் வயது = (38 − 3)
= 35 வருடங்கள்
அவனுடைய சசோதரியின் வயது = (35 − 25)
= 10 வருடங்கள்.

26. இரண்டு செய்தித்தாள்களையாவது படிப்பவர்கள்
= (12 + 8 + 5 + 2) = 27.
10,000 நபர்களில் இரண்டு செய்தித்தாள்களையாவது படிப்பவர்கள்

$$= \left(\frac{27}{50} \times 10000\right) = 5400.$$

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன்

பயிற்சி

1. இந்திய மெட்ரோ நகரங்களில் திருமணமான தம்பதிகளிடம் ஆய்வு நடத்தியதில் தெரிய வந்தது 20% தம்பதிகளுக்கு ஒரு குழந்தையும், மீதியுள்ளவர்களில் 40% தம்பதிகளுக்கு இரண்டு குழந்தைகளும், மீதி தம்பதிகளுக்கு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளும் உள்ளனர். மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளுடைய தம்பதிகள் எத்தனை சதவிகிதம்? **[SSC-CGL Exam, 2020]**

(a) 56% (b) 44%
(c) 42% (d) 35%

2. தனது பல்கலைக்கழக வளாகத்திலிருந்து வடக்கு புறமாக தனது துறை நோக்கி 4 கிமீ நடந்தபின் ராமா வலது புறமாக திரும்பினார். துறையிலிருந்து 2.5 கிமீ நடந்தபிறகு இடது புறம் திரும்பி 4 கிமீ நடந்து மாநாட்டு மண்டபத்தை அடைந்தார். அவர் தொடங்கிய இடத்திலிருந்து இப்பொழுது எந்த திசையில் இருக்கிறார்? **[SSC-CPO Exam, 2019]**

(*a*) தென்மேற்கு (*b*) வடகிழக்கு
(*c*) தெற்கு (*d*) மேற்கு

3. தனது தேர்வு மே 15-க்கு பின்னர் ஆனால் மே 18-க்கு முன் என ராமனுக்கு நினைவுள்ளது. தனது தேர்வு மே 16-க்கு பின்னர் ஆனால் மே 21-க்கு முன் என தீப் ஞாபகம் வைத்துள்ளார். மே மாதத்தின் எந்த தேதியில் தேர்வு நடக்கிறது?

[SSC-CPO Exam, 2017]

(*a*) 17 (*b*) 18
(*c*) 19 (*d*) 20

விடைகள்

1. (*b*) **2.** (*b*) **3.** (*a*)

தீர்வுகள்

1. திருமணமான தம்பதிகளின் மொத்த எண்ணிக்கை = 100

1 குழந்தையுள்ள தம்பதிகள் = 20

மீதமுள்ள திருமணமான தம்பதிகள் = 100 − 20 = 80

2 குழந்தைகளுடைய தம்பதிகள் = 80 × 45% = 36

∴ 3 அல்லது அதற்கு அதிகமான குழதைகள் கொண்ட மணமான தம்பதிகள் = 80 − 36 = 44%.

2.



எனவே, தொடங்கிய இடத்திலிருந்து ராமா இப்பொழுது வடகிழக்கு திசையில் உள்ளார்.

3. ராமனைப் பொறுத்தவரை தேர்வு தேதி (மே மாதத்தில்) = 16 அல்லது 17.

தீப்பைப் பொறுத்தவரை தேர்வு தேதி (மே மாதத்தில்) = 17, 18, 19, 20

தேர்வு தேதி (பொதுவான தேதி) = 17-வது மே.

16

விடுபட்ட உறுப்பை நிரப்புதல்

இந்த வகை கேள்விகளில் ஒரு வடிவம் அல்லது உறுப்பு, ஒரு குழு உறுப்புகள் ஒரு அணி வடிவில் கொடுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு அணியிலும் எண்களின் குழு, எழுத்துக்களின் குழு/எண்கள் மற்றும் எழுத்துக்களின் குழு/எண்கள் ஒரு குறிப்பிட்ட முறையை பின்பற்றி இருக்கும். அந்த முறையை கண்டுபிடித்து அதற்கேற்றவாறு விடுபட்ட உறுப்பை கண்டுபிடிக்க வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

குறிப்புகள்: ***விடுபட்ட உறுப்பை கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளிலிருந்து கண்டுபிடிக்கவும்.***

எ.கா.1: **(S.S.C. 2002)**



(*a*) 860 (*b*) 1140 (*c*) 2880 (*d*) 3240

தீர்வு. கடிகார திசையில் நகரும் பொழுது கீழே உள்ள முறை பின்பற்றப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

$4 \times 1 = 4$; $4 \times 2 = 8$; $8 \times 3 = 24$; $24 \times 4 = 96$; $96 \times 5 = 480$.

எனவே, விடுபட்ட எண் = $(480 \times 6) = 2880$.

எனவே, விடை (*c*) ஆகும்.

எ.கா.2: **(M.A.T. 2002)**



(*a*) *M* (*b*) *P* (*c*) *Q* (*d*) *S*

தீர்வு. $A = 1$, $B = 2$, $C = 3$, $D = 4$, ..., $X = 24$, $Y = 25$, $Z = 26$, எனில்,

$F + P = 6 + 16 = 22$; $G + N = 7 + 14 = 21$; $J + E = 10 + 5 = 15$.

$K = 11$ என்பதால், விடுபட்ட எழுத்திற்கு தொடர்புடைய எண் = $(27 - 11) = 16$.

எனவே, விடுபட்ட எழுத்து ஆங்கில அகர வரிசையின் 16-வது எழுத்து. அதாவது *P*.

எனவே, விடை (*b*) ஆகும்.

எ.கா.3: **(IGNOU, 2003)**



(*a*) 22 (*b*) 30 (*c*) 32 (*d*) இவற்றில் எதுவுமில்லை

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ளது: $\frac{5 \times 6 \times 4}{10} = 12; \frac{6 \times 7 \times 5}{10} = 21;$

எனவே, விடுபட்ட எண் = $\frac{4 \times 8 \times 10}{10} = 32.$

எனவே, விடை (*c*) ஆகும்.

எ.கா. 4: 13, 19 → 4; 71, 9 → 10; 128, 32 → ? **(C.B.I. 2003)**

(*a*) 10 (*b*) 15 (*c*) 20 (*d*) 25

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ளது: $\frac{13 + 19}{8} = 4; \frac{71 + 9}{8} = 10.$

எனவே, விடுபட்ட எண் = $\frac{128 + 32}{8} = 20.$

எனவே, விடை (*c*) ஆகும்.

எ.கா. 5: 8, 2, (36), 6, 6 ; 7, 2, (46), 5, 8 ; 7, 4, (?), 6, 10 **(R.R.B. 2004)**

(*a*) 42 (*b*) 46 (*c*) 48 (*d*) 50

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ளது: $(8 \times 6) - (2 \times 6) = 36$, $(7 \times 8) - (2 \times 5) = 46.$

∴ விடுபட்ட எண் = $(7 \times 10) - (4 \times 6) = 46.$

எனவே, விடை (*b*) ஆகும்.

எ.கா. 6: (56, 22, 41, 15, 8); (46, 10, 39, 9, 6); (34, 14, ?, 11, 6) **(S.S.C. 2002)**

(*a*) 12 (*b*) 25 (*c*) 48 (*d*) 52

தீர்வு. கொடுக்கப்பட்டுள்ளது: $(56 + 15) - (22 + 8) = 41$, $(46 + 9) - (10 + 6) = 39.$

∴ விடுபட்ட எண் = $(34 + 11) - (14 + 6) = 25.$

எனவே, விடை (*b*) ஆகும்.

பயிற்சி 16

குறிப்புகள் (கேள்விகள் 1 முதல் 10): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் விடுபட்ட உறுப்பைக் கண்டுபிடிக்கவும்.

1. 

(C.P.O. 2004)

(*a*) 190 (*b*) 221
(*c*) 236 (*d*) 255

2.

(*a*) 4 (*b*) 305
(*c*) 343 (*d*) 729

3.

(*a*) 10 (*b*) 11
(*c*) 12 (*d*) 13

4. 

(a) 1 (b) 2
(c) 3 (d) 4

5. 

(R.R.B. 2002)

(a) 327 (b) 386
(c) 438 (d) 469

6. 

(a) 0 (b) 8
(c) 125 (d) 216

7. 

(a) 18 (b) 33
(c) 135 (d) 145

8. 

(a) 10 (b) 11
(c) 12 (d) 13

9. 

(a) 13 (b) 14
(c) 20 (d) 21

10. 

(M.A.T. 2002)

(a) 5 (b) 9
(c) 11 (d) 13

குறிப்புகள் (கேள்விகள் 11 முதல் 15): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிட்ட உறுப்புகளைக் கொண்ட குழு ஒன்று இருக்கும். அந்த குழுவில் உள்ள உறுப்புகள் ஒரு குறிப்பிட்ட முறையை பின்பற்றுகின்றன என நினைத்துக்கொண்டு ஒவ்வொன்றிலும் விடுபட்ட உறுப்பைக் கண்டறிக.

11. 

(a) 21 (b) 25
(c) 35 (d) 45

12. 

(a) 49 (b) 76
(c) 89 (d) 94

13. 

(S.S.C. 2001)

(a) 20 (b) 25
(c) 50 (d) 75

14. 

(S.S.C. 2002)

(a) 1216 (b) 2250
(c) 8100 (d) 11036

15. 

(C.P.O. 2005)

(a) 6 (b) 9
(c) 12 (d) 18

குறிப்புகள் (கேள்விகள் 16 முதல் 20): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் சில குறிப்பிட்ட உறுப்புகளின் அணி கொடுக்கப்பட்டுள்ளது. நெடுவரிசை மற்றும் குறுக்கு வரிசைகளில் ஒரு குறிப்பிட்ட முறை பின்பற்றப்பட்டுள்ளது. பின்பற்றப்பட்ட முறையை கண்டுபிடித்து அதன் மூலம் விடுபட்ட உறுப்பைக் கண்டறிக.

16. (NMAT, 2005)

6	6	8
5	7	5
4	3	?
120	126	320

(a) 4 (b) 8
(c) 12 (d) 16

17. (S.S.C. 2002)

26	18	10
11	9	7
5	4	1
10	5	?

(a) 2 (b) 4
(c) 5 (d) 6

18.

1	4	?
4	2	5
2	2	3
49	64	169

(a) 3 (b) 4
(c) 5 (d) 6

19.

28	60	48
5	6	7
14	39	27
7	?	16

(a) 18 (b) 23
(c) 24 (d) 27

20. (S.S.C. 2002)

5	4	9
6	3	?
7	2	4
65	20	45

(a) 1 (b) 2
(c) 3 (d) 4

குறிப்புகள் (கேள்விகள் 21 முதல் 24): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் எழுத்துக்கள் மற்றும் எண்களுக்கிடையே ஒரு விதி பின்பற்றப்பட்டுள்ளது. ஒவ்வொரு வரிசையிலும் உள்ள விதியைக் கண்டறிந்து பின் கொடுக்கப்பட்டுள்ள மாற்றுகளில் எது அந்த விதியை பூர்த்தி செய்கிறது என கண்டறிந்து காலியிடத்தை பூர்த்தி செய்க. (Hotel Management, 1998)

21. *JN* 28 27 *GP*
CE 12 45 *TU*
LR ? ? *MS*

(a) 30, 41 (b) 30, 32
(c) 34, 36 (d) 35, 35

22. *AD* 17 39 *CF*
BP 258 108 *HJ*
GN ? ? *LM*

(a) 9, 29 (b) 18, 210
(c) 179, 239 (d) 203, 181

23. *FJ* 25 16 *NS*
LZ 25 196 *SX*
NQ ? ? *WY*

(a) 4, 9 (b) 9, 4
(c) 8, 27 (d) 27, 8

24. *GM* 9 0 *KT*
PS 0 50 *UY*
DI ? ? *CP*

(a) 4, 10 (b) 9, 5
(c) 18, 32 (d) 32, 18

25. கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு எண்களின் தொகுப்பிலும் ஒரே விதி பின்பற்றப் பட்டுள்ளது எனில், மூன்றாவது தொகுப்பில் உள்ள ?-யின் இடத்தில் இடம் பெற வேண்டிய எண் எது? (R.R.B. 2005)



(a) 24 (b) 30
(c) 36 (d) 40

குறிப்புகள் (கேள்விகள் 26 முதல் 29): கீழே உள்ள கேள்விகளில் ஒரு குறிப்பிட்ட விதியை பின்பற்றி எண்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கேள்வியிலும் விடுபட்ட எண்ணைக் கண்டுபிடிக்கவும்.

26. 310
296 81
? 215 14

(a) 6 (b) 7
(c) 9 (d) 18

27. 72
? 16
4 48 8

(a) 32 (b) 40
(c) 64 (d) 80

28. ?
225 144
12 81 15

(a) 75 (b) 240
(c) 360 (d) 400

29.
132
121 49
7 ? 11

(a) 5 (b) 15
(c) 18 (d) 72

குறிப்புகள் (கேள்விகள் 30 முதல் 32): *கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் உதாரணமாக கொடுக்கப்பட்டுள்ள எண் தொகுப்பைப் போன்று எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. விடுபட்ட உறுப்பைக் கண்டுபிடிக்கவும்.*



உதாரணபடம்

30.


(a) 11 (b) 13
(c) 15 (d) 17

31.


(a) 125 (b) 90
(c) 105 (d) 225

32.


(a) 33 (b) 81
(c) 243 (d) 42

33. கீழே உள்ள மூன்று எண்களின் தொகுப்பில் ?-யின் இடத்தில் ஒத்த முறையை பின்பற்றி இடம்பெறக் கூடிய எண்ணைக் கண்டுபிடிக்கவும். **(R.R.B. 2005)**

84 81 88
14 12 18 9 ? 11

(a) 8 (b) 12
(c) 16 (d) 18
(e) 24

34. சில சமன்பாடுகள் ஒரு குறிப்பிட்ட விதியை பின்பற்றி தீர்க்கப்பட்டுள்ளன. அதே விதியை பின்பற்றி விடுபட்ட உறுப்பைக் கண்டுபிடிக்கவும். **(S.S.C. 2002)**

1 [3] 4 = 10, 3 [4] 6 = 26, 4 [5] 7 = ?

(a) 18 (b) 24
(c) 32 (d) 38

குறிப்புகள் (கேள்விகள் 35 முதல் 37): *கீழே உள்ள ஒவ்வொரு அட்டவணைகளையும் கவனமாகப் படித்து பின் ?-யின் இடம்பெற வேண்டிய உறுப்பைக் கண்டுபிடிக்கவும்.*

35.

3	8	10	2	?	1
6	56	90	2	20	0

(a) 0 (b) 3
(c) 5 (d) 7

36.

1	2	3	2	10	12
2	5	12	10	16	13
1	2	1	?	10	24

(a) 5 (b) 11
(c) 13 (d) 8

37. *X*-ன் மதிப்பைக் கண்டறிக.



(a) 3 (b) 4
(c) 8 (d) 12

விடைகள் (பயிற்சி 16)

1. (d)	2. (c)	3. (b)	4. (a)	5. (d)	6. (d)	7. (c)	8. (c)	9. (b)	10. (b)
11. (b)	12. (a)	13. (c)	14. (c)	15. (b)	16. (b)	17. (a)	18. (c)	19. (d)	20. (a)
21. (c)	22. (d)	23. (a)	24. (c)	25. (b)	26. (c)	27. (c)	28. (b)	29. (d)	30. (a)
31. (d)	32. (b)	33. (c)	34. (d)	35. (c)	36. (c)	37. (b)			

தீர்வுகள் (பயிற்சி 16)

1. கொடுக்கப்பட்டுள்ளது: $7 \times 2 + 1 = 15$, $15 \times 2 + 1 = 31$, $31 \times 2 + 1 = 63$, $63 \times 2 + 1 = 127$.
எனவே, விடுபட்ட எண் $= 127 \times 2 + 1 = 255$.

2. கடிகார வரிசையில் நகர்ந்தால், உறுப்புகள் முறையே: 2^3, 3^3, 4^3, 5^3, 6^3, 7^3.

3. வலது பாதியில் உள்ள எண்கள் உருவாக்கும் தொடர்: 2, 3, 4, 5.
இடது பாதியில் உள்ள எண்கள் உருவாக்கும் தொடர்: 5, 7, 9, 11.

4. கோட்டின் இரு முனையிலும், முறையே ஒரு எண்ணும் அதன் வர்க்கமும் உள்ளன.
எனவே, விடுபட்ட எண் $= 1^2 = 1$.

5. கொடுக்கப்பட்டுள்ளது: $4 \times 2 - 1 = 7$, $7 \times 2 + 1 = 15$, $15 \times 2 - 1 = 29$, $29 \times 2 + 1 = 59$, $59 \times 2 - 1 = 117$, $117 \times 2 + 1 = 235$.
எனவே, விடுபட்ட எண் $= 235 \times 2 - 1 = 469$.

6. $(5 - 4)^3 = 1$, $(7 - 3)^3 = 64$, $(11 - 8)^3 = 27$.
எனவே, விடுபட்ட எண் $= (8 - 2)^3 = 216$.

7. $15 \times 2 = 30$, $2 \times 7 = 14$, $7 \times 9 = 63$.
எனவே, விடுபட்ட எண் $= 9 \times 15 = 135$.

8. $5 + 3 = 8$, $8 + 4 = 12$, $12 + 1 = 13$.
எனவே, விடுபட்ட எண் $= 12$.

9. எண்கள் 1 முதல் 6 வரை மூன்று மாற்று பிரிவுகளில் முறையே சிறிய எண் வெளிப்புறமாகவும் 14 முதல் 19 வரையிலான எண்கள் மீதி மூன்று மாற்று பிரிவுகளில் முறையே சிறிய எண் உட்புறமாகவும் உள்ளன.

10. $A = 1$, $B = 2$, $C = 3$, ..., $W = 23$, $X = 24$, $Y = 25$, $Z = 26$ எனில்,
$W - T = 23 - 20 = 3$; $T - J = 20 - 10 = 10$, $S - D = 19$, $4 = 15$.
எனவே, விடுபட்ட எண் $= P - G = 16 - 7 = 9$.

11. $\sqrt{4} \times \sqrt{9} = 6$, $\sqrt{9} \times \sqrt{16} = 12$
விடுபட்ட எண் x, எனில்,
$\sqrt{16} \times \sqrt{x} = 20 \Rightarrow \sqrt{x} = 5 \Rightarrow x = 25$.

12. கொடுக்கப்பட்டுள்ளது: $(18 + 19) - 2 = 35$; $(22 + 24) - 3 = 43$.
எனவே, விடுபட்ட எண் $= (26 + 27) - 4 = 49$.

13. கொடுக்கப்பட்டுள்ளது: $2^2 + 4^2 = 20$, $3^2 + 9^2 = 90$.
எனவே, விடுபட்ட எண் $= 1^2 + 7^2 = 50$.

14. கொடுக்கப்பட்டுள்ளது: $4^2 \times 3^2 = 144$, $(11)^2 \times 9^2 = 9801$.
எனவே, விடுபட்ட எண் $= (15)^2 \times 6^2 = 8100$.

15. மேலே உள்ள மூன்று எண்களும் கீழே உள்ள எண்களின் மடங்குகள்.
எனவே, 36, 18 மற்றும் 27 ஆகியவை 9-ன் மடங்குகள்.
ஆகவே, விடுபட்ட எண் 9 ஆகும்.

16. முதல் குறுக்கு வரிசையில், $6 \times 5 \times 4 = 120$.
2-வது குறுக்கு வரிசையில், $6 \times 7 \times 3 = 126$.
விடுபட்ட எண் x எனில், எனில், 3-வது குறுக்கு வரிசையில் இருப்பது; $8 \times 5 \times x = 320$
$\Leftrightarrow x = \frac{320}{40} = 8$.

17. முதல் குறுக்கு வரிசையில், $26 = 11 + 5 + 10$.
2-வது குறுக்கு வரிசையில், $18 = 9 + 4 + 5$.
விடுபட்ட எண் x எனில், 3-வது குறுக்கு வரிசையில், இருப்பது; $10 = 7 + 1 + x \Leftrightarrow x = 2$.

18. முதல் குறுக்கு வரிசையில், $(1 + 4 + 2)^2 = 49$.
2-வது குறுக்கு வரிசையில், $(4 + 2 + 2)^2 = 64$.
விடுபட்ட எண் x எனில், 3-வது குறுக்கு வரிசையில் இருப்பது;
$(x + 5 + 3)^2 = 169 = (13)^2 \Leftrightarrow x + 5 + 3 = 13 \Leftrightarrow x = 5$.

19. முதல் நெடுவரிசையில், $(48 - 28) \times 3 = 60$;
2-வது நெடுவரிசையில், $(7 - 5) \times 3 = 6$;
3-வது நெடுவரிசையில், $(27 - 14) \times 3 = 39$.
$\therefore$ விடுபட்ட எண் $= (16 - 7) \times 3 = 27$.

20. முதல் குறுக்கு வரிசையில், $(6 + 7) \times 5 = 65$.
2-வது குறுக்கு வரிசையில், $(3 + 2) \times 4 = 20$.
விடுபட்ட எண் x எனில், $(4 + x) \times 9 = 45$
$\Leftrightarrow 4 + x = 5 \Leftrightarrow x = 1$.

(கேள்விகள் 21 முதல் 25):
$A = 1$, $B = 2$, $C = 3$, ..., $M = 13$, ..., $X = 24$, $Y = 25$, $Z = 26$ என வைத்துக் கொள்வோம்.

21. கொடுக்கப்பட்டுள்ளது: $JN = J + N + 4 = 10 + 14 + 4 = 28$;
$GP = G + P + 4 = 7 + 16 + 4 = 27$;
$CE = C + E + 4 = 3 + 5 + 4 = 12$;
$TU = T + U + 4 = 20 + 21 + 4 = 45$.
எனவே, விடுபட்ட எண்கள் முறையே
(i) $LR = L + R + 4 = 12 + 18 + 4 = 34$.
(ii) $MS = M + S + 4 = 13 + 19 + 4 = 36$.

22. கொடுக்கப்பட்டுள்ளது: $AD = A + D^2 = 1 + 4^2 = 17$ $CF = C + F^2 = 3 + 6^2 = 39$;
$BP = B + P^2 = 2 + (16)^2 = 258$;
$HJ = H + J^2 = 8 + (10)^2 = 108$.
எனவே, விடுபட்ட எண்கள் முறையே

(i) $GN = G + N^2 = 7 + (14)^2 = 7 + 196 = 203$.

(ii) $LM = L + M^2 = 12 + (13)^2 = 12 + 169 = 181$.

23. கொடுக்கப்பட்டுள்ளது: $FJ = (F - J)^2 = (6 - 10)^2 = 16$;

$NS = (N - S)^2 = (14 - 19)^2 = 25$;

$LZ = (L - Z)^2 = (12 - 26)^2 = 196$;

$SX = (S - X)^2 = (19 - 24)^2 = 25$.

எனவே, விடுபட்ட எண்கள் முறையே

(i) $WY = (W - Y)^2 = (23 - 25)^2 = (-2)^2 = 4$.

(ii) $NQ = (N - Q)^2 = (14 - 17)^2 = (-3)^2 = 9$.

24. கொடுக்கப்பட்டுள்ளது: $GM = 7 \times 13 = 91 = 9 \times 1 = 9$; $KT = 11 \times 20 = 220 = 2 \times 2 \times 0 = 0$;

$PS = 16 \times 19 = 304 = 3 \times 0 \times 4 = 0$;

$UY = 21 \times 25 = 525 = 5 \times 2 \times 5 = 50$.

எனவே, விடுபட்ட எண்கள் முறையே

(i) $DI = 4 \times 9 = 36 = 3 \times 6 = 18$.

(ii) $CP = 3 \times 16 = 48 = 4 \times 8 = 32$.

25. முதல் தொகுப்பில், இருப்பது $= (21 - 17) \times \frac{5 + 7}{2} = 24$.

2-வது தொகுப்பில், இருப்பது $= (28 - 25) \times \frac{13 + 7}{2} = 30$.

∴ 3-வது தொகுப்பில், விடுபட்ட எண்

$= (16 - 10) \times \frac{2 + 8}{2} = (6 \times 5) = 30$.

(கேள்விகள் 26 முதல் 29):

முறையானது கீழ் உள்ளது போல் இருக்கும் என நினைத்துக் கொண்டு கேள்விகளுக்கு பதிலளிப்போம்.

A

B C

D E F

$C = D^2$, $B = F^2$ ...(i)

$E = B - C$ ...(ii)

$A = B + F$ ...(iii)

26. விடுபட்ட எண் $= \sqrt{81} = 9$. [(i)-லிருந்து]

27. விடுபட்ட எண் $= 8^2 = 64$. [(i)-லிருந்து]

28. விடுபட்ட எண் $= 225 + 15 = 240$. [(iii)-லிருந்து]

29. விடுபட்ட எண் $= 121 - 49 = 72$.

(கேள்விகள் 30 முதல் 32):

உதாரண படத்தில் பின்பற்றப்பட்ட முறை;

$8 \times 13 = 104$, $8^2 = 64$, $8 + 13 = 64 = 85$.

30. விடுபட்ட எண் x எனில்,

$14 + x + 196 = 221$

$\Rightarrow x = 221 - 210 = 11$.

31. விடுபட்ட எண் $= 15^2 = 225$.

32. விடுபட்ட எண் $= 3 \times 27 = 81$.

33. முதல் தொகுப்பில், $(84 \div 12) \times 2 = 14$.

2-வது தொகுப்பில், $(81 \div 9) \times 2 = 18$.

∴ 3-வது தொகுப்பில், விடுபட்ட எண்

$= (88 \div 11) \times 2 = 8 \times 2 = 16$.

34. $1 \times 4 + 3 \times 2 = 10$, $3 \times 6 + 4 \times 2 = 26$.

∴ விடுபட்ட எண் $= 4 \times 7 + 5 \times 2 = (28 + 10) = 38$.

35. முதல் நெடுவரிசையில் உள்ள எண்களை X குறிக்கிறது மற்றும் 2-வது நெடுவரிசையில் உள்ள எண்களை Y குறிக்கிறது. எனில்,

பின்பற்றப்பட்ட முறை $X^2 - X = Y$.

$3^2 - 3 = 9 - 3 = 6$; $8^2 - 8 = 64 - 8 = 56$;

$10^2 - 10 = 100 - 10 = 90$;

$2^2 - 2 = 4 - 2 = 2$; $1^2 - 1 = 1 - 1 = 0$.

அதேபோல் $5^2 - 5 = 20$.

எனவே, விடுபட்ட எண் 5 ஆகும்.

36. 1-வது, 2-வது, 3-வது குறுக்கு வரிசையில் உள்ள எண்களின் கூட்டுத்தொகை முறையே

4, 9, 16, ... அதாவது., 2^2, 3^2, 4^2, ... என்கிற வரிசையை உருவாக்குகிறது.

விடுபட்ட எண் x. எனில்,

$2 + 10 + x = 25$ அல்லது $x = 25 - 12 = 13$.

37. மேலே இடது ஓரத்தில் உள்ள எண் கீழே உள்ள இரண்டு எண்களைக் கூட்டுவதால் கிடைக்கும். மேலே வலது ஓரத்தில் உள்ள எண் கீழே உள்ள இரண்டு எண்களை வகுப்பதால் கிடைக்கும் மீதி எண் ஆகும்.

எனவே, $12 + 3 = 15$, $12 \div 3 = 4$;

$22 + 11 = 33$, $22 \div 11 = 2$;

$18 + 9 = 27$, $18 \div 9 = 2$.

எனவே, $32 + X = 36$ மற்றும் $32 \div X = 8$ அல்லது $X = 4$.

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன்

பயிற்சி

1. கீழே பின்பற்றப்பட்ட முறையை கண்டுபிடித்து ?-யின் இடத்தில் வரவேண்டிய எண்ணைக் கண்டுபிடிக்கவும். **[SSC-CGL Exam, 2021]**

7	11	14
53	127	?
4	6	3

(a) 200 (b) 196
(c) 199 (d) 169

2. கீழே பின்பற்றப்பட்ட முறையை கண்டுபிடித்து ?-யின் இடத்தில் வரவேண்டிய எண்ணைக் கண்டுபிடிக்கவும். **[SSC-CGL Exam, 2020]**

28	30	36
36	32	18
252	240	?

(a) 268 (b) 166
(c) 164 (d) 162

3. கீழே உள்ள கேள்வியில் ?-யின் இடத்தில் வரவேண்டிய எண் எது? **[SSC-CGL Exam, 2017]**



(a) 108 (b) 112
(c) 118 (d) 120

4. கீழே உள்ள கேள்வியில் ?-யின் இடத்தில் வரவேண்டிய எண் எது? **[SSC-CGL Exam, 2017]**



(a) 2 (b) 7
(c) 14 (d) 28

குறிப்புகள் (கேள்விகள் 5 முதல் 9): விடுபட்ட எண்ணைக் கண்டுபிடிக்கவும்: **[SSC-CGL Tier I Exam, 2015]**

5.

1	216	343
8	125	512
27	64	?
35	401	

(a) 615 (b) 729
(c) 575 (d) 340

6.

2	3	8
4	5	10
6	7	12
32	50	?

(a) 92 (b) 128
(c) 200 (d) 30

7.

4	3	2	8	32
5	3	1	9	24
7	3	3	7	70
2	9	4	12	?

(a) 120 (b) 27
(c) 84 (d) 60

8.



(a) 84 (b) 104
(c) 94 (d) 74

9.



(a) 25 (b) 27
(c) 23 (d) 26

குறிப்புகள் (கேள்விகள் 10 முதல் 17): கீழே உள்ளவற்றில் விடுபட்ட எண்ணைக் கண்டுபிடிக்கவும்:

10.



[SSC-CGL Tier I Exam, 2015]

(a) 97 (b) 1097
(c) 907 (d) 9107

11.

9	11	13
13	15	17
10	12	14
10	12	14
14	16	18
11	13	?

[SSC-CGL Tier I Exam, 2015]

(a) 14 (b) 22
(c) 15 (d) 21

12.

7	5	3
8	4	9
2	8	?
112	160	162

[SSC-CGL Tier I Exam, 2015]

(a) 8 (b) 4
(c) 6 (d) 12

13.

3	2	2	−1	6	5
4	24	−2	4	0	?

[SSC-CGL Tier I Exam, 2015]

14.



[SSC-CGL Tier I Exam, 2015]

(a) 16 (b) 12
(c) 18 (d) 17

15.

9	7	4
5	4	3
6	8	?
49	52	25

[SSC-CGL Tier I Exam, 2014]

(a) 6 (b) 7
(c) 4 (d) 5

16.

4	10	22
8	5	14
10	3	?

[SSC-CGL Tier I Exam, 2014]

(a) 13 (b) 14
(c) 11 (d) 12

17.

2	3	4
3	4	5
13	?	41

[SSC-CGL Tier I Exam, 2014]

(a) 31 (b) 46
(c) 23 (d) 25

குறிப்புகள் (கேள்விகள் 18 முதல் 20): *கீழே உள்ளவற்றில் விடுபட்ட எண்ணைக் கண்டுபிடிக்கவும்.*

18.



[SSC-CGL Tier I Exam, 2013]

(a) 10 (b) 12
(c) 14 (d) 16

19.

3	5	8	7
4	6	4	6
5	2	2	3
58	58	62	?

[SSC-CGL Tier I Exam, 2013]

(a) 126 (b) 122
(c) 128 (d) 124

20.

4	3	2
6	9	10
9	27	?

[SSC-CGL Tier I Exam, 2013]

(a) 30 (b) 20
(c) 50 (d) 54

விடைகள்

1. (c)	2. (d)	3. (c)	4. (c)	5. (b)	6. (c)	7. (c)	8. (a)	9. (d)	10. (b)
11. (c)	12. (c)	13. (d)	14. (c)	15. (b)	16. (c)	17. (d)	18. (d)	19. (d)	20. (c)

தீர்வுகள்

1. பின்பற்றப்பட்ட முறை:
$(7)^2 + 4 = 49 + 4 = 53$
மற்றும் $(11)^2 + 6 = 121 + 6 = 127$
அதேபோல், $(14)^2 + 3 = 196 + 3 = 199$.

2. பின்பற்றப்பட்ட முறை:
$(28 \times 36) \div 4 = 252$
மற்றும் $(30 \times 32) \div 4 = 240$
அதேபோல், $(36 \times 18) \div 4 = 162$

3. பின்பற்றப்பட்ட முறை:
$(4 + 7) \times (3 + 5) = 11 \times 8 = 88$
$(2 + 6) \times (5 + 8) = 8 \times 13 = 104$
அதேபோல், $(7 + 8) \times (3 + 5) = 15 \times 8 = 120$

4. பின்பற்றப்பட்ட முறை:

$3 \times 7 \times 2 \times 4 = 168$

$8 \times 3 \times 1 \times 7 = 168$

அதேபோல், $1 \times 6 \times 2 \times ? = 168$

$\therefore ? = 14$

5.

1^3	6^3	7^3
2^3	5^3	8^3
3^3	4^3	$9^3 = \boxed{729}$
35	401	1575

6. இங்கு,

$2 \times 4 + 4 \times 6 = 32$

$3 \times 5 + 5 \times 7 = 50$

$8 \times 10 + 10 \times 12 = \boxed{200}$

எனவே, மாற்று (*c*) சரியாகும்.

7. $4 \times 3 \times 2 + 8 = 32$

$5 \times 3 \times 1 + 9 = 24$

$7 \times 3 \times 3 + 7 = 70$

$2 \times 9 \times 4 + 12 = \boxed{84}$

எனவே, மாற்று (*c*) சரியாகும்.

8. $11 \times 12 - 6 \times 9 = 132 - 54 = 78$

$14 \times 10 - 7 \times 8 = 140 - 56 = 84$

எனவே, மாற்று (*a*) சரியாகும்.

9. 2, 3, 5, 7, 11 ஆகிய பகா எண்களை எடுத்துக் கொண்டால்,

$2^2 + 1 = 5$

$3^2 + 1 = 10$

$5^2 + 1 = \boxed{26}$

$7^2 + 1 = 50$

$11^2 + 1 = 122$

எனவே, மாற்று (*d*) சரியாகும்.

10. $2 \times 8 + 1 = 17$

$17 \times 8 + 1 = 137$

$137 \times 8 + 1 = \boxed{1097}$

$\therefore$ விடுபட்ட எண் 1097 ஆகும்.

11. $9\ 11\ 13 \Rightarrow 9 + 2 = 11,\ 11 + 2 = 13$

$13\ 15\ 17 \Rightarrow 13 + 2 = 15,\ 15 + 2 = 17$

$10\ 12\ 14 \Rightarrow 10 + 2 = 12,\ 12 + 2 = 14$

$14\ 16\ 18 \Rightarrow 14 + 2 = 16,\ 16 + 2 = 18$

$11\ 13\ ? \Rightarrow 11 + 2 = 13,\ 13 + 2 = \boxed{15}$

எனவே, விடை (*c*) சரியாகும்.

12. $7 \times 8 \times 2 = 112$

$5 \times 4 \times 8 = 160$

$3 \times 9 \times \boxed{6} = 162$

எனவே, மாற்று (*c*) சரியாகும்.

13. $2 \times 3 \times 4 = 24$

$-1 \times 2 \times (-2) = 4$

$5 \times 6 \times 0 = 0$

எனவே, மாற்று (*d*) சரியாகும்.

14. $14 + 7 + 3 + 12 = 36$

$9 + 16 + \boxed{18} + 11 = 54$

தேவைப்படும் எண் 18 ஆகும்

15. $9 \times 6 - 5 = 49$

$7 \times 8 - 4 = 52$

$4 \times ? - 3 = 25$

$? = \frac{28}{4} \boxed{7}$

16. $4 + 22 - 10 = 16$

$8 + 14 - 5 = 17$

எனவே, $10 + ? - 3 = 18$

$7 + ? = 18$

$? = \boxed{11}$

17. $(2)^2 + (3)^2 = 4 + 9 = 13$

$(4)^2 + (5)^2 = 16 + 25 = 41$

$(3)^2 + (4)^2 = 9 + 16 = \boxed{25}$

18. $\frac{84}{12} \times 2 = 14$

$\frac{81}{9} \times 2 = 18$

அதேபோல், $\frac{88}{11} \times 2 = \boxed{16}$

19. $3 \times 4 \times 5 = 60 - 2 = 58$

$5 \times 6 \times 2 = 60 - 2 = 58$

$8 \times 4 \times 2 = 64 - 2 = 62$

$7 \times 6 \times 3 = 126 - 2 = \boxed{124}$

எனவே, மாற்று (*d*) சரியாகும்.

20. $4 \times \frac{3}{2} = 6,\ 6 \times \frac{3}{2} = 9$

$3 \times 3 = 9,\ 9 \times 3 = 27$

$2 \times 5 = 10,\ 10 \times 5 = \boxed{50}$

?-யின் இடத்தில் வர வேண்டிய எண் 50 ஆகும்.

17

தகவல் விளக்கம்

இந்த பகுதியில் குறியீடு-மறுகுறியீடு, இரத்த உறவுகள், புதிர் கணக்குகள், திசையறியும் திறன், தரவரிசை மற்றும் நேர கணக்குகள், எண்கணித பகுத்தறிவு ... மற்றும் பல்வகையில் கணக்குகள் கொடுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு கேள்வியிலும் பதிலளிப்பதற்கு ஏதுவாக துப்புகள் கொண்ட வாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். கேள்விக்கு பதிலளிப்பதற்கு எந்த வாக்கியம்/யங்கள் தேவை என தேர்வு எழுதுபவர் கண்டுபிடிக்க வேண்டும்.

விளக்கப்பட்ட உதாரணங்கள்

எ.கா.1: **நிஷாவிற்கு மாணிக் என்ன உறவு?** **(C.E.T. 2006)**

I. நிஷாவின் மாமியாருக்கு மாணிக் ஒரே மகன்.

II. மாணிக்கின் ஒரே சகோதரி ரித்து.

தீர்வு. I-லிருந்து நாம் அறிவது; நிஷாவின் மாமியாரின் ஒரே மகன் மாணிக் ஆவார். அதாவது., மாணிக் நிஷாவின் கணவன். ஆனால், II-லிருந்து நிஷா-மாணிக் இருவரின் உறவு தெரியவில்லை.

எனவே, வாக்கியம் I மட்டுமே போதுமானது.

எ.கா.2: **கொடுக்கப்பட்டுள்ள மாதத்தின் 14-வது நாள் என்ன கிழமை?** **(G.B.O. 2006)**

I. மாதத்தின் கடைசி தேதி புதன்கிழமை

II. மாதத்தின் 3-வது சனிக்கிழமை 17-ம் தேதி ஆகும்.

தீர்வு. II-லிருந்து தெரிவது; 17-ம் தேதி சனிக்கிழமை. எனில், 14-ம் தேதி புதன்கிழமை.

I-லிருந்து எந்த தெளிவான விஷயமும் கிடைக்கவில்லை.

எனவே, கேள்விக்கு பதிலளிக்க II மட்டுமே போதுமானது.

எ.கா.3: **40 மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பில் மேலிருந்து எத்தனையாவது தர வரிசையில் சுமன் உள்ளார்?** **(Bank P.O. 2006)**

I. கீழிருந்து 31-வது மற்றும் சுமனுக்கு கீழ் 4-வது இடத்தில் சுமன் உள்ளார்.

II. சுமனுக்கு 2 இடங்கள் மேலாக மற்றும் கீழிருந்து 37-வது இடத்தில் அனுஜ் உள்ளார்.

தீர்வு. I-லிருந்து தெரிவது; சுமனுக்கு கீழே (1 + 3 + 30) = 34 மாணவர்கள் உள்ளனர். தரவரிசையில் ரீனாவுக்கு கீழே 30 மாணவர்கள் மற்றும் சுமன் மற்றும் ரீனாவுக்கு இடையே 3 மாணவர்கள் உள்ளனர். எனவே, தரவரிசையில் சுமனுக்கு மேலே [40 – (34 + 1)] = 5 மாணவர்கள் உள்ளனர்.

எனவே, மேலிருந்து தரவரிசையில் 6-வது இடத்தில் கீழிலிருந்து சுமன் உள்ளார்.

II-லிருந்து தெரிவது; – தரவரிசையில் கீழிருந்து 37-வது இடத்தில் அனுஜ் உள்ளார். அதாவது, மேலிருந்து 4-வது இடத்தில் சுமனை விட 2 தரவரிசை மேலாக அனுஜ் உள்ளதால் மேலிருந்து. அனுஜின் தரவரிசை 6-வது ஆகும்.

எனவே, I மட்டும் அல்லது II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானதாகும்.

எ.கா.4: **ஒரு குறியீட்டு மொழியில் 'ta' என்பதன் அர்த்தம் என்ன?** **(Bank P.O. 2004)**

I. 'pa ta ja' என்பதின் அர்த்தம் 'over and above'.

II. 'ho ka pa' என்பதின் அர்த்தம் 'Come over here'.

தீர்வு. 'ta' என்பதன் குறியீட்டைக் கண்டுபிடிப்பதற்கு I மட்டும் II இரண்டிலும் பொதுவாக 'ta' அல்லது 'pa'. மற்றும் 'ja' உள்ளன. எனினும் எந்த நிபந்தனையும் பூர்த்தியாகாது. ஆகவே, I மற்றும் II இரண்டிலும் உள்ள தகவல்கள் இணைந்தும் கேள்விக்கு பதிலக்க முடியாது.

எ.கா.5: *D*, *F*, *J*, *P* மற்றும் *A* ஆகிய நபர்களில் யார் அலுவலகத்தை கடைசியாக சென்றடைவார்? **(S.B.I.P.O. 2005)**

I. *F* மற்றும் *J* இணைந்து அலுவலத்தை சென்றடைகின்றனர்.

II. *J*-க்கு முன்பாக *D* மற்றும் *P* மட்டுமே அலுவலகத்தை சென்றடைகின்றனர்.

தீர்வு. I மற்றும் II-லிருந்து தெரிவது; *J*-க்கு முன்பாக *D* மற்றும் *P* மட்டுமே அலுவலகத்தை சென்றடைகின்றனர். மற்றும் *F*. இதன் மூலம் *A* கடைசியாக சென்றடைகிறார் என்பது தெளிவு. எனவே, I மற்றும் II இரண்டிலும் உள்ள தகவல்கள் கேள்விக்கு பதிலளிக்க தேவை.

பயிற்சி 17

குறிப்புகள் (கேள்விகள் 1–15): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் I மற்றும் II என இரண்டு வாக்கியங்கள் இருக்கும். வாக்கியங்களில் உள்ள தகவல்கள் கேள்விக்கு பதிலளிக்க போதுமானதா என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும்.

வாக்கியங்களை படித்து பின் பதிலளிக்கவும்:

(a) வாக்கியம் I மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது. வாக்கியம் II-ல் உள்ள தகவல் மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது அல்ல எனில், உங்கள் விடை (a) என இருக்க வேண்டும்.

(b) வாக்கியம் II-ல் உள்ள தகவல் மட்டுமே பதிலளிக்க போதுமானது ஆனால் வாக்கியம் I-ல் உள்ள தகவல் போதுமானது அல்ல எனில், விடை (b) என இருக்க வேண்டும்

(c) வாக்கியம் I மட்டுமே அல்லது வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதும் எனில், விடை (c) என இருக்க வேண்டும்.

(d) வாக்கியம் I மற்றும் II – இரண்டிலும் உள்ள தகவல்கள் கேள்விக்கு பதிலளிக்க போதுமானவை அல்ல எனில், விடை (d) ஆகும்.

(e) கேள்விக்கு பதிலளிக்க வாக்கியம் I மற்றும் II ஆகிய இரண்டிலும் உள்ள தகவல்கள் தேவை எனில், விடை (e) ஆகும்.

1. ஒரு குறியீட்டு மொழியில் '$' என்பதன் பொருள் என்ன? **(Bank P.O. 2005)**

   I. '5$#3' என்பதன் பொருள் 'flowers are really good'.

   II. '7#35' என்பதன் பொருள் 'good flowers are available'.

2. ஒரு குறியீட்டு மொழியில் 'water' என்பதன் எண் குறியீடு என்ன? **(Bank P.O. 2004)**

   I. 'give me water' என்பதன் குறியீடு '719'.

   II. 'you can bring water for me' என்பதன் குறியீடு '574186' ஆகும்.

3. ஒரு குறியீட்டு மொழியில், '13' என்பது 'Stop smoking' மற்றும் '59' என்பது 'injurious habit' எனவும் குறிப்பிடப்படுகிறது. எனில், '9' மற்றும் '5' எவ்வாறு குறியிடப்படும்?

   I. '157' என்பது 'stop bad habit' ஆகும்.

   II. '839' என்பது 'smoking is injurious' ஆகும்.

4. ஒரு குறியீட்டு மொழியில் '297' என்பது 'tie clip button' ஆகும். அந்த மொழியில் 'button' என்பது எந்த எண்?

   I. அந்த மொழியில் '926' என்பது 'clip your tie',

   II. அந்த மொழியில் '175' என்பது 'hole and button'

5. *A*-க்கு *D* என்ன உறவு? **(G.B.O. 2006)**

   I. *A*-யின் சகோதரர் *A*.

   II. *D*-யின் மகன் *B*.

6. *P*-க்கு *J* என்ன உறவு? **(Bank P.O. 2005)**

   I. *P*-யின் சகோதரன் *M* மற்றும் *P*-யின் சகோதரி *T*.

   II. ஒரு மகன் மற்றும் இரண்டு மகள்கள் கொண்ட *J*-யின் கணவனை *P*-யின் அம்மா திருமணம் செய்து கொண்டுள்ளார்.

7. *K*-க்கு *T* என்ன உறவு? **(Agriculture Officers' 2005)**

   I. தனது பெற்றோருக்கு ஒரே மகன் மற்றும் *T*-யின் சகோதரனுமான *L*-ஐ *R*-ன் சகோதரி *J* திருமணம் செய்துள்ளார்.

   II. *L* மற்றும் *J*-யின் ஒரே மகள் *K*.

8. *A*-யின் சகோதரன் *B*. *B*-க்கு *A* என்ன உறவு? **(Bank P.O. 2003)**

   I. *C*-யின் சகோதரி *A*.

   II. *A*-யின் கணவன் *E*.

9. *N*-க்கு *M* என்ன உறவு? **(S.B.I.P.O. 2005)**

   I. *M* மற்றும் *N* ஆகிய இரண்டு குழந்தைகள் கொண்ட *P* என்பவர் *Q*-வின் மாமியார். *Q*-வானவர் *N*-ன் நாத்தனார்.

   II. *M*-ன் மருமகளான *R*, *M* மற்றும் *N* ஆகிய இரண்டு குழந்தைகள் கொண்ட *S*-ன் மருமகள் ஆவார்.

10. புகைப்படத்தில் உள்ள நபருடன் தான்யா-வின் உறவு என்ன? **(SIDBI, 2000)**

    I. புகைப்படத்தில் உள்ள நபர் தான்யாவின் தாத்தாவின் ஒரே மகன்.

    II. புகைபடத்தில் உள்ள நபருக்கு சகோதரர்கள் அல்லது சகோதரிகள் யாரும் இல்லை. மற்றும் அவரது அப்பா தான்யாவின் தாத்தா.

11. *P*-க்கு *F* என்ன உறவு? **(Bank P.O. 2003)**

    I. *P*-க்கு *M* மற்றும் *N* என இரண்டு சகோதரிகள் உள்ளனர்.

    II. *F*-ன் அம்மா *M*-ன் அப்பாவிற்கு சகோதரி.

Y-க்கு X என்ன உறவு? **(NABARD, 2002)**

I. X சொல்வது, "எனக்கு ஒரு சகோதரன் மட்டுமே உள்ளார்".

II. X சொல்வது, "எனக்கு ஒரு சகோதரி மட்டுமே உள்ளார்".

K-க்கு T என்ன உறவு? **(I.B.P.S. 2002)**

I. K-க்கு இரண்டு மகன்கள் உள்ளனர். ஒரு மகன் A ஆவார்.

II. T-யின் அம்மாவிற்கு — A மற்றும் B என இரண்டு மகன்கள் உள்ளனர்.

14. Y-க்கு X என்ன உறவு? **(S.B.I.P.O. 2001)**

I. X-ன் மனைவி D-க்கு Y மற்றும் Z என இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

II. R-ன் சகோதரி X, Y-யின் தந்தையை திருமணம் செய்துள்ளார்.

15. D-க்கு எத்தனை மகன்கள் உள்ளனர்?

I. A-யின் தந்தைக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர்.

II. B-யானவர் A-யின் சகோதரன் மற்றும் D-யின் மகன்.

விடைகள்

1. (e)	2. (d)	3. (c)	4. (c)	5. (d)	6. (b)	7. (e)	8. (c)	9. (a)	10. (c)
11. (e)	12. (d)	13. (e)	14. (c)	15. (d)					

தீர்வுகள்

1. I மற்றும் II-ல் பொதுவாக உள்ள குறியீடுகள் '5', '#' மற்றும் '3'. மற்றும் பொதுவான வார்த்தைகள் முறையே, 'flowers', 'are' மற்றும் 'good'. எனவே, I-ல் மீதியுள்ள '$' குறியீடு 'really' என்பதைக் குறிக்கிறது.

2. I மற்றும் II-ல் பொதுவாக உள்ள வார்த்தைகள் 'me' மற்றும் 'water'. மற்றும் பொதுவான குறியீட்டு எண்கள் முறையே '7' மற்றும் '1'. எனவே, 'water' என்பதன் குறியீடு '7' அல்லது '1' ஆகும்.

3. '59' என்பது 'injurious habit' மற்றும் '157' என்பது 'stop bad habit' (I-லிருந்து). எனவே, பொது வார்த்தை 'habit' என்பதை பொது குறியீடு '5' குறிப்பிடுகிறது. எனவே, '9' என்பது 'injurious' என்கிற வார்த்தையைக் குறிப்பிடுகிறது. ஆகவே, I மட்டுமே போதுமானது.

   மேலும், '59' என்பது 'injurious habit' மற்றும் '839' என்பது 'smoking is injurious', என்பதையும் குறிக்கிறது. எனவே, பொது எண் '9' பொது வார்த்தை 'injurious' என்பதை குறிக்கிறது. ஆகவே, '5' என்பது 'habit'-ஐ குறிக்கிறது. எனவே, II மட்டுமே கூட போதுமானது.

4. I-ல் உள்ள பொது வார்த்தைகள் 'tie' மற்றும் 'clip'. பொது குறியீட்டு எண்கள் முறையே '2' மற்றும் '9'. எனவே, '2' மற்றும் '9' முறையே 'tie' மற்றும் 'clip' ஆகிய வார்த்தைகளின் குறியீடுகள்.

   கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தில் '7' என்பது 'button' என்பதைக் குறிக்கிறது. வாக்கியம் II-ல் பொது குறியீட்டு எண் '7' என்பது 'button' என்கிற வார்த்தையைக் குறிக்கிறது.

5. I மற்றும் II-லிருந்து தெரிவது;
   A-யானவர் D-யின் மகன் அல்லது மகள்.

6. II-லிருந்து தெரிவது; P-யின் அம்மா J-யின் கணவனை திருமணம் செய்துள்ளார். எனவே, P-யின் தாய் J ஆவார்.

7. I-லிருந்து தெரிவது; L என்பவர் T-யின் சகோதரன் மற்றும் J-யின் கணவன் ஆவார். பெற்றோருக்கு L ஒரே மகன் என்பதால், L-ன் சகோதரி T ஆவார்.

   II-லிருந்து தெரிவது; L-ன் மகள் K ஆவார்.

   எனவே, I மற்றும் II-லிருந்து தெரிவது; K-யின் அப்பாவின் தங்கை T. அதாவது., K-யின் அத்தை T ஆவார்.

8. A-யின் சகோதரன் B என்பதன் அர்த்தம் B-யின் சகோதரன் அல்லது சகோதரி A ஆவார்.

   வாக்கியங்கள் I மற்றும் II-லும் A ஒரு பெண் என கூறப்பட்டுள்ளது. எனவே, A-யானவர் B-யின் சகோதரி ஆவார்.

9. I-லிருந்து தெரிவது; M மற்றும் N இருவரின் அம்மா P. மற்றும் Q-வானவர் P-யின் மருமகள் மற்றும் N-ன் நாத்தனார். எனவே, N-ன் சகோதரன் M.

   II-லிருந்து தெரிவது; M மற்றும் N இருவரும் S-ன் குழந்தைகள் மேலும், S-ன் மருமகள் R மற்றும் M-ன் நாத்தனார் R. எனவே, N-ன் மனைவி R. மற்றும் M-ன் சகோதரன் N ஆவார்.

   ஆகவே, M என்பவர் N-ன் சகோதரன் அல்லது சகோதரி ஆவார்.

10. I-லிருந்து தெரிவது; அந்த நபர் தான்யாவின் தாத்தாவின் ஒரே மகன். அதாவது., அவர் தான்யாவின் அப்பா. அல்லது தான்யா அந்த நபரின் மகள் ஆவார்.

    II-லிருந்து தெரிவது; அந்த நபரின் அப்பா தான்யாவின் தாத்தா. அந்த நபருக்கு சகோதரனோ அல்லது

சகோதரியோ இல்லை. எனவே, அந்த நபர் தான்யாவின் அப்பா அல்லது தான்யா அந்த நபரின் மகள் ஆவார்.

11. I மற்றும் II-லிருந்து தெரிவது; *M*-ன் சகோதரன் *B* மற்றும் எனவே, *P*-யின் அப்பா *M*-ன் அப்பாவும் ஆவார். ஆகவே, *P*-யின் அப்பாவின் சகோதரியின் குழந்தை *F* ஆவார். அதாவது., அம்மா *P*-யின் அத்தை அல்லது *P*-யின் மருமகன்.

12. I மற்றும் II இரண்டு வாக்கியங்களிலிருந்தும் *X* மற்றும் *Y*-க்குள்ள உறவை கண்டுபிடிக்க முடியாது.

13. II-லிருந்து தெரிவது; *T*-யின் அம்மாவிற்கு இரண்டு மகன்கள் *A* மற்றும் *B* மட்டுமே உள்ளனர். இதிலிருந்து *A* மற்றும் *B*-யின் சகோதரி *T*-யாவார். ஆனால், I-லிருந்து தெரிவது; *A*-யும் *K*-யின் மகனாவார். எனவே, *K*-யின் மகள் *T*-யாவார்.

14. I-லிருந்து தெரிவது; *X*-ன் மனைவி *D*-யின் குழந்தை *Y*. அதாவது, *Y*-யின் அப்பா *X* ஆவார்.

II-லிருந்து தெரிவது; *Y*-யின் அப்பாவை *X* திருமணம் செய்துள்ளார். எனவே, *Y*-யின் அம்மா *X* என தெரிகிறது.

15. I மற்றும் II இரண்டிலுருந்து தெரிவது; *A* மற்றும் *B* இருவரும் *D*-யின் குழந்தைகள். ஆனால், *A* மற்றும் *D*-யின் மூன்றாவது குழந்தையின் பாலினம் தெரியாது. எனவே, I மற்றும் II இரண்டிலும் உள்ள தகவல்களை வைத்தும் கூட கேள்விக்கு பதிலளிக்க முடியாது.

சமீபத்திய கேள்விகள்-பதில்களுடன்

பயிற்சி

குறிப்புகள் (கேள்விகள் 1–5): கீழே உள்ள ஒவ்வொன்றிலும் ஒரு கேள்வியும் அதன் கீழ் I மற்றும் II என இரண்டு வாக்கியங்களும் உள்ளன. இந்த வாக்கியங்களில் உள்ள தகவல்கள் கேள்விக்கு பதிலளிக்க போதுமானதா என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும். இரண்டு வாக்கியங்களையும் கவனமாகப் படித்து பின்னர் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

[Indian Bank 2020]

(*a*) வாக்கியம் I மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது. ஆனால் வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது அல்ல எனில், விடை (*a*) ஆகும்.

(*b*) வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது. ஆனால், வாக்கியம் I மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது அல்ல எனில், விடை (*b*) ஆகும்.

(*c*) வாக்கியம் I அல்லது வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது எனில், விடை (*c*) ஆகும்.

(*d*) வாக்கியம் I மற்றும் வாக்கியம் II ஆகிய இரண்டும் கேள்விக்கு பதிலளிக்க தேவையெனில் விடை (*d*) ஆகும்.

(*e*) வாக்கியம் I மற்றும் வாக்கியம் II இரண்டை வைத்தும் கூட கேள்விக்கு பதிலளிக்க முடியாது எனில், விடை (*e*) ஆகும்.

1. சசிதரர் எந்த திசை நோக்கி நிற்கிறார்?

I. காலையில் சசிதரர் ஒரு பொம்மையை கையில் வைத்துக்கொண்டு நின்ற பொழுது, பொம்மையின் நிழல் அவரின் வலப்பக்கம் விழுந்தது.

II. காலையில் சசிதரர் தரையில் நின்றார். அவர் தனது இடப்புறம் திரும்பிய பொழுது அவரின் நிழல் அவரின் பின்னால் விழுந்தது.

2. *A*, *B*, *C*, *D* மற்றும் *E* ஆகியோரில் யார் வரலாறு பாடம் நடத்துகிறார்?

I. அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு பாடம் மட்டுமே நடத்துகின்றனர். *B* கணிதம், *E* அறிவியலும் நடத்துகிறார்கள். *A* அல்லது *C* புவியியல் பாடம் நடத்துவதில்லை. *A* அல்லது *D* ஆங்கில பாடத்தை நடத்துவதில்லை.

II. *C* மற்றும் *E* முறையே ஆங்கிலம் மற்றும் அறிவியல் பாடங்களை நடத்துகின்றனர். மற்றும் *A* கணித பாடத்தின் ஆசிரியர்.

3. தெற்கு நோக்கி நிற்கும் பையன்களின் வரிசையில் ரமாகாந்திற்கு இடப்புறம் உடனடியாக நிற்பது யார்?

I. ரமாகாந்திற்கு வலப்புறம் 4-வதாக நிற்கும் சந்திரகாந்தின் வலப்புறம் உடனடியாக சுரேஷ் நிற்கிறார்.

II. ரமாகாந்திற்கு வலபுறம் 3-வதாக சுரேஷ் மற்றும் சுரேஷின் வலப்புறம் 2-வதாக நரேஷீம் உள்ளார்.

4. *A*, *B*, *C*, *D*, *E* மற்றும் *F* ஆகிய ஆறு நண்பர்களுள் யார் இரண்டாவது அதிக மதிப்பெண்கள் எடுத்தார்?

I. *A* மற்றும் *F* ஆகியோரை விட குறைந்த மதிப்பெண்களும், ஆனால் *C*, *D* மற்றும் *E* ஆகியோரைவிட அதிக மதிப்பெண்களையும் *B* எடுத்துள்ளார்.

II. *B*-யை விட அதிகமாகவும் ஆனால் *A*-யைப் போல் குறைவாகவும் இல்லாமல் *B* மதிப்பெண்கள் எடுத்துள்ளார்.

5. இரவு 7.30 மணிக்கு கடிகாரத்தின் மணிமுள் எந்த நிலையில் இருக்கும்?

I. கடிகாரத்தில் எண்களுக்கு பதிலாக ஆங்கில எழுத்துக்கள் உள்ளன.

II. மணி முள் 7 மணியில் உள்ளது.

குறிப்புகள் (கேள்விகள் 6–8): கீழே உள்ள ஒவ்வொன்றிலும் ஒரு கேள்வி மற்றும் I, II என இரண்டு வாக்கியங்கள் உள்ளன. வாக்கியங்களில் உள்ள தகவல்கள் போதுமானவையா என

நீங்கள் கண்டறிய வேண்டும். இரண்டு வாக்கியங்களையும் கவனமாகப் படித்து பின் கேள்விகளுக்கு பதிலளிக்கவும். **[SBI PO Exam, 2018]**

(*a*) வாக்கியம் I மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது. ஆனால் வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது அல்ல எனில், விடை (*a*) ஆகும்.

(*b*) வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது. ஆனால் வாக்கியம் I மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது அல்ல எனில், விடை (*b*) ஆகும்.

(*c*) வாக்கியம் I மட்டுமே அல்லது வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது எனில், விடை (*c*) ஆகும்.

(*d*) வாக்கியம் I மற்றும் II இரண்டும் சேர்ந்து கூட கேள்விக்கு பதிலளிக்க போதுமானவை அல்ல எனில், விடை (*d*) ஆகும்.

(*e*) வாக்கியம் I மற்றும் II இரண்டுமே கேள்விக்கு பதிலளிக்க தேவை எனில், விடை (*e*) ஆகும்.

6. வாக்கியம்: வெவ்வேறு உயரம் கொண்ட *J*, *K*, *L*, *M*, *N*, *O* ஆகிய ஆறு பையன்கள் ஒரு வகுப்பில் உள்ளனர். அவர்களில் யார் மிகவும் உயரமானவர்?

I. *N* மற்றும் *K*-யை விட *M* உயரமானவர். *M*-விட உயரமாகவும் ஆனால் *O*-வைப் போல் உயரமாகவும் இல்லாமல் *J* உள்ளார். *K*-யை விட *L* உயரமானவர்.

II. மூன்று பையன்களை விட மட்டுமே *M* உயரமானவர்.. *K*-யை விட *J* உயரமானவர்.

7. **வாக்கியம்:** தரைத்தளம் 1 மற்றும் அதற்கு மேல் உள்ள தளம் 2 மற்றும் அதேபோல் தொடர்ந்து 7 வரை உள்ள 6 அடுக்குமாடி குடியிருப்பில் *R*, *S*, *T*, *U*, *V*, *W* என ஆறு நபர்கள் வசிக்கிறார்கள். *R* மற்றும் *T*-க்கு இடையே எத்தனை நபர்கள் வசிக்கிறார்கள்?

I. இரட்டை எண் கொண்ட தளத்தில் ஆனால் மேல் தளம் இல்லாத குடியிருப்பில் *T* வசிக்கிறார். *W* மற்றும் *T*-க்கு இடையே இரண்டு நபர்கள் வசிக்கிறார்கள். *W*-க்கு கீழே *R* வசிக்கிறார்.

II. *S* மற்றும் *U*-க்கு இடையே நான்கு நபர்கள் வசிக்கிறார்கள். *S* மற்றும் *T*-க்கு இடையே யாரும் வசிக்கவில்லை. *R*-க்கு உடனடி மேலாக *V* வசிக்கிறார்.

8. **வாக்கியம்:** ஒரு வரிசையில் *A*, *B*, *C*, *D*, *E*, *F* ஆகிய ஆறு நபர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். வலது ஓரத்திலிருந்து 2-வதாக யார் அமர்ந்து இருக்கிறார்?

I. வரிசையின் கடைசி ஓரத்தில் *B* உள்ளார். *B*-க்கு வலப்புறம் இரண்டாவதாக *A* உள்ளார். *A* மற்றும் *C*-க்கு இடையே ஒருவர் மட்டுமே உள்ளார். *C*-யின் வலப்புறம் உடனடியாக *E* அமர்ந்துள்ளார்.

II. *D*-யின் வலப்புறம் 3-வதாக *E* அமர்ந்துள்ளார். *E* மற்றும் *A*-க்கு இடையே ஒரு நபர் மட்டுமே அமர்ந்துள்ளார். *E*-யின் வலப்புறம் *F* அமர்ந்துள்ளார். *C*-யின் உடனடி அடுத்ததாக *E* அமர்ந்துள்ளார்.

குறிப்புகள் (கேள்விகள் 9–11): கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஒரு கேள்வி மற்றும் I மற்றும் II என இரண்டு வாக்கியங்கள் உள்ளன. கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் கேள்விக்கு பதிலளிக்க போதுமானவையா என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும். வாக்கியங்கள் கவனமாகப் படித்து பின் பதிலளிக்கவும். **[SBI Clerk Exam, 2018]**

(*a*) வாக்கியம் I மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது. ஆனால் வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது அல்ல எனில், விடை (*a*) ஆகும்.

(*b*) வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது. ஆனால் வாக்கியம் I மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது அல்ல எனில், விடை (*b*) ஆகும்.

(*c*) வாக்கியம் I மட்டுமே அல்லது வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது எனில், விடை (*c*) ஆகும்.

(*d*) வாக்கியம் I மற்றும் II இரண்டும் சேர்ந்து கூட கேள்விக்கு பதிலளிக்க போதுமானவை அல்ல எனில், விடை (*d*) ஆகும்.

(*e*) வாக்கியம் I மற்றும் II இரண்டுமே கேள்விக்கு பதிலளிக்க தேவை எனில், விடை (*e*) ஆகும்.

9. ஒரு வரிசையில் அமர்ந்திருக்கும் நபர்களில் ரவிக்கு இடதுபுறம் உடனடியாக யார் அமர்ந்துள்ளார்? அமர்ந்திருக்கம் அனைவரும் வடக்கு திசை பார்த்து உள்ளனர்.

I. சாஹில் மற்றும் கீதாவிற்கு இடையில் இருவர் மட்டும் அமர்ந்துள்ளனர். கீதாவின் இடப்புறம் 3-க்கு மேற்பட்ட நபர்கள் அமர்ந்துள்ளனர்..

II. ஒரு வரிசையில் 8 நபர்களுக்கு மேல் உட்கார முடியாது. சாஹிலுக்கு இடதுபுறம் 2-வதாக ரவி அமர்ந்துள்ளார். கீதாவிலிருந்து 6 இடங்கள் தள்ளி தியா உள்ளார்.

10. ஒரு குறியீட்டு மொழியில் 'right' என்பதன் குறியீடு என்ன?

I. 'every right to reject' என்பதன் குறியீடு '%47 *32 $53 *95',

II. 'never reject right turn' என்பதன் குறியீடு '%62 %47 $51 *32'.

11. வரிசையில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை என்ன?

I. வரிசையின் இடமிருந்து 18-வதாக *R* மற்றும் வரிசையின் வலமிருந்து II-வதாக *Y*-யும் அமர்ந்துள்ளார். *R* மற்றும் *Y* தங்களது இடங்களை மாற்றிக்கொண்டால், பிறகு வரிசையின் இடமிருந்து *R*-ன் இடம் 20-வது ஆகும்.

II. வரிசையில் மொத்தம் 43 மாணவர்கள் அமர்ந்துள்ளனர். மற்றும் அனைவரும் ஒரே திசை நோக்கி உள்ளனர்.

குறிப்புகள் (கேள்விகள் 12–16): *கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஒரு கேள்வி மற்றும் I மற்றும் II என இரண்டு வாக்கியங்கள் உள்ளன. கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் கேள்விக்கு பதிலளிக்க போதுமானவையா என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும். வாக்கியங்கள் கவனமாகப் படித்து பின் பதிலளிக்கவும்.* **[Andhra Bank (PO) Exam, 2015]**

(*a*) வாக்கியம் I மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது. ஆனால் வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது அல்ல எனில், விடை (*a*) ஆகும்.

(*b*) வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது. ஆனால் வாக்கியம் I மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமான்து அல்ல எனில், விடை (*b*) ஆகும்.

(*c*) வாக்கியம் I மட்டுமே அல்லது வாக்கியம் II மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது எனில், விடை (*c*) ஆகும்.

(*d*) வாக்கியம் I மற்றும் II இரண்டும் சேர்ந்து கூட கேள்விக்கு பதிலளிக்க போதுமானவை அல்ல எனில், விடை (*d*) ஆகும்.

(*e*) வாக்கியம் I மற்றும் II இரண்டுமே கேள்விக்கு பதிலளிக்க தேவை எனில், விடை (*e*) ஆகும்.

12. ஒவ்வொன்றும் வெவ்வேறு உயரம் கொண்ட *J*, *K*, *L*, *M*, *N* மற்றும் *O* ஆகிய கட்டிடங்களில் எது மிக உயரமானது?

I. *J* மற்றும் *O*-வை விட உயரமானது. ஆனால் *K*-வை விட உயரம் குறைந்தது *M*. *M*-ஐ விட உயரமானது ஆனால் மிக உயரமானது அல்ல *N*. மிக உயரமானது *K* அல்ல.

II. இரண்டு கட்டிடங்களை விட உயரம் குறைவானது *K*. *M*-ஐ விட உயரம் குறைவானது ஆனால் *O*-வை விட உயரமானது *J*. *J*-யை விட உயரமானது *N*.

13. *K*-யைப் பொறுத்து *M*-ன் திசை என்ன?

